ஸ்ரீ:

ஸ்ரீராமாயணம்.
பாலகாண்டம்.

தமிழ் வசனம்.

இஃது

ஸ்ரீவால்மீகி ராமாயணத்திற்கிணங்க

ஸ்ரீ. அ. வீ. நரஸிம்ஹாசாரியரால்

இயற்றப்பெற்று.

———

சென்னை

ஆர். வெங்கடேச்வர் அண்டு கம்பெனியாவர்களால்

ஆனந்த அச்சுக்கூடத்தில் அச்சிட்டு,

வெளியிடப்பட்டது.

———

1911.

ALL RIGHTS RESERVED.

40882

M. I. P. PROJECT
Microfilmed.

M. I. P. PROJECT
Microfilmed.

ALL RIGHTS RESERVED.

காபிரைட். 1911ஆம் :—ஆர். வெங்கடேச்வர் அண்டு கம்பெனியாரவர்கள் காபிரைட்டுக்குரியவர்கள். இப்புத்தகம் இந்தியன் காபிரைட் பிரகாரமாகவும், அங்கிலேய காபிரைட் பிரகாரமாகவும், காக்கப்பட்டிருக்கின்றது. எவராயினும் இப்புத்தகத்தை முழுவதுமாவது, அல்லது இதில் ஒரு பாகத்தையாவது தாம் வேறுக அச்சிடவும், மற்றொரு பாஷையில் மொழிபெயர்த்து அச்சிடவும் அதிகாரமில்லை. இதிலுள்ள பதங்களையாவது, பாவங்களையாவது, படங்களையாவது காபி செய்வார்களாயின், அது காபிரைட்டை உல்லங்கனஞ் செய்ததே ஆகும்.

40882

A.P.S.
DRAWN BY C VASUDEVA NAYAGAR

ஸ்ரீ:

ஸ்ரீராமசந்த்ரபரப்ரஹ்மணே நம:.

முகவுரை.

ஸ்ரீமக்நாராயண பரிபூர்ணவதாரமாகிய ஸ்ரீராமனது சரிதாமிருதத்தைக் கூறுவதும், ஆனது பற்றியே ஆஸ்திக சிரோமணிகள் அனைவர்க்கும் மிக்க இனிதாயிருப்பதும், தத்வங்களை யுணர்ந்த வால்மீகி மஹர்ஷியால் இயற்றப்பட்டதும், வாசிப்பது கேட்பது எழுதுவது நினைப்பது முதலியவற்றால் ஐஹிகாமுஷ்மிக பலங்களைக் கொடுக்கவற்றுமாகி விளங்கும் ஸ்ரீராமாயணத்தின் மகிமையைக் குறித்துச் சிறிதும் எழுதவேண்டிய அவச்யமில்லை. மேலும் அதில் ப்ரதி பாத்யவஸ்துவாகிய ஸ்ரீராமனிடத்தில் ப்ரதிபத்தியில்லாத இதர மதஸ்தர்களுக்கும், அது நவரஸங்களையும் பொழிந்துகொண்டு தட்டுத்தடையின்றிய செய்யுள் நடை யமைக்த காவ்ய ரத்நமாகையால், மிகவும் ஆதரிக்கத் தக்கதாயிருக்கு மென்றால் இனி, ப்ரதி பாத்யவஸ்துவில் பக்த்யதிசயத்தைப் பற்றியும் ஒப்பின்றிய கவிதாரஸத்தைப் பற்றியும் அது நம்மைப்போன்றவர்களுக்கு மேன்மேலும் ஆதரிக்கத் தக்கதாயிருக்குமென்பது சொல்லவேண்டுமோ? ராமனது கல்யாணகுணங்கள் ஒப்பற்றவை; பின்னும் இவ்வள வவ்வளவென்று கணக்கிடமுடியாதவை. ஸீதையின் பதிபக்திநிகரற்றது. ராமலக்ஷ்மணர்களுடையவும் பாத சத்ருக்நர்களுடையவும் ஸ்நேஹமானது யாவரும் புகழும்படி விளங்கும். அதில் ராமனுக்குள்ள பித்ருபக்தியையும், ஸத்யவ்ரதத்தையும், ஆச்ரித பாரதந்த்ர்யத்தையும், பகைவரைப் பறந்தோடச் செய்யவல்ல வீரரஸவிலாஸத்தையும், விபுடமாக வர்ணிக்கும் விதம் அதி மநோஹரமா யிருக்கும். அந்தந்த ரஸங்களைப் பொழியும் ரசனைகள் மிக்க லக்ஷ்மணாதிகளாயிருக்கும். அந்தந்த பாவங்களைக் கூறும் வகை அதிப்ரௌடமாயிருக்கும். நாயிகா நாயகர்

களின் குணங்களும் விருத்தாந்தங்களும், அதிஸாளமும் மிக்க மதுரமுமாகிய, வால்மீகியினது கவிதாமிருதப்ர வாஹத்தில் மெதந்து மிகுந்த மாதுர்யம் பொருந்தி விளங்கும். இப்படிப்பட்ட ராமாயணத்தைப் பல கவிகள் பல பாஷைகளில் வசந சைலியிலும் செய்யுள் நடையிலும் அநேக வழிகளில் அழகாகச் செய்திருக்கின்றார்களேயன்றி, ப்ரஹ்மாவின் அநுக்ரகத்தினால் ஸாக்ஷாத் அவதரித்த இம்மஹர்ஷியினது வாக்கிலிருந்து வந்த இவ்வழகிய சொற்களும், அவைகளின் ஸஹஜமாதுர்யமும் மற்றொன்றிலும் புலப்படவில்லை. ஆகையால் ஸ்ரீராமாயணத்தை மஹர்ஷி மொழிந்த உரைகளையே தமிழ் தேசஸ்தர்கள் அநுபவித்து ஆநந்திக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் ஸ்த்ரீகளுக்கும் பாலர்களுக்கும் தெரியக்கூடிய தெளிவான தமிழ் பாஷையில் மிருதுவான நடையில் முதலில் இப்பாலகாண்டத்தை இயற்றி வெளியிடலாயினம்.

மேலும் இதில் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த அத்தந்த ச்லோகங்களின் விசேஷார்த்தங்களைத் தெளிவாக மொழியுந் தனிச்லோகியும், கோவிந்தராஜர் மஹேச்வரதீர்த்தர் முதலியவர் செய்த வியாக்கியானங்களிலுள்ள விசேஷ விஷயங்களும், ரஹஸ்யார்த்த விவரணங்களும் ஆகிய இவையெல்லாம் தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன மற்றைக்காண்டங்களும் உடனுடனே வெளியாகும். தமிழ் பாஷாபிமானிகள் அனைவரும் இதைக் கைப்பற்றி இங்ஙனம் முயன்றமைக்கு உத்ஸாஹத்தை மேன்மேலும் விளைவிப்பார்களாக வென்று வேண்டிக் கொள்கின்றனம்.

சென்னை,
20—7—11. } இங்ஙனம்,
ஸ்ரீமான். அ. வீ. நரஸிம்ஹாசாரியர்.

பொருளடக்கம்.

ஸரீக்கம்.		பேஜ்.
1.	ஸங்க்ஷேபராமாயணம்.	1
2.	பிரமன் பிரத்தியக்ஷமாகி வால்மீகியை யனுக்கிரகித்தல்.	38
3.	ஸ்ரீராமாயண விஷய ஸங்க்ரஹம். ...	50
4.	குசலவர்கள் ராமாயணத்தைக் காநஞ் செய்தல்.	55
5.	அயோத்யாபுர வர்ணநம்.	63
6.	தசரதனையும் அவனது ப்ரஜைகளையும் வர்ணித்தல்.	67
7.	மந்த்ரி புரோஹிதாதி வர்ணநம். ...	72
8.	தசரதன் புத்ரகாமேஷ்டி செய்ய முயன்றது.	77
9.	ருச்யச்ருங்க மஹர்ஷியின் சரித்ரம். ...	80
10.	வாரஸ்த்ரீகள் ருச்யச்ருங்க முனியை வஞ்சித்து அழைத்துக்கொண்டு வந்தது. ...	83
11.	தசரதன் ருச்யச்ருங்கரை அங்கதேசயத்தினின்றும் அழைத்துக்கொண்டு வந்தது.	88
12.	தசரத சக்ரவர்த்தி யாகஞ்செய்ய ஆரம்பித்தல்.	93
13.	யஜ்ஞ ஸம்பாரங்களைச் சித்தப்படித்தல். ...	95
14.	தசரத மன்னவன் அச்வமேதயாகஞ் செய்தல்.	100

ஸர்க்கம்.		பேஜ்.
15.	தேவதைகள் விஷ்ணுவினிடம் சென்று ராவணனுடைய துஷ்டத்தனத்தைச் சொல்லுதல்	110
16.	ஸ்ரீ மஹாவிஷ்ணு தேவர்கள் சொல்லியபடி மநுஷ்யனாகப் பிறக்க எண்ணம் கொள்ளுதல்.	116
17.	தேவதைகள் தந்தம் அம்சத்தை வாநராதிகளில் பிறப்பிக்கை.	120
18.	ஸ்ரீ ராமாதிகளின் பிறப்பும், அவரது வித்யாப்யாஸமும், விச்வாமித்திரர் வருவதும்.	125
19.	விச்வாமித்ரர் ராமனை அனுப்பும்படி தசரதனைக் கேட்கை.	134
20.	தசரதன் ராமனை யனுப்புவதற்கு வருத்தமுறுதல்.	139
21.	வஸிஷ்டர் தசரதனுக்கு விச்வாமித்ரருடைய மஹிமையை யறிவித்தல் ...	147
22.	விச்வாமித்ரர் ராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு போவது.	151
23.	விச்வாமித்திரர் அங்கதேச விருத்தாந்தத்தைச் சொல்லுவது.	154
24.	விச்வாமித்ரர் ஸரயூநதி மலதகருச தேசங்கள் ஆகிய இவற்றின் வரலாறு கூறியது.	160
25.	தாடகா விருத்தாந்தம்.	165
26.	ராமன் தாடகையை ஸம்ஹாரஞ் செய்தல்.	168
27.	அஸ்த்ரங்களை விச்வாமித்திரர் ராமனுக்குக் கொடுப்பது	174

ஸர்க்கம்.		பேஜ்.
28.	விச்வாமித்ரர் ராமனுக்கு உபஸம்ஹார மந்த்ரங்களை யுபதேசித்தல்.	177
29.	வாமகமூர்த்தி விருத்தாந்தமும், விச்வாமித்ரர் யாகதீக்ஷைக்குத் தொடங்குவதும்.	180
30.	ராமன் மாரீசனை ஸமுத்திரத்தில் தள்ளி ஸுபாஹுவைக் கொல்லுதல். ...	186
31.	விச்வாமித்திரர் ராம லக்ஷ்மணர்களோடு மிதிலைக்குச் செல்லுதல்.	190
32.	குசகுசநாபர்களின் விருத்தாந்தம். ...	193
33.	ப்ரஹ்மதத்தன் விருத்தாந்தமும் அவன் குசநாபன் பெண்களை மணம் புரிவதும். ...	198
34.	விச்வாமித்ரர் கௌசிகீநதி ஆகிய இவர்களின் விருத்தாந்தம்.	202
35.	கங்கா பார்வதிகளின் ஜந்ம விருத்தாந்தம்.	206
36.	பார்வதி விருத்தாந்தம்.	209
37.	குமரன் பிறந்த விருத்தாந்தம். ...	213
38.	ஸகர சக்ரவர்த்தியின் விருத்தாந்தம். ...	218
39.	ஸகர சக்ரவர்த்தி அச்வமேதஞ் செய்தல்.	222
40.	ஸகர குமாரர்கள் கபிலமாமுனியால் நீறுதல்	226
41.	அம்சுமத்தன் ஸகரனது யாகாச்வத்தைக் கொண்டு வந்தது.	231
42.	பகீரதன் கங்கைக்காகத் தவஞ்செய்தல்.	235
43.	பகீரதன் கங்கையைக் கொண்டுவந்தது.	239
44.	ப்ரஹ்மதேவன் பகீரதனுடன் ஸம்பாஷிக்கை.	244
45.	விசாலாபுர விருத்தாந்தமும், பாற்கடலைக் கடைந்ததும்.	248

ஸர்க்கம்.		பேஜ்
46.	திதி தவஞ்செய்தல்.	255
47.	ஸப்தமாருத விருத்தாந்தம்.	259
48.	அஹல்யா விருத்தாந்தம்.	262
49.	அஹல்யை சாபந்தீர்ந்து ராமனைப் பூசித்தல்.	267
50.	ராமாதிகள் மிதிலைக்குப் போதலும், ஜநகன் விச்வாமித்ரரோடு ஸம்பாஷித்தலும்.	271
51.	சதாநந்தர் விச்வாமித்ர முனிவரது சரித்திரத்தைக் கூறுதல்.	275
52.	வஸிஷ்டமாமுனிவர் விச்வாமித்ரருக்கு ஆதித்யஞ்செய்தல்.	279
53.	விச்வாமித்ரர் காமதேநுவைத் தனக்குக் கொடுக்கும்படி வஸிஷ்டரை வேண்டிக் கொள்ளுதல்.	283
54.	சபலை பலங்களை சிருமித்து விச்வாமித்ரரது ஸைனையை அழித்தல். ...	287
55.	விச்வாமித்ரர் தோல்வியடைந்து பின்பு சிவனிடமிருந்து அஸ்த்ரங்களைப்பெற்று வந்து வஸிஷ்டருடன் போர்புரிதல். ...	291
56.	வஸிஷ்டர் விச்வாமித்ரரை வென்றது. ...	295
57.	விச்வாமித்ரர் தவஞ்செய்து ராஜர்ஷியாதலும், த்ரிசங்கு சரீரத்துடன் ஸ்வர்க்கம் போக யாகஞ்செய்ய முயன்று வஸிஷ்டமாமுனியால் நிராகரிக்கப்படுதலும்.	298

ஸர்க்கம்.		பேஜ்.
58.	பின்பு வஸிஷ்ட புத்ரர்களிடஞ் செல்ல, அவர்களும் நிராகரித்துப் போகவிட, த்ரிசங்கு விச்வாமித்ரரை ஆச்ரயித்தல்.	302
59.	விச்வாமித்ரர் த்ரிசங்குவுக்காக யாகஞ் செய்ய முயன்றது	306
60.	விச்வாமித்ரர் த்ரிசங்குவுக்காக மற்றொரு ஸ்வர்க்கம் நிருமித்தல்.	309
61.	அம்பரீஷன் தனது யாகத்துக்குச் சுநச்சேபனை நரபசுவாக வேண்டிக்கொள்ளல்.	314
62.	விச்வாமித்ரர் சுநச்சேபனைக் காத்தல். ...	317
63.	விச்வாமித்ரர் மஹர்ஷித்வம் பெறுதல். ...	322
64.	இந்திரன் ரம்பையை அனுப்புதலும், விச்வாமித்ரர் அவளைச் சபித்தலும்.	326
65.	விச்வாமித்ரர் ப்ரஹ்மர்ஷியாதல். ...	329
66.	ஜநக மஹாராஜன் சிவதநுஸ்ஸின் விருத்தாந்தஞ் சொல்லுதல்.	335
67.	ராமன் சிவதநுர்ப்பங்கஞ் செய்தல். ...	340
68.	ஜநகமஹாராஜன் தசரதனை அழைத்துக்கொண்டுவரத் தூதர்களை அனுப்புதல்.	345
69.	தசரத சக்ரவர்த்தி மிதிலைக்குப் போதல்.	349
70.	வஸிஷ்டர் ஜநகனுக்கு இக்ஷ்வாகு வம்சக்ரமத்தைச் சொல்லுதல். ...	352
71.	ஜநகமஹாராஜன் தனது வம்சக்ரமத்தைச் சொல்லுதல்.	359

ஸர்க்கம்.		பேஜ்.
72.	தசரதன் தனது பிள்ளைகளின் விவாஹத் திற்காகக் கோதாநம் முதலியவற்றைச் செய்தல்.	363
73.	ஸீதா கல்யாணம்.	367
74.	பரசுராம தர்சநம்.	380
75.	பரசுராமன் ராமனைத் திக்காரஞ் செய்தல்.	384
76.	பரசுராம கர்வபங்கம்.	390
77.	தசரத சக்ரவர்த்தி புத்ரர்களுடன் அயோத்யைக்குப் போதலும், ஸீதாராமர்களின் பரஸ்பரப்ரீதியும்.	394

படங்களின் விவரம்.

———:o:———

பேஜ்

ஸீதை, லக்ஷ்மணன், பரதன், சத்ருக்நன், ஹநுமான் முதலியவர்களோடுகூடிய ஸ்ரீராமபிரான். 1

வால்மீகி க்ரௌஞ்சப் பறவையை அடித்த வேடனைச் சபித்தல். 40

ஸ்ரீ ராமனது ஸபையில் குசலவர்கள் ராமாயண கானஞ்செய்தல். 61

தசரதன் அச்வமேதமும் புத்ரகாமேஷ்டியுஞ் செய்தல். 100

ப்ராஜாபத்ய புருஷன் தசரதனுக்குப் பாயஸங்கொடுத்தல். 118

தசரதன் பத்நிகளுக்குப் பாயஸம் பங்கிட்டுக் கொடுத்தல். 119

ராமனை அனுப்பும்படி விச்வாமித்ரர் கேட்க, தசரதன் முடியாதென்று மறுத்துரைத்தல். ... 144

தாடகை எதிர்த்தோடிவர, ராமன் அவளை ஸம்ஹரஞ் செய்தல். 170

தாடகை அடியுண்டு கீழே விழுதல். 172

ராமனுக்கு விச்வாமித்ரர் அஸ்த்ரங்களைக் கொடுத்தல். 174

ஸுபாஹு மாரீசர்கள் யாகவேதிகையில் ரக்தவர்ஷங்களைப் பொழிதலும், ராமன் அவர்களை யடித்தலும் 188

ராமலக்ஷ்மணர்கள் விச்வாமித்ரரைப் பார்த்து 'நாங்
கள் உமக்கு அடிமை' என்றுரைத்தல். ...
ஸகரபுத்ரர்கள் கபிலமஹர்ஷியினருகில் யாகக் குதி
ரையைக் காணுதல். ... ...
சிவன் பகீரதனிடம் அருள் புரிந்து கங்கையை விடு
தலும், அக்கங்கை ஏழு ப்ரவாஹங்களாகப்
போதலும் ... ...
அஹல்யர் சாபவிமோசநம் ... ...
ஜநகனது யாகஸபையில் ராமன் சிவதநுர்ப்பங்கஞ்
செய்தல் ... ...
ஸீதாகல்யாணம் ... .
பரசுராம கர்வபங்கம் ... ...



சீதை லக்ஷ்மணன் பரதன் சத்ருக்நன் ஹநுமான் முதலியவர்களோடு கூடிய ஸ்ரீராமபிரான்.

ஸ்ரீராமாயணம்.

* முதல் ஸர்க்கம்.

ன்னெருகால், †தவத்திலும் வேதமோதுவதிலும் ஒழிவற்றவிருப்பமுள்ளவனும் சாஸ்த்ரங்களை யறிந்தவர்களிற் *சிறந்தவனும் ஸாஸ்வதீபுத்ரர்களாகிய மரீச்யாதிகளில் மேன்மை பெற்றவனும் முனிவரில் தலைவனுமான நாரதனைப்

---

* இந்த ஸர்க்கத்தை ஸங்க்ஷேபராமாயணமென்றும் பாலராமாயணமென்றும் சொல்லுவார்கள். ஸங்க்ஷேபம்-சுருக்கம்

† 'ஆசார்யாதீ்னவ வித்யா விதிதா ஸாயிஷ்யம் ப்ராபத்' என்றும் 'ஆசார்யவான் புருஷோ வேத' என்றும் ஸத்குருபதேசத்தைப் புகழ்ந்திருப்பதால், நாரதனுக்குள்ள ஆசார்யலக்ஷண பூர்த்தி இவ்வாக்யத்திற் சொல்லப்படுகிறது. 'அதீ்ஹ்யவித்யாஸமுபேதம் ஸமாஹிதம் ஸம்ஸ்கார தாரமீப்ஸேத்' என்று ஆசார்ய லக்ஷணம் ஆபஸ்தம்பத்திற் சொல்லப்பட்டது. இதில், அதீ்ஹ்யமென்பது-நற்குலத்திற் பிறப்பு; வித்யை-கல்வி; ஸமாஹிதமென்கிற ஸமாதானமாவது—மனத்தையடக்கி நல்விஷயத்திற்செலுத்துகை. (தவத்திலும்) இத்யாதி. இங்கு மனத்தை நிர்மலமாகச்செய்யும் சாந்த்ராயணம் முதலான வ்ரதங்களைத்தவமென்கிறது. 'தபோ வித்யாசவிப்ரஸ்ய நிஸ்ரீரேய ஸகரம் பரம்। தபஸா கல்மஷம் ஹந்தி வித்யயாஜ்ஞானமஸ்நுதே' என்று

பார்த்து, மிகத்தவம்பொருந்திய வால்மீகி, நமஸ்கரித்து

தவமும் வித்தையும் ப்ராஹ்மணனுக்கு மோக்ஷத்தைத்தருவதிலுயர்ந்தவை. ஏனெனில் தவஞ்செய்வதால் பாவத்தைப்போக்கி வேத மோதி ஞானம் பெறலாயிருக்குமென்று மநுவால் இவ்விரண்டும் புகழப்பட்டன. இதனால், மஸ்ஸமாதாநம் தோற்றும். (சாஸ்த்ரங்களே யறிந்தவர்களிற் சிறந்தவனும்) என்பதால் கல்வி சொல்லப்பட்டது. இது 'வாசீ விஷ்டம் வரம்'என்கிறபதத்தின்பொருள். இதற்கு வேறபொருளையுட்கொண்டு (ஸரஸ்வதீபுத்ரர்களாகிய) இத்யாதி. 'வாக்'என்றுஸரஸ்வதி. 'சீர்வாசீ வாணீஸரஸ்வதி' என்று நாமலிங்காநுசாஸநத்திற்சொல்லப்பட்டது. (தயா விஷ்யந்தே லஷீயந்தே இதி வாசீ விஷ்டஃ)அவளால் அடையப்பட்டவர்கள். அதாவது ஸரஸ்வதியின் பிள்ளைகளாகிய மாசிமுதலானவர்கள். அவர்களில் இவன்பகவத்பக்தனுகையால் மேன்மை பெற்றவன். இதனால் நற்குலத்திற் பிறந்தமை தோற்றும். இவ்வாறு ஆசார்ய லக்ஷணங்கள் மூன்றும் சொல்லப்பட்டன. (நராணாம் ஸம்ஸ்க்ருதி நாசம் அஜ்ஞாநம், நாரஷீயதி வண்டயதி ஸ்வோபதேசைரிதி நாரதஃ)நாரமென்றால்மனிதர்களின் அஜ்ஞாநம்; அதைத்தன்னுபதேசங்களாற் போக்குவதைப்பற்றி நாரதனென்று இவனுக்குப்பேர். அன்றியே (நர்தி ஸ்ஷீ ஹ்திம் ப்ராபயதீதி நரஃபரமாத்மா. தஷீ விஷயம் ஜ்ஞாநம்நாரம். தஷீ ஹ்ஹாதீதி நாரதஃ)நரனென்று நற்கதியைக்கொடுக்குமவனுகையால் பரமாத்மாவைச் சொல்லுகிறது. 'நரதீதிநரஃ ப்ரோக்தः பரமாத்மா ஸநாதநः' என்று பாரதத்திற்சொல்லப்பட்டது. அவனையறிகை நாரம். அதைத்தருமவனுகையால் நாரதனென்னவுமாம். (மிகத்தவம்பொருந்திய)என்பதனால்வால்மீகிக்குள்ள சிஷ்யலக்ஷண பூர்த்தியும் தோற்றுகிறது. இங்கு, தவமென்று 'தபஸா விரஹ்மம விஜிஜ்ஞாஸஸ்வ' 'ஸதபோதப்யத। ஸதபஸ்தப்த்வா। ஆநந்தோ விரஹ்மேதிவ்யஜாநாத்' என்று சொல்லப்பட்ட ப்ரஹ்மஜ்ஞாநஸாதநமான தபஸ்ஸைச் சொல்லுகிறது. அன்றியே தவமென்றது வேதத்தையும் வேதாங்கமான வ்யாகரணத்தினறிவையும் சொல்லும். ஆக, இத்தால் ஸாங்கமாய் வேதங்களையோதிக் கேவலமான கர்மத்திலுல் வரும் பயன் அல்பமாய் நிலையின்றியிருக்குமென்றுணர்ந்தவனென்று சொல்லப்பட்டது. தவமென்று நிர்வேதத்தையும் சொல்லுவார்கள்.இத்தால் ஸம்ஸாரத்தில் அருசிபிறந்து மோக்ஷத்தில்

வணக்கத்துடன் இவ்வாறு விளைவினை.

ருகிபிறந்தவனென்கிறது. அன்றியே 'தஸ்மாத் நயாஸ மேஷாங் தப ஸாமதிரிக்தமாஹுஃ' என்று தவமென்று தவங்களிலுயர்ந்த நியாஸத் தைச்சொல்லுகிறது. நியாஸமாவது-'தஜ்ஜிஜ்ஞாஸி ப்ரணிபாதேந பரிப் ரஶ்நேந ஸேவயா' என்று நமஸ்கார பூர்வகமாகச்சொல்லப்பட்ட ஆசா ர்யசரணாகதி. (வல்மீகஸ்யாபத்யம் வால்மீகி:) வல்மீகமென்று புற்றாய் அதிற்பிறந்தவனுகையால் வால்மீகி யென்கிறது. இப்படியாகில் 'ருக்ஷாஹ்வஜ்ஞாத ஜார்ஹவஸ்தஸ்மாத் வால்மீகிர்யோஜ்ஞாயதே' என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும் 'ஜார்ஹவேணேதி ஸம்ஜ்ஞதேள 'ஜார்ஹவேண தபஸ்விநா' என்று இப்ப்ரபந்தத்தன்னில் உத்தராகா ண்டத்திலும் இவனே ப்ருகு புத்ரனுகவும் இவனுக்கு ருக்ஷனென்ப தேபென்றுஞ் சொல்லுகை யெப்படி சேரும்? அன்றியும் 'சக்ரே ப்ர சேதஸஃ புத்ரத்வம் ஸ்ரஹ்மாப்யங்வமந்யத' என்றும் 'வேஜ்ஃ ப்ராசே தஸாஜாவீத்ஸாக்ஷாத் ராமாயணத்மநா' என்றும் இவனே வருணன் பிள்ளையாகச் சொல்லுவதும் எங்ஙனே சேரும்? என்னில்—இவன் க டோரமாய்த் தவஞ்செய்கையில் இவனைப்புற்றுமூடிப்போக, வருணன் ஓயாமல்மழைபெய்து அப்புற்றைக்கரைத்து வெளிப்படுத்தினமையால் ப்ருகுவின் பிள்ளையாகிய இவனுக்குப் புற்றிற்பிறந்தமையும் வருண புத்ரனுகையும் சேரும். இங்ஙனன்றியே ப்ருகுவம்சத்திற் பிறந்தவன் ப்ரசேதஸ்ஸென்று ஒருவனுண்டு. இவன் அவனுடைய பிள்ளை. ருக்ஷ னென்று பேருடையவன். இங்ஙனன்றுகில் 'சக்ரேப்ராசேதஸஃ புத் ரஃ' என்று ப்ராசேதஸ்வின் பிள்ளையென்றவிடம் நன்கு சேராது இங்கு வால்மீகியென்றது தன்னுடம்பைப்பேணுமல் கடோரமாய்த் தவஞ்செய்து மனம்முதலான இந்த்ரியங்களை யெல்லாம் அடக்கி யிருக்கும் தன்மையாகிற ஞானத்திற்கங்கமான சமதமம் முதலான வற்றை யுடையவனென்று காட்டுவதற்காக. ஆக இவ்விரண்டுபெதங் களாலும் 'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேஜமா யாத் நாஸ்த்யக்ருதஃ க்ருதேந' என்கிறபடியே கர்மத்தால் வருமவை யெல்லாம் அல்பமாய் நச்வரமாயுள்ளவை யென்று நன்முயாராய்ந்து அவைகளில் மனவெறுப்புற்று நிலையாய் அந்தமில்போன்பமான மோக்ஷத்தில் ருசி பிறந்து சமதமம் முதலான ஆத்மகுணங்களு முடையனுய் ஆசார்ய சரணாகதிசெய்யுமவனு யிருப்பவனென்று சிஷ்ய லக்ஷணை பூர்த்தி சொல்லப்பட்டது.

[1]இக்காலத்தில் இவ்வுலகத்திலே ஸகல நற்குணங்களும் பொருந்தியிருப்பவனெவன்? தாழ்ந்தாருடைய தாழ்ச்சியை நினையாது அவர்களுடன்கலந்து நேசிக்குந்தன்மையன்எவன்? [2]எவனுடைய மனம் விகாரத்தை விளைவிக்கும் காரணங்களிருப்பினும் விகாரமின்றியிருக்கும்? [3]தனக்கொருதுன்பமும் நேராமல் பிறரை வெல்லுந்திறமையுடையவனெவன்? [4]தர்மாதர்மங்களை நன்றாய்அறிந்தவன் எவன்? [5]பிறர்செய்த உபகாரமணுவாயினும் அதைப்பெரிதாகநினைப்பதேதவிரில்லாமல், எவ்வளவு அபகாரஞ்செய்தபோதிலும் அதில் கண்வைக்காமல் மறந்திருக்குமவன் எவன்? எவ்விதசங்கடத்திலும் பொய்யில்லாதவன் எவன்? ஒன்றைச்செய்ய நினைத்தால் அதுபலிக்குமளவும்நிறைவேற்றும்படியான மனவுறுதியையுடையவன் எவன்? தன் குலாசாரத்தையெப்பொழுதும் விடாமலிருப்பவன் எவன்? ஸகலப்பிராணிகளுக்கும் நன்மைசெய்

1(இக்காலத்தில்) என்கையால் இக்குணங்க ளெல்லாம் நிறைந்து காலாந்தரத்திலுள்ள ராவிம்ஹாவதாரம் முதலானவற்றையும் (இவ்வுலகத்தில்) என்கையால் தேசாந்தரமான பரமபதத்திலுள்ள ஸ்ரீம ஹாவிஷ்ணுவையும் தவிர்க்கிறது.

2 இவ்வர்த்தம் 'ஸத்ஸ்வபி விகாரஹேதுஷு அவிக்ரியத்வம் வீர்யம்' என்கிற வ்யாக்யாநத்தையுட்கொண்டது.

3 இவ்வர்த்தம் 'யேநஸ்வயமக்ஷதஸ்ஸந்பராஞ்ஜயதி தத்வீர்யம்' என்கிற வ்பாக்யாநத்தையுட்கொண்டது. இங்ஙனம்மேலிற்சிலவிடங்களிலும் கண்டுகொள்வது.

4 தர்மாதர்மங்களை யறிகையாவது—தர்மங்களைத் தவறுமற்செய்யவேண்டுமென்றும், அதர்மங்களைச்செய்யாமல் தவிர வேண்டுமென்றுமறிகை. அதை நன்றுயறிகையாவது—ஸாமாந்யமாயும் விசேஷமாயுமுள்ள தர்ம மர்மங்களை யறிகை. 'தர்மஸ்ய ஸூக்ஷ்மா கதி:' என்று தர்மகதி ஸூக்ஷ்மமன்றே.

5 'கயஞ்சிந்நோபகாரேண க்ருதே நைகேந துஷ்யதி। நஸ்மராத்யபகாராணாம் ஸதமபயாத்மவத்தயா, என்று இது மேலே ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டது.

பவன் எவன்? சாஸ்த்ரங்களெல்லாமுணர்ந்தவன்எவன்? அந்தச் சாஸ்த்ரங்களின்பொருளெயெல்லாம்நன்றுய்உரைக்கவல்லவன் எவன்? எவ்வகைக் கார்யங்களெயும் குறைவறநிறைவேற்றுந் திறமுடையவன் எவன்? யாவராலும்ப்ரியமாய்ப்பார்க்கத்தக்கவன் எவன்? அழிக்கக்கூடாத தைர்யமுடையவன் எவன்? கோபத்தை வென்று அதைத் தனக்கு ஸ்வாதீநமாய்ச்செய்துகொண்டவன் எவன்? [1]ஆயிரம் சந்த்ரஸூர்யர்கள் உதித்தாற்போல் அளவற்ற ஒளியுடையவன் எவன்? நற்குணங்களிலும் குற்றமேறிடும்படியான பொறுமையற்றவன் எவன்? எவன் யுத்தத்திற் கோபங்கொண்டால் தேவர்களும் பயப்படுவார்கள்? [2]இக்குணங்களெயுடைய மஹாபுருஷனைக்கேட்க விரும்பு

---

1 'திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ஹவேத்யுபஹந்தியா। யதிஹாஸ்ஸ ஸத்ருஶீ ஸா ஸ்யாத்தீ ஹாஸஸ்தஸ்ய மஹாத்மநஃ" என்கிறவசனத்தையுட்கொண்டு இந்த அர்த்தம் சொல்லப்பட்டது. அநுகூலர்க்கு ஸுகமாகவும் ப்ரதிகூலர்க்கு துக்கமாகவும் இருக்கிறபடியால் சந்த்ர ஸூர்யர்களிருவரும் உபமாநமாகச் சொல்லப்பட்டனர்.

2 வால்மீகி ராமசரித்ரமெல்லாம் நன்றுய் அறிந்தவன். 'இதி வீதாச ராமஶ்ச லக்ஷ்மணஶ்ச க்ருதாஞ்ஜலிஃ। அஜிஹ்மம்யாஶீரமஂஸ்தே வால்மீகி மஹிவாஶ்ரமம்' என்று வீதை ராமன் லக்ஷ்மணன் இம்மூவரும் வணக்கத்துடன் கையைக்கூப்பிக்கொண்டு வால்மீகியினுஶ்ரமத்தே றச்சென்று வால்மீகியை வணங்கினரர்கள் என்று அயோத்யாகாண்டத்தில் தான் சொல்லப்போகிறுன். பின்னும் 'ராமோ ராமோ ராம இதிப்ரஜாநாமஹமங்கலாஃ। ராமஸ்ய தஞ்ஜபதஸ்நேஹீ ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி' என்று ஸாமாந்ய ஜநங்களுமறிந்த ராமவைபவத்தை ராமராஜ்யத்தின் மத்யத்தில் வாஸஞ் செய்யும் மஹர்ஷியாகிய வால்மீகி அறியா னென்பது சேருமோ? இதை ஸத்யலோகத்திலிருந்து வந்த தேவர்ஷியாகிய நாரதனைக் கேட்டுத்தான் அறியவேணுமோ? நாரதனும் ஆராய்ந்தறிந்து சொல்லுகிறேன் கேளீரென்ன வேணுமோ? என்னில்-வால்மீகி ராமனைக்குறித்துவினவினவனன்று; வேதாந்தங்களில் பரதத்வம் பலவிடங்களிற் பலவிதமாய்ச் சொல்லப்ப

கின்றனன். இவ்விஷயத்தில் எனக்கு அளவற்ற குதூஹலமாயிருக்கின்றது. தேவரீர் ஜ்ஞானிகளில்மஹிமைபெற்றவான்றோ? இப்படிப்பட்ட மஹாபுருஷனையறிய வல்லமை உமக்கன்றோ வுள்ளது. ஆகையால், இந்த மஹாபுருஷனை அடியேனுக்குத் தெரியச்சொல்ல வேணுமென்று ப்ரச்நம் பண்ணினான்.

இப்படி விஞ்ஞைய வால்மீகியின் வசநத்தைக்கேட்டு மூவுலகத்திலுமுள்ள வ்ருத்தாந்தங்களையு மறிந்த அந்காரதமா முநிவன் மிகவும் ஆநந்தமடைந்து, கேளுமென்று அழைத்து உத்தரஞ் சொல்லத்தொடங்கினான். முநிவரே! நீர் விஞ்ஞைய குணங்கள் வெகுவாயிருக்கின்றன. இவையெல்லாங் கிடைக்கத்தக்கனவல்ல. இக்குணங்களோடு கூடின புருஷனை [1] ஆராய்ந்தறிந்து சொல்லுகி

டானின்றது. ஆகையால் ஆங்காங்குசொல்லப்படும் பரதத்வம்விஷ்ணுவோ,அல்லதுருத்ராதிகளில் ஒருவனேஎன்பது விஞ்ஞைய வால்மீகியின் கருத்து. இக்கருத்தறிந்தநாரதனும் ராமனாய் அவதரித்த ஸ்ரீவிஷ்ணுவே வேதாந்தங்களில் ஓதப்படும் பரதத்வம்.அவனே யாவர்க்கும்மேலானவன். ப்ரஹ்மா முதலானவர்கள் அனைவரும்அவனுடைய ஆணைக்குட்பட்டவர்கள். வேதங்களெல்லாம் பலவிதமாய்ச் சொல்லுவது மவனையே யென்று வேதங்களிற் சொல்லும் குணங்களையெல்லாம் ராமனிடத்திற் காட்டி உத்தரமருளிச்செய்கிறான். ஆகையால் இவை யெல்லா மமையும்.

1 நாரதன் ராமசரித்ரத்தைச்சொல்லவந்தவனுகையாலும் வால்மீகியின் கேள்விக்கு ராமனையே சொல்லவேண்டியிருப்பதனாலும் உடனேசொல்லவேண்டியிருக்க ஆராய்ந்தறிகையேதுக்கென்னில்— தானுத்தேசித்த விஷயத்தையே கேட்டதனால் வந்தகளிப்பாலும் ராம குணங்களை நினைத்து அதில் மூழ்கியிருந்தமையாலும் மெய்ம்மறந்திருந்தமைபற்றி இங்ஙன் சொல்லக்கூடும்.

றேன், கேளீர். [1] இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்து[2] ராமனென்று பேர்பெற்றவனொருவனுளன். அவனே உம்மைப்போன்றவர்களன்றியே ஸகலஜநங்களும் நன்றாய்க் [3] கேட்டறிவார்கள். [4] அவனுடைய ஸ்வபாவம் என்றும்

---

1 ஜநகாதி மஹாகுலங்களுமிருக்க இக்ஷ்வாகு வம்சத்தில் வந்த வதரித்ததற்குக் காரணமென்னெனில்?—இச்சந்தேகம் தீருகைக்காகவே இங்கு இக்ஷ்வாகுசப்தம் சேர்க்கப்பட்டது. இக்ஷ்வாகு வென்பவன் மநுமஹாராஜனுடைய மூத்தகுமாரன். இவன்தான் முன்வெகுகாலம் விஷ்ணுவை ஆராதித்து அவருடைய மூர்த்திவிசேஷமாகிய ரங்கநாதனைப்பெற்றான். ஆகையால்தான் இந்த வம்சத்தில் ரங்கநாதன் ஆராதிக்கப்பட்டிருந்ததும்.இவ்விக்ஷ்வாகுவினிடத்தில் பக்ஷபாதத்தாலே இவ்வம்சத்தில் பகவான் அவதரித்தது. 'ஒரு குலத்தில் வைஷ்ணவனுயிருப்பானொருவன் பிறந்தால் 'வைஷ்ணவோ ந8 குலே ஜாத: ஸஸ்வந்தாரயிஷ்யதி' என்கிறபடியே அவ்வம்சத்திற் பிறந்தவர்களனைவருமே உத்தீர்ணராகிறார்களென்கிறது. இப்படியிருக்க யாதொரு வம்சத்திற் பிறந்த அரசர்கள் அனேகரும் பகவன் மூர்த்திவிசேஷமாய் இப்பொழுதும் காவேரியினிடையிற் பள்ளிகொண்டிருக்கிற ரங்கநாதனைத் தன் க்ருஹத்தில் ஆராதித்துக்கொண்டு வைஷ்ணவோத்தமர்களா யிருக்தார்கள்; அவ்வம்சத்தில் அம்மஹாபுருஷனே வந்தவதரித்தான். ஆகையால் அவ்வம்சத்தின் பெருமை சொல்லத்தரமன்றென்கிற இவ்வதிசயந் தோற்றுகைக்காக (இக்ஷ்வாகுவம்சத்தில்) என்னப்பட்டது.

2 (ராமயதி ஸர்வாந் ஹ்ருஷ்டாந்நிராம:)தன் குணங்களால் யாவரையும் ஸந்தோஷிக்கச் செய்வதினால் ராமன். (ராமந்தே அஸ்மிந் ஸர்வே ஹ்ருஷ்டாந்நிராம:) இவனிடத்தில் யாவரும் குணங்களைக்கண்டு சந்தோஷிக்கிறார்களாகையால் ராமனென்றுஞ் சொல்லுவார்கள்.

3 (கேட்டறிவார்கள்) தாடகையைக்கொன்றது, ஸுபாஹு மாரீசர்களை வென்றது,விச்வாமித்ர யாகத்தைக்காத்தது, அஹல்யை சாபத்தை விடுவித்தது, சிவனுடைய வில்லை முறித்தது, பரசுராமனை நிக்ரஹஞ்செய்தது, மாமாமங்களேழையும் பிளந்தது, வாலியை முடித்தது, கடலில் அணைகட்டினது, இராவணனுடைய மூலபலத்தை யழித்தது முதலான சரித்ரங்களைக் கேட்டு இவனே ஸ்ரீமந் நாராயணனென்று நன்றாய் அறிவரென்கிறது.

4 இங்கு 'நாஸ்யஜாயதேஜ்ரீயதி நவயோநாஸ்யஹந்யதே' 'அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோ பிபாஸ:' முதலான ச்ருதிகள் ப்ரமாணம்.

ஒருபடிப்பட்டு மாறுபாடின்றியிருக்கும். [1] அவனுடைய சக்தி இவ்வளவென்றும் இத்தன்மைய தென்றும் எண்ணக்கூடாமல் நாநாவிதமாய் விரித்திரமா யிருக்கும். [2] அவன் ஜ்ஞாந ஸ்வரூபனுகையாலே ஸ்வயம்ப்ரகாசன்; [3] நிலையாய் அளவற்று நிகரின்றிநிற்கும் ஆநந்தமுடையவன்; [4] உலகெல்லாம் தன்வசமாக்குந் தன்மையன்; [5] சிறந்த புத்தியுள்ளவன். [6] அழியாத நீதியமைந்தவன். [7] அவன்தான் வேதங்களைப் ப்ரஹ்மாவுக்கு முதலில் வெளியிட்டவன். [8] அவனது ஐச்வர்யம் அளவற்றிருக்கும்.

---

1 இங்கு 'பராஸ்யசக்திர்விவிதையவ ஸ்ரூயதே ஸ்வாஹாவிகீ ஜ்ஞாநவலக்ரியாச' என்கிற ச்ருதிப்ரமாணம்:

2 இங்குப்ரமாணம் 'விஜ்ஞாநமாநந்தம்' என்கிறச்ருதி.

3 இங்கு 'ஆநந்தோவிரஹ்ம'.

4 இங்கு 'ஸர்வஸ்யவஸீ ஸர்வஸ்யேஸாநஃ'

5 இங்கு, புத்திக்குச் சிறப்பாவது—'ஸுஸ்ரூஷா ஸ்ரவணஞ் சைவக்ரஹணம் தாரணந்தயா। ஊஹாபோஹோர்த்யவிஜ்ஞாநம் தத்த்வஜ்ஞாநம்சயீமாநாः' என்று சொல்லப்பட்ட குணங்களெல்லாம் நிறைந்தமை.

6 இங்கு 'யாதா யயாபூர்வமகல்பயத்' என்றும் 'ஏஷஷேதுர்விதரணஏஷாலோகாநாமஸம்பேதாய' என்றும் ச்ருதிகள்ப்ரமாணம்.

7 'யோவிரஹ்மாணம் விதயாதிபூர்வம்யோவை வேதாம்ஸ்ச ப்ரஹிணோதிதஸ்மை'.

8 நித்யவிபூதியும் லீலாவிபூதியுமாகிற உபய விபூதிகளுக்கு மீச்வரனென்று கருத்து; 'பாதோஸ்ய விஸ்வாபூதாநி' என்று லீலாவிபூதியை ஒருபங்காகச் சொல்லி 'த்ரிபாதஸ்யாம்ருதம்திவி' என்று நித்ய விபூதியை லீலாவிபூதியைக்காட்டிலும் மும்மடங்கு அதிகமாக ச்ருதி சொல்லிற்று. இனி லீலாவிபூதியைப் பார்த்தால் ஒரு ப்ரஹ்மாண்டம் பலவகையாகப் பிரிந்து அளவிடவொண்ணாதிருக்கும். இவ்விதமான ப்ரஹ்மாண்டங்கள் 'அண்டாநாந்து ஸஹஸ்ராணி நியுதாநாம்யுதாநிச' என்று கணக்கற்றிருக்கும். ஆனபின்பு லீலாவிபூதியைவிட மும்மடங்கான நித்யவிபூதியினது அளவற்றமை இனிச்சொல்லவேண்டுவதொன்றன்று. ஆகையால் (அவனதைச்வர்யம் அளவற்றிருக்கு) மென்கிறது. 'ஸர்வமிதமஹீயாத்தஃ' என்கிற ச்ருதி இங்கு ப்ரமாணம்.

அவன் சத்ருக்களைவெல்லும் ஸ்வபாவன். [1] அவனுடைய தோள்கள் [2] உயர்ந்து பரந்திருக்கும்; [3] புஜங்கள் திரண்டுருண்டு நீண்டிருக்கும்; [4] கழுத்து சங்குபோல் மூன்று ரேகைகளால் அலங்கரிக்கப்பட்டு அழகாயிருக்கும். [5] கன்னங்கள் சதைபிடித்துப் பெருத்திருக்கும், [6] மார்பு

---

1 இது முதலாக 'யஏஷோந்தராதித்யேஹிரண்மய: புருஷோ தூர்ய தே ஹிரண்யஸ்மஶ்ருர் ஹிரண்யகேஶ ஆப்ரணவாத்ஸர்வ ஏவ ஸுவர்ணஸ்தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீதஸ் யோஹிதி நாம ஸஏஷஸர்வேப்ய ஏப பாப்மப்ய உதித: உதேதி ஹவை ஸர்வேப்ய: பாப்மப்யோ யஏவம் வேத' என்று அந்தராதித்ய வித்யையிற் சொல்லப்பட்ட ஸர்வாங்கஸுந்தரமான திருமேனியைச் சொல்லுகிறது.

2 தோளுயர்ந்திருக்கை மஹாபுருஷலக்ஷணமாக ஸாமுத்ரிகத்திற் சொல்லப்பட்டது. அது எங்ஙனே யென்னில்—'கக்ஷ:குக்ஷிஶ் சவக்ஷுர்ச வ்ருணஸ்கந்யெளலலாடிகா। ஸர்வஹ்ருதேஷ்டு நிர்ஜிஷ்டா உந்நாஸ்து ஸுவப்ரஹ:' என்று.

3 இதுவும் 'ஆஜானுலம்விநௌவாஹ்விவ்ருத்தபீநௌமஹீஶ்வர:' என்கிறபடியே மஹாபுருஷலக்ஷணம். இப்படி மேலும் கண்டு கொள்வது.

4 இங்கு 'கம்வாதீரீவஸ்துர்யபதிர்லம்வகர்ணேதிஹ்ருஷணஶ்' என்று ஸாமுத்ரிகம். 'ரேவாத்ரயாந்விதாதீரீவாகம்வாதீரீவேதிகீயதே' என்று நிகண்டுவிற்சொல்லுகையாலே மூன்று ரேகையுள்ள கழுத்தை கம்வாக்ரீவையென்கிறது. 'கம்வ' என்றால் சங்கு. சங்கு போன்ற கழுத்தென்றுபொருள். சங்குக்கு அடியில் மூன்று ரேகைகளுண்டு. அதையுடையவன் கம்வாதீரீவன்.

5 இங்கு 'மாம்ஸலௌதுஹநூயஸ்யஹவதஸ்த்வீஷத்வாந்தௌ। ஸுகோ மர்ஷ்டமஸீநாதி யாவத்ஸாயஸ்ஸுவர்விதி:' என்று லக்ஷணம்.

6 இங்கு 'ஸ்யிராம்விஶாலம் கபிநமுந்நதம் மாம்ஸலம் ஸமம்। வக்ஷோ யஸ்ய மஹீபாலஸ்தத்ஸமோவர்ஷவேந்தர:' என்று லக்ஷணம்.

பரந்துயர்ந்து [1]பெருத்துக்கடிநமாயிருக்கும்; சரீரம் மிகவும் மேலானவில்லேத்தாங்கத்தக்கதாயிருக்கும்; [2] கழுத்தெலும்புசதைபிடித்துவெளியில் தோன்றுதிருக்கும். [3] அவனைப்பார்த்தமாத்திரத்தில் பகைவரெல்லாம் பயந்தோடுவார்கள். [4] அவன் ஸ்வபாவத்தால் பாபங்களே வென்றவன். [5] அவனுடைய சிரஸ்ஸு வட்டமாய்க்குடைபோலிருக்கும்; [6] கெற்றி அஷ்டமீசந்த்ரன்போல் விளங்காகிற்கும். [7] அவன் கடகத்தால் யானையோடும் ஸிம்ஹத்தோடும் ஒத்

---

1 மேலுள்ள 'ப்ரவக்ஷாஃ' என்கிற பதத்தின் பொருள் இங்குக் கூறப்பட்டது.

2 இங்கு 'விஷமைர்ஜத்ருபிர்நிஸ்ஸ்வா அதிஸ்ருக்ஷமஸீசமாநவாஃ। உந்நதைர்ஸோமிநோ நிம்நைர் நிஸ்ஸ்வாஃ ப்ரைர்நராயிபாஃ' என்று லக்ஷணம்.

3 முன்பின்னெல்லாம் திருமேனியைச் சொல்லாகிற்க இடையில் இது சேருமோவென்னில், இதுவும் திருமேனியின் பெருமையைத் தோற்றுவிக்குமாகையால் சேரும்.

4 இங்கு இது சேரும்படி யெங்ஙனே? திருமேனியின் குணமன்றே, ஏன்னில்—உலகத்தில் ஜீவராசிகள் தந்தம் பாபத்திற்கு அதுகுணமாகச் சரீரத்தைப் பெறுவதுபோலன்று இவன் இங்குப் பிறந்திருப்பது. அதுக்கடியானபாபமிவனுக்கில்லே. ஆகையால் 'இச்ஹாஸுஹீதாஜிமதோருஜேஹஃ' என்கிறபடியே இவனுடைய திருமேனி தன்னிச்சையால் தன் மனத்துக்குகப்பாய் கம்பீரமாய்க் கொள்ளப்பட்டது. இங்ஙனங்கருத்தாகையாலே இதுவும் சேரும். இங்கு இந்த ச்லோகத்துக்குத் தன்னேயாச்ரயித்தவர்களினிச்சாநுஸாரமாக அவர்கள் திருவுள்ளத்துக்குகப்பாய்த்திருவருவங்கொள்ளுமென்றும் பொருள் சொல்லுவர்.

5 இங்கு 'ஸமவ்ருத்தமிராஸீ சைவச்ஹத்ராகாரஸிராஸ்தயா। ஏகச்ஹத்ராம்மஹீம் ஹ்ருங்க்தே தீர்வமாயுஸ்ஸஜீவதி' என்று லக்ஷணம்.

6 இங்கு 'அர்யசந்த்ரநிஹந்துங்மம் லலாடம்யஸ்யஸப்ரஹ்ருஃ' என்று லக்ஷணம்.

7 இங்கு 'வ்ரிம்ஹர்க்ஷஹஜவ்யாவ் ரமதயோமநுஜாமுநே। ஸர்வத்ராஸ்ருவமேயந்தே ஸர்வத்ராஜயிநஸ்ஸ்ம்ருதா' என்று லக்ஷணம்.

திருக்கும். [1]அவனுடைய தேகம் அதிக உயரமும் அதிக குறுக்கமுமில்லாமல் லக்ஷணம் பொருந்தி ஸமமாயிருக்கும். [2] அவயவங்கள் ஒன்றோடொன்று ஸமமாய்ப் பிரிந்திருக்கும். [3]அவன் நீலமேகம்போல் நிகுநிகென்று மழமழத்துக் காண்போர்கண்களைக்கவரும்படியான தேககாந்தியுடையவன். அவன் அளவற்றபராக்ரமமுடையவன். [4]அவனுடைய கண்கள் தாமரையிதழ்போல் விசாலமாய் நீண்டு செவ்வரியோடியிருக்கும். அவனது அவயவங்களெல்லாம் அழகு பொருந்தியிருக்கும். ஸாமுத்ரிகத்திற் சொன்ன சுபலக்ஷணங்கள் முழுமையும் அவனுக்கேயுள்ளவை. [5]அவன் [6]தர்மங்களின் ஸூக்ஷ்மங்களையெல்லாம்றி

---

1 இங்கு 'ஷண்ணவத்யங்கு²லோத்ஸேயஸ்ஸார்வலௌமோ வேந்த்ரபஃ' என்று சொல்லப்பட்டலக்ஷணம் பொருந்தியென்கிறது.

2 இங்கு 'ஸ்ரீருவெளநாஸாபுடெள நேத்ரே கர்ணோவாஷ்டெளச சுசுகே। கூர்ப்பரௌ மணிவந்யெளச ஜாநுநீவ்ருஷ்ணே கடூ। கரௌ பாதௌள ஸ்மிசெளயஸ்ய ஸமௌஜ்ஞேயஸ்ஸஹ்ருதிஃ' என்ற லக்ஷணம்.

3 இங்கு 'சக்ஷுஸ்ஸ்நேஹோ ஸௌஹார்தீயம் ஔதஸ்நேஹோ ஹோஜஸம்। த்வசஸ்ஸ்நேஹோ ஸய்யாச பாஉஸ்நேஹோ வாஹஸம்' என்று லக்ஷணம். ஸ்நேஹமாவது-நிகுநிகுப்பு.

4 இங்கு 'ரக்தாந்தைஃ பத்மபத்ராஸைர் லோசநைஸ்ஸ்வ ஹோபிந:' என்று லக்ஷணம்.

5 இப்படி ஆச்ரிதர் அநுபவிக்கும் திருமேனியைச்சொல்லி, இனி மேல்ஆச்ரிதரக்ஷணத்துக்குறுப்பான குணங்களைச் சொல்லுகிறது.

6 தர்மத்தின் ஸூக்ஷ்மமாவது-குற்றம்பாராமல் சரணம் புகுந்தவனை ரக்ஷிக்கவேண்டுமென்கையே. இக்குணம் 'மித்ரஹாவேஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கயஞ்சந। தோஷோயதீயபித்யஸ்யாத் ஸதாமேதத்³ஹ்ருதிவ்ரதம்' என்று வெளியிடப்பட்டது.

ந்தவன்; [1]சொன்ன சொல்தவறுன்; ஸகலப்ராணிகளுக்கும் ஹிதஞ்செய்வதில் ஊற்றமுடையவன்; [2]இப்படிப்பட்ட குணங்களுடையவனென்று பெருங்கீர்த்தி பெற்றவன்; [3]எல்லாவற்றையும்ஒருமிக்கஅறியுந் திறமுள்ளவன்; மிகப் பரிசுத்தன்; தன்னையடித்தவர்களுக்கு ஸ்வாதீநமாயிருக்குமவன்; அவர்களின் நன்மையிற் சிந்தைகூர்ந்தவன்; [4]ப்ரஹ்மலோடொத்தவன்; தனக்குப் பத்தியான ஸ்ரீ மஹரா

1 இதுவும் 'அப்யஹ்ம ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம்வா வீதேஸ லக்ஷ்மணம்। நதுப்ரதிஜ்ஞாம் ஸம்ஸ்ருத்ய ஸ்ரீராஹ்மணேஹ்யோ விஸேஷதஃ' என்று இதுமுதலான விடங்களில் காணலாம்.

2 இங்கு 'தஸ்யநாம மஹத்யஸஃ' என்று ச்ருதி.

3 இங்கு 'யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்' என்று ச்ருதி.இது 'ஜ்ஞாநஸம்பந்நஃ' என்கிற பதத்தின் பொருள். இதற்கு 'தன் ஸ்வரூபத்தையுணர்ந்தவ'னென்றுபொருள்கூறி, 'ஆத்மாநம் மாநுஷம்மந்யே' என்று தாழ்ப்பறிட்டுக்கொண்டதித்தனே. இதனால் 'மயாத்வம்ஸமதுஜ்ஞாதோமஹச்லோகாந்துத்தமாந்'என்று ஜடாயுவைக்குறித்து 'நீமேலான லோகங்களையடைவாய், இவ்வாறு நானுனக்கநுமதி கொடுக்கிறேன்' என்று சொன்னமை சேரும். ப்ரஹ்மோபதேசமில்லாமல் அவ்வுலகங்களுக்குப் போகையரிது. ப்ரஹ்மஜ்ஞாநமில்லாதவன் ப்ரஹ்மோபதேசம் பண்ணச்சேராது. ஆகையால் இவ்வாறு பொருள்கொள்ளவேணுமென்பர் சிலர். ஜடாயுவுக்கு மோக்ஷங்கொடுத்தமை 'ஸத்யேநலோகாஞ்ஜயதி' என்று ராமன் ஸத்யத்தால் உலகமெல்லாம் வென்றவனுகையால் அமையும். ஆனபின்பு இவ்வாறு பொருள்கூறவேண்டிய நீர்ப்பந்தமில்லை.

4 'மயீயேவிஞ்சி ஸ்ரிஸம்ப்ரயோவதாரஃ'என்றுப்ரஹ்மருத்ரர்களுக்கு நடுவில் லோகத்தை ரக்ஷிக்கும்பொருட்டு விஷ்ணுவாய் அவதரித்தாற்போலே ப்ரஹ்மாவைப்போலிங்கவதரித்தானென்கிறது. ப்ரஹ்மனென்று ஸாக்ஷாத் பரம்புருஷனைச் சொல்லி ஸாக்ஷாத் பரம்புருஷஸ்லேடொத்தவனென்றுஞ் சொல்லவமையும். ஆனால் ராமனே பரப்ரஹ்மமாயிருக்க இதெங்ஙனே சேருவதென்னில்?—மநுஷ்ய தர்மங்களான சோகமோஹாதிகளைத் தானேறிட்டுக்கொண்டமை பற்றி பேதங்கற்பித்துப்போலியாகச் சொல்லவேண்டும். பரசுராமனுடைய

லக்ஷ்மியோடு இணைபிரியாமலிருக்குமவன்; யாவரையும் போஷிக்கவல்லவன்; தனது அன்பர்களின் விரோதிகளைக் களையுமவன்; [1]இவனவனென்னுது ஸர்வப்ராணிகளுக்கும் ரக்ஷகனாயிருக்குமவன்; [2]தர்மத்தை யாவரும்தவறுதபடி நன்றாய்நிலைநிறுத்துமவன்; [3]தன்னுடையதர்மத்

லோகங்களைத்தடுக்கை, ஜடாயுவுக்குமோக்ஷங்கொடுக்கை, தன்னுடன் அயோத்தியையிலுள்ள புல்லெறும்பு முதலாகச் சராசரங்களையெல்லாம் வைகுந்தமேறச்செய்கை முதலான அற்புதசரித்ரங்களாலொத்திருக்கை.

1 இனி யிவ்வவதாரத்துக்குரிய குணங்களைச் சொல்லுகிறது (இவனவனென்னுது) என்று தொடங்கி. உலகத்தில் ப்ரபுவாயிருக்குமொருவன் தனது ஜநங்களைமாத்திரம் காப்பாற்றுவதுண்டு. இவனப்படியன்றி ஸர்வேச்வரனுகையாலே யாவரையும் காக்குமவனென்கிறது.

2இப்படி ஸர்வரக்ஷகனுகில்பாபிகளாயிருப்பவர்களுக்கும்இஷ்டங்களைச்செய்து அநிஷ்டங்களைத் தவிர்க்கவேண்டுமே, அது சேராதேயென்னில், சொல்லுகிறது (தர்மத்தை யாவரும்) என்று தொடங்கி. அதாவது—தர்மத்தைத் தான் அநுஷ்டித்தும் பிறரை யனுஷ்டிக்கச்செய்தும் நிலைநிறுத்துமவனென்கை. இத்தால் சாஸ்த்ரத்தை மற்றத்து நடக்குமவர்களையும் வைத்தியன் வியாதியைப்போக்கி ஸுகப்படுத்துவதுபோல் தக்க தண்டனைகளால் பாவங்களைப் போக்கிப் பரிசுத்தராகச் செய்பவனென்கிறது.

3 தன்னுடைய தர்மமாவது தன்னையடைந்தவர்களைத் தான் விடாமல் ரக்ஷிக்கையென்கிற தன்னுடைய விசேஷதர்மம். அல்லது க்ஷத்ரியஜாதியிற் பிறந்திருக்கும் தன்னுடைய க்ஷத்ரதர்மத்தைச் சொல்லுகிறது. க்ஷத்ரியர்களுக்குச் சொன்ன தர்மங்களைக் குறைவறநடத்துமவனென்கை. உலகில் யாவரும் பிறர்க்குச் சொல்லுவதில் வல்லவரே. தாம் செய்யும்போது அவ்வல்லமையிருப்ப தரிதாகையாலே அப்படியன்றி யாவரும் தன்னைப்பார்த்துத் திருந்தும்படி நடக்குமவனென்கை. 'பரோபதேசஸமயே ஜநாஸ்ஸர்வேபி பண்டி

திற் குறைவற நடக்குமவன்; தன்னைப்பற்றினரை விசே ஷமாய்க் காக்குமவன்; வேதங்களையும் வேதாங்கங்களை யும் நன்றாய்க்கற்றறிந்தவன்; தநுர்வித்தையில் மிகவுந் தேர்ந்தவன்; மற்று முள்ள ஸகல சாஸ்த்ரங்களின்மர்மங் களையுமுள்ளபடியறிந்து மறப்பின்றி மேன்மேற் பரவு கின்ற புத்தியின்தோற்றமுடையவன்; அவனுக்கு உலக மெல்லாம் ப்ரியமாயிருக்கும். அவனும் உலகுக்கெல் லாம் ப்ரியன்; எல்லாவற்றையும் ஸாதிக்கவல்லவன்; அதிகம்ப்ரஸ்வபாவன்; நன்றாய்ப்பேசவல்லவன்; [1]ஸமுத்ர த்தை நதிகள் ஓயாமற் சூழ்வதுபோல் ஸத்புருஷர்கள் அவனை யெப்பொழுதுஞ் சூழ்ந்துகொண்டிருப்பார்கள்;

தாஃ।ஸ்வாதுஷ்ஂராஸ்ய ஸமயே முநயோபி ந பண்டிதாஃ'. அன்றியே தன்னுடைய தர்மமாவது யாவரிலும் மேலாயிருக்கை. அதைச் செவ தநுர்ப்பங்களுஞ்செய்வது பரசுராமனை ஜயிப்பது முதலான வ்யாபாரங் களால் நிலைநிறுத்திக்கொள்ளுமவனென்னை.

1 (எப்பொழுது) மென்கையாலே-அஸ்த்ரவித்யை கற்கும்பொ ழுது ராமன் இடையில் ச்ரமந்தீருகைக்காக ஓர் மரத்தின் நிழலிலொ துங்குமளவிலும் தர்மஸந்தேஹங்கேட்கப்பெரியோர்கள் வந்துசூழ, 'ஜ்ஞாநவ்ருத்தையோ வயோவ்ருத்தையஸ் ஸீல வ்ருத்தையஸ் ச ஸஜ்ஜநாஃ। கயஶ்சாஸ்தவை நித்யமஸ்த்ரயோ மீ யாந்தரேஷ்வபி' என்கிறபடியே அவர்களுடன் கலந்திருக்குமவனென்கிறது. அஸ்த்ரவித்யாப்யாஸத் திலிப்படியாகில் ஹோமம் தேவபூஜை ஸ்பை முதலான காலங்களில் சொல்லவேண்டியதில்லை. இதனால் ஈச்வரனைப் பற்றுகைக்குக் கால தேசநியமமில்லையென்பது தோற்றும். நதிகள் ஸமுத்ரத்தைச் சூழ் வதுபோல் என்கையால் எப்படி நதிகள் ஸமுத்ரத்தில் கலக்கையால் மஹாநதிகளென்று மேன்மை பெறும், அப்படியேராமனைப்பற்றி யிவ ர்களும் பெருமைபெற்றவரென்கிறது. எப்படி நதிகள் வந்து வீழ்ந் தபின்பும் ஸமுத்ரமே தனியாய் விளங்கி நிற்கும், அப்படியே ஸஜ் ஜந கோஷ்டியில் நக்ஷத்ரங்களில் சந்த்ரன்போல ராமன் தனியே விளங்கிநிற்குமென்கிறது. எப்படி பதினாயிரம் நதிகள் வந்து வீழ்ந் தபோதும் ஸமுத்ரம்கலங்காதிருக்கும், அப்படியே ராமனும் ஜாபாலி

பெரியோர்கள் அணுகத்தக்க பெருமை பொருந்தினவன்; ஆகிலும், ஸர்வர்க்கும் ஸமனுயிருக்குமவன். பார்க்கப் பார்க்க மேன்மேலும்ப்ரீதியை விளைவிக்கும்படியான கரட்சியையுடையவன். முனிவரே! [1]அவன்குணங்கள் என்னால் எடுத்துரைக்கமுடியா. அவன் ஸகலமான மங்கல குணங்களுக்கு மிருப்பிடம். அவனே [2]கோஸலராஜன் திருமகளான கௌஸல்யாதேவியின் வயிற்றில் பிறந்து அவளுக்கு மஹாநந்தத்தை விளைவிக்குமவன். [3]அவன் ஸமுத்

முதலானர் எவ்வளவு கலக்கப்பார்க்கிலும் கலக்கமுடியாதிருக்குமவனென்கிறது. உலகத்தில் ராஜகுமாராயிருப்பார் ஒருக்கால் விநோதார்த்தமாக சிருங்காரஹாஸ்யாதிகளுடன் சூழ்ந்திருப்பார்; இவனப்படியன்றி ஸத்புருஷர்களால் சூழ்ப்பட்டவனென்கிறது.

1 இங்கு 'இஷ்டகூயாந்நிவர்தந்தே நாந்தரிகூகூஷிதிகூயாத் மதிகூயாந்நிவர்தந்தே நமோவிஷ்ணுகூயாத்' என்று ப்ரமாணம்.

2 தசரத சக்ரவர்த்தியின் பிள்ளை யென்றுமல் கௌஸல்யையைச்சொல்லுவானென்னென்னில் தசரதசக்ரவர்த்தி பட்டாபிஷேகஞ் செய்யத்தொடங்கி இடையில் விக்நம் வந்து மரித்துப்போலுமகையாலேபுத்ரனல்வந்த ஸுகத்தை யவன் பூர்ணமாகஅநுபவிக்கவில்லை. கௌஸல்யையே அநுபவித்தவளாகையாலே இங்ஙனஞ்சொல்லப்பட்டது. இப்படியே 'கௌஸல்யா லோகஜ்தாரம் ஸுஷுவே யம் மஹ்விஹ்'என்கிற விடத்திலும் கண்டுகொள்வது. 'பட்டமஹிஷியின் பிள்ளைபாகையால் ராஜ்யாபிஷேகத்துக்குத் தக்கவனிவனேயென்று தோற்றுகைக்காகவென்றுஞ் சொல்லுவார்கள்.

3 இனி இவன் நிகரில்லாதவனென்றும் இவனுக்கு மேற்பட்டவஸ்துவில்லை யென்றுஞ் சொல்லுகைக்காக உலகத்தில் உயர்ந்தவஸ்துக்களைப் பொறுக்கி ஒவ்வொருகுணத்துக்கு ஒவ்வொன்றைப் போலியாகச் சொல்லுகிறது. இதுவும் 'ஸமுத்ரம் பாணம்போல் போகிரான்'என்பதுபோல் வஸ்துவின் ஸ்வரூபத்தை யறிவிக்கைக்காகச் சொன்னதித்தனை; முற்றுவமையன்று.

ரம்போல் மஹாகம்பீரன்; ஹிமாலயம்போல் அதிதீரன்; வீரத்தன்மையில் விஷ்ணுபோன்றவன். சந்த்ரன்போல் பார்க்க ப்ரியமாயிருக்குமவன்; கோபத்தில் காலாக்நியோடொத்தவன்; பொறுமையில் பூமியைப்போன்றவன்; ஸத்யத்தில் ஓர்வடிவுகொண்ட தர்மதேவதை போலிருக்குமவன்.

[1] இப்படிப்பட்ட ஸகலநற்குணங்களும் உண்மையானவீரத்தன்மையும் நீதிசாஸ்த்ரங்களில் விசேஷமாகச் சொல்லப்பட்ட ஸந்திவிக்ரஹம் முதலான குணங்களும் பொருந்தி, ப்ரஜைகளுக்கு நன்மைசெய்யும் தன்மை

---

1 இவ்வாறு வேதாந்தங்களிற்சொன்ன கல்யாணகுணங்களெல்லாம் நிறைந்த பரதத்த்வம் ராமனேயென்று நிரூபிக்கைக்காக அக்குணங்களேயெல்லாமவனிடத்திற்சொல்லிஇப்படிசொன்னகுணங்களையும் மற்றும் சொல்லாதவற்றையும்ராமனிடத்தில் அவனுடைய சரித்ர மூலமாக வெளியிடும்பொருட்டு அச்சரித்ரம்அயோத்யாகாண்டம்முதலாகச் சொல்லப்படுகிறது—(இப்படிப்பட்ட ஸகலநற்குணங்களும்) என்று தொடங்கி. இம்முதல் ஸர்க்கத்துக்கு ஸங்க்ஷேப ராமாயணமெனப் பேரென்று கீழிற் சொல்லப்பட்டது. ராமாயணத்தின்கதையெல்லாம் இங்கு ஸங்க்ஷேபமாகச் சொல்லப்படுவதுபற்றியன்றே இது ஸங்க்ஷேப ராமாயணமெனப்படுகிறது. ஆனால் பாலகாண்டக்கதை ஏன் சொல்லவில்லையெனில்—அதுவும் கீழ் வாக்யங்களில் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது. எப்படியெனில்—(இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்து) என்கையால் - ராமாவதாரமும், (அவனுடைய சக்தி இவ்வளவென்றும் இத்தன்மையதென்றும் எண்ணக்கூடாமல் நாநாவிதமாய் விகித்திரமாயிருக்கும்) என்கையால் தாடகாவதமும், தாடகையின் புத்ரர்களாகிய ஸுபாஹு மாரீசர்களே யொழித்தமையும், (தநுர் வித்யையில் மிகவுந்தேர்ந்தவன்) என்கையால்-விச்வாமித்ரனிடமிருந்து திவ்யாஸ்த்ரங்களெல்லாம் பெற்றமையும், (தனக்குப் பத்நியாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியோடிணைபிரியாதிருக்குமவன்) என்கையால்-லக்ஷ்மியவதாரமாகிய வீ தாதேவியை மணம் புரிந்ததுமாகிய பாலகாண்டக்கதையுஞ் சுருக்கமாய்ச்சொல்லப்பட்டது.

யுடையவனும் தனக்குமிகவும் ப்ரியனும் மூத்தகுமாரனு மாகிய ராமனைத் [1]தசரதசக்ரவர்த்தி மந்திரிமுதலானவர் களின்ப்ரியஞ்செய்யவேண்டியுந் தனக்குள்ள ப்ரீதியாலும் [2]இளவரசனாகச் செய்ய விரும்பினன். அவனுடைய ராஜ் யாபிஷேகத்திற்காகச் சேர்க்கப்பட்டுள்ள மங்களவஸ்து ஸம்பாரங்களையெல்லாம் [3]பார்த்து, தசரதசக்ரவர்த்தி யின் பாரியையாகிய கேகயராஜாவின் புத்திரி கைகேயி யென்பவள் முன் சம்பராஸுரயுத்தத்தில் பர்த்தாவினி டம் இரண்டு [4]வரங்களைப் பெற்றவளாகையால் அவற்றி லொன்றுக்கு ராமன் காட்டிக்குப் போகவேண்டிய தென் றும் மற்றொன்றுக்குத் தன் புத்திரன் பரதனுக்கு ராஜ் யாபிஷேக மாகவேண்டியதென்றும் இவ்விரண்டு வரங்

---

1 (தசரதசக்ரவர்த்தி)—(உஸ்ஸ—ஹிக்ஷ—ரயோ யஸ்ய ஸ உஸ ரயஸ) பத்துத்திசைகளிலும் யாதொரு தடையுமின்றித்தேரில் திரிபவ னானதுபற்றி இம்மன்னவனுக்குத் தசரதனென்று பேர். இதற்கு – 'தான் நிர்வஹிக்க மூடியாமற் பயந்து பிள்ளைக்கு ராஜ்யங் கொடுத்தா னல்லன்' என்று கருத்து. இதனால் 'மறுபடியும் தான் வாங்கிக்கொள் வனோ' என்கிற சந்தேகந் தீரப்பெற்றது. (சக்ரவர்த்தி)-பூமண்டலத் துக்கதிபதி. 'இதனால் பூமியைக் கொடுக்க இவன் உடையவனோ, அல் லனோ' என்கிற சந்தேகந் தீர்க்கப்பட்டது.

2 தகப்பன் நிர்வஹித்துக் கொண்டிருக்கச் செய்தேயும் ஸகல த்தையும் நிர்வஹிக்கும்படி அபிஷேகஞ் செய்யப்பட்ட புத்திரன் இளவரசன்.

3 (பார்த்து)-மந்தரையின் வாயால் கேட்டுத் தான் பார்த்தாற் போல் எல்லாவற்றையும் அறிந்து.

4 ஸம்பராஸுரவிஜயத்தில் கைகேயி தனக்கு ஸாரத்யஞ் செய்ததற்காகச் சந்தோஷித்து அவளுக்குப் பரிசாக இரண்டு வரங் களைக் கொடுத்தானென்கிற கதையைக் கண்டுகொள்வது.

கனே அவ்வரசனைக் கேட்டுக்கொண்டான். [1]அத்தசரத சக்ரவர்த்தியும் மந்திரிமுதலானவர்களோடு கலந்து ஆலோசித்து ராமனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்ய வேண்டுமென்று நிச்சயித்திருந்தும் கைகேயிக்குத் தான் கொடுத்த வரத்தை நினைத்து ஸத்தியந்தவறுமை யென்னுந் தர்மமாகிற கயிற்றாற்கட்டுண்டு செயலற்றுத் தனக்கு மிகவும் ப்ரியனாகிய ராமனைக் காட்டுக்கனுப்பி னன். ராஜ்யத்தைக் காக்கவல்ல வீரத்தன்மைபொருந் திய ராமனும் பிதாவின் நியமகப்படி தாயாராகிய கைகே யியின் இஷ்டத்தை நிறைவேற்றும்பொருட்டுத் [2]தான் கைகேயிக்குச்செய்த ப்ரதிஜ்ஞையை யநுசரித்துக் காடே

---

1 'ராமோ விதீர்ஹவாங் யர்மஃ' என்று ஸாகூதர் பரம தர்ம மாகச் சொல்லப்பட்ட ராமனை விட்டுப் பின்பு நேரிட்ட ஸ்த்ரீ விஷ யமான கூடத்தர்மத்தை யவலம்பித்தானென்று கருத்து. இதனால் 'ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோஷம் ஹேலநமேவவா! வை குண்ஒநாமகீர்ஹணமஶேஷாவஹாஸகம்' என்றும், 'ஆக்ருஷ்ய புத்ரமவவாங்யஜாமிலோபி நாராயணேதி ம்ரியமாண உபைதி மூக்திம்' என்றும், 'காமாதீ மோப்யோ ஜயாத் கம்ஸஃ' என்றும் இவ் வாறுக எவ்வித்தத்திலாயினும் பகவந்நாமோச்சாரணஞ் செய்தவர்க ளுக்கு மோக்ஷங் கிடைத்ததாகச் சொல்லி யிருக்க, எக்காலத்தி லும் ராமனையே நினைத்துக்கொண்டிருந்த தசரத மன்னவனுக்கு மோக்ஷமில்லையெனக் கூடுமோ' என்கிற சந்தேகந் தீர்க்கப்பட்டது. ஹித்தோபாயமாகிய பகவானை விட்டு ஆபாஸதர்மத்தைப் பற்றின படியால் இவனுக்கு மோக்ஷப்ரஸக்தி யில்லை யென்று கருத்து. ஆக இத்தால் மோக்ஷத்தை விரும்புகிறவன் தசரதனைப் போலிருக்க வொண்ணுதென்று சொல்லப்பட்டது.

2 தான் கைகேயிக்குச் செய்த ப்ரதிஜ்ஞையாவது—ராமன் கைகேயியின் கிருகத்திற்குச்சென்று அங்குச்சோகித்துமோஹித்துக் கிடக்கும் தசரதசக்ரவர்த்தியைப் பார்த்துக் கைகேயியை நோக்கி 'தத்விரூஹி வசநம் தேவி ராஜ்ஞோ யந்மநோகதம்! கரிஷ்யே ப்ரதிஜாநே ராமோ த்விர்நாபிபாஷதே' என்று, 'தாயே! ஐயர் இவ்வனந்த கிடப்பதற்குக் காரணமென்? அவர் மனத்தில் விரும்பி யிருப்பதியாது? அதைச் சொல்வாயாக. அதை யப்படியே செய்கி

றச்சென்றான். இப்படி ராமன்காடேறச்செல்ல, லக்ஷ்மண னும் அவனைப்பின்சென்றான். [1]லக்ஷ்மணன் மகதராஜன் புத்திரியாகிய ஸுமித்ராதேவிக்கு மஹாகந்தத்தைக்கொ டுக்கும் பிள்ளை; ராமனுக்குப்பின் பிறந்தவன்; அவனுக்கு மிகவும் ப்ரியமானவன். அவன் ராமனுடைய குணங் களிலீடுபட்டு அவனுக்கு வணக்கத்துடன் ஸகலவித மான பணிவிடைகளுஞ் செய்யுந் தன்மையன். [2]அவனைப் பிரிந்து அரைக்ஷணமும் தரிக்கமாட்டாத நேசமுடைய வன். ராமனுக்கு ஸீதையென்பவள் மிகவும் ப்ரியமான பாரியை. அவள் ஜநகமகாராஜனது வம்சத்திற்பிறந்த வள். ராமனுக்கு எப்பொழுதும் ப்ராணன்போன்றவள். அவனுக்கு நன்மையையே செய்யுந் தன்மையள். அமிர் தங்கடைந்தபோது அஸுரர்களை மோஹிப்பிக்கும்பொ ருட்டு விஷ்ணு தான் ஸ்த்ரீவேஷங்கொண்ட மோஹினி போலவும் ஓர்வடிவுகொண்ட விஷ்ணுவின் ஆச்சரிய சக் திபோல்வும் விளங்கி நிற்பவள். ஸாமுத்திரிகத்திற் சொ ன்ன சுபலக்ஷணங்களெல்லாமமைந்தவள். ராமன்தான் புருஷோத்தமனு யிருப்பதுபோல இவளும் பெண்பாலா

றேன். இங்ஙனம் ப்ரதிஜ்ஞை செய்கிறேன். ராமன் மறுத்துச் சொல்லுகிறவனல்லன்' என்றிவ்வாறு செய்த ப்ரதிஜ்ஞை.

1 காடேறப் போகுந்தருணத்தில் ஸுமித்திரைக்கு ஆநந்தத் தை விளைவிப்பவனென்று சொல்லுவானென்? இப்பொழுது அவ ன் துயரத்தை யன்றே விளக்க வேண்டும்? என்னில்—அதில்லை; இப்பொழுதுதான் அவன் அவளுக்கு மஹாநந்தத்தைக் கொடுப்ப வன். 'ஸுஷ்டஸ்த்வம் வநவாஸாய' என்றும், 'ராமம் தஶரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம். அயோத்யாமடவீம் வித்தி மத்ஸ்நேஹாத! யதாஸுகம்' என்றும் அவதாரத்தின் கருத்தறிந்த ஸுமித் ராதேவியின் சொற் கண்டார்ல் இது வெளியாகும்.

2 இக்குணம் 'நச வீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ! முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்ருதௌ' என்று மேலிற் சொல்லப்பட்டது.

ரனைவரிலுந் தலைவியா யிருப்பாள். அவளும் [1]ரோஹிணி சந்திரனைப் பின்செல்வதுபோல் ராமனைப் பின்சென்றாள். [2]அந்நகரத்தில் வஸிக்கும் ஜநங்கள் யாவரும் ராமகுணங் களுக்குத் தோற்றவர்களாகையால் அவனை விட்டுப் பிரிக் திருக்கப் பொறாமல் வெகுதூரம் பின்சென்றார்கள். தக ப்பனுகிய தசரத சக்ரவர்த்தியும் தனக்கு அன்பனுகிய ராமனை விடமாட்டாமல் கொஞ்சதூரம் பின் றொடர்ந் தான்.

[3]தர்மத்தைச்செய்யும் ஸ்வபாவனுகிய ராமனும் பின் றொடர்ந்த ஜநங்களைத்திருப்பிவிட்டு [4]சிருங்கிபேரமென் னும் பட்டணத்துக் கருகான கங்கையின்கரையில்

---

1 ரோஹிணி யென்பவள் சந்திரனுக்கு அஸாதாரணமான பத்தினி ; அவள் பெண்களனைவரிலும் மேலானவள். அவள் சந்திர னைவிட்டு ஒரு முகூர்த்தகாலமும் பிரிந்திராள். இவ்வர்த்தம்—'வரி ஷ்ட ஸர்வநாரீணாமேஷாச ஹ்ரீ ரோஹிணீ நவிநா சந்த்ரம் முஹூர்த்தமபி ஜீவதே' என்று சொல்லப்பட்டது.

2 இதனுல் நகரத்து ஜநங்களுக்கு ராமனிடத்திலுள்ள பரம பக்தி சொல்லப்பட்டது. பரமபக்தியாவது-தாம் கலந்த விஷயத் தைப் பிரியாதிருக்கப் பொறுமை. 'புநர்விஸ்ரே லேஷஸஹிஷ்ணுத்வம் பராம ஹ்க்திருச்யதே' என்று சொல்லப்பட்டது. இவர்களுக்கு இவ்வளவு மூண்டாகைக்குக் காரணம் அந்தத் தேசத்தில் வஸிக்கையே யன் றி வேறில்லை. இதனுல் பகவத்தேசவாஸத்தின் மஹிமை சொல்லப் பட்டது.

3 இங்கு தர்மமாவது-ஆச்ரிதர்கள் பக்கல் வாத்ஸல்யமும் ஸௌசீல்யமும். வாத்ஸல்யமாவது-வத்ஸத்தின் பக்கல் தேநு விரு க்கு மிருப்பு. வத்ஸம்-கன்று. தேநு-பசு. ஸௌசீல்யமாவது-ஆச்ரித ரோடு புரையறக் கலந்திருக்கை.

4 (சிருங்கிபேர மென்னும் பட்டணத்துக்கு) - (ஶ்ருங்கிணோ மஹாந், தேஷாம் வேராணி கதிர்ம ஸ்ரீராணி யஸ்மிந் தத் ஶ்ருங் கிவேரம்); சிருங்கிகளென்றால் மான்கள். பேரமென்றால் பொய்யுரு வங்கள். மான்களைப் பிடிப்பதற்காக மான்களைப் போலவே தோற் றும்படியாகச் செய்யப்பட்ட பொய்ம்மானுருவங்கள் அங்கிருக்கிற படியால் அந்தப் பட்டணத்துக்குச் சிருங்கிபேரமென்று பேர்.

[1]வேடர்களுக்குத்தலைவனை குஹனென்பவனைக் கண்டு அத்யாதரத்துடன் ப்ரீதிபண்ணி, [2]அவனுடன்கலந்து தன்னுடன் வந்த ஸாரதியான ஸுமந்திரனைப் பட்டணமேறப் போகவிட்டான். அங்கு லக்ஷ்மணனுமும் ஸீதையோடுமொக்க குஹனுடு கலந்திருந்து களித்தனன். [3]பின்பு அம்மூவரும்அந்தக்குஹனுடைய ஸஹாயத்

---

1 வேடர்களாவார், மிருகங்களைக் கொன்று ஜீவிப்பவர். அவர்களில் தலைவனென்று ஜாதியில் இழிவு சொல்லப்பட்டது. குஹனென்று நாமத்தினால், (அதிகதி தோபபதிர்வஞ்சயதி பரஸ்வமிதி அஹ:. இமாபயலக்ஷணா: கா:) என்று வ்யுத்பத்தியைக்கொண்டு பாதர்வ்யத்தை வஞ்சித்துக்கொள்பவன் என்று தொழிலிலும் இழிவு சொல்லப்பட்டது. ஆயினும் தன்னிடத்தில் அநுகூலனாயிருப்பதுபற்றி அவனிடத்தில் அங்ஙனம் ப்ரீதி பண்ணினனென்று கருத்து. இதனால் ஸௌசீல்யஞ் சொல்லப்பட்டது.

2 (அவனுடன் கலந்து தன்னுடன் வந்த ஸாரதியான ஸுமந்திரனைப்போக விட்டான்)-அப்பொழுதின்ற கன்றின் மீதுண்டான ப்ரீதிவிசேஷத்தினால் முன்னாணகன்றைக் கொம்பிற் கொள்ளும் பசுவைப்போற் குஹனுடன் கலந்த ராமன் வம்ஸபரம்பரையாக வெகு காலம் ஸாரதியாகி அநுஸரித்து வந்த ஸுமந்திரனைப் போகவிட்டானென்று கருத்து. இதனால் வாத்ஸல்யந் தோற்றும்.

3 இங்கு

'தேவ்நேநவநம்ஹத்வா நதீஸ்தீர்த்வா வஹாஹிகா:।
சித்ரகூடமநுப்ராப்ய ஹரத்வாஜஸ்ய ஸாஸநாத்।।
ரம்யமாவஸ்யம் கத்வா ரமாநே வநே த்ரய:।
ஏவமந்யர்வ ஸங்காஸாஸ்ததர தேந்யவஸந் ஸுகம்।।

என்று மூலம். இதற்கு தனிச்லோகி—'தே அவநேந வநம் ஹத்வா' என்று பதம். அம்மூவரும் ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொண்டு காட்டுக்குச் சென்று; 'அதிரதோ ஹ்யஹ மஸ்மாபிர்தே வீதா த்வா மநுஹ்யாது। பூஷ்ணோதோ ஹ்யஹம் மமிஷ்யாமி த்வாஹ வீதாஹ பாலயந்।। அந்யோந்யஸ்யேஹ நோ ரக்ஷா கர்தவ்யா புருஷர்ஷபா' என்று இவ்வண்ணம் மேலிற்சொல்லப்பட்டது. அன்றியே அவநேந வநம்ஹத்வா - பித்ருவசநபரிபாலநத்திற்காகக் காட்டுக்குச்

தால் நீர்நிறைந்த கங்கையைத் தாண்டிக் கால்நடையாகவே காடுகாடாய்ச் சென்று அங்குப் பரத்வாஜமஹர்ஷியைக்கண்டு ஸேவித்து அவருடைய நியமநப்படி சித்திர

சென்று. அல்லது-அவநேந-லோகரக்ஷணத்திற்காக. ராவணன் முதலியதுஷ்டர்களைக் கொன்று அல்வழியாலே லோகங்களுக்கு நன்மை செய்யும்பொருட்டன்றே அவர்கள் காட்டுக்குச் சென்றது. அன்றியே 'தேவ்ய ஹேவநே' என்கிற தாதுவின்மேல் தேவநம் என்று ஒரே பதமாயிருக்கிறது. தேவநேந-வீளையாட்டாகவே. ஆயாஸமொன்று மின்றியே யென்றபொருள். அல்லது தேவநம்-வேட்டை. அங்காங்கு வேட்டையாடிக்கொண்டு அதில் மனஞ் செலுத்தி வருத்தமின்றிக் காடுகாடாகத் திரிந்தன ரென்று கருத்து. அல்லது - தேவநம்-பாதஸஞ்சாரம். ஸாதநியை யனுப்பின பின்பு தேரினின்றுமிழிந்து கால்நடையாகவே காடெனைக்குந் திரிந்து. இங்ஙனங் கருதியேமூலத்தில் 'கால்நடையாகவே காடுகாடாய்ச்சென்று' என்று சொல்லப்பட்டது. அல்லது அவநேந ஸஹ வநம் அத்வா-அவநமாவது காடில்லாதபிரதேசம். நடுநடுவே வெறும்புறமானவழியாகச்சென்று காட்டுக்குட்போய் என்று பொருள். அன்றியே—வநேந ஸஹிதம் வநம் அத்வா-ஜலத்தோடுகூடி ஸ்தபிக்கமாகிய காட்டுவழியாகச் சென்று. மருகாந்தாரங்களிற் சென்று வருத்தப்படாமலென்று கருத்து. வநம்-ஜலம்; 'படஃ கிலாலமபஜ்ஜலம் ஜீவநம் ஹ்யவநம் வநம்' என்று ஜலத்தின் பேர்களில் வநஶப்தம் படிக்கப்பட்டது. (வஹ்நிஹகாஃ) பரம்பினஜலத்தையுடைய. அல்லது - ஆழ்ந்த ஜலத்தையுடைய. ஓடங்கொண்டு தாண்டத்தக்கவை யென்று கருத்து. (நதீஃ) கங்கையமுநை மந்தாகிநீ ஆகிய நதிகளை. மந்தாகிநியாவது-சித்ரகூடத்தினருகிற் பெருகுகிற ஓர்நதி. (ஸௌகர்யத்துக்காக ஒரேதடவையிற் சொன்னது. (ஹரீவாஜஸ்ய ஶாஸநாத் சித்ரகூடம்நுப்ராப்ய) ப்ரஜைகளைப் பரிக்ருஹ தன்மையலுயிருப்பதுபற்றி .இம்முநிக்குப் ப்ரத்வாஜ னென்று பேர். இங்ஙனம் ருக்வேதத்தில் ஆணத்தில்- 'ஏஷ வை விஶ்ரஹ்வாஜஃ ப்ரஜாஸ்வ வாஜஸ் தா ஏஷ விஹர்தி, யஶ்விஹர்தி தஸ்மாத்ஶ ஹரீவாஜ இத்யாசக்ஷதே' என்று சொல்லப்பட்டது. அன்றியே வாஜம் என்றால் ரேதஸ்ஸு; அதை விடாமல் தரித்திருப்பவ ரதைகயால் பரத்வாஜன். 'ஹரீவாஜோ ஹ தீர்கஜீராயுர்ஜீர

கூட பர்வதத்தைச் சேர்ந்து அங்கு அழகான ஓர் பர்ணசாலையைக் கட்டிக்கொண்டு தேவகந்தர்வர்கள் போல மநோஹரமான அம்மலைச்சாரல்களில் லீலாரஸ மநுபவித்து ஸுகமாக வஸித்திருந்தார்கள்.

வீரஹ்மசர்யமுவாஸ' என்று வெகுகாலம் ப்ரஹ்மசர்யத்தி லிருந்தா னென்று ஸ்ருதியிற் சொல்லப்பட்டது. (ஹரதீ வாஜஸ்ய ஸாஸஹத்) 'சித்திரகூடத்தில் நீங்களிருக்கவேண்டும்; 'அதற்கு இது வழி' என்று இவ்விதமான நியமநத்திலுல். (அது) ராஜகுமார்களாகிய தமக்குத் தகுந்திருக்கிற. (சித்ரகூடம் ப்ராப்ய) சித்திரகூடத்திற் சென்று. அல்லது (சித்ரகூடமநுப்ராப்ய) சித்திரகூடத்தின் பின் பாகத்திற்சென்று. அற்புதமான சிகரங்களே யுடையதாகையால் இப்பர்வதத்திற்குச் சித்திரகூடமென்று பேர். (ரமமாணஃ) வீதைக் கும் ராமனுக்கும் பூப்பறிப்பது ஜலக்ரீடை செய்வது முதலியவற்ரு லுண்டாயிற்று ஸந்தோஷம்.; லக்ஷ்மணனுக்கு அவ்விருவருடையவும் சேர்த்தியிற் செய்யும் பணிவிடையாலுண்டாயிற்று ஸந்தோஷமென் க. (த்ரயோ ர்மமாணஃ) என்பதனுல் மூவர்க்கும் ஸந்தோஷத்தை வி ளைவிக்குங்காரணம் பேதித்திருப்பினும் ஸந்தோஷத்தில் பேதமில்லை யன்று தோற்றுகின்றது.(ரமமாணஃ)என்று நிகழ்காலத்தினுல் இடை விடாத ஆநந்தமென்று தோற்றும். (தேவகந்யர்வஸங்காஸாஃ) தேவ கந்தர்வர்கள் மநுஷ்யகந்தர்வர்களைக் காட்டிலும் அதிகமான ஆநந் தத்தை யுடையவர். அல்லது (தேவீச தேவஸ்ரீச தேவௌள லக்ஷ்மீ நாராயணௌ) தேவியென்று ஸ்ரீமஹாலக்ஷ்மி. தேவன் ஸ்ரீமந்நா ராயணன். இவ்விருவரையும் தேவர்களென்கிறது. (மாநுஷாராய தீநி மந்யர்வஃ) 'ஏதத்ஸாம காயந்நாஸ்தே' என்றுசொல்லப்பட்ட ஸாமகாநஞ் செய்து கொண்டிருக்கிற முக்தனைக் கந்தர்வனென்கி றது. (தேவௌள மந்யர்வஸ்ரீச தேவகந்யர்வாஃ) ஆக இம்மூவரும் தேவகந்தர்வர்கள். அவர்களைப்போல என்று பொருள். பரமபதத் தில் ஸ்ரீமந்நாராயணனும் அவனுடைய மஹிஷியான பெரியபிராட் டியாரும் அவ்விருவருடைய சேர்த்தியை யநுபவிக்கிற முக்தனும் ஆகிய அம்மூவரும், ஆநந்தித்திருப்பதுபோல இம்மூவரும் ஆநந்தித் திருந்தார்களென்று கருத்து. 'தேஸுவம் ந்யவஸந்' அவர்களா கவே ஸுகமாக வஸித்திருந்தனர். அதாவது அயோத்திமாநகரில்

இப்படி ராமன் சித்திரகூடத்தேறப் போகையில் தசரதசக்ரவர்த்தி புத்திரசோகத்தால் வருத்தமுற்று 'ராம ராம' என்று அலறிக்கொண்டே ஸ்வர்க்கமடைந் தான். இவ்வாறு தசரதசக்ரவர்த்தி காலஞ்சென்றபின்பு வஸிஷ்டன் முதலிய அந்தணர்கள் பரதனை ராஜ்யா பிஷேகஞ் செய்துகொள்ளும்படி நியமிக்க, அவன்தான் ஸஹாயமின்றித் தனியாகவே ராஜ்யஞ்செய்யவல்லவனாயி ருந்தும் அதை அங்கீகரிக்கவில்லை. ஆனல் கையில்வந்த ராஜ்யத்திலும் கண்வைக்காதபடி ஐம்புலன்களென்னும் சத்துருக்களைவென்ற அப்பரதன் ஸ்ரீராமனுடைய திருவ டிகளைப் பணிந்து அவனது அனுக்ரஹம் பெறவேண்டு

வஹிப்பதுபோலவே இக்காணகத்திலும் ஸுகமாகவஹித்திருந்தனர். அல்லது-(தே) எப்பொழுதும் வநத்தில் வஹிப்பவர்களாகவே. அதா வது-ஸுகத்திற் பிறந்து வளர்ந்தவர்களாயினும் காட்டிலேயே வெகு காலம் வஹித்துப் பழக்கப்பட்டவர்கள்போல வஹித்திருந்தனர். வந வாஸத்திற் சிறிதாயினும் முகத்தில் வாட்டம் முதலியவை உண்டா இலன்றே இவர்கள் பாதேஸிகளென்றும் வநவாஸத்திற் பழக்கமற்ற வர்களென்றுந் தோற்றுவது. அவர்களுக்கு அது சிறிதுமுண்டாக வில்லையென்று கருத்து. இங்கு (தேவகந்தர்வர்கள் போல) என்னும் உவமையினல் யாவனொருவன் தன்ஸ்வரூபத்தை யுள்ளபடி யறிந்து பகவானிடத்தில மிகுந்த ப்ரீதியுடனிருக்கிறனோ, அவனைப் பகவான் ப்ரீதியுடன் வந்து திவ்யவிமாநத்தில் ஏறவைத்துக்கொண்டு ஆதி வாஹிகர்களைக் கொண்டு ஸத்காரஞ்செய்வித்து விரஜையைத் தாண்டி திவ்யகாந்தாரங்கடந்து அமாநவனிடம் அழைதி கொடுப் பித்து திவ்யலோகஞ்சென்று அங்கு மாமணிமண்டபத்தில் திவ்யவிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருந்து ப்ரீதியுடன் அமந்தா நந்தம் பெற்று அவனுல் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளி லும் ஸகலவித கைங்கர்யங்களுஞ் செய்யப்பெற்று அவனுக்குத் தன்னைடொக்க ஆநந்தத்தையுங் கொடுத்து அவனுடன் காலதத்துவ முள்ளதனையும் கலந்திருக்குமென்னு மிவ்வர்த்தந் தோற்றுகிறது.

மென்று காடேறச்சென்றான். அங்கு சித்திரகூடத்தைச் சேர்ந்து தனது சன்மையைக் கண்டு யாவருங் கொண்டாடும்படி யிருக்கிற பரதன், இயற்கையாகவே தெளிந்த மனமுடையவனும் ஸத்தியத்தில்நிலைநிற்பவனும் தமையனுமாகிய ராமனைக் கண்டு தண்டனிட்டு 'ஸ்வாமீ! தேவரீர் மூத்தகுமாரராகையால் ராஜ்யாபிஷேகஞ்செய்துமுடிசூடி ராஜாவாகவேண்டுவது நியாயம்; தமையனிருக்கத் தம்பி ராஜ்யத்துக்கு யோக்கியனல்ல னென்னுந் தர்ம மறியீரோ; ஆகையால், என்னுடைய விண்ணப்பத்தைத் தலைக்கட்டவேணும்' என்று வணக்கத்துடன் பிரார்த்தித்தான். இதைக்கேட்ட ராமனும் தனது குணங்களால் யாவரையுங் களிக்கச்செய்பவனுகியுந் தன்னைப்பற்றினர் கருத்தையெல்லாம் நிறைவேற்றுந் தன்மையனுகியுந் தன்னைக்கிட்டி ஒருவனென்று கேட்கப்பெறில் முகமலர்ந்தி யடைபவனுகியும் இத்தகைய செயலால் பெருங்கீர்த்தி பெற்றவனுகியும் இவையெல்லாஞ்செய்ய வல்லானுகியிருந்தும், தகப்பனுஜ்ஞைக்குட்பட்டுத் தான் ராஜ்யத்தை அங்கீகரிக்கவில்லை. இப்படி ராமன் பரதனுக்குத் தமையனுகி அவனிஷ்டத்தைச்செய்யவேண்டியிருந்தும் அதுசெய்யாமல் தனக்குப்பிரதியாக ராஜ்யபரிபாலனஞ்செய்யத் தன்பாதுகைகளைக் கொடுத்துத் தன்னைப் பிரியமாட்டாமல் மறுக்குமவனை அடிக்கடி தொடர்ந்து பட்டணத்துக்குப் போகத் திருப்பி யனுப்பினான். இப்படி அந்தப்பரதன் தன்னுடைய மநோரதம் நிறைவேறப்பெறுமல் ஸ்ரீராமனது பாதுகைகளை ஸேவித்துக்கொண்டும் ராமன் திரும்பிவருவதை யெதிர்பார்த்துக்கொண்டும் ராமனில்லாமல் அயோத்தியில் வஸிப்பது ஸஹிக்க முடியாததா யிருக்கையாலே அதற்கு ஸமீபமான நந்திக்கிராமத்தில் ராஜ்யஞ்செய்துகொண்டிருந்தான்.

[1]ராமனும் பரதன் போனபின்பு தகப்பனுகிய சக்ரவர்த்தியின் வாக்கியத்தை நிறைவேற்றுவதால் மிகவுமொளீபெற்றுப் [2]பிரதிஜ்ஞைதவறுமல் ஜம்புலன்களையும் வென்று விளங்கினன். பின்பு ராமன் 'நாம் இங்கிருந்தோமானல் நகரத்திலுள்ள ஜநங்கள் அடிக்கடி வரக்கூடும்' என்று ஆலோசித்தும் தண்டகாரணியத்திலுள்ள முனிவர்கள் அபிப்பிராயத்தை அநுஸரித்தும் சித்திரகூடத்தை விட்டு, [3]மிக்க ஊக்கத்துடன் தண்டகாரணியத்திற் பிரவேசித்து அதின் காட்சியாற் கண்மலரப் பெற்றவனுகித் தனக்கு விரோதஞ் செய்துகொண்டு வந்த விராதனென்னும் ராக்ஷஸனைக்கொன்று அதையேஉபஹாரமாகக்கொண்டு சரபங்கமஹர்ஷியைக்கண்டு தண்டனிட்டு அவனிடம்அநுமதி பெற்று, ஸுதீக்ஷ்ணனையும் அகஸ்தியனையும் அவன் தம்பியாகிய ஸுதர்சநமுனிவனையும்சென்று பணிந்தான். அவ்வளவில் அகஸ்தியனுந் தனக்கு இந்திரன் கொடுத்த வில்லையுங் கத்தியையும் அழிவில்லாதபாணங்களுடைய அம்பறாத்தூணிகளையும் வாங்கிக்கொள்ள வேணுமென்று

---

1 இங்ஙனம் அயோத்யாகாண்டத்திற் பிரதாநமான 'பித்ருவசநபரிபாலநம் செய்தான்' என்கிற அர்த்தத்தைச் சொல்லி, மேல் ஆரணியகாண்டத்தின்கதை சுருக்கமாகச் சொல்லப்படுகிறது—(ராமனும்) என்று தொடங்கி.

2 பரதன் வந்து, விடேனென்று நிர்ப்பந்தித்தபோதிலும் நெறிதப்பாமலிருந்ததைப் பற்றி (பிரதிஜ்ஞைதவறுமல்) என்கிறது. தாயுந் தம்பியும் நாட்டாருடன் கூட்டங்கூடிவந்து வேண்டிக்கொண்டபொழுதிலும் ராஜ்யத்தில் ஆசையின்றி யிருந்தமை பற்றி (ஜம்புலன்களையும் வென்று) என்கிறது.

3 (மிக்கஊக்கத்துடன்)-பிதாவின் வசநத்தைப் பரிபாலநஞ்செய்வதில் மிக்கஊக்கங்கொண்டு. அல்லது விரோதிகள் நிறைந்திருக்குந் தேசமாகையால் இங்ஙனஞ்சொல்லுகிறது. (தண்டகாரணியம்) தண்டகனென்னும் அரசனது தேசமாகிய தண்டகம் சுக்ர சாபத்தினல் காடாய்விட்டதுபற்றித் தண்டகாரணியமென்று பேர்பெற்றது.

ராமனுக்குச் சொல்ல, அவனுந் தன்வீரியத்துக்குத் தகுந்தஆயுதங்களைப்பட்டனவென்று ஸந்தோஷித்துஅவைகளைக் கைக்கொண்டான். பின்பு ராமன் சரபங்காச்ரமத்தில் வாஸஞ்செய்துகொண்டிருக்க, நானூபக்கத்திலுள்ள ரிஷிகளனைவரும் தமக்கு விரோதிகளான அஸுரர்களையும் ராக்ஷஸர்களையும் அழிக்கவேணுமென்று நினைத்தவர்களாகி ராமனைச் சென்று கிட்டினர். ராமனும் ராக்ஷஸர் குடிபுகுந்திருக்கும் அத்தண்டகாரணியத்தில் அம்மஹர்ஷிகள் கேட்டுக்கொண்டபடி செய்வதாக அங்கீகரித்தான். அக்நிபோல் விளங்கி நிற்குந் தண்டகாவநவாஸிகளான அம்முனிவர்களின்முன்பு ராக்ஷஸர்களைக்கொல்லுவதாகப் பிரதிஜ்ஞையுஞ்செய்தான். இப்படி பிரதிஜ்ஞை செய்து ராமன் தண்டகாவநத்தில் வஸித்திருக்கையில், நினைத்தபடி வடிவங்கொள்ள வல்லவளும் ஜநஸ்தாநத்தில் நித்யவாஸஞ்செய்பவளுமாகிய சூர்ப்பணகை யென்னும் ராக்ஷஸி வந்து விரோதஞ் செய்ய அவளைக்காதையும் மூக்கையு மறுத்து விரூபையாகும்படி செய்தான். பின்பு சூர்ப்பணகையின்சொற்கேட்டுப் பொருவதாகவந்த ராக்ஷஸர்களனைவரையும் அவர்களில்தலைவரானகரன்திரிசிரஸ்ஸு தூஷணன் என்னுமிவர்களையும் அவரைப்பின்தொடர்ந்தவர்களையும் மிச்சமில்லாதபடி யுத்தஞ் செய்துகொன்றுவிட்டான். ராமன் இவ்வாறுஅவ்வநத்தில்வஸித்துக்கொண்டிருக்கையில் ஜநஸ்தாநத்தில் வஸிக்கும் பதிஞ்ஞாயிரம் ராக்ஷஸர்களையும் மிச்சமின்றி மாளப்படை பொருதான். பின்பு ராவணன் தன்னுடைய பந்துக்களாகிய கரன் தூஷணன் முதலான ராக்ஷஸர்கள் மாண்டுபோனதைக் கேட்டு மிக்ககோபாவேசங்கொண்டு ஸீதையை அபஹரிப்பதற்கு மாரீசனென்னும்ராக்ஷஸனை ஸஹாயமாக வேண்டினன். அம்மாரீசனும் ''ராவணா!

ராமன் அளவற்ற பலமுடையவன் ; அவனோடு விரோதித்துக் கொள்வது உனக்கு நன்மையன்று' என்றுஅவனை வெகுதூரம் மறுத்தான். ராவணன் ம்ருத்யுவாலேவப்பட்டு, அவ்வார்த்தையை ஆதரிக்காமல் அம்மாரீசனுடன் கூடவே அக்காலம் கரதூஷணர்களை வென்று விளங்கிநின்ற ஸ்ரீராமனுடைய ஆச்ரமத்துக்குச் சென்றான். சென்று, நாகரவர்ணமாகிக் கண்டபோதே ஆசைப்படத்தக்க ஓர்மான் வடிவங்கொண்ட மாயாவியாகிய மாரீசனைக்கொண்டு ராஜபுத்ரர்களான ராமலக்ஷ்மணர்களிருவரையும் வெகு தூரம் போகச்செய்து இடையில் தடுப்பதாக வந்த ஜடாயு வென்னுங் கழுகைக் குற்றுயிராகக் கொன்று ராமனோடு இணைபிரியாதிருக்கும் ஸீதையை அபஹரித்துக்கொண்டு சென்றான். ராமனும் மாரீசனைக் கொன்று ஆச்ரமத்துக்கு வந்து அங்கு ஸீதையைக்காணமல் தேடிக்கொண்டு போகையில் ராவணனலடியுண்டு குற்றுயிராயிருக்கும் ஜடாயுவைக்கண்டு ஸீதையை ராவணன் அபஹரித்ததாகச் சொல்லக்கேட்டு,[1] இவ்விரண்டுவ

---

1 இரண்டுவருத்தங்களாவன—ஸீதையைக் காணுமையும், ஜடாயுவைக் குற்றுயிராகக் காண்கையும். ஆயினும் கம்பீரஸ்வபாவமுடைய இம்மஹாபுருஷனுக்கு ஓர் பெண்பிள்ளையைக் காணுமையால் இங்ஙனம் வருந்துவது கூடுமோ? என்னில்-கூடும். லோகோத்தரகுணம் பொருந்திய வஸ்துவைப் பிரிந்தும் ஒருவன் வருந்தாதிருப்பானுயின், அவன் எப்படி புருஷர்களிற் சிறந்தவனுவான்? அவ்வஸ்துவும் எப்படி அழகியதாகும். அவ்விரண்டுக்கும் ஸமஸ்காரஞ் செய்து விடவேண்டுமேயன்றி வேறில்லை. மேலும் மஹாபுருஷ குணங்களைச் சொல்லுமிடத்தில் 'வ்யஸநேஷ்வ மதுஷ்யாணும் ஹ்ருஷ் ஹவதி ஹ்ருஷிதஃ' என்று சொல்லிற்று. ஒரு பெண்பிள்ளைக்காக ஒருவன் இங்ஙனம் வருந்துவதுமுண்டோஎன்று நினைத்திருந்தஹநுமானும், ஸீதையைக்கண்டபின் 'ஹ்ருஷ்காங் க்ருதவாந் ராமோ ஹீநோ யஹ்நயா ப்ரஹ்ருஃ। யாரயத்யாத்மநோஹ்ஹம் நஹ்ருஃ வேராவஷீஹ்தி' என்று ராமன் ஸீதையை விட்டுப்பிரிந்தும் பிழைத்திருப்பது மிக அரிதென்று வியப்புற்றான். ஆகையால் இது கூடும்.

ருத்தங்களால்மிகவும் பரிதபித்து இந்திரியங்களெல்லாங் கலங்கும்படி யழுதான். பின்பு அவ்வருத்தத்துடனே ஜடாயுவுக்கு ப்ரஹ்மமேதஸம்ஸ்காரஞ்செய்து அவ்வநத்தில் ஸீதையைத்தேடிக்கொண்டுபோகையில் விகாரமான ரூபங்கொண்டு பார்க்கப்பயங்கரனாயிருக்கிறகபந்தனென்னும்ராக்ஷஸனைக் கண்டான். புஜபலம்பொருந்தியராமன் அந்தக் கபந்தனைக்கொன்று அவன் வேண்டிக்கொண்டபடி அக்நி ஸம்ஸ்காரஞ் செய்ய அவனும் ஸ்வர்க்கத்துக்குச் சென்றான். அவன் போகும்பொழுது ராமனைப்பார்த்து [1]குருசுச்ரூஷைமுதலிய தர்மங்களைச்செய்யுந்தன்மைபொருந்தி அதிதிபூஜை முதலியவற்றில் மிகவுந் தேர்ச்சியடைந்து [2]துறவறத்திலிருக்கும் வேடஜாதியிற்பிறந்த ஓர் பெண்பிள்ளையி ஞ்சரமத்துக்குச் செல்வாய்'என்றான். ராமனும் இவ்வாறு கபந்தனை வருத்தின சாபத்தைப் போக்கி ஸ்வர்க்கமேறச்செய்து அவன் சொன்னசொற்கேட்டு மிகவுங் களிப்புற்று மிக்கவிளக்கமும் பெற்றுச் சபரியினிடஞ் சென்றான். அச்சபரியும் தசரதசக்ரவர்த்திகுமாரனாகிய ராமனை மிகவும் ஆதரத்துடன் நன்றாகப் பூஜித்தாள்.

---

1 (குருசுச்ரூஷை முதலிய தர்மங்களைச்செய்யுந் தன்மை பொருந்தி)-ஆசார்யாபிமாநமாகிற சரமபர்வ நிஷ்டையி லூக்கமுற்றவளாயென்று கருத்து. (அதிதிபூஜைமுதலியவற்றில் மிகவுந் தேர்ச்சியடைந்து) தேர்ச்சியடைகையாவது—தர்மஸூக்ஷ்மங்களையறிந்திருக்கை. இவள் ராமன் வரப்போகிறானென்று தெரிந்து அவனுக்காக நல்ல பழங்களைத் தான் புசித்துப் பரீக்ஷித்துப் பார்த்து வைத்திருந்தாளென்று ப்ரஸித்தம்.

2 துறவறம்—ஸந்யாஸாச்ரமம்.

[1]பின்பு ராமன் தாமரை முதலியவைகளால் நிறைந்து அழகான பம்பையென்னுந் தாமரையோடையின் கரையிற்சென்று ஸீதாதேவியை நினைத்துத் துயரத்தினால் மிகப்பரிதபித்திருக்கையில் ஹநுமானென்னும் வாநரன் அவ்விடம் வந்து ஸந்திக்க அவனுடன் கலந்து, நேசித்து அவனது சொற்படி ஸுக்ரீவனைக்கிட்டினான். ராமன் ஸஹாய மின்றித் தனியே யெல்லாஞ் செய்ய வல்லவனிருந்தும் லோகரீதியை யநுஸரித்து ஸஹாயத்தை விரும்பி ஸுக்ரீவனுக்கு முதலேபிடித்து கடந்தவைகளையெல்லாவற்றையும் அவற்றில் விசேஷமாக ஸீதையின் விருத்தாந்தத்தையும் உண்மையாகத்தெரியச்சொன்னான். வாநரனாகிய ஸுக்ரீவனும் ராமனுடைய விருத்தாந்தங்களையெல்லாங்கேட்டித் தன்னுடொத்த துயரமுள்ளவனாகிப் பலசாலியாயிருப்பவனொருவன் தனக்கு ஸஹாயமாக நேரிட்டதைப்பற்றி மிகவுமாநந்தித்து அக்நிசாட்சிகமாக அவனை கேசஞ்செய்துகொண்டான். பின்பு வாநரர்க்கராசனாகிய ஸுக்ரீவன் தனது துயரங்களைநினைத்துக் கண்ணுங்கண்ணீருமாகித்துக்கித்ததுகண்டு ராமன் விஷ்ணு, வாலிக்குந்தனக்கும் நடந்த விரோதத்தைச் சொன்னான். ராமனும் அது கேட்டவுடன் வாலியைக் கொல்லுவதாகப் பிரதிஜ்ஞை செய்தான். அவ்வாநர மஹாராஜனும் வாலிக்குள்ள பலத்தை ராமனுக்குச் சொன்னான். பின்னும்அவன் ராமனைக்கண்டது முதல்

---

1 இங்ஙனம் பிரதிஜ்ஞை தவறுமலிருப்பவனென்னு மர்த்தத்தைப் பிரதாநமாகக்கொண்ட ஆரண்யகாண்டத்தின் கதையைச் சுருக்கமாகச்சொல்லி முடித்து, நண்பர்காரியத்தை நிறைவேற்றுந் தன்மையைத் தெரிவிக்கிற கிஷ்கிந்தாகாண்டத்தின் கதை சுருக்கமாகச் சொல்லப்படுகிறது—(பின்பு ராமன் தாமரை) என்று தொடங்கி.

'இவன் வீரத்தன்மையில் வாலியோடொத்திருப்பனோ?' என்று அடிக்கடி சந்தேகித்திருந்தான். இன்னும் வாலி பலத்தை ராமனுக்கு நன்முகத் தெரியச் செய்யும்பொருட்டும் ராமனது பலத்தைத் தானறியும்பொருட்டும் பெரிய மலைபோலுயர்ந்து கட்டித்தளராமல் சரீராகாரமாய்க் கிடக்கிற துந்துபியென்னும் ஓர் அஸுரனுடைய எலும்புக்குவியலை 'இது வாலி காலால் தள்ளப்பட்டது' என்று காட்டினான். நீண்ட புஜங்களையுடையவனும் மிக்க பலசாலியுமாகிய ராமன் இதெவ்வளவென்று சிறிது சிரித்துத் தன் காற்கட்டைவிரலாற் பத்துயோஜனதூரத்திற்குக்குறைவில்லாமற் போம்படி உயரத்தூக்கியெறிந்தான். அதனாலும் ஸுக்ரீவனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லையென்றறிந்து, பின்னும் அவனுக்கு விச்வாஸத்தைவிளைவிக்கும்பொருட்டு ஓரம்பைத்தொடுத்து இணைந்து ஓங்கிப்பெருத்து வலிவுபெற்றிருக்கும் மராமரங்களேழையும் அருகிலிருந்த மலையின் தாழ்வரையையும் பாதாளலோகத்தையும் பிளந்தான். ஸுக்ரீவனும் மானிடரால் செய்யக்கூடாத ராமனுடைய அச்செயல்களைக்கண்டு இவன் வாலியை வெல்லவல்லனென்று நம்பிக்கை யடைந்து கூடிய சிக்கிரத்தில் ராஜ்யத்தைப்பெறலாமென்று நிச்சயித்துக் களிப்புற்று ராமனுடன்கூடப்புறப்பட்டுப்பர்வதங்களின் மத்தியத்தில் குகைபோலிருக்குங் கிஷ்கிந்தாபட்டணஞ் சென்றான். பின்பு ஸந்தோஷத்தினால் பொன்னிறம் பெற்றுவிளங்கிய வடிவங்கொண்டுவானரர்களிற்றலைவனாகிய ஸுக்ரீவன்வெகு உத்ஸாஹத்துடன் ஸிம்ஹம்போல்கர்ஜித்தான். வானரர்க்கரசனாகிய வாலியும் முன்போலன்றி மிகவுங் கம்பீரமான அப்பெருங்கர்ஜனையைக் கேட்டு அவனுடன் போர்செய்வதாகப் புறப்பட்டு, வேண்டா

மென்று மறுக்குந் தாரைக்குத் தக்க மறுமொழி சொல்லி விடுவித்துக்கொண்டு ஸுக்ரீவனோடு கலந்து போர் புரிந்தான். அப்பொழுது ரகுகுலத்திற் பிறந்து தர்மஸூக்ஷுமங்களை யறிந்த ராமனும் ஸுக்ரீவனோடு சண்டை செய்து கொண்டிருந்த வாலியைத் தான் ஒருபாணத்தையெய்து முடித்துவிட்டான். இப்படி ஸுக்ரீவன்வேண்டிக் கொண்டபடி யுத்தத்தில் வாலியை முடித்து கிஷ்கிந்தா ராஜ்யத்தில் அவனை அபிஷேகஞ் செய்வித்தான். இவ்வாறு வாநரராஜ்யம்பெற்ற ஸுக்ரீவனும் ஜநகராஜன் பெண்பிள்ளையாகிய ஸீதையைத் தேடும்பொருட்டு ஆங்காங்குள்ள வாநரர்களனைவரையும் வரவழைத்து ஸீதையைக்கண்டு வாருங்களென்று கட்டளையிட்டு நான்கு திசைகளிலு மனுப்பினன்.

[1]பின்பு ஸீதையைத்தேடப்போனவர்களில் பலசாலியாகிய ஹநுமான் ஸம்பாதியென்னுங் கழுகின்மொழியால் ஸீதை லங்கையிலிருப்பதாகக்கேட்டு நூறுயோஜனை விஸ்தீர்ணமுள்ள லவணஸமுத்திரத்தைத் தாண்டி, ராவணனால் ஆளப்பட்ட லங்கையிற் சென்று அங்கு அசோகவநத்திலே ராமனை இடைவிடாமல் நெஞ்சிற் கொண்டிருக்கும் ஸீதாதேவியைக்கண்டு ராமன் அடையாளமாகக் கொடுத்த கணையாழியைக்கொடுத்து ராமன் ஸுக்ரீவனோடு கலந்து நேசித்தது முதலாக வாநரர்கள் தேடப்போன தீரு க வுள்ள விருத்தாந்தங்களையெல்லாந் தெரியச்சொல்லி, நாயகனுகிய ராமன் சீக்கிரத்திலிங்கு வரப்போகிறு னென்று ஸமாதானமுஞ் சொல்லிவிட்டு, அவ்வுத்யாநத்தின் வெளிப்புறத்து வாசற்படியின்

---

[1] இனி ஸுந்தரகாண்டத்தின் கதை சுருக்கமாகச் சொல்லப்படுகிறது—(பின்பு ஸீதையைத் தேடப் போனவர்களில்) என்று தொடங்கி.

கோபுரத்தை யிடித்தான். அதையறிந்து ராவணனு லேவுண்ட ஸேநாதிபதிகளேவரையும் மந்திரி குமாரர்க ளெழுவரையும் முடித்து, ராவணனது புதல்வனும் மஹா வீரனுமாகிய அக்ஷனென்பவனைச் சூர்ணஞ்செய்து, பின்பு இந்திரஜித்தினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தினாற் கட் டுண்டான். ஆயினும் ப்ரஹ்மாஸ்திரத்தினாற் சிறிதுபொ ழுது கட்டுண்டிருந்து உடனே விடுபடும்படி ப்ரஹ்மாவி னிடம் வரம்பெற்றவனுகையால் தான் அஸ்த்ரத்தினி ன்று விடுபட்டதறிந்தும் தன்னைக்கயிற்றாற் கட்டிக்கொ ண்டு போகும் ராக்ஷஸர்களைச் சிதறும்படி செய்யவல்ல மஹாவீரனுயிருந்தும்அதையெல்லாம் பொறுத்துக்கொ ண்டு ஸீதையிருக்குமிடந்தவிர லங்கை முழுமையும் தீமூ ட்டிவிட்டு, ராமனுக்குச் சீதையைக்கண்டது முதலாகிய ப்ரியமான சங்கதிகளைச் சொல்லும்பொருட்டுத் திரும் பினன். அளவற்ற புத்தி பலமுடைய ஹநுமானும், ஸீதையைப்பிரிந்தும் மனந்தளராத ராமனைக்கிட்டி வல ஞ்செய்து தண்டனிட்டு 'கண்டேன் ஸீதையை' யென்று உள்ளபடி விண்ணப்பஞ்செய்தான்.

[1]இப்படி ஹநுமானுடைய சொற்கேட்ட பின்பு ரா மன், ஸுக்ரீவன் முதலான வாகரப்படையுடன் மிகவும் அகன்று ஆழ்ந்த ஸமுத்திரத்தின் கரையிற் சென்று, அது வழிவிடாமையாலே சூரியன்போன்ற பாணங்க ளால் அத்தச்சமுத்திரத்தை யடிகாணக் கலக்கினன். பின்பு நதிகளுக்கு வல்லபனுகிய ஸமுத்திராஜனும் தன்வடிவங்கொண்டு வந்து தன்மேல் ஸேதுவைக்கட்டி அவ்வழியாகப் போகலாமென்ன, அவ்வார்த்தையைக்

1 இனிமேல் யுத்தகாண்டத்தின் கதை சுருக்கமாகச் சொல்ல ப்படுகிறது—(இப்படி ஹநுமானுடைய சொற்கேட்டபின்பு) என்று தொடங்கி.

கேட்டு ராமனும் களைக்கொண்டு ஸமுத்திரத்தில் அணைகட்டி அவ்வழியாக லங்காபட்டணத்தைச் சேர்ந்து யுத்தத்தில்ராவணனைக்கொன்று ஸீதாதேவியை யடைந்தான். பின்பு ராமன் 'நம்மீரத்தன்மையைக்கர்ப்பாற்றுவதற்காகச்சத்துருவை வென்றுமன்றிப் பிறர்வீட்டிலிருந்தவளை நாம்ஏற்படிஅங்கீகரிப்பது' என்று மிகவும் வெட்கித்தேவதைகளும்வாநரர்களும்நிறைந்தஸபையில்ஸீதையைப்பார்த்துக்கடோரமாகச்சொல்ல, பதிவிரதையாகியஸீதாதேவியும் அவ்வார்த்தையைப் பொறுமல் அக்நியிற் பிரவேசித்தாள். உடனே அக்நியும் அவளைக் கையிலேந்திக்கொண்டு ராமனைப்பார்த்து 'இவள் மாசற்றவள்; இவளை அங்கீகரிக்கவேணும்' என்ன, அவ்வாக்கியத்தினால் ஸீதையைத் தோஷமற்றவளென்றறிந்து அவளையங்கீகரித்து மிகவுங் களிப்புற்று விளங்கினன். அதுகண்டு தேவதைகள் அனைவரும் ராமனைப் பூஜித்தார்கள்.

கம்பீரஸ்வபர்வத்தையுடைய ராமன் செய்த ராவணவதமாகிறபெருஞ்செயலைக்கண்டு தேவர்களும் ரிஷிகளும் மற்றுமுள்ள [1]ஜங்கமஸ்தாவரங்களும் நிறைந்த மூவுலங்களும் மிகக்களித்தன. அப்பொழுது ராமன் விபீஷணனை லங்கையில் ராக்ஷஸர்களுக்கு அரசனாக அபிஷேகஞ் செய்வித்துத் தான் நினைத்த காரியம் நிறைவேறினது

---

1. ஜங்கமங்களாகிய மனிதர் பசுபக்ஷிமுதலானவைகளின் களிப்பு தெரியக்கூடும். ஸ்தாவரங்களாகிய மரம் முதலியவைகளின்களிப்பு எதைப்படியென்னில்—அந்த க்ஷணத்தில் காரணமின்றித் தளிர்விடுவது புஷ்பிப்பது முதலியவைகளால் தோற்றக்கூடும். ஸ்தாவரங்களுக்கு ஞானமில்லாமையால் அவைகளுக்கு ஸந்தோஷமில்லையென்று சொல்லவமையாது. 'அசேதனஸ்வஜ்ஞோ ஹவந்த்யேதே' என்று அவைகளுக்கும் ஞானமுண்டென்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற் சொல்லப்பட்டது.

பற்றி மனக்கவலை தீர்ந்து, ஆநந்த மடைந்தான். பின்பு தேவர்கள்வரங்கொடுக்கப்பெற்று மரணமடைந்த வாநரர்களை யெழுப்பிக்கொண்டி அன்பர்களால் சூழப்பட்டுப் புஷ்பகவிமாந மேறி அயோத்யைக்குப் புறப்பட்டுப் போயினன். இவ்வாறு ஸத்யத்தை நிறைவேற்றுவதில் மனவுறுதியுடைய ராமன்போகும்போது பரத்வாஜாச்ரமத்தைநச்சென்று, தான்வருவதைப்பரதனிடஞ் சொல்ல ஹநுமானை யனுப்பினன். அப்பொழுது ராமன் ஸுக்ரீவன் முதலானவர்களோடு மீளவும் புஷ்பகவிமாநமேறி முன்னடந்த கதைகளைச்சொல்லிக்கொண்டு நந்திக்ராமத்தையடைந்தான். இப்படி தகப்பனருடைய வாக்யத்தை அவ்வாறே நிறைவேற்றிப் பரதனுடைய இஷ்டத்தை வித்ததனல்வந்த வியஸனமும் தீர்ந்து நந்திக்ராமத்தினின்று அயோத்யைக்கு வந்து தம்பிகளுடன் சேர்ந்து ஜடையைவிடித்து நன்றாக அலங்கரித்து திவ்ய ஸிம்ஹாஸநத்திற் சிதையோடு பட்டாபிஷேகங்கண்டருளி மீளவும் ராஜ்யத்தையடைந்து பரிபாலித்து வந்தான்.

இப்படி ராமன் ராஜ்யபரிபாலஞ்செய்யும்போழுது ஸகல ஜநங்களும் அவரவர்க ளிஷ்டங்களையெல்லாம் பெற்று மயிர்க்கூச்செறியச் சந்தோஷமடைந்தனர். ப்ரஜைகள் அனைவரும் மூன் ராமனைப் பிரிந்திளைத்திருந்தமை தீர்ந்து அவனுடைய ஸேவையைப்பெற்றுக் களிப்புற்று தேகம்பெருத்து விளங்கினர். பின்னும் உலகத்திலுள்ள ஜநங்கள்யாவரும் தாஞ்செய்யுஞ் செயல்களையெல்லாம் ராமபக்திமுன்னிட்டுச்செய்துகொண்டி ராமனுடையகன்மைக்காகத் தேவதாநமஸ்காரம்முதலியவைகளைக் குறைவற நடத்திவந்தனர். மனவருத்தம் யாதுமின்றிச்சரீரத்திலும்வியாதியென்பதையறியாமல் க்ஷாமம்முதலிய பயமும் நீங்கப்பெற்று வாழ்ந்தனர். மனிதர்கள் அனைவ

ரும் எங்கும் பிள்ளையைச் சாகக்கொடுப்பது [1]காணும். [2]பெண்களும் விதவைகளாகாமற் கணவனைப் பின்சென்றிருப்பார். [3]தெருப்பிணியுண்டாகும் பயமேது முண்டாகாது. பிராணிகள் ஜலத்தில்வீழ்ந்துமுழ்கிச்சாவதும் கேரிடாது. காற்று ஜ்வரம் பரி திருடர் முதலியவைகளாலுண்டாகும் பயஞ் சிறிது மிராது. நகரங்களும் காடுகளுக்

1. 'காணும்' என்று எதிர்காலமாய்ச் சொல்லுவானென்னென்னில் 'ப்ராப்தராஜ்யஸ்ய ராமஸ்ய வால்மீகிர்ஹஸ்தாதபஸி: சகாரசரிதங்கர்த்ஸ்நம் விசித்ரபதமாத்மவாந்' என்று ராவணனைக் கொன்று ராமன் ராஜ்யமாளுங்காலத்திலேயே வால்மீகி ராமாயணத்தைச் செய்ததாகத் தெரிகிறது. ஆகையால் அவன் ராமாயணஞ் செய்யும் போது ராமராஜ்யாரம்பமாகையால் அவனுடைய ராஜ்யத்திலிருக்கும் ப்ரஜைகளின் க்ஷேமங்களே யெதிர்காலவினையிற் சொல்லுகிறது.

2. 'பெண்களும் விதவைகளாகாமல்' என்னில் புருஷர்களுக்கு மரணமே யில்லையென்னும் அஸங்கதி வரும். ஆகையால் அதற்குக் கருத்திங்ஙன் கொள்ளவேணும். அதாவது ஸ்த்ரீகள் கணவலெடு ஸஹமரணஞ் செய்வார்களென்றும், அப்படி செய்யாமல் பிழைத்திருந்தாலும் பர்த்தாவின் அம்சமாகிய பிள்ளையுண்டாயிருப்பதால் விதவைகளன்றென்றும்; இத்தால் கௌஸல்யை முதலானவர்கள் ராமன் முதலான பிள்ளைகளிருப்பதனாலும் மிகவும் வயஸ்ஸுசென்றவர்களாகையாலும் விதவைகளன்றென்று கருத்து. இவ்வர்த்தம் 'கௌஸல்யாஉயஸ்து புத்ரவத்தயா வ்ருத்தயாவா ந விதவா இதி ஹாவ:' என்று கோவிந்தராஜீயவியாக்யானத்திற் சொல்லப்பட்டது. அன்றியே (விதியா யவா யாஸாம் தா: விதவா: வ்யஜிசாரிண்ய:) என்கிற வ்யுத்பத்தியைக்கொண்டு விதவைகளென்றுல் வியபிசாரமுடையவர்கள். அப்படியாகாமலிருப்பார்களென்று பொருள். வியபிசாரமில்லாவிடினும் கணவனிடத்திற் பிரீதியில்லாமலிருப்பதுண்டு; அதுவும் இராதென்கிறது - 'கணவனைப் பின்சென்றிருப்பார்' என்று.

3. அக்நி ஜலம் காற்று இவைகளாலுண்டாகும் பயம் ஆதிதைவிகம்; அதாவது தைவத்தால் வருமது. ஜ்வரம் முதலியவைகளால் வரும் பயம் ஆத்யாத்மிகம்; அதாவது சரீரத்தால் வருமது. திருடர் முதலானவைகளால் வரும் பயம் ஆதிபௌதிகம். அதாவது ஜந்துக்களால் வருமது. இதைத் தாபத்ரயமென்பர்கள். அதில்லையென்று ரூத்து.

தங தாந்யங்கள் நிறைந்திருக்கும். ஜநங்கள் அனைவருங் கிருதயுகத்திற்போல எப்பொழுதும் மிகக்களித்திருப்பர். இவ்வாறு பெருங்கீர்த்திபெற்ற ராமன் அநேக அச்வமேதயாகங்கள்செய்து அப்படியே கணக்கில்லாத ஸுவர்ணகமென்னும் யாகங்களையுஞ் செய்து அந்தணர்களுக்குக் கோடிகோடியாகக் கோதாநங்கள் செய்து தநங்களையும் அளவில்லாமற் கொடுத்து வைகுந்தமேறப்போகிறான். ராமன் இவ்வுலகத்தில் ராஜவம்சங்களை நூறுபங்கதிகமாக நிலைநிறுத்தப்போகிறான். இப்படி உலகத்தில் தர்மஸம்ஸ்தாபநம் பண்ணிப் பதினாயிரம் வருஷம் ப்ரஜைகளின் மனங் கோணுமல் ராஜ்ய பரிபாலநஞ் செய்து ப்ரஹ்மலோகத்தேறப்போகிறான். ஸ்ரீராமனுடைய இச்சரிதமானது வேதங்த ளோடொத்துத் தன்னை ஆதரிப்பவர்களைப் பாவநமாகச் செய்து அவர்களது பாவங்களைப்போக்கி மேன்மேலும் நன்மைவிளையச்செய்யவற்றாயிருக்கும். இச்சரித்திரத்தை யாவனொருவன் படிக்கிறான், அவன் எவ்வித பாபத்தினின்றும் விடுபடுவான். வாழ்நாளை வளரச்செய்யும் பாலராமாயணமென்கிற இவ்விதிஹாஸத்தைப் படிப்பவன் எவனுயிருந்தாலும் பிள்ளைபேறுகளோடும் மற்றுமுள்ள தன்னைச் சேர்ந்தவர்களோடுங் கூடியிருந்து, சரீரம் விட்டபின்பு ஸ்வர்க்கமேறச் சென்று, அங்கு மிகவும் பூஜைபெற்று விளங்கி நிற்பான். இதைப் படிப்பவன் ப்ராஹ்மணனுகில் வேதம் வேதாங்கமுதலிய கல்விகளிற் சிறந்திருப்பான். க்ஷத்திரியனுயிருக்கில் சக்ரவர்த்தியாவான். வைச்யனுகில் வியாபாரம் மிகுந்து லாபம் பெறுவான். சூத்திரனுகில் இக்கதையைச் சொல்லக்கேட்டுத் தன்னினத்தில் மேன்மை பெற்றிருப்பான்.

முதல் ஸர்க்கம் முற்றிற்று.

இரண்டாவது ஸர்க்கம்.

பிரமன் பிரத்தியக்ஷமாகி வால்மீகியை யனுக்கிரகித்தது.

[1]தர்மத்தில் மனஞ்சென்ற வால்மீகிமாமுனிவன் நார தனுடைய அம்மொழியைக்கேட்டு வாக்கியங்களின் உட் கருத்தறியவல்லவனுகையால் சிஷ்யர்களுடன்கூடி அந்நா ரதனைப்புகழ்ந்தனன். அப்பொழுது தேவரிஷியாகிய அந் நாரதனும் வால்மீகிமாமுனிவனால் தக்கபடி பூஜிக்கப் பட்டுப் போய்வருகிறேனென்று விடை பெற்றுக்கொ ண்டு ஆகாயத்தை நோக்கிச் சென்றனன். அந்நாரதன் கொடிபொழுதில் தேவலோகமேறச்செல்ல, அப்பொ ழுது வால்மீகிமுனிவனும் மத்யான்னத்திற் செய்யவேண் டிய ஸ்நாநத்திற்காகக் கங்கைக்கருகான தமஸாநதியின் தீரைக்குச் சென்றனன். அம்மாமுனிவன் தமஸாநதியின் கரைக்குப்போய், சேறில்லாமல் தெளிந்திருக்கும் துறை யைக்கண்டு பக்கத்தில் நிற்கும் பரத்வாஜனென்னும் சிஷ் யனைப் பார்த்து 'ஓ பரத்வாஜனே! ஸத்துக்களின் மனம் போல் தெளிந்தஜலம் நிறைந்து சேறில்லாமல் அழகா

1. தயாநிதியாகிய வால்மீகி 'இஷ்டம்ஹி விஷயம் லோகே ஸமாஸவ்யாஸயோரணம்' என்று ஒரு விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லுவதும், பின்பு அதைப் பரக்கச் சொல்லுவதும் கற்றவர்களுக்கு விருப்பமாயிருக்குமென்கையாலே கீழ்ச் சுருக்கமாகச்சொன்ன ராம சரித்திரத்தைப் பரக்கச் சொல்லவேண்டுமென்று கருதி அதில் பார்க்கிறவர்களுக்குப் புத்தி செல்லும்பொருட்டு வக்தாவின் வைலக்ஷண்யத்தையும் அதிற் சொல்லப்படும் விஷயத்தின் வைலக்ஷண்யத் தையும் காட்ட உத்தேசித்து முதலில் இந்த ஸர்க்கத்தாலே வக்தா வின் வைலக்ஷண்யத்தைக் காட்டுகிறான். வக்தாவுக்கு வைலக்ஷண்யமா வது - மிகவும் ஆப்தனாயிருக்கை. ஆப்தியாவது - பொருள்களை யுள்ள படி யறிந்து அறிந்தபடியே சொல்லுகை. அதில் மிகுதியாவது-ப்ரஹ் மாவின் வரப்பிரஸாதத்தால் வந்தமேன்மை. இதைக்காட்டத் தொ டங்குகிறான் (நாரதனுடைய) என்றிதுமுதலாக.

யிருக்கும் இத்துறையைப் பார்த்தாயா. அப்பா! கமண்டலுவைக் கீழே வைத்து மரவுரியைக்கொடு. கங்கைக்கு மேலான இத்தமஸாநதியின். துறையிலே யிழிந்து ஸ்நானஞ் செய்யப் போகிறேன்' என்று இவ்வாறு மொழிந்தனன். ஆழ்ந்தமனமுடையவால்மீகிமாமுனிவன் இங்ஙனம் சொல்லப் பரத்வாஜனும் குருவின் மொழிதவறாதிருப்பவனுகையால் அப்படியே வால்மீகியினது மரவுரியைக்கொடுத்தனன். அவ்வால்மீகியும் சிஷ்யனுகிய பரத்வாஜனது கையிலிருந்து மரவுரியை வாங்கிக்கொண்டு, தான் ஐம்புலன்களையும்வென்றவனுயிருந்தும்பரந்திருக்கிற அந்நதியின்கரையி லுள்ள கானகத்தை நாலு பக்கத்திலும் †விதிவசத்தினுல் பார்த்துக்கொண்டு உலாவினன். சரபங்கொடுக்கவும் அனுக்கிரகஞ் செய்யவு முரிய மகிமை பொருந்திய அவ்வால்மீகி மாமுனிவன் அவ்வநத்தில் அந்தத் துறையினருகில் ஆணும் பெண்ணுமாகி இரண்டு க்ரௌஞ்சப் பறவைகள் ஒன்றோடொன்று பிரியாமல் ஓரபாயமுமின்றியே லயித்துக் கலகலவென்று அழகாக ஒலித்துக்கொண்டிருக்கக் கண்டான். இப்படியிருக்கையில் அங்கே ஒரு வேடன் வந்தான். அவன் மிருகங்களை

---

† (விதிவசத்தினுல்) ஐம்புலன்களையும் வென்றவனுகையால் இவன் அவ்வநத்தினழகைப் பார்க்கப்போனுன் என்பது சோராது. ஆகிலும் தைவத்தாலேவுண்டு சென்றனென்கிறது. இங்கு ஸ்நானஞ் செய்யத்தக்க துறையைத் தேடும்பொருட்டுத் திரிந்தானென்று சிலர் சொல்லுகிறார்கள். அதுவும் (சேறில்லாமல் அழகாயிருக்குமித்துறையிலேயே யிழிந்து ஸ்நானஞ் செய்யப்போகிறேன்) என்று 'அகர்தமமிதம் தீர்த்தம் ஹ்ரஸ்வாஜ நிமாமய। ரமணீயம் ப்ரஸந்நாம்வ-ஸந்மந-ஷ்யமதோ யயா' என்றும் 'இதமேவாவகாஹிஷ்யே தமஸாதீர்த முத்தமம்' என்றுஞ் சொல்லுகையால் தேடவேண்டுகை தோற்றுமையாலே சோராது. (தீர்த்தம்) என்று அந்நதீஜலஸமுதாயத்தைச் சொல்லுவோமென்னில் 'அகர்தமமிதம்தீர்த்தம்' என்றவிடம் போரவுமையாது.

யும் பக்ஷிகளையுங் கொன்று பிழைக்குந் தன்மையனுகை யால் அவைகளில் இயற்கையாகவே வைரங்கொண்ட வன். ஆகையால் அவன் அந்தப்பக்ஷிகளிரண்டும் சுகித் துக்கொண்டிருக்கக்கண்டும் மன இரக்கமின்றி அவை களைக் கொல்லவேண்டுமெனக் கடோரமாக நிச்சயங் கொண்டு அம்மாமுனிவன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அவ்விரண்டிலொன்றுகிய ஆண்பக்ஷியையடி த்தான். அடியுண்ட ஆண்பக்ஷி பூமியில் விழுந்து உடம் பெல்லாம் உதிரம் பொழியப் புரண்டு நோவு படுவதைக் கண்டு பேடையானது சிவந்த சிகைபோடும் உயர்ந்த இற கோடுங்கூடி அழகாய் என்றும் பிரியாது மதித்துத் தன் னைப் புணரவந்த தன் சேவலோடு தனக்கு நேரிட்ட பிரி வை ஆற்ற மாட்டாமல் கேட்டவர் மனம் கரையும்படி கரு ணமாகக் கூவியழுதது. இவ்வாறு வேடனுலடியுண்ட அப் பறவையைப் பார்த்துத் தர்மசிந்தையுள்ள அவ்வால்மீகி மாமுனிவனுக்கு மன இரக்கமுண்டாயிற்று. பின்பு அந் தணனுகையால் இயற்கையாகவே காருண்யமுள்ள அவ் வால்மீகியானவன் சேவலின் பிரிவால் மனவருத்தங்கொ ண்டு கூக்குரலிடும் பேடையைக்கண்டு மிகவும் மனமிரங்கி யிருந்தமைபற்றி ஒன்றோடொன்று புணருந்தருணத்தில் அடிப்பது தர்மமன்றென்று சிந்தித்து—

1 'மாநிஷாத³ ப்ரதிஷ்ட²ாம் த்வமக³மஶ்²ஶாஶ்²வதீஸ்ஸமாஃ।
யத்க்ரௌஞ்சமிது²ன³ாத³ேகமவதீ⁴: காமமோஹிதம்'

என்று மொழிந்தனன்.

---

1 இதற்கு—'அட பாக்கியமற்ற வேடனே! காமவேட்கைகொ ண்டு மெய்ம்மறந்திருந்த க்ரௌஞ்சப் பறவைகளிரண்டி லொன்று கிய சேவலைக் கொன்றதினுல் அநேகமாண்டுகள் நீ வாழ்வற்றிருப் பாயாக' என்று வேடனைச் சபித்ததாகப் பொருள்கூறுவர். நான் முகனருளால் வால்மீகியின் முகத்தில் முதலிலுண்டான இந்த ச்லோகம் வேடனைச் சபித்ததுமாத்திரத்திலே முடியத் தக்கதல்ல; இத்தால் ஸ்ரீராமாவதாரஞ்செய்த பகவானுக்குப் பல்லாண்டு பாடுகி றனென்று முன்புள்ளார் கூறுவர். அதெங்ஙனே யென்னில்— (நிஷீத³தி அஸ்மிந்நிதி நிஷாத³:) என்று நிஷாதசப்தம் இருப்பிட

40 வால்மீகி க்ரௌஞ்சப் பறவையை அடித்த வேடனைச் சபித்தல்.

த்தையும், மாஸப்தம் லக்ஷ்மியையும் சொல்லுமாகையால் (மாயாஃ நிஷாஉ மாநிஷாஉ) என்கிற வித்தால் ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமானவனே யென்கிறது. (யத்) எதனால் (க்ரௌஞ்சமிது-நாத்) ராக்ஷஸஜாதியான ராவணன் மண்டோதரி பென்னுமிவ்விரட்டையிலிருந்து, (காமமோஹிதம்) காமவிகாரங்கொண்ட (ஏகம்) ஒன்றாகிய ராவணனை, (அவயீஃ) கொன்றாய்; (அதனால்) (த்வம்) நீ, (ஸாஸ்வதீஃ ஸமாஃ) பல்லாண்டுகள்,(ப்ரதிஷ்டாமமமஃ) நிலைபெற்றிருப்பாயாக—என்று. இப்படி இந்த ஸ்லோகத்தால் இஷ்டதேவதையை நினைக்கையாகிற மங்களஞ் செய்யப்பட்டது. மேலும் இதில் ராமாயணத்தின் கதை பெல்லாந் தோன்றும். எங்ஙனே யென்னில்—(மாநிஷாஉ) என்று லக்ஷ்மிக்கிருப்பிடமானவனே யென்கையால் ராமன் ஸீதையை மணம்புரிந்த பாலகாண்டத்தின் கதையும், (த்வம் ப்ரதிஷ்டாமமமஃ) என்று நீ நிலைபெற்றிருப்பாயாக வென்கையால் ராமன் பிதாவின் வாக்யத்தைப் பரிபாலித்து நிலைபெற்றமையைச் சொல்லுகிற அயோத்யாகாண்டத்தின் கதையும், (க்ரௌஞ்சமிது-நாஜேகம் காம மோஹிதம் அவயீஃ) என்று 'க்ருஞ்ச பதிகளடில்யால் பீஹாவ யோஃ' என்கிற பாதுவிலே புண்டான க்ரௌஞ்ச ஸப்தம் கோணாய் நடக்கும் குரங்குகளைச் சொல்லுமாகையால் தாரை வாலியென்கிற விரட்டையிலொன்றாகி ஸுக்ரீவபத்நியின்மீது காமமோஹங் கொண்ட வாலியைக் கொன்றாய் என்று கிஷ்கிந்தாகாண்டத்தின் கதையும், (க்ரௌஞ்சமிது-நா ஜேகவயீஃ காமமோஹிதம்) என்று க்ரௌஞ்ச ஸப்தம் அல்பீபாவத்தையும் சொல்லுமாகையால் ஒருவருக் கொருவர் பிரிந்திருப்பதனால் மிகவுமிளைத்து உருமாய்ந்திருக்கிற ஸீதை ராமனென்கிற இரட்டையிலொன்றாகி ராமனிடத்தில் மனஞ் சென்று மெய்ம்மறந்திருக்கும் ஸீதையை வதத்துக் கொப்பான ஹிம்ஸை செய்தாயென்று ஸீதையின் துக்கத்தைச் சொல்லுகிற ஸுந்தரகாண்டத்தின் கதையும் சொல்லப்பட்டது. இங்ஙனம்சிலர் கூறுவர்—(நிதராஃ ஸாஉயதி பீலயதீதி நிஷாஉஃ) நிஷாத ஸப்தம் மூன்றுலோகங்களையும் மிதமின்றி நடுங்கச்செய்யும் ராவணனைச் சொல்லுகிறது. ஓ ராவணனே! (க்ரௌஞ்சமிது-நாத்) ராஜ்யத்தை விட்டு வநவாஸஞ் செய்வதால் மிகவுமிளைத்து அல்பமென்னும்படியான ஸீதை ராமனென்கிற இரட்டையிலிருந்து, (காம மோஹிதம் ஏகம்) ராமனிடத்தில் மனஞ் சென்று மெய்ம்மறந்திரு

ந்த ஒன்றாகிய வீணையை, (யத்அவயீ:தத்) கொன்றுயென்னும்படி அநேகவிதமான பீடைகளைச் செய்தாயாதலால், (த்வம் ஸாஸ்வதீ: ஸமா: ப்ரதிஷ்ட²ாம் மாக³ம:) நீ லங்கையிற் பிள்ளையும் பேரனுமாகக் களித்து வாழும்படி நான்முகக்கடவுள் அளித்த நிலையை இனியடையமாட்டாய்- என்று. மற்றுஞ் சிலர் இங்ஙனம் சொல்லுகின்றனர்—ராவணனை மூன்னிலையாக்கிச் சொல்லுவது சேராது; ராவணனைக் கொன்று ராமன் அயோத்திக்குச் சென்று ராஜ்யஞ் செய்யுங் காலத்தில் நாரதனைக் கேட்டதாகத் தானே வால்மீகி சொல்லுகிறபடியால் அதற்குப்பின் பிறந்த இந்த ச்லோகத்துக்கு ராவணனை மூன்னிலையாக்கி எதிர்காலமாகச் சொல்லுகிற இப்பொருள் எங்ஙனே சேரும்? எப்படிதான் எல்லாமறிந்த ஸரஸ்வதி நடந்த சங்கதியை நடக்கவேணுமென்று வேண்டத்தகும்? இதில் வால்மீகிக்கு இவ்வாறு கருத்திருக்குமாயின் 'நானிப் பறவையைப் பார்த்துச் சோகித்துச் சொன்னவிது என்னுய் விழுந்தது' என்று தன்னில்தான் சிந்திப்பது சேராது. ஆனால் இது வாக்யமோ விருத்தமோ வென்றி சிந்தித்தானென்னில் குற்றமில்லையே யென்று சொல்ல வமையாது. ஏனெனில் 'தத்பஷ்யேத் ஸ்ரீலோகோ ஹி மீத:—மருத: பரிவேஷ்டாரோ மருத்தஸ்யாஹவந்ஸ்ருஹே' என்று இவ்விதமாக வேதங்களிற் பலவு மூண்டாகையாலே இங்ஙனம் சந்தேகிப்பது ரிஷிக்குச் சேராது. இவன் ச்லோகத்தையே யறியாளுயின், நாரதன் மொழிந்த ச்லோகங்களைக் கேட்டபோது சந்தேகமுண்டாயிருக்க வேணும். ஆனால் நாரதன் சொன்னது வாக்யமே யொழிய ஸ்லோகமன்றென்னில—இது ஊஹமே யொழிய இதில் தக்க ப்ரமாணங் காணேம். மேலும் ப்ரஹ்மா வந்து உபதேசித்தபின்பே வால்மீகிக்கு இக்காவ்யஞ் செய்யவேண்டு மென்கிற எண்ணம் பிறந்ததே யொழிய அதற்கு முன்பு கிடையாது. ஆகையால் இதில் இக்காவ்யத்திற் சொல்லப்படும் பொருளெல்லா முரைக்கவேணு மென்பது வேண்டியதில்லை. ஆகையா லிதற்குண்மையான கருத்திதுவே யாகவேணும். என்னவெனில்—வால்மீகி நாரதனிடம் ராமகுணங்களைக் கேட்டபின்பு அக்குணங்களை அவன் பிரபந்தமாகச் செய்ய உத்தேசிக்கப் பகவானை ராமனும் இதறிந்து தனது சரித்தம் கருணாஸமயமாயிருப்பதால் இதை மிகவுங் காருண்யமுள்ள மனமுடையவனே செய்யவேண்டுமென்று பார்த்து வால்மீகிக்கு அத்தன்மை யுண்டோவென்று தெரிவதற்காகவும், தனக்கு முன் பிருகு மஹர்

வியால் வந்த சாபத்தை வால்மீகியால் இரட்டித்துக்கொள்ளவே ணுமென்றும், தானே வேடனாகி வந்து அம்மாமுனிவன் பார்த்துக் கொண்டிருந்தபொழுதிலும் அதை லக்ஷ்யஞ் செய்யாமல் க்ரௌஞ் சப்பறவையின் வடிவங் கொண்ட ராக்ஷஸனே யடித்தான். அப்பொ ழுது வால்மீகி புத்திபூர்வகமாகவும் அந்தர்யாமியான பகவானுடைய ஏவுதலாலும் இவன் மிகவும் அதர்மஞ் செய்தானென்று கோபம் பிறந்து அப்படி சபித்தான். ஆகையால் ஸ்ரீலோகத்தின் பொருள் எப்படியெனில்—ஓ வேடனே! காமவேட்கை கொண்ட க்ரௌஞ்சப் பறவையினிரட்டையிலிருந்து ஒன்றைக் கொன்றுயாகையால் நீ பி ழைத்திருக்கும் நாளில் அநேகமாண்டுகள் மனைவியுடன் சேர்ந்து சுகி த்திருக்குமிருப்பை யடையமாட்டாயாக—என்று ரிஷி சபித்தனன். க்ரௌஞ்சப் பறவை ராக்ஷஸஸ்த்ரீகை யெங்ஙனே யென்னில்—ப்ரம னிடத்தில் ராமவிருத்தாந்தங்களெல்லா மறியும்படி வரம் பெற்ற பின்பு செய்த 'தஸ்மாத்து மி யு—நாஜேகம்' என்கிற ச்லோகத்தில் 'வைதேஹிலயஃ' என்கிற பதத்தால் ராக்ஷஸனென்பது தோற்றும். பக வானுக்கு ராக்ஷஸர்களின் பேரில் விரோதமென்பது உலகிலெங்கும் விளங்கிய விஷயமே. ஸாதாரணமான வேடனுக்கு ஜந்துக்களின் மீது வைரங்கிடையாது. ஆஸல் ஆகாரத்தின் பொருட்டுப் பக்ஷிகளை யும் மிருகங்களையும் கொல்வது இயற்கையென்பது நன்றாக வெளிவ ந்திருக்கும். ஆகையால் கேவலம் க்ரௌஞ்சத்தின்பேரில் கேவலம் வேடனுயிருப்பவனுக்கு 'வைதேஹிலயஃ' என்று சொல்வது ஒவ்வாது. க்ரௌஞ்சப்பறவை ராக்ஷஸஸ்த்ரீகவும் வேடன் ராமஸ்த்ரீகவும் கொள்ளில் போர அமைந்திருக்கும். ஆகையால் க்ரௌஞ்சம் ராக்ஷஸனென்பது தோற்றும். இதுவரையில் சொன்ன விஷயமே பாத்ம புராணத்தில் சிவனுக்கும் பார்வதிக்கு முண்டான ஸம்வாதத்தில் 'ஆஹுமிய லக்ஷ் மணம் ப்ராஹ ராமோராஜீவலோசனஃ। ஸுஜுமே வசனம் —ஹ்யம் வீதாஸம்த்யாகாரணம்। வால்மீகிநாயு ஹ்ரு—ணா ஸப்தேஉ- ஸ்மி ஹில லக்ஷ்மண! தஸ்மாதேநாம் த்யஜாம்யஹ்ரீய ஜநோ வைதாத்ர காரணம்' என்று வீதையை விட்டதற்கு ப்ரிருகுவும் வால்மீகியும் சபித்ததே காரணம், ஜநாபவாதம் காரணமன்றென்று சொல்லப் பட்டது. இப்படியே ஸ்காந்த புராணத்தில் பாதாளகண்டத்தில் 'ஸாபோக்த்யா ஹ்ரு—ஹி ஸந்தப்தம் ப்ராசேதஸமகல்மஷம்। ப்ரோ வாச வசநம் வீரஹ்மா தத்ராகத்ய ஸ—ஸத்க்ரு தஃ। நிஷாதீ ஸ்ஸ வை ராமோ மு—யாஞ் சர்துமாகதஃ। தஸ்ய ஸம்வர்ணநேநைவ

இவ்வாறு அந்தப்பறவையைப் பார்த்துச் சொல்லிய அம்மாமுனிவனுக்கு 'இப்பறவைக்காக வருந்தி யான் சொன்னது என்னுய் முடிந்தது' என்று நெஞ்சில் ஓரெண்ண முண்டாயிற்று. இப்படி எண்ணங் கொண்டிருக்கும் அவ்வால்மீகிமாமுனிவன் மிகுந்த மதி பெற்றவனும் புலவரில் தலைவனுமாதலால் தன் மனத்தில் நிச்சயித்துக்கொண்டு சிஷ்யனுகிய பரத்வா ஜனைப்பார்த்து 'பரத்வாஜனே! நான் பக்ஷியைக் கண்டு சோகித்துச் சொன்னது நாலடியுள்ளதும் ஒவ்வோரடி களுக்கும் எழுத்துகள் சரியாகி, வீணையில் இசையுடன் பாடக்கூடிய [1]ஓர் விருத்தமேயாகவேண்டும்; வேறில்லை' என்று இவ்வண்ணம் மொழிந்தனன். சிஷ்யனுகிய பரத்

ஸ—ஸ்ரீலோகஸ்த்வம் ஹவிஷ்யஸி। இத்யுக்த்வா தம்ஜ-ஹாமாஸ—வீர ஹ்மீலோகம் ஸஹாதஸம்। ததஸ்ஸம்வர்ணயாமாஸ ராவவம் ஶ்ரீரங்ஷ கோடிஷி' என்று வேடனைச் சபித்ததனுல் தபித்துக்கொண்டிருக் கும் வால்மீகிக்கு ப்ரஹ்மா வந்து அவ்வேடன் ராமனே யென்று தெரிவித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையாலிக்கருத்தே சரியானதென்று கண்டுகொள்வது. ப்ரபந்தத்திலுரம்பத்தில் சபித் தானென்பது கூடாதென்று ஹரிதமுனைத்ததாக வேறொருபொருள் கூறுவர். அதாவது—ஓ வேடனே! நீ அநேகமாண்டுகள் நிலைபெற்று கின்றுய்; அதாவது உனக்கு ரொம்பவும் வயதாயிற்று. ஆயிருந்தும் காமமோஹங் கொண்ட க்ரௌஞ்சப் பறவைபினிரட்டையி லொன்றுகிய சேவலை யடித்தா யென்பது யாதொன்றுண்டு, அது இனி மேல் வேண்டாம். இனி யிவ்விதமான வ்யாபாரஞ் செய்யாதிருப் பாயாக—என்று.

1 இங்கு 'ஶ்லோகோ ஹவத—நாந்யா' என்று மூலம். இதில் ஶ்லோகஶப்தம் 'பத்யே யஶஸிச ஶ்லோகஃ' என்கிற நிகண்டுவின் படி கீர்த்தியைச்சொல்லுவதாகக்கொண்டு—சோகித்துச்சபித்தவிது அநுசிதமே யாயினும் எனக்கிது கீர்த்தியை விளைவிப்பதாக வேணு மன்றி வேறுன அகீர்த்தியைத் தருவதாக வேண்டாமென்று பொரு ளென்று சிலர் கருத்து.

வாஜனும் அவ்வால்மீகி இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் 'ஆம், இது சரியே' என்று ஸந்தோஷத்துடன் ராமாயணத்தின் பொருளெல்லாம் நிறைந்த அவ்விருத்தத்தைத் தன்மனத்தில் வாங்கிக்கொண்டனன். அம்மாமுனியும் அதை அவன் மனத்தில் வாங்கிக்கொண்டதுகண்டு களித்தனன். பின்பு அவ்வால்மீகிமுனிவன் அத்தமஸாநதியின்துறையில் மாத்யான்னிகஸ்நாநத்தை முடித்துக்கொண்டு அவ்விருத்தத்தின் பொருளை நினைத்துக்கொண்டே தனது ஆச்ரமம் போகத்திரும்பினன். சாஸ்திரங்களெல்லாங் கேட்டு சிஷ்யனாகிய பரத்வாஜனும் அம்மாமுனிவன் புறப்பட்டவுடனே அவனது ச்லோகத்தை மறவாமல் நெஞ்சிலுணர்ந்துகொண்டே ஜலம் நிறைந்த கலசத்தை யெடுத்துக்கொண்டு வணக்கத்துடன் அவனைப்பின்சென்றனன். தர்மங்களையறிந்த அவ்வால்மீகி மாமுனிவன் சிஷ்யனும் தானுமாக ஆச்ரமமேறச் சென்று தேவபூஜாதிகளை முடித்துக்கொண்டு ஆஸநத்தில் உட்கார்ந்து ச்லோகத்தை நெஞ்சில் நினைத்துக்கொண்டே வேறு புண்யகதைகளையும் பாராயணஞ் செய்தான்.

அப்பொழுது நான்கு வேதங்களையும் ஒரேகாலத்தில் ஓதும்படி நான்கு முகங்களைப் பெற்று உலகங்களையெல்லாம் படைக்கும் பிரபுவாகி மஹிமை பொருந்திய ப்ரஹ்மாவானவன், நாரதன் தன்னிடம் வந்து புகழ்ந்து சொல்லிய அவ்வால்மீகியைப் பார்க்கத் தானே வந்தனன். வால்மீகியும் அவனைப்பார்த்துச் சடக்கென எழுந்திருந்து மிகவும் ஆச்சரியத்துடன் ஒன்றும் பேசாமல் கையைக்கூப்பிக்கொண்டு வணங்கி நின்றனன். பின்பு அந்த ப்ரஹ்மாவை [1]நூலிற் சொன்ன கட்டளைப்படி நமஸ்கரித்துக் கால்களை யலம்பி அர்க்கியங்கொடுத்து

---

1 நமஸ்காரஞ் செய்வதில் நூலிற்சொன்ன கட்டளையாவது 'மநோவாகாயகர்மபிர்யதஹமாநேந ஸஹ ந்யஸ்ய யாதலே। கூர்மவச்ச துரஃ பாஹூஞ் ஶிரஸ்தத்ஸவ பஞ்சமம்। ப்ரஹ்ஷிணஸமேதேந ஹ்யேவஞ்ரூபேண ஸர்வதா। அஷ்டாங்கோந நமஸ்க்ருத்வா ஹ்யுபவிஶ்யாதிதோஷ்டோ' என்று இங்ஙனம் சொல்லப்பட்டது.

ஆஸநத்தில் உட்காரவைத்து, குறைவற க்ஷேமம் விசாரித்துப் பூஜித்தனன். இவ்வாறு பூஜிக்கத்தக்க பெருமைபொருந்திய ப்ரஹ்மாவும் இதுவே தகுந்ததென்று வால்மீகியால் புகழ்ந்து போடப்பட்ட உயர்ந்த ஓராஸநத்தில் உட்கார்ந்து மஹர்ஷியாகிய அவ்வால்மீகியையும் உட்காரும்படி கட்டளையிட்டான். இப்படி ப்ரஹ்மாவினிடம் அநுமதி பெற்ற வால்மீகியும் அருகில் ஓராஸநத்தில் உட்கார்ந்தான். இப்படி உலகங்களுக்கெல்லாம் பிதாமஹனாகிய அந்தப்ரஹ்மாவானவன் எதிரில் உட்கார்ந்திருக்கவும் அப்பொழுது வால்மீகி மாமுனிவன் தமஸா நதியின் கரையில் வேடன் பக்ஷியைக் கொன்ற விருத்தாந்தத்திலே மனஞ் சென்று மிகவுஞ் சிந்தை கூர்ந்து 'பக்ஷிகளின்மீது துண்டான வைரத்தினால் அந்த க்ரௌஞ்சபக்ஷியைப் பிடிக்கக்கருதி பாபத்தில் மனந்துணிந்து அங்ஙனம்பேடையோடி கலந்து அழகாகக்குலாவிக்கொண்டிருக்கும் ஆண் க்ரௌஞ்சப்பறவையைக் காரணமின்றிக் காண்போர்மனங் கதறும்படி அடிக்கவல்ல வேடன் செய்தசெயல் கடோரமானது' என்று துக்கத்தில்மூழ்கி அவ்வழியாலே சேவலிப்பிரிந்த பேடையை நினைத்துச் சோகித்துக்கொண்டே முன் பாடிய ச்லோகத்தினர்த்தத்தின் பெருமையை நினைத்து மீளவும் ப்ரஹ்மாவினருகிற் பாடினன். பின்பு நான்முகக்கடவுளும் வால்மீகியை நோக்கி, நமது ஆணையின்பேரில் தனது நாக்கில் ஸரஸ்வதியிருந்து இவ்வாறு வெளிப்புறப்பட்டமை யறியானிவனென்று சிரித்துக்கொண்டே 'நீ செய்தது ச்லோகமே; இதில் விசாரம் வேண்டாம்; மாமுநியே! இந்தச்லோகரூபமான ஸரஸ்வதி உன்மூலமாக ராமாயணத்தைப் பூலோகத்தில் வெளியிடவேண்டுமென்று நான் ஸங்கல்பித்ததுபற்றியே உன்னிடமிருந்து வெளியாயிற்று. ரிஷி

களில் தலைவனாகிய வால்மீகியே! ஸ்ரீராமனது சரித்திரம் எல்லாவற்றையும் இத்தன்மை பொருந்திய ச்லோகங்களால் நீ ஓர் பிரபந்தமாகச் செய்ய வேண்டும். [1] தர்மத்தில் நிலைநின்று உலகத்தில் ஒப்பில்லாத குணம் நிறைந்து சிறந்தமதியுடையனாகித் தீரத்தன்மை பொருந்திய ஸ்ரீராமனுடைய சரித்திரத்தை நாரதனிடங் கேட்டபடி சுருக்கமாய்ச்சொல். சிறந்தமதிபொருந்திய ராமனுடையவும் லக்ஷ்மணனுடையவும் ராக்ஷஸர்களுடையவும் ஸீதாதேவியுடையவும் பரதன் முதலானுருடையவும் ரஹஸ்யமாகவும் பிரகாசமாகவுமுள்ளவிருத்தாந்தங்களெல்லம் உனக்குத் தெரியவரும். நீ நாரதனிடம் கேட்காமையால் உனக்குத்தெரியாதவை மற்றுந் தெரியப்போகின்றன. நீ செய்யப்போகிற இக்காவ்யத்தில் உன்னுடைய வாக்கு ஒன்

1 இங்குச் சொல்லுகிற குணங்களால் இக்கதாநாயகன் மிகவும் மேன்மைபெற்றவனென்று தோற்றும். நாயகனது குணங்களைப்பற்றி யல்லவோ கதைக்குப் பெருமை. செய்யுள் நடை கம்பராமன்றி யிருப்பினும் குணம்பொருந்திய நாயகனைப்பற்றி யிருக்குமாயின் கற்றவர்களும் செவிகொடுத்து ஆதரித்துக்குமதாயிருக்கும். 'கவேரல்பாபி வாசீவ்ரத்தீர்விஜீவத்கர்ணவத்ஸதி। நாயகோ யதி வர்ணயேத லோகோத்தரமுணோத்தரம்' என்று இவ்வனம் போஜராஜன் புகழ்ந்தனன். நாயகலக்ஷணப்ரபந்தத்தில் முக்யமாகச்சொல்லப்படுமவன். அவனுடைய குணங்களாவன 'மஹாகுலீநதைஜஸ்ஜ்வல்யம் மஹாஹார்யீய முதாரதா। தேஜஸ்விதா விதக்தீயத்வம் யார்மிகத்வாதயோஷபிச' என்றுரைக்கப்பட்டவை. (தர்மத்தில் நிலைநின்று) என்கையால் 'தார்மிகத்வம்' என்கிற குணமும், (சிறந்த மதியுடையனாகி) என்கையால் 'விதக்தீயத்வம்' என்கிற குணமும்,' (தீரத்தன்மை பொருந்திய) என்கையால் உலகங்களெல்லாம் ஆள வல்லனாகையாகிற 'மஹாபாக்யம்' என்கிற குணமும், (ஸ்ரீராமனுடைய) என்கையால் இக்ஷ்வாகுவம்சத்திற்பிறந்தமை தோற்றுகையால் 'மஹாகுலீநதை' என்கிற குணமும் (உலகத்தில் ஒப்பில்லாத குணம் நிறைந்து) என்கையால் மற்றைக் குணங்களும் சொல்லப்பட்டன.

றேனும் பொய்யாகுமாட்டாது. ஓர் பதமாயினுங்கெடாது. ஆகையால் பாபங்களை யெல்லாம் போக்கிப் பாவகமாக்குவதும் கேட்க மிக இனியதுமாகிய ஸ்ரீராம சரித்திரத்தை இவ்வகை ச்லோகங்களடங்கிய ஓர் பிரபந்தமாகச் செய்யவேண்டும். பூமியில் மலைகளும் நதிகளும் எவ்வளவு காலம் நிலையாயிருக்குமோ, அவ்வளவு காலம் ராமாயணக் கதையானது உலகங்களெல்லாம் பரவி நடந்து வரும். நீ செய்த ராமாயணக்கதை எவ்வளவு காலம் உலகங்களில் நடந்து வருமோ, அவ்வளவு காலம் நீ இந்தச்சரீரம் விட்ட பின்பு லோகங்களுக்கெல்லாம் மேலான என்னுடைய லோகத்தில் வந்து வஸிக்கப் போகின்றாய்' என்றிவ்வாறு மொழிந்தனன். இப்படி மொழிந்தபின்பு மகிமைபொருந்திய அந்நான்முகக்கடவுள் மறைய, வால்மீகியும் சிஷ்யர்களுடன் கூடி மிகவும் ஆச்சரியமடைந்தனன்.

பின்பு அவ்வால்மீகியின் சிஷ்யர்கள் அனைவரும் இந்தச்லோகத்தை மீளவும்பாடினர். பின்னும் மிகவும் ஆச்சரியமுற்றுக்களித்து அடிக்கடி இதென்ன அற்புதமென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர். ஒன்றோடொன்று எழுத்துகளொத்த நான்கடிகளுள்ளதாக யாதொரு ச்லோகம் மஹர்ஷியாகிய வால்மீகியால் காகஞ்செய்யப்பட்டது; [1] அந்தச்லோகம் சிஷ்யர்களால் அடிக்கடி புகழப்படுவதுபற்றி ச்லோகமென்றே பேர்பெற்றது. அப்போது அவ்வால்மீகி மாமுனி

---

1 இங்கு 'ஶ்லோகஶ் ஶ்லோகத்வமாபதத்' என்று மூலம். 'ஶ்லோகஶ் ஸ்வாதே' என்கிற தாதுவின்பேரில் (ஶ்லோக்யதே இதி ஶ்லோகஃ) என்று கிடக்கிறது. 'ஶோகஃ ஶ்லோகத்வமாபதத்' என்றும் பாடமுண்டு. முந்தினபாடத்தில் ச்லோகத்தின் லக்ஷணம் அமைந்திருப்பதால் ச்லோகமென்னப்பட்டது. சிஷ்யர்களால் அடிக்கடி கொண்டாடப்பட்டமையால் மீளவும் ச்லோகமென்று பேர்பெற்றது. ஆக ச்லோகசப்தம் பதங்களைச் சேர்த்துச் சொல்லுகையும்

வன் நெஞ்சில் பரமபுருஷனே த்யாகஞ் செய்து இவ்வி தமானச்லோகங்களால் ராமாயணமென்கிற இக்காவ்யம் முழுமையும் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண் டான். பின்பு மிகவுங் கீர்த்திபெற்று ஆழ்ந்தமதியுடைய அந்த வால்மீகிமாமுனிவன் கம்பீரமாகி ரஸம் பொழிகிற விருத்தங்களும்பதங்களும் அமைந்துஅடிகளில் ஒன்றே டொன்று எழுத்துகள் சரியாகிக் கேட்க இனிதான ச்லோகங்கள் நூறுநூறுக அடங்கியதும் அழகான ராம சரித்ரத்தைச் சொல்லுவதும் எங்குங் கீர்த்திபெற்ற ராமனுக்கும் மேன்மேலெனப் பெருங்கீர்த்தியை விளை விப்பதுமாகிய ராமாயணமென்னுங்காவ்யத்தை அப்பொ ழுதே செய்து முடித்தனன். இப்படி ஸமாஸங்களும் ஸந் திகளும் பதங்களும் லக்ஷணங்களுக்கொத்தபடியமைந் ததும் ஏற்றக்குறைவில்லாமல் இனிப்புடன் தெளிவான வாக்யங்கள் நிறைந்ததும் ரகுவம்சத்திற் பிறந்த ஸ்ரீராம னுடைய வ்ருத்தாந்தங்களைத் தெளியவுரைப்பதும் டீத் துத்தலையாகிய ராவணனுடைய வதத்தைச்சொல்லுவ தும் ஸகல ஜநங்களும் ஆதரிக்கத் தக்கதுமாகிய இம்ம ஹாகாவ்யத்தைச் செய்து அம்மாமுனிவன் சீடர்களைக் கேட்பித்தான். இப்படிப்பட்ட இக்காவ்யத்தை யாவருங் கேளுங்கள்.

இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

புகழ்கையுமாகிற இரண்டு பொருளையும் சொல்லும். ஆனால் 'ஸ்ரீலோ கஸ்ய ஸுகாதே' என்று பதங்களைச் சேர்க்கையை மாத்ரம் பொரு ளாகச் சொல்லிற்றேயென்னில் 'யாதூநாமநேகார்யத்வம்' என்று தாதுக்களில் ஒன்றுக்கே அநேகம் பொருள் உண்டென்கிற ந்யாயத் தைக் கொண்டு இங்ஙன் சொல்லவேணும். ஆனதுபற்றியே 'பஹூ யே யஸஷிச ஸ்ரீலோகஃ' என்று அமரஸிம்ஹன் ச்லோகசப்தம் கீர்த் தியையும் சொல்லுமென்று சொன்னன். கீர்த்தியென்பது குண ங்களைப்பற்றி வந்த புகழ். மற்றொரு பாடத்தில் 'ப்ராஹுஸ்ரீச ஸ்லாஸ்விஸ்மிதாஃ' என்று கீழோடே சேர்க்கவேணும். இதற்கு- மஹர் ஷி சோகித்தபின்பு சொன்ன தார்கையால் அந்தச் சோகமுள்ளே யடங்காமல் ச்லோகமாக வெளிவந்ததென்று நாம் நினைக்கிறோமென் று சிஷ்யர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனரென்று பொருள்.

ஸ்ரீராமாயண விஷய ஸங்க்ரஹம்.

[1] தர்மத்தில் மனஞ்சென்ற வால்மீகிமாமுனிவன் தர்மம் நிறைந்த ராமசரித்ரம் முழுமையும் நாரதனிடங் கேட்டு, சிறந்தமதியுடைய அந்தராமனுடைய வ்ருத்தாந்தங்களும் அதுக்கு மேலும் யாதொன்றுண்டு, அதையும் கன்கறியும்பொருட்டு ஆலோசனை செய்தனன். அவ்வால்மீகி மாமுனிவன் தர்மத்தில் மனஞ்சென்றவ ணுகையால் கன்கு ஆசமனஞ் செய்து கிழக்குநுனியாகப் பரப்பின தர்ப்பத்தின்மீது எழுந்தருளியிருந்து தன் குருவாகிய நாரதனுக்கு நமஸ்காரஞ்செய்து நான்முகன் கொடுத்த வரமாகிற தர்மத்தினல் ராமன் முதலானருடைய விருத்தாந்தங்களை யெல்லாம் ஆராய்ந்தனன். லக்ஷ்மணன் ஸீதை தசரத சக்ரவர்த்தி அவனது பத்னிகளாகிய கௌஸல்யை ஸுமித்ரை கைகேயிகள் நாட்டார் முதலானவர்களது வ்ருத்தாந்தங்களை யெல்லாம் உள்ளபடி கன்றாய்க் கண்டறிந்தனன். மேலும் ராகவன் முதலானர் சிரித்ததும் மொழிந்ததும் நடந்ததும் மற்றும் செய்தசெயல்களும் யாவையாவை யுண்டு, அவையெல்லாவற்றையும் நான்முகன் அருளிய வரத்தின் மகிமையால் உள்ளபடி நன்கறிந்தனன். இப்படி ராமன் நகரத்திலிருந்தபோதுள்ள சரித்ரங்களை யறிந்தது மாத்ரமேயன்றி அவன்ஸத்யத்தில் நிலைகின்று தகப்பன் வார்த்தையை நிறைவேற்றும்பொருட்டு ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் காடுகாடாகத் திரிந்தபொழுது நேரிட்டவை யாவையா

---

1 கீழ் ஸர்க்கத்தில் வக்தாவின் வைலக்ஷண்யஞ் சொல்லப்பட்டது. இதில் விஷயத்தின்வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறன். விஷயம் விலக்ஷணமாகையாவது- நல்லறிவுடன் கேட்டு மறவாமல் ஊன்றப்பட்டிருக்கையும் உயர்ந்தகுணமுடைய நாயகனைப் பற்றியிருக்கையும். அதில் முதலிலே நன்றாகக்கேட்டமையும் அதிலூற்றமுஞ் சொல்லப்படுகின்றன.

வையுண்டு, அவற்றையும் அவன் நன்றாய்க் கண்டறிந் தனன். தர்மத்திற் சென்றமனமுடைய அவ்வால்மீகிமாமு னிவன் ப்ரஹ்மாவினிடம் வரம் பெற்று ராமன்முதலானு ருடைய முன்நடந்த வ்ருத்தாந்தங்களையும் மேல்நடக்கப் போகிறவற்றையும் கனவிற்காண்பதுபோலன்றியே கையி லங்கு நெல்லிக்கனிபோல நன்றாய்க்கண்டறிந்தனன். இவ் வாறு ராமனுடைய கல்யாண குணங்களை மனத்திற் கொ ண்டு மகாத்மாவாய் மிகவு மொளிபெற்ற அம்மாமுனிவன் எல்லாவற்றையும் உள்ளபடி கண்டறிந்து உலகங்களை யெல்லாந் தன்னாழகில் துவளும்படி செய்பவல்ல ஸ்ரீராம பிரானுடைய சரித்ரத்தைச் செய்யத் தொடங்கினன். இங்ஙனந் தொடங்கின மகிமை பொருந்திய வால்மீகி மாமுனிவன் காமம் அர்த்தம் என்கிற இவ்விரண்டு புரு ஷார்த்தங்களை அப்ரதானமாகத் தோற்றுவிப்பதும் தர் மம் மோக்ஷம் என்னுமிவ்விரண்டு புருஷார்த்தங்களை ப்ர தானமாக எடுத்துரைப்பதும் ரத்நங்கள் நிறைந்த கடல் போன்றதும் சப்தங்களினாழகால் எல்லோருடைய செ விக்குமினிப்பைக் கொடுப்பதும் பொருளினினிமையால் அனைவருடைய மனத்தையும் கவரவல்லதுமான, ரகுவம் சத்திற் பிறந்த ஸ்ரீராமனுடைய சரித்ரத்தை நாரத மஹர்ஷி தனக்குச் சொன்னபடி முதலிற் சுருக்கமாகச் செய்து முடித்தனன். பின்பு தசரத சக்ரவர்த்தி பதினாயிரமாண்டுகள் பிள்ளைப் பேறில்லாமல் தவஞ் செய்ய, அத்தவத்துக்குப்பலமாக விஷ்ணு தானுய் வந்தவதரித்த ஸ்ரீராமனுடைய அவதாரமும், தாட கைமுதலானவரைக்கொன்ற அவன் வீரத்தன்மையும், அவன் யாவர்க்கும் அநுகூலனுயிருக்கு மிருப்பும், அவன் உலகத்துக்கெல்லாம் ப்ரியனுயிருப்பதும், அவ னுடைய பொறுமையும், அழகும், அவன் ஸத்யந்தவறு

திருப்பதும், ராமனும் லக்ஷ்மணனும் விச்வாமித்ரமா முனியுடன் கலந்துபோகையில் நடந்த அற்புதமான பல விதக்கதைகளும், ஸீதை ஊர்மிளை முதலியவர்களுடைய விவாஹமும், சிவனுடைய வில்லை முறித்ததும், ராம னுக்கும் பரசுராமனுக்கும் நடந்த விவாதமும், ராம னுடைய குணங்களும், அவனுடைய பட்டாபிஷேகத் தொடக்கமும், கைகேயி மனப்பொல்லாங்கும், அத்தால் பட்டாபிஷேகம் தடைபட்டதும், ராமனைக் காட்டுக்குப் போக்கினதும், தசரதசக்ரவர்த்தி சோகித்துப் புலம்பின தும், அவன் பரலோகஞ்சென்றதும், ஜனங்கள் வருந்தி னதும், ராமன் அவர்களை வஞ்சித்துவிட்டுப் போனதும், வேடனுகிய குஹனுடு கலந்து மொழிந்ததும், ஸுமந்த் ரனென்னும் ஸாரதி ராமனிடமிருந்து திரும்பிவந்ததும், கங்கையைத் தாண்டினதும், பரத்வாஜமஹர்ஷியைக் கண்டதும், பரத்வாஜரிஷியின் அநுமதியால் சித்ரகூட பர்வதத்தைப் பார்த்ததும், அங்குப் பர்ணசாலை கட்டிக் கொண்டிருந்ததும், பரதன் வந்ததும், ராமனை ராஜ்யா பிஷேகங்கொண்டருள வேணுமென்று பரதன் வேண்டி னதும், தகப்பனுகிய தசரதசக்ரவர்த்திக்கு ராமன் தர்ப் பணஞ்செய்ததும், பெருமைபொருந்திய ராமனது பாது கைகளுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்வித்ததும், பரதன் நந்தி க்ராமத்திற் குடியிருந்ததும், ராமன் தண்டகாரண் யஞ் சென்றதும், விராதனைக் கொன்றதும், சரபங்கமஹர் ஷியைக் கண்டதும், ஸுதீக்ஷ்ணனுடு ஸந்தித்ததும், ஸீதை அநஸூயையோடு கலந்திருந்ததும், அநஸூயை

---

1 இந்த ஸர்க்கத்தில் ராமாயணத்தின் விஷயங்களைச் சொல் லுவதில் தாத்பர்யமேயன்றி கதையின் க்ரமத்தில் தாத்பர்யமில்லை. ஆனதுபற்றியே (அகஸ்த்யனைக்கண்டதும்) என்று மேலிற்சொல்லி, (அநஸூயையோடு கலந்திருந்ததும், அநஸூயை ஸீதைக்குச் சந்தனங்கொடுத்ததும்) என்று முன்னமே சொல்லப்பட்டது. இங் ஙனம் மேலிற் சில விடங்களிலுங் கண்டு கொள்வது.

ஸீதைக்குச் சந்தனங்கொடுத்ததும், அகஸ்த்யனைக்கண்டதும், ஜடாயுவோடு சேர்ந்ததும், பஞ்சவடிக்குப் போனதும், சூர்ப்பணகையைப்பார்த்ததும், சூர்ப்பணகையோடு வாதாடினதும், அவளை விரூபையாக்கினதும், கரன் தூஷணன் திரிசிரன்என்னும் அரக்கர்களைக்கொன்றதும், ராவணன் கோபங்கொண்டு ஸீதையைக்கொண்டுபோவதாகக் கிளம்பி வந்ததும், மாரீசனை முடித்ததும், ஸீதையை யெடுத்துக்கொண்டு போனதும், ராமன் ஸீதையைக் காணுமற் புலம்பினதும், ராவணன் ஜடாயுவைக் கொன்றதும், ராமன் கபந்தனைக்கண்டதும், பம்பையைப் பார்த்ததும், சபரியைக் கண்ணுற்றதும், ஹநுமானோடு சேர்ந்ததும், ருச்யமூகபர்வதம்போனதும், அங்கு ஸுக்ரீவனோடு கலந்ததும், அவனுக்கு நம்பிக்கையைப் பிறப்பித்ததும், ராமனுக்கும் ஸுக்ரீவனுக்கும் நடந்த ஸ்நேஹமும், ஸுக்ரீவன் வாலிக்குந்தனக்கு முண்டான வைரத்தை ராமனிடத்திற் சொன்னதும், அவர்களதுயுத்தமும், ராமன் வாலியை வதஞ்செய்ததும், ஸுக்ரீவனுக்குக் கிஷ்கிந்தா ராஜ்யங் கொடுத்ததும், தாரை புலம்பினதும், சரத்காலம்பிறந்தவுடனே ஸீதையைத் தேடவேண்டுமென்று ராமனும் ஸுக்ரீவனும் ஸங்கேதம் பண்ணிக்கொண்டதும், மழைலத்தில் இரவுபகலெல்லாம் ராமன் ருச்யமூகத்தில் ஸீதையைப் பிரிந்து வஸித்திருந்ததும், ரகுவம்சத்திற் பிறந்து ஸிம்ஹம்போன்ற ஸ்ரீராமன் ஸுக்ரீவன்மீது கோபித்துக் கொண்டதும், வாநரப்படையைச்சேர்த்ததும், அப்படைகளைத் திக்குக்களிற்புறப்படச்செய்ததும், வாநரர்களுக்கு அந்தந்தப்பூமிகிலையைத்தெரிவித்ததும், ராமன் ஹநுமானிடம் மோதிரங் கொடுத்தனுப்பினதும், ஜாம்பவான் ஸ்வயம்ப்ரபையின் குகையைக் கண்டதும், வாநரர்கள் ஸீதையைக்காணாதது பற்றி ப்ராயோபவேசஞ் செய்யத்

தொடங்கினதும், ஸம்பாதியைக்கண்டதும், ஹநுமான் கடலைத் தாண்டும்பொருட்டு [1]மலயபர்வதத்தின் மீதேறினதும், கடலைக்கடந்ததும், ஸமுத்ரராஜன் வார்த்தையைக்கேட்டு மேலெழுந்த மைநாகபர்வதத்தைக்கண்டதும், ஸிம்ஹிகையைக்கொன்றதும், லங்கையிலுள்ள [1]மலயமென்கிற ஓர் மலையைக்கண்டதும், ஹநுமான் இரவில் லங்கையில் நுழைந்ததும், பின்பு அவன் அங்குத்தனியேயிருந்துசிந்தித்ததும் ராவணனைக்கண்டதும், புஷ்பகவிமானத்தைப்பார்த்ததும், பாநசாலைக்குட்போனதும், அந்தப்புரத்தைப்பார்த்ததும், அசோகவநத்திற்சென்றதும், அங்குஸீதையைக்கண்டதும், அவளுக்கு ராமனதுஅடையாளமான கணையாழியைக் கொடித்ததும், திரும்பி ராவணனைக்கண்டதும், ராக்ஷஸப்பெண்கள் ஸீதையைப்பயப்படுத்தினதும், த்ரிஜடையென்பவள் ஸ்வப்நங்கண்டதும், ஹநுமானுக்கு ஸீதை சூடாமணியைக் கொடுத்ததும், அசோகவநத்திலுள்ள வ்ருக்ஷங்களை ஹநுமான்முறித்ததும் அதைக்கண்டு ராக்ஷஸிகள் பயந்தோடினதும், ஹநுமான் ராவணனனுப்பின படர்களைக்கொன்றதும், இந்த்ரஜித்தால் ஹநுமான் கட்டப்பட்டதும், ஹநுமான் லங்கையைக்கொளுத்தி ராக்ஷஸிகளையழச்செய்ததும், திரும்பி ஸமுத்ரத்தைத் தாண்டினதும், மதுவநத்தை யழித்ததும், ராமனுக்குத்தெரிவதல்சொன்னதும், ஸீதைகொடுத்த சூடாமணியை ராமனிடங் கொடித்ததும், ஸமுத்ரராஜனோடு ஸந்தித்ததும், கள்ளைக்கொண்டு கடலில் அணைகட்டினதும், ஸமுத்ரத்தைத் தாண்டினதும், ராத்ரியில் லங்காபட்டணத்தைத் தகைந்து சூழ்ந்த

---

1 இம்மலயம் லங்கைக்கு ஆதாரமான மலையினேர்பாகம். கடலைக்கடக்கும்பொழுது ஹநுமான் ஏறிய மலயம்வேறு. 'மலயஃ பர்வதாந்தரே। பர்வதாஂஸே' என்று நிகண்டுவிற் சொல்லப்பட்டது.

தும், விபீஷணனோடு சேர்ந்ததும, அவன் இந்த்ரஜித்து முதலானவரைக் கொல்ல உபாயஞ்சொன்னதும், கும்பகர்ணனைக் கொன்றதும், மேகநாதனை முடித்ததும், ராவணனை வதஞ் செய்ததும், அந்தச் சத்ருபட்டணத்தில் ஸீதையைப் பெற்றதும், விபீஷணனுக்கு லங்கையில் ராஜ்யாபிஷேகஞ் செய்ததும், புஷ்பக விமானத்தைக் கண்டதும், அயோத்யைக்குச் சேர்ந்ததும், பரதனோடு கலந்ததும், ராமாபிஷேக மஹோத்ஸவமும், ராமன் ராஜ்யத்திலுள்ள ப்ரஜைகளை ஸந்தோஷிக்கச் செய்ததும், ஸீதையைக் காட்டிற் கொண்டுபோய்விட்டதும் இந்தப்ரபந்தத்தில் அடங்கச்செய்தனன். மிகுந்த மகிமைபொருந்திய அவ்வால்மீகிமாமுனிவன் ராமனது வரப்போகிற சரித்ரம் [1]யாது சிறிதுண்டு, அதையும் உத்தரகாண்டத்திற்சொல்லி முடித்தனன்.

மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

குசலவர்கள் ராமாயணத்தைக் காநஞ்செய்தது.

[2]நான்முகனிடம் வரம்பெற்று எல்லாமறியவல்ல மிகுந்தஞானமமைந்தவால்மீகிமாமுனிவன் ராமன் ராஜா

---

1 (யாது சிறிதுண்டு) என்கையால் ஸீதையைக்காட்டில் விடுவதற்கு முன் காலம் அதிகமென்றும் பிற்காலம் சிறிதென்றுந் தோற்றுமென்பர் சிலர். இதை உத்தரகாண்டத்தில் நன்காராய்ந்துரைக்கக்காண்க.

2 கீழ் ஸர்க்கத்தில் விஷயத்தின் வைலக்ஷண்யஞ் சொல்லப்பட்டது. இங்கு ப்ரபந்தத்தின வைலக்ஷண்யஞ் சொல்லப்படுகிறது. ப்ரபந்தத்திற்கு வைலக்ஷண்யமாவது —மிகவுமாப்தனுயிருப்பவனற் செய்யப்பட்டிருக்கையும், புண்யபுருஷனைப்பற்றி யிருக்கையும், பெரியோர்கள் ஆதரித்திருக்கையும், ப்ரபந்தநாயகனற் புகழப்பட்டி

வாகி உலகமாண்டிவருங்காலத்தில் அவனுடைய சரித்ரம் முழுதும் அற்புதமான பதங்களும் அலங்காரங்களும் ரஸங்களும் நிறைந்த ஓர் ப்ரபந்தமாகச் செய்தனன். அதில் இருபத்து நாலாயிரம் ச்லோகங்களும் ஐந்நூறு ஸர்க்கங்களும் ஆறு காண்டங்களும் ஏழாவதாக உத்தர காண்டமும் மொழிந்தனன். சிறந்தமதியுடைய அவ் வால்மீகிமாமுனிவன் ராமாயணமென்னும் அந்தமஹா காவ்யத்தை ராமபட்டாபிஷேகத்துக்குப் பின்பும் ராமன் அச்வமேதஞ் செய்தபின்பும் ஸீதை பூமியில் மறைந்ததற் குப் பின்பும் வரப்போகிற சரித்ரமனைத்து மடங்கியதா கச் செய்து முடித்து 'இதைப்பாடவல்லவனெவனே' என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். இங்ஙனம் 'இதற் குத்தக்கவன் நேரிடவேணுமே' யென்று சிந்தித்துக் கட வுளிடம்மனஞ் செலுத்தி யிருக்கையில்காநத்திற் பயிற்சி பெற்று முகிவேஷம் பூண்ட குசலவர்கள் அம்மாமுநி யின் திருவடிகளைப் பணிந்து 'நாங்கள் இதைக்கற்கவல் லோம்' என்று தொடர்ந்தனர். அவ்விருவரும் குருசுச் ரூஷை யென்னுந் தர்மத்தை நன்முக உணர்ந்தவர்; ராஜ குமாரர்கள்; ஒன்று செய்யத் தொடங்கினால் அதுமுடியும் வரையில் அதைத்தவிராது தொடர்ந்து நடத்துந்தன் மையுள்ளவர்கள்; கல்வியில் மிகவுங் கீர்த்திபெற்றவர்கள். இருவரும் உடன் பிறந்தவராகையால் அவரது கண்டம் ஒன்றே டொன்றொத்து மதுரமான சாரீரம் பொருந்தி யிருக்கும். மேலும் அவ்வாச்ரமத்தில் வஸிப்பவர்களா

ருக்கையும் இது முதலானவை. (அவனுடைய சரித்ரம்) என்கை யால் புண்யபுருஷனைப்பற்றியிருக்கையும், (வால்மீகிமாமுனிவன் ....செய்தனன்) என்கையால் மிகவுமாப்தனுற் செய்யப்பட்ட மையுந் தோற்றும்.

கையால் அவ்வால்மீகியின் ப்ரீதிக்குப் பாத்ரமாயிருப் பவர்கள். ஆகையால் அவர்களே அவ்வால்மீகிமாமுனி வன் கண்டு 'இதை யிவர்களுக்கு உபதேசிக்கத்தகும்' என்று [1]மனத்திற் கொண்டனன். வல்லவனாகிய வால் மீகிமாமுனிவன் மறப்பின்றி கீலே கின்ற மதி பெற்று, அங்கமாறுடன் மறையெல்லாமோதி அதில் தேர்ந்திருக் கிற அக்குசலவர்களைக்கண்டு மறையினுட்கருத்தனைத் தும் வெளியிடவல்ல ராமாயணமென்கிறதனது ப்ரபந்தத் தைப்பாடுவிக்கும்பொருட்டு அவர்களே யங்கீகரித்தனன். ஸாந்தபநமென்றும் பராகமென்றும் சாந்த்ராயண மென் றும் பற்பல வ்ரதங்களைச் செய்து மாசற்று விளங்கும் மதியுடைய வால்மீகியானவன் சில விடங்களில் ராமசரி தத்தை மொழிவதும், மற்றை முழுதிலும் [2]ஸீதையின் விருத்தாந்தத்தையே யுரைப்பதும் ராவணஸம்ஹாரமே

---

1 இதலுல் ராமன் அபிஷேகங்கொண்டு ராஜ்யபரிபாலநஞ் செய்துகொண்டிருக்கையில் நிறைவேற்றின இக்காவ்யத்தை உப தேசம்பெறத்தக்க சிஷ்யர்களில்லாமையால் எதிர்பார்த்துக் கொண் டிருக்கையில் பின்பு சிலகாள் கழித்துக் குசலவர்கள் பிறந்ததாகத் தோற்றுகின்றது. இதையறிந்தே ராமன் வால்மீகியிஞ்சமத்திற் சீதையை விட்டதாகத் தெரிய வருகின்றது.

2 இதில் முக்யமாய் ஸீதையின் வ்ருத்தாந்தமே சொல்லப்ப டும். ராமசரிதம் முக்யமன்று. இங்கு ஓர் பழமொழியுமுண்டு-'ப்ரா தர்ஜ்யூத ப்ரஸங்தேந மயீயாஹ்நே ஸ்த்ரீப்ரஸங்மதஃ। ராத்ரௌ சோரப்ரஸங்தேந காலோ ஹ்யஹதி யீமதாம்' என்று. இங்கு ஸ்த்ரீப் ரஸங்கமாவது ராமாயணபாராயணம். ஸீதையின் சரித்ரத்தைக் கூறுவதைப்பற்றி யிங்ஙனஞ் சொல்லுகிறது. அன்றியே தன்புகழ்ச் சியில் மனஞ்செல்லாதிருக்குந் தன்மையனான ஸ்ரீராதாத்தனுகச் சொல்லப்பட்ட ராமன் இதைக் குசலவர்கள் பாடச் சபையிலிருந்து கேட்டது சோதது. ஸீதையின் வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிற தாயின் போரச்சேரும். நாயகியைப் பிரிந்திருப்பவன் அவளது

இதில் முக்யமாகையால் 'ராவணவதம்' என்றே வழங்கிவரவற்றுமாகிய ராமாயணமென்கிற யாதொரு காவ்யத்தைச் செய்திருந்தனன், அதை அவ்விருவர்க்கு முபதேசித்தனன். அச்சிறுவர்களும் அவரிடம் உபதேசம் பெற்று, படிக்கிலும் பாடிலும் இனியதாகி [1]மூன்றளவுகளும் [2]ஏழு ஸ்வரங்களும் அமைந்து வீணையிற் சங்கீதத்துடன் பாடப்பொருந்தி சிருங்காரம் கருணம்ஹாஸ்யம் வீரம் பயாநகம் [3]ரௌத்ரம் முதலிய ரஸங்களைப் பொழியும் ராமாயண மென்னும் இக்காவ்யத்தைப்பாடத் தொடங்கினர். அவ்விருவரும் ஸங்கீதத்தின் நுட்பமெல்லாம் அறிந்தவர்கள்; வீணை முதலிய வாத்யங்களில் தேர்ந்தவர்கள்; மெதுவாகவும் கதித்தரமாகவும் உரக்கவும் உச்சரிக்கவேண்டிய இடங்கள் மூன்றும் கன்ரு யுணர்ந்தவர்கள்; உடன் பிறந்தமையால் ஒக்கப்

கதையைக் கேட்டுப் பொழுது போக்குவது எங்கும்பரந்தவிஷயமே. ஆகையால் ராமன் ராவணனைக் கொன்ரனென்று மேலெழக்காட்டி வீதையின் சரித்ரத்தையே முழுவது முட்கருத்தாகவைத்து இப்ரபந்தத்தை வால்மீகி செய்தானென்கிறது.

1 இங்கு மூன்றளவுகளாவன — பாட்டிலெலியை விடித்துக் காட்டுகிற, தீர்யச்ரம் என்றும் சதுரச்ரம் என்றும் மிச்ரம் என்றும் பேர் பெற்றவையாவது, த்ருதம் என்றும் மத்யம் என்றும் விலம்பிதமென்றுஞ் சொல்லப்படுகிறவையாவது.

2 ஏழுஸ்வரங்களாவன — ஷட்ஜமென்றும் மத்யமமென்றும் காந்தாரமென்றும் நிஷாதமென்றும் ருஷபமென்றும் தைவதமென்றும் பஞ்சமமென்றுஞ் சொல்லப்படும் ஏழுஸ்வரங்கள்.

3 (ரௌத்ரம் முதலிய) என்கையால் பீபத்ஸம் அற்புதம் சாந்தம் என்கிற மற்றை மூன்று ரஸங்களும் இதிலுண்டென்கிறது. இதில் ராவணவதம் முக்யமாகையாலே வீரரஸம் முக்யமென்று சிலர் கூறுவர். வீதையின் சரித்ரமே முக்யமென்கையாலும் அந்த ராவணனைக் கொன்றது வீதையைப் பெறுவதற்காகையாலும் சிருங்காரமே முக்ய ரஸமென்று சிலர் சொல்லுவர்.

பாட வமைந்த குரலுடையவர்கள்; இனிதான சரீரம் அமைந்தவர்கள்; மானிடவேஷம் பூண்ட கந்தர்வர் போலிருப்பவர்கள்; பாடும்பொழுது பாட்டுக்கிணங்க அபிநயிக்கும்படி காடகலக்ஷண மறிந்தவர்கள்; இயற்கையாகவே இனியகுரலுடன் பேசவல்லவர்கள்; ராம னுடைய வடிவமாகிற பிம்பத்தினின்றுங் கடைந்தெடுக்கப்பட்ட ப்ரதிபிம்பம் போல் மிகவும் அழகு பொருந்திகம் பீரத்தன்மையுள்ள வடிவங் கொண்டவர்கள். இங்ஙனங்குணங்கள் அமைந்து ராஜபுத்ரர்களாயிருந்தும் முனி வேஷம் பூண்ட அக்குசலவர்க ளிருவரும் தர்மத்தினின்றும் தவறாது மேன்மை பொருந்திய அக்காவ்யம் முழுமையும் ஏட்டுப்புறம் பாராமல் வாயாற் சொல்லும்படி முனிவனிடங் கேட்டபடியே மனத்தில் நிறுத்திக்கொண்டு மாசற்று விளங்கினர். சிறந்த மதியும் மிகுந்த பாக்யமும் அமைந்து லக்ஷணங்கள் பொருந்திய அக்குசலவர்கள் இங்ஙனங் கற்றறிந்த ரிஷிகளும் அந்தணர்களும் நிறைந்தஸபைகளிற்சென்று பாடங்களிற் பிசகின்றித் தாங்கள் உபதேசம்பெற்றபடியன்றுமறவாமல்அக்காவ்யத்தைப் பாடிக்கொண்டிருந்தனர். பின்பொருகால் ராமன் செய்த அச்வமேதயாகத்திற் சேர்ந்து ஹோமம் முடிந்து உட்கார்ந்திருக்கும் மதிதேர்ந்த மஹர்ஷிகளின் அருகிற்சென்று அக்குசலவர்கள் இக்காவ்யத்தைப்பாடினர். அதைக்கேட்ட முனிவர்யாவரும் கண்ணுங் கண்ணீருமாகி மிக்க ஆச்சரியங்கொண்டு 'நல்லது நல்லது' என்று அவ்விருவரையும் புகழ்ந்தனர். அம்முனிவர் அனைவரும் தர்மத்தில் மிகவும் அன்பு கூர்ந்தமையால் பொறுமையற்றிருக்குந் தன்மையர்; ஆகையால் அக்குசலவர்கள் யாவரும் புகழும்படி பாடுவதைக்கேட்டு மிகவுங் களிப்புற்றுப் 'பாட்டினினிமை அற்புதமா யிருக்கின்றது.

ச்லோகங்களினினிமையோ மிகவுமற்புதமா யிருக்கின்ற து. இது வெகுகாலுக்கு முன் நடந்தவற்றையும் இப்பொ ழுது எதிரில் நடப்பதுபோற் காட்டுகின்றது' என்றிங்ங னங் கொண்டாடினர். அவ்விருவரும் கவியின் கருத்து யாவர்க்கும் தெளிய வெளியாகும்படி நன்றுயுட்புகுந்து தாளத்தையொத்து ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களும் ரா கங்களும் அமைந்து இனிதா யிருக்கும்படி பாடினரென் று முனிவரெல்லோரும் புகழ்ந்தனர். புகழத்தக்க தவம் பொருந்தி, பொறுமையின்றிச் சிறந்த அறிவுடைய மு னிவர்களால் அங்ஙனங் கொண்டாடப்பெற்ற குசலவர் கள் மிகவும் ஓழுங்கான ராகங்களோடு மிகுந்த இனிப் புடன் மேன்மேலெனப் பாடினர். [1]அதைக்கேட்டு மிகவு ங்களித்த ஓர் முனிவன் எழுந்திருந்து கலசத்தை அவர் களுக்கு வெகுமதியாகக் கொடுத்தனன். லங்கேதத்திற் கீர்த்தி பெற்ற மற்றொருவன் மனக்களிப்புற்று மாவுரியை யீந்தனன். மற்றொருவன் க்ருஷ்ணஜிநத்தையும், மற் றொருவன் மௌஞ்சியையும், மற்றொருவன் கமண்டலு வையும், மற்றொருவன் யஜ்ஞோப வீதத்தையும், மற்றொ ருவன் அத்திப்பலகையாற் செய்யப்பட்ட தனது ஆஸநத் தையும், மற்றொருவன் ஜப மாலையையும் தந்தனர். மற் றுஞ்சில மஹர்ஷிகள் மிகவுமனக்களிப்புற்று 'வெகுகா லம் வாழ்ந்திருக்க' என்று ஆசீர்வாதஞ் செய்தனர். இவ்வாறு முனிவர் புகழ்ந்தமையன்றியே ஜநங்களனை வரும் பார்த்து 'வால்மீகியாற் செய்யப்பட்டு இதிஹாஸ மென்று பேர்பெற்றுக் காவ்யஞ்செய்ய விருப்பமுள்ளகவி களுக்கெல்லாம் மூலாதாரமாயிருக்கும் இக்காவ்யமா னது ஆரம்பித்த வளவிலே முடிந்தது; ஸங்கீதமனைத்

---

1 இதனைப் பெரியோர்களாதரித்தமை தோற்றும்.



61 ஸ்ரீராமனது ஸபையில் குசலவர்கள் ராமாயண கானஞ்செய்தல்

து மறிந்தவர்களே! வாழ்நாளை வளரச்செய்து புஷ்டியையுங் கொடுக்கவல்லதாகி சுருதிகளெல்லாம் அமைந்து யாவர் செவிக்கு மினிமையாயிருக்கும் இக்காவ்யத்தை நீங்கள் நன்றாகப் பாடினீர்கள்' என்றிங்ஙனம் யாகசாலையிலும் தெருக்களிலும் ராஜமார்க்கங்களிலும் புகழ்ந்தனர். இப்படி விளங்கிவரும் பாட்டில் தேர்ந்த அக்குசலவர்களை ராமன் ஒருகால் பரதன் காட்டக்கண்டனன். பகைவரை நீறுசெய்யவல்ல அந்த ராமனும் உடன்பிறக்தவராகையால் ஒரே வயதும் ஒரே வடிவமும் கொண்டி அற்புதமான கல்வியின் சிறப்பினைப் பூரிக்கத் தக்க அக்குசலவர்களைத் தன் மாளிகைக்கு வரவழைத்துப் பூசனை செய்தனன். [1]மேலும், உலகங்களுக்கெல்லாந் தனியாளனாகி அச்வமேதயாகத்தில் தீக்ஷைகொண்டிருக்கிற ராமன் ஸுவர்ணமயமான ஓர் திவ்யலிம்ஹாஸனத்தில் மந்திரிகளும் தம்பிமார்களுந் தன்னைச் சூழ உட்கார்ந்து அழகுபொருந்திய அக்குசலவர்களிருவரையுங் கண்டு லக்ஷ்மணனையும் பரதனையும் சத்ருக்நனையும் நோக்கி தேவதைகளைப்போல் விளங்கின்றுள்ள இவர்கள்பாடும் அற்புதமான பொருள்களும் பதங்களும் நிறைந்த இவ்விதிஹாஸத்தைக்கேளுங்கள்' என்று சொல்லிப் பாடுமிவர்களாகிய அவ்விருவரையும் பாடும் பொருட்டுக் கட்டளையிட்டனன். அவர்களும்இனிதாகிய ராகத்துடன் கலந்து புகழத்தக்க நீண்ட ஆலாபகங்களுடன் தந்தியிலேறிட்டு லயமமையும்படி மிக்க பொருள் தெளிவுடன் பாடினர். செவிக்கினிய அப்பாட்டானது ஜனங்கள் நிறைந்த அச்சபையில் எல்லோருடைய உடலையும் மயிர்க்கூச்செறியச்செய்து மனத்தையும் அம்மனத்துக் கிருப்பிட

---

1 இனி இதை ப்ரபந்தநாயகன் புகழ்ந்தமை சொல்லப்படுகின்றது

மான ஹ்ருதயத்தையும் மிகவும் ஆகர்ஷிக்கச்செய்து விளங்கிற்று. அப்பொழுது ராமன் அச்சபையிலுள்ளவர்களைப் பார்த்து 'இவர்கள் முனிவேஷம் பூண்டிருந்தும் ராஜலக்ஷணங்களெல்லாம் அமைந்திருக்கின்றனர்; பாடுமவர்களாயிருந்தும் மிகத் தவம்பொருந்தி விளங்குகின்றனர்; இச்சரித்ரமும் ஸீதையைப்பற்றியிருப்பதால் மிகவும் பெருமைபொருந்தியது; ஆகையால் எனக்கும் இது நன்மையை விளைவிக்குமதாயிருக்கும்; இதைக்கேளுங்கள்' என்றிவ்வாறு மொழிந்தனன். பின்பு ராமனது வாயால் ஏவப்பட்ட அக்குசலவர்களிருவரும் மார்க்கமென்கிற ராகத்தின் ஆலாபநவழியைக்கொண்டு ராமாயணத்தைப் பாடினர். அப்பொழுது ராமனும் அதில் மனமூன்றி அருகிலிருந்து கேட்டநுபவிக்க விரும்பியும் ஸீதையின் கதையாகையால் அதைக்கேட்டுத்தரிக்கலாமென்று ஆதரங்கொண்டும் [1]மெள்ள மெள்ள ஸபையின் நடுவே வந்தனன்.

நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

---

1 (மெள்ளமெள்ள)என்கையாலே விம்ஹாஸநத்தினின்றுமெழுந்திராமலே நகர்ந்துவந்தானென்று கருத்து. எழுந்திருக்குமாயின்யாவரும்என்னமோவென்றுமெழுந்திருப்பர். அப்பொழுதுரஸபங்கம்வரும். அதுபற்றி யாவரு மறியாமல் மெள்ள நகர்ந்து வந்தானென்கிறது. அல்லது 'ஏகஸ்ஸ்வாது ந ஹ ஞ்ஜீத' என்று மதுரமானவஸ்துவை ஒருவனுகப் புசிக்கலாகாதென்கையால் பலஜநங்கள் நிறைந்த ஸபையிலிருந்தாலுயினும் விம்ஹாஸநத்தில் தான் தனியே வீற்றிருந்தாலுகையால் தன்னைத் தனியனுக நினைத்து ஸபையின்நடுவில் ஜநங்களோடு கலந்து அம்மதுரமான கதையைக்கேட்டநுபவிக்க விரும்பினனென்று கருத்து.

அயோத்யாபுர வர்ணநம்.

[1]செல்வம் நிறைந்த இப்பூமியனைத்தும் மற்றைய னைவர்க்கு மரிதாகி மநுப்ரஜாபதிமுதலாக வந்த யாதொ

---

1 இந்த ஸர்க்கத்தில்தான் ராமாயணகதைக்காரம்பம். இதுக் குக்கீழுள்ள ஸர்க்கங்கள் உபோத்காதமென்றுசொல்லப்படுகின்றன; உபோத்காதமாவது-ப்ரபந்தத்தைப் பெரியோர்கள் அங்கீகரிக்கும் பொருட்டு, அதில் சொல்லப்படும் விஷயத்தையும் அதற்கு ப்ரயோஜநத்தையும், அதற்கு அதிகாரிகள் இன்னாரென்பதை யுஞ் சொல்லுகை. ராமாயணஞ் செய்தபின்பு நடந்த கதை யைக் குறிக்கும் இந்த ஸர்க்கங்கள் ராமாயணத்துக்கு முன் னை யிருப்பது எப்படியெனில்—இது மேலே நடக்கப்போ கிற வ்ருத்தாந்தமாயினும் த்ரிகாலத்தையும் அறிந்த வால்மீகி மஹர்ஷி முன்பாகவே இதைச்செய்து ப்ரபந்தத்திற்சேர்த்து வைத் தானென்று கண்டுகொள்வது. ஆயினும் ஆத்மப்ரசம்ஸையில் வந்து முடிகிற இம்மூன்று ஸர்க்கங்களையும் எப்படி ரிஷி தானே செய்ய க்கூடுமென்னில்—பார்க்கிறவர்களுக்கு இப்ரபந்தத்தில் மனஞ்செல் லும் பொருட்டு ஒருவர்க்குந்தெரியாத இந்த வ்ருத்தாந்தத்தை முதலிற் சொல்லவேண்டியது ஆவச்யகமாகையால் இது கூடும். அல்லது—இம்மூன்று ஸர்க்கங்களையும் இந்த வால்மீகி மஹர்ஷி யினது சிஷ்யர்களில் ஒருவன் ராமாயணம் முடிந்தவுடன் இதின் வைபவத்தைத் தெரியச் செய்யும் பொருட்டுப்பண்ணிச் சேர்த்தா னென்றுகண்டு கொள்வது. ஆனால் இம்மூன்று ஸர்க்கங்களும் ராமா ணத்துக்கு முதலாயிருக்குமாயின் இதைக் குசலவர்கள் ராமனிடஞ் சென்று முதலிற்பாடத் தொடங்கும்பொழுதே அவர்களை ராமன் தன்புத்ரர்களென்று அறிந்திருக்கக்கூடும். அறிந்தாலுயின் அப்பொ ழுதே வீதையை யழைத்துக் கொண்டு வாவேண்டிவரும். ஆகை யால் இது சேராதென்னில்—அது இல்லை; வீதையின் குமாரர்க ளென்று இங்குச் சொல்லாமையால் தன் புத்ரர்களென்று எங் ஙனே நிச்சயிக்கக்கூடும். ராமஸாத்ருச்யஞ் சொன்னாலும் அது மற்றை ராஜ புத்ரர்களுக்கு மிருக்கக்கூடு மாகையால் இங்ஙனம் நிச்சயிக்கப்போகாது. ஆகையால் இம்மூன்று ஸர்க்கங்களும் ராமாயணத்துக்கு முதலென்பதில் யாதொரு குற்றமுமில்லை.

ரு வம்சத்திற்பிறந்தஜயசீலர்களான அரசர்கட்கே உரிய தாயிருந்ததோ; யாதொரு வம்சத்திற்றோன்றியஸகரசக் ரவர்த்தியென்பவன் தனது பேரோங்கும்படி லாகரமென் று எங்கும் விளங்கிய கடலைத்தோண்டுவித்தும், தான் போர்புரியப் போகும்போது அறுபதினாயிரம் மக்கர்க ளால் இரண்டு பக்கத்திலும் சூழப்பட்டிருந்தும் மிகவும் க்யாதிபெற்றனனே; அப்படிப்பட்ட இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்து மஹா மகிமை பொருந்திய அரசர்களில் தலைவனு கிய ஸ்ரீராமபிரானைப்பற்றி ராமாயணமென்று எங்கும் விளங்கிப் பெருமை பொருந்திய இவ் விதிஹாஸமானது நான்முகக்கடவுளின் நற்கருத்தினால் இவ்வுலகிற் பிறந் தது. யானெருகிமித்தமாய்க்கொண்டு இதை வெளியிடப் போகின்றேன். ஆகையால் யான்மொழிந்ததென்று இக ழாமல் நான்முகக்கடவுளால் அருளப்பட்டதென்று நன் கு பக்தியுடன் தர்மார்த்த காமங்களைத்தரவல்ல இவ் விதிஹாஸத்தை ராமாவதாரம் முதலாக ஓரு குறைவு மின்றி முழுதும் கேட்பீர்களாக.

ஸரயூநதியினது இருகரையும் பரந்து தகதாக்யங் கள் நிறைந்து எப்பொழுதும் களிப்புற்று அளவற்ற ஜநங்களமைந்து மிகவும் விசாலமான கோஸலமென்று ஓர் தேசமுண்டு. அதில் அயோத்யை யென்று எங்கும் புகழ்கொண்ட நகரமொன்றுண்டு. அது முன் மானி டர்க்கரசான மநுப்ரஜாபதியின் மனத்தினாற் படைக்கப் பட்டது. மேலும் அம்மாநகரம் பன்னிரண்டுயோஜனை தூரம் நீண்டு மூன்று யோஜனைதூரம் பரந்து மிகவு மொளி பொருந்தி விளங்கி நிற்கும். அதில் பல விடங் களுக்குப் போகும் வழியனைத்தும் நிழல் பரந்த மரங்கள் இரண்டு பக்கத்திலும் அமைக்கப்பட்டு நன்ரூய்ப் பிரிந் திருக்கும். மூலை மிடுக்கின்றி விசாலமாய் நீண்டு தனித்

தனியே பிரிந்துதினந்தோறும் தண்ணீர் தெளித்து மலர் தூவப்பெற்று விளங்கும். அம்மஹா நகரத்தை நீதிவழு வாமல் பாதுகாத்துவரும் தசரத சக்ரவர்த்தி அவ்வயோ த்திமா நகரில் தேவேந்திரன் ஸ்வர்க்கத்தில் வஸிப்பது போல் வாஸஞ்செய்துகொண்டிருந்தனன். அந்நகரத்தில் கோட்டை வாசல்களெல்லாம் உயரமும் அழகும்வலிமையு முள்ள கதவுகளமைந்திருக்கும். கடைகளும், இடையில் பரந்து பண்டங்கள் நிறைந்து நன்கு யமைந்திருக்கும். உலகத்திலுள்ள ஸகல யந்த்ரங்களும் ஸமஸ்தமான ஆயு தங்களும் அங்குக் காணப்படும். அதில் அந்தந்த வேலை களில் கைதேர்ந்த பல சிற்பிகளும் வஸித்திருப்பர். அர சர்களைத் துதிசெய்யும் வந்தி ஜனங்களும் அவர்களை விடியற்காலத்தில் எழுப்புகிற மாகத ஜனங்களும் நிறை ந்திருப்பர். தநதாந்யங்களால் குறைவற்ற அப்பட்ட ணத்தினழகு மேலோங்கி யிருக்கும். அதில் ஒவ்வொரு பொருளும் ஒப்பில்லாமல் ஒளிபெற்றிருக்கும். அங்கு மேல்மெத்தைகளும் அதின்மேலுள்ள த்வஜங்களும் ஆகாயத்தை யளாவியிருக்கும். மதிட்சுவர்க் கட்டடங் களில் பீரங்கிகள் கணக்கின்றி யமைத்திருக்கும். அங் குப் பெண்களுக்கு நாட்டியங் கற்பிக்கவல்ல நட்டுவர் கூட்டம் எங்கும் சூழ்ந்திருக்கும். மாமரங்களுடனே மற்றுமுள்ள மரங்களும் பூங்கொடிகளும் நிறைந்து விள ங்குந்தோட்டங்கள் பலவு மங்குண்டு. உயர்ந்த மதிட் சுவர்களும், அகன்று ஆழ்ந்த அகழிகளும் அமைந்திரு ப்பதால் அந்நகரம் யாவருமணுகவொண்ணாதிருக்கும். பின்னும் அதில் மேலான குதிரைகளும் உயர்ந்த யானை களும் கொழுத்த எருதுகளும் ஒட்டகங்களும் கோவேறு கழுதைகளும் நிறைந்திருக்கும். கப்பங்கட்ட வந்திருக் கும் பக்கத்துத் தேசத்தரசர்களும், வெளிதேசத்தினின்

று வந்தபலவகை வர்த்தகர்களும் நிறைந்து விளங்குவது மன்றி, பலவித ரத்நங்களால் விழைக்கப்பட்ட அரசர் மாளிகைகளாலும், அத்தன்மையதாக விநோதத்தின் பொருட்டுச் செய்வித்த அழகானமலிகளாலும், ஆகாயத் தையளாவின மாளிகைகளின் மேற்கட்டடங்களாலும் செவ்வி பெற்றுத் தேவேந்திரனது அமராவதிபோல் விளங்கும். மேலும் அது ராஜக்ருஹங்கள் பலவும் நிறைந்து பார்க்க விசித்திரமாகிச் சொக்கட்டான் பலகைபோல் காணப்படும். அழகான பெண்களகேகரங்குண்டு. அந்தகரம் பலவிதமான ரத்நங்கள் நிறைந்திருக்கும். பின்னுமது ஏழு திக்கு மாளிகைகள் பலவுஞ்சூழ்ந்து அழகாயிருக்கும். சூளிம்பிகள் வஸிக்கும் வீடுகள் பலவும் நெருங்கி எங்கும் வெளியின்றி மிகவுமொழுங்காயிருக்கும். மேடுபள்ளமில்லாமல் சரியான பூமியில் அப்பட்டணம் அமைந்திருக்கும். அங்கு சம்பா முதலிய மேலான அரிசிகள் அளவற்றிருக்கும். ஜலம் கரும்புரஸம்போல் மதுரமாயிருக்கும். பேரிவாத்யங்களும் மத்தளங்களும் வீணைகளும் உடுக்கைகளும் மற்றுமுள்ள வாத்யங்கள் பலவும் முழங்கப்பெற்று மகோத்ஸவமாயிருக்கும். இப்படி அப்பட்டணம் பூமியிலெங்கு மீடின்றி ஸித்தர்கள் தவஞ்செய்து பெற்று ஆகாயத்தில் பறக்கும் விமாநங்கள்போல் நாலுபக்கத்திலும் கன்ரு யமைக்கப்பட்ட வீடுகள் நிறைந்து மிகவு மழகாயிருக்கும். மாளிடரில் சிறந்த வித்வான்கள் பலருமங்குண்டு. அப்பட்டணத்தில் அஸ்த்ரவித்யையில் தேர்ச்சியடைந்த மஹா ரதிகர்கள் பலருண்டு. அவர்கள் மிகுந்த ஸாமர்த்யம் உள்ளவர்களாயினும் ஸஹாயமின்றித் தனியாயிருப்பவர்களையும், தமக்குப் பெரியோர்களான தாய் தகப்பன் முதலானுரும் பின்புள்ள பிள்ளை முதலானுருமின்றி வம்சத்துக்கெல்லாம் தாமேயாயிருப்பவர்களையும்,

காதிற் படிஞ் சப்தத்தைக்கொண்டு நேரிற் காணுமல் அடிக்க வேண்டியவற்றையும், எதிரில் நில்லாமல் ஓடிப்போகிறவர்களையும் பாணங்களாலு மடியார்கள். மேலும் அவர்கள் தமது தேசத்து வகங்களில் கொழுத்து கர்ஜனை செய்யும் ஸிம்ஹங்களையும், புலிகளையும், பன்றிகளையும் மனுபலத்துடனும் தேஹபலத்துடனும் கூர்மையான ஆயுதங்களால் அடிக்க வல்லவர்கள். இப்படி வீரர்களேயன்றி, ஔபாஸநஞ் செய்பவர்களும் கற்குணங்களெல்லாமமைந்தவர்களும் வேதவேதாங்கங்களின் கரையறிந்தவர்களும் ஆயிரமாயிரமாய்க் கொடுப்பவர்களும் ஸத்யத்தில் நிலைநின்றவர்களும் கேவல ரிஷிகளும் வஸிஷ்டன்முதலிய மஹர்ஷிகளோ டொத்தவர்களும் மிகுந்த மகிமை யுள்ளவர்களுமாகிய ப்ராஹ்மணோத்தமர்களும் அங்கு வினங்குவர். இப்படிப்பட்ட லக்ஷணங்களமைந்து விளங்கும் அவ்வயோத்திமாநகரைத் தசரத சக்ரவர்த்தி கைப்பற்றி யாண்டு வந்தனன். ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதனையும் அவனது ப்ரஜைகளையும் வர்ணித்தல்.

அவ்வயோத்யா பட்டணத்தில் வாஸஞ் செய்யுந் தசரதனென்னும் அம்மன்னன் மிகுந்த பராக்ரமத்துடன் உலகத்தை யாண்டு வந்த வைவஸ்வத மநுவைப்போலவே தானும் உலகத்தைப் பரிபாலித்து வந்தனன். அம்மன்னன் வேதப்பொருளனைத்து மறிந்தவன்; அன்றியே யெல்லா மறிந்தவன்; பணம் முதலியவைகளால் வீரர்களையும் வித்வான்களையும் வளைய வைத்துக்கொண்டு போது போக்குந் தன்மையன்; வெகு நாளைக்குமேல் வருமவை யெல்லாவற்றையுங் கண்டறியுந் திறமுடையவன்; யாவரு மஞ்சும்படியான பராக்ரமமுடையவன். நாடு நகரங்க

ளிலுள்ளவ ரனைவரும் அவனுக்குப்பிரியராயிருப்பர். அவனும் அவர்க்கு ப்பிரியனு யிருப்பான். இக்ஷ்வாகுவம் சத்திற் பிறந்த அரசர்களில் இவன் மிகுந்த அதிரதனென்று பேர்பூண்டவன் ; சாஸ்த்ரங்களிற் சொல்லியபடி பல யாகங்கள் செய்பவன் ; தர்மத்திலூற்றமுள்ளவன் ; யாவரையுந் தன் வசமாக்க வல்லவன் ; தான் ராஜரிஷியாயினும் மஹர்ஷி போன்றவன். மூவுலகங்களிலும் புகழ் பெற்றவன் ; மிகுந்த சதுரங்க பலமுடையவன் ; பகைவரையெல்லாம் பறந்தோடச் செய்பவன் ; தன் குணங்களைக்கண்டு ஸந்தோஷித்து வந்த நண்பர்கள் பலரையு முடையவன் ; தூர்விஷயங்களில் மனஞ் செலுத்தாமல் ஜிதேந்த்ரியனு யிருப்பவன் ; பொன்மணி முத்து ஆடைபரணம் முதலியவைகளால் மஹேந்த்ரனெ னொத்தவன் ; நிதிகளில் குபேரனைப்போன்றவன். இங்ஙனங் குணம்பொருந்தி ஸத்யத்தில் மனஞ்சென்று தர்மார்த்த காமங்களை அடைவே அநுஸரித்த அம்மன்னவனுல் பரிபாலிக்கப்பட்டு இவ்வுலகில் மிகவும் மேன்மை பெற்ற அவ்வயோத்திமாநகர் இந்திரனுண்டுவரும் அமராவதி போல் விளங்கிற்று. இவ்வாறு அம்மன்னன் ஆண்டுவருங் காலத்தில், அந்நகரத்திலுள்ளவர் யாவரும் ஸுகமாக வஸித்திருக்க நேர்ந்து மிகவுங் களிப்புற்று வேறு சிந்தையின்றித் தர்மத்தில் மனஞ்சென்று பலபெரியோரிடத்திலும் பலநெறிகளுங்கேட்டு மனத்தேர்ச்சியடைந்து தந்தம் பொருள்களைக்கொண்டு த்ருப்தி பெற்று லோபமின்றித் தானங்களைச் செய்து உண்மையை யுரைத்து விளங்கி வந்தனர். நகரங்களிற் சிறந்த அந்நகரத்தில் பொருளற்ப முள்ளவனெருவனைக் காணவரிது. அப்படியே மாடு குதிரை தானியங்களில்லாமல் தர்மார்த்த காமங்கள் ஒன்றிலும் நிறைவின்றி யிருக்குங் குடும்பி ஒருவனும்

காணவகப்படான். மேலும் கேவலங் காம மயக்க முள்ளவனும், மனைவி பிள்ளை தாய் தந்தை அண்ணன் தம்பி முதலியவர்களையும் தன்னையும் போஷியாத லோபியும், கொடுஞ்செயல் செய்பவனும், அக்ருதகளில் எங்குங் காணப்படான். கல்விப்பயிற்சி யில்லாதவனையும், தெய்வமில்லை யென்று நாஸ்திகவாதஞ் செய்பவனையும் அங்குக் காணமுடியாது. அதில் ஸ்த்ரீ புருஷர்கள் யாவரும் கல்வியற்கையோடும் கல்லொழுக்கத்தோடும் பிறந்து மஹர்ஷிகள்போல் மாசடையா மனத்தராகி தர்மஞ்செய்வதே நடத்தையாயிருப்பார். அன்றியே காதிற் குண்டலமின்றியும் தலையிற் கிரீடமின்றியுங் கழுத்திற் பூமாலையின்றியு மிருப்பவன் ஒருவனுமங்கில்லை. அற்பபோக முள்ளவனும், எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யாதவனும், சந்தநம் பூசாதவனும், குங்குமங் கஸ்தூரி முதலிய வாஸனையணியாதவனும் இல்லை. அந்தமில்லாமையால் வயிரூரவுண்ணுதவனும், அந்நதானஞ் செய்யாதவனும், தோள்வளை பூணுதவனும், மார்பில் ஹாரமணியாதவனும், கையிலாபரணமில்லாதவனும், மனத்தை வெல்லாதவனுங் காணமாட்டான். இடைவிடாமல் அக்நிஹோத்ரஞ் செய்யாதவனும், யாகஞ்செய்யாதவனும், கல்வியும் ஐச்வர்யமுமற்பமுள்ளவனும், திருட்டுத்தன முடையவனும், வர்ணஸங்கரஞ் செய்பவனும், அவ்வயோத்யையில் ஒருவனு முண்டாக வில்லை. அந்நகரத்தில் அந்தணர் யாவரும் சாஸ்த்ரங்களிற் சொல்லிய தந்தமது கர்மங்களில் நிலை நின்று இந்த்ரிய ஜயம்பெற்று கல்விதானஞ் செய்து கொண்டு ஜபதபங்கள் தவிராமலும் தானம் வாங்குவதில் மனஞ் செல்லாமலும் தந்தமுடைய தாரங்களில் த்ருப்தியுடன் வாழ்ந்திருந்தனர். இப்படி அத்தப்பட்டணத்திலன்றியே அந்நாடு முழுவதிலும் நாஸ்திகனும், பொய்ய

னும், பற்பல சாஸ்த்ரங்களோதவனும், பொருமை யுள்ள வனும், இதரபரங்களை ஸாதிக்கச் சக்தியற்றவனும், கல்வியில் தேர்ச்சியில்லாதவனுங் காணப்படான். அன்றியும் வ்யாகரணம் முதலிய வேதாங்கங்கள் ஆறுமறியாதவனும், சாந்த்ராயணம் முதலிய வ்ரதங்களைத் தவிருமவனும், பொன் முதலியவைகளைக் கணக்கின்றிக் கொடாதவனும், ஏதாவதொன்றி லிளைத்தவனும், மனக்கலக்கமுள்ளவனும், வ்யாதி முதலியவைகளால் பீடிக்கப்பட்டவனும், ஒருவனுயினும் கிடைப்பதரிது. புருஷர்களிலும் ஸ்த்ரீகளிலும் எவராயினுமொருவர் காங்தியின்றியும் அழகின்றியும் ராஜபக்தியின்றியு மிருப்பவராகப் புலப்படுவது மிகவு மரிதாயிருக்கும். ப்ராஹ்மணர் முதலிய நான்கு வர்ணத்திலுள்ளவர் யாவரும் தேவதைகளையும் அதிதிகளையும் பூசித்துப் பிறர் செய்த உபகாரத்தில் சிறிதும் மறப்பின்றி ஸமயத்திலுபகரித்து மிகவும் தாநசீலர்களும் சூரர்களுமாகிப் பராக்ரமம் பொருந்தி யிருப்பர்கள். அப்பட்டணத்திலுள்ள மானிடர் யாவரும் தர்மத்தையும் ஸத்யத்தையுந் தவிராமல் மிகவும் ஆயுள் வளரப்பெற்றுப் பிள்ளை பேரன்களோடும் பெண்டீர்களோடும் கூடி ஸுகமாயிருந்தனர். க்ஷத்ரியர்கள் ப்ராஹ்மணர்களைத் தமக்கு முக்யமாக வரித்து அவர்களாணைப்படி சரியாய் நடந்து வந்தனர். வைச்யர் க்ஷத்ரியர்களை யநுஸரித்திருந்தனர். சூத்ரர்கள் தந்தமது தர்மத்தைத் தவிராமல் மற்றை மூன்று வர்ணத்தவர்களுக்கும் ஸேவை செய்துகொண்டிருந்தனர். மானவர்க்கு மஹேந்த்ரன்போல மிகுந்த மதியுள்ள மநுப்ராஜாபதி முன் எப்படி யாண்டுவந்தனனோ, அப்படியே இக்ஷ்வாகு வம்சத்திற்குத் தலைவ

ஞகிய அத்தசரத சக்ரவர்த்தியால் ஆளப்பட்ட அந்நக ரம் இவ்விதமான ஸகல ஸௌபாக்யங்களும் நிறைந்து விளங்கி வந்தது. அஸ்த்ரவித்யை யெல்லா மறிந்து பிறர் அவமதித்தாற் பொறுக்க முடியாத பராக்ரமம் பெற்று நல்லொழுக்கத்துடன் கூடி சௌர்யத்தின் மிகு தியால் நெருப்புப்போல் நெருங்கக்கூடாத படைவீரர் களால் நிறைந்த அந்நகரம் சிங்கங்கள் சூழ்ந்த குகை போல் விளங்கிற்று. காம்போஜ தேசத்திலும் பாஹ் லீக தேசத்திலும் பிறந்து உச்சைச்ச்ரவமென்கிற இந் திரன் குதிரையோடொத்த உயர்ந்த குதிரைகள் அந்நக ரத்திற் கணக்கற்றிருக்கும். மதம் பிடித்து விந்யமலையிற் பிறந்தவைகளும், அப்படியே மதத்துடன்கூடி ஹிமாலய மலையிலுண்டானவைகளும், ஐராவதம் மஹாபத்மம் அஞ் ஜநம் வாமநம் என்கிற திக்கஜங்களின் குலத்திற் பிறந்த வைகளுமாகி மஹாபலம் பொருந்தி பர்வதத்தோடொத்து விளங்கும் யானைகளால் அந்நகரம் நிறைந்திருக்கும். மே லும் [1]பத்ரம் மந்த்ரம் ம்ருகம் என்கிற மூன்று ஜாதியிற் பிறந்த யானைகளும், பத்ர மந்த்ர ம்ருகம் பத்ர மந்த்ரம்

---

1 பத்ரம மந்த்ரம் ம்ருகம் என்று யானை ஜாதிகள் மூன்று. 'ஹஸ்தி நோ மந்த்ரிணோ மநுஷ்ய சேதி விஜ்ஞேயாஸ்த்ரிவிதா மஹாக' என்று ஹலாயுதநிகண்டுவிற் சொல்லப்பட்டது. அப்படியே பத்ரமந்த்ரம் பத்ரம்ருகம் ம்ருகமந்த்ரம் என்று இரண்டு ஸ்வபாவமும் பொருந் திய ஸங்கரஜாதிகள் மூன்று. பத்ர மந்த்ர ம்ருகம் என்று மூன்று ஸ்வ பாவமும் பொருந்திய ஸங்கரஜாதி யொன்று. இவைகளின் லக்ஷ ணங்கள் வைஜயந்திநிகண்டுவிற் சொல்லப்பட்டது—'அங்கப்ரத்ய ங்கஹஸ்திரத்வம் ஸங்க்ஷிப்தம் ஹஸ்திலக்ஷணம்। பத்ரத்வம் ஸ்திரதா ஸ்யைலல்யம் ஸங்க்ஷிப்தம் மந்த்ரிலக்ஷணம்॥ தநுப்ரத்யங்கஸீர்ஷஸி ப்ராயோ மநுஷ்யாணே மதஃ।ஹஸ்திமந்த்ரிணோ ஹஸ்திமநுஷ்யோ ஹஸ்தி மந்த்ரிமநுஷ்யௌ உபிசி॥ மநுஷமந்த்ராஹயோ உப்யேவமிதி ஸங்கர ஜாதயஃ' என்று.

பத்ர மருகம் மருக மந்த்ரம் என்கிற லங்கீர்ண ஜாதியிற் பிறந்த யானைகளும் எப்பொழுதும் மதித்துப் பெரிய மலைகள் நடப்பதுபோல் அங்கு என்றும் உலாவிக்கொண் டிருக்கும். இப்படி சதுரங்க பலமுள்ள அந்நகரம் தனக் குள் யாதொரு சத்ருவும் நுழையக்கூடாதபடி யிருக்கை யன்றியே, தனக்கு வெளியிலும் இரண்டியோஜனை தூரம் யாவரு மணுகவொண்ணுதபடி அயோத்யை யென்று பொருள் பொருந்திய பேருடன் விளங்கிவந்தது. யா தொரு நகரில் தசரதனென்று பேர்பெற்றஅம்மஹீபாலன் வஸித்து உலகையாண்டுவந்தனன், அந்நகரம் இவ்வாறு விளங்குவது அற்புதமோ?. அம்மஹாராஜன் தனது மிகு ந்த பராக்ரமத்தினால் பகைவரையெல்லாம் பறக்கச்செய் து அந்நகரத்தைச் சந்திரன் நக்ஷத்ர மண்டலத்தை ஆள்வதுபோல் ஆண்டுவந்தனன். இங்ஙனம் யதார்த்த நாமங்கொண்டு உரப்பான கோட்டைவாசலின் உழல்தடி களும் அமைந்து அழகான வீடுகள் நிறைந்து விளங்கப் பெற்று அநேகமாயிரம் ஜநங்களால் சூழப்பட்டு மங்கள மான அவ்வயோத்யாநகரத்தை இந்திரன் போன்ற அம் மஹீபதி பரிபாலித்துக்கொண்டு வந்தனன். ஆறுவது ஸர்க்கம் முற்றிற்று.

மந்த்ரி புரோஹிதாதி வர்ணநம்.

இக்ஷ்வாகு வம்சத்திலுதித்து மிகுந்த மதியுள்ள அம்மஹாராஜனுக்கு மந்த்ரிகள் எட்டுப்பேருண்டு. அவர் கள் ராஜகார்யங்களை ஆலோசிப்பதில் மிகுந்த வல்ல மையுள்ளவர்கள்; முகமலர்த்தி முதலியவைகளால் பிற ருடைய கருத்தை நன்றாய் அறியுந் திறமுடையவர்கள்; தமக்கு ப்ரியமான அவ்வரசனுக்கு எப்பொழுதும் ஹிதங்களைச் செய்துகொண்டு மந்த்ரிகளுக்கு வேண்டிய

குணங்களெல்லாம் அமைந்திருப்பவர்கள். த்ருஷ்டியென்றும், ஜயந்தனென்றும், ஜயனென்றும், ஸித்தார்த்தனென்றும், அர்த்தஸாதகனென்றும், அசோகனென்றும், மந்த்ரபாலனென்றும் அவர்கள் வழங்கப்பட்டு வருவார்கள். எட்டாவது மந்த்ரி ஸுமந்த்ரனென்பவன். அவ்வெண்மர்களும் பெரும்புகழ் பெற்று வல்லவனாகிய அம்மன்னவனுக்கு எவ்விதத்திலும் த்ரோஹம் செய்யாமல் தூயமனத்தராகி ராஜகார்யங்களை விருப்பத்துடன் நிறைவேற்றிக்கொண்டிருந்தனர். அவ்வரசனுக்கு வஸிஷ்டனென்றும் வாமதேவனென்றும் இரண்டு மஹர்ஷிகள் புரோஹிதரில் தலைவராயிருந்தனர். அப்படியே ஜாபாலிமுதலிய [1]மற்றுஞ் சிலர் மந்த்ரிகளாகவும் புரோஹிதர்களாகவு மிருந்துவந்தனர்.

இவர்கள் அனைவரும் கல்விகளெல்லாம் கற்றறிந்து வணக்கத்துடன் கூடி தகாச் செய்கைகளில் மிகவும் வெட்கித்திருப்பர்கள். மேலும் அவர்கள் எல்லாவற்றிலும் வல்லமையுள்ளவர்கள்; ஐம்புலன்களையும் வென்று அவைகளை இஷ்டப்படி செலுத்துந் திறமுடையவர்கள்; செல்வம் நிறைந்தவர்கள்; மிகுந்த மதியுடையவர்கள்; விசேஷமாக அரசர்களுக்கு வேண்டிய நீதிநெறியெல்லாம் நன்றாய்க் கற்றறிந்தவர்கள்; யாவராலும் அசைக்கமுடியாத பராக்ரமம் பெற்று விளங்குந் தன்மையர்; ராஜகார்யங்களை யாலோசிக்குந் திறமையில் மிகவும்புகழ் பெற்றவர்கள்; அவைகளில் எப்பொழுதுஞ் சோர்வின்றி ஊக்கத்துடனிருப்பவர்கள்; சொன்னபடி தவறுமற் செய்

---

1 (மற்றுஞ்சிலர்) 'ஸுயஜ்ஞோ உப்யஸ ஜாவாலிஸ காஸ்யபோ உப்யஸ மௌதமஸ। மார்கண்டேயஸ்து தீர்காயுஸ்தஸ்ய காத்யாயநோமுநிஸ॥ ஏதைர் வ்ரஹ்மர்ஷி ஸிர்கித்யமந்த்ரிபிர்விஜஸ்தஸ்ய பௌர்வகாஸ' என்று கண்டுகொள்வது.

யுந்தன்மையர்; யாவரையும் வசப்படுத்தவல்ல தேஜஸ்ஸும் பொறுமையு மமைந்து புகழ்பெற்றவர்கள்; எப்பொழுதும் புன்னகையோடு அழகாய்ப்பேசுகின்றவர்கள். அவர்கள் கோபத்தைப்பற்றியும் காமத்தைப்பற்றியும் பொருளைப்பற்றியும் என்றும் பொய்ம்மொழி பேசார். தமது தேசத்திலும் பிறருடைய தேசத்திலும் நடந்தவையனைத்திலும், அப்படியே தற்காலம் நடக்குமவைகளிலும், அன்றியே நடக்கப்போகின்றவையனைத்திலும் சாரர்கள் மூலமாக அவர்களறியாதது ஒன்றுமில்லை. அவர்கள் வ்யவஹாரங்களெல்லாவற்றிலும் வல்லமையுள்ளவர்களாஸ்நேஹத்தில் நன்றாய்ப் பரீக்ஷிக்கப்பட்டு நிலைகின்றவர்கள்; ஒருவன் அபராதஞ் செய்தால் அவன் தமது புதல்வனேயாயினுந் தண்டிக்கவேண்டிய காலம் நேர்ந்தபோது அவனைத் தண்டிக்கத் தவிரார்; பொக்கசங்களில் பணத்தை நிறைப்பதிலும், பணம்முதலியவைகளால் சதுரங்க பலங்களை மேல்மேலென வ்ருத்தி செய்வதிலும் ஜாகரூகர்களாயிருப்பவர்கள். தமக்குப் பகைவனாயிருப்பினுங் குற்றமின்றி யிருப்பவனை வருத்தப்படுத்தார்; மேலும் அவர்கள் பகைவரை யொழிக்கவல்ல வீரர்கள்; வெல்லுவரென்று தோன்றும்படி ஓழியாத உத்ஸாஹமுடையவர்கள்; நீதிநெறி தவறாது நடக்குந்தன்மையர்; தம்தேசத்தில் வஸிக்கும் நல்லொழுக்கமுள்ளஸாதுஜநங்களைப் பொறுமையுடன் பாதுகாப்பவர்கள்; அந்தணர்களையும் அரசர்களையும் அபராதமின்றி வருத்தச்செய்யார். அவர்கள் எவனையினும் குற்றஞ் செய்தால் அதினேற்றக் குறைவுகளை நன்றாக ஆராய்ந்து தேசத்தையுங் காலத்தையும் வயதையும் அநுஸரித்துத் தக்கபடிமெதுவாகவும் கடிநமாகவுந் தண்டித்துப் பொக்கசத்தை நிறைத்துவந்தனர். அம்மந்திரிகள் அனைவரும் நல்லொழுக்கத்

துடன் ஒரே புத்திகொண்டு ராஜ்யதந்த்ரங்களை விசாரித்து நடத்திவருகையில் அப்பட்டணத்திலும், அன்றியே அத்தேசம் முழுதிலும் பொய்யுரைப்பவனும் துஷ்டனும் பரதாரங்களில் விருப்பங்கொள்பவனும் ஒருவனுவது எங்குமுண்டாகவில்லை. அப்பட்டணமும் அத்தேசமனைத்தும், யாதொரு வருத்தமுமின்றி நிர்மலமாயிருந்தன. (அதிலுள்ள ஜனங்கள் யாவரும் அக்யாயத்திலும் அதர்மத்திலும் பயந்து அவ்வழியிலணுகாமல் நல்லொழுக்கத்துடன் நடந்துவந்தனர்.) பின்னும் அம்மந்த்ரிகள் யாவரும் வெளுத்த வஸ்த்ரங்களையுடித்து நன்றாய் அலங்கரித்துக்கொண்டு நல்லியற்கையுடனிருப்பவர்கள்; தமதுமன்னவனுக்கு நன்மை செய்யும்பொருட்டு எப்பொழுதும் நீதிநெறியென்னுங் கண்கொண்டு விழித்திருப்பவர்கள்; குணகுணங்களை யறியும் வல்லமையமைந்தவர்கள்; குருவினிடத்திலும் மன்னவனிடத்திலும் பெருமை பெற்றவர்கள்; பெரியோரிடத்தில் தோஷத்தைப் பாராட்டாமல் குணத்தையே காணுந்தன்மையர்; அம்மந்த்ரிகள் பராக்ரமத்தாற் புகழ்கொண்டு எல்லாரிவற்றையும் நிச்சயிக்கவல்ல தமது புத்தி விசேஷத்தினால் தமது தேசமென்பதின்றிப் பிறர் தேசத்திலும் மிகவும் மேன்மைபெற்று விளங்கிவந்தனர். அவர்களுக்கு ஸந்தி விக்ரஹம் முதலிய ராஜோபாய தத்த்வங்கள் அனைத்துந்தெரியும். அவர்கள் இயற்கையாகவே செல்வ மமைந்தவர்கள்; (ஆகையால் பொருளாசையைப்பற்றி ஒன்றை ஒன்றுகச் செய்பவரல்லர்.) இவ்வளவேயன்றி அம்மந்த்ரிகள் ராஜகார்யங்களை யாலோசித்து ரஹஸ்யமாய் வெளியிடாது மறைத்து நடத்த வல்லவர்கள். ஸூக்ஷ்ம விஷயங்களைவிசாரிப்பதிலும் மிகுந்த புத்தியின் தோற்றமுடையவர்கள். நீதிவழிதவறுமல் ப்ரஜைகளைப்

பாதுகாக்கும் முறைகளெல்லாம் நன்றாக அறிந்த வர்கள். அம்மந்திரிகள் அவ்வரசனுக்கு நன்மைகளை இனிதாக உரைத்துக்கொண்டிருந்தனர்.

இப்படிப்பட்ட குணங்களையுடைய மந்திரிகளோடு கூடி ராஜாவாகிய தசரதன் வருத்தமொன்றுமின்றி சாரர் களால் ஸகல வ்ருத்தாந்தங்களையும் தெரிந்துகொண்டு ப்ர ஜைகளைத் தர்மங்கொண்டு களிப்பித்து அவர்களுடைய அநிஷ்டங்களைப்போக்கி இஷ்டங்களைச்செய்து பரிபாலி த்து அதர்மத்தை நீக்கித் தன் குணங்களால் மூவுலகிலும் புகழ்பெற்று தாநசீலனாகி ஸத்யத்தவறாமல் தரணிபூ வது மாண்டுகொண்டு அங்ஙகரத்தில் வஸித்திருந்தனன். அவன் தனக்குமேலாகியும் ஒப்பாகியுமுள்ள பகைவனெரு வனையுங் காணவில்லை. ஏனெனில்-அவன் மிகுந்த கண் பிர்களுடையவன். பக்கத்துத் தேசத்தரசர்கள் யாவரும் அவனது காற்கடையில் வணங்கி நிற்பார்கள். ஆகையால் அவன் பராக்ரமத்தைக்கண்டு பகைவர் அனைவரும் பறந் தோடி யுருமாய்ந்தனர். அத்தன்மையனாகிய அம்மன்ன னுக்கு ஒப்பும் மேலும் உண்டாவதெங்ஙனே? ஆகையால் அவ்வரசன் ஸ்வர்க்கத்தைத் தேவேந்திரன் ஆள்வது போல உலகு முழுது மாண்டுவந்தனன். இப்படி தன் கார்யங்களை யாலோசித்துத் தனக்கு நன்மை செய்வதில் ஊக்கமுற்றுத் தன்னிடம் அன்பு கூர்ந்து அறிவுடை யோர்களாகி வல்லவர்களுமாகிய அம்மந்திரிகளால் சூழப் பெற்று, தேஜோமயமான கிரணங்களோடு உதித்த ஸூரி யன்போல அம்மஹீபாலன் ஒளிபெற்று விளங்கினன்.

ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் புத்ரகாமேஷ்டி செய்ய முயன்றது.

இங்ஙனம் மஹிமை பொருந்தி, தர்மங்களெல்லாமறிந்து, ஆழ்ந்த மனமுடைய அம்மன்னன் தனக்குப் புத்திரனுண்டாகவேண்டிவெகுகாலாகத் தவஞ்செய்துகொண்டிருப்பினும் வம்சத்தை விருத்தி செய்யும் புதல்வனுண்டாகவில்லை. அதற்கு அம்மஹாமதியான மன்னவன் சிந்தித்துக்கொண்டிருக்கையில் 'பிள்ளை பிறக்கும்பொருட்டு யான் ஏன் அச்வமேதயாகஞ் செய்யலாகாது' என்னும் ஓரெண்ணமுண்டாயிற்று. அவ்வளவில் மிகுந்த மதியும் சிறந்த தர்மமுமமைந்த அம்மஹீபதி மிகவும் புத்திசாலிகளான தனது மந்திரிகள் அனைவருடன் கலந்து ஆலோசித்து 'யாகஞ் செய்யவேண்டும்' என்று கன்ருக மனத்தில் நிச்சயித்துக்கொண்டு மந்திரிகளில் தலைவனாகிய ஸுமந்த்ரனைப் பார்த்து 'மந்த்ரீ! நீ போய் எனது குருக்களையும் புரோஹிதர்கள் யாவரையும் கூடிக அழைத்துக்கொண்டு வருவாய்' என்று மொழிந்தனன். பின்பு ஸுமந்த்ரன் உடனே வேகமாகச்சென்று வேதத்தின் கரையறிந்த ஸுயஜ்வன், வாமதேவன், ஜாபாலி, காச்யபன், புரோஹிதனாகிய வஸிஷ்டன், மற்றுமுள்ள உயர்ந்த அந்தணர்கள் ஆகிய அவர்கள் அனைவரையும் கூட்டி அரசன் மாளிகைக்கு அழைத்துக்கொண்டு வந்தனன். தர்மஸ்வபாவனாகிய அத்தசரத மஹாராஜன் அப்பொழுது அவர்களெல்லோரையும் பூசித்து அவர்களைப் பார்த்து, 'பெரியீர்காள்! பிள்ளை பெறவேண்டி எவ்வளவும் புலம்புகின்ற எனக்கு யாதொரு ஸுகமுமில்லை; அதைப்பற்றி அச்வமேதயாகஞ் செய்யவேண்டுமென்று எனக்கு ஓரெண்ணமுண்டாயிருக்கின்றது. ஆகையால் யான் சாஸ்த்ரப்படி யாகஞ்செய்ய விருப்பங்கொண்டிருக்கின்றேன். யான் விரும்புகிற இந்த யாகத்தை எப்படி

செய்து பெறலாம்?. இவ்விஷயத்தில் உபாயஞ் சொல்ல வேண்டும்' என்று தர்மமும் அர்த்தமும் நிறைந்து இனியதுமான இம்மொழியைக் கூறினன். பிறகு வஸிஷ்டன் முதலிய அந்தணர்கள் யாவரும் அரசன்தானே மொழிந்த அவ்வசநத்தைக்கேட்டு 'நல்லது நல்லது' என்று ஸந்தோஷித்துத் தசரதனைப்பார்த்து மிகுந்த களிப்புடன் 'யாகத்துக்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சேர்ப்பாயாக. பூமியைச் சுற்றும்பொருட்டு யாகக்குதிரையை விடுவாயாக. பிள்ளை பெறவேண்டியதற்காக உனக்கு இந்தத் தர்மபுத்தியுண்டானபடியால் எவ்விதத்திலும் நீ வேண்டின புதல்வர்களைப்பெறுவாய்' என்று மொழிந்தனர்.

அரசனும் அவ்வந்தணர் மொழியைக்கேட்டு மகிழ்ச்சிகொண்டு அம்மகிழ்ச்சியால் கண்கள் மலர்ந்து மந்த்ரிகளைப்பார்த்து 'எனது குருக்கள் சொன்ன சொற்படி ஸகல ஸம்பாரங்களையும் சேர்ப்பீர்களாக. காக்கத் தக்கவர்களைக் காவல் வைத்து அத்வர்யுமுதலிய உபாத்யாயர்களுடன் அச்வத்தை விடுவீர்களாக. ஸரயூநதிக்கு வடகரையில் யாகசாலையை யேற்படுத்துவீர்களாக. க்ரமந் தவறாமல் சாஸ்த்ரப்படி சாந்திகளையும் அதிகமாக வளர்த்துவீர்களாக. எல்லாவற்றிலும் மேலான இந்த் யாகத்தில் வருத்தத்தை விளைவிப்பதான அபசாரம் ஏதும் நேரிடாதபக்ஷத்தில் இந்த யாகத்தை எல்லா அரசர்களும் செய்வார்கள். இந்த யாகத்தின் ஸ்வரூபத்தையுணர்ந்த ப்ரஹ்ம ராக்ஷஸர்கள் இதில் கெடுதி செய்ய அவஸரந் தேடிக்கொண்டிருப்பர்களன்றோ? ஏதேனுங் கெடுதி நேரிட்டு அந்த ப்ரஹ்ம ராக்ஷஸர் புகுந்து யாகத்தை யழிப்பார்களாயின், உடனே யஜமாநன் நசித்துப்போவான். ஆகையால் யாகத்தை நடத்துவதில் வல்லமையுள்ள நீங்கள் இந்தயாகம் சாஸ்த்

ரந்தவரூது முடியும்படி யத்நஞ் செய்யவேண்டும்' என்ற னன். மந்த்ரிகளெல்லோரும் அம்மஹாராஜன் மொழிந்த சொல்லைக்கேட்டு 'தேவன் ஆணையிட்டபடி செய்கின் றோம்' என்று சொல்லி அரசன் அவ்வாறு நினைவிட்ட தைப்பற்றி மிகவும் ஸந்தோஷித்தனர். அவ்வரசனுக்கு ஆசீர்வாதம் முதலியவைகளால் மங்கலாபிவ்ருத்தியைச் செய்யுந் தர்ம ஸ்வபாவர்களாகிய அவ்வந்தணர்கள் யாவ ரும் 'அப்படியே செய்கிறோம்' என்று சொல்லி அநுமதி பெற்றுக்கொண்டு அவரவர்கள் வந்தவழியே சென்றனர். ராஜன் ப்ராஹ்மணர்களை வீட்டுக்கு அனுப்பி, மந்த்ரிக ளைப் பார்த்து 'ஓ மந்த்ரிகளே! புரோஹிதர்கள் சொல்லி யபடி வேண்டிய ஸம்பாரங்களைச் சேர்த்து இந்த யாகத் தைச் சாஸ்த்ரந் தவறாது நடத்தவேண்டும். இந்தக் கார் யங்களில் நீங்கள் வல்லவர்கள்' என்று இவ்வாறுரைத்து அருகிலிருந்த மந்த்ரிகளை யனுப்பிவிட்டு அந்தக்களிப் பினால் உடம்பெல்லாம் மேனியிட்டு விளங்கித் தனது மா ளிகையைச் சேர்ந்தனன். அப்படி அவ்வரசன் சென்று மனத்துக்கு மிகவும் இனியராகிய கௌஸல்யை முதலிய தன் பத்நிகளைப் பார்த்து 'நான் பிள்ளையைப் பெறவே ண்டி யாகஞ் செய்யப்போகின்றேன். நீங்கள் தீக்ஷை கொள்ளவேண்டும்' என்றுரைத்தனன். அரசன் ஸந் தோஷத்துடன் உரைத்த அழகான அவ்வார்த்தை யைக் கேட்டு இயற்கையாகவே ஒளிபெற்ற முகமுடைய அம்மாதரது முகமெல்லாம் வஸந்தகாலத்தில் மலர்ந்த தாமரை மலர்போல் மிகவும் ஒளிபெற்று விளங்கி நின் றன. எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ருச்யச்ருங்க மஹர்ஷியின் சரித்ரம்.

அரசன் புதல்வனுக்காக அச்வமேதஞ் செய்யவேண்டு மென்றிங்ஙனமுரைத்த வார்த்தையைக் கேட்டு ஸாரதியாகிய ஸுமந்த்ரன் அவ்வரசனைப் பார்த்து, ஏகாந்தத்தில் இவ்வாறு மொழிந்தனன். 'மஹாராஜனே! இவ்வச்வமேதஞ் செய்வதைப் பற்றி வஸிஷ்டர் முதலாகிய ருத்விக்குகள் உமக்கு உபதேசித்தார்களன்றோ;' நான் இதை இதிஹாஸமாக முன்னமே கேட்டிருக்கின்றேன். மஹிமைகளெல்லாமமைந்த ஸநத்குமாரர் உமக்குப் பிள்ளைபிறக்கும் விதத்தைக்குறித்து நடக்கும் விருத்தாந்தங்களை ரிஷிகளின் முன்னிலையில் முன்னமே சொல்லியிருந்தனர். அதைச் சொல்லுகிறேன், கேட்பீராக. காச்யபனுக்கு விபண்டகனென்று பேர்பெற்ற ஓர் புத்திரன் உண்டு. அவனுக்கு ருச்யச்ருங்கனென்றி எங்கும் ப்ரஸித்திபெற்ற புதல்வன் உண்டாகப்போகிறான். அவன் காட்டிலேயே நித்யமாய் வளர்ந்து இடைவீடின்றி பிதாவுக்குப் பணிவிடை செய்துகொண்டு முனியாய் அக்கானகத்திலேயே திரிந்துகொண்டிருப்பான். ஆகையால் அவ்வந்தணர்தலைவன் வநந்தவிர மற்றைக்கிராமங்களையும் கிராமத்திலுள்ளவர்களையும் அறியாதிருப்பான். பெருந்தன்மையுடைய அம்முனி இவ்வண்ணஞ் செய்துகொண்டிருக்கையில், ப்ரஹ்மசர்யத்துக்குப் பங்கம் வந்து இல்லறத்துக்கு வருவான். [1] ஆகையால் அவனுடைய ப்ரஹ்மசர்யம் இரண்டு வகைப்பட்டிருக்கும்.

---

1 அதாவது-மான்தோலை உடுத்திக்கொண்டு பலாசதண்டந்தரித்து மாணாகரஞ்செய்து குருவின் நியமநப்படியிருந்து வேதமோதுவதும், இல்லறம் புகுந்தபின்னும் ருதுகாலங்களில் மனைவியிடஞ் சேர்ந்து மற்றைக்காலங்களில் சோதிருப்பது மென்று ஸ்மிருதிகர்த்தாக்களாகிய அந்தணர்களால் சொல்லப்பட்டு உலகில் வழங்கிவரும் இரண்டு வகைப்பட்ட ப்ரஹ்மசர்யமும் அம்முனியிடம் விளங்கி வருமென்றறிக.

அவன் அக்கிஹோத்ரஞ் செய்துகொண்டு மிகவும் கீர்த்திபெற்ற தனது பிதாவின் சுச்ரூஷையில் ஊக்கத்துடன் முதல் சொல்லப்பட்ட ப்ரஹ்மசர்யத்தில் இருக்கையில் சில காலம் செல்லும். அவ்வண்ணம் அவன் இருந்து வருங்காலத்தில் பராக்ரமம் பொருந்தி மஹாபலமுள்ள ரோமபாத னென்பவன் அங்கதேசத்துக்கராசனாகிப் புகழ்பெற்று விளங்கிவரப்போகின்றன். அம்மன்னவன் நீதி தெறி தவறுதலால் வெகு காலம் நிலை நின்று மிகவுந்தாருணமாகி அவனது ராஜ்யமெங்கும் பாரத்து ஸகல பூதங்களுக்கும் மிக்க பயங்கரமாகி மழையின்மையாதுண்டாகுங் கருப்பு நேரிடும். அப்படி கருப்புண்டாகையில் மன்னவனும் மிக்கவருத்தங்கொண்டு சாஸ்த்ரங்களெல்லாங் கேட்டித்தேறின ப்ராஹ்மணர்களை வரவழைத்து 'பெரியீர்காள்! நீங்கள் தர்மங்களெல்லாங் கேட்டறிந்தவர்கள்; உலகத்திலுள்ள நடத்தைகளெல்லாம் கன்ரூய் உணர்ந்தவர்கள். ஆகையால் உங்களைவேண்டிக் கேட்கின்றேன். மழையின்மையாகிய இக்கருப்புக்கு மூலமான எனது பாபத்துக்கு சாந்தியுண்டாகும்படி அதற்கு வேண்டிய நியமங்களை எப்படி அநுஷ்டிக்க வேண்டுமோ, அதை எனக்குத்தெரிவிக்க வேண்டும்' என்று விணவப்போகின்றனன். வேதங்களின் கரையைக்கண்டவர்களாகிய அவ்வந்தணர்களும் அம்மன்னனைப் பார்த்து 'ஓரராஜனே! விபண்டக முனியின் பிள்ளையாகிய ருச்யச்ருங்க மாமுனியை எவ்விதத்திலாவது இங்கு வரச்செய்வீராக வரவழைத்து அம்முனியை கன்ரூப்பூசித்து உமது கன்னிகையாகிய சாந்தையை விசாரமின்றி விதிப்படி விவாகஞ் செய்துகொடுப்பீராக' என்று மொழியப்போகின்றனர். அரசனும் அவர்களது மொழியைக் கேட்டு ப்ரஹ்மசர்யந்தவரூதிருக்கும் அம்முனியை

இங்கு வரவழைக்கும் வழியேதோ வென்று சிந்தித்து மிகுந்த மதியுடையவனுகையால் மந்திரிகளுடன் கலந்து 'ப்ராஹ்மணனே ப்ராஹ்மணனை யறிவான்' என்று நிச்சயித்துப் புரோஹிதர்களையும் மந்திரிகளையும் ஸத்கரித்து அங்கிருந்து ருச்யச்ருங்கரை யழைத்துக்கொண்டிவரும் படி யனுப்பப்போகின்றனன். அவர்களும் மன்னவன் வார்த்தையைக் கேட்டு மனத்தில் வருத்தமுற்றுத் தலைவணங்கிக்கொண்டி 'ராஜனே! விபண்டகரிஷிக்கு நாங்கள் பயப்படுகின்றோம். ஆகையால் நாங்கள் போகமுடியாது. ஆயினும் அம்முனிவரை வரவழைக்கும் உபாயங்களைவிசாரித்துச் சொல்லுகிறோம்' என்று அரசனுக்கு நல்வார்த்தை சொல்லுவர். பின்பு அவர்கள் அம்முனிவனை யழைத்துக்கொண்டி வரத்தக்க உபாயங்களை ஆலோசித்து 'மன்னனே! நாங்கள் இவ்வுபாயத்தால் அவ்வந்தணரை வரவழைப்போம். இதனல் அவரது ப்ரஹ்மசர்யத்துக்கு யாதொரு தோஷமும் உண்டாகாது. விபண்டகரைப்பற்றியும் யாதொரு பயமும் நேரிடாது. இம்மழையின்மையாலுண்டான கருப்பினின்று பயமும் நீங்கிப்போகும்' என்று அவ்வரசனுக்குச் சொல்லப் போகின்றனர். இப்படிக்கு ஸநத்குமாரர் மொழிந்தனர். அப்படியே அங்கராஜனும் தாஸிகளைக்கொண்டி அந்த ரிஷிகுமாரராகிய ருச்யச்ருங்கரை வரவழைக்க, மேகமும் மழையைப் பொழிந்தது. சாந்தையை அம்முனிவர்க்கு விவாகஞ்செய்துதந்தனன். உமது மறுமகனுகிய அந்தருச்யச்ருங்க மாமுனிவர் உமக்குப் பிள்ளைபிறக்கச் செய்யப்போகின்றார். யான் சொன்ன திவ்வளவும் ஸநத்குமாரர் சொன்னகதை' என்று மந்திரியாகிய ஸுமந்திரன் சொல்ல, தசரதன் மிகவும் ஆநந்தங்கொண்டி அவனைப் பார்த்து 'மந்திரீ! ருச்யச்ருங்கரை யழைத்துவந்த விதமெல்லாம் ஸவிஸ்தர

மாகச் சொல்லவேண்டும்' என்று விஞ்ஞாபனம் செய்தான். ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

வாரஸ்த்ரீகள் ருச்யச்ருங்க முனியை வஞ்சித்து அழைத்துக்கொண்டு வந்தது.

இங்ஙனம் மன்னவனால் விஞ்ஞாபிக்கப்பட்ட ஸுமந்திரன் இவ்வண்ணம் சொல்லத் தொடங்கினான். 'ஓ தரணியாளனே! மந்திரிகளைக்கொண்டு அவ்வங்கதேசத்தரசன் ருச்யச்ருங்கனென்றும் அவ்வைதிகரை அழைத்துக்கொண்டு வந்தவிதங்களையும். அதையெல்லாம் ஸவிஸ்தாரமாகச் சொல்லுகின்றேன். புரோஹிதர் மந்திரிகளுடன் கலந்துரோமபாதரைப்பார்த்து இவ்வாறு மொழிந்தனர். 'ராஜனே! நாங்கள் அந்த ருச்யச்ருங்கரை யழைத்துக்கொண்டுவர அபாயமின்றிய ஒருபாயம் ஆலோசித்திருக்கின்றனம். ருச்யச்ருங்கர் எப்பொழுதுங் காட்டிலேயே திரிந்துகொண்டிருப்பவர்; எப்பொழுதும் தவஞ்செய்வதும், வேதமோதுவதுமே தொழிலாயிருக்குந்தன்மையர். ஆகையால் புராணங்களையும் இதிஹாஸங்களையுங்கூட அவர் கேட்டறியார். ஸ்த்ரீகளென்றால் அவர்கள் யாவரென்று நேரிலாயினும் புராணதிஹாஸமாயினும் அவர் அறியாதிருப்பவர்; விஷயஸுகங்களில் ஒன்றையுமுணர்ந்திலர். ரூபம் ரஸம் முதலிய இந்த்ரியவிஷயங்கள்யாவர்க்கும் மிக்கஇனியவையாகி மனிதர்களின்மனத்தைக் கலங்கச்செய்து இழுக்கவல்லவையன்றோ?. இவ்விஷயங்களைக்கொண்டு அவ்வண்ணம் இருக்கும் அவ்வைதிகரை வசப்படுத்தி இந்தநம்பட்டணத்துக்குஅழைத்துக்கொண்டு வரவேண்டும். நாங்கள் சொல்லும் இவ்வுபாயத்தை நீர் சீக்கிரமாய் ஆலோசித்து நிச்சயஞ்செய்துகொண்டு சொல்லவேண்டும். நல்லழகுபொருந்தி நன்றாய் அலங்கரித்துக்

கொண்டு காண்போர் மனத்தை மயக்கவல்ல வேசிமாதரை அந்த ருச்யச்ருங்கரிடம் அனுப்பவேண்டும். அவர்கள் அங்கே சென்று அவரிடம் ஸத்காரம் பெற்றுப் பலவிதமான உபாயங்களால் வஞ்சித்து, அவரைக் கூடவே அழைத்துக் கொண்டுவர வல்லவர்கள்' என்றனர். இங்ஙனம் புரோஹிதர் சொல்ல, அரசனும் 'அப்படியே ஆகட்டும்' என்று அநுமதி கொடுத்தனன். புரோஹிதரும் மந்திரிகளுக்கு அப்படியே செய்யும்படி உத்தரவளித்தனர். மந்திரிகளும் அப்பொழுது புரோஹிதர் சொன்னபடி மிகவும் அழகுள்ள தாஸிகளை நன்றாய் அலங்கரிக்கச் செய்து ருச்யச்ருங்கரிடம்போய் அவரை வசப்படுத்தி அழைத்துக்கொண்டு வரும்படி யனுப்பினர். தாஸிகளில் தலைவராகி அழகாலும் ஆடையாபரணங்களாலும் மேன்மை பெற்ற அம்மாதரும் மந்திரிகள் சொல்லைக்கேட்டு அப்படியே செய்வதாக ருச்யச்ருங்கரிருக்கும் அம்மஹாவநத்திற்குள்ளே நுழைந்தனர். இப்படி இவ்வநத்திற்குள் நுழைந்து அவருடைய ஆச்ரமத்திற்கருகில் இருந்து அவரைக் காணத்தக்க ப்ரயத்நங்களைச் செய்யக் கலக்து ஆலோசித்தனர். ஏனெனில், அவர் ரிஷிகுமாரராகிக் கானகத்திலேயே திரிந்து கொண்டிருப்பவராகையால் நகரத்தாருடைய சம்தமறியார். ஐம்புலன்களையும் அடியுடன் வென்றவராகையால் எளிதில் வசப்படுத்தக் கூடியவரல்லர்; மேலும் எப்பொழுதும் ஆச்ரமத்திலேயே யிருப்பவராகையரல் போய்ப் பார்க்கவும் நேரிடாது. அப்படிப்பட்டவரைத் தகுந்தபடி பார்ப்பது துர்லபமாகையால் அதற்குத் தக்க யத்நங்களை அவர்கள் ஆலோசிக்கவேண்டி வந்தது. அவரோ என்றால் எப்பொழுதும் பிதாவுக்கு சுச்ரூஷை செய்துகொண்டு அதனால் மிகவும் த்ருப்தியடைந்து மற்றொன்

றையும் வேண்டாமல் ஆச்ரமத்தை விட்டு வெளியில் புறப் படாமல் இருந்தனர். இவ்வளவேயன்றி அவர் பிறந்தது முதலாகத் தவத்தில் மிகவும் ஊக்கமுற்றிருப்பவராகை யால் ஸ்த்ரீகளாயாவது புருஷர்களாயாவது பார்த்திருந்த வரன்று. நகரங்களிலாவது க்ராமங்களிலாவது உண்டா கும் பதார்த்தங்கள் யாதொன்றையும் கண்டறியார். இப் படியிருக்க, சிலநாள் கழிந்தபின்பு ஒருகால் அந்தவிபண் டகமுநிகுமாரராகிய ருச்யச்ருங்கர் தைவாதீநமாக அந் தத் தாவிகளிருக்குமிடத்தில் வந்து அம்மாதரசிகளைப் பார்த்தனர். அற்புதமான வேஷம்பூண்ட அம்மதிமுகம டந்தையர்யாவரும் இனிதான குரலுடன் கானஞ்செய்து கொண்டு அந்தரிக்ஷகுமாரருகில் வந்து 'ஓ அந்தணரே! கீர்யார்?. ஜகங்களின்றிப் பயங்கரமான இக்காளகத்தில் ஏன் இருக்கின்றீர். மேலும்தனியாக இங்கே திரிவதேன்?. இதை நாங்கள் அறிய விரும்புகின்றோம். இதை எங்க ளுக்குச் சொல்லவேண்டும்' என்று விஞ்வினர். மிகவும் ஆசைப்படவேண்டி அருமையான ரூபமுடைய அம்மாத ரைப்போன்ற உருவங்களை அவர் அக்கானகத்திலெங் கும் கண்டதில்லையாகையால் அவர்களிடத்தில் அவருக்கு ஸ்நேஹம் பிறந்து தன்து தகப்பன்பேர் முதலியவைகளை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்கிற எண்ண முண்டாயிற்று. ஆகையால் அவர் அம்மாதர்களைப் பார்த்து எங்களுக்கு விபண்டகமுனிவர் தகப்பனார். அவ ருக்கு நான் ஒளரஸகுமாரன். எனக்கு ருச்யச்ருங்க னென்றுபேர் இக்கானகமெங்கும் விளங்கும். அப்படியே யான் தவஞ்செய்வதும் இங்கு யாவரும் அறிவார். ஓ அழ கிய காட்சியுடையீர்களே! இக்கானகத்தில் அருகில்தா னே எங்களாச்ரமம் இருக்கின்றது. உங்களுக்கு யாவர்க்

குவிதியின்படி பூஜை செய்வேன், வாருங்கள்' என்று மொழிந்தனர்.

பின்பு அந்த ரிஷி குமாரர் வார்த்தையைக் கேட்டு அவர்கள் அனைவர்க்கும் அவரது ஆச்ரமத்தைக் காண வேணுமென்று புத்தி பிறந்து யாவரும் அவரோடுகூடி அங்கே சென்றனர். அவரும் அங்கு வந்த அம்மாதரனை வர்க்கும் அர்க்ய பாத்யங்களைக்கொடித்துக் காய்கிழங்குக ளைத் தந்து பூஜிக்க, அவர்களும் அந்தப்பூசையையெல் லாம் அங்கீகரித்து அவருடன் கலந்து பேசவேணுமென் று மனவிருப்பத்துடனிருந்த போதிலும் விபண்டக ரிஷி யிடம் பயந்து கடுகப்போகவேணு மென்று எண்ணங்கொகா ண்டு 'ஓ ப்ராம்ஹணேத்தமரே! கர்ங்கள் கொடுக்கும்இப் பழங்கள் மிகவும் மேலானவை. ஆகையால் இவைகளை வாங்கிக் கொள்ளவேணும். உமக்குச் சுப முண்டாகும். ஆலஸ்யஞ் செய்யாமல் இவைகளைச் சாப்பிட்டருள்வீ ராக' என்றனர். இங்ஙனஞ் சொல்லிய பின்பு அவர் கள் யாவரும் அவரை அழுந்தக்கட்டி ஆலிங்கனஞ் செய்து மிகுந்த ஸந்தோஷத்துடன் அவருக்குக்குழக்கட் டைகளையும் மற்றும் பலவகைப் பண்டங்களையும் வெகுவா கத் தந்தனர். அப்படி தாஸிகள் ஆலிங்கனஞ் செய்யி னும் மனக் கலக்கமற்ற மஹாதேஜஸ்வியான அவ்வை திகர் எப்பொழுதுங் காட்டிலேயே வஸித்திருப்பவரா கையால் எந்நாளும் சாப்பிட்டுப் பார்த்தறியாத அப்பண் டங்களை வாங்கிக்கொண்டு சாப்பிட்டு 'இவை காட் டில் நித்யவாஸஞ் செய்பவர் ஒருநாளும் சாப்பிட்டறியாத பழங்கள்' என்று நினைத்தனர். அப்பொழுது அந்தவாச ஸ்திரீகள் யாவரும் அவரைப் பார்த்து 'எங்களுக்கு ஓர் வ்ரதம் செய்யவேண்டியிருக்கின்றது. ஆகையால் நாங்கள் போய்வருகின்றோம்' என்று ஓர் வ்யாஜம் சொல்லி அவரு

டைய பிதாவாகிய விபண்டக ரிஷிக்குப் பயந்து அவ்விடத்தை விட்டுச் சென்றனர். அவர்கள் எல்லோரும் போனபின்பு காச்யபராகிய விபண்டக ரிஷியின் குமாரான ருச்யச்ருங்கர் மனங் குதிரப்பெருமல் கலங்கி ஓரிடத்தில் கிஞ்சி கொள்ளாமல் திரிந்தலைந்து மற்றை நாள், நன்றாக அலங்காரஞ் செய்து கொண்டு மனத்துக் கினியரூபத்துடன்விளங்கிய அவ்வேசிமாதர்களை யாதோரிடத்தில் கண்டனரோ; அவ்விடத்தேறச் சென்றனர். அவர் ப்ரஹ்மச்ர்யந்தவறாதிருப்பவராயினும் அவர்கள் மாயையில் அகப்பட்டு மனக்கலக்க முற்றனர். இப்படி அதீத அந்தணராகிய ருச்யச்ருங்கர் வந்து கொண்டிருக்கையில் அத்தாஸிகள் யாவரும் பார்த்தவுடனே மனக்களிப்புற்று அவரருகேவந்து 'ஓ நல்லியற்கையுடையவரே! எங்களுடைய ஆச்ரமத்துக்கு வரவேண்டும். அது எங்களுடைய ஸ்வதேசம். ஆகையால் அங்கும் இந்த காய் கிழங்கு பூதலிய ஸத்காரஞ் செய்வது இதைவிட மேலாகவே கடக்கும்' என்றனர். இப்படி அவர்களெல்லோரும் ஒன்றாகச் சொன்ன அழகான வார்த்தையைக் கேட்டு அவரும் அங்குப்போக எண்ணங் கொண்டனர். அவர்களும் அவரை அழைத்துக்கொண்டு போய் கங்கையிலிருந்த ஓடத்திலேறி அதின் ப்ரவாஹத்தைக்கடந்து அங்கதேசம் போய்ச் சேர்ந்தனர். அவ்வந்தணர் மிகவும் மஹிமை பொருந்தியவராகையால் அவரை அங்கதேசத்திற்கு அழைத்துக்கொண்டு வரும்பொழுதே உலகமெங்கும் ஆநந்திக்கும்படி மேகங்கள் கடிக மழை பொழிந்தன. ரோமபாத மஹாராஜனும் தன் தேசத்துக்கு மழையுடன் கூடவே வந்து கொண்டிருக்கும் அந்த ப்ராஹ்மணோத்தமரைக் கண்டு வணக்கத்துடன் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து மிக்கஹர்ஷத்துடன் சாஸ்த்ரந்தவ

ரூது அவருக்கு அர்க்யத்தையுங் கொடித்துத் தாஸிகளைக் கொண்டு வர வழைத்ததற்காக அவருக்குக் கோபமுண்டாகாம லிருக்கும்படிக்கும் பிள்ளையை வெளியில் அழைத்துக்கொண்டுபோனதற்காக அவர் பிதாவுக்குக் கோபமுண்டாகாம லிருக்கும் படிக்கும் அவரிடத்தில் அநுக்ரஹத்தை வேண்டிக்கொண்டனன். பின்பு அந்த ரோம்பாத மஹீபாலன் ருச்யச்ருங்கருடன் அந்தப்புரத்துக்குச் சென்று தன்பெண்ணாகிய சாந்தையை அவருக்கு விதிப்படி விவாஹஞ் செய்து கொடுத்து மனக்கவலை தீர்ந்து மிகவும் ஆநந்த மடைந்தனன். இவ்விதம் அவ்வ்ருத்தனர் தன்பத்நியாகிய சாந்தையுடன்கூடி மிகுந்த வொளிபெற்று அந்த ரோமபாதராஜனது அந்தப்புரத்தில் இஷ்டங்களெல்லாம் நிறையப் பூரிக்கப்பட்டு வஸித்திருந்தனர். பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் ருச்யச்ருங்கரை அங்கதேசத்தி
னின்றும் அழைத்துக்கொண்டு
வந்தது.

தசரதமஹாராஜனே! தேவர்களில் மேலான அந்த ஸநத்குமாரர் கதை சொல்லுங்க்ரமத்திலே இன்னமும் உமது நன்மையைப்பற்றி யுரைத்த சிலவற்றைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்து செல்வம் நிறைந்து ஸத்யத்தில் நிலை நின்ற தசரதனென்றும் ஓர் மன்னவன் தர்மத்திற் சிறந்திருக்கப்போகின்றனன். அவ்வரசனுக்கு அங்கராஜனுடன் ஸ்நேஹம் உண்டாகும். அவ்வங்கராஜனுக்கு ரோமபாத னென்னும் ஓர் புதல்வன் உண்டாகப் போகின்றனன். அந்த ரோமபாதனுக்கு சாந்தை யென்று மிகுந்த பாக்கியமுள்ள ஓர் பெண் உண்டாகும். சிறந்த கீர்த்தியுடைய தசரத மஹரா

ராஜன் அவ்வங்க ராஜனருகே சென்று அவனைப்பாராதது 'தர்மஸ்வபாவனே! நான் ஸந்தாகமிந்நியிருக்கின்றேன். நீ அநுமதி கொடுத்தாயாயின் என் வம்சத்துக்கு ஸந்தாகம் உண்டாகும்படி சாந்தையின் கணவராகிய ருச்யச்ருங்கமா முனிவர் எனது யஜ்ஞத்தை நன்றாக நிறைவேற்றுவர்' என்று சொல்லப் போகின்றனன். ரோமபாதனும் அவ்வரசன் வார்த்தையைக் கேட்டு மிகுந்தமதியுள்ளவனுகையால் தானுகவே மனத்தில் ஆலோசித்து ருச்யச்ருங்கன் பிள்ளை பிறக்கச் செய்யவல்ல மகிமையுடையவனுகையால் அவனைத் தசரதனுடன் அனுப்பப்போகின்றனன். அத்தசரதமன்னவனும் அவ்வந்தணனை யழைத்துக் கொண்டு மனக்கவலை தீர்ந்து மிக்க மனமகிழ்ச்சியுடன் அந்த யாகத்தை நடத்தப் போகின்றனன். அம் மன்னவன் தர்மங்களெல்லா மறிந்தவன். ஆகையால் அவன் ருச்யச்ருங்கனை வெருமனே வேண்டினவனன்று. மேன்மேலும்கீர்த்தி வளரவேண்டுமென் றெண்ணங் கொண்ட அம்மஹீபாலன் புத்ர காமேஷ்டி யென்றும் யாகத்தைச் செய்ய வேண்டியும், அதனுல் புதல்வர்களைப் பெற வேண்டியும், தன் மூலமாக ஸ்வர்க்க மேறப்போக வேண்டியும், அந்த ப்ராஹ்மணேத்தமனை ருச்ய ச்ருங்க முனிவனை வணக்கத்துடன் கையைக் கூப்பி ப்ரார்த்தித்தழைத்துக்கொண்டு வரப்போகின்றனன். அங்ஙனம் அவ்வந்தணனை யழைத்துக்கொண்டு வந்து அவனுல் தான் விரும்பின புத்ரகாமேஷ்டியை நிறைவேற்றப் போகின்றனன். இம்மன்னவன் மிகுந்த பராக்ரமம் பொருந்தி வம்சத்தை நிலைநிறுத்த வல்லவராகி உலகமெங்கும் கியாதிபெற்ற நான்கு புதல்வர்களையும் பெறப்போகின்றனன். இப்படி மகிமையெல்லாமமைந்து தேவர்களில் சிறந்தஸனத்குமாரர் முன்பு கிருதயுகத்தில் இக்கதையை மொழிந்

தனர். ஓ கரோத்தமா! தசரதமஹாராஜனே! நீர் பிள்ளையைப்பெறவேண்டியிருப்பவர். ஆகையால் நாலுபக்கத்திலும் ஸைனிகளால் சூழப்பட்டு வாஹநத்தின்மேலேறிக்கொண்டு நீரே கேகில் போய் ஸத்கரிக்கத்தக்க அம்முனிவரை அழைத்துக்கொண்டுவரவேண்டும்' என்று ஸுமந்திரன் மொழிந்தனன். அதைக்கேட்ட தசரதனும் நங்குலத்துக்கு வஸிஷ்டர் புரோஹிதர்; அவரை விட்டு ருச்யச்ருங்கரைப் புரோஹிதராக விரும்புவது நேரன்று. நாமாகச்செய்ததன்றியே ஸநத்குமாரர் சொன்ன விருத்தாந்தத்தைப்பற்றி அவரை வரித்தாலும் வஸிஷ்டருக்குத் தெரிவித்து அவரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு செய்வதே நலம்' என்று நன்றாக மனத்தில் ஆலோசித்து வஸிஷ்டரிடத்தில் ஸுமந்திரனைக் கொண்டு அக்கதையைச் சொல்வித்து வஸிஷ்டருடன் தானுங்கேட்டு ருச்யச்ருங்கரைப் புரோஹிதராக வரிக்கும்பொருட்டு அவரிடம் அநுமதிபெற்றுக்கொண்டனன். பின்பு தான் மனப்பூர்த்தியுடன் மணவாளராகிய ருச்யச்ருங்கரை உபலாலகஞ் செய்து சாந்தையுடன் கூட அழைத்துக்கொண்டுவருவதற்காகத் தனது அந்தப்புரஸ்த்ரீகளுடனும், மந்த்ரிமுதலான பரிவாரங்களுடனுங் கூடி அந்தருச்யச்ருங்கரிருக்கிற ரோமபாதராஜனுடைய நகரத்துக்குச் சென்றனன். இங்ஙனம் புறப்பட்டுத் தசரதன் கானகங்களையும் நதிகளையும் அழகாயிருந்துள்ள இடங்கள் தோறும் மெள்ள மெள்ளப் பார்த்துக்கொண்டே தாண்டி அம்மாமுனிவரிருக்கும் தேசத்துக்குச் சென்று ரோமபாதனுக்கருகில் அக்நிபோல் பளபளவென்று விளங்கிநிற்கும் ரிஷிகுமாரராகிய அந்த ப்ராஹ்மணோத்தமரை முதலிற் கண்டனன்.

பின்பு ரோமபாதனும் தனக்குத் தசரதன் கண்பனுகையால் அவன் வந்ததைப்பற்றி மிகவும் மனமகிழ்ச்சி

கொண்டு தகுந்தபடிஸவிசேஷமாக அவனுக்குஸத்காரஞ் செய்து மிகுந்த மதியுள்ள ரிஷிகுமாரராகிய ருச்ய சிருங் கரைப் பார்த்து 'இத்தசரதமன்னவன் எனக்கு மிகுந்த கண்பன். இவ்வளவேயன்று. உமது பத்னியாகிய சாந் தைக்கு இவன் ஜநகபிதா. ஆகையால் உமக்கு இவ ரைடு ஸம்பந்தமுண்டு' என்று சொல்ல, அந்த ருச்யச் ருங்கரும் அப்பொழுது தன் மாமனுகிய தசரதனை ஸத் கரித்தனர். இப்படி நரோத்தமனுகிய தசரத மஹா ராஜன் ரோமபாதனிடம் ஸத்காரம் பெற்று அவரோடு கூடவே ஏழெட்டுதினங்கள் வஸித்திருந்து அவ்வரசனைப் பார்த்து, 'ராஜோத்தமா! உன் பெண்ணுகிய சாந்தை பர்த்தாவுடன் கூடி எனது பட்டணத்துக்கு வரவேண் டும். அவர்களால் நடக்கவேண்டிய கார்யமொன்று பெரி தாக நேரிட்டிருக்கின்றது' என்று சொல்ல, அவனும் அப்படியே ஆகட்டுமென்று அந்த ருச்யச்ருங்கரை யனு ப்ப உத்தேசித்தவனுகி அவரைப்பார்த்து 'நீர் பத்னி யுடன் கூடி தசரதன்பின்னே செல்லவேணும்' என்று மொழிந்தனன். அதைக்கேட்டு ரிஷிகுமாரரும் அப்ப டியே யாகட்டுமென்று ரோமபாத மன்னவனுக்குச் சொல்லி அவனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தன் மனைவியுடன் கூடிப் புறப்பட்டனர்.

தசரதனும்ரோமபாதனும் ஒருவருக்கொருவர் நமஸ் கரித்து நேசத்தினல் மார்புகொண்டு நன்ருய் அணைத்து ஆலிங்கனஞ் செய்துகொண்டு களித்தனர். பின்பு அந்த ரகுகுலதிலகனுகிய தசரதன், தனது நண்பனுகிய ரோம பாதனிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு, அயோத் தியிலுள்ள ஜநங்களுக்குத்தான் வருவது தெரியும்பொ ருட்டு, வேகமாய்ச் சொல்ல வல்லவர்களாகிய தூதர்களை வரவழைத்து, 'ரகரமெங்கும் வேகமாய் நன்ருக அலங்க

நித்து மணங்கொண்ட தூபங்களிட்டு நாலுபக்கமும்தெளித்து நன்றாய் விளக்கி த்வஜங்களும் தோரணங்களும் கட்டி சிங்காரிக்க வேண்டும்' என்று நகரத்திலுள்ள ஜநங்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினன். பட்டணத்திலுள்ள ஜநங்கள் யாவரும் அரசன் வரவைக் கேட்டு மிகவும் ஆநந்தித்து அவன் சொல்லியனுப்பிய படியே எல்லாம் செய்வித்தனர். பின்பு அந்த மன்னவன் அவ்வந்தணரை முன்னிட்டுக் கொண்டு சங்கதுந்துபிவாத்ய கோஷங்களுடன் நன்றாய் அலங்காரஞ் செய்யப் பெற்று விளங்கும் அயோத்திமாநகரத்தினுட் புகுந்தனன். இங்ஙனம் பராக்ரமம் முதலிய விசீர்பாரங்களால் இந்திரனைப் போன்ற அம்மன்னவன் அவ்வந்தணர் சிகாமணியை மிகுந்த ஸத்காரத்துடன் பட்டணத்துக்கு அழைத்துக் கொண்டு வரக்கண்டு, அந்தநகரத்திலுள்ளவர் யாவரும் மிக்கமகிழ்ச்சியடைந்தனர். அரசனும் அவ்வந்தணரை அந்தப்புரத்துக்கு அழைத்துக் கொண்டு சென்று விதிப்படி பூசைகளைச்செய்து அவரை யழைத்துக்கொண்டுவந்து சேர்த்ததைப்பற்றித் தனது காரியமெல்லாம் நிறைவேறினதாக நினைத்தனன். அந்தப்புர ஸ்த்ரீகள் அனைவரும் அவ்வாறு கணவராகிய ருச்யசிருங்கருடன் கூடி வந்த கண்ணழகியான சாந்தையைக் கண்டு பக்தியால் ஆநந்த மடைந்தனர். இப்படி சாந்தை அந்தப்புர ஸ்த்ரீகளாலும் விசேஷித்து அவ்வரசனாலும் பூசை செய்யப்பெற்றுப் புரோஹிதராகிய தன் கணவருடன் சிலகாலம் ஸுகமாக வஸித்திருந்தனள்.

பதிநேராவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரத சக்ரவர்த்தி யாகஞ்செய்ய ஆரம்பித்தல்.

இவ்விதம் ருச்ய ச்ருங்கரை அழைத்துக்கொண்டு வந்த பின்பு வெகுநாள் சென்றது. பிறகு மிகவும் அழகான ஓர் வஸந்தருது வர; அவ்வசனுக்குத் தான் முன் செய்ய உத்தேசித்த யாகத்தை நடத்தவேண்டுமென்று எண்ணமுண்டாயிற்று. பின்பு தேவன் போல் ஒளிபொருந்தி விளங்கும் அந்தணர்தலைவரான அந்த ருச்யச்ருங்கரை அம்மன்னவன் ஸாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு அநுக்ரஹம் வரச்செய்து தன்வம்சம் விருத்தியாகும்படி ஸந்தாநமுண்டாகும் பொருட்டு யாகஞ்செய்ய வரித்தனன். அவரும் ராஜனிடம் ஸத்காரம் பெற்று அப்படியேயென்று ராஜனை நோக்கி 'யாகத்திற்குவேண்டிய ஸம்ஸாரங்களைச் சித்தப்படுத்துவீராக. குதிரையையும் விடுவீராக' என்றனர். ராஜனும் மந்திரிகாமணியாகிய ஸுமந்திரனைப்பார்த்து 'ஸுமந்திரனே! வேதங்களெல்லாங்கற்றறிந்த ஸுயஜ்ஞர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், புரோஹிதராகிய விஸிஷ்டர், மற்றுமுள்ளப்ராமஹ்மணர்கள் ஆகிய ருத்விக்குகள்யாவரையும் வேகமாய் அழைத்துக்கொண்டுவா'என்று கட்டளையிட்டனன். பிறகு ஸுமந்திரனும் விரைந்தோடிச் சென்று வேதங்களின் கரையறிந்தஅவ்வந்தணர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு வந்தனன். தர்மாத்மாவாகிய தசரதன் அவர்களைப் பூஜித்து தர்மார்த்தங்கள் நிறைந்து மிகவுமினிதாகத், தகுந்தபடி அவர்களைப்பார்த்து 'யான்புதல்வனில்லாது மிகவும் வருந்திப் புலம்புகின்றமையால் எனக்கு ஸுகமேயில்லை. அதுபற்றி அச்வமேதயாகஞ் செய்ய வேண்டுமென்று எனக்கு எண்ணமுண்டாயிருக்கின்றது. ஆதலால் சாஸ்த்ரங்களிற் சொன்ன க்ரமந்தவறாது யாகஞ் செய்ய விரும்புகின்றேன். ரிஷ்யசுருங்கராகிய

இந்த ருச்ய ச்ருங்கமாமுனிவர் மகிமையால் எனது இஷ்டங்களெல்லாம் நிறைவேறும்' என்றுரைத்தனன். பின்பு வஸிஷ்டன் முதலிய அந்தணர் யாவரும் அங்ஙனம் அரசன் முகத்தினின்று வெளியான அம்மொழியைக் கேட்டு 'நல்லது' என்று புகழ்ந்தனர். அப்பொழுது ருச்யச்ருங்கர் முதலிய வேதியர்களும் 'யாகத்துக்கு வேண்டிய ஸம்பாரங்களைச் சித்தப்படுத்துவீராக. குதிரையை விடுவீராக. பிள்ளையைப்பற்றி உமக்கிந்த தர்மபுத்தியுண்டானபடியால் அளவற்ற பராக்ரமத்தையுடைய நான்கு பிள்ளைகளை நீர் எவ்விதத்திலும் அடையப் போகின்றீர்' என்று மன்னவனுக்குப் பதிலுரைத்தனர். பின்பு தசரதமன்னனும் அவ்வந்தணர் மொழியைக் கேட்டுக் களிப்புற்று மந்திரிகளைநோக்கி மகிழ்ச்சியுடன் 'நமதுபெரியோர்கள் வசனத்தின்படி யாகத்துக்கு வேண்டிய ஸகல ஸம்பாரங்களையும் சேர்த்து வைப்பீர்களாக. காக்கவல்லவர்களைக் காவல்வைத்துப் புரோஹிதர்களையும் பின்றொடரச் செய்து குதிரையை விடுவீர்களாக. ஸரயூ நதியின் வடகரையில் யாகசாலையை ஏற்படுத்துவீர்களாக. க்ரமம் தவறாமல் விதிப்படியே சாந்திகர்மங்கள் பலவும் நடத்துவீர்களாக. அநர்த்தத்தை விளைவிப்பவையான குறைவுகள் யாவும் நேரிடாமற் போகுமேயாயின் இந்த உயர்ந்தயாகத்தை அரசர்கள் யாவரும் அநுஷ்டிப்பர்கள். இதைச் செய்தால் என்ன குறைவு நேரிடுமோ என்று அஞ்சியே இதை ஸாமான்யமாக எவனும் செய்ய விரும்புகிறதில்லை. இந்த யாகத்தின் முறையெல்லாமறிந்த ப்ரஹ்ம ராக்ஷஸர்கள் இதைக்கெடுக்க ஏதேனும் குறைவைத் தேடிக் கொண்டிருப்பர்கள். ஆகையால் இதை மிகவும் அவதானத்துடன் நடத்த வேண்டும். அப்படியன்றி யாகத்திலேதாவது அபசாரம்நேரிட்டு ப்ரஹ்ம ராக்ஷஸர்

கள் நுழைந்து இதைக் கெடுப்பார்களேயாயின் தத்க்ஷணமே யஜமானன் நசித்துபோவான். ஆகையால் இந்த எனது யாகம் விதிப்படி முடியும்படி இதில் தேர்ந்தவர்கள் ப்ரயத்நஞ் செய்ய வேண்டும்' என்றனன். பின்பு மந்திரிகள் யாவரும் அப்படியே யென்று அவன் வார்த்தையைப் புகழ்ந்து அக்கட்டளைப்படி யாகத்திற்கு வேண்டிய சடங்குகளை யெல்லாம் க்ரமப்படி நிறை வேற்றினர். பின்பு அவ்வந்தணர்கள் யாவரும் தர்மங்களெல்லாமறிந்த அம்மன்னவனைப் புகழ்ந்து, அவனிடம் அநுமதி பெற்று, மறுபடியும் தாம் வந்தவழியே சென்றனர். இப்படி ப்ராஹ்மணர்கள் சென்றபின்பு அந்த நராதிபன் மந்திரிகளையும் போகவிட்டுச் சந்தோஷத்தினால் மிகவு மொளிகொண்டு அந்தப்புரத்தைச் சேர்ந்தனன். பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

யஜ்ஞ ஸம்பாரங்களைச் சித்தப்படுத்தல்.

[1]இப்படி முதல்வஸந்தருதுவில் சாந்திஹோமங்களைச் செய்து ருத்விக்குகளை வரித்தபின்பு வல்லர்களாகிய நானூறு ராஜகுமாரர்களுடனும் அத்வர்யு முதலிய ருத்விக்குகளுடனும் யாகத்தின் அச்வம் பூமியை வலஞ்செய்து திரும்பிவர, ஓராண்டு நிறைந்து மீளவும் வஸந்தருது

1 யாதொரு வஸந்தருதுவில் ருச்யச்ருங்கர் முதலிய ருத்விக்குகளைத் தசரதமன்னவன் வரித்தான், அதுமுதலாக யாகஸம்பாரங்களைச்சேர்ப்பது யாகபூமி யேர்ப்படுத்துவது, சாந்திகர்மத்தை முன்னிட்டுக்கொண்டு யாகக்குதிரையைப் பூமிவலஞ் செய்யவிட்டு அத்துடன்கூடவே ஸமர்த்தர்களாகிய ராஜபுத்ரர் முதலியவர்களால் சூழப்பட்டு, உத்காதா அத்வர்யு ஹோதா ப்ரஹ்மா ஆகிய இவர்கள் பின்தொடர்ந்து ஸாவித்ராதிகர்மங்களைச் செய்துகொண்டு போவது முதலிய வ்யாபாரங்களைச்செய்ய, ஓராண்டுநிரம்பி மீளவும் வஸந்தருது வந்ததென்று கருத்து.

வந்தது. வந்தவாறே வல்லவனுன தசரதமஹாராஜன் தனக்கு ஸந்தாந முண்டாவதைப்பற்றி ஆரம்பித்த அச்வமேதத்தை நடத்தும்பொருட்டு அத்வர்யுவாக வரிக்கப்பட்ட வஸிஷ்ட முனிவரிடஞ் சென்று தெண்ட னிட்டு ந்யாயப்படி உபசாரங்களைச்செய்து கையைக்கூப் பிக்கொண்டு வணக்கத்துடன் 'ப்ராஹ்மணோத்தமரே! நான் ஆரம்பித்த அச்வமேத யாகத்தை விதிப்படி நிறை வேற்ற வேண்டும். அதின் அங்கங்களில் யாதொரு தடையும் வாராத படியும் செய்யவேண்டும். எனக்கு நீர் ஓயாது நேசமுள்ள நண்பர். பின்னும் நீர் வாமதேவர் முதலியவர்களில் மேலாகி நிகரின்றி விளங்கும் குரு. எப் பொழுதும் என்மீது நல்லெண்ணங்கொள்பவர். ஆகை யால் இப்பொழுது நான் ஆரம்பித்த யாகபாரத்தையெல் லாம் நீரே நிறைவேற்றவேண்டும்'என்றுரைத்தனன். அத் தணரில் சிறந்த அத்தவஸிஷ்ட முனிவரும்ராஜனைப்பார்த் து, 'நீ வேண்டிக்கொண்டபடி எல்லாவற்றையும் தப்பா மற் செய்கின்றேன்' என்று சொல்லி, பின்பு அந்த யாகத் திற்காக வரிக்கப்பட்ட மற்றை அந்தணர்களையும் ஸகல ஸம்பாரங்களோடு வீடு முதலானவற்றை நிருமிக்கவல்ல சிற்பிகளையும், யாகபாத்ரம் முதலியவற்றைச் செய்யவல்ல தச்சர்களையும், கிணறு முதலியவை தோண்டவல்ல பணிக் கர்களையும் பல கலைகளில் தேர்ந்து யாகவிதியறிந்தவர்க ளுமாகிய பெரியோர்களையும், சித்திரக்காரர் நாடகமாட வல்லோர் கணக்கர் முதலிய மற்றும் வேண்டிய வர்களை யும் அழைத்து இங்ஙனம் மொழிந்தனர். 'ஓ முனிவர் களே! நீங்கள் யாவரும் அரசன் கட்டளைப்படி யாகத் திற்காக விருப்பத்துடன் முயலவேண்டும். மற்றுமுள்ள காரியஸ்தர்களே! புதிதாய்க் கட்டடங்கள் கட்டுவதற் காக அநேகமாயிரஞ் செங்கற்களை வரவழைக்க வேண்

டும். வரும் அரசர்கள் வஸிக்கும்படி அகன்று நீண்டு மற்றுங்குணங்களெல்லாமமைந்து விளங்கும் ராஜகிருகங்கள் பலவுங்கட்டவேண்டும். ப்ராஹ்மணர்களுக்கும் வெகு அழகாயும் உறுதியாயு மிருக்கும்படி கிருகங்களைக்கட்டி அதில் அநேக பக்ஷியங்களையும் அந்நபாநங்களையும் அமைத்து வைக்க வேண்டும். அப்படியே நகரத்து ஜநங்களுக்கும் மிக விசாலமான வீடுகளை யேற்படுத்திக் கொடுத்து அங்குப் பலவகைப் பண்யாரங்களையும் மற்றும் அவர்களுக்கு வேண்டிய பதார்த்தங்களையும் நிறைத்து வைக்கவேண்டும். அவ்வாறே நாட்டுப்புரத்து ஜநங்களுக்கும் மரியாதை செய்து நாட்டாரென்று அவர்களைப்பரிஹஸியாமல் விதிப்படி மிகவும் உயர்ந்த அங்கங் கொடுக்க வேண்டும். இவர்கள் அவர்கள் என்று பாராமல் ஸகல்வர்ணஸ்தர்களுக்கும் மிகுந்த ஸத்காரஞ்செய்து சந்தோஷிக்கச் செய்யவேண்டும். ஸ்நேஹத்தினுலாவது கோபத்தினுலாவது பரிஹாஸத்தினுலாவது ஒருவரையும் அவமதிக்கலாகாது. இந்த யாககாரியங்களில் மனஞ் செலுத்தி ஊன்றியிருப்பவர்களையும், அவரைப்போன்ற மற்றும் சிற்பிகளையும் க்ரமந் தவருமல் விசேஷப்படி பூஜிக்கவேண்டும். அவர்கள் போஜநத்திலும் தநத்திலும் மிகவும்திருப்தியடையவேண்டும். நீங்கள்யாவரும்மனக்களிப்புடன் இதில் யாதொரு குறைவும் நேரிடாதபடியும் எல்லாம் நிறைவேறும்படியும் செய்யவேண்டும்' என்றனன். பின்பு எல்லாரு மொன்றுகூடி வஸிஷ்டரிடம் வந்து 'மாமுநியே! நீர் சொன்னவையெல்லாம் ஒன்றுங் குறைவின்றி உமது சொற்படி செய்து முடித்தனம். மற்றுமுள்ள மேற் செய்ய வேண்டியவற்றையும் ஒரு குறைவுமின்றி நடத்துவோம்' என்றனர். பின்பு வஸிஷ்டர் ஸுமந்திரனை வரவழைத்து அவனோடு 'பூமியிலுள்ள தார்மிகர்களாகிய

அரசர்கள் யாவரையும் வரவழைக்க வேண்டும். எல்லாத் தேசங்களிலுமுள்ள ப்ராஹ்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைச்யர்கள், சூத்ரர்கள் ஆகிய நான்கு வர்ணத்து மணிதர்களையும் ஸத்கரித்து வரச் செய்வாயாக. பராக்ரமம் நிலைநிற்கப்பெற்று, சூரனுகி நூல்களெல்லாம் ராய்ந் தறிந்து அப்படியே வேதங்களிலும் நிலைநின்று மஹா பாக்ய சாலியுமாகி மிதிலா நகரத்துக் கரசனுகிய ஜனகமஹாராஜனை நீயே நேரில் போய் நன்கு ஸத்காரஞ் செய்து அழைத்துக்கொண்டிவரவேண்டும். அவன் நமது அரசனுக்குச்சிரகாலஸம்பந்தியென்றறிந்து அவனை முன்னமே வரவழைக்கும்படி உனக்குச் சொல்லுகிறேன். காசிராஜன் எப்பொழுதும் நம்மிடம் நேசங்கொண்டு இனிதாய்ப் பேசுந் தன்மையன்; நம்மரசனுக்கு மிகுந்த கண்பன்; ஆகையால் அவனையும் நேரில்போய் அழைத்து வரவேண்டும். அப்படியே தர்மங்களை யறிந்தவர்களில் சிறந்து பருவம் நிறைந்து நமதரசனுக்கு மாமனுமாகிய கேகயராஜனையும் நீயே போய் புத்திரர்களுடன்கூட அழைத்துக்கொண்டு வருவாயாக. மிகுந்த பாக்யசாலியும் நம் மன்னவனுக்கு கண்பனுமாகி எங்கும் புகழ்பெற்று விளங்கும் அங்கதேசத் தரசனுகிய ரோமபாதனையும் ஸத்காரஞ்செய்து அழைத்துக்கொண்டு வருவாயாக. அன்றியும் வங்கம் கலிங்கம் முதலிய கீழ் காட்டரசர்களையும், ஸிந்து ஸௌவீரம் முதலிய மேலுட்டரசர்களையும், சோலபாண்டியம் முதலிய தென்னுட்டரசர்களையும், குருபாஞ்சாலம் முதலிய வடகாட்டரசர்களையும் தக்க தூதர்களைக் கொண்டு அழைப்பிக்கவேண்டும். மேலும் இப்புவனத்தில் நமக்கு கண்பர்களான மற்றுமுள்ள மன்னர்களையும் பந்துமித்ர வர்க்கத்துடனும் ஸகலபரிவாரங்களுடனும் கூடிய சீக்கிரத்தில்வரவழைப்பாயாக' என்றனர். இப்படி

வஸிஷ்டமாமுனிவர் சொல்லக்கேட்ட ஸுமந்திரனும் த்வரையுடன் அரசர்களை யழைத்துக்கொண்டு வரும்படிக்கு அந்தரங்கராகிய புருஷர்களையனுப்பி, அம்முனிவர் விசேஷித்துச் சொன்ன மன்னவர்களைத் தானே நேரில் போய் அழைத்து வருவதற்காக வேகமாகப் பிரயாணம் புறப்பட்டனன். முன் கட்டளை யிடப்பட்ட வேலைக்காரர் யாவரும் யாகத்துக்காகத் தாங்கள் செய்தவை யனைத்தையும் சிறந்த மதியுடைய வஸிஷ்டருக்குச் சொல்லினர். பிறகு அந்தணர்களில் தலைவராகிய அவ்வஸிஷ்டமாமுனிவர் ஸந்தோஷமடைந்து, அவர்கள் அனைவரையும் நோக்கி 'யாராவது ஏதாவது கேட்கில் அநாதரமாயாவது பரிஹாஸமாயாவது கொடுக்கலாகாது. ஆதரத்தோடும் மேன்மையோடும் கொடுக்கவேண்டும். அப்படியன்றி அநாதரமாய் கொடுக்கும் தானம் [1]தாதாவைக் கெடுத்து விடுமென்பதில் ஸந்தேகமில்லை' என்று மொழிந்தனர். பின்பு சிலநாள்களுக்குள்ளே அரசர்கள் தசரதனுக்கு உபஹாரமாக ரத்நம் முத்து பவழம் ஆடையாபரணம் முதலிய உயர்ந்த வஸ்துக்களைக்கொண்டுவந்து சேர்ந்தனர். பிறகு வஸிஷ்டரும் அவைகளை யெல்லாங் கண்டு களிப்புடன் தசரதனைப் பார்த்து 'ஓ உத்தம புருஷனே! உனது கட்டளைப்படி அரசர்கள் யாவரும் வந்துசேர்ந்தனர். நானும் அச்சிறந்த மன்னவரனைவர்க்கும் தக்கபடி மரியாதை செய்தனன். யாகத்திற்கு வேண்டிய ஸகல பதார்த்தங்களும் மிகுந்த ஊக்கத்துடன் அந்தத் புருஷர்களால் சித்தஞ் செய்யப்பட்டிருக்கின்றன. யாகசாலையும் நாலுபக்கத்தின் அருகில் சேர்க்கப்பட்ட ஸமஸ்த ஸம்பாரங்களுடன் நிறைந்திருக்கின்றது. ஆகையால் மனத்தினுல் நிருமிக்கப்பட்டதோ என்னும்படி

1 தாதாவை-கொடுப்பவனை.

வெகு வேகமாய் அமைக்கப்பட்ட யாகசாலையைப் பார்க்க வேண்டும். நீயும் யாகஞ்செய்யப் புறப்படலாம்' என்றனர். இப்படி வஸிஷ்டரும் ருச்யச்ருங்கருமாகச் சொல்ல, அம் மன்னவனும் சுபதிநத்தில் சுப நக்ஷத்ரத்தில் யாகசாலைக் குப் புறப்பட்டுப்போயினன். பின்பு வஸிஷ்டர் முதலிய ப்ராஹ்மணோத்தமர்கள் யாவரும் யாகசாலையிற் சேர்ந்து ருச்யச்ருங்கரை முன்னிட்டுக்கொண்டு சாஸ்த்ரம் தவறா மல் க்ரமப்படி யாக காரியங்களைச் செய்யத்தொடங்கினர். பதின்மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரத மன்னவன் அச்வமேதயாகஞ் செய்தல்.

இங்ஙனம் யாகஞ் செய்யவேண்டிக்குதிரையைவிட்டு ஓராண்டு கிரம்பி, அக்குதிரையும் திரும்பிவர, ஸாயூ நதியின் வடகரையில் மன்னவனது யாகம் நடந்தது. அப்பொழுது ப்ராஹ்மணோத்தமர்கள் யாவரும் ருச்யச் ருங்கரை முன்னிட்டுக்கொண்டு மஹாத்மாவான அம்ம ஹீபாலன் செய்யும் அச்வமேதமென்கிற மஹாயாகத்தில் செய்ய வேண்டிய கருமங்களை ஆசரித்தனர். வேதத்தின் பொருளை நன்குணர்ந்து யாகஞ் செய்விக்கும் அவ்வந்த ணர்கள் அனைவரும் விதியிற் சொல்லியபடி யாக காரியங் களைச்செய்துகொண்டு வேதத்திலோதியபடியும், மீமாம் ஸாநுஸாரமாகவும், கல்பஸூத்ரங்களிற் சொல்லியபடி யும் நடத்துகொண்டிருந்தனர். மேலும் அவ்வந்தணர் [1]ப்ரவர்க்யமென்றும் உபஸதமென்றும்சொல்லப்படுகிற கரு மங்களை சாஸ்த்ரந்தவறாமல் கட்டளைப்படி செய்துவிட்டு,

---

1 ப்ரவர்க்யம்-'தேவாவை ஸத்ராஸத' என்று இதுமுதலான ப்ரவர்க்ய ப்ராஹ்மணத்திற் சொல்லப்பட்ட கர்மவிசேஷம். உபஸ தம்-அது ஓர் இஷ்டி விசேஷம்.



100 தசரதன் அஸ்வமேதமும் புத்ரகாமேஷ்டியுஞ் செய்தல்.

மற்றும் நடத்தவேண்டிய நடவடிக்கைகளையும் நூல்வழி வழுவாது நடத்தி வந்தனர். பின்பு அம்மஹர்ஷிகள் யாவரும் மிகுந்த களிப்புடன் அந்தந்தக் கருமங்களுக்குரிய தேவதைகளை நன்முகப் பூஜை செய்து காலையிற் செய்யவேண்டிய ஹோமம் முதலியவைகளையும் விதிப்படி நடத்தினர். இதில் இந்திரனுக்குக் கொடுக்க வேண்டிய ஹவிர்ப்பாகமும் க்ரமம் தவறுமல் கொடுக்கப்பட்டது. பாபமனைத்தும் போக்கவல்ல [1]ஸோமலதையை அந்தணர் யாவரும் புகழ்ந்துகொண்டனர். மத்யாஹ்ந ஹோமமும் க்ரமப்படி நடந்தது. அப்படியே அவ்வந்தினர் அம்மஹாராஜனுக்காக ஸாயங் காலத்திற் செய்ய வேண்டிய ஹோமத்தையும் விதிப்படி யறிந்து செய்தனர். அந்த யாகத்தில் ஒன்று தப்பி ஒன்முகச் செய்யப்பட்டதாவது, முதலே செய்யாமல் விட்டுப்போனதாவது ஒன்றும் நேரிடவில்லை. அன்றியே மந்த்ரத்திலாவது தந்த்ரத்திலாவது யாதொரு குறைவும் நேரிடவில்லை. அவர்கள் எல்லாவற்றையும் நிர்விக்நமாகச் செய்ததனல் அனைத்தும் மந்த்ரங்களுடனே காணப்பட்டது. அந்த மஹாயாகம் நடந்த நாட்களிலே வேலை செய்து அலுத்தவனும் பசியால் வருந்தினவனும் காணப்படவில்லை. கல்வியில்லாமலும் நூறு சீடர்கள் பின்தொடராமலுமிருக்கும் அந்தணன் ஒருவனும்அங்குக் காணப்படவில்லை. அந்த யாகத்தில் நாடோறும் இடைவீடின்றி முனிவர்களும் மற்றை யந்தணர்களும் சூத்ரர்களும்ஸந்யாஸிகளும் மற்றும் பலரும் நேயாளிகளும் பெண்களும் சிறியவர்களும் புசித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் இப்படி இடைவீடின்றி சாப்பிட்டபோதும் அந்த பாகத்தின் சுவையினல் திருப்தியுண்டாகவில்லை. அவர்

1 ஸோமலதை-ஆட்லாங்கொடி.

கள் எவ்வளவு புசிக்கிலும் அரசனுக்குத் திருப்தி பிறக்க வில்லை. ஆகையால் அவன் 'அந்நத்தைக் கொடுங் கள். பலவிதமான ஆடைகளைக்கொடுங்கள்' என்று ஏவிக்கொண்டிருக்க, அப்படியே ராஜபுருஷர்களும் நடத்தினர். மேலும் அங்கு அப்பொழுது ப்ரதிதி நமும் பாகசாஸ்த்ரப்படி சித்தஞ்செய்யப்பட்ட அந்த ராசிகள் பலவும் மலைமலையாகத் தென்பட்டன. மஹாத் மாவாகிய அம்மன்னவனால் செய்யப்படும் அந்த யாகத் தில் பல தேசங்களிலிருந்து வந்த புருஷர்களும் ஸ்த்ரீ களும் கூட்டங்கூட்டமாக அந்தபாகங்களால் மிகவும் திருப்தியடைந்திருந்தனர். அங்கு வந்த ப்ராஹ்மணர் கள் யாவரும் நடந்த உபசாரங்களால் மிகவும் திருப்தி கொண்டு 'நீர் இட்ட அந்தமானது அறுசுவையுமமைந்து ஏதுக்கு மேல் அளவற்ற உபசாரமும் பொருந்தி யிருந் தது. எங்களுக்கு மிகவும் திருப்தியா யிருக்கின்றது. ராஜனே! உமக்கு மங்களம் உண்டாகவேணும்' என் றிவ்வாறு பலவகையாகப் புகழ்ந்துகொண்டனர். ரகு குலத்திற் பிறந்த அந்தத்தசரத மஹாராஜனும் இதை யெல்லாஞ் செவியுற்றனன். சிறந்த ஆடையாபரணங் கள் பூண்ட புருஷர்கள் பலர் ப்ராஹ்மணர்களுக்குப் பரி மாறினர். மற்றும் பலர் அழகான மணிகுண்டலங் களை யணிந்துகொண்டு அப்பரிமாற்றஞ்செய்யும் புருஷர் களுக்கருகில் ஸஹாயமா யிருந்தனர். அங்கு ஹோமம் முடிந்த பின்பு இடையிலுள்ள பொழுதெல்லாம் கல்வி களைக்கற்று நன்முகப்பேசவல்ல ருத்விக்குகள் பலரும் ஒருவரையொருவர் ஜயிக்கவேணுமென்று எண்ணங் கொண்டு பல ஹேதுவாதங்களைச் செய்துகொண்டிருந் தனர். அந்த யாகத்தில் வல்லவரான ருத்விக்குகள் யாவரும் பெரியோர்களால் ஏவப்பட்டு நாடோறும்

செய்யவேண்டிய கருமங்களனைத்தும் சாஸ்த்ரப்படி நடத்திக்கொண்டு வந்தனர். இந்த யாகத்திற்கு வந்த அந்தணர்களில் ஷடங்கமுணராதவனும் ப்ரஹ்மசர்யம் முதலிய வ்ரதானுஷ்டானமின்றி யிருப்பவனும், பல நூல்களையும் கேட்டறியாதவனும், ஒருவனுவது தென் படவில்லை.

அம்மஹாராஜனது ஸபையிலுள்ள ப்ராஹ்மணர் களில் வாதஞ்செய்ய வல்லமையில்லாத வேதியர் ஒருவரும் கிடையார். அந்த யாகத்தில் யூபஸ் தம்பங்கள் நிறுத்தும்போது வில்வமரத்திற் செய்யப் பட்டவை ஆறும், அத்துடன் சேர்ந்தாற்போலவே கருங்காலிமரத்திற் செய்யப்பட்டவை ஆறும், பலாச மரத்திற் செய்யப்பட்டவை ஆறும், கறுவிலி மரத்திற் செய்யப்பட்டதொன்றும், தேவதாருமரத்திற் செய்யப் பட்டவை யிரண்டும் ஆக இருபத்தொரு யூபஸ்தம்பங் கள் நாட்டப்பட்டன. அவைகளை நடும்போது ஒவ் வொன்றுக்கும் நடுவில் ஒரு மார்பளவு இடம் வெளியா யிருக்கும்படி யேற்படுத்தினர். அவை யனைத்தும் சாஸ்த்ரங்களை யுணர்ந்து யாகஞ்செய்விக்க வல்லமை யுள்ள மிகுந்த அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டவை; யாகசாலைக்கு அலங்காரமா யிருக்கும்பொருட்டு தங்கப் பட்டங்களால் சிங்காரிக்கப்பட்டிருந்தன; அந்த யூபங் கள் இருபத்தொன்றில் ஒவ்வொன்றும் இருபத்தொரு பிடி யளவுடையது; பின்னும் ஒவ்வொரு வஸ்த்ரத்தினால் அலங்கரிக்கப்பட் டிருந்தது. யூபஸ்தம்பங்களெல்லாம் ஏற்றக் குறைவில்லாமல் தகுந்தபடி செய்யப்பட்டு எட்டுப் பட்டைகள் தீர்க்கப்பெற்றுப் பொத்தல் பொள்ளலில்லா மல் மிகுந்த உரப்புடன் கூடி மழமழவென்று தைலம் பூசப்பட்டு விதிப்படியே நாட்டப்பட்டன. மேலும் அவை

ஆடைகளால் சுற்றப்பட்டு புஷ்பங்களாலும் மணம் பொருந்திய சந்தனம் முதலியவற்றாலும் அலங்காரஞ் செய்யப்பெற்று ஆகாயத்தில் ஸப்தர்ஷிகள் மிக வொளியுடன் விளங்குவதுபோல் விளங்கி யிருந்தன. அந்த யாகசாலையில் யாககாரியங்களில் வல்லவரான வேதியர்கள் நூல் தவறாமல் தகுந்த அளவுடன் செய்யப்பட்ட செங்கற்களைக்கொண்டு யாகவேதிகையைக் கட்டிவைத்திருந்தனர். அவ்வக்நிவேதிகையானது வல்லவரான தசரதனது ருத்விக்குகளால் கன்கு விதிப்படி கட்டப்பட்டிருந்தமையால் இறக்கைகளையும் வால்புறத்தையும் விரித்துக் கீழே பார்த்துக்கொண்டு கிழக்கு முகமாயிருக்கும் கருடனைப்போன்ற உருவம் பெற்று [1]பொன்னால் அமைக்கப்பட்ட இறக்கைகளும் பொருந்தி, [2]ஸாமான்ய யாகங்களிற் சொல்லிய ஆறு ப்ரஸ்தாரங்களுக்கு மேல் மூன்று பங்கு அதிகமாய், ஆனதுபற்றியே பதினெட்டு ப்ரஸ்தாரங்களுடன் விளங்கிற்று. சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்ட பசுக்களும், ஸர்ப்பங்களும், பக்ஷிகளும் அந்தந்த தேவதைகளை யுத்தேசித்து விதிப்படி அந்த யூபஸ்தம்பங்களில் கட்டப்பட்டன. அவ்வச்வமேதத்தில் பசுக்களை வதிக்கவேண்டிய ஸமயம் வருகையில்

---

1 உள்ளே ஸுவர்ணதுண்டுகளை வைத்துக்கட்டப்பட்ட இறக்கைகளோடு கூடியதென்று பொருள். 'ஸஹஸ்ரம் ஹிரண்யமஸ்ய ப்ரதிஷ்டா மதோ ப்ரோக்தி' என்று இங்கு ப்ரமாணம்.

2 'ஷட்ஸ்தியோ ஹவன்தி' என்று ஸாமான்யமாக யாகங்களில் அக்நிவேதிகை ஆறுப்ரஸ்தாரங்களுள்ளது; அந்த அக்நிவேதிகையே அச்வமேதயாகத்தில் 'த்ரிஸ்தாவோஷ்ணீர்லவதீத்யஸ்ய வேமேயே விஜ்ஞாயதே' என்கிறபடியே அதைவிட மூன்றுமடங்குதிகமாக விதிக்கப்பட்டிருப்பதுபற்றிப் பதினெட்டு ப்ரஸ்தாரங்களுடையதா யிருக்கும். இதைக் கருதியே (ஸாமான்யயாகங்களுக்குச் சொல்லிய.....பதினெட்டுப் பிரஸ்தாரங்களுடன் விளங்கிற்று) என்று சொல்லப்பட்டது.

[1]குதிரையும் ஆமை முதலிய ஜலஜந்துக்களும் மற்று முள்ள பசுக்களும் ஆகிய இவைகளை ருத்விக்குகள் கொண்டுவந்து கட்டினர். அந்த யூபங்களில் அப்பொழுது மூந்நூறு பசுக்களும் தசரதனது சிறந்த குதிரையொன்றும் கட்டப்பட்டிருந்தன. [2]அரசனது பட்டமஹிஷியான கௌஸல்யாதேவி மற்றை ராஜபத்நிகளுடன் அவ்விடம் வந்து அக்குதிரையை வலமுமிடமுமாக வந்து மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸ்வர்ணமயமான மூன்று கத்திகளால் வெட்டித் தெரியக் கீறினள். அப்படி செய்த பின்பு தர்மஸித்தியைவிரும்பின கௌஸல்யாதேவி இச்சவத்தைத் தீண்டவேண்டுமேயென்று மனவெறுப்பில்லாமல் அக்குதிரையோடுகூட ஓரிரவெல்லாம் வஸித்திருந்தனள். அப்பொழுது தசரதமஹாராஜன் [3]மஹிஷி, பரிவ்ருத்தி, வாவாதை, பாலாகலி

---

1 இங்குக் கட்டமுடியாத பாம்பு முதலியவற்றைக் கட்டுகையாவது கூண்டிலடைத்து வைக்கையே. 'இந்த்ராய ராஜ்ஞே ஸுக்ரோ வருணாய ராஜ்ஞே கருஷ்ணः' இதுமுதலிய அநுவாகங்களில் அந்தந்தப் பசுக்களும் அந்தந்தத்தேவதைகளும் படிக்கப்பட்டிருக்கின்றன.

2 இங்கு—

'கௌஸல்யா தம் ஹயம் தத்ர பரிசர்ய ஸமந்ததः।
கருபாணைர்விஶஸாஸைநம் த்ரிபிः பரமயா முஹா॥'

என்று மூலம். இதில் 'கருபாணைः' என்று சொல்லப்பட்டது. க்ருபாணமென்றால் கத்தி. ஆகையால் (மூன்றுகத்திகளால்) என்று சொல்லப்பட்டது. ஆயினும் இங்குக் கத்தியென்றால் ஸ்வர்ணமயமான ஸுசியெனக்கொள்ளவேண்டும். இல்லாதபக்ஷத்தில் 'ஸௌவர்ணைஸ் ஸுசிபிः பத்நயோ ஜீவஸ்யாவிபயாந் கல்பயந்தி' என்கிற ஸுத்ரத்தோடு விரோதம் வரும்.

3 'கருதாஹிஷேகா மஹிஷீ பரிவ்ருத்தி ருபேகுஷிதா। வாவாதா ஹோஶீநீ பாத்ரப்ரஹா பாலாகலீ மதா' என்கிறபடியே பட்டாபிஷேகம் பெற்றவள் மஹிஷி யென்றும், அரசன் ஸம்போகித்து உபேக்ஷிக்கப்பெற்றவள் பரிவ்ருத்தியென்றும், ராஜவேச்யை வாவாதை

என்னும் தனது நான்கு பத்நிகளே ப்ரஹ்மா, உத்காதா, ஹோதா, அத்வர்யு என்னும் நான்கு ருத்விக்குகளுக்கும் அடைவே தக்ஷிணையாகக் கொடுக்க, அவர்களும் கைப்பற்றினர். பின்பு இந்திரியங்களையெல்லாம் வென்று யாகப்ரயோகங்களில் மிகவும் தேர்ந்த அத்வர்யு என்னும் ருத்விக்கு அக்குதிரையின் குடலே யெடுத்து விதிப்படி அக்நியில் பசுகம் செய்தனன். மன்னவனும் அக்குடலே அக்நியில் ஹோமம் செய்யும்போது காலந் தவறாமல் விதிப்படியிருந்து தனது பாபங்கள்போகும்படி ஹோமகர்த்தை மோந்தனன். ருத்விக்குகளாக வரிக்கப்பட்ட பதினாறு ப்ராஹ்மணர்களும் அவ்வச்வத்தின் அங்கங்களையெல்லாமெடுத்து மந்த்ரங்களைச்சொல்லிக்கொண்டுவிதிப்படி அக்நியில் ஹோமஞ் செய்தனர். 'மற்றைப்பசுக்களின் ஹவிஸ்ஸை இரவிக்கிலைகளால் செய்யப்பட்ட பாயிலிட்டுச் சுத்தஞ் செய்யவேண்டும்; அச்வத்தின் ஹவிஸ்ஸை மாத்திரம் நீர்வஞ்சிக்கொடியால் செய்யப்பட்ட பாயிலிட்டுச் சுத்திசெய்யவேண்டும்' என்னும்விதிப்படியே செய்துமுடித்தனர். அச்வமேதஞ் செய்யவேண்டும் நாட்களனேகமாயினும் கல்பஸூத்ரங்களிலும் அதுக்கு மூலமான வேத ப்ராஹ்மண பாகங்களிலும் முக்கியமாய் மூன்று திநங்கள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அதில் முதல் நாள் சதுஷ்டோமமென்றும், இரண்டாவதுநாள் உக்த்யமென்றும், மூன்றாவதுநாள் அதிராத்ரமென்றும்

யென்றும், ராஜாவுக்குப் பாத்ரங் கொடுப்பவள் பாலாகலியென்றும் அறிக. இந்நால்வரில்—மஹிஷியை ப்ரஹ்மாவுக்கும், பரிவ்ருத்தியை உத்காதாவுக்கும், வாவாதையை ஹோதாவுக்கும், பாலாகலியை அத்வர்யுவுக்கும் அரசன் தக்ஷிணையாகக்கொடுக்கவேண்டும். இந்தக்ரமம் 'மஹிஷீம் வீரஹ்மணே ஹோத்ரே, வாவாதாம் ஹோத்ரே, பரிவ்ருத்திமுத்கா த்ரே, பாலாகலீமத்வர்யவே' என்று ஸூத்ரத்திற் சொல்லப்பட்டது. பின்பு அந்தருத்விக்குகளும் அவர்களுக்குப்பதிலாக த்ரவ்யத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களைக் கொடுத்துவிடுவர்கள்.

யாகங்களை நடத்துவதால் அந்தந்த யாகத்தின் பேரால் அந்தந்தத் திங்களுக்கு வ்யவஹாரம் நடந்து வருவ துண்டு. அப்படியே அம்மூன்று திங்களிலும் அம் மூன்று யாகங்களை விதிப்படி நடத்தினர். அன்றியே இதர சாஸ்த்ரங்களில் இவ்வச்வமேதத்துக்கு மற்றுஞ் சில யாகங்களைச் செய்யவேண்டுவதாகச் சொல்லுகை யாலே, அவைகளையுங் குறைவறச்செய்வித்து நடத்தி னர். அவை ஜ்யோதிஷ்டோமமொன்றும் ஆயுர்யாக மொன்றும் அதிராத்ரமிரண்டும் அபிஜித்தொன்றும் விச்வஜித்தொன்றும் அப்தோர்யாமமென்கிற மஹா யஜ்ஞமொன்றும் ஆக ஏழு யாகங்கள். இப்படி அம் மூன்று திங்களொழிய மற்றைத் திங்களில் இந்த யாகங்களையும் மேன்மேலும் கன்மையையிருப்பி அவ்வர சன் செய்வித்தனன். தாகத்தில் மிகவும் புகழ்பெற்ற இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த அத்தசரத மஹாராஜன் தன் குலத்தின் புகழ் மேன்மேலும் வளரும்படி ஹோதா வுக்குக் கிழக்குத்திசையையும், அத்வர்யுவுக்கு மேல் திசையையும், ப்ரஹ்மாவுக்குத் தென்திசையையும், உத் காதாவுக்கு வடதிசையையுமாக இப்படி தக்ஷிணை கொ டுத்தனன். இத்தாகம் அம்மன்னவன் புதிதாய்க் கற் பித்துச்செய்ததன்று. முன்பு தானே தோன்றிய கான் முகக்கடவுள் செய்த அச்வமேதயாகத்தில் இங்ஙனம் தக்ஷிணை ஏற்படுத்தப்பட்டது. ஆகையால் மஹா புருஷ ரிகிய அத்தசரத மன்னவனும் க்ரமப்படி யாகத்தை நிறைவேற்றி அந்த யாகம் பூர்த்தியாகும்பொருட்டு பூமி யனைத்தையும் ருத்விக்குகளுக்குத் தாரஞ்செய்தனன். அவ்வர்தனர்களனைவரும் அங்ஙனந்தாரஞ்செய்து கல் மஷமொன்றுமின்றி விளங்கும் அம்மன்னவனைநோக்கி, 'மஹாராஜனே! இப்பூமண்டலமனைத்தும் நீர் ஒருவரே

ஆளத்தக்கவர். இப்பூமியில் எங்களைப்போல்வாருக்கு ப்ரயோஜநமென்?. நாங்கள் இதைக்காக்க வல்லமையற்றிருக்கின்றனம். ஏனெனில், நாங்கள் எப்பொழுதும் வேதமோதுவதே தொழிலாகி எப்பொழுதும் அதில் ஊற்றங்கொண்டிருக்கின்றோ மாகையால் நாங்கள் இப்பூமியையாள அறியோம். உமக்கோ இது ஸஹஜமான தொழில். இப்பூமண்டலத்துக்குப் பதிலாக இதன் விலையைக் கொடுத்துவிடும். விலையற்ற இப்பூமண்டலத்துக்குப் பதிலாக விலையெங்ஙனம் கொடுப்பதென்று சிந்திக்க வேண்டாம். நீர் ஏதாயினும் கொஞ்சம் கொடுத்தீராயினும் போதும். நரோத்தமனே! மிகவும் மேலான ரத்நங்களையாவது கல்ல பொன்னையாவது பசுக்களையாவது மற்றுமுமக்குண்டான எதையாவது கொடுத்துவிடுவீராக. இப்பூமியால் எங்களுக்கு ப்ரயோஜநமில்லை' என்றனர். இங்ஙனம் வேதங்களின் கரையறிந்த அவ்வந்தணர்கள் சொல்லக்கேட்ட அம்மன்னவனும் அவர்களுக்குப் பசுக்கள் பத்துலக்ஷமும் பொன் பத்துக்கோடியும் அதுக்குப் பத்துப்பங்கதிகமாக வெள்ளியும் தாகஞ்செய்தனன். பின்பு ருத்விக்குகள் அனைவரும் ஒன்றுகூடி, தங்களுக்கு மொத்தமாக வந்தஅத்தப் பணத்தையெல்லாம் பங்கிடும்பொருட்டு ருச்யச்ருங்கமாமுனிவரும் புத்தியமைந்த வஸிஷ்டமாமுனிவருமாகிய இவ்விருவரிடங் கொண்டுவந்து கொடுத்தனர். பிறகு அவர்கள் யாவரும் அவ்விருவர் மூலமாய் க்ரமப்படி பங்கிட்டுக்கொண்டு மிகவும் மனக்களிப்புற்று மன்னவனை நோக்கி 'எங்களுக்கு மிகுந்த ஸந்தோஷமாய்விட்டது. மற்றொன்றும் வேண்டாம்' என்றுரைத்தனர். அப்பொழுது அம்மன்னவன் யாகத்தைப் பார்க்க வந்த அந்தணாளனைவர்க்கும் நன்கு ஊக்கங்கொண்டு பொன்னைக்

கோடிகோடியாகக் கோடிக்கணக்கில் கொடுத்தனன். பின்னும் பேதையாகிய ஓர் அந்தணன் உயர்ந்த கைவளை வேண்டுமென்று யாசிக்க, அவ்வரசன் தன் கைவளைகளை யீந்தனன். இப்படி யதேஷ்டமாக தக்ஷிணை யளிக்க ப்ராஹ்மணர்கள் யாவரும் களித்தனர். அந்தணர் விஷயத்தில் அளவற்ற அன்பு கொண்ட அம்மஹீபாலனும் ஸந்தோஷத்தினால் கண்கள் பரந்து ஆனந்த நீர் சொரிந்துகொண்டு அவ்வந்தணர்க்கு நமஸ்காரஞ் செய்தனன். மிகவும் உதாரனாகி மானிடவர்களில் மஹா வீரனுமாகிய அத்தசரத மஹாராஜன் இவ்வாறு பூமியில் தலை சாய்த்து வணங்க, அவ்வந்தணரனைவரும் அவ்வரசனுக்கு விதிப்படி ஆசீர்வாதஞ்செய்தனர். இங்ஙனம் பாபங்களையெல்லாம் போக்க வல்லதும் விண்ணுலகையளிக்குந்திறமுடையதுமாகி மற்றை மேலான அரசர்களாலும் செய்ய முடியாததுமான யாகங்களனைத்திலும் சிறந்த அச்வமேதமென்னும் அம்மஹாயாகத்தைக் குறைவறச்செய்து முடித்தமையால் அம்மன்னவன் மிக்க மனக்களிப்புற்றனன். பின்பு தசரதன் ருச்யச்ருங்கரைப் பார்த்து 'ஓ நல்லொழுக்கமுள்ள மாமுனிவரே! எனது வம்சம் விருத்தியாகும்படியான காரியத்தை நீர் செய்ய வேண்டும்' என்றனன். அவ்வேதியரும் அப்படியே யென்று அரசனை நோக்கி 'ராஜனே! உன் குலத்தை விருத்திசெய்ய வல்ல நான்கு புதல்வர்கள் உமக்குண்டாகப்போகின்றனர்' என்றுரைத்தனர். இப்படி அவ்வந்தணர் இனிதாகச் சொன்னசொல் கேட்ட மஹாத்மாவாகிய அத்தசரதமன்னவன் அம்முனிவரை நமஸ்கரித்து மிகவும் களித்திருக்க, அவ்வந்தணர் மீளவும் அம்மன்னவனை நோக்கி இவ்வண்ணம் மொழிந்தனர். பதினொன்காவது ஸர்க்கம் முற்றிற்று.

தேவதைகள் விஷ்ணுவினிடம் சென்று ராவணனுடைய துஷ்டத்தனத்தைச் சொல்லுதல்.

ருச்யச்ருங்க மாமுனிவர் மேதாவியும் அதர்வவேதங்களை நன்கறிந்தவருமா யிருப்பவர். ஆகையால் அவர் அவ்வரசனுக்குப் புதல்வர் உண்டாவரென்று வாக்களித்த பின்பு 'இவனுக்குப்பிள்ளை பிறக்கும்பொருட்டுச் செய்யவேண்டிய கருமம் யாது' என்று சற்றுநேரம் தியானித்து மதியாளராகையால் அவ்வளவிலே தகுந்த உபாயத்தை நினைவு மூட்டிக்கொண்டு ராஜனைப்பார்த்து 'நான் உமக்குப் பிள்ளையுண்டாகும்பொருட்டு சாஸ்த்ரங்களில் ஏற்பட்டதும் பிள்ளையைப் பிறப்பிக்கவல்லதும் அதர்வவேதத்தில் சொல்லப்பட்ட மந்த்ரங்களைக்கொண்டு செய்யவேண்டியதுமான ஓர் யாகத்தை விதிப்படி செய்யப்போகின்றேன்' என்று சொல்லினர். பின்பு அப்படியே பிள்ளையைத்தரவல்ல அந்த யாகத்தை அவ்வரசனுக்குப் பிள்ளையுண்டாகும்பொருட்டுச் செய்யத் தொடங்கி மந்த்ரங்களிற் சொல்லியபடி அக்நியில் ஹோமம் செய்தனர். பிறகு தேவதைகளும் கந்தர்வர்களும் வித்தர்களும் நான்முகக்கடவுளும் மற்றும் மஹர்ஷிகளும் அந்த யாகத்தில் தங்கள் தங்கள் ஹவிர்ப்பாகம் வாங்கிக்கொள்வதற்காக ஒன்றுய்க் கும்பல்கூடி வந்தனர். அங்ஙனம் வந்து சேர்ந்த தேவதைகள் யாவரும் அந்த யாகஸபையில் பிறர் காணுதபடி யிருந்து உலகத்தைப்படைக்கும் ப்ரஹ்மதேவனைப்பார்த்து இச்சிறந்த வார்த்தையை மொழிந்தனர். 'ஓ பகவானே! உன் தருள் பெற்று யாவராலுந் தடுக்கமுடியாத பராக்ரமங் கொண்ட ராவணனென்னும் ராக்ஷஸன் எங்களை யனைவரையும் தொந்திரவு செய்துகொண்டிருக்கின்றனன். நாங்

கள் அவனை அடக்கவல்லமையற்றிருக்கின்றனம். முன்பு நீர் அவனிடம் மிகுந்த ப்ரீதி கொண்டு எங்களால் எவ்விதத்திலும் சாவுண்டாகாமற்படி வரங்கொடுத்தீர். நீர் கொடுத்த வரத்தைப் பாராட்டிக்கொண்டு நாங்களும் அவன் செய்யுஞ் செயல்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கின்றனம். அவ்வறிவுகேடன் மூன்று லோகங்களையும் நடுங்கச்செய்கின்றனன். உயர்ந்தவர்களாகிய திக்பாலர்களையும் பகைக்கின்றனன். இவர்களை அவர்களையென்று சொல்லியென்? தேவர்களுக்கெல்லாம் அரசாகிய மஹேந்திரனையே பட்டத்தினின்றும் தொலைக்க விரும்புகின்றனன். அவன் நீர் கொடுத்த வரத்தினால் மதிமயங்கிக் கொழுத்து, எதிரிடக்கூடாத ரிஷிகளையும் யக்ஷர்களையும் கந்தர்வர்களையும் நாகு முதலிய அஸுரர்களையும் அந்தணர்களையும் அலக்ஷியஞ்செய்து வருத்துகின்றனன். அவன் க்ரீடாபர்வதம் முதலிய இடங்களில் திரிந்துகொண்டிருக்கும்பொழுது சுடும்படி சூரியன் வெய்யிற் காயர்ன். அவன் பூந்தோட்டங்களில் விளையாடிக்கொண்டிருக்கையில் வேகமாக வீசில் மேலே புஷ்பங்கள் விழுமோவென்று பயந்து காற்றும் வேகமாக வீசுகின்றதில்லை. எப்பொழுதும் கரையில் வீசுகின்ற அலைகளையுடைய ஸமுத்ரமும் அவனைக்கண்டால் கொஞ்சமும் அசையாமலிருக்கின்றது. கர்ப்பங்கலங்கும்படி மிகவும் பயங்காமாய்த்தோன்றும் அந்த ராக்ஷஸனிடத்தில் எங்களுக்குப் பயமதிகமாக உண்டா யிருக்கின்றது. ஆகையால் அவனைக்கொல்லவேண்டிய உபாயத்தை நீர் ஆலோசித்துச் செய்யவேண்டும்' என்று இப்படி தேவர்களனைவராலும் வேண்டிக்கொள்ளப்பட்ட நான்முகனும் சற்றுநேரம் ஆலோசித்து உடனே ஸந்தோஷமாக 'துராத்மாவாகிய அந்த ராவண்னைக்கொல்ல

உபாயம் எனக்கு இங்ஙனம் தோற்றினது. அதுபா தெனில், அவன் கந்தர்வர்களாலும் யக்ஷர்களா லும் தேவர்களாலும் அஸுரர்களாலும் எனக்கு வதம் நேரிடக்கூடாதென்று வரங்கேட்டனன். நானும் அப் படியே யாகட்டுமென்று சொல்லிவிட்டனன். அவ்வரக் கன் அங்ஙனம் வரம் கேட்கும்போது மானிடர்களைப் பற்றிக்கேட்டால் தனக்கு அவமதியா யிருந்ததைப்பற்றி அவர்களால் தனக்கு வதம்நேரிடக்கூடாதென்று கேட்க வில்லை. ஆகையால் மானிடர்களைக்கொண்டேஅவனைக் கொல்லவேண்டும். இவனுக்கு வேறு மருந்து இல்லை' என்று மொழிந்தனன். இப்படி நான்முகன் உரைத்த இ னிய அம்மொழியைக்கேட்டுத் தேவதைகளும் மஹர்ஷி களும் மிகுந்த ஸந்தோஷங்கொண்டனர். இங்ஙனமிருக் கும் ஸமயத்தில் எப்பொருள்களிலும் உள்ளும் புறமும் ஒருங்க நெருங்கி வியாபித்திருக்குந்தன்மையனுகையால் இவையெல்லாமறிந்த ஸர்வேச்வரனுகிய ஸ்ரீ மஹாவிஷ் ணு தாம் நிலைசை ரக்ஷிக்கும்படியான காலம்வாய்த்ததே யென்று ஸந்தோஷத்தினால் திருமேனியெங்கும் மிக்க ஒளிபெற்று ஆச்ரிதர்களைக் காக்குங் கருவிகளாகிய சங்குசக்கரம் முதலிய ஆயுதங்களை யேந்திக்கொண்டு பீதாம்பரம் விளங்கத் தான் ஜகத்பதியாயினும்அப்பெரு மையைப் பாராமல் அங்கே யெழுந்தருளி நான்முகக்கட வுளின் அருகே வந்து நின்றனன். இப்படி யெழுந்தரு ளின ஸர்வேச்வரன் நான்முகனுடன் கலந்து ஆச்ரித ரக்ஷணத்துக்குரிய செயல்களை ஊக்கத்துடன் நினைவிட் டுக்கொண்டிருக்க, தேவர்கள் அனைவரும் எழுந்து பணிந்து பலவகையாகப் புகழ்ந்து இங்ஙனம் மொழிந்த னர். 'ஓ மஹா விஷ்ணுவே! நீர் உலகங்களுக்கு நன் மை செய்யும்பொருட்டுத், தாமுகவே ஸித்தமாயிருக்குக்

தன்மையர். அப்படிப்பட்ட உம்மை நாங்கள் லோக ரக்ஷணத்தின்பொருட்டுத் தூண்டவேண்டியதொன்று மில்லையேயாயினும் அவ்விஷயத்தில் வீணுகவே ஏவுகின்றனம். ஏவுகிறகாரிய மென்னவெனில், ஸகல தர்மங்களையும் அறிந்து மிகவும் தாநசீலருகி மஹர்ஷியைப்போல் விளங்கும் அயோத்யாதிபதியாகி, அதோ யாகஞ் செய்துகொண்டிருக்கும் தசரத மஹாராஜனுக்கு நாணம் செல்வம் புகழ் என்பவைகளே வடிவங்கொண்டு பிறந்தாற்போல் விளங்கும் மனைவிகள் மூவரிடத்திலும் நீர் உம்மை [1]நான்குவகையாகப் பிரித்துக்கொண்டு நாலு பிள்ளைகளாய்ப் பிறக்கவேண்டும். அப்படி அவ்வரசன் மனைவிகளிடத்தில் நீர் மனிதனுய்ப்பிறந்து, வீர்யபலங்களால் மேன்மேலும் வளர்ந்து உலகங்களுக்கெல்லாம் பகைவனுகி, தேவதைகளாலும் கொல்ல முடியாத ராவணனை யுத்தத்தில் முடிக்கவேண்டும். மூர்க்கனுகிய அந்த ராவணனென்னும் அரக்கன் வீர்யத்தின் மிகுதியால் அடக்கமுடியாத கர்வங்கொண்டு தேவர்களையும் கந்தர்வர்களையும் ஸித்தர்களையும் மஹர்ஷிகளையும் பீடித்துக்கொண்டிருக்கின்றனன். அவன் பின்னும் ரிஷிகளையும் நந்தவநத்தில் தம்பதிகளாகி விளையாடிக்கொண்டிருக்கிற கந்தர்வர்களையும் அப்ஸரஸ்ஸுத்ரீகளையும் கிஞ்சித்தேனும் மனமிரக்கமின்றி மிகவும் க்ரூரனுகி வருத்துகின்றனன். ஆகையால் அவனை அவச்யம் கொல்ல

---

1 நான்கு வகையாகப் பிரித்துக்கொண்டு நாலுபிள்ளைகளாய்ப் பிறப்பதேதுக்கென்னில், ராவணனையும், ராவணபுத்ரனுகிய இந்த்ரஜித்தையும், லவணஸுரனையும், கந்தர்வர்களையும் விசேஷமாகக் கொல்லுவதற்காகவென்னும் கோவிந்தராஜீயம். ஸாமான்யதர்மத்தையும், விசேஷ தர்மத்தையும், விசேஷ தாதர்மத்தையும், விசேஷதமதர்மத்தையும் வெளியிடுவதற்காகவென்று முகவுரையிற் சொன்னதை யிங்குக் காரணமாக உணர்க.

வேண்டும். அவனை வதஞ்செய்யும் பொருட்டு யக்ஷகந்தர்வ ஸித்தர்களும் முனிவர்களும் மற்றுமுள்ள தேவர்களுமாகிய நாங்கள் அனைவரும் உம்மிடம் வந்து உம்மையே சரணம் புகுந்தனம்; ப்ரஹ்மருத்ரர்கள் முதலியவர்களுமிருக்க, என்னையே சரணமடைவது ஏனென்று கேட்கவேண்டாம். தேவனே! நீரேயன்றே எங்களனைவர்க்கும் மேலானகதி? எப்படிப்பட்ட சத்ருவும் பறந்தோடும்படியான உம்மையன்றியே வேறொருத்தர் எங்களுக்கு உண்டோ? ஆகையால் நீர் உம்மையே சரணம் புகுந்த தேவதைகளின் சத்ருக்களாகிய ராக்ஷஸர்களை நிர்மூலமாகத் தொலைக்கும் பொருட்டு மநுஷ்யலோகத்தில் அவதரிப்பதாகத் திருவுள்ளங் கொண்டருளவேணுமென்றனர். தேவதைகள் இங்ஙனம் தன்னை ப்ரார்த்திக்க, தேவதைகளில் சிறந்து அத்தேவர்களுக்கும் பிரபுவாய் உலகமனைத்தும் அடிவணங்குகின்ற மஹாவிஷ்ணு, அவ்விடத்தில் கும்பல்கூடி வந்து தன்னைச் சரணம்புகுந்த நான்முகன் முதலிய தேவர்கள் அனைவரையும்நோக்கி, 'ஓதேவர்களே! நீங்கள் பயப்படவேண்டாம். உங்களுக்கு நன்மையுண்டாகும். ஏனெனில் கெடுநினைவு கொண்டு தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பயத்தை விளைவிக்குமவனுய் மிகக்கொடியவனுமாகிய ராவணனையும் அவன் பிள்ளைகளையும் பேரன்களையும் நண்பர்களையும் மந்த்ரிகளையும் ஜ்ஞாதிகளையும் மற்றுமுள்ள பந்துக்களையும் யுத்தத்தில் முடித்து தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டு இப்பூமி யனைத்தும் பரிபாலஞ் செய்துகொண்டு பதினாயிரமாண்டுகள் இருக்கப் போகிறேனென்றனன். ஆக்குவது அழிப்பதாய் விளையாடல் கொண்டு ஸகலாத்மசேஷியாய் விளங்கும் அம்மஹாவிஷ்ணுவுக்கு இதெவ்வளவு? இப்படி அம்மஹாநுபாவன்

தேவதைகளுக்கு வரங்கொடித்து அவர்கள் வேண்டிக் கொண்டபடி மநுஷ்யலோகத்தில் தான் வந்துபிறக்கத் தக்கதோரிடத்தை ஆலோசித்தனன். அங்ஙனம் ஆலோசித்தபின்பு தாமரையிதழ்போல் மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப்பெரியவாயகண்களையுடைய பெருந் தேவன் அப்போழுது தனது சரீரத்தை நான்குவகையாகச்செய்துகொண்டு தசரதமஹாராஜனைத் தகப்பனாக விரும்பினன். பின்பு கந்தர்வர்களும் பதினெருருத்ரர்களும் மூப்பத்துமுக்கோடி தேவதைகளும் அப்ஸரஸ்ஸ்த்ரீகளும் அம்மதுசூதனனிய மஹாபுருஷனை திவ்யாத்மஸ்வரூபவிஷயமான துதிகளால் புகழ்ந்தனர். மேலும் அவ்வானவர்கள் அனைவரும் மீளவும் அம்மஹாவிஷ்ணுவைப்பார்த்து, தேவனே! அந்த ராவணன் பிறந்தது முதலாக மிகவும் கர்வங்கொண்டவன், யாவரும் கேட்டமாத்திரத்திலே நடுங்கும்படியான பராக்ரமமுடையவன், அதற்குமேல் வரம்பெற்றதனால் மிகவும் கர்வம் மேலிட்டு தேவேந்திரனேடும் பகைசெய்து உலகங்கள் அனைத்தையும் ஐயோவென்று அழும்படி வருத்தச்செய்கின்றனன். இவையெல்லாமிருக்க, காட்டில் காய்கிழங்குகளைக் கொண்டு பக்ஷித்துத்தவஞ்செய்துபோதுபோக்குந் தாபஸர்களையும் வருத்தமுறச்செய்து தன்பேரைச் சொன்னவாறே அவர்களைக் கடகடவென்று நடுங்கச்செய்கின்றனனென்னில் இன்னமும் அவனுடைய கொடுமையைச் சொல்லவேண்டுமோ? அவனை நீர் முடிக்காமலிருக்கத் தகாது. ஆகையால் முன்னே அவனுருவைத் தொலைக்க வேணும். ஓ தேவாதிதேவனே! மிகுந்த விக்ரமங்கொண்டுலகங்களையெல்லாந் துன்பப்படித்துகிறராவணனென்னுமவ்வரக்கனைப் படைகளோடும் சுற்றத்தாரோடும் யமனது வீட்டுக்கு அதிதியாகச்செய்து மனவருத்

தம் தீர்த்து ராகத்வேஷம்முதலிய தோஷங்களொன்று மின்றி எங்களைப்போன்றவர்களாலு மணுகவொண்ணாத உமது திவ்யலோகத்துக்கெழுந்தருளவேணு மென்று மொழிந்தனர். பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸ்ரீமஹாவிஷ்ணு தேவர்கள் சொல்லியபடி மநுஷ்யனுகப்பிறக்க எண்ணம் கொள்ளுதல்.

உலகங்களுக்கெல்லாந் தான் ஆதாரமாய்த் தானும் உலகத்திலெங்கும் பரத்து நிற்பவனுய் ப்ரளயமஹாஜலத்தில் பள்ளிகொண்டவனுய் யாவர்க்கும் மேலாய் படைப்பது காப்பது அழிப்பது என்னுமிப்படிகளிலே விளையாடலுறுமவனுய் ஸ்ரீமந்நாராயணனுமாகிய அம்மஹாபுருஷன் இங்ஙனம் தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டபின்பு தானே எல்லாமறிந்தவனுயினும் தேவர்களைப் பெருமைபடுத்தும் பொருட்டு அவர்களைக் குறித்து மிகவு மழகாக 'ஓ தேவதைகளே! கெடுதிகளைவு கொண்டு ரிஷிகளுக்குப் பகைவனுகிய ராவணனென்னும்அவ்வரக்கனை எவ்வுபாயத்தைக்கொண்டு முடிக்கலாமென்று கேட்க, தேவதைகள் அனைவரும் எப்பொழுதும் அழிவின்றி விளங்கும் அம்மஹாவிஷ்ணுவைப் பார்த்து, தேவனே! மானிட வடிவங்கொண்டு யுத்தத்தில் ராவணனைக் கொல்லவேண்டும். மநுஷ்ய தேஹமே யெடுக்கவேண்டுவதே னெனில், பகைவரை வெல்லும் பரமபுருஷனே! அவன் வெகுகாலம் ப்ரஹ்மாவைக்குறித்து மிகவும்கடோரமான தவஞ்செய்தனன். உலகங்களுக்கெல்லாம் முன்னே பிறந்து அவ்வுலகங்களை யெல்லாம் படைத்த நான்முகக்கடவுள் எவ்வித வரங் கேட்கிலும் கொடுக்க வல்லவனுகையால் அத்தவத்துக்கு மிகவும் ஸந்தோஷங்கொண்டு

மனிதர்களைத் தவிர மற்றைப் பலவிதமான ப்ராணிகளிடத்திலிருந்து பயம் உண்டாகாதென்று அவ்வரக்கனுக்கு வரங்கொடுத்தனன். அப்படிக்கு நான்முகன் முன்னே வரங் கொடுக்கும்போது அவ்வரக்கன் மனிதரெவ்வளவென்று அவர்களைக் கொஞ்சமும் நினைக்கவேயில்லை, இப்படி ப்ரஹ்மதேவனிடம் வரம் பெற்று அவன் மிகுந்த கர்வத்துடன் மூவுலகங்களையும் பீடித்து, மேலும் முறைகடந்து மாதர்களையும் இழுத்துக்கொண்டுபோகின்றனன். ஆகையால் அவனுக்கு மனிதர்மூலமாகவே சாவு நேரிடவேண்டியிருக்கிறதென்றனர். இப்படி அவர்கள் சொன்ன வார்த்தையைக்கேட்டு ஸர்வர்க்கும் அந்தராத்மாவாகிய அம்மஹாவிஷ்ணு மானிடரூபமாய்த் தான் அவதரிக்கும்பொருட்டு, தசரதமஹாராஜனைத் தகப்பனாகவிரும்பினன். அப்பொழுது பகைவரை வென்று மிக ஒளி பொருந்திவிளங்கும் அத்தசரதமன்னவன் ஸந்தாகமின்றியிருக்கையால் புதல்வனைப் பெறவிரும்பி புத்ரனையடையவல்ல புத்ரகாமேஷ்டியென்னும் யாகத்தைத்தொடங்கிச்செய்தனன். இங்ஙனமிருக்க, ஸ்ரீமஹாவிஷ்ணுவும் மநுஷ்யரூபங்கொண்டு அவதரிக்கவேண்டுமென்று நிச்சயஞ்செய்துகொண்டு தேவதைகளும் மஹர்ஷிகளும் பூஜித்துநிற்க, நான்முகனை நோக்கி 'நல்லது அவ்வாறேசெய்யலாம். யான்போய்வருகின்றேன்' என்று சொல்லி மறைந்துவிட்டனன். பின்பு யாகஞ்செய்துகொண்டிருக்கும் தசரதனது ஆஹவநீயாக்நிகுண்டத்தினின்று பெரும்பூதமொன்றுகாண்போர் கண்களெல்லாம் மின்மினுக்கும்படி மிகுந்த ஒளிபொருந்தி வெளியேகிளம்பிற்று. அது மிகுந்த வல்லமையும் சிறந்த வலிவும் பெற்று, கறுப்புஞ்சிவப்புங்கலந்த வஸ்த்ரந்தரித்து, சிவந்த முகத்துடன் தென்பட்டது. மேலும்

அது துஷ்துபிவாத்யம் போன்ற வொலியை யொலித்து, உடம்பிலும் தலையிலும் மீசையிலும் சிங்கத்தின் மயிர் போல் நிருநிகென்று நெருங்கி விளங்குகிற மயிர்கள் அமைந்து, சுபலக்ஷணங்களனைத்தும் பொருந்தி, உயர்ந்த ஆபரணங்களால் அலங்காரம் பெற்று, பர்வதசிகரம் போல் உயர்ந்து, மதித்த புலிபோன்ற பராக்ரமமடைந்து ஸூர்யனை யொத்த உருவங்கொண்டு கொழுந்து விட்டெரியும் அக்நிஜ்வாலையை யெதிர்த்து, மிகவும் அற்புதமாய் விளங்கிற்று: இவ்வளவன்றியே வெள்ளியினால் செய்த மூடியிடப்பெற்று, திவ்ய பாயஸத்தினால் நிறைந்து, புடமிட்டபொன்னாலமைக்கப்பட்டு,மாயையோ? என்னும்படி அற்புதமான ஓர் பாத்ரத்தை அன்புள்ள பத்நியைப்போல் இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு மேற்கிளம்பி தசரதனைப்பார்த்து 'அரசனே! இங்கு வந்திருக்கும் என்னை ப்ரஜாபதியினிடமிருந்து வந்த புருஷனாகத் தெரிந்துகொள்' என்றது. பின்பு அப்பொழுது அம்மன்னவன் கையைக்கூப்பிக்கொண்டு 'பகவானே! உனக்கு நல்வரவு உண்டாகவேணும். நான் உனக்குச் செய்யவேண்டியதை அருளிச்செய்ய வேணுமென்றனன். பிறகு அந்த ப்ராஜாபத்ய புருஷன் மீளவும் அரசனைப்பார்த்து 'ராஜனே! நீ அச்வமேதஞ் செய்தும் புத்ரகாமேஷ்டி செய்தும் தேவர்களை ஆராதித்தாயாகையால் உனக்கு இப்பொழுது இந்தப் பாயஸம் கிடைத்தது. மஹாராஜனே! இப்பாயஸம் தேவனாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவால் நிருமிக்கப்பட்டது. ஸந்தாநத்தை யுண்டுபண்ண வல்லது. பொருளைக் கொடுக்கும் திறமுடையது. ஆரோக்யத்தையும் விருத்தி செய்யவற்று. ஆகையால் இதைக் கைப்பற்றி உனக்குத் தக்கவர்களாகிய பத்நிகளுக்குக் கொடுத்து சாப்பிடச் சொல். அப்படி

ண்டதுபோலிருப்பவர்களும், நினைத்தபடி வடிவங்கொள்ளவல்லவர்களுமாகிய வானரர்கள் ராவணனைக்கொல்லுவதில் மிகவிருப்பமுள்ளவர்களாய் அநேகமாயிரம்பேர் படைக்கப்பட்டனர். மேலும் மேருமந்தரமலைகள்போல் அசைக்கமுடியாது மிகுந்தபலமுடையவர்களும், உரத்த தேகம் பொருந்தியவர்களுமாகிய கரடிகளும் குரங்குகளும் முசுக்களும் சடக்கென மனத்திலுல் பிறந்தனர். அந்தந்தத் தேவதைகளுக்குள்ள ரூபங்களும் வேஷங்களும் பராக்ரமங்களும் அவரவர் புதல்வர்களுக்குச் சிறிதுங் குறைவின்றி, தனித்தனியே யுண்டாயிருந்தன. முகமொன்றுமே வர்ணம் முதலியவை போன்றதாய் குறை சரீரமெல்லாம் அந்தந்தத்தேவதைகளைப்போலிருக்கப்பெற்று அவ்வீரர்கள் அனைவரும் விளங்கினர். பராக்ரமத்தில் புகழ்பெற்ற சில வானரர்கள் பெண் மலை முசுக்களிடத்தில் பிறந்தனர். மற்றுஞ்சில வானரர் பெண்கரடிகளிடத்திற்பிறந்தனர். பின்னுஞ்சிலர் கிந்நரஸ்த்ரீகளாலுண்டாயினர். இங்ஙனம் மிகுந்த புகழ்கொண்ட தேவதைகளும் கருடன் முதலியவர்களும் யக்ஷர்களும் திக்கஜங்களும் கிம்புருஷர்களும் ஸித்தர்களும் வித்யாதரர்களும் வாஸுகிமுதலிய நாகங்களும் மற்றுமுள்ளவரும் அப்ஸரஸ்ஸ்த்ரீகளிடத்திலும் வித்யாதரஸ்த்ரீகளிடத்திலும் நாககன்னிகைகளிடத்திலும் கந்தர்வப்பெண்களிடத்திலும் விஷ்ணு அவதாரஞ்செய்யுங்காலத்தில் ஆங்காங்கு வனங்களில் ஸஞ்சரித்துக்கொண்டு பருத்தஉருவமுடைய வானரர்கள் யாவரையுமுண்டாக்கினர். இவ்வானரவீரர்கள் அனைவரும் நினைத்தபடி வடிவங்கொள்ளவல்லமையுள்ளவர். மனம்போனவழியெல்லாம் தடையின்றித்திரியுந்தன்மையுடையவர். வீர்யத்திலும் பலத்திலும் புலிகளோடும் சிங்கங்க

ளோடும் ஒத்திருப்பவர். கற்களையும் மரங்களையும் நகங்களையும் கோரைப்பற்களையும் ஆயுதமாகக்கொண்டு போர் புரிய வல்லவர். ஆகிலும் தேவாம்சமாகப் பிறந்தவர்களாகையால் அஸ்த்ரப்ரயோகோபஸம்ஹாரம் முதலிய உபாயங்கள் யாவும் அவர்களுக்குத் தானே தோன்றியிருக்கும். பெரியமலைகளையும் கைகளால் அசக்கிவிடுவர். ஊர்த்த மரங்களையும் பிளக்கச் செய்வர். நதிகள்வந்து விழும் ஆழ்ந்த ஸமுத்ரத்தையும் தமது வேகத்தால் கலக்கிவிடுவர். இப்பூமியைத் தமதுபாதங்களால் பிளக்கவல்லவர். பெருங்கடலையும் ஓர்வாய்க்காலைப்போல் கடந்து விடுவர். ஆகாயத்திலும் போகவல்லமையுள்ளவர். மேகங்களையும் பிடித்துக்கொள்வர். மதம் பிடித்துக் காட்டில் திரியும் மஹாகஜங்களையும் பிடிப்பர். ஆகாயத்தில் பறக்கும் பறவைகளைத் தரம் கர்ஜித்த கர்ஜனையால் கீழே விழச்செய்வர். இங்ஙனம் காமரூபிகளாய் மஹாதீரர்களாகிய வலிவு பெற்ற வாநரலோகாதிபதிகள் நூறு லக்ஷம் பேர் பிறந்தனர். அதில் ஸுக்ரீவனைத்தொடங்கி ஸுஷேணனீறாகவுள்ளவர் யாவரும் தலைவராகிய அவ்வாநரலோகாபதிகளிலும் மேன்மை பெற்று, மேலும் மஹாவீரர்களாகிய வாநரர்களையுண்டாக்கினர். மற்றவர்களில் சிலர் ருக்ஷவந்தனென்னும் மலையின் தாழ்வரைகளைப்பற்றி வஸித்திருந்தனர். மற்றுஞ் சிலர் பலவிதமான மலைகளையும் கானகங்களையும் குறித்துச் சென்றனர். அச்சிறந்த வாநரர்கள் யாவரும் இந்த்ரபுத்ரனாகிய வாலியும் ஸூர்யபுத்ரனாகிய ஸுக்ரீவனுமாகிய ப்ராதாக்கள் இருவரையும் அரசனாகவும், இளவரசனாகவும், நலன் நீலன் ஹநுமான் மற்றுமுள்ள வாநரப்படைமன்னர் ஆகிய இவர்களை மந்த்ரிகளாகவும் ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். அவ்வீரர்கள் யாவரும் கருடனையொத்த வலி

மைபெற்று, போர் செய்வதில் மிகுந்த வல்லமையமைந்து வீர்யங்கொண்டு சிங்கங்களையும் பெரும்புலிகளையும் மலைப் பாம்புகளையும் பிடித்து நசுக்கிக்கொண்டு திரிந்தனர். மஹாபுஜனும் மிகுந்த பராக்ரமமுடையவனுமாகிய வாலி தனது புஜபலத்தினால் கரடிகளும் முசுக்களும் குரங்கு களுமாகிய அவ்வீரர்கள் அனைவரையும் பரிபாலித்து வந்தனன். மேலும் அவர்கள் பலவிதமான உருவங்களும் வேறு வேறான அடையாளங்களு முள்ளவர்களாய்இப்பூ மியிலுள்ள மலைகளிலும் கானகங்களிலும் ஸமுத்ரங்க ளிலுள்ள தீவுகளிலும் பரந்து நிறைந்திருந்தனர். மிக வும் பருத்து வலித்து, பயங்கரமாயிருக்கும் அவ்வானர வீரர்களுடைய வடிவங்களைக்கண்டால் கூட்டங்கூட்ட மாய் மேகங்கள் உலாவுகின்றனபோலவும், ஓராகாரங் கொண்டு நடக்கும் பர்வத சிகரங்கள் போலவும் தோன் றும். அப்படிப்பட்ட மஹாபலவான்களாகிய வானரப்படை மன்னர் யாவரும் ராமனுக்கு ஸஹாயஞ் செய்வதற்காக இத்தரணீ முழுதும் பரந்து வஸித்திருந்தனர். பதினே ழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமாவதாரம்.

ஸ்ரீராமாதிகளின் பிறப்பும் அவரது வித்யாப்யாஸமும், விச்வாமித்திரன் வருவதும்.

இங்ஙனம் மஹாத்மாவாகிய அத்தசரதமஹாராஜ னுடைய அச்வமேதயாகம் புத்ரகாமேஷ்டியுடன் கூட நடந்து நிறைவேறிற்று. தேவர்களும் தந்தமுடைய ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக்கொண்டு வந்தவழியே திரு ம்பிப் போயினர். அரசனும் தீக்ஷையைப்பற்றிய நியமங் களை யெல்லாம் தீர்த்துவிட்டு, தனது பத்நிகளுடன்கூடி

வேலைக்காரர்களும் ஸேனையும் வர்ஹங்களுமாகச் சூழப்பெற்று நகரத்துக்குப் புறப்படத் தொடங்கினன். யாகத்திற்கு வந்த மன்னவர்கள் யாவரும் தசரதனல் தங்கள் தங்களுக்குத் தக்கபடி பூஜைகளைப்பெற்று ஸந்தோஷமடைந்து முனிவர்களில் தலைவராகிய வஸிஷ்டரையும் ரிச்யச்ருங்கரையும் நமஸ்கரித்துத் தந்தமுடைய நாட்டை நாடிச் சென்றனர். அவ்வயோத்யாநகரத்திலிருந்து தமது பட்டணத்துக்குச் செல்லும் செல்வம் நிறைந்த மன்னவரது ஸைந்யங்கள் அவ்வரசனல் கொடுக்கப்பட்ட விலையற்ற ஆடையாபரணங்களால் அலங்காரங்கொண்டு சுப்ரங்களாக விளங்கின. அப்படி மன்னவர்கள் யாவரும் விடை பெற்றுக்கொண்டு போகையில் அப்பொழுது ஸ்ரீமானுகிய தசரதனும் சிறந்த அந்தணர்களை முன்னிட்டுக்கொண்டு நகரத்தில் பிரவேசித்தனன். பின்பு அவ்வரசனல் நன்கு பூஜிக்கப்பட்ட ரிச்யச்ருங்கமுனிவர் சாந்தையுடன்கூடி மிகுந்த மதியுடைய ரோமபாத மஹாராஜனல் தனது பரிவாரங்களுடன் பின் செல்லப்பட்டுப் பிரயாணஞ் செய்தனன். இப்படி யாகத்துக்கு வந்தவர்கள் யாவரையும் அனுப்பிவிட்டு, தனது கருத்து ஈடேறப் பெற்று, பிள்ளைகள் பிறப்பதை எதிர் பார்த்துக்கொண்டு ஸுகமாக வாஸஞ்செய்துகொண்டிருந்தனன். பின்புஅச்வமேதயாகம் முடிந்து ஓராண்டு சென்றது. இப்படி ஓராண்டுசென்றபின், கௌஸல்யாதேவிபாயஸம்புஜித்தது முதலாகப் பன்னிரண்டாவதுமாதமாகிய சித்திரைமாதத்தில், நவமிதிதியினன்று, புனர்வஸுநக்ஷத்ரத்தில், ஸூர்யன், அங்காரகன், சனி, பிருகஸ்பதி, சுக்ரன் ஆகிய இவ்வைவரும் தந்தமுடைய உச்சஸ்தானங்களாகிய மேஷ மகாதுலாகர்க்கடக மீநங்களிலிருக்கையில், அதில் பிருகஸ்பதி சந்திரனுடிகலந்திருக்க, கர்க்கடக லக்நத்தில்

ஸகலஜகந்நாயகனும் உலகங்கள் அனைத்தும் வணங்கத் தக்கவனும் ஸமஸ்த சுபலக்ஷணங்களும் பொருந்தி மஹா பாக்யசாலியாய் விஷ்ணுவின் அர்த்தாம்சமாய், இக்ஷ்வாகுவம்சத்துக்கு மேன்மேலும் பெருமையைப்படைக்கவல்லவனுமாகிய ஸ்ரீராமனென்னும்புதல்வனைப்பெற்றனள். அக்கௌஸல்யாதேவி மிகுந்த ஒளிபொருந்தி கையில் வஜ்ரரேகை கொண்ட அப்புதல்வனைப்பெற்று வஜ்ராயுதத்தைக் கையில் தரித்த தேவேந்திரனைப்பெற்ற அதிதியைப்போல விளங்கினள். பின்பு கீலிகின்ற பராக்ரமமுடையனும் ஸகலகுணங்களும் நிறைந்து விஷ்ணுவினது நாலிலொன்றில் பாதிபாகமாகிய பரதனென்னும் புதல்வனைக் கைகேயி பெற்றனள். பின்பு ஸுமித்ராதேவி வீரர்களும் ஸகலஅஸ்த்ரங்களையும் அறிந்த வல்லவர்களும் விஷ்ணுவினது நாலிலோர்பாகமும் எட்டிலோர்பாகமுமாகிய லக்ஷ்மணனென்றும் சத்ருக்நனென்றும் இரண்டு புதல்வர்களைப் பெற்றனள். தெளிந்தமதியுடைய பரதன் புஷ்யநக்ஷத்ரத்தில் மீநலக்நத்தில் பிறந்தனன். ஸுமித்ரையின்புத்ரர்களாகிய லக்ஷ்மணனும் சத்ருக்நனும் ஆச்லேஷநக்ஷத்ரத்தில் மத்யாஹ்நத்தில் கர்க்கடகலக்நத்தில் உதித்தனர். இப்படி அம்மஹாராஜனுக்கு அதிரூபர்களாய் நற்குணங்கள் அனைத்தும் நிறைந்து காந்தியில் பூரட்டாதிநக்ஷத்ரங்கள்நான்குபோலவிளங்குமவர்களாய் கம்பீரஸ்வபாவமுடையவர்களுமாகிய நான்கு புதல்வர்கள் பிறந்தனர். அச்சமயத்தில் கந்தர்வர்கள் ஆகாயத்தில், மிக மதுரமாய்ப்பாடினர். அப்ஸரஸ்ஸ்த்ரீகளும் கூட்டங்கூடி ஆட்டமாடினர். தேவர்களும் துந்துபிவாத்யங்களைக் கணகண வென்று முழக்கினர். பின்னும் ஆகாயத்தினின்று பூமழைபெய்தனர். அயோத்தியிலும் ஜநங்கள்யாவரும் விரைந்தோடி ஸந்தோ

ஷம நிறைந்து மஹோத்ஸவங்கொண்டாடினர். நாலு பக்கத்து ஜநங்களும் நெருங்கிவர, நடர்களும் நர்த்தகர்களும் ரஸங்களும் பாவங்களும் நிறைந்து அழகாய் ஓரிடத்தில் அபிநயிக்க, மற்றோரிடத்தில் பாடகர்கள் பாட, மற்றுமோரிடத்தில் வாத்யம்வாசிக்கிறவர்கள் பலவித வாத்யங்களை முழங்கச்செய்ய, மற்றுமோரிடத்தில் ஸ்ரேஷ்டர்களும் வந்திகளும் மாகதர்களும் கட்டியங்களைப்படிக்க, ராஜமார்க்கங்களெங்கும் ஜனங்கள் நெருங்கப் பெற்றன. அரசனும் புராணம்படிக்கிற ஸ்ரேஷ்டர்களுக்கும், வம்சாவளி சொல்லும் மாகதர்களுக்கும், துதி செய்யும் வந்திகளுக்கும், தக்கபடி பரிசுகளைக்கொடுத்தனன். அந்தணர்களுக்குப் பசுக்களையும் பணங்களையும் ஆயிரமாயிரமாய்த் தந்தனன். [1]பின்பு லக்ஷ்மணன் பிறந்து பதிநெருநாள் செல்ல (அதாவது ராமன்பிறந்து பன்னிரண்டுநாள்கள் சென்றபின்பு) பதின்மூன்றுவதுநாள் அம்மன்னவன் புதல்வர்களுக்கு நாமகரணஞ்செய்யத் தொடங்கி, அதற்கு மிகுந்த ஸந்தோஷங்கொண்ட வஸிஷ்டமாமுனிவரைக்கொண்டு மஹாத்மாவாகிய மூத்த

---

1 இங்கு மூலத்தில் 'அதீத் யைகாதஶாஹந்து' என்று சொல்லுகையால், பன்னிரண்டாவது திநத்தில் நாமகரணம் நடந்ததென்று தோற்றுகிறது. க்ஷத்ரியர்களுக்குப் பன்னிரண்டாவது நாள் வரையில் ஸூதகமுண்டென்று ச்ருதியும் பதின்மூன்றுவதுநாள் நாமகரணமென்று ஸ்ம்ருதியுஞ் சொல்லுகையால், பதிநேராநாள் கடந்தபின் பன்னிரண்டாவது நாளில் நாமகரணஞ்செய்வது விருத்தமாகும். ஆகையால் இங்கு 'ஏகாதஶாஹம்' (பதிநேராவதுநாள்) என்றுல் லக்ஷ்மணன் பிறந்தது முதற்கொண்டு பதிநேராவது திநமாகக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். அப்படியாயின், ராமன் முதலுள் பிறந்தவலுகையால் அவன் பிறந்ததிநம் முதற்கொண்டு பன்னிரண்டாவது திநமாகும். அது கடந்தபின்பதின்மூன்றுவதுதிநத்தில் நாமகரணம் நடப்பது உபபந்நமாகும்.

குமாரனுக்கு ராமனென்றும், கைகேயியின் புதல்வனுக்குப் பரதனென்றும், ஸுமித்ராதேவியின் புதல்வர்களில் ஒருவனுக்கு லக்ஷ்மணனென்றும், மற்றொருவனுக்குச் சத்ருக்நனென்றும் இங்ஙனம் நாமங்களிட்டனன். இப்படி பேரிட்ட அம்மன்னவன் நாடுநகரங்களிலுள்ள அந்தணர் அனைவர்க்கும் நன்கு போஜநம் போடுவித்து அவர்களுக்குக் கணக்கின்றி ரத்நங்களையும் அநேகமாய்க் கொடுத்தனன். பின்பு புதல்வர்களுக்கு ஜாதகர்மம் முதலிய கருமங்களனைத்தும் அடைவே செய்வித்தனன். அக்குமாரர்களில் மூத்தவனாகிய ராமன் த்வஜம் போலே தனது வம்சத்தை விளங்கச்செய்து தகப்பனுக்கு மிகவும் ஆநந்தத்தை விளைவித்துக்கொண்டு ப்ரஹ்மதேவன்போல் ஸகல ப்ராணிகளுக்கும் ப்ரியனாயிருந்தனன். அக்குமாரர்கள் அனைவரும் வேதங்களைக்கற்று, தநுர்வேதத்திலும் வல்லமை பெற்று, சூரத்தன்மை பொருந்தி, உலகங்கட்கு நன்மையைச் செய்வதில் விருப்பங்கொண்டு, வேதத்தின் பொருளனைத்து மறிந்தமையால் ஞானமமைந்து, ஞானத்திலில் பிறக்கும் நற்குணங்கள் அனைத்தும் நிறைந்து விளங்கியிருந்தனர். அவர்களில் ராமன் மிகுந்த ஒளியுடன் விளங்கி நின்று என்றும் கழுவாத பராக்ரமமுடையனாய் நிர்மலனாய பூர்ணசந்திரன்போல உலகங்களுக்கெல்லாம் ஆநந்தத்தை விளைவித்துக்கொண்டு மிகவும் ப்ரியனாயிருந்தனன். மேலும் அவன் ஆனையேற்றத்திலும் குதிரையேற்றத்திலும் யுத்தங்களில் தக்கபடி தேரை நடத்துவதிலும் இவனைப்போல் ஒருவனுமில்லை யென்று யாவரும் புகழும்படி வல்லமையமைந்து வில்வித்தையில் மிகவும் தேர்ச்சி பெற்று, பிதாவினது சுச்ரூஷையில் மிக்க விருப்பங்கொண்டு விளங்கினன். லக்ஷ்மணன் ராமனுக்குப் பணி

விடை செய்கையாகிற செல்வத்தை மேன்மேலும் பெருகச்செய்துகொண்டிருந்தனன். அவன் தனக்கு மூத்தவனும், எல்லா உலகங்களுக்கும் ஆநந்தத்தை விளைவிக்குமவனுமாகிய ஸ்ரீராமனிடத்தில் பால்யம் முதலாகஎக்காலத்திலும் மிக நேசங்கொண்டிருந்தனன். மேலும் அச்செல்வம் நிறைந்த லக்ஷ்மணன் வாக்கு மனம் கருமம் என்றிவை மூன்றினாலும் தனது சரீரத்தைப் பாராமலே ராமனுக்கு எவ்வித இஷ்டங்களையும் செய்துகொண்டிருக்கும் தன்மையன். பின்னும் சரீரத்துக்கு வெளியில் ஓருருவங்கொண்டு உலாவும் ராமனுக்கு மற்றொரு ப்ராணனே என்னும்படி யிருந்தனன். புருஷோத்தமனாகிய அந்த ஸ்ரீராமனுக்கு ப்ராணன்போன்ற பின்பிறந்தவனாகிய லக்ஷ்மணனையன்றி நித்ரையும் நேராது. தாய் உயர்ந்த ஆஹாரங்கொண்டுவந்து கொடுக்கினும் அதை ஸ்ரீராகவன் லக்ஷ்மணனையொழியத் தனியே புசியான். எப்போதாகிலும் ராமன் குதிரையின் மீதேறி வேட்டையாடப்போவானாகில், அப்பொழுதே லக்ஷ்மணன் தானும் ஓர் வில்லேத்தரித்துக் கண்ணிணை இமை காப்பதுபோல அவன் பின்னே பாதுகாத்துச் செல்வான். இப்படி லக்ஷ்மணனுக்குப் பின்பிறந்த சத்ருக்நனும் அக்குணங்களெல்லாமமைந்து பரதனைப் பின்சென்றிருந்தனன். ஆனதுபற்றி, பரதனுக்குச் சத்ருக்நன் ப்ராணனைக்காட்டிலும் மிக ப்ரியனாயிருந்தனன். அச்சத்ருக்நனிடத்துப் பரதனும் அப்படியே அளவற்ற ப்ரீதி யமைந்திருந்தனன். இங்ஙனம் மஹா பாக்யசாலிகளாய் தனக்கு மிகவும்அன்பர்களாகிய புதல்வர்கால் வரையும் பெற்ற அத்தசரதசக்ரவர்த்தி நான்குதிக்பாலர்களைக்கொண்டு பிரபுவாகிய ப்ரஹ்மதேவன் ஆநந்தப்படுவதுபோல் மிக்க ஆநந்தமடைந்திருந்தனன். இப்படி தசர

தனுக்கு அவர்களைப்பெற்றதினால் பிறந்த ஸந்தோஷமேயன்று ; அவர்கள் வயது வந்தபோது சாஸ்திரங்களெல்லாம் அறிந்து, ஸகல குணங்களும் நிறைந்து விளங்கி, ஒருகால் பராக்கடித்துச்செய்த தகாச்செய்கையை நினைத்தால் மிக நாணங்கொண்டு, சிறந்த ஞானமுடையவர்களென்று எங்கும் புகழ் பெற்று, லௌகிகமான காரியங்களனைத்திலும் மிகுந்த மதியுற்று, வருமவற்றை யெல்லாமறிந்து அதுக்கேற்றபடி நடக்குந் திறம் படைத்து, இங்ஙனம் மகிமையெல்லாமமைந்து மிகுந்த ஒளியுடன் வளர்ந்து நிற்கக்கண்டு, அப்பொழுது அவனுக்கு ப்ரஹ்மலோகாதிபத்யம் சேர்ந்ததுபோல் அளவற்ற ஸந்தோஷம் பிறந்தது. அவர்கள் அப்படி தமது தகப்பன் தசரத சக்ரவர்த்தி ஸந்தோஷிப்பதைக் கண்டும் புருஷஸிம்ஹங்களாகையால் கர்வங்கொள்ளாமல் ஆலஸ்யமின்றி மிகுந்த அன்புடன் வேதங்களின் பொருள்களைத் தெளிய உரைக்கவல்ல ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் நியாயம் முதலியவற்றைக் கற்று, பிதாவினது சுச்ரூஷையில் ஜாகரூகர்களாய் மேலும் தநுர்வேதத்தில் மிக விருப்புங்கொண்டு அதை நன்கு அப்யஸித்திருந்தனர். பின்பு தசரதனும் பிள்ளைகளுக்கு அத்தத்தக் காலங்களில் செய்யவேண்டிய செயல்களை யெல்லாம் அறிந்தவனுகையால் அவர்களுக்கு விவாஹத்துக்குத்தக்க வயது வரக்கண்டு அவர்களுடைய விவாஹத்தைப்பற்றி, புரோஹிதருடனும் பந்துக்களுடனும்கூடி ஆலோசித்துக்கொண்டிருந்தனன். அப்படி அம்மஹாத்மாவாகிய தசரதன் மந்திரிமுதலியவர்களுடன் கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கையில் சிறந்த தவமகிமை பொருந்திய விச்வாமித்ர மாமுனிவர் அவ்வரசனைக் காணக் கருதி அவ்விடம் வந்து, வாசற்காப்பவர்களை நோக்கி, 'ஓ ஓ புருஷர்களே! குசிக வம்சத்திற் பிற

ந்து காதியென்பவரது புதல்வனுகிய விச்வாமித்ரன் வந்தானென்று வேகமாய்ப்போய்ச் சொல்லுங்கள்' என்றனர். அவ்வாசற்காப்பவர் யாவரும் அவ்வாக்யத்தைக்கேட்டு மனத்தில் பயமும் பரபரப்பும் நிறைய ஏவுண்டவர்களாய், அரசன் மாளிகைக்கு வேகமாகச் சென்று இக்ஷ்வாகு குல திலகனுகிய மஹாராஜனுக்கு விச்வாமித்ரர் வந்திருப்பதைத் தெரிவித்தனர். அதைக்கேட்டு அம்மன்னவனும் ஸந்தோஷங்கொண்டு, புரோஹிதனோடு கூடி தேவேந்திரன் ப்ரஹ்மதேவனை யெதிர்கொண்டு செல்வது போல அவ்விச்வாமித்ரரை யெதிர்கொண்டுசென்றனன். பிறகு மிகுந்த ஒளிபொருந்தி விளங்கியும் விரதங்கள் அனைத்தும் குறைவின்றிச் செய்பவரும் மிகச்தவமுடையவருமாகிய அவ்விச்வாமித்ர மாமுனிவரைக் கண்டு பெருத்த சந்தோஷத்தினால் முகமலர்த்தி கொண்டு அம்மஹர்ஷிக்குத் தமது புரோஹிதனுகிய வஸிஷ்டமாமுனியால் அர்க்கியம் கொடுப்பித்தனன். அவ்விச்வாமித்ரமாமுனியும் மன்னவனுல் சாஸ்திரங்களிற் சொல்லிய விதிப்படி கொடுக்கப்பட்ட அர்க்கியத்தைப்பெற்று அவ்வரசனை நோக்கிக் குறைவற க்ஷேமம் விசாரித்தனர். விச்வாமித்ரர் தர்மங்களை யெல்லாம் நன்கறிந்து அறிந்தபடி நடக்கும் தன்மையராகையால் ராஜாவினது நாடு நகரம் பந்துக்கள் நண்பர்கள் பொக்கசம் முதலிய அனைத்தையும் பற்றி அம்மன்னவனைப் பார்த்து 'அரசனே! க்ஷேமமா? நீவிரும்பினதெல்லாம் நிறைவேறிக் குறைவற மேன்மேலும் பெருகி வருகின்றதா? நீ தார்மிகனுயிருப்பதுபற்றி உனது பட்டணமும் பொக்கசங்களும் மற்றுமுள்ள தேசங்களும் ஓர் குறைவுமின்றி யிருக்கின்றதல்லவா? உனது பந்துக்களும் மித்ரர்களும் க்ஷேமமாயிருக்கின்றனரா? பக்கத்துத்தேசத்தரசர் யாவரும் உனக்குவணங்கி நடக்கி

ன்றனரா? பகைவர் அனைவரையும் வென்றீரன்ரு? யாகம் முதலிய தேவகாரியங்களும், அதிதி ஸத்காரம் முதலிய மானுஷ காரியங்களும் சரியாய் நடந்து வருகின்றனவன்ரு?' என்று கேட்டனன். பின்பு அம்மாமுனிவர் வஸிஷ்டரைக் கிட்டிச்சென்று அவரையும் மற்றுமுள்ள வாமதேவர் முதலிய மஹா பாக்யசாலிகளாகிய ரிஷிகளையும் நியாயப்படி க்ஷேமம் விசாரித்தனர். இப்படி விச்வாமித்ர கௌரவத்துடன் க்ஷேமம் விசாரிக்க, அவர்கள் யாவரும் மனக்களிப்புற்று ராஜஸபையைச்சேர்ந்து அவரவர்களுக்குத்தக்கபடி உட்கார்ந்தனர். பின்பு மஹோதாரகுணமுள்ள அம்மஹீபாலனும் மனக்களிப்புடன் அம்மாமுனிவரைப்பூஜித்து உடம்பெங்கும் மயிர்க்கூச்சலெறிய இங்ஙனமுரைத்தனன். 'மாமுனிவரே! புதல்வர்களின் விவாஹத்தைக்குறித்து ஆலோசித்துக்கொண்டிருந்தனக்கு நீர்தற்செயலாய்வந்தீர்; அமிருதம் பெற்றதுபோலவும், நிர்ஜலமான பூமியில் மழை பொழிந்ததுபோலவும், பிள்ளையில்லாதவனுக்குத் தக்க மனைவிகளிடத்தில் பிள்ளை பிறந்ததுபோலவும், தொலைந்த பெருநிதி மீளவும் அகப்பட்டதுபோலவும், பெரிய உத்ஸவத்திலுண்டாகும் ஸந்தோஷம்போலவும், தோற்றுகின்றது. உமக்கு நல்வரவா? ப்ராஹ்மணோத்தமரே! உமக்குள்ள பெருங்கருத்து யாது? சந்தோஷங்கொண்டகான் உமக்குச் செய்யவேண்டுவதென்? அதை எப்படிச் செய்யவேண்டும்? எனது தாரத்துக்கு நீரே தகுந்த பாத்ரமாயிருக்கின்றீர். இப்படிப்பட்ட நீர் எனது பாக்கிய மகிமையால் இங்கு வந்து சேர்ந்தீர். எனக்கு மிகவும் ஆநந்தமாயிருக்கின்றது. எனது ஜன்மம் இப்பொழுதுதான் பயன் பெற்றது. எனது ஜீவநம் இப்பொழுது ஸுஜீவநமாயிற்று. நீர் முதலில் ராஜரிஷி

யாய் விளங்கிப் பின்பு தவஞ்செய்து மஹாதேஜஸ்ஸுடன் ப்ரகாசித்து ப்ரஹ்மரிஷியென்னும் பேர் பெற்றீர். ஆகையால் ராஜரிஷியானதுபற்றியும் ப்ரஹ்மரிஷியானதுபற்றியும் மற்றுமுள்ள குணவிசேஷங்களைப்பற்றியும் நீர் எனக்கு மிகவும் பூஜிக்கத்தக்கவர். இப்படி நீர் வருவது மிகவும் அற்புதம். இதை யொழிய என்னைப் பாவநமாக்கவல்லது வேறென்றுமில்லை. நீர் வந்து எனக்கு தர்சனங் கொடுத்தமையால் நானிருக்குமிவ்விடம் புண்ய க்ஷேத்ரமாயிற்று. நீர் எத்தப்பயனைக்குறித்து இங்கே வந்தீரோ, அதை மொழிந்தீராயின் அதை உமது அணுக்கிரகத்தினால் நிறைவேற்ற விரும்புகின்றனன். உமது காரியங்களைநான் செய்வேனே மாட்டேனே என்று நீர் ஸந்தேகிக்கவேண்டாம். எனக்கு நீர் தைவமன்றோ? நீர் விரும்பியவற்றையெல்லாம் நான் செய்யக்கடவனன்றோ? நீர் வந்தவாத்து எனக்கு நன்மையென்று சொல்லப்போகாது. பெரும் நன்மையென்று சொல்லவேணும். நீர் வந்ததனால் எல்லாவற்றிலும் சிறந்த தர்மங்கள் யாவும் எனக்குண்டாய்விட்டன' என்றனன். இங்ஙனம் பொருள்நிறைந்து மனத்துக்கு ஆநந்தமாய் மெதுவான வார்த்தைகளால் செவிக்கினியதாய் மிகுந்த விநயத்துடன் அம்மதிமானாகிய மன்னவன் மொழிந்த வாக்கியங்களைக் கேட்டு, சிறந்த குணங்கள் அமைந்து அக்குணங்களால் எங்கும் புகழ்பெற்ற விச்வாமித்ரமஹர்ஷி மிக்க ஆநந்தமடைந்தனர். பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் ராமனை அனுப்பும்படி தசரதனைக் கேட்கை.

இங்ஙனம் அற்புதமாகவும் விஸ்தாரமாகவும் அம்மன்னவன் சொன்ன வார்த்தைகளைக்கேட்டு, சரீரமெங்

கும் மயிர்க்கூச்சலிட்டு மஹா தேஜஸ்வியாகிய விச்வாமித்ரர் இவ்வாறு மொழிந்தனர். 'ஓ தரணியாளனே! இவ்வுலகத்தில் பெரிய வம்சத்திற்பிறந்து வஸிஷ்டரைப்போன்றவர்களுடைய உபதேசம் பெற்று அவருங் குலாவும்படியான உன்னைப்போன்றவனுக்கே இது தகுமன்றி மற்றொருவனுக்கும் தகாது. இது வேறொருபடியன்று; நான் உனக்குச் சொல்லவேண்டுமென்று நெஞ்சில் நினைத்திருக்கிற காரியமொன்றுண்டு. அதை நீ செய்வதாக ஒத்துக்கொள்ளவேண்டும். நீ சொன்ன சொல் தவறுதிருக்கவேண்டும். நான் ஒரு பயனை உத்தேசித்து அதன்பொருட்டு யாகஞ் செய்யத்தொடங்கி தீக்ஷையிலிருக்கின்றனன். அதற்குக் காமரூபிகளாகிய ராக்ஷஸர்கள் இருவர் எப்பொழுதும் விக்நஞ்செய்துகொண்டிருக்கின்றனர். எனது விரதம்வெகுதூரம் நடந்தேறிவிட்டது. இனி முடிக்கவேண்டியதாயிருப்பதைக்கெடுக்க, மிகுந்த வீர்யம்பெற்று, கொடுஞ்செயல்களில் நன்கு தேறி வல்லமைபெற்ற ஸுபாஹு மாரீசர்களென்கிறராக்ஷஸர்களிருவரும் மாம்ஸங்கள் நிரம்பிய ரக்தவெள்ளத்தைக்கொண்டு அந்த யாகவேதிக்குச் சுற்புறத்திலும் பொழிந்தனர். இங்ஙனம்பெரும்பாலும் நடந்தேறிவந்தஎனது விரத ஸங்கல்பம் விக்நமடைந்தபின் மிக வருத்தங்கொண்டு உத்ஸாஹங்கொலைந்து அங்கிருந்து வந்துவிட்டனன். அரசனே! அவர்களை ஏன் சபிக்கக்கூடாதென்னில், அவர்கள்மீது கோபங்கொள்ளப் புத்தி பிறவாது, ஏனெனில், யாகஞ் செய்யும் அத்தருணத்தில் கோபஞ் செய்யலாகாதென்பது உனக்குத்தெரிந்ததல்லவா? ஆகையாற்றான் அவர்களைச் சபியாது விட்டுவிட்டனன். அதில் நான் செய்யவேண்டுவதென்னென்னில், புலிபோல் பராக்ரமம் பொருந்திய மஹாராஜனே! உனது மூத்தகுமார

ஞ்கிய ராமன் சிறுகுடுமி தரித்து, சிறுபிள்ளையாயினும், உண்மையான பராக்ரமங்கொண்டு சூரனையிருப்பதுபற்றி அவனை எனக்கு அவச்யமாய்க் கொடுக்கவேண்டும். இவன் சிறு பிள்ளையாகையால் அவர்களை யெப்படி வெல்லமுடியுமென்னவேண்டாம். நான் காப்பாற்றிக்கொண்டு போக, இவன் தனது சிறந்த பராக்ரமத்தினால் அவர்களை யேயன்றி யாகத்துக்கு விக்நஞ் செய்யும் அரக்கர்கள் அனைவரையும் வேரோடு நாசஞ்செய்யவல்லவன். மேலும் நான் இவனுக்கு மூவுலகங்களிலும் கியாதியுண்டாகும் படியான பலவகை நன்மைகளையும் செய்வேன். இதில் ஸந்தேகமில்லை. அம்மாரீச ஸுபாஹுக்களோவென்னில், ராமன் முன்னே நின்று போர்செய்யச் சிறிதும் வல்லவரல்லர். ராமனை யொழிய மற்றொருவன் எவனையினும் அவர்களைவெல்ல முடியாது. மன்னவர் மணியே! அவ்விருவரும் வீர்யத்தின்மிகுதியால் கொழுத்திருப்பவர்களேயாயினும் பாவஞ் செய்வதே தொழிலாயிருப்பதால் காலனென்னுங் கயிற்றினால் கட்டுண்டிருக்கின்றனர். ஆகையால் மஹாத்மாவாகிய ராமனுக்கு அவர்கள் ஓரிலக்கேயன்று. ஓ அரசனே! ராமனிடத்தில் பிள்ளையென்னும் ப்ரீதி பாராட்டலாகாது. நான் சொல்லுமிச்சொல்லை நம்பவேண்டும். நான் உனக்கு உறுதியாய்ச் சொல்லுகிறேன். அவ்வரக்கர்கள் இருவரும் ஒழிந்தார்களென்றே நினைத்துக் கொள்; இங்ஙனம் யான் எப்படிசொல்லுகிறேனெனில்[1] ரா

---

1 இங்கு—

'அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்ய பராக்ரமம்।
வஸிஷ்டோऽபி மஹாதேஜா யேசேமே தபஸி ஸ்யிதாः॥'

இதற்கு விசேஷார்த்தம். (அஹம்) நான், அதாவது பல பெரியோர்களை உபாஸித்து, யோகமஹிமையால் பராவரதத்த்வங்களை உள்ளபடி அறிந்து, ஜ்ஞாவல்கலங்களைத்தரித்து, தவஞ்செய்து

மனோமஹாத்மாவென்றும் உண்மையானபராக்ரமமுடையவனென்றும் நான் அறிவேன். நானேயன்று, மஹாரு

ஷாத்விகளுகி, மோக்ஷகாமேஷ்டிசெய்து, தர்மமோக்ஷங்களேமாத்ரங் கைக்கொண்ட ப்ரஹ்மரிஷியாகிய நான்-என்க. ப்ரவிக்தமானவற்றைக் காட்டுகிற, 'அஹம்' என்கிற ஸர்வநாமசப்தத்தால் இவ்வர்த்தங்களெல்லாம் தோற்றுகின்றன. இப்படிப்பட்ட நான் ராமனை அறிவேனன்றி எனக்கு எதிர்த்தட்டாக கேவலகர்மங்களேச் செய்து ராகத்வேஷங்களில் ஆழ்ந்து, ஸம்ஸாரத்தில் மூழ்கி ராஜஸப்ரக்ருதியாகி, புத்ரகாமேஷ்டிசெய்து, தர்மகாமங்களேமாத்திரங் கைக்கொண்டு, கேவலக்ஷத்ரியனுகிய நீ அறியமாட்டாயென்க. ராமனை எப்படிப்பட்டவனுக அறிவாயென்னில் - சொல்லுகிறான்—(மஹாத்மாநம்) 'வேஹாஹமேதம் புருஷம்மஹாந்தம்' என்று ச்ருதி சொல்லுகிறபடியே அளவிடவொண்ணாத மகிமையுடையவனுக; அல்லது 'தேஜஸாஹி நவயஸ்ஸமீக்ஷ்யதே' என்கிறபடியே பால்யத்திலும் அபாரமான வைபவத்தையுடையவனுக; அன்றியே ஆத்மாவென்று தேகத்தைச்சொல்லுமாகையால் (மஹாத்மாநம்) 'நதஸ்யப்ராக்ருதா மூர்த்திஃ' என்கிற ச்ருதியின்படி அப்ராக்ருதமான திவ்யமங்கல விக்ரஹத்தையுடையவனுக; அன்றியே 'அஹயம் ஸர்வஹ்ருதேஹீயோ ஹ்ருதம்யேதஜீவாதமம' என்று சொல்லப்பட்ட மஹாஸ்வபாவனுக-என்க. இன்னும் எவ்விதமாகவன்னில், சொல்லுகிறான்—'ஸத்யபராக்ரமம்' என்று ஒருபடிப்பட்டிருக்கிற பராக்ரமத்தையுடையவனுக; அன்றியே ஸத்யத்தால் பிறரை ஆக்ரமித்தவனுக, அதாவது-ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் தனக்கு ப்ரதிகூலராயிருந்தபோதிலும் பலதடவை திருப்பப்பாடுபட்டும் ப்ரதிகூலராகவே யிருப்பாரின், அப்படிப்பட்டவர்களைக் கொல்பவனுக என்க; அன்றியே 'ஸ்வஸ்வப்தஃ பராந்தபஃ' என்கிறபடியே பராக்ரமத்தைக்காட்டாமலிருக்கிற நித்ராதிஸமயத்திலும் அக்காலத்திலுள்ள ஔஜ்ஜ்வல்யாதிசயத்தால் சத்ருக்களுக்குப் பயங்கரனுயிருப்பவனுக அறிவேன். கார்யவசத்தால் நானொருவன் மாத்ரமே யிப்படி சொல்லுகிறேனென்று நினைக்கவேண்டா. வஸிஷ்டரும் அறிவரென்கிறார். (வஸிஷ்டோஉபி)உனக்கு மிகவும் ஆப்தரும் குலாசார்யரும், (அபி) சப்தத்தால் எனக்கு விரோதியுமாகிய வஸிஷ்டரும்'என்க. வஸிஷ்டரெப்படிப்பட்டவரென்னில், (மஹாதேஜாஃ) ப்ரஹ்மகுமாரரும் யோகத்தால் லப்தமான ஜ்ஞாநத்தை

பாவராகிய வஸிஷ்டரும் அறிவர். தவத்தில் நிலைநின்ற மற்றுமுள்ள இம்மஹர்ஷிகளும் அறிவார்கள். மஹாராஜனே! ஆயிரஞ் சொல்லியென்? இப்பூமியில் மேன்மேலும் தர்மத்தின் விருத்தியும் சிறந்த கீர்த்தியும் நிலைநிற்கவேண்டுமென்றுவிரும்பியாகில், ராமனை யெனக்குக் கொடுக்கவேண்டும். வஸிஷ்டர் முதலிய உனது மந்த்ரிகள் அனைவரும் அநுமதி கொடுப்பர்களேயாகில், பின்பு ராமனையனுப்பு. தாமரையிதழ் போன்ற கண்களையுடையனும் யாவர்க்கும் அன்பனுகியராமனைவெகுநாள் அனுப்பிவிட்டு எப்படியிருப்போமென்று நினைக்கவேண்டாம். வெகுநாளன்று, பத்துராத்ரிவரையிலுமே ராமனையெனக்குத்தரவேண்டும். ஆகையால் அதுவரையிலும் எவ்வித சிந்தையுமின்றி என்னுடன் அவனை யனுப்பவேண்டும். ரகுகுலதிலகனே! எனது யாககாலம் மீறிப்போகாமற்படி முன்னதாகவே ராமனை யனுப்புவாயாக. உனக்கு க்ஷேமம் உண்டாகும். ஆகையால் மனத்தில் கொஞ்சமும் சோகிக்

யுடையவருமென்க; அன்றியே எவர் வாயாற்சொல்லப்பட்டு நான் ப்ரஹ்மரிஷியென்று பட்டம்பெற்றேனே, அப்படிப்பட்ட ப்ரபாவமுடையவரென்க. வஸிஷ்டரும்உன்னுடையவராகையால் நம்மிருவர்க்கும் வந்தவிவாதத்தில் அவர் உன்மீது பக்ஷபாதங்கொள்ளக்கூடும். ஆகையால் அவர் அப்படியிருக்கட்டும். ராஜத்வார ஸம்பந்தமில்லாமையால் பக்ஷபாதமின்றியிருக்கிற மற்றவர்களும் அறிவார்களென்கிறார். (யேசேமே) 'தஸ்யயோகாः பரிஜாகந்தியோகிம்' என்கிறபடியே அவதாரரஹஸ்யத்தை யறிந்தவர்களாகிய வாமதேவாதிகளென்க. இவர்களும் உன்னுடைய ப்ரியத்தை யநுஸரிப்பவர்களாகையால் இவர்கள் அப்படியிருக்கட்டும். கேவலபரமைகாந்திகள் அப்படியே அறிவார்களென்கிறார் (தபஸிஸ்யிதாः) காயிகவ்யாபாரங்களைவிட்டு எப்பொழுதும் தவத்திலேயே நிலைபெற்றிருப்பவரென்க. இவர்கள் அனைவரையுங் கேட்டு, அனைவரும் அநுமதி கொடுத்தபின்பு ராமனைத் தருவாயாக என்று கருத்து.

கவேண்டாம். என்று மஹா தேஜஸ்வியான அவ்விச்வாமித்ர மாமுனிவர் தர்மாத்மாவாகையால் தர்மார்த்தங்கள் நிறைந்த இம்மொழிகளை யுரைத்து வெறுமனேயிருந்தனர். அத்தசரத மஹாராஜனும் இங்ஙனம் விச்வாமித்ரர் மொழிந்த அழகான வார்த்தையைக்கேட்டு 'நமது ராமனைவிட்டு நாம் எப்படி பிரிவோம்' என்று மிகவும் வருந்தி பயந்து முகம் வாடி நின்றனன். இவ்வாறு மார்பையும் மனத்தையும் பிளக்கும்படி மிகவும் கடோரமான அம்முனிவரது மொழியைக்கேட்டு அப்பொழுதே அம்மன்னவன் மிக்க மனவருத்தமுற்று ஸிம்ஹாஸநத்தினின்று கடுங்கி மூர்ச்சித்தனன். பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் ராமனை யனுப்புவதற்கு வருத்தமுறுதல்.

அம்மன்னவர்மணியாகிய தசரதன் அங்ஙனம் அவ்விச்வாமித்ரர் மொழிந்த மொழியைக்கேட்டு முகூர்த்தகாலம் மூர்ச்சையடைந்து பின்பு தெளிந்து இப்படியுரைத்தனன்: முனீந்திரரே! தாமரை யிதழ்போல் விளங்கும் அழகான கண்களையுடைய ராமனுக்குப் [1]பதிணறு பிராயமும் நிரம்பவில்லை. இப்பொழுது பன்னிரண்டா

---

1 பதிணறுவயதுள்ள க்ஷத்ரிய குமாரனே யுத்தஞ்செய்யத்தக்கவனென்று சாஸ்த்ரஞ்சொல்லுகிறது. ராமன் 'ஊநஷோடஶவர்ஷஃ' என்று பதிணறுவயதுக்குங் குறைந்த வயதுள்ளவனென்கையால் யுத்தஞ்செய்யத்தக்கவனல்லனென்று கருத்து. மாரீசன் ராவணனுக்குச்சொல்லும்பொழுது 'வாலோ வா யதி வா வ்ருத்தோ பாலகஶ்சாதாஸ்த்ரஜ்ஞோ ராகவஃ' என்று ராமனுக்கு விச்வாமித்ரனுடன் கூடவந்தபொழுது பன்னிரண்டு வயதென்று சொல்லினன். ஆகையால் 'ஊநஷோடஶவர்ஷஃ' என்றது நாலுவயதுகுறையப் பதிணறுவயது. அதாவது-பன்னிரண்டுவயதுள்ளவனென்று பொருள்.

வது பிராயம் நடக்கின்றது. இங்ஙனம் இளைஞனாகிய இவனுக்குப் போர்செய்யுந் தன்மை யெங்ஙனே நேருவது?

இங்கு மூலவாக்யம்—

'ஊநஷோடஶவர்ஷோமே ராமோ ராஜீவலோசநஃ।
யுத்யேயோதீ யதாமஸ்ய பஶ்யாமி வதமாஹவே ராக்ஷஸைஃ॥'

என்று — இதற்கு விசேஷார்த்தம்—விச்வாமித்ரமாமுனிவன் 'யஜ்ஞவிக்நகரம்ஹந்யாம்' என்று 'யாகத்துக்கு விக்நஞ் செய்பவனைக்கொல்வேன்' என்கிற பெருமானுடைய வைகல்பத்தை யறிந்தவனாகையாலே தன்னுடைய யஜ்ஞவிக்நத்தையும் அவரைக்கொண்டு போக்குவோமென்று பார்த்துப் பெருமாளை யனுப்பவேணுமென்று தசரதசக்ரவர்த்தியை இரக்க, அவனும் பெருமாளிடத்தில் வாத்ஸல்யத்தாலே மிகவும் கலக்கமுற்று, 'அஹம்வேத்மிமஹாத்மானம்' என்று ஈடேற்றிச் சொன்ன இதுவும் நெஞ்சிற்படாமல் பருவத்திலிளமையைப் பார்த்து விடாமைக்கு மன்றுகிறான் இத்தச்லோகத்தாலே—(ஊநஷோடஶவர்ஷஃ) இன்னும்பதினாறு பிராயம் நிரம்பிற்றில்லை, 'கூஷ்மாண்டஸ்ஸராமஹாபலஃ' என்கிறபடியே பால் மாறாத பருவத்திலேயும் ஒரு யுத்தமோ வென்கிறான். இனி 'தேஜஸாஹ்யவயஸ்வமீக்ஷ்யதே' என்று தேஜஃபதார்த்தங்களுக்குமொருவயது பார்ப்பதுண்டோ? சிறு நெருப்புச் சுடாதோ? இவர் இப்பொழுது மநுஷ்யபாவதாரத்துக்கிணங்கத் தமது வைபவத்தை மறைத்துக்கொண்டிருந்தாராயினும் அந்தச்சமயத்தில் நான் ஸ்நேஹத்துடன் மங்களாசாஸநம் பண்ணிக்காட்டிக்கொடுக்கில் தமதுப்ரபாவத்தாலே சத்ருநிரஸநத்தில் சக்தராவா ரென்ன, சொல்லுகிறான் (மோராமஃ) கையுங்கோடாலியுமாக இருபத்தொருதலை முறை கூத்திய சிரச்சேதம் பண்ணித்திரிந்த முறட்டுப்பரசுராமருக்கு நினைக்கவேண்டாம். என்னுடையராமனே யென்க. அன்றியே, பெரியபதியோடே உண்ணப்புக்க வனைக்கையைப்பிடிப்பாரைப்போலே 'ஊஃவேநோத்பாதிதஸ்ஸாயம்' என்று அறுபதினாயிரமாண்டுகூடி ஒரு பிள்ளைபெற்று அவனுடைய முகத்தைப்பார்த்து தரித்திருக்கிற என்பக்கல் நின்றும் இவனைப் பிரித்துக் கொண்டுபோகை தர்மமோ என்க. (ராமஃ) சூட்டியனுபவிக்கவேண்டிய கருமுகை மாலையைக் கசக்கி வெய்யலிலே வைப்பாரைப்போலே 'ஏதத்தேவாமஃதம்ஜ்யஷ்ட்வாதஃப்ரயந்தி' என்றும், 'நந்

எனதுமடியை விடாதிருக்குமிவன் என்னை விட்டிருக்க வல்லவனல்லன். இவ்வளவில் விளையாடலுற்றிருக்கவேண்

ஹாமி பலீயங்ஸமி உஸ்ஸேஹ' என்றும் கண்ணுக்கினிதாகக்கண்டு கொண்டிருக்கு மத்தனைபோக்கி இந்த வஸ்துவை யுத்தத்துக்கு ஸஹாயமாக விரும்புகாருமுண்டோ என்க. இப்படி வயதில் பார்த்தால் யுத்தத்துக்கு யோக்யமல்ல ரென்று சொல்லி ராக்ஷஸர்களோடு பொருவதற்குயோக்யரேயல்லரென்கிறான். (ராஜீவலோசனர்) தாமரைப்பூப்போன்ற கண்களையுடையவன். தாமரைப்பூ ராத்ரியில் செம்புளிப்பது போல் பால்யமாகையால் ஸோர்யாஸ்தமயம் பிடித்தே இவர் கண்களும் உறக்கத்துக்கிணக்காயிருக்குமென்க. ராக்ஷஸர்கள் ராத்ரியில் ஜலிவு பெற்று ஸஞ்சரிப்பவர்கள். அவர்களோடு இப்படி கண்ணுறக்கங்கொள்ளுந்தண்மையுள்ள இவன் பொருவதெங்ஙனே யென்று கருத்து. (நயுக்தயோகீயதாமஸ்ய, பலீயாம்) விளையாடுவதற்குத் தக்கவனேயன்றிப் பொருவதற்குத் தக்கவனுகப்புலப்படவில்லை. (ஸஹராக்ஷஸை) மநுஷ்யர்களோடு பொருவதற்கே யோக்யதையின்றி யிருக்க ராக்ஷஸர்களோடு முடியாதென்பது சொல்லவேண்டுமோ? ராக்ஷஸன் தானெருவன்றே. என்க. இங்கு—பிதாவாகிய தசரதன் 'ஊநஷோடஶவர்ஷம்' என்று பதினாறு வயது நிரம்பவில்லையென்கிறான். இக்குறைவும் ஒருமாஸம், அல்லது மூன்று மாஸங்கள் அல்லது ஆறு மாஸங்களாகவேண்டும். ஒரு வருஷம் இரண்டுவருஷம் என்று சொல்லலாகாது. அப்படியாயின், பதினாறு பதினைந்தென்றே சொல்லவமையும். பதினாறு வயதாகவில்லை யென்றால் நாலாறுமாஸக்குறைவைக் காட்டுமேயொழிய வருஷக்குறைவைக் காட்டாது. அந்த வருஷத்திலேயே விவாஹம் நடந்ததாகத் தெரிகின்றது. மணம் புரிந்தபின்பு பன்னிரண்டு வருஷங்கள் வீதை அயோத்தையில் வஸித்திருந்தனளென்று 'ஸமாஜீவாஹ தத்ராஹம் ராஜவஸ்ய திவேஶநே, ஊஷுஶ்சாநா மாநுஷாந் ஹோஹாந் ஸர்வகாமஸமந்விதீ' என்றுஅவளது வசநத்தால் தோற்றும். ஆகக் காட்டுக்குப் போகும்பொழுது ராமனுக்கு இருபத்தெட்டு வயதென்று தோற்றுகிறது. இது 'மமஹர்த்தா மஹாதேஜா வயஸா பஞ்சவிம்ஶதிஃ அஷ்டாதஶஹி வர்ஷாணி மமஜந்மநிமண்யதே' என்று தன்பர்த்தாவுக்கு இருபத்தைந்து வயதென்றும் தனக்குப் பதினெ

டியவனேயன்றி யுத்தஞ்செய்யத் திறமுடையனுகத்தென் படவில்லை. மனிதரோடும் போராடமாட்டாத இவன்

ட்டு வயதென்றுஞ்சொல்லுகிற ஸ்ரீதையின் வாக்யத்துக்குச் சேராது. கௌஸல்யாதேவியும் காட்டுக்குப்போகுந்தருணத்தில் ராமனைப்பார்த்து 'ஏஷ ஸப்தச வர்ஷாணி ஜாதஸ்ய தவபுத்ரக! ஆவிதாநி ப்ரகாங்க்ஷந்த்யா மயா உஷவபரிக்ஷயம்' என்று நீ பிறந்து பதினேழு வருஷங்களாயின வென்று மொழிந்தனள். ஆகையால் இருபத்தெட்டென்பதற்கும் இருபத்தைந்தென்பதற்கும் பதினேழென்பதற்கும் எப்படி சேர்த்தியென்னில்—இதற்கு இங்ஙனஞ் சிலர் பரிஹாரஞ் சொல்லுவர்கள். அதாவது கௌஸல்யையின் வாக்யத்தில், 'ஜாதஸ்ய' என்று இரண்டாவதி ஜந்மத்தைச் சொல்லுகிறது. க்ஷத்ரியனுக்கும் ப்ராஹ்மணனைப்போல் இரண்டு ஜந்மங்களுண்டு. இரண்டாவது ஜந்மமாவது உபநயநம். ஏகாதஶே க்ஷத்ரராஜந்யம்' என்று க்ஷத்ரியனுக்கு உபநயநம் பதினொராவது வயதிற் சொல்லப்பட்டது. ஆக இரண்டாவது ஜந்மமான உபநயநத்தைப் பிடித்துக் கீழ்பத்தைக்கழித்து உபநயநமானபின்பு காட்டுக்குப்போகும்போது பதினேழு வயதென்று கொள்ளவேணும் என்க. இது புத்திரனைக் காட்டுக்கனுப்புகிற துக்கத்தாலே மனக்கலக்கமுற்ற ஸ்த்ரீயின் வார்த்தையாகையாலே படபடாகப் பிறந்தவன்றுதொடங்கி, என்று முதல் ஜந்மத்தையே பிடித்துச்சொல்லவேண்டுமென்றி, சோகதசையில் ஒரு பெண்பிள்ளை இத்தனூக்கத்தோடு தர்மசாஸ்த்ரத்தை மனத்திற்கொண்டு இரண்டாவது ஜந்மத்தைக்கருதிச்சொன்னலென்பது அழகன்று; மேலும் 'ஊநஷோடஶவர்ஷம்' என்று சக்ரவர்த்தி வாக்யத்தின்படி உபநயநமேபிடித்து விச்வாமித்ரனுடன்போகும்பொழுது ஆறுவருஷங்களென்றும் 'ஸமாஹீவாஹ' என்று ஸ்ரீதை வாக்யத்தின்படி விவாஹத்திற்குப்பின்பு பன்னிரண்டு வருஷங்களென்றுந்தோன்றுகையால் ஆகக் காட்டுக்குப்போகும்போது பதினெட்டு வருஷங்களாகையால் பதினேழு வருஷங்களென்கிறது சேராது. இப்படியாயின் வாஸ்தவமென்னென்னில் 'வயஸாபஞ்சவிம்ஶகம்' என்றுஸங்யாவிவேஷம்பூண்டாவணனைப்பார்த்து ஸ்ரீதை சொல்லுகிற இருபத்தைந்தையே ப்ராமாணிகமாகக் கொள்ளவேண்டும். இனி 'ஊந

கொடியராகிய ராக்ஷஸர்களோடு போராட வல்லவனென்று எனக்குத் தோற்றவில்லை. ஆகிலும் நான்சொன்ன சொல்லுக்கு வேறுகச் செய்யேன். இதோ எனது கட்ட

ஷோடஶவர்ஷம்' என்கிற தசரதவாக்யத்தையும் 'ஶஸப்தச' என்கிற கௌஸல்யையின் வாக்யத்தையும் இதற் கிணங்கச்சேர்த்து யோஜிக்கவேணும். எப்படியெனில் 'ஊநஷோடஶவர்ஷம்' என்கிறவிடத்தில் ஸாமாந்யமாகக் குறைவைச் சொல்லுகிறதேயொழிய மாஸக்குறைவைச் சொல்லுகிறதென்னலாகாது. 'வாலோ வா ஹஸவர்ஷோயம்' என்று சக்ரவர்த்தி பன்னிரண்டு வயதென்று சொல்லுகையாலே இந்தக்குறைவை நாலுவருஷங்களாகக் கொள்ளவேணும். ஆகப் பன்னிரண்டுபிராயமாய் அப்பொழுது விவாஹமாய், 'ஸமா வா ஹஸ' என்று பின்பு பன்னிரண்டுவருஷங்கள் கடந்து ஆசுக் காட்டுக்குப் போகும்போது இருபத்துநாலாகிறது. ராவணனைப்பார்த்துச் சொல்லுகிறபோது 'வயஶ்சாபஞ்சவிம்ஶக:' என்று இருபத்தைந்து வயதென்பது போரப்பொருந்துகின்றது. கௌஸல்யையின் வாக்யத்திலும் (ஹஸ) என்றுபத்தும் (ஸப்த) என்று ஏழும் (ச) என்று இன்னும் ஒரு ஏழாய் ஈரேழுபதினலுவாய், பத்தும்பதினலும் இருபத்து நாலுங்கழிந்து இருபத்தைந்தாகிறதென்று பொருள்கொள்ளவேணும். ஆகையால் விரோதித்தாற்போல் தொற்றின மூன்று ப்ரதேசங்களும் கீழ்ச்சொன்ன ப்ரமாண யுக்திகளால் விரோதநிவர்த்திபோரச்சேரும். ஆனல் நிரம்ப ஏற்றக்குறைவாக 'ஊநஷோடஶவர்ஷ:' என்று பதினறுக்குக்குறைவென்று சொல்லுவானேன்? 'வாலோ வா ஹஸவர்ஷ:' என்று தானே பன்னிரண்டுவயதென்று சொல்லுகையால் நாலுவருஷங்கள்குறைய ஒடுமேடும் ஒடும்பள்ளமுமாகச் சொல்லலாகுமோ என்னில் 'நயுக்தியோ தீயதாமஸ்ய பரீக்ஷாயை' என்று யுத்தத்துக்குயோக்யனல்ல னென்கைக்காகச் சொன்னது. 'வால ஆஷோடஶவர்ஷாத் பௌருஷஸ்ரீ சேதி கீர்த்யதே' என்று மநுவசநத்தின்படி பதினறுபிராயம் நிரம்பினபின்பே வ்யவஹாரயோக்யனவதும், தனித்தொரு ஊருக்குப்போவதும் தனித்தாயுத்தஞ்செய்ய யோக்யனவதும் கூடும். ஆகையால் அந்தயோக்யதை யிவனுக்கு இன்னுமில்லை யென்கைக்காக (பதினறு பிராயமாகவில்லையே) என்கிறன். ஆகையால் இது உபபந்நம்.

லையில் அடங்கி யான் பாதுகாத்துவரும் படைகள் அக்ஷௌஹிணிகணக்கிலிருக்கின்றன. இவைகளைக் கூட்டிக்கொண்டுவந்து நான் அவ்வரக்கர்களோடு யுத்தஞ்செய்கின்றேன். இதோ எனது படைகள் அஸ்த்ரவித்யைகளில் தேர்ச்சியடைந்து சூரர்களென்று எங்கும் கியாதி பெற்றவர்களாகையால் இவ்வரக்கர்களிருவரேயன்றி கூட்டங் கூட்டமாய் வரும் அரக்கர்களோடும் போர்புரிய ஸித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கின்றனர். ஆகையால் ராமனையழைத்துக்கொண்டு போகவேண்டாம். நானே வில்லுங் கையுமாய்நின்று இப்படைகளையெல்லாம் பாதுகாப்பவனுய் முன்னே யிருந்து எனது சரீரத்தில் ப்ராணனுள்ளளவும் அவ்வரக்கர்களோடு போராடுகின்றனன். நான் அங்கே வந்து விக்நம் ஒன்றும் வாராதபடி அவ்விரதானுஷ்டானத்தை நன்றுய்ப் பாதுகாத்து முடித்துவைக்கின்றனன், ஆகையால் ராமனையழைத்துக்கொண்டு போகவேண்டாம். மேலும் இவன் பாலன். ஆகையால் தனுர்வித்யையில் தேறினவனன்று. பின்னும் சத்ருக்களது பலாபலங்களை அறியான். அஸ்த்ரபலமும் பெற்றிலன். இனி யுத்தத்தில் ஆடித்தீர்ந்தவன் அன்றென்பது சொல்லவேண்டுமோ? ராக்ஷஸர்களோ வஞ்சனை கொண்டு யுத்தஞ்செய்ய வல்லமை பெற்றவர்கள். அப்படிப்பட்டவர்களோடு போர்புரிய இப்பாலகன் முதலே தகானென்பது நான் சொல்லவேண்டுமோ? ராமன் விஷயம் இங்ஙனேயிருக்க, மாமுனிவரே! என் கதையைக் கொஞ்சம் கேட்கவேண்டும். ராமனை விட்டு ஒரு முகூர்த்தகாலமும் பிழைத்திருக்கும்படி பொறுத்திருக்கமாட்டேன். இதைப்பற்றியே ராமனை யழைத்துக்கொண்டு போவது உமக்குத்தக்கதல்ல. விரதங்களையெல்லாம் நன்கநுஷ்டித்த அந்தணர்சிகாமணியாகிய முனிவரே! ரகு

144 ராமரை அனுப்பும்படி விச்வாமித்ரர்கேட்டது, தசரதன் முடியாதென்று மறுத்துரைத்தல்.

குலத்துக்கு விளக்குப்போல் விளங்கும் இந்த ராமனை யே அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று உமக்கு எண்ணமிருக்குமாயின் சதுரங்க ஸைன்யுடன் கூடிய என்னையும் அவனுடன்கூட அழைத்துக்கொண்டு போ வீராக. மாமுனிவரே! யான் பிறந்து அறுபதினாயிரம் ஆண்டுகள் சென்ற பின்பு எவ்வளவோ விரதங்களை யநுஷ்டித்து மிகவும் கஷ்டப்பட்டு இவனை அருமை யாகப்பெற்றனன். இதை நினைத்தாயினும் நீர் ராமனை அழைத்துக்கொண்டு போகத்தக்கதல்ல. மேலும் எனது புதல்வர்கள் நால்வரிலும் எனக்கு ராமனிடத்தில் அன்பு மிகவும் அளவற்றிருக்கின்றது. அவனே எனக்கு மூத்தகுமாரன்; மிகவும் தர்மசீலன். அப்படிப்பட்ட ராமனை அழைத்துக்கொண்டுபோவது தக்கதல்ல. மாமுனிவரே! அவ்வரக்கர்களது வல்லமை எப்படிப்பட்டது?. அவர்கள் யாருடைய பிள்ளைகள்?. அவர்களது பேர் யாது?. அவர்களது உருவமெப்படி யிருக்கும்?. அவர்களைப் பாதுகாப்பவன் எவன்?. கபடயுத்தஞ் செய்ய வல்லமை பெற்ற அவ்வரக்கர்மீது ராமனுவது, எனது படைகளாவது, யாரனுவது எவ்வித ஏற்பாட்டுடன் எதிர்த்துப் போகவேண்டும்?. ராக்ஷஸர்கள் வீர்யங்கொண்டு கர்வித்திருப்பவர்களாகையால் அப்படி துஷ்டஸ்வபாவமுடைய அவர்களது யுத்தத்தில் நானொருவனுப்போர் செய்யத்தகுமா?. மாமுனிவரே! இவையெல்லாம் எனக்குச்சொல்லவேண்டும்' என்றனன்: விச்வாமித்ரரும் அங்ஙனம் மன்னவன் மொழிந்தவற்றைக்கேட்டு 'அரசனே! புலஸ்திய மஹர்ஷியின் வம்சத்தில் பிறந்த ராவணனென்னும் ராக்ஷஸனொருவனுண்டு. அவன் பிரமனிடம் வரம் பெற்று மிகுந்த பலமும் சிறந்த வீர்யமும் அமைந்து அநேக ராக்ஷஸர்களால் சூழப்பட்டு மூவுலகங்களையும்

அளவின்றி வருத்துகின்றனன். அவன் குபேரனுக்கு நேரே பின்பிறந்தவன்; விச்ரவஸ்ஸென்னும் முனிவருடைய புதல்வன்; ராக்ஷஸர்களுக்கெல்லாம் அதிபதி; மஹாபராக்ரமசாலி. ஆகையால் அவன் ப்ரஸித்தனுயிருப்பதுபற்றி நீயும் அவனைக் கேட்டிருப்பாயன்றே?. அப்பெருமிடுக்கன் தானே நேராக வந்து யாகத்திற்கு விக்கஞ் செய்ய நேரான காலங்களில் மிகவும் கொழுத்திருக்கிற மாரீசஸுபாஹுக்களென்னும் ராக்ஷஸர்களிருவரையும் தூண்டிவிடுகின்றனன். அவர்கள் வந்து யாகத்தைக்கெடுக்கின்றனர்' என்று மொழிந்தனர். இதைக்கேட்டு அப்பொழுது மன்னவன் 'மாமுனிவரே! அப்படி கொடுந்தன்மையனுகிய ராவணனோடு யுத்தத்தில் முன்னின்று போர்புரிய நான் வல்லவனல்லன். நீர் தர்மங்களெல்லாமறிந்தவர். எனக்கு குருவும் தைவமும் நீரே. உமது ஆணைப்படி காரியஞ்செய்யப் பாக்கியமற்றிருக்கிற என்மீது கிருபை செய்தருளவேணும். தேவதாநவர்கள் கந்தர்வர்கள் யக்ஷர்கள் பதகர்கள் பக்ஷகர்கள் என்னும் இவர்களே ராவணனோடு முன்னின்று போர்புரிய வல்லமையற்றிருக்க, மானிடவர்கள் எவ்வளவு?. அவ்வரக்கனோடு மிகுந்த பலசாலிகளான மஹாவீரர்களையும் யுத்தத்தில் வல்லமையற்றவர்களாகச்செய்யுந்தன்மையன். ஆகையால் நான் தனியேயாவது, படைகளோடு சூழ்ந்தாவது, எனது புத்ரர்களோடு சேர்ந்தாவது அவனோடு போர்புரிய வல்லமையற்றவன். மாரீசன் முதலிய அவனது ஸைன்யத்தோடும் என்னால் சண்டைசெய்ய முடியாது. அந்தணரில் சிறந்தவரே! உமது அபிப்பிராயத்தால் இத்தேவர்களோடு நிகர்த்தவனுயினும், யுத்ததர்திரங்களொன்றுமறியாமல் பாலனுமாய் புத்தென்கிற சரகத்தினின்று என்னைக்காப்பவனுமாகிய எனது புத

ல்வனை நான் எப்படி கொடுப்பேன்?. மேலும் உமது யாகத்தைக் கெடுக்கவந்த ஸுந்தோபஸுந்தர்களின் புத்ரர்களாகிய மாரீசஸுபாஹுக்களோ யுத்தத்தில் யமனோடொத்து மஹாபயங்கராராயிருப்பார்கள். ஆகையால் அவர்களோடு யுத்தஞ்செய்து யாகத்தைக்காக்க எனது குழந்தையாகிய ராமனைக்கொடுக்கமாட்டேன். மாரீச ஸுபாஹுக்கள் இருவரும் மிக்க வல்லமைபெற்று யுத்தத்தில் கன்முய்ப் பயின்றவர்கள். நானும் எனது கண்பர்களும் ஒன்முய்க் கூட்டங்கூடியும் அவ்விருவரில் ஒருவனோடாயினும் முன்னின்று போர்புரிய வல்லமை?" என்று தைத்தனன். இங்ஙனம் அம்மன்னவன் முன்பின் ஓட்டாமல் அஸங்கதமாய்ச் சொன்ன சொற்களைக்கேட்டு அவ்விச்வாமித்ர மாமுனிவர் அளவற்ற கோபாவேசங்கொண்டு நெய்யைச்சேர்த்து கன்கு ஹோமஞ்செய்யப்பெற்ற யாகத்தின் அக்கிபோல் கொழுந்துவிட்டெரிந்தனன். இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டர் தசரதனுக்கு விச்வாமித்ரருடைய மகிமையை அறிவிப்பது.

இப்படி அம்மன்னவன் தனது புதல்வனிடத்து அன்பினல் எழுத்துக்கள் தெரியாமல் குழறிக்கொண்டு சொன்ன சொற்களைக்கேட்ட விச்வாமித்ரமாமுனிவர் கோபாவேசங்கொண்டு அவ்வரசனை நோக்கி இங்ஙனம் மொழிந்தனர். 'அரசனே! யான் விரும்பின காரியத்தைச் செய்வதாக முன்பு நீ உறுதிமொழி பண்ணிக்கொடுத்து, அதை நிறைவேற்முது விட்டுவிட்டினைக்கின்றனை. தர்மத்திற் சிறந்த ராகவர்களின் இவ்வம்சத்தில் இப்படிசொன்னசொல் தவறுவது யுக்தமா?. மன்னவனே! இப்படி சொன்னசொல் தவறுவது உனக்குள் அழகென்று தோன்றுமா

யின், சொல்லிவிடு; நான்வந்தவழியே திரும்பிப்போகின்றனன். ஸத்யஸந்தமாகிய காகுத்ஸ்தவம்சத்திற் பிறந்தவனை நீ, வந்தவர்கட்கெல்லாம் இப்படியே ப்ரதிஜ்ஞை செய்து பொய்யைப் பேசிக்கொண்டு பந்துக்களோடுகூட ஸுகமாக வாழ்ந்திரு' என்று மிகுந்தமதியுடைய அவ்விச்வாமித்ரமாமுனிவர் அளவற்ற கோபாவேசங்கொள்ளும்போது, பூமியெல்லாம் கிடுகிடென்று நடுங்கிவிட்டது. இம்மாமுனிவர் என்செய்வாரோ? என்று தேவர்களும் மிகப்பயமடைந்தனர். பின்பு நன்கு விரதானுஷ்டானஞ் செய்து அறிஞராகிய வஸிஷ்டமஹர்ஷி உலகமெல்லாமிப்படி பயந்து நடுங்குவதைக்கண்டு, அரசனைநோக்கி இங்ஙனம் உரைத்தனர். 'மஹாராஜனே! நீ சொன்னசொல் தவறுத இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்தவன். வேறொரு தர்மதேவதையோ என்னும்படி தர்மமே தொழிலாயிருப்பவன், நன்கு தைரியம் நிறைந்தவன். விரதங்களைத்தவறுமல் அநுஷ்டிப்பதில் மிக்க ஊக்கமுடையவன். ஐச்வர்யமெல்லாமமைந்திருப்பவன். இப்படிப்பட்ட நீ தர்மத்தைத் தவறுவது யுக்தமன்று. ராகவனே! நீ தர்மாத்மாவென்று மூவுலகங்களிலும் மிகவும் கியாதிபெற்றவன். சொன்னசொல் தவறுதிருப்பது உனக்கே உரிய தர்மம். அதை நீ அநுஷ்டிப்பாயாக. நீ அதர்மத்தை ஏறிட்டுக்கொள்ளலாகாது. இப்படி செய்கிறேனென்று ஒத்துக்கொண்டு, பின்பு அங்ஙனஞ்செய்யாதவன், தான் முன்செய்த அச்வமேதம் முதலிய பலவகை யாகங்களையும், குளம் கிணறு வெட்டுவித்தது, ஸத்ரம் சாவடி கட்டுவித்தது முதலிய தர்மங்களையும் பயன்றவைகளாகச் செய்துகொள்வான். ஆகையால் ராமனை ரக்ஷிக்குத் தருவாயாக. ராமன் அஸ்த்ரங்களைக்கற்றிருந்தாலென்?. கல்லாதிருந்தாலென்?. குசிகனது புதல்வராகிய இவ்விச்வாமித்ரர் அவ

னைப் பாதுகாத்துக்கொண்டிருக்கையில், அக்நியால் சூழ்ந்து காக்கப்பட்ட அமிருதத்தைப்போல அரக்கர்கள் அவனை வெல்லவல்லரல்லர். இவ்விச்வாமித்ரமாமுனிவர் தர்மமே ஓர் வடிவங்கொண்டாற்போலிருப்பவர். மூவுலகத்திலும் வீரியம் படைத்தவர்களில் இவர் மிகச் சிறந்தவர். தமது புத்தியின் மிகுதியால் உலகத்தில் பாவரையும் மீறி யிருப்பவர். இவர் தவங்களுக்கெல்லாம் இருப்பிடம். இவரைப்போல் தவஞ்செய்தவன் மற்றொருவனில்லை. ஜங்கமஸ்தாவரங்களடங்கிய இம்மூவுலகங்களிலுமுள்ள பலவகைப்பட்ட அஸ்த்ரங்களையெல்லாம் இவரறிந்தவர். இவரறிந்த அஸ்த்ரங்களை இதுவரையிலும் எவரும் தெரிந்துகொண்டிருக்கவில்லை. இனிமேலும் இவைகளை எவரும் அறியப்போகிறதில்லை. என்னையினுமென்பதென்? தேவர்களும் ரிஷிகளும் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் கிந்நரர்களும் உரகர்களும் மற்றுமுள்ள யாவரும் எவ்வளவு மகிமைபொருந்தியிருப்பவர்களாயினும் இவைகளையறியார். அஸ்த்ரங்கள் எல்லாம் பரமதார்மிகராகிய பிருசாச்வருடைய புத்ரர்கள். முன்பு இக்ஷ்வாகுசிகர் ராஜ்யமாளுங்காலத்தில் அவருக்கு பிருசாச்வர் அவ்வஸ்த்ரங்களையெல்லாந் தந்தனர். பிருசாச்வருக்கு தக்ஷப்ரஜாபதியின் பெண்களிருவரிடத்தில் அவ்வஸ்த்ரரூபங்களான பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் காமரூபிகள்; மிகுந்த வீர்யமுடையவர்கள்; சிறந்த ஒளிபொருந்தியிருப்பவர்கள்; தம்மைப்பற்றினவர்களுக்கு வெற்றியைத் தரவல்லவர்கள். தக்ஷப்ரஜாபதிக்கு ஜயையென்றும், ஸுப்ரபையென்றும், அழகான இடையுடைய பெண்கள் இருவருண்டு. அவ்விருவரும் மிகவும் ப்ரகாசமுள்ள அஸ்த்ரங்களையும், சஸ்த்ரங்களையும், பெற்

றனர். அவர்களில் மூதற்பெண்ணாகிய ஜயையென்பவள் அஸுரஸைந்யங்களை வதிக்கும்பொருட்டு அளவிடமுடியாத மஹிமையுடையவர்களாகி, நினைத்தபடிவடிவங்கொள்ளவல்லவர்களுமாகிக், கண்ணுக்குப் புலப்படாதவர்களுமாகிய ஐம்பது புதல்வர்களைப் பெற்றனள். பின்பு ஸுப்ரபையும் எதிரிகளால் வருந்தியும் வெல்லமுடியாத வல்லமையுடையவர்களாகி, எங்கும் வெற்றிபெறுந்தன்மையர்களுமாகி, அளவற்ற பலமமைந்தவர்களுமாகிய ஸம்ஹாரங்களென்று பேர்பெற்ற ஐம்பது புதல்வர்களைத் தானும்படைத்தனள். அவ்வஸ்த்ரங்களையெல்லாம் பரிபூர்ணமாகக் குறைவின்றி இவ்விச்வாமித்ரமாமுனிவர் அறிவார். அப்படி ஸகல அஸ்த்ரங்களுமறிந்து தர்மங்களெல்லாமுணர்ந்த இம்மாமுனிவர் கீழ்ச்சொன்னவைகளேயன்றித் தான் இதுவரையில்கேட்டறியாத மற்றும் புதியவைகளான அஸ்த்ரங்களையும் அளவின்றி யுண்டுபண்ண வல்லமையுள்ளவர். மஹாதேஜஸ்வியாய், அளவற்ற கீர்த்தியமைந்துமிருக்கிற இவ்விச்வாமித்ரமாமுனிவரது வீர்யம் இப்படிப்பட்டது. ஆதலால் மன்னவனே! ராமனை யனுப்பநீ கிஞ்சித்தும் ஸந்தேகப்படவேண்டியதில்லை. அவ்வரக்கர்கள் அனைவரையும் இக்குசிகபுத்ரராகிய விச்வாமித்ரர் ஒருவரே முடிக்க வல்லவரன்றோ?. ஆயினும் உனது புதல்வனுக்கு நன்மையுண்டாகும்பொருட்டு உன்னிடம் வந்து இப்படி கேட்டுக்கொள்ளுகின்றனர்' என்று இங்ஙனம் வஸிஷ்டமாமுனிவர் சொன்ன சொற்களைக்கேட்டு ரகுக்களிற்சிறந்து நன்கு விளங்குந்தன்மையனாகிய அம்மன்னவன் மனக்கலக்கந் தீர்ந்து தெளிந்து ஸந்தோஷத்தினால் முகமலர்ந்திகொண்டு ராமன் போவதற்கு அங்கீகாரஞ்செய்து அவனை விச்வாமித்ரனுக்குக்கொடுக்க மனத்தில் எண்ணங்கொண்டனன். இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் ராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு போவது.

அப்படி வஸிஷ்டமாமுனிவர் சொல்லுகையில் அதைக்கேட்ட தசரதமன்னவன் ஸந்தோஷத்தினால் முகமலர்த்தி பெற்றுத் தனது புதல்வனுகிய ராமனை லக்ஷ்மணனுடன்கூட வரவழைத்தனன். பின்பு தாயாகிய கௌஸல்யையும், தந்தையாகிய தசரதமன்னவனும், ராமனுக்கு மங்களாசாரங்களை நடத்தினர். புரோஹிதராகிய வஸிஷ்டமாமுனியும், மங்களமான மந்த்ரங்களால் அவனை மந்த்ரித்தனன். பிறகு அத்தசரத வேந்தன் தனக்கன்பனுகிய புதல்வனை உச்சிமோந்து உள்ளங்குளிர நன்கு ஸந்தோஷத்துடன் விச்வாமித்ரருக்குத் தந்தனன். பின்பு தாமரையிதழ்போன்றகண்களையுடையராமன் விச்வாமித்ரரைப் பின்தொடர்வதைக்கண்டு அப்பொழுது காற்றானது தூளின்றி ஸுகமாயிருக்குமாறு மெதுவாக வீசிற்று. அம்மஹாத்மாவாகிய ராமன் புறப்படும்போது தேவர்கள் துந்துபிவாத்யகோஷத்துடன் புஷ்பவர்ஷங்களை அளவின்றிப் பொழிந்தனர். அயோத்திமாநகரிலும் அப்பொழுது சங்கவாத்தியங்களும் துந்துபிவாத்தியங்களும் முழங்கின. விச்வாமித்ரர் முன்னே நடந்தனர். அவர் பின்னே ராமனும் வில்லுங்கையுமாகத் தொடர்ந்தனன். லக்ஷ்மணனும் காகபக்ஷங்கள் அசைய வில்லைக்கையிற் கொண்டு ராமனைப் பின்சென்றனன். அவ்விரு வரும் வேறுவேறுக அம்பரூத்தூணிகளைத் தோளில் தரித்திருப்பதால் மூன்றுதலைகளுள்ள இரண்டுஸர்ப்பங்கள்போல் விளங்குமவர்களாய், வில்லைக்கையிலுன்றியவர்களுமாய், பத்துத்திசைகளையும் பளபளவென ஒளிபெறச்செய்பவர்களுமாய், அளவற்றிருக்கும் அழகு பராக்ரமம் முதலிய வைபவங்கள் விளங்க, அச்விநீதேவ

தைகள் ப்ரஹ்மதேவனைப்பின்தொடர்வதுபோல் மஹாத்மாவாகிய விச்வாமித்ரரைப்பின்தொடர்ந்தனர். இங்ஙனம் வில்லேக்கையிலுள்ள திவ்யமான ஆபரணங்கள் பூண்டு உடும்புத்தோலைக் கைகளிலும் விரல்களிலும் கவசமாகக்கொண்டு உயர்ந்த கத்திகளைப்பிடித்து அளவற்ற ஒளிபரந்து அழகான மேனியுடன் விளங்குமவராய், உடன் பிறந்தவர்களுமாய், இளைஞருமாகிய அந்த ராமலக்ஷ்மணர்களிருவரும் விச்வாமித்ரமுனிவரைப் பின்சென்று கெஞ்சுகொண்டு சிந்திக்கப்போகாத மகிமையுடைய ருத்ரனைப் பின்சென்ற அக்நிகுமாரர்களாகிய [1]ஸ்கந்தவிசாகர்களைப்போல் மிகுந்த ப்ரகாசத்துடன் விளங்கினர். பின்பு அம்முவரும் ஒன்றரையோஜனை தூரம் நடந்து ஸரயூநதியின் தென்கரைக்குப்போய்ச் சேர்ந்தனர். அப்பொழுது விச்வாமித்ரர், ராமா! என்று இனிய சொல்லுடன் அழைத்து, 'குழந்தாய்! ஜலத்தை யெடுத்து ஆசமநம்செய்; காலங்கடக்கலாகாது. பலமந்த்ரங்களில் நிறைந்த பலையென்றும், அதிபலையென்றும் இரண்டுவித்யைகளைப்பெற்றுக்கொள். அதைத் தெரிந்துகொள்வதால் உனக்கு யாதொரு ச்ரமமாவது வியாதியாவது நேரிடாது. உருவம் மாறுதிருக்கும். தூங்கியிருந்தாலும் அசைந்து மறந்திருந்தாலும் ராக்ஷஸர்கள் உன்னை எதிர்க்கமுடியாது. அவ்விரண்டு வித்யைகளை நீ ஜபித்துக்கொண்டிருப்பாயாயின் பாஹுபலத்தில் உனக்கொருவனும் இப்பூமியில் ஒப்பானவன்

---

1 'ததோஉஹவச்சதுர்மூர்த்திஃ க்ஷணேந ஹுதவாந் ப்ரஹுஃ, ஸ்கந்தோ விஸாவஸ்ருஷ்டஸ்ச தைமேஷஸ்ச பூஷ்ணஃ' என்று ஸ்ரீமகாபாரதத்தில் குமாரன் நான்கு ரூபங்களைத் தரித்ததாகச் சொல்லப்பட்டது. அவர்களில் ஸ்கந்த விசாகர்களிருவரை உபமானமாகக்கொண்டு (ஸ்கந்தவிசாகர்களைப்போல்) என்று இங்குச் சொல்லப்பட்டது.

அகப்படான். பாஹுபலத்திலென்பதேயன்றி எக்குணத்திலும் உனக்கு நிகரானவன் மூவுலகத்திலும் இரான். மேலும் பாபமற்றவனே! ஸௌந்தர்யத்திலும், ஸாமர்த்தியத்திலும், நுட்பமான பொருள்களைக்கண்டறிவதிலும், கார்யகார்யங்களை நிச்சயிப்பதிலும், ப்ரச்நம் பண்ணுவதிலும், ப்ரத்யுத்தரஞ்சொல்லுவதிலும், உனக்குச்சரியாயிருப்பவன் உலகத்தில் ஒருவனும் இருக்கமாட்டான். பல சொல்லியென்?, இவ்விரண்டு வித்யைகளையும் கற்றுயாயின் உனக்கொப்பானவன் இப்பொழுதுமில்லை. இனியுண்டாகப் போகிறதுமில்லை. ஏனெனில் பலியென்றும் அதிபலியென்றும் சொல்லப்படும் இவ்விரண்டுவித்யைகள் எல்லா அறிவுக்கும் முதல் தாயாயிருப்பவை. இவ்விரண்டையும் ஜபித்துக்கொண்டு வழியில் நடந்தாயாகில் உனக்குப் பசிதாகங்கள் உண்டாகா. இவைகளைக் கற்றுயாயின் உனக்கு இப்பூமியெங்கும் ஒப்பில்லாத புகழ் விளங்கும். ஏனெனில் இவை ப்ரஹ்மதேவனால் படைக்கப்பட்டவை. ஆகையால் சிறந்த மஹிமை பொருந்தியுவை. நீ பெருமை பெற்ற காகுத்ஸ்த வம்சத்திற் பிறந்தவன். தர்மங்களையெல்லாம் நன்கறிந்து நடத்துந்தன்மையன். ஆகையால் இப்படிப்பட்ட வித்யைகளையடைய நீயே தகுந்த பாத்ரமாகின்றனை. உன்னைப்போன்றவன் மற்றொருவனும் கிடைப்பதரிது. முன் சொன்ன ஸௌபாக்யம் முதலிய பலவித குணங்களும் உன்னிடத்தில் அளவற்றவைகளாய் இருக்கவேயிருக்கின்றன. இதில் ஐயமில்லை. ஆயினும் இவை மிகத் தவஞ்செய்து ஸம்பாதிக்கப்பட்டவையாதலால் இவைகளை உபதேசம் பெற்றுயாயின் இவை உனக்கு வெகு பலங்களைக் கொடுக்க வல்லவை. நீயும் பரம்த இவ்வுலகத்தில் பலருக்கும்உபதேசித்துப் பாவச்செய்வாய்'என்று மொழிந்தனர்.

பின்பு ராமனும் ஜலம் கொண்டு ஆசமனஞ்செய்து பரிசுத்தனாகி, பரமாத்மத்யானஞ் செய்து விளங்கும் விச்வாமித்ரமஹர்ஷியினிடமிருந்து அவ்வித்யைகளிரண்டையும் ஸந்தோஷத்தினால் முகமலர்த்தியுடன் பெற்றுக்கொண்டனன். இப்படி ராமன் அவ்வித்யைகளிரண்டையும் பெற்றுக்கொண்டு சரத்காலத்தில் ஆயிரங்கிரணங்களும் அடைவின்றி விளங்கும் மஹிமையெல்லாமமைந்த ஸூர்யனைப்போல மஹாபராக்ரமசாலியாய்ப்ரகாசித்தனன். பின்பு குருவுக்குச்செய்யவேண்டிய காலப்பிடிப்பது முதலிய உபசாரங்களனைத்தும் விச்வாமித்ர மாமுனிக்கு நன்கு நடத்தித் தானும் லக்ஷ்மணனும் அம்மஹர்ஷியுமாகிய மூவரும் அவ்விரவெல்லாம் ஸரயூநதியின் கரையில் மிக்க ஸுகத்துடன் வஸித்திருந்தனர். அங்ஙனம் அத்தசரத மஹாராஜன் புதல்வர்களாகிய ராமலக்ஷ்மணர்கள் இருவரும் தமக்குத் தகாத புற்படுக்கையில் ஒன்றுப்படுத்து குசிகபுத்ராகிய விச்வாமித்ரர்சொல்லிய சொற்களைக்கேட்டுக் களித்து, ஸுகமாயிருக்கையில் அவ்விரவு விடிந்தது. இருபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரன் அங்கதேச விருத்தாந்தத்தைச் சொல்லுவது.

அவ்விரவு சென்று பொழுது விடியும்போது விச்வாமித்ரமாமுனிவர் [1]இலேகள் கிரம்பின படுக்கையில் சயகித்துக்கொண்டிருக்கும் காகுத்தர்களாகிய ராமலக்ஷ்

---

1 முன்ஸர்க்கத்தில் (புற்படுக்கையில்) என்று சொல்லி, இங்கு (இலேகள் கிரம்பின) என்று சொல்வது ஒன்றுக்கொன்று விரோதிக்கையால், புற்களும் தளிர்களுங்கலந்து போடப்பட்ட படுக்கையென்று கொள்ளவேண்டும்.

மணர்கள் இருவரையும் நோக்கி [1]கௌஸல்யையினது ஸத்புத்ரனே ! ராமா ! பொழுது விடிந்து ஸந்த்யாகால மாயிருக்கின்றது; புருஷோத்தமா ! எழுந்திரு. பகலில்

---

1 இவ்வாக்யத்துக்கு மூலம்—

'கௌஸல்யா ஸுப்ரஜாராம பூர்வாஸந்த்யாப்ரவர்த்ததே,
உத்திஷ்ठநரஶார்தூல கர்தவ்யந்தைவமாஹ்நிகம்'

இதற்குள்ள அர்த்தவிசேஷ மென்னென்னில் - விச்வாமித்ரன் ராமலக்ஷ்மணர்களிருவரையும் எழுப்பக்கோலிச்சென்று 'ஸமயாஸோயிதஃ ஸ்ரீமாந் ஸுவஸுப்தஃ பாந்தபஃ' என்கிறபடியே ராமன் கண் வளரும்போதுண்டான அழகைக்கண்டு அதிலே மனமாழ்ந்து வந்த காரியம்மறந்து இவனைப்பெற்ற வயிறுடைய கௌஸல்யாதேவி என்ன நோன்பு நோற்றனளோவென்று ஆச்சரியப்படுகிறான். (ராம) ஸர்வோத்தமமான ஸௌந்தர்யத்திலே யாவரையும் களிக்கச்செய்பவனே யென்க. (கௌஸல்யா) உன்னைப்பெற்ற கௌஸல்யாதேவி. (ஸுப்ரஜா) உன்னைப்போன்ற செல்வப்பிள்ளையைப் பெற்றுளாகையால் நல்லபுதல்வனையுடையவள். அன்றியே விச்வாமித்ரன் ஆச்சர்யப்பட்டுத் தனக்குத்தானே சொல்லிக்கொள்கிறுனுகவுமாம். அதாவது (கௌஸல்யாஸுப்ரஜாஃ) இவனைப்பெற்ற கௌஸல்யை நல்ல புதல்வனைப்பெற்றனள் என்று. அன்றியே விச்வாமித்ரன் இத்தால் ராமனை ஸம்போதிக்கிறுனுகவுமாம். (கௌஸல்யாஸுப்ரஜாஃ) கௌஸல்யாதேவியின் நற்பிள்ளையான (ராம) ராமனே. என்று ராமசப்தத்துக்கு விசேஷணம் பரசுராமனன்றென்று தெரிவிக்கைக்காக. கௌஸல்யை தசரதன் ஆகிய இவ்விருவர்க்கும் ராமன் தவப்பயனுக வந்தவதரித்தவனுகையால் தசரதனும் நற்பிள்ளையைப் பெற்றவனுயிருக்க (கௌஸல்யாஸுப்ரஜாஃ) என்று கௌஸல்யையாத்திரம் நற்பிள்ளையைப் பெற்றவளென்று சொல்வதென்? என்னில், ' மாதாபுத்ரஸ்யஜன்யாஅவி கர்மாண்யாரபதே ' என்று புத்ரன்விஷயமான கார்யங்கள் மாதாவுக்கே யதிகமென்று சொல்லுகையாலும், ' மாதருதேவோபவ ' என்று ச்ருதிமுதலில், மாதாவைச் சொல்லுகையாலும், 'பிதுர்ஶதகுணம் மாதா' என்று ச்ருதிசொல்லுகையாலும், அறுபதினுயிரமாண்டு மலடினின்று அருமையாகப் பெற்றபிள்ளையைத் தசரதசக்ரவர்த்தி தன்னுடன் அனுப்பு

செய்யவேண்டிய தேவதாராதநம் முதலிய நடவடிக்கை களை நடத்தவேண்டு மென்றனர்.

தற்கு ஸம்சயித்திருக்க, கௌஸல்யை தான் தாயாயிருந்தும் தனக் குள்ள ப்ரீதியாலே நிஷேதிக்கையன்றியே தன்பின்னேயனுப்பிலு ளென்கிற உபகாரஸ்ம்ருதியாலும் கௌஸல்யையுடைய நல்லகுமா ரனே யென்கிறன். (ஸுப்ராஜா) மாதாபித்ருவாக்யபரிபாலநம் பண்ணுகையும் அவர்களுக்கு ப்ரியஹிதங்களைச் செய்கையும் நல்ல புதல்வனுக்கு லக்ஷணமென்று லோகத்தார் அறியும்படி தன்னு டைய பிள்ளைத்தனத்தை யநுஷ்டித்துக்காட்டுகையாலும் 'கௌ ஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யேவ தேவ' என்றும் 'தாயைக்குடல் விளக்கஞ்செய்த தாமோதரன்' என்றும் புகழும்படியான பிள்ளைத்தனத்தாலே பெற்ற தாயாரை விளங்கப்பண்ணுகையாலும் (நல்லகுமாரனே) என்கிறன். இப்படியே மூனிவன் ராமனுடைய மற்றைக் கல்யாண குணங்களில் ஆழ்ந்திருக்கை தவிர்ந்து எழுப்புகிறன் (ராம). இத்தால் கண்வளர்ந்தருளுங்காலத்தில் அழகு தோற்றுகிறது. (பூர்வாஸந்த்யா ப்ரவர்த்ததே) விடியற்கால ஸந்தியானது ஸூர்யனைப் பெறுவது போல ராமதிவாகரனென்று சொல்லும்படியான உன்னைக் கௌஸ ல்யை பெற்றனளென்று கருத்து; அல்லது தாய்க்குப்போல பூர்வ ஸந்திக்கு உபசாரஞ்செய்வாயென்க; அன்றியே விடியற்காலஸந்தி நடக்கின்றது. ஸூர்யனுக்கு எப்படி விரோதிகளாகிய அஸுரர் களை நிரஸிக்கும்ஸமயமோ, அப்படியே உனக்கும் விரோதிகளைத் தொலைக்கவேண்டிய ஸமயமாகநேரிட்டதென்க; அன்றியே-அ ந்தகாரம்போய் ஸூர்யோதயஸமயம் வந்தாற்போல் எனக்கு அஜ்ஞாநாந்தகாரங்கடந்து, பகவாலுகிய உனது ஸாக்ஷாத் காரம் உண்டாயிற்றென்க. இன்று எனக்கு நற்போதாய் விடி ந்ததென்று கருத்து. (உத்திஷ்ட) எழுந்தருளவேணும். நீகண்வ ளர்ந்தருளும்பொழுது அவ்வழகைக்கண்டேன். இனி எழுந்தருளு ம்போது அழகைக்காணவேணுமென்க. (நரஸார்தூலை) நீ புரு ஷச்ரேஷ்டலுகையால். 'யதீயஹாசரதி ஸ்ரீரேஷ்டஸ்தத்ததேவே த்ரோ ஜந' (பெரியோன் ஏதேது அநுஷ்டிப்பலை, இதர ஜநங்களும் அதைஅதையே அநுஷ்டிக்கும்) என்கிறபடியே இதரர்களைத்திருத்தும்பொருட்டு நீ ஸந்த்யோபாஸநஞ் செய்தருள

இப்படி அம்மாமுனிவர் சொன்ன மிகவும் கம்பீரமான வார்த்தையைக்கேட்ட ராஜகுமாரர்களிருவரும் எழுந்திருந்து நீராட்டம் முடித்து அர்க்யங்கொடுத்துவிட்டு மந்த்ரங்களிற்சிறந்த காயத்ரியென்னும் மந்த்ரத்தை ஜபஞ் செய்தனர். இங்ஙனம் மஹாவீரர்களாகிய அவ்விருவரும் திகக்கடமை யாவும் செய்து முடித்து, தவம் பொருந்திய விச்வாமித்ர மாமுனிவரைத் தண்டனிட்டு மிக்க மனக்களிப்புடன் அங்கிருந்து விச்வாமித்ரர் புறப்படுவதை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அப்படி அங்கிருந்தும் புறப்பட்டு மிக்க வீரியம் பொருந்திய அவ்விருவரும் புண்யமான ஸரயூநதி வந்துசேருமிடத்தில் அழகான கங்காநதியைக்கண்டனர். அங்கு அநேக மாயிரம் வருஷங்களாகப் பெருந் தவஞ்செய்துகொண்டிருக்கும் மிகுந்த மகிமையுள்ள ரிஷிகளின் ஆச்ரமம் வாய்த்திருக்கும் ஓரிடத்தைக்கண்டு வெகு ஸந்தோஷத்துடன் மஹாத்மாவாகிய விச்வாமித்ரரைப்பார்த்து 'பகவானே! அழகான இவ்வாச்ரமம் யாருடையது?. இதில் வாஸஞ்செய்யும் புருஷன் எவன்?. எங்களுக்கு இது மிகவும் குதூஹலத்தை விளைவிக்கின்றமையால் கேட்க விரும்புகின்றனம். இதைச் சொல்லவேணும்'என்று கேட்டனர். அம்மாமுநியும் அவர்கள் சொன்னசொற்களைக்

வேணும் என்க. ஆச்ரிதர்களின் விரோதிகளை யழிக்கையே ஸ்வபாவமாக வுடைய புருஷச்ரேஷ்டரெனிய உனக்குங் கண்வளர்ந்தருளத்தீருமோ என்க. எழுந்திருக்கைக்கு ப்ரயோஜநமென்னென்னச் சொல்லுகிறான்— (கர்த்தவ்யந்தைவமாஹ்நிகம்) ஈச்வரன்விதித்த கடமைகளைச் செய்யவேண்டும். அன்றியே—தைவசப்தம் முன்னிலையைச்சொல்லுகிறதாய், நீ ச்ருதிஸ்ம்ருதிகளில் விதித்தருளிய உனதாஜ்ஞாரூபமாகிய நித்யகர்மங்களை நான் அநுஷ்டிக்கவேண்டும், அதை நீ திருவுள்ளம் பற்றுகைக்காக நீ யெழுந்தருளவேணும் என்க.

கேட்டுச் [1]சிரித்து 'ராமா! இது முன் யாருடைய ஆச்ரமமோ, அதைச் சொல்லுகின்றேன். கற்றவர்களால் காமனென்று சொல்லப்படும் (கந்தர்ப்பன்) மன்மதன் முன்பு கண்ணுக்குப் புலப்படும்படி உருவத்துடனிருந்தனன். அக்கெடுமதியனுகிய மன்மதன் மஹாத்மாவாகிய சிவன் பார்வதியை மணம்புரியச் செய்யவேண்டுமென்று தேவதைகள் கேட்டுக்கொள்ள, அவரிடம் அநுமதி பெற்று அங்ஙனே நடத்துவதாக உத்தேசங் கொண்டு இவ்வாச்ரமத்தில் மிக்க நியமத்துடன் மனவூக்கங் கொண்டு தவஞ்செய்யும் சிவபெருமானுக்குக் காமத்தை விளைவிக்கும்பொருட்டுப் புஷ்பபாணங்களே யேவ, அம்மஹாநுபாவனுல் நெற்றிக்கண்ணைத் திறக்கப்பட்டு 'ஹும்' என்று நிராகரிக்கப்பட்டு பஸ்மமாயினன். ரகுநந்தன! இங்ஙனம் சிவபெருமானது நெற்றிக்கண்ணினுல் கொளுத்தப்பட்ட கெடுமதியனை மன்மதனுடைய சரீரத்திலிருந்த அவயவங்களெல்லாம் சிதறிப்போயின. மஹாத்மாவாகிய சிவபிரான் இப்படி பஸ்மமாகச்செய்ய, அம்மன்மதனுடைய சரீரம் பாழாய்விட்டது. இங்ஙனம் தேவர்களுக்குத் தலைவனுகிய ருத்ரனுல் மிகச்சினங் கொண்டு மன்மதன் சரீரமற்றவனுகச்செய்யப்பட்டனன். ராகவனே! அதுமுதலாக மன்மதன் அங்கமற்றவனுதலைப்பற்றி அநங்கனென்று கியாதி பெற்றனன். அம்மன்மதன் யாதோரிடத்தில் அங்கத்தைவிட்டனனே, அத்தேசம் அங்கமென்று வழங்கிவருகின்றது. புண்யமான இவ்வாச்ரமம் அச்சிவபெருமானுடையது. இங்கிருக்கும்

(சிரித்து) விளுவுதலினழகைக்கண்டு சிரித்தானென்று கண்டுகொள்வது. அல்லது—மதுஷ்யத்தன்மையைநடித்து ஒன்று மறியாதவன்போல் விளுவினைதைக்கண்டு சிரித்தானென்றுணர்க. (ராமா!) என்று சொன்னது ராமனே முக்கியமாகக்கொண்டு சொன்னதை லக்ஷ்மணனைக்குறித்துஞ் சொன்னதாகவே யுணர்க.

இம்முனிவர்கள் அக்காலந்தொடங்கி வம்சபரம்பரை யாக அச்சிவபெருமானுடைய சிஷ்யர்களாயிருக்கின்ற னர். ஆகையால் இவர்கள் எப்போதும் தர்மத்தில் மனஞ்சென்று பாவமேதுமின்றிவிளங்குமவர்கள். பார்க் கப் பதினாயிரம் கண்கள் வேண்டும்படி அழகான ராம னே! இன்றிரவு அங்கதேசத்தில் இப்புண்யநதிகளி னிடையில் வஸித்திருந்து காலையநகம் நாம் கங்கையைத் தாண்டிப்போவோம். இனி நாம் ஸ்நாநம் செய்து ஜபங் களை நடத்தி ஹோமங்களைமுடித்துப் பரிசுத்தர்களாய் புண்யமான ரிஷிகளிஞ்சரமத்துக்கு அனைவருமாகப் போவோம், என்று இங்ஙனே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்க, ரிஷிகள்யாவரும் தமது தபோமகிமை யால் வெகுதூரமறியவல்ல நெஞ்சென்னு முட்கண்கொ ண்டுஅவர்களையும் அவர்கள் வருங்காரணத்தையும்அறிந் து சரீரமெங்கும் மயிர்கூச்செறிய மிகுந்த ஸந்தோஷங் கொண்டு விச்வாமித்ரருக்கு அர்க்யபாத்யங்களும் ஆசமநீ யமும்கொடுத்து காய் கிழங்கு மூதலியவைகளால் அதிதி ஸத்காரமும்செய்து பின்பு ராமலக்ஷ்மணர்களுக்கும் அதி திபூஜையை நடத்தினர். விச்வாமித்ரரும் அவர்களுடைய க்ஷேமத்தை விசாரித்தனர். அம்முனிவர்களும் ஸத்கார த்தைப்பெற்று, தமக்கு அதிதிகளாகிய ராமலக்ஷ்மணவிச் வாமித்ரர் மூவரையும் பலவித கதைகளைச்சொல்லி மன ங்களிக்கச் செய்துகொண்டிருந்தனர். பின்பு ஸூர்யன் அஸ்தமிக்க, விச்வாமித்ரர் மூதலிய மஹர்ஷிகளும் ராம லக்ஷ்மணர்களும் மனஊக்கங்கொண்டு தங்கள் தங்களுக் குரியபடி ஸந்த்யாவந்தநஞ் செய்து காயத்ரி ஜபஞ்செய்த னர். பின்பு விரதாநுஷ்டாநங்கள் நன்கமைந்து அங்கு வாஸஞ்செய்யும் தாபஸர்கள் தம்மையழைத்துக்கொண்டு போக, அம்மூவரும் அங்கு சிவன் காமனைக்கொளுத்தின

படியால் காமாச்ரம மென்று பேர்கொண்ட அவ்வாச்ரம மேறச்சென்று அங்கே ஸுகமாக வஸித்திருந்தனர். தர்மாத்மாவாகிய அவ்விச்வாமித்ரமாமுனிவர் அவ்வாச்ரமத்தின் மகிமையைக்குறித்த மதுரமானகதைகளைச்சொல்லி அழகான ராஜகுமாரர்களைச் சந்தோஷப்படுத்திக்கொண்டிருந்தனர். இருபத்து மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் ஸரயூநதி மலதகரூச தேசங்கள்ஆகிய இவற்றின்வரலாறு கூறியது.

பின்பு பொழுதுவிடிந்து ஸுர்யோதயமாகையில் பகைவரை அடக்குந் தன்மையராகிய ராமலக்ஷ்மணர்களிருவரும் அக்காலத்திற் செய்யவேண்டுமவற்றைச் செய்துமுடித்து, விச்வாமித்ரமாமுனியை முன்னிட்டுக்கொண்டு கங்காநதியின் கரைக்கு வந்து சேர்ந்தனர். பின்பு விரதங்களையெல்லாம் நன்கதுஷ்டித்து மஹாத்மாக்களாகிய அவ்வாச்ரமத்திலுள்ள முனிவர்கள் அனைவரும் அழகிய ஒரு ஓடத்தை அருகிற்கொண்டுவந்து நிறுத்தி விச்வாமித்ரமாமுனியை நோக்கி 'மாமுனியே! ராஜபுத்ரர்களை யழைத்துக்கொண்டு இவ்வோடத்திலேறி சுபமாக வழியைக்கடந்துபோம். காலவிளம்பம் வேண்டாம்' என்றனர். விச்வாமித்ரரும் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி, அந்த ரிஷிகளைப் பூஜித்து ராஜபுத்ரர்களோடு கடலைநோக்கிச்செல்லும் அக்கங்காநதியைத் தாண்டத் தொடங்கி ப்ரவாஹத்தினிடையே போகையில் அலைகள் வேகத்துடன் ஒன்றோடொன்று அடித்துக்கொள்வதனால் மேன்மேலும் அதிகப்படும் ஓரொலியை ராமலக்ஷ்மணர்களிருவருஞ் செவியுற்றனர். அப்பொழுது ராமன்

விச்வாமித்ரமாமுநியைப்பார்த்து 'மாமுநியே! இவ்வாற்றின் கடுவில் ஜலம் ஒன்றேடொன்று கிளம்பும் இப்பெரியகோஷம் எதனாலுண்டாகின்றது' என்று கேட்க, அதற்கு தர்மாத்மாவாகிய விச்வாமித்ரமுனிவரும் குதூஹலத்துடன் அவ்வொலிக்குக்காரணமிதுவென்று கிச்சயித்துச் சொல்லத்தொடங்கினர். 'புருஷோத்தமனாகிய ராமனே! கைலாஸபர்வதத்தில் ப்ரஹ்மதேவன் தனது மனத்தினால் ஒரு ஸரஸ்ஸை நிருமித்தனன். ஆகையால் அது மாநஸமென்று சொல்லப்படும். அந்த ஸரஸ்ஸினின்றும் பெருகின் ஸரயூநதி அயோத்யாபட்டணத்தைச் [1]சுற்றிக்கொண்டு வருகின்றது. பிரமனது மனத்தினால் நிருமிக்கப்பட்ட மாநஸமென்று பேர்பெற்ற அக்கைலாஸ ஸரஸ்ஸினின்றும் பெருகிவருகையால் புண்யமான இந்நதிக்கு ஸரயுவென்று பேர் விளங்குகின்றது. அந்த ஸரயூநதி மிக்க வேகத்துடன் இக்கங்காப்ரவாஹத்தில் வந்து விழுவதுபற்றி ஜலம் ஒன்றேடொன்று மோதிக்கொள்ள, அவ்வேகத்தினாலுண்டாகின்றது இம்மிகுந்த கோஷம்.

---

1 இந்த ஸரயூநதி ப்ரஹ்மாவினால் படைக்கப்பட்ட மாநஸஸரஸ்ஸினின்றும் பெருகி அயோத்யாநகரத்துக்கு மேற்குத்திசையிலாரம்பித்து அப்பட்டணத்திற்கு வடக்குத்திசையின்வழியாக அந்நகரத்துக்குக்கிழக்கேவந்து அங்கதேசத்தில் பெருகிப்போகின்ற கங்காநதியோடு கலக்கின்றது. அவ்விரண்டுநதிகளுங் கலக்குமிடத்தில் ஸ்தாணுவின் ஆச்ரமம் இருக்கின்றது. (ஸ்தாணு - உருத்திரன்.) ஆகையால் ஸரயூநதியுடன் கலந்த கங்காநதியைத்தாண்டும்பொழுது ஸரயூநதி மேட்டிலிருந்து பள்ளத்தில் விழுந்து வருகையால் அந்தப்ரவாஹத்தில் த்வநி உண்டாகின்றதென்றுணர்க. இவ்வொலியேதென்ற ராமன் வினவ, இது மேட்டிலிருந்து பள்ளத்தில் விழுந்து பாயும் ஸரயூநதியின் ப்ரவாஹத்தில் உண்டானதென்று சொல்லவேண்டியிருக்க, அந்நதியின் பிறப்பைச் சொன்னது அங்கு நமஸ்காரஞ் செய்கைக்காகவென்று கண்டுகொள்வது.

ஆகையால் மனஸுக்கத்துடன் இக்திகளுக்கு நமஸ்கா ரஞ்செய்' என்றுரைத்தனன். தர்மங்களே மிக்க அன்பு டன் அநுஷ்டிக்குந் தன்மையராய், மிக்க பராக்ரமசாலிக ளுமாகிய அவ்விருவரும் அப்படியே அக்திகளுக்கு நமஸ்காரஞ்செய்து கங்காநதியின் தென்கரைக்குச் செ ன்று வேகமாக நடந்தனர். அங்ஙனஞ் சென்று இக்ஷ்வா கு வம்சத்துக்கு அலங்காரமான தசரதமஹாராஜனது பு த்ரனுகிய ராமன் ஜநஸஞ்சாரமில்லாமல் பயங்காமாயிருக் கும்ஓர் கானகத்தைக்கண்டு, விச்வாமித்ரமாமுனியைநோ க்கி 'ஓமுனிகளுக்கரசே! இக்கானகமான துவருந்தியும்உள் ளே புகக்கூடாததாயிருக்கின்றது. இதில் கூவர்க்கோழி யென்று சொல்லப்படும் சில்வண்டுகள் கூட்டங்கூட்டமாய் எங்கும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. பின்னும் இதில் பயங்கரங்களான கொடிய மிருகங்களும் எங்குந்திரிந்து கொண்டிருக்கின்றன. கள்ளிக்காக்கைகளும் மற்றும் பலவகைப் பறவைகளும் இங்கு எங்கும் நிறைந்து பயங்க ரமாகக் கூச்சலிட்டுக்கொண்டிருக்கின்றன. சிங்கங்களும், புலிகளும், பன்றிகளும், யானைகளும், இங்குநிறைந்திருக் கின்றன. வெள்வேலமரங்களும், ஆச்சாமரங்களும், மருத மரங்களும், வில்வமரங்களும், திந்துகமரங்களும், பாதிரிமர ங்களும், இலந்தைமரங்களும், இதில் எங்கும்சூழ்ந்திருக் கின்றன. இங்ஙனம் பயத்தை விளைவிக்குமதான இக்கா னகத்தின் பெயர் யாது' என்று வினவ, அப்பொழுது மகிமையெல்லா மமைந்த விச்வாமித்ரமாமுனிவர் ராமனை நோக்கிக் 'குழந்தாய் காகுத்தனே! புருஷோத்தமா! ப யங்கரமான இக்கானகம் யாருடையதோ, அதைச்சொ ல்லுகிறேன்; கேள். முன் இது தேவர்களால் நிருமிக் கப்பட்டு தேவலோகத்தோடொத்து மலதமென்றும் கரூ சமென்றும் பேர்கொண்ட இரண்டுதேசங்களாயிருந்தது

முன்னே இந்திரன் விருத்ராஸுரனை வதிக்க, உடனே அவ்வாயிரங்கண்ணனுகியதேவேந்திரனை ப்ரஹ்மஹத்தியை யாவேசித்து அதனல் அவனுக்கு அசுசியும் (பாவமும்) பசியும் வெகுவாய்ச் சூழ்ந்துகொண்டன. அப்பொழுது தேவதைகளும் தபோதனர்களாகிய ரிஷிகளும் அவ்விந்திரனுக்குக் கங்கைமுதலிய புண்யதீர்த்தங்களால் அபிஷேகஞ் செய்வித்துப், பின்பு மந்த்ரபரிசுத்தங்களான கலசஜலங்களால் ஸ்நாநம்பண்ணுவித்து, அவ்வசுசியையும் பசியையும் போக்குவித்து, அவ்விந்திரனதுசரீரத்தினின்றுங் கழிந்த மலமென்றும்கரூசமென்றுஞ் சொல்லப்பட்ட பாவத்தையும் பசியையும் இத்தேசத்தில் ஒழியும்படி செய்து, பின்பு ஸந்தோஷமடைந்தனர். இந்திரனும் தனதுமலகரூசங்களைவிட்டுத் தான்பரிசுத்தனனதற்கு மிகவும் ஆநந்தித்து அத்தேசங்களைக்குறித்து 'எனது சரீரமலங்களையும், கரூசங்களையும் வாங்கிக்கொண்டமையால் இத்தேசங்கள் தநதான்யங்களால் சிறந்து, எனது சரீரமலத்தைக் கண்டித்தமையால் மலதங்களென்றும், கரூசத்தைவாங்கிக்கொண்டமையால் கரூசங்களென்றும், உலகத்தில் கியாதியடையப்போகின்றன' என்று இச்சிறந்தவரத்தைக் கொடுத்தனன். மிகுந்தமதியுடைய தேவேந்திரன் அங்ஙனம்அத்தேசத்துக்குத்தந்த வெகுமதியைக்கண்டு தேவர்கள் ஸந்தோஷித்து 'நல்லது நல்லது' என்று அவ்விந்திரனைப்புகழ்ந்துகொண்டனர். இங்ஙனம் தேவேந்திரனது வரமகிமையால் இம்மலதகரூசதேசங்கள் வெகுகாலமாகத் தநதான்யங்கள் நிறைந்து களிப்புற்றிருந்தன. பிறகு இங்ஙனே சிலகாலஞ்செல்ல், தாடகையென்று பேர்கொண்ட ஓர் யக்ஷகன்னிகை உண்டாயினள். அவள் பிறந்ததுமுதல் ஆயிரம்யானை பலமுடையளாகி நினைத்தபடி வடிவங்கொள்ள வல்லவளுமாயிருந்தனள்.

அவளால் உனக்கு யாதொருபயமும் உண்டாகாமலிருக்க வேண்டும். அவளே மதிமாஞகிய ஸுந்தனென்பவன் மணம்புரிந்தனன். அவளுக்குப் பராக்ரமத்தில் இந்திரனைப்போன்ற மாரீசனென்னும் ராக்ஷஸனொருவன் பிறந்தனன். அவன் திரண்டிருண்டிநீண்ட புஜதண்டங்களும், யாவருமெதிரிட வொண்ணுத சிறந்தவீர்யமும் அமைந்து பரந்த முகத்தோடும் பருத்த சரீரத்தோடுங்கூடி, பயங்கரமான உருவங்கொண்டு எப்பொழுதும் ப்ரஜைகள் அனைவர்க்கும் பயத்தை விளைவித்துக்கொண்டிருக்கின்றனன். ரகுகுலதிலகனே! கெடுநடத்தையுள்ள அத்தாடகை இம்மலதகரூச தேசங்களை எப்பொழுதும் பாழடையச்செய்கின்றனள். அவள் தான் ஒன்றரை யோஜனதூரத்தில் வழியைத் தகைந்துகொண்டு வாஸஞ் செய்கின்றனள். அத்தாடகை வஸிக்கும் வரம் யாதோரிடத்திலிருக்கின்றதோ, அவ்வழியாகவே நாம் போகவேண்டும். நீ உனது புஜபலத்தைக்கொண்டு இக்கொடுந்தொழிலுடையளாகிய தாடகையை எனது சொற்படி முடிக்கவேண்டும். அப்படி முடித்தாயாயின்முன்போலவே இத்தேசங்கள் யாதொரு உபத்திரவமுமின்றி ஸுகமாயிருக்கும். இத்தேசம் இப்படி புண்யக்ஷேத்ரமாயிருக்தும் யாவராலும் வெல்லமுடியாத வல்லமைகொண்டு மிக்கபயங்கரையான அத்தாடகையென்னும் யக்ஷப்பெண்ணினால் பீடிக்கப்பட்டிருப்பதால் ஒருவரும் இங்கு நாடமுடியாமலிருக்கின்றது. ஆக இவ்வநம் எப்படி பயங்கரமாயிற்றோ; எப்படி ஜநஸஞ்சாரமற்றதாயிற்றோ; எப்படி, இப்பொழுதும் அந்த யக்ஷப்பெண்ணான தாடகையினுபத்ரவம் சிறிதும் நீங்கப்பெறாமல் அப்படியே நடந்துவருகின்றதோ; அப்படியே அக்கதை யெல்லாவற்றையும்

ஸவிஸ்தரமாக உனக்குச்சொன்னேன்; ராகவா!' என்று மொழிந்தனர். இருபத்துநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

தாடகாவிருத்தாந்தம்.

பின்பு அளவற்றமகிமையுடைய அவ்விச்வாமித்ரமுனிவர் இங்ஙனம் அழகாயுரைத்தமொழியைக்கேட்ட புருஷோத்தமனாகிய ராமன் விச்வாமித்ரரைப் பார்த்து 'மாமுநியே! யக்ஷர்கள் பலத்தில் மிகவும் குறைந்தவர்களென்று கேட்டிருக்கின்றனம். அப்படிப்பட்டவர்களில் ஓர் பெண்பிள்ளை ஆயிரம்யானைபல முடைத்தாயிருப்பதெப்படி?' என்றிங்ஙனம் இனியதொரு சொல்லைச்சொல்ல, அதைக்கேட்டு விச்வாமித்ரர் இங்ஙனமுரைத்தனர். 'ராமா! ஓர் பெண்பிள்ளையாகிய தாடகைக்கு இப்படிச்சிறந்த பலமுண்டாயிருப்பதற்குக் காரணஞ் சொல்லுகிறேன், கேளாய். அவளுக்கு வரதாநத்தினால் பிறந்த பலமுண்டு. ஆனதுபற்றி அத்தாடகை இயற்கையாகவே பலமற்றிருக்கும் பெண்பிள்ளையாகப் பிறந்தவளாயினும் இப்படிக்குச் சிறந்தபல முடையளாயிருக்கின்றனள். மூன்றெருகால் மிகுந்த பராக்ரமங்கொண்டு ஸுகேதுவென்னும் பேர்பெற்று யக்ஷர்களிற் சிறந்தவன் ஒருவன் இருந்தனன். அவன் கல்லொழுக்கமுடையவனுயிருந்தும் ஸந்தாநமற்றிருந்தமையால் புதல்வனைப் பெறவேண்டிப் பெருந்தவஞ்செய்தனன். அப்பொழுது பிதாமஹன் மிகவும் ப்ரீதியடைந்துஅந்த யக்ஷாதிபதிக்குத் தாடகையென்னும் ஓர் பெண்மணி யுண்டாகும்படி வரங்கொடித்தனன். அத்தாடகை யென்னுங்கன்னிகைக்கு ஆயிரம் யானை வலிவையுந்தந்தனன். ஆனால் அப்பெரும்புகழ்பெற்ற நான்முகக்கடவுள் அந்த ஸுகேதுவென்னும் யக்ஷ

னுக்கு ஒரு புதல்வனுண்டாகும்படி அருள் புரியாதொ ழிந்தனன். இங்ஙனம் அத்தாடகையென்னும் பெண் மணிபிறந்து, நாளொருமேனியும், பொழுதொருவர்ணமு மாகவளர்ந்து பருவம் நிரம்பியிருக்கையில், அவளது தந் தையாகிய ஸுகேது ஜர்ஜனென்பவனுடைய புதல்வ னை ஸுந்தனென்பவனுக்கு அவளைக்கொடுத்து விவா ஹஞ்செய்வித்தனன். பின்பு சில காலஞ்செல்ல, அந்த யக்ஷன்மனைவியாகிய தாடகை மாரீசனென்னும் பேர் பெற்று யாவராலும் எதிரிடவொண்ணாதபடி வல்லவனை ஓர் புதல்வனைப்பெற்றனள். அம்மாரீசன் சாபத்தினால் ரா க்ஷஸனாய்விட்டனன். ராமா! அந்தச்சாபத்துக்குக் கார ணஞ்சொல்லுகின்றேன் கேள். ஸுந்தன் அகஸ்தியரால் மூடிந்து போகையில்அத்தாடகைத் தனது பிள்ளையைக் கூட்டிக்கொண்டு அம்மாமுனியை வென்று முடிக்க நினை த்துப் பெரியபரபரப்புடன் கர்ஜித்துக்கொண்டு அம்மாமு னியைப் பக்ஷிக்கும்பொருட்டு எதிர்த்தோடினள். அங் ஙனம் அவள் ஓடிவருவதைக்கண்ட அவ்வகஸ்திய மாமு னியும் மிகச்சினங்கொண்டு, மாரீசனை 'நீ ராக்ஷஸனைக் கடவாய்' என்று சபித்தனர். அப்படி சபித்தும் அக்கோ பம் தீராமல் தாடகையையும் 'நீ இவ்வுருவம்மாறிப்போய் விகாரமான உருவங்கொண்டு பார்க்க வழங்காதபடி கோரமான முகத்துடன்கூடி மனிதரைப் பிடுங்கித்தின் னும் தன்மையளாயிருப்பாயாக' என்று சபித்துவி ட்டனர். அங்ஙனம் சாபம்பெற்ற இத்தாடகை அம் மாமுனிவரது சாபம் அப்படியே பலிக்க, மிகக்கோ பாவேசங்கொண்டு, அப்பொழுது அகஸ்தியமாமுனி ஸஞ் சரித்துக்கொண்டிருந்த இவ்வழகான தேசத்தை ஜநங் கள் நடையாடாதபடி பிடித்துப் பாழடையச் செய்கின்ற னள். ரகுகுலாலங்காரனே! ராமா! உலகமனைத்தும் வரும்

தும்படி யக்ஷப்பெண்ணுகிய இத்தாடகை மிகவும் கோர மான வடிவங்கொண்டு பொல்லாத பராக்ரமத்துடன் கொடிய நடவடிக்கைகள் மேலிட்டுத் திரிகின்றமையால் பசுக்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் நன்மையுண்டாகும் பொருட்டு இவளை நீ வதஞ்செய்யவேண்டும். சாபம் பெற்ற இத்தாடகையை மூவுலகங்களிலும் உன்னை யொழிய மற்றொருபுருஷனும் முடிக்க வல்லவனன்று. ரகுகுலத் திற்பிறந்த நீயொருவனே இவளை வெல்ல வல்லவன். புருஷோத்தமனே! ஸ்த்ரீவதஞ் செய்யவேண்டுமே யென்று நீ அருவருப்பு கொள்ளத்தகாது. நீ ராஜகுமாரனுகப்பிறந்தவன்; ராஜபுத்ரனுயிருப்பவன் நான்கு ஜாதிகளுக்கும் நன்மையை விளைவிக்கவல்லகாரியங்களைச் செய்யவேண்டுமன்றே? ப்ரஜைகளின் நன்மைக்குரிய காரியமொன்று கொடியதாயினும், நல்லதாயினும், பாவத்தை விளைவிக்குமதாயினும், அபவாதத்தைக்கொடுப்பதாயினும், உலகத்தைக் காக்க வல்லவனுகிய ஸத்புருஷன் அதைக்கட்டாயமாகச்செய்யவேண்டும். காகுத்தனே! அரசாளஇழிந்தவர்களுக்கு இது எப்பொழுதுந்தவறுமற் செய்யவேண்டியதொரு தர்மம். மேலும் இத்தாடகை அதர்மஞ்செய்யுந் தன்மையளாகையால் இவளை நீ முடிக்கவேண்டும். இவளிடத்தில் தர்மமென்பது சிறிதுங் காணவரிது. ஆகையால் இவளை நீ கொல்லத்தகும். ஸ்த்ரீகளாயினும் கொடிய நடவடிக்கையுடையவர்களாயின் அவர்களை வதஞ்செய்வது பெரியோர்கள் நடத்தும் ஒழுக்கமேயன்றி நான் உண்டாக்கிச்சொல்வதொன்றன்று. முன் பூமியையெல்லாம் பாழடையச் செய்யவேண்டுமென்றெண்ணங் கொண்ட விரோசநன் பெண்ணுகிய மந்தரையென்பவளை இந்திரன் முடித்தானென்பது யாவருங்கேட்டிருப்பதொன்றன்றே? ராமனே! இன்னமும் சுக்ரனுக்குத் தாயாகி

பிருகுமஹர்ஷியின் பத்நியுமாகிய ஒருபெண்பிள்ளை முன்பு உலகத்தில் இந்திரனை யில்லாமல் தொலைக்கவேண்டு மென்று நினைவுகொண்டு யாதொரு தடையுமின்றிக் கடு மையான விரதஞ்செய்யத் தொடங்க, அவளை விஷ்ணு வதித்தாரென்பதுவும் உலகில் எங்கும் ப்ரஸித்தம். ராஜ குமாரனே ! இவர்களேயன்றி மற்றும் பல மஹாத்மாக்க ளாகிய ஸத்புருஷர்களும் அதர்மத்தில் மனஞ்சென்ற ஸ்த்ரீகளை முடித்திருக்கின்றனர்' இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் தாடகையை ஸம்ஹாரஞ் செய்தல்.

இப்படி விச்வாமித்ரமாமுனிவர் பெரும்பொருளை டங்கியதாகி, தைரியத்துடன் உரைத்த அம்மொழியைக் கேட்டு, தசரதமஹாராஜனதுகுமாரனாகிய ராகவன் பெரி யோர்கள் சொற்படி நடக்கவேண்டுகையாகிற விரதா நுஷ்டாநத்தில் நிலைநின்று மனஉறுதிகொண்டு நிற்குந் தன்மையனாகையாலே 'விச்வாமித்ர மாமுனிவன் சொற் படி நடவாயென்று தந்தை எனக்களித்த ஆணையாலே யும், அவ்வாணையில் எனக்குண்டான கௌரவத்தினு லும் மஹிமை பொருந்திய விச்வாமித்ரமாமுனி மொழிவதி னாலும், யாதொரு ஸந்தேஹமுமின்றி இதை நான் செய்ய வேண்டியதே'யென்று தனக்குள் ஆலோசித்துக் கொண்டு, அம்மஹர்ஷியை நோக்கிக் கையைக் கூப்பிக் கொண்டு இங்ஙனமுரைத்தனன். 'முனிகுலதிலகரே ! அயோத்திமாநகரில் குருக்களின் நடவில் மஹாத்மாவாகி எனக்குத் தகப்பனுமாகிய தசரதமஹாராஜன் விச்வா மித்ரமாமுனிவரது சொற்படி நீ நடக்கவேண்டியதென்று

எனக்குக்கட்டளையிட்டனர். எனக்கு அம்மொழி அணு மாத்ரமும் தடுக்கப்போகாதன்றே? அங்ஙனம் தகப்பனு ரது வார்த்தையைக்கேட்டிருக்கின்ற யான் வேதங்களை யோதி மிகவும் அறிவிற்சிறந்த உமது கட்டளைப்படி யா வர்க்கும் நன்மையை விளைவிக்குமதாகிய இத்தாடகாவ தத்தைச்செய்கின்றனன். இதற்குச் சக்தேதமில்லை. பின் னும் பசுக்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் நன்மையுண் டாகும்பொருட்டும், இத்தேசத்தினது லோகத்தின்பொ ருட்டும் அளவிடமுடியாத மகிமையுடைய உமதுசொற் படிக்குச்செய்ய லீத்தனையிருக்கின்றனன்,. சத்ருக்களைத் தபிக்கச்செய்யவல்லவனுகிய ஸ்ரீராகவன் இவ்வாறு மொழி ந்து வில்லின்நடுவை உறுதியாகப்பிடித்துத் திசைகளிலெ ங்குங்கடுங்கோஷமுண்டாகும்படி நாணேயேற்றிட்டு வலிவு டன் டங்காரஞ்செய்து ஒலிப்பித்தனன். அந்நாணொலி யைக்கேட்டுத்தாடகையின் வநத்தில் வலிப்பவர் யாவ ரும்பயந்துநடுங்கினர். அதைக்கேட்டுத்தாடகையும்இயற் கையாகவே கடுஞ்சினமுடையளாகையால் அப்பொழுது அளவற்றகோபங்கொண்டு ஒன்றுஞ்செய்யத்தோற்றாமல் தட்டித்தடுமாறி அந்த த்வநியைத்தானே ஊக்கத்துடன் ஆலோசித்துப்பின்னுங் கோபம்மேலிட்டு மூர்ச்சையடை ந்து அவ்வொலி எந்தத்திசையினின்றுமுண்டாகின்றதென் று நிதானித்துக்கேட்டு அத்திசையைநோக்கி வேகத்து டன் எதிர்த்தோடினள். மிக்கவிகாரங்கொண்ட உருவ மும் முகமும் பெற்றுஅளவுக்குவிஞ்சிப்பருத்துவளர்ந் திருக்கின்ற அத்தாடகையென்னும் ராக்ஷஸி கடுங்கோப த்துடன் எதிர்த்தோடிவருவதைக்கண்டு, ராமன் தம்பி யை நோக்கி, 'லக்ஷ்மண! மிக்கவிகாரங்கொண்டு பார்க்கு மவர்களுக்குப்பயத்தை அளவின்றி விளைவிக்குந்தன்மை யளாகிய இத்தாடகையினது வடிவத்தைப் பார். இவளை

ஸாதாரணமாகப்பயப்படுந்தன்மையர் காண்பர்களாயின், அவரது ஹ்ருதயம் அப்பொழுதே பிளந்துவிடும். இவள் யாவராலும் வெல்லமுடியாதவள். மேலுமிவள் மாயாபலமுள்ளவள். இவளை இப்பொழுது காதையும், நாஸியும் அறுத்துத் துறத்திவிடுகின்றனன். இவ்வளவிற்றானே குருக்களின் வசநமும் கடத்தப்பட்டதாகும். இவள் ஸ்த்ரீயானதுபற்றி இவளைக்கொல்ல என்மனந்துணியவில்லை. ஆகையால் கைகளையும் கால்களையும் முறித்து வலிவையும் ஸஞ்சரிப்பதையும் ஒழித்து விட்டுவிடலாமென்று எனக்குத்தோற்றுகின்றது' என்றனன். இப்படி ராமன் சொல்லிக்கொண்டிருக்கையில், அத்தாடகை மிக்க கோபங்கொண்டு கைகளிரண்டையுமுயரவெடித்துக் கர்ஜித்துக்கொண்டே லக்ஷ்மணனை விட்டு ராமனையே எதிர்த்தோடிவந்தனள். அதைக்கண்ட ப்ரஹ்மர்ஷியாகிய விச்வாமித்ரரும் தான் ராமனுக்குள்ள அமாநுஷசக்தியை யறிந்தவராயினும் அவ்வரக்கியினது கொடுந்தன்மையைக்கண்டு மனக்கலக்கமுற்று, அவளை 'ஹும்' என்று அதட்டிவிட்டு 'ராமலக்ஷ்மணர்களுக்கு க்ஷேமமும், ஜயமும் உண்டாகவேணும்' என்று மொழிந்தனர். இப்படியிருக்க, அத்தாடகையும் புழுதியை வாரி அதிகோரமாக எங்குமிறைத்து, அப்புழுதியால் திசைகளொன்றுந் தெரியாமல் யாவரும் மனமயங்கும்படி பேரிருளை விளைவித்து ஒரு முகூர்த்தகாலம் அந்த ராமலக்ஷ்மணர்களிருவரையும் ஒன்றுந்தெரியாமல் மனமயங்கச்செய்து, பின்பு மாயையைக்கொண்டு கண்ணுக்குப் புலப்படாதபடி நின்று, ரகுகுல குமாரர்களாகிய அவ்விருவர்மீதும் க்ற்களை அளவில்லாதபடி மழை பெய்வதுபோல் பொழிந்தனள். ராமனும் மிகச்சினங்கொண்டு பாணங்களை ஓயாமற்பொழிந்து அத்தாடகை கொண்டெறியுங்கற்களை

70 தாடகை எதிர்த்தோடிவர, ராமன் அவளை ஸம்ஹாரஞ் செய்தல்.

யெல்லாம் ஆங்காங்கு தடித்துப் பொடிபொடியாய் அடித்து, மேலும் தன்மீது கற்களைப்பொழியவொட்டாதபடி இங்குமங்கும் ஓடிக்கொண்டிருக்கிற அவ்வரக்கியினது கைகளை அறுத்துத்தள்ளிவிட்டனன். பின்பு அவள் கைகளறுப்புண்டு கூளித்து அருகில் ஓயாது கர்ஜித்துக் கொண்டிருக்கையில் ஸுமித்ராதேவியின் புதல்வனுகிய லக்ஷ்மணன் அதைக்கண்டு அளவற்றகோபம் மேலிட்டு அவளது காதுகளையும் மூக்குநுனியையும்அறுத்துநிற்க, தத்க்ஷணமே யக்ஷப்பெண்ணுகிய அத்தாடகை நினைத்தபடி வடிவங்கொள்ள வல்லவளாயிருந்ததுபற்றிப் பலவிதமான வடிவங்களைக்கொண்டு மாயையினல் அந்தர்த்தாகமடைந்து மிக்க பயங்கரமாயிருக்கும்படி கல்மழையைப்பொழிந்து மனமயங்கச்செய்பவள்போலத்திரிந்துகொண்டிருந்தனள். பின்பு அங்ஙனம் அத்தாடகையால் மழை பெய்வதுபோல் பொழியப்பட்ட கற்களால் நான்கு புறத்திலும் சூழப்பட்டிருக்கும் அந்த ராமலக்ஷ்மணர் களைக்கண்ட விச்வாமித்ரமாமுனிவர் அப்பொழுது ராமன் இத்தாடகையைமுடிக்கநேரிட்டதேயென்றுகளித்து, அக்களிப்பு வடிவில் தோன்றும்படி மிகவும் ஒளிபெற்று, ராமனை நோக்கி 'ராமா! இவ்வரக்கியின்மீது இதுவரையில் நீ தயைசெய்ததுபோதும். ஸ்த்ரீயென்றோ? நீ இவளை நினைக்கின்றாய். ஸ்த்ரீயாயிருந்தபோதிலும் இவள்பாபிஷ்டையும் கொடுந்தொழிலுடையவளுமன்றோ?. அப்பா! மேலுமிவள் யாகங்களை யழிக்குந்தன்மையள். இனி தயைசெய்து வெறுமனிருந்தாயாயின், மாயைகொண்டு வளர்ந்து கொழுத்துவிடுவாள். ராமா! ஸந்தியாகாலம் இதோவரப்போகின்றது. இவளை இப்பொழுதேமுடித்துவிடுவாயாக. ராக்ஷஸர்கள் ஸந்திவேளையில் யாவராலுமெதிர்க்கவொண்ணாதவல்லமைபெறுவதுபற்றி அவர்களைமுடிப்

பது கஷ்டமன்றோ?" என்றிவ்வாறு மொழிந்தனர். இப்படி மொழிய, ராமனும் கண்ணுக்குத்தோற்றுதபடி நின்று ஓயாமல் கற்களைக்கொண்டு காற்புறத்திலும் பெய்கின்ற யக்ஷப்பெண்ணான அத்தாடகையின் சப்தத்தினால் அவளிருக்குந்திக்கையறிந்து அடிக்கும்படியான தனது வல்லமையைக்காட்டிக்கொண்டு பாணங்களைப் பொழிந்து எங்கும்போகவொட்டாமல் அவ்விடத்தே தடுத்து விட்டனன். அத்தாடகையும் தான் மாயாபலங்கொண்டு கண்ணுக்குப்புலப்படாதபடி நின்றும், அது பயனற்று, ராமபாணங்களால் தடுக்கப்பட்டுச் செய்வதறியாமல் கண்ணுக்குப்புலப்பட்டுக் கடுமையாகக் கர்ஜித்துக்கொண்டு ராமனையும் லக்ஷ்மணனையும் கோக்கி எதிர்த்தோடிவந்தனள். இங்ஙனம் மிக்கபராக்ரமத்துடன் இடியிடிப்பதுபோல்இரைத்துகொண்டு ஓடிவருகின்றஅத்தாடகையினது மார்பில் ஓர்பாணத்தைத்தொடுத்து ஈட்ட, அவ்வளவிலே அவள் கீழே விழுந்துமாண்டனள். அப்பொழுது அங்ஙனம் அதிகோரமான வடிவங்கொண்டிருக்கும் அத்தாடகை ராமனலடியுண்டு மாண்டதுகண்டு, தேவேந்திரனும் தேவர்களும் 'நல்லதுநல்லது'என்றுராமனைப்புகழ்ந்துகொண்டனர். பகைவருடைய நகரங்களைப் பாழடையச்செய்யவல்லவனாகிய தேவேந்திரன் தனதாயிரங்கண்களும் குளிரும்படி அத்தாடகாவதத்தைக்கண்டு மிகவும் களிப்புற்றனன். அங்ஙனங் களிப்புற்ற இந்திரன் தேவர்களோடு விச்வாமித்ரரைப்பார்த்து 'மாமுநியே! குசிககுலாலங்காரனே! உனக்குச்சுபமுண்டாகவேண்டும். நாங்கள் அனைவரும் உமது காரியத்தைக்கண்டு மிகவும் களிப்புற்றவராயினம். ராகவனிடத்தில் உமக்குள்ள நேசத்தை நீரிப்போது வெளியிடவேண்டும். ப்ரஜாபதியாகிய பிருசரச்வரிடம்பிறந்து நிலைகின்ற பராக்ரமம்பொருந்திய

அஸ்த்ரங்களை நீர் தவஞ்செய்து, அத்தவமகிமையால் பெற்றீர். அவ்வஸ்த்ரவித்தையை நீர் ராமனுக்குக் கற்பிக்கவேண்டும். ஏனெனில், ப்ராஹ்மணோத்தமா! இந்த ராகவன் நியமத்துடன் உம்மைப் பின்தொடர்ந்து உமக்குச்சுஸ்ரூஷைகள் கடத்துவதில் என்று நிலைநின்றிருப்பதுபற்றி இவ்வஸ்த்ரங்களை உபதேசிக்கத் தக்க பாத்ரமாயிருக்கின்றனன். மேலும் இந்த ராஜகுமாரனுகிய ராமன் தேவர்களுக்காக ஓர் பெரியகாரியத்தைச் செய்யவேண்டியதாயிருக்கின்றது' என்றனன். இங்ஙனஞ்சொல்லி, தேவர்களனைவரும் விச்வாமித்ரரைப் பூஜித்து, மிகுந்த ஸந்தோஷத்துடன் தாங்கள் வந்தவழியே போய்ச்சேர்ந்தனர். பின்பு, ஸுர்யன் அஸ்தமிக்க, ஸந்தியாகாலம்வந்தது. அப்போது விச்வாமித்ரமாமுனிவர் தாடகையைக்கொன்றது பற்றி மிகவும் ஸந்தோஷமடைந்து ப்ரீதிமேலிட்டு ஸ்ரீராமனை உச்சிமோந்து 'ராமா! பார்க்கப்பதினுயிரங்கண்கள் வேண்டும்படி மிகவும் அழகாகத்தோன்றுமவனே! இன்றிரவு இங்குத்தானே வஸித்திருப்போம். நாளைதினம்காலையில் எனது ஆச்ரமத்துக்குப் போவோம்' என்று மொழிய, தசரதகுமாரனுகிய ராமனும் அம்மொழியைக்கேட்டுக் களிப்புற்று அன்றிரவெல்லாம் அத்தாடகாவனத்திற்றானே ஸுகமாக வஸித்திருந்தனன். அன்றைத்தினத்தில் அப்பொழுதே அவ்வனம் உபத்ரவங்களெல்லா மொழியப்பெற்றுச் சைத்ரரதமென்று பேர்பெற்ற குபேரனது உத்யான வனம்போல் மிகவும் அழகாய் விளங்கிற்று. அப்படியக்ஷப்பெண்ணுகிய தாடகையை வதஞ்செய்து அவ்வனத்தை விளங்கச் செய்த ராமன் தேவர்களாலும், ஸித்தர்களாலும் கூட்டங்கூட்டமாய் நின்று புகழப்பட்டவனுகி, அவ்வனத்தில் விச்வாமித்ரமாமுனிவரோடுகூட ஸுகமாக வஸித்திருந்தனன். பொழுதுவிடிந்தவுடனே விச்

வாமித்ரமாமுனிவரும் ராமனை யெழுப்பினர். இருபத் தாருவது ஸர்க்கம் முற்றிற்று.

அஸ்த்ரங்களை விச்வாமித்ரர் ராமனுக்குக் கொடுப்பது.

பெரும்புகழ் பெற்ற விச்வாமித்ரமாமுனிவர் அங்ஙனம் அன்றிரவெல்லாம் அவ்வநத்திலே வஸித்திருந்து பொழுதுவிடிந்து உதயமானவுடன் புன்சிரிப்புச்சிரித்துக் கொண்டு ராகவனை நோக்கி இங்ஙனம் இனிதாக ஓர் மொழியுரைத்தனர். ராஜகுமாரனே! யான் மிக்க ஸந்தோஷமடைந்தனன். உனக்கு க்ஷேமமுண்டாகவேணும். இங்ஙனம் பெரும்புகழ்பெற்ற உனக்கு நான் எனக்குண்டான ப்ரீதிக்குப்போக்குவீடாக நான் கற்ற அஸ்த்ரங்களையெல்லாம் உபதேசிக்க விரும்புகின்றனன். யுத்தத்தில் தேவர்களின் கூட்டமாயினும், அஸுரர்களின் கூட்டமாயினும், அவர்களேகத்தர்வர்களோடும் உரகர்களோடும் கூடி எதிர்ப்பார்களாயினும், மற்று மெப்படிப்பட்டசத்ருக்களாயினும் அவர்களைப் பலாத்கரித்துவென்று வசப்படுத்தி உனக்கு வெற்றியைக்கொடுக்கவல்ல திவ்யாஸ்த்ரங்களனைத்தையும் நான் உனக்குக் கொடுக்கின்றனன். உனக்கு மங்களமுண்டாகவேணும். ராகவா! மஹாவீரனே! மகிமைபொருந்தி மேன்மைபெற்ற திவ்யமான தண்டசக்ரத்தைக்கொடுக்கின்றனன். அப்படியே, தர்மசக்ரம், காலசக்ரம், மிகவும்உக்ரமாகிய விஷ்ணுசக்ரம் என்னும் அஸ்த்ரங்களையும் உனக்குத்தருகின்றனன். புருஷர்களிற்சிறந்தராமனே! உனது பருத்து அழகான புஜங்களுக்குத்தக்க ஐந்த்ராஸ்த்ரம், வஜ்ராஸ்த்ரம், சூலங்களிற் சிறந்த சைவசூலம், ப்ரஹ்மசிரஸ்ஸென்னும்

174 ராமனுக்கு விச்வாமித்ரர் அஸ்த்ரங்களைக் கொடுத்தல்.

அஸ்த்ரம், ஐஷீகாஸ்த்ரம், சிகரின்றிகின்ற ப்ரம்ஹாஸ்த்ரம் ஆகிய இவைகளையும் உனக்குக் கொடுக்கின்றனன். ராஜபுத்ரனே! புருஷோத்தமா! காகுத்தனே! இவ்வளவேயன்று. மோதகியென்றும், சிகரியென்றும் இரண்டு கதைகள் மிகுந்த ஒளிபொருந்தியவைகள் என்னிடத்திலிருக்கின்றன. அவ்விரண்டையும் கொடுக்கின்றனன். ராமா! இன்னமும் தர்மபாசம், காலபாசம், அப்படியே வருணபாசம் ஆகிய பாசாயுதங்கள் மூன்றும், சிகரற்ற வாருணாஸ்த்ரமும் தருகின்றனன். ரகுகுலத்தைக் களிக்கச்செய்யும் மஹாநுபாவனே! சுஷ்காசனி, ஆர்த்ராசனி, பைநாகாஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம், அக்நிதேவனுக்கு மிகவும் ப்ரியமான சிகரமென்னும் பேர்பெற்ற ஆக்நேயாஸ்த்ரம், ப்ரதமமென்று ப்ரஸித்தமான வாயவ்யாஸ்த்ரம், ஹயசிரஸ்ஸென்றும் அஸ்த்ரம், க்ரௌஞ்சாஸ்த்ரம், விஷ்ணுசக்தி ருத்ரசக்தியென்கிற இரண்டு சக்தியாயுதங்கள், மேலும் அஸுரர்கள் தரிக்கத்தக்க பயங்கரமான கங்காலம், காபாலம், கங்கணம் முதலிய மூஸலங்கள், ராஜகுமாரனே! திரண்டுருண்டு நீண்ட உனது பாஹுதண்டங்களுக்கு ஏற்று வித்யாதரர்களை தேவதையாகப்பெற்று அஸ்த்ரங்களிற் சிறந்த நந்தகமென்கிற உயர்ந்தகத்தி, ராகவனே! கந்தர்வர்களுக்குப்ரியமாகி மாநவமென்றும், ப்ரஸ்வாபமென்றும், ப்ரசமநமென்றும் பேர்பெற்ற கந்தர்வாஸ்த்ரங்கள், ஸௌராஸ்த்ரம் ஆகிய இவைகளெல்லாவற்றையும் உனக்குத் தருகின்றனன்; பெற்றுக்கொள்வாய். பெரும்புகழ்பெற்ற புருஷோத்தமா! ராஜகுமாரனே! அப்படியே தர்ப்பணம் சோஷணம், ஸந்தாபநம், விலாபநம் என்னும் அஸ்த்ரங்களையும், மன்மதனுக்குப்ரியமாகி எதிரிடவொண்ணாத மதநாஸதாதையும், பிசாசங்களுக்கு ப்ரியமாகி அவைகளை

யே தேவதையாக வுடையவையான மோஹநாஸ்த்ரங்களையுங் கொடுக்கின்றனன்; பெற்றுக்கொள். இவ்வளவேயன்றி, தாமஸம், ஸௌமநம், ஸம்வர்த்தம், ஒருவிதத்திலும்பகைவரால் பரிஹரிக்கப்போகாத மௌஸலம், ஸத்யம், மாயாதரம், பகைவரது பராக்ரமத்தைத்தொலைக்கவல்லதாகி, மிகவும் பயங்கரமான தேஜப்ப்ரபம், சிசிரமென்கிற ஸௌம்யாஸ்த்ரம், ஸீதேஷுவென்னும்பேர்பெற்றுப்பயங்கரமான பகாஸ்த்ரம், மாநவம் முதலிய காமரூபங்கொண்டு மஹாபலம்பெற்று மிகவும் கம்பீரங்களான இவ்வஸ்த்ரங்களைக்கடிகப்பெற்றுக்கொள்வாயாக. மஹாபாஹுவாகிய ராஜகுமாரனுமாகிய உனக்கு இவையெல்லாம் தக்கவை' என்று இங்ஙனமுரைத்து, அம்மாமுனிவர் பரிசுத்தராகிக்கிழக்குமுகமாக நின்று அப்பொழுது ப்ரீதியோடு மிகவும் சிறந்த அவ்வஸ்த்ர மந்த்ரங்களனைத்தையும் ஸ்ரீராமனுக்கு உபதேசித்தனர். அவ்வஸ்த்ரங்களையெல்லாமறிவது தேவர்களுக்கும் தரமன்று. அப்படிப்பட்டவைகளாகிய அவ்வஸ்த்ரங்களை அந்தணர்களில் சிறந்த அவ்விச்வாமித்ரர் ராமனுக்குக் கற்பித்தனர். இப்படி அஸ்த்ரங்களைத்தந்து மந்த்ரதேவதைகளை ராமனுக்கு வசப்படுத்தஉத்தேசித்து தீரராகிய அவ்விச்வாமித்ரமாமுனிவர் அவைகளை கினைத்து ஜபஞ்செய்ய அவரது கட்டளைப்படி சிறந்த மஹாஸ்த்ரதேவதைகள்யாவும் அப்பொழுது காந்திமயமான சரீரங்களோடு பளபளவென்று விச்வாமித்திரனுக்கருகேவந்து நின்று ராமனை நோக்கி நமக்குத்தக்கதோ ராச்ரயம் கிடைத்ததேயென்று மிகுந்த ஸந்தோஷங்கொண்டு, 'ரகுலதிலகனே! மிகவும் மகிமை பொருந்திய நாங்கள் உனக்குக் கிங்கரர்களாயினம்' என்றுரைத்தன. காகுத்தனகிய ராமனும் அப்படியே ஆகட்டுமென்றங்கீகரித்து அவைகளைக் கையினால் தடவிக்கொ

நித்து 'யான் மனத்தில் நினைக்கும்போது நீங்கள் வந்து உதவவேண்டும்' என்று அவைகளுக்குக் கட்டளையிட்டனன். பின்பு ராமன் மிகுந்த ஒளிபெற்று விளங்கிநின்று அளவற்ற ப்ரீதியோடு விச்வாமித்ரமஹர்ஷிக்கு நமஸ்காரஞ் செய்து புறப்படத் தொடங்கினன். இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் ராமனுக்கு உபஸம்ஹார மந்த்ரங்களை யுபதேசித்தல்.

பின்பு ராமன் அஸ்த்ரங்களைப் பெற்றுக்கொண்டு பரிசுத்தனாகி ஸந்தோஷத்தினால் முகமலர்த்தியடைந்து ப்ரயாணமாய்ப் புறப்படத்தொடங்கி விச்வாமித்ரரை நோக்கி 'மாமுநியே! தேவரிடமிருந்து யான் அஸ்த்ரங்களையெல்லாம்பெற்று, தேவர்களாலும் வெல்லமுடியாதவனாயினன். அஸ்த்ரங்களின் ப்ரயோகத்தைமாத்திரம் உபதேசித்தீர். இப்பொழுது அவைகளின் உபஸம்ஹாரங்களையும் உபதேசிக்கும்படி விரும்புகின்றேன்'என்றுரைக்க, நல்லொழுக்கராகிய அம்முனிவரும் ப்ரீதியடைந்து சுத்தராகி ராமனுக்கு உபஸம்ஹாரமந்த்ரங்களை உபதேசிக்கத் தொடங்கி, 'ராமா! [1]ஸத்யவந்தமென்றும், ஸத்யகீர்த்தியென்றும், த்ருஷ்டமென்றும், ரபஸமென்றும், ப்ரதிஹாரதரமென்றும், பராங்முகமென்றும், அவாங்முகமென்றும், லக்ஷாக்ஷமென்றும், விஷமமென்றும், த்ருடநாபமென்றும், ஸுநாபமென்றும், தசாக்ஷமென்றும், சதவக்த்ரமென்றும், தசசீர்ஷமென்றும், சதோதரமென்றும், பத்மநாபமென்றும், மஹாநாபமென்றும், துந்துநாப

---

1 'ஸத்யவத்' என்று சிலர் எழுதுகிறார்கள்.

மென்றும், [1]ஸுநாபமென்றும், ஜ்யோதிஷ்மென்றும், க்ருசகமென்றும், நைராச்யமென்றும், விமலமென்றும், யோகந்தரமென்றும், ஹரித்ரமென்றும், தைத்யமென்றும், ப்ரசேதஸமென்றும் (சுகியென்றும், பாஹுவென்றும், மஹாபாஹுவென்றும், நிஷ்குலியென்றும், விருகியென்றும்,) ஸார்சிர்மாலியென்றும், [2]த்ருதியென்றும், மாலியென்றும், விருத்திமந்தமென்றும், ருசிரமென்றும், பித்ருஸௌமநஸமென்றும், விதூதமென்றும், மகரமென்றும், கரவீரகரமென்றும், தருமென்றும், தார்ய மென்றும், காமரூபமென்றும், காமருசியென்றும், மோஹநமென்றும், மாரணமென்றும், ஜ்ரும்பகமென்றும், ஸர்வநாபமென்றும், ஸந்தாநமென்றும், வரணமென்றும் பேர்பெற்று, காமரூபிகளும், மிக்க ஒளிபெற்றவைகளும், பிருசாச்வருடைய குமாரர்களுமாகிய உபஸம்ஹாரங்களை என்னிடமிருந்து பெற்றுக்கொள்வாய். உனக்கு மங்களமுண்டாகவேணும். நான்கற்றவைகளை உபதேசிக்க எனக்குத்தக்கதொரு பாத்ரமாய் நீ அகப்பட்டனை' என்றனன். அப்படியேயென்று ராமனும் மிக்க மனக்களிப்புற்று அம்மந்த்ரங்களையெல்லாம் பெற்றுக்கொண்டனன்.

---

1 'ஊர்ஜநாஸுநாமகௌ' என்றும், 'ஊர்ஜநாஸுநாமகௌ' என்றும் மூலத்தில் இரண்டிடத்தில் ஸுநாபகசப்தம படிக்கப்பட்டிருக்கின்றது. மொழிபெயர்க்க முயன்றவர்பலரும் ஸ்வார்த்தத்தில் கப்ரத்யயமெனக் கருதி ஸுநாபமென்றே யெழுதியிருக்கிறார்கள். ஒருவர் முதலில் ஸுநாபமென்றும் மற்றோரிடத்தில் ஸுநாபகமென்றும் எழுதுகிறார். 'ராமார்ஜுநௌ' 'ராமகர்ஜ்ஜுநௌ' என்கிறபடியே பேர் ஒன்றுயிருப்பினும், காரியம் முதலிய வைகளால் பேதங்கொள்ளவேணுமென்று தோற்றுகிறது.

2 இங்கு, 'ஸார்சிர்மாலீர்த்ருதிர்மாலீ' என்று மூலம். த்ருதி, மாலி என்று இரண்டு பேராகக் கருதி இவ்விடத்தில் (த்ருதியென்றும், மாலியென்றும்) என்று சொல்லப்பட்டது. சிலர் த்ருதிர்மாலியென்று ஒரே பேராக அபிப்ராயப்படுகிறார்கள்.

அம்மந்த்ரதேவதைகளும் ராமனைக்கிட்டி நின்றன; அவைகள் யாவும் பளபளவென்று விளங்கி மிகவும் முரத்த திவ்யதேஹங்களைத்தரித்துக் களிப்பை விளைவிப்பவை களாயிருந்தன. அவைகளிற் சில நெருப்பை நிகர்த்தவை களாயும், சில புகையைப் போன்றவைகளாயும், சில ஸூர்யசந்த்ரர்களோ டொத்தவைகளாயும் வணக்கத் துடன் கையைக் கூப்பிக்கொண்டு எதிரில் தென்பட்டன. அவ்வுபஸம்ஹாரமந்த்ரதேவதைகள் யாவும் இங்ஙனங் கையைக் கூப்பிக்கொண்டு ராமனைப்பார்த்து' புருஷோத்தமா! இதோ நாங்கள் காத்துக்கொண்டிருக்கின்றனம். உனக்கு நாங்கள் என்ன செய்யவேண்டுமோ? அதைக் கட்டளையிடவேண்டும்' என்று மிகவு மினிதாக மொழிந்தன. அதைக்கேட்டு ரகுநந்தன் அவ்வுபஸம் ஹாரமந்த்ரதேவதைகளை நோக்கி, 'காரியம்நேரிடுகிற ஸமயத்தில் யான் மனத்தில் நினைத்தமாத்திரத்தில் நீங்கள் வந்து எனக்கு உதவிசெய்யவேண்டும். இப்பொழுது நீங்கள் இஷ்டப்படி போய்வரலாம்' என்று சொல்லலுற்றனன். பின்பு அம்மந்த்ரதேவதைகளும் அப்படியேயாகட்டு மென்று ராமனை நோக்கி உரைத்து அவனைப் பிரதக்ஷிணஞ்செய்து போய்வருகின்றனமென்று விடைபெற்றுக் கொண்டு வந்தவழியேபோய்ச் சேர்ந்தன. (பின்பு ஒளியுடன்விளங்கும் அந்தக்காகுத்தன் ப்ரஹ்மவாதியான விச்வாமித்ரமாமுநியைநோக்கி உபதேசப்படி லக்ஷ்மணனுக்கும் அவ்வஸ்த்ரங்களனைத்தையும் ப்ரயோகம் உபஸம்ஹாரம் ஆகிய இவ்விரண்டுடன் மிகுந்த ப்ரீதியோடு கற்பித்தனன்.) இப்படி ராகவன் அவ்வுபஸம்ஹாரமந்த்ரங்களையெல்லாமறிந்து அவ்விடத்தினின்றும் புறப்பட்டு நின்று கொண்டு விச்வாமித்ரமர்முனிவரைப் பார்த்து இங்ஙனம் அழகான ஓர் இன்சொல்லைச் சொல்லினன். இதோ

மலையினருகில் இடைவெளியின்றி நெருங்கி, மேகங்களை நிகர்த்ததுமாகிய மரக்கூட்டம் விளங்குகின்றதே, இதென்ன? பின்னும் இது அழகாய்க்கூவும் நாகாவித பக்ஷிகளும் மிருகங்களும் நிறைந்து, கண்வாங்காமற் பார்க்குப்படியானசெவ்விபெற்று, மனத்துக்கு மிகவும் ஆநந்தத்தை விளைவிக்குமதாய்த் தோற்றுகின்றது. ஆகையால் இதைக் கேட்கவேண்டுமென்று எனக்கு ஆவல் அதிகமாயிருக்கின்றது. பயத்தை விளைவித்து மயிர்க்கூச்சுண்டாகும்படி தாருணமான அத்தாடகாவநங்கடந்து வந்துவிட்டோமன்றோ? இத்தேசம் அப்படி பயத்தையுண்டாக்காமல் மிக்கலக்ஷ்மியிருக்கையாலே இது ஒரு ஆச்ரமமாயிருக்கவேண்டுமென்பதுமாத்திரந் தோற்றுகின்றது. ஆனால் இதுயாருடையதோ? தெரியவில்லை. ஆகையால் இதையெல்லாம் எனக்குத்தெரியச்சொல்லவேண்டும். மாமுனிவரே! கொடிய செய்கைகொண்டு அந்தணர்களை வருந்தச்செய்யும் துராத்மாக்களாகிய அந்த ராக்ஷஸப்பாவிகள் உமது யாகத்துக்கு விக்நஞ்செய்வதற்கு எங்கு வருகின்றார்களோ; நீர்செய்கிற யஜ்ஞகாரியங்களைக்காக்க வேண்டிய இடம் எதுவோ; நான் அந்த அரக்கர்களை எவ்விடத்திற் கொல்லவேண்டுமோ; அவ்வாச்ரமம் எங்கேயிருக்கின்றது? இதையெல்லாங்கேட்கவிரும்புகின்றனன். வல்லமையெல்லா மமைந்தமாமுனிவரே! நீர் இதைச்சொல்லவேண்டும்' இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ வாமதேவர்த்திவிருத்தாந்தமும், விச்வாமித்ரர் யாகதீக்ஷைக்குத்தொடங்குவதும். }

அந்த ராமன் அளவற்ற மகிமைபொருந்தியவனாயினும், மனிதனைக அவதரித்திருப்பதுபற்றித்தனது பூர்விக விருத்தாந்தங்களை யறியாதவன்போல அவ்வநத்தைக்

குறித்து இங்ஙனம் பலவிதமாகக்கேட்க, மஹாதேஜஸ்வி யாகிய அம்முநிசிகாமணியும் அதை விவரித்துச் சொல் லத்தொடங்கினர். மஹாபாஹோ! தேவதைகளனைவரி லுஞ் சிறந்து உலகங்கட்கெல்லாம் ப்ரபுவுமாகிய ஸ்ரீமஹா விஷ்ணு உலகத்தில் தவத்தை நடத்துவதற்காகத் தான் தவஞ்செய்யும் பொருட்டும், யோகத்தை யதுஷ்டிக்கும் பொருட்டும், பல நூறுவருஷங்களும், பலநூறு யுகங்களு மாக இவ்வநத்தில் மிகப்பெருந்தவம்புரிந்து வாஸஞ்செய் துகொண்டிருந்தனன். இங்ஙனம் இது மூன்னேமஹாத் மாவாகிய வாமநதேவன் தவம்புரிந்திருந்த ஆச்ரமம். இங்கு மிகத் தவம்பொருந்திய காச்யபமாமுனி ஸித்தி பெற்றனன். ஆனதுபற்றி இது ஸித்தாச்ரமம் என்று யதார்த்தமாகியபேருடன் கியாதி பெற்றது. இப்படி அந்த ஸ்ரீமஹாவிஷ்ணு பலவருஷங்களாக இங்குத்தவம்புரிந் திருக்குங்காலத்தில்தானே விரோசநனுடைய பிள்ளையா கிய பலியென்னும் அஸுரர்களுக்கரசன் வாயுகணங்க ளோடுகூடிய தேவதைகள் அனைவரையும் இந்திரனுட் பட ஜயித்து, மூவுலகங்களிலும் புகழ்பெற்று, அத்தேவ ராஜ்யத்தை மந்த்ரிகளைக்கொண்டு பரிபாலிக்கச் செய்து வந்தனன். அந்தப்பலியானவன் [1] கடவுள் ஆரா தநமாகிய ஒருயாகத்தைத்தொடங்கி நடத்திக்கொண்டிருந்தனன்.

---

1 அஸுரர்களுக்கதிபதியாகிய பலி யாகஞ் செய்வதெப்படி கூடும்? ஏனெனில்—யாகமென்பது தேவதையைக்குறிதது அக்நியில் ஹவிஸ்ஸைக்கொடுத்தல். 'யஸ்யை தேவதாயை ஹவீர் ஹ்ருஹீதம் ஸ்யாத்தாமேயாயேஷ்டகரிஷ்யந் ஸாகூஹ்ருஹீதேவதாம் ப்ரீணாதி' என்று எந்தத்தேவதைக்கு ஹவிஸ்ஸைக் கொடுக்கவேண் டுமோ? அந்தத்தேவதையை மனத்தில் நன்கு த்யாநிக்கவேண்டும். இவனோ தேவர்களுக்கு விரோதி. ஆகையால் இவன் யாகஞ்செய்தா னென்பது எப்படிசேருமென்னில், இந்தப் பலி செய்யும் யாகம் இந்த ராதிதேவதைகளைக்குறித்துச்செய்யும் யாகம் அன்று. இது பகவா

அப்பொழுது தேவதைகள் அனைவரும் அதற்குப்பயந்து அக்நிதேவனை முன்னிட்டுக்கொண்டு தாங்களே கூட்டமாகக் கூடிவந்து இவ்வாச்ரமத்தில் வஸித்திருந்த விஷ்ணுவை நோக்கி, 'தேவா! மஹாவிஷ்ணுவே! விரோசநன்பிள்ளை பலியென்பவன் சிறந்ததோர் வேள்வி செய்கின்றனன்; அது முடிவதற்குமுன்னமே நங்காரியத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இங்குமங்குமிருந்து எவராயினும் அவனிடம்வந்து எதையாயினும் எவ்வளவு கேட்டபோதிலும் அவ்வளவும் கௌரவத்துடன் அவர்களுக்கெல்லாங்கொடுத்துக்கொண்டிருக்கின்றனன். ஆனதுபற்றி நீ தேவர்களின் நன்மையைவிரும்பி உனது மாயாசக்தியைக்கொண்டு உனது மேன்மையை மறைபச்செய்து வாமநரூபத்தையடைந்து எங்களுக்கு மேலான க்ஷேமத்தைச் செய்யவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர். ராமா! இதற்குள் [1]காச்யபமஹர்ஷி தனதுபத்நியாகிய அதிதியோடுகூடி, ஸ்வாஹாதேவியோடு கலந்து விளங்கும் அக்நிதேவனை நிகர்த்து நின்று தேஜஸ்ஸினால் ஜ்வலித்துக்கொண்டு விளங்கி தேவமாநத்தினால் ஆயிரம் வருஷங்களாக விஷ்ணுவைக்குறித்துத் தான் நடத்திவந்த விரதத்தை முடியச்செய்து, அப்பொழுது தனக்கு வரங்கொடுப்பதற்காக ப்ரத்யக்ஷமாய்வந்து ஸேவைஸாதிக்கிற அம்மஹாநுபாவனாகிய ஸ்ரீமந்நாராயணனைத் தனது

னைக்குறித்துச் செய்யும் யாகம். ஆனதுபற்றியே (கடவுள் ஆராதநமாகிய) என்று சொல்லப்பட்டதென்று கண்டுகொள்வது.

1 இவ்விடத்தில் இங்ஙனங் க்ரமங் கண்டுகொள்வது. எப்படியெனில்—'ஸொஉகாமயத வஹ்நிஸ்யாம் ப்ரஜாயேயேதி। ஸத போஉதப்யத' என்கிற ச்ருதியின்படியே விஷ்ணு ஜகத்ரக்ஷண சிந்தையிலாழ்ந்து, இத்தேசத்தில் வெகுகாலங் கண்ணுக்குப் புலப்படாமல் வஸித்திருந்தனன். காச்யபமஹர்ஷி இதை யறிந்து இத்தே

பத்நியுந்தானுமாக இங்ஙனம் துதிசெய்தனர். 'தேவனே! நீ தபோமயன்; தபோராசி; விஜ்ஞாநஸ்வரூபன்; தவமே உனக்கு இயற்கை. நீ புருஷோத்தமன். அப்படிப்பட்ட உன்னை மற்றொரு ப்ரயோஜநமுமின்றி லோகங்களாக அநுஷ்டித்த எனது தபோபலத்தினால் ப்ரத்யக்ஷமாகக்காண்கின்றனன். ப்ரபுவே! பின்னும் [1] ஜங்கமஸ்தாவர ரூபமான இவ்வுலகத்தை யெல்லாம் உனது சரீரத்திற் காண்கின்றனன். ஆதியந்தமின்றி இப்படியப்படி யென்று குறிக்கவொண்ணாதபடி விளங்குகின்றனை. அப்படிப்பட்ட உன்னை நான் சரணமடைந்தனன்', இப்படி தன்னைரக்ஷாத்கரித்துப்பாபங்களெல்லாம் பறந்தோடி நிர்மலராய் விளங்குகின்ற அம்மஹர்ஷியை நோக்கி ஸ்ரீமஹாவிஷ்ணு ஸந்தோஷித்து 'வரமேதாயினும் விருப்புவாயாக. உனக்கு நன்மையுண்டாகுக. நான் வரங்கொடுக்க நீயே தகுந்தவனென்று நினைக்கின்றனன்'என்று மொழிய, அம்மொழியைக்கேட்டு மரீசியின் குமாரராகிய அக்காச்யபமாமுநி 'வரதா! ஆச்ரிதர்களை ரக்ஷிக்கையே உனக்குச் சிறந்த விரதம். ஆகையால் உன்னை வேண்டிக்கொ

வினையே புத்திரனுகப்பெற விரும்பி, தேவமாநத்தால் ஆயிரம் வருஷங்களிற் செய்து முடிக்கத்தக்கதும் அவ்விஷ்ணுவின் ஆராதந ரூபமுமாகிய ஓர் விரதத்தைத் தனது பத்நியுடன் கூடி அநுஷ்டித்து அதை முடிக்கும்பொழுது தனக்கு வரங்கொடுக்கும் பொருட்டு ப்ரத்யக்ஷமாகிய விஷ்ணுதேவனைத் துதிசெய்தனர். அச்சமயத்திற்றானே தேவதைகள் அவ்விடம்வந்து அவ்விஷ்ணுவை வேண்டிக்கொண்டனரென்று கண்டு கொள்வது.

1 'பஶ்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே' என்று அர்ஜுநனுக்குத் தோற்றினாற்போல் தோற்றினனென்றுணர்க. அல்லது 'ஜகத்ஸர்வம் ஶரீரம்தே' என்று சொல்லுறபடியே 'ஜகத்தையெலலாம் உனக்குச் சரீரமாகக் காண்கின்றேன்' என்று கருத்துக் கொள்ளவேணும்.

ள்கின்ற அதிதிக்கும், தேவதைகளுக்கும், எனக்கும் நீ மிகுந்த ஸந்தோஷத்துடன் வரங்கொடுக்கத்தக்கது. அது என்னென்னில், ராக்ஷஸர்களையடக்கும்பொருட்டு நீ அதிதிக்கும் எனக்கும் புத்ரனுமாகி, இந்திரனுக்குத் தம்பியுமாகப் பிறந்து, துக்கபீடிதர்களாகிய தேவதைகளுக்கு ஸஹாயஞ்செய்யவேண்டும். உனது அனுக்ரஹத்தினால் எனதுவிரதகாரியம் ஸபலமாக ஸித்தியடைந்ததுபற்றி இத்தேசமானது ஸித்தாச்ரமமென்று கியாதி பெறவேண்டும். இங்கிருந்துநீ அவதாரஞ்செய்யும்பொருட்டுஎழுந்திரு' என்றனன். பின்பு மஹாதேஜஸ்வியாகிய அவ்விஷ்ணு தேவனும் அதிதியினிடத்தில் அவதாரஞ்செய்து வாமனரூபத்தைக் கைப்பற்றி, பலியினிடஞ் சென்று, தான் ஸ்ரீமஹாவிஷ்ணுவென்றும், ஸ்ரீமந்நாராயணனென்றும் க்யாதி பெற்று யாவர்க்கும் இஷ்டங்களைக்கொடுப்பவனாகி, தனக்கொன்றுவேண்டும்படியின்றி ஸர்வாபீஷ்டங்களும் நிறையப்பெற்றிருந்தும் யாசிக்கின்றேமே யென்னும் அபிமானத்தை விட்டு உலகங்களுக்கெல்லாம் நன்மைசெய்யும் பொருட்டு மூன்றடிகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு, உலகங்களையெல்லாம் சரீரமாகவுடைய அம்மஹானுபாவன் அவ்வுலகங்களையெல்லாம் பரத்து வளர்ந்ததோர் வடிவங்கொண்டு இரண்டடிகளாலே உலகங்களையெல்லாமளந்து மூன்றாமடி கொடுக்காமைக்காகத் தனது தேஜஸ்ஸினால் அந்தப் பலிசக்ரவர்த்தியைப் பந்தஞ்செய்து, அவ்வுலகங்களையெல்லாம் மறுபடியும் இந்திரன் வசமாகச்செய்துவிட்டனன். அங்ஙனம் வாமனனாய் அவதரித்து, பலியை யாசித்து, த்ரிவிக்ரமரூபங்கொண்டு, தனது மெல்லடிகளாலே காடுமேடெல்லாமளந்து, உலகங்களுக்கு நன்மையைச்செய்த அம்மஹானுபாவனாகிய ஸ்ரீமந்நாராயணன் ஸம்ஸார ச்ரமங்களையெல்லாம் போக்கும்

படியான இவ்வாச்ரமத்தில் முன்பு வஸித்திருந்தனன். நானும் அவ்வாமநரூபியான பகவானிடத்தில் பரமபக்தியைச்செய்து அவனுடையதான இவ்வாச்ரமத்தில் குடியிருக்கின்றனன். யாகத்துக்கு விக்நஞ்செய்யும் ராக்ஷஸர்கள் இவ்வாச்ரமத்துக்கே வருவார்கள். மஹாவீரனே! ராமா! கொடிய செய்கையுள்ள அவ்வரக்கர்களை இவ்விடத்திலேதான் கொல்லவேண்டும். ஆகையால் இப்பொழுதே புறப்பட்டு அந்தஸித்தாச்ரமத்துக்குப்போய்ச் சேருவோம். குழந்தாய்![1] அவ்வாச்ரமம் எனக்கு எப்படியோ? அப்படியே உனக்கும் அதீநம்'(என்றுசொல்லிக்கொண்டே மிக்க ஸந்தோஷத்துடன் அவ்விருவரோடுங்கூடவே)அவ்வாச்ரமத்துக்குச்செல்லும்போது பனிநீங்கி, புனர்வஸுநக்ஷத்ரங்களோடு சேர்ந்த சந்திரன்போல் ப்ரகாசித்தனன். அப்பொழுது அந்த ஸித்தாச்ரமத்தில் வாஸஞ்செய்யும் முனிவர்கள் அனைவரும் அவ்விச்வாமித்ரமாமுனிவர் வந்தது கண்டு, ஸந்தோஷம் மேலிட்டு, உடம்பு தெரியாமல் உயரஎழும்பிக் குதித்துக்குதித்தோடிவந்து மிகுந்தமதியுள்ள அம்மாமுனிவருக்குத்தக்கபடி பூஜைசெய்து, அப்படியே ராஜகுமாரர்களாகிய அந்த ராமலக்ஷ்மணர்களிருவர்க்கும் அதிதிஸத்காரஞ்செய்தனர். பின்பு அந்த ரகுகுலகுமாரர்கள் அங்கு ஒருமுகூர்த்தகாலம் இளைப்பாறிப் பகைவரையடக்கவல்ல ஆண்சிங்கங்களாகையால் வெறுமனிருக்கப் போகாமல் அம்மாமுனிவரை நோக்கிக் கையைக்கூப்பிக்கொண்டு 'முனிவேந்

---

1 இவ்வாச்ரமத்தைத்தவஞ்செய்கைக்காக நான் கைக்கொண்டேனாகையால் இது எனக்குச் சொந்தமாயிற்று. நீ விஷ்ணுவாகவும் வாமநனாகவும் அவதரித்தகாலத்தில் இதைக் கைக்கொண்டிருந்தாயாகையால் இது உனக்கும் சொந்தமே யென்று உட்கருத்தாகக் கண்டுகொள்வது.

தரே! இன்றையதிகமே தீக்ஷைபெற்றுக்கொள்ளவே ண்டும். உமக்கு மங்களம்உண்டாகவேண்டும். உமதுயாகம் ஸித்திபெறுவதுபற்றி இந்த ஸித்தாச்ரமம் உண்மையான பேர்பெற்று ஸித்தியடையவேண்டும். இங்குத்தான்கொடி யசெய்கையுள்ள அவ்வரக்கர்களைக் கொல்லவேண்டுமென்ற உமது வார்த்தை உண்மையாகவேண்டும்' என்றனர். அவ்விருவராலும் இங்ஙனம் உரைக்கப் பெற்ற மஹாதேஜஸ்வியாகிய அவ்விச்வாமித்ரமாமுனிவர் ஜம்புலன்களையுமடக்கிக்கொண்டு அப்பொழுதே யாகஞ்செய்ய தீக்ஷித்துக்கொண்டனர். அந்த ராஜகுமாரர்களும் அன்றிரவு முழுதும் மிக்க ஊக்கங்கொண்டு வஸித்திருந்து விடியற்காலத்தில் எழுந்திருந்து காலை ஸந்தியைவணங்கி அர்க்கியங்கொடுத்துப் பரிசுத்தர்களாகவே நியமத்துடன் காயத்ரீ ஜபஞ்செய்து முடித்துக்கொண்டு அக்நிகார்யங்களை நிறைவேற்றி உட்கார்ந்துகொண்டிருக்கிற விச்வாமித்ரமாமுனிவர்க்கு நமஸ்காரஞ்செய்தனர். இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் மாரீசனை ஸமுத்திரத்தில்தள்ளி ஸுபாஹுவைக் கொல்லுதல்.

ராமலக்ஷ்மணர்கள் தேசகாலங்களையறிந்து பேசுவதற்குரிய ஸாமர்த்தியமும் பகைவரை முடியச்செய்யும்படியான வல்லமையும் அமைந்தவர்கள். ஆனதுபற்றி அம்மஹர்ஷிகளின் பகைவரையடக்கத்தக்க உத்தேசத்துடன் அக்காலத்துக்கும் அத்தேசத்துக்கும் உரியமொழிகளை இங்ஙனமுரைத்தனர்: 'மஹிமையில்லாமமைந்த மாமுனியே! யாகத்தைக்காக்கும்பொருட்டு மாரீச ஸுபாஹுக்களென்னும் அந்த அரக்கர்களை எப்பொழுது நாங்கள் தடுக்கவேண்டுமோ? அதைக்கேட்க விரும்புகின்றனம். அச்

சமயத்தில் ஒரு க்ஷணமாயினும் தப்பிப்போகலாகாதன்றே?' என்று இப்படி சொல்லிக்கொண்டு போர்புரிய வேண்டுமென்னும் விருப்பம் மேலெழ மிக்க உத்ஸாஹத்துடன் பரபரப்புற்று விளங்குகின்ற அந்த ராஜகுமாரர்களை நோக்கி அங்குள்ள முனிவர்கள் அனைவரும் புகழ்ந்து ரகுகுலத்திற் பிறந்த வீரர்களே! இன்றுமுதல் ஆறிரவுகள் நீங்களிருவரும் காத்துக்கொண்டிருக்கவேண்டும். இம்மாமுனிவர் தீக்ஷித்துக்கொண்டு அதற்குரிய மௌனவ்ரதத்துடனிருப்பதுபற்றி மொழியாதிருப்பர். ஆகையால் அவர்க்குப்பதிலாக நாங்கள் உரைக்கின்றனம்' என்றனர். அப்பெருங்கீர்த்திபெற்ற ராஜகுமாரர்களிருவரும் அம்மொழியைக்கேட்டு மிக்க ஊக்கங்கொண்டு கித்தையின்றி ஆறு அஹோராத்ரங்கள் அத்தபோவனத்துக்கு ரக்ஷையாகக் கையில் பெரியவில்லொன்றேந்திப் பகைவரை யடக்குகைக்குரிய ஸந்நாஹத்துடன் கூடி அவ்விச்வாமித்ரமாமுனியைக் காத்துக்கொண்டு வஸித்திருந்தனர். இப்படி ஐந்து திநங்கள் கடந்து ஆறுவது திநம் வரும்போது ராமன் லக்ஷ்மணனை நோக்கி ஊக்கத்துடன் ஸந்நாஹங் கொண்டிருக்கவேண்டுமென்று மொழிந்து போர்புரிய வேண்டுமென்று ஆவலுடன் பரபரப்புக்கொண்டிருக்கையில், உபாத்யாயராகிய விச்வாமித்ரரோடும் மற்றுமுள்ள புரோஹிதர்களோடும் கூடின யஜ்ஞவேதியானது தர்ப்பம், சமஸம், ஸ்ருக், ஸமித், குஸ-மம் ஆகிய இந்த யாகஸாமக்ரியுடனே திடீரென்று[1] எரிந்தது. பின்பு அந்த யாகமானது மந்த்ரவத்தாக விதிப்படி நடக்கத்தொடங்கிற்று. ஆகாயத்தில் அப்பொழுது

---

1 யாகவேதி பற்றிக்கொண்டு எரிவது உத்பாதமாகையால் ராக்ஷஸர்கள் வருவதைத் தெரிவிக்கின்றது. (சமஸ) மென்பது பாநபாத்ரம் (ஸ்ருக்) கென்பது ஹோமபாத்ரம். (ஸமித்) விறகு. (குஸ-மம்) புல்லு

பயங்கரமாகப் பெரியதோரொலி யுண்டாயிற்று. மாரீச ஸுபாஹுக்களென்னும் அவ்வரக்கர்களிருவரும் மாயையைப் பலவிதமாகச்செய்துகொண்டு ஆகாயமெங்கும் பரந்து, வர்ஷர்காலத்தில் கிளம்புகிற மேகம்போல எதிர் நோக்கி ஓடிவந்தனர். அவ்விருவரும் அவரைப் பின் சென்றவர்களும் பயங்கரமாக வந்து ரக்தப்ரவாஹத்தைப் பொழிந்தனர். புஷ்பம் முதலியவைகளால் விளங்குகின்ற அந்த யாகவேதிகையும் அப்படி ரக்தவெள்ளத்தினால் நிறைந்து எரிந்துகொண்டிருந்தது. (அவ்வேதிகை அவ்வண்ணமாயிருக்கக்கண்டு ராமன் கொடிய கோபாவேசங்கொண்டு) வேகமாக எதிரே ஓடிச்சென்று அவ்வரக்கர்களை ஆகாயத்திற்கண்டனன். அப்பொழுது தாமரை யிதழ்போன்ற கண்களையுடைய ராமன் அந்த ஸுபாஹுமாரீசர்க ளிருவரும் தன்மேலெதிர்த்தோடி வருவதைக்கண்டு லக்ஷ்மணனைப்பார்த்து 'லக்ஷ்மண! இதோ பார்; பெருங்காற்றானது மேகங்களைப்பறக்கடிப்பதுபோல இருக்குமிடம் தெரியாமல் இம்மாநவாஸ்த்ரமானது மாம்ஸபக்ஷணஞ்செய்து கொடுந்தொழிலாளராகிய அரக்கர்களைப் பறக்கடிக்கப்போகின்றது' என்றுரைத்துக் கோபம் மேலிட்டு, மிகவும் சிறந்து நெருப்புப் பொறி பறக்கும்படி விளங்குகின்ற மாநவாஸ்த்ரத்தைத் தொடுத்து மாரீசனது மார்பிலெய்தனன். அம்மஹாஸ்த்ரம் பட்டமாத்ரத்திலே அம்மாரீசன் ஸமுத்ரஜலப்ரவாஹத்தில் ஸரியாக நூறுயோஜனைதூரத்துக்கப்பால் தள்ளுண்டு விழுந்தனன். அப்படி தள்ளுண்டு விழுந்து ப்ரஜ்ஞையில்லாமல்சுழன்று துவளும்படி சீதேஷுவென்னும் அம்மாநவாஸ்த்ரத்தால்அடியுண்டமாரீசனைப்பார்த்த ராமன் தம்பியாகிய லக்ஷ்மணனை நோக்கி ('லக்ஷ்மண! தர்மத்துடன்கூடிய சீதேஷுவென்னும் இம்மாநவாஸ்த்ரத்தின்

188 ஸுபாஹு மாரீசர்கள் யாகவேதிகையில் ரக்தவர்ஷங்களைப் பொழிதலும், ராமன் அவர்களை யடித்தலும்.

மகிமையைக்கண்டாயே. இது அவனை மோஹிக்கச்செய்
துகொண்டுபோயிற்றேயன்றி,ப்ராணனைப்போக்கவில்லை.)
கருணையென்பது சிறிதுமின்றிக் கொடிய செய்கையைச்
செய்யுந் தன்மைபெற்று பாபகர்மங்களைப்பற்றி யாகங்
கட்கு இடையூறு செய்து, ரக்தத்தைக்குடித்துக்கொண்
டு திரியும் இவ்வரக்கர்களையும் முடித்துவிடுகிறேன்' என்
றுரைத்து மிகவும் ஆச்சரியகாமாகி, திவ்யமுமாய் விளங்
குகின்ற தமது ஆக்நேயாஸ்த்ரத்தையெடுத்துத் தொ
டுத்து ஸுபாஹுவின் மார்பில் காட்டினன். அது பட்ட
மாத்ரத்திலே அவன் அடியுண்டு கீழே விழுந்தனன். மற்
றுமுள்ள அரக்கர்களையும் வாயவ்யாஸ்த்ரமெடுத்துத்
தொடுத்து முடித்து, அந்தமஹாயசஸ்வியும் பரமோதார
னுமாகிய ராகவன் அங்குள்ள முனிவர் அனைவர்க்கும் ஆ
நந்தத்தைப் பெருக்கச்செய்தனன். அந்த ரிஷிகள் யாவ
ரும் முன்பு அஸுரர்களை ஜயித்தபோது இந்திரனைப்
பூஜித்ததுபோலவே யாகத்துக்கு விக்நஞ் செய்பவர்க
ளாகிய அவ்வரக்கர்கள் அனைவரையும் முடியச்செய்த
ராமனைப்பூஜித்தனர். பின்பு யாகம் நிறைவேற நடத்தி,
நான்குத்திசைகளும் யாதோருபத்ரவமுமின்றி ஸுகமா
யிருப்பதுகண்டு, அவ்விச்வாமித்ரமாமுனிவர் ராமனை
நோக்கி 'ராமா! உனது பருத்த புஜங்களினது பலத்தி
னால் நான் காரியம் நிறைவேறிப் பயன்பெற்றவனுயினன்.
நீயும் பிதாவினது வசநத்தைப் பரிபாலித்தனை. எனது
யாகத்தை ஸித்திபெறச் செய்து இவ்வாச்ரமத்தினது
ஸித்தாச்ரமமென்னும் பேரை உண்மையாகச் செய்து
பெருங்கீர்த்தியும் பெற்றனை' முப்பதாவது ஸர்க்கம்
முற்றிற்று.

விச்வாமித்ரர் ராம லக்ஷ்மணர்களோடு மிதிலைக்குச்செல்லுதல்.

பின்பு வீரர்களாகிய ராமலக்ஷ்மணர்களிருவரும் அம்மாமுநியின் காரியத்தை முடித்து ஸந்தோஷத்தினால் மிகவும் மனங்குளிர்ந்து, அன்றிரவெல்லாம் அங்கே வஸித்திருந்தனர். அவ்விரவுசென்று விடிந்தவுடன் அக்கால்த்தில் செய்யவேண்டிய கடமைகளைத்தீர்த்து இருவருங்கூடி விச்வாமித்ரர் முதலிய மஹர்ஷிகளிடஞ் சென்று, அக்நிபோல் அளவற்ற ஒளிபெற்று விளங்குகின்ற அவ்விச்வாமித்ரமாமுநிக்கு நமஸ்காரஞ்செய்து 'மாமுநியே! நீர் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து உமக்குக் கிங்கரர்களாகிய நாங்கள் இதோ வந்திருக்கின்றனம். இன்னமும் உமதிஷ்டப்படி கட்டளையிடவேண்டும். இன்னமும் நாங்கள் செய்யவேண்டியது யாதுண்டு? அதையும் கட்டளையிடவேண்டும்' என்று இயற்கையாகவே மதுரபாஷிகளானதுபற்றி மதுரமாகவும் கம்பீரமாகவும் மொழிந்தனர். அவர்கள் இங்ஙனம் மொழியக்கேட்டு, அங்குள்ளமஹர்ஷிகள்யாவரும் விச்வாமித்ரமாமுநியின் அநுமதிபெற்றுக்கொண்டு ராமனைநோக்கி, 'புருஷோத்தமனே! ராமா! மிதிலாநகரத்துக்கரசனாகிய ஜநகமஹாராஜன் மிக்க தர்மத்துடன் கூடின ஓர் யாகம் நடத்தப்போகின்றனன். அதற்கு நாங்கள் அனைவரும் போகப்போகின்றனம். நரோத்தமனே! நீயும் எங்களுடன்கூடவந்து அங்கு மிகவும் ஆச்சரியகரமாக ப்ரஸித்திபெற்றிருக்கிற ஒருயர்ந்தவில்லையும், ஸீதையென்னும்பெண்மணியையும் பார்க்கவேண்டும். அளவிடவொண்ணாத வலிவுபெற்றுப் பயங்கரமாகி மிகவும் ப்ரகாசிக்கின்ற அவ்வில்லா

190 ராமலக்ஷ்மணர்கள் விச்வாமித்ரரைப்பர்த்து 'நாங்கள் உமக்கு அடிமை'என்றுரைத்தல்

னது [1] முன்பொருகாலத்தில் தேவராதனென்னும் இந்த ஜநகராஜனது இவ்வம்சத்திற்பிறந்த ஓரரசன் யாகஞ்செய்ய, அந்த யாகத்தில் நடந்த ஸதஸ்ஸில் [2] தேவதைகளால்கொடுக்கப்பட்டது. தேவதைகளாயினும், கந்தர்வர்களாயினும், அஸுரர்களாயினும், அரக்கர்களாயினும் அவ்வில்லை நாணேறிடவல்லரல்லர். இனி மனிதர்கள் எவ்விதப்பயத்தினத்திலும் அதை நாணேறிட வல்லரல்லரென்பது சொல்லவேண்டுமோ? மஹாபலசாலிகளாகிய பல ராஜாக்களும் ராஜபுத்ரர்களும் அவ்வில்லினுடையஸாரத்தையறியக்கோலி, அங்கே வந்து கடைசியில் அதை நாணேறிடவும் சக்தியின்றி வந்தவழியே திரும்பிப்போயினர். காகுத்ஸ்தகுலத்திலவதரித்தவனே! புருஷோத்தமா! ராமா! நீ வந்தாயாயின் அவ்விடத்தில் மஹாநுபாவனாகிய ஜநகமஹாராஜனையும், மிகவும் அற்புதமாகத் தோன்றும் அவ்வில்லையும், அந்தயாகத்தையும் பார்க்கலாகும். ஸீதையென்னும் அழகான ஓர் பெண்மணியையும் பெறக்கூடும். புலியோடொத்த பராக்ரமம்பொருந்திய மஹா

---

1 முன்பு சிவன் இந்த வில்லைக் கொண்டு தக்ஷப்ரஜாபதியினது யாகத்தை அழித்தனன். தேவர்கள் சிவனை மனந்தெளியச்செய்து அந்தவில்லைப்பெற்றனர். தேவராதனென்னும்போர்கொண்டு முன்புள்ள ஒரு ஜநகமஹாராஜன் யஜ்ஞத்தினால் தேவர்களைக்களிச்சுசெய்து அத்தேவர்களிடமிருந்து அவ்வில்லைப்பெற்றனன், ஆகையால் சிவபிரானுடைய அவ்வில்லானது வம்சக்ரமமாக ஜநகமஹாராஜனிடத்திலிருக்கின்றதென்று கருத்து.

2 (தேவதைகளால் கொடுக்கப்பட்டது) இங்கு 'ஊத்தம்ஸஹஸி ஒஹவந்தஃ' என்று மூலம். இதற்கு ஸகலதேவர்களோடுங் கூடிவந்து சிவபெருமான்தானே கொடுத்ததாக மஹேச்வரதீர்த்தவ்யாக்யானம். இங்கு 'ப்ரீதஸ்ச ஹமவாநீஸஸ்த்ரிஸூலீ நீலலோஹிதஃ। ப்ரஹ்ருஷ்டஸ்தாஸார்யோ ஜநகாயாதி ஹாதயந்நஃ' என்று கூர்மபுராணவசநமும் ப்ரமாணமாக எழுதப்பட்டிருக்கின்றது.

வீரனே! ராமா! முன்பு தேவராதனென் னும் பேர்கொண் டஜகராஜன் தனதுயாகத்தில் மிகவும் களிப்புற்ற தே வதைகள் அனைவரையும் நோக்கித் தான் செய்த யாக த்துக்குப் பலமாக அழகியபிடியையுடைய அம்மேலான வில்லைக்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ள, அவர்க ளும் அப்படியே அவ்வில்லைக்கொடுத்தனர். அதுவும் அம்மஹாராஜனது மாளிகையில் நடக்கும் தநுர் மஹோத்ஸவத்தில் வில்லுகள் அனைத்திலும் ப்ரதாக மாக வைத்து நிறுத்தப்பட்டு ஆயாகமென் னும் பேர் பெற்று அகிற்புகை முதலிய பலவகைத் தூபங்களா லும், சந்தநம் முதலிய பலவித கந்தங்களாலும் பூஜிக்க ப்பட்டு வருகின்றது' என்று மொழிந்தனர். இங்ஙனம் மொழிந்தபின்பு அவ்விச்வாமித்ரமாமுனிவர் ரிஷிஸமூ ஹத்துடனும் ராமலக்ஷ்மணர்களுடனும் அவ்வாச்ரமத் திலிருந்து ப்ரயாணமாய்ப்புறப்பட்டு அங்குள்ள வநதே வதைகளைநோக்கி 'ஓவநதேவதைகளே! உங்களுக்கு மங் களமுண்டாகவேண்டும். நான் ஸித்திபெற்றேனையால் இந்த ஸித்தாச்ரமத்தினின்றும் புறப்பட்டு கங்காநதிக்கு வடகரையிலிருக்கிறஹிமால்யமென் னும் மலையிலுள்ள எ னது ஆச்ரமத்துக்குப் போகின்றனன்' என்றுசொல்லிவி டைபெற்றுக்கொண்டு, பின்பு ஆச்ரமங்களில் சிறந்த அந்த ஸித்தாச்ரமத்தைப்ரதக்ஷிணஞ்செய்து, வடதிசைநோக் கிப்ரயாணஞ் செய்யத்தொடங்கினர். அங்ஙனம் புறப்பட் டுப்போகின்ற அவ்விச்வாமித்ரமாமுநியைப் பின்தொடர் ந்து அங்குள்ள முனிவர்களனைவரும் தந்தமது அக்நி ஹோத்ரசம்பாரம் முதலியவைகளை ஏறக்குறைய நூறு வண்டிகளிலேற்றிக்கொண்டு சென்றனர். அப்பொழுது அந்த ஸித்தாச்ரமத்திலுள்ள மிருகங்களும் பக்ஷிகளும் கூட்டங்கூட்டமாக மிகுந்த பக்தியுடன் மகாத்மாவாகிய

அவ்விச்வாமித்ரமாமுனியைப் பின்தொடர்ந்து வர, அம்மாமுனிவரும் அப்பக்ஷிகளையும் மிருகங்களையும் திரும்பச்செய்தனர். இங்ஙனம் விச்வாமித்ரர்முதலிய மஹர்ஷிகளனைவரும் ப்ரயாணமாய்ப்புறப்பட்டு வெகுதூரம் கடந்து சென்று ஸூர்யன் அஸ்தமிக்கும் வேளையாகையில் அனைவரும் ஒன்றுகூடி சோணநதத்தின்கரையில் வஸித்திருந்து, ஸூர்யன் அஸ்தமிக்கக்கண்டு ஸ்நாநஞ்செய்து அக்நிஹோத்ரம் முதலியவைகளை நிறைவேற்றி மிக ஒளிபொருந்திய விச்வாமித்ரமாமுனியை முன்னிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். அப்பொழுது ராமன் லக்ஷ்மணனுந்தானுமாக அம்மாமுனிகளுக்கு நமஸ்காரஞ் செய்து சிறந்தமதியுடைய விச்வாமித்ரமாமுனியினருகிற்சென்று உட்கார்ந்து மஹாதேஜஸ்வியாகிய ராமன் அம்மாமுனியைநோக்கி, கௌதூஹலம்மேலிட்டு 'மஹாதுபாவரே! இந்தச்சோணநதத்தின் கரையில் செழித்த வநங்களால் அழகாய் விளங்கும் இத்தேசம் யாருடையது? இதைக்கேட்கவேண்டுமென்று விரும்புகின்றனன். ஆகையால் 'இதையுள்ளபடி எனக்குச்சொல்லவேண்டும். உமக்கு மங்களமுண்டாகுக' என்று விஞ்ஞாபனஞ்செய்தனன். இங்ஙனம் மொழிந்த ராமனது வசநங்களால் ஏவுண்டு மிகத்தபம் பொருந்தி நன்கு வ்ரதாநுஷ்டாநம் செய்து விளங்கிய விச்வாமித்ரமாமுனிவர் ரிஷிகளிணிடையில் அத்தேசத்தைக்குறித்த விருத்தாந்தங்களனைத்தையும் பின்வருமாறு கூறினர். முப்பத்தோராவதுஸர்க்கம் முற்றிற்று.

குசகுசநாபர்களின் விருத்தாந்தம்.

ப்ரம்ஹாவினது மாநஸபுத்ரனும் ஞானம் சௌர்யம் முதலிய குணங்களால் ப்ரம்ஹபுத்ரர்கள் அனைவரிலும்

சிறந்தவனுமாகிய[1] குசனென்னும் பேர்பெற்ற மஹாதபஸ்வியொருவனிருந்தனன். அவன் இடைவீடின்றி நோன்புகளெல்லாங் குறைவறச்செய்துகொண்டு தர்மங்கள் முழுதும் அறிந்து பெரியோர்களைப்பூசித்து அவர்களால் தானும்புகழப்பட்டு விளங்கினன். அம்மஹானுபாவன் கற்குலத்திற் பிறந்து காணம் முதலிய ஸ்த்ரீகுணங்களனைத்தும் பொருந்தி தனக்குஅநுரூபையுமான வைதர்ப்பியென்னும் பத்நியினிடத்தில் நற்குணங்கள் நிறைந்து தன்னொடொத்துவிளங்கிய குசாம்பன், குசநாபன், [2]ஆதூர்த்தரஜஸன், வஸு என்னும் நான்குபுதல்வர்களைப் பெற்றனன். குசனும் க்ஷத்ரியதர்மமாகிய ப்ரஜாபரிபாலநத்தைச் செய்யவிரும்பி மிக ஓளிபொருந்தி மிக்கஉத்ஸாஹமமைந்து தர்மத்தில் நிலைநின்று ஸத்யத்தையே பேசுமவர்களாகிய அப்புதல்வர்களை நோக்கி 'புத்ரர்களே! நீங்கள் ப்ரஜாபரிபாலநஞ்செய்யுங்கள். அதனால் தர்மம் நிரம்பப்பெறுவீர்கள்' என்று மொழிய, அதைக்கேட்டு உலகத்திலெங்கும் புகழ்பெற்ற மானிடவீரர்களாகிய அக்நால்வரும் நகரங்களை வாய்ப்பாக நிருமித்தனர். அவர்களில் மஹாதேஜஸ்வியர்கி விளங்கும் குசாம்பனென்பவன் கௌசாம்பி யென்னும் பட்டணத்தை யுண்டாக்கினன். தர்மாத்மாவாகிய குசநாபனென்பவன் மஹோதயமென்னும் பட்டணத்தை

---

1 (கௌ ஸேதே இதி குஸஃ) பூமியிலிருப்பவனைகையால் குசனென்று பேர்பூண்டவன். ப்ரம்ஹலோகத்தை விட்டு ப்ரஜாபாலநத்தில் மிகவும் மனஞ்சென்று பூலோகத்திலே யிருப்பவன். ஆகையால் குசனென்று பேர்பெற்றனன்.

2 இவ்விடத்தில் 'அஸுர்த்தரஜஸன்' என்று மஹேச்வரதீர்த்தவ்யாக்யாநம். (நவிஜீயதே ஸுர்த்தம் ப்ரஸூதம் ரஜோ யஸ்ய தம்) என்று அதுக்கு விக்ரஹமும் கூறப்பட்டிருக்கின்றது. ஊர்த்வ ரேதஸ்ஸையுடையவன் என்று அதன்பொருள்.

ஏற்படுத்தி வைத்தனன். ஆதூர்த்தராஜஸினென்பவன் தர்மாரண்யமென்னும் பட்டணத்தைக் கற்பித்தனன். ஜநங்களை ஆநந்திக்கச்செய்ய வல்லவனுகிய வஸுவென் பவன் கிரிவ்ரஜமென்னும் பட்டணத்தைப் படைத்தனன். ராமா! இச்சோணாசலத்தின் கரையிலுள்ள பூமியானது மஹாத்மாவாகிய வஸுவென்னும் அவ்வரசனுடையது. இப்பூமியைச்சுற்றி நான்குபக்கத்திலும் ஐந்து பெரும்பர் வதங்கள் இதோ விளங்குகின்றன. ஆனதுபற்றி இக்கர ம் கிரிவ்ராஜமென்று வழங்கிவருகின்றது. இச்சோணாசலமானது மகததேசத்தின் வழியாகப் பெருகிவருவது பற்றி மாகதீநதியென்னும் புகழ்பெற்று இவ்வைவந்து மலைகளிடையில் பூமாலைபோல் விளங்குகின்றது. ராமா! அங்ஙனம் மாகதியென்று பேர்பெற்று விளங் கும் இச்சோணாநதியானது மஹாநுபாவனுகிய வஸு வென்னும் அவ்வரசனைச்சேர்ந்தது. இக்நதி கிழக்கிலி ருந்து மேற்குமுகமாகப் பெருகிவருகின்றது. இக்நதியி னிரண்டுபக்கத்திலும் செழித்த பயிர்கள் நிறைந்து அழ கிய கழனிகள் வெகுவாய் விளங்குகின்றன ரகுநந்தனு! தார்மிகர்களிற் சிறந்து ராஜர்ஷியுமாகிய குசநாபனென்ன பவன் கிருதாசியென்னும் அப்ஸரஸ்ஸ்த்ரீயினிடத்தில் எல்லாக்குணங்களிலும் ஒப்பின்றி விளங்கிய நூறுபெண் களைப்பெற்றனன். ராமா! நன்கு யௌவநம் வரப்பெற்று மிகவும் அழகுபொருந்தி விளங்கும் அக்கன்னிகைகள் புஷ்பங்களைச்சூடி நற்சந்தநங்களைப்பூசி நெற்றியில் அழ காகத் திலகமணிந்து லீலாவிலாஸங்கள் அமைந்து மே லான ஆடையாபரணங்களால் அலங்காரஞ் செய்து கொண்டு பார்க்கப்பதிணுயிரங்கண்கள் வேண்டும்படி அழ குமீறி மழைக்காலத்து மின்னற்கொடிகளைப்போல் தோ ற்றிக்கொண்டு உத்யாநத்திற்கு வந்து அங்குப் பலவித

மாக ஆடுவது பாடுவது வீணை முதலிய வாத்யங்களை வாசிப்பது ஆகிய விளையாடல்களைச் செய்துகொண்டு மஹாநந்த ஸாகரத்தில் மூழ்கிக் கிடந்தனர். இப்படி ஸகலாவயவங்களிலும் அழகுபொருந்தி பூமியிலெங்குமொப்பற்ற உருவம்பெற்று விளங்கும் அப்பெண்மணிகள் யாவரும் கும்பல் கும்பலாய், கறுத்து செழித்த விருக்ஷங்கள் நிறைந்த அவ்வுத்யாநத்தின் இடையிற்சென்று நீருண்ட கார்மேகங்களின் நடுவில் ப்ரகாசிக்கின்ற நக்ஷத்ரங்களைப் போல் விளங்கினர். இங்ஙனம் எல்லாக்குணங்களும் பொருந்தி யௌவநம் நிறைந்து நன்கந்தமமைந்து சிறந்த உருவத்துடன் விளங்கும் அம்மாதரசுகளை எங்கும் பரந்து நிற்கும் வாயுதேவன் கண்டு மோஹங்கொண்டு 'மாது சிரோமணிகளே! எனக்கு உங்கள் அனைவரிடத்திலும் அளவற்ற மோஹம் உண்டாயிருக்கின்றது. ஆகையால் நீங்கள் எனக்குப் பத்நிகளாகவேண்டும். மநிதர்களுக்குத் தேவதைகளோடு ஸம்பந்தமெப்படி நேருமென்று சங்கிக்கவேண்டியதில்லை. நீங்கள் மநுஷ்யத்தன்மையை விட்டு ஆயுள் நிரம்பப்பெறுவீர்கள். யௌவநம் என்றும் நிலையற்றது. மநிதர்களுக்கோ அது மிகவும் நிலையற்றிருக்கும் ஆகையால் என்னை மணம் புரிவீர்களாயின் அழிவில்லாத யௌவநம்பெற்று தேவஸ்த்ரீகளைப்போல்விளங்கி வாழ்வீர்கள்' என்று மொழிந்தனன். நினைத்த காரியங்களைத்தடையின்றிநடத்த வல்லவனுகிய அவ்வாயுதேவனது வசநங்களைக்கேட்டு அப்பெண்மணிகள் நூறுபேர்களும் பரிஹஸித்து 'தேவோத்தமா! நீ ஸகலப்ராணிகளிடத்திலும் ப்ராணரூபியாகி நின்று ஸஞ்சரித்துக்கொண்டிருப்பவன். உனக்குள்ள இப்ரபாவத்தை நாங்கள் அறிந்தவர்களேயன்றி வேறுவிதமாயிருப்பவர்களன்று. இப்படிப்பட்ட எங்களை நீயேன் அவமதிக்கி

ன்றனை. தேவர்களிற்றலைவனே! நாங்கள் அனைவரும் குச நாபனுடைய பெண்கள். நாங்கள் உன்னையும், உனக்கு ப்ரபுவாகிய இந்திரனையும் உங்களுக்குள்ள அதிகாரத்தி னின்றுந்தொலைக்கவல்லோம். ஆயினும் சபிக்கில் தவம ழிந்தும்விடும். ஆனதுபற்றி அத்தவத்தைக்காத்துக்கொ ண்டுவெறுமனே யிருக்கின்றனம். நீ தேவர்களிற்றலைவனு யிருந்தும் உனக்கிந்த மதிகேடு ஏனுண்டாயிற்றோ? இதை எங்கள் தகப்பனுகிய குசநாபன் அறிவானுயின் உனக்கு அவன் மிருத்யுவாகக்கூடுமே. அவனப்படியாகா திருக்கவேண்டும். ஆகையால் ஸத்யத்தையே பேசும் அம்மஹாநுபாவனை அவமதிக்கவேண்டாம். உலகத்திற் பெண்களைத் தகப்பன் உத்தேசித்துக் கொடுப்பதன்றோ தர்மம். அப்படியே தகப்பனுகிய குசநாபன் எங்களை எவ னுக்குக் கொடுப்பனோ, அப்படிப்பட்ட வரனையே நாங் கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனம். (ஸத்யவாதி யாகிய தகப்பனையவமதித்து எங்களிஷ்டப்படி பர்த்தா வைத் தேடிக்கைக்கொள்ளுங்காலமுண்டாகவேண்டாம்) எனெனில்—எங்களுக்கு இப்பொழுது தகப்பனேயன் றோ ப்ரபு. அவனே எங்களுக்கு மேலான தைவம். ஆன தபற்றி அவன் எவனுக்கு எங்களைக்கொடுப்பனோ, அவ னே எங்களுக்குப்பர்த்தாவாகவேண்டும்'என்றனர். வாயு தேவனும் அம்மொழிகளைக்கேட்டு மிகக்கோபம்மேலிட்டு வல்லவனுனதுபற்றி அவர்களுடைய சரீரமெங்கும் புகுந் து முறித்துக்கூனிகளாகச்செய்துவிட்டனன். (அவர்க ளும் ஒரு முழமுயரமுள்ள உருவமடைந்து உத்ஸாஹங் குறைந்துபயந்து மனக்கலக்கமுற்றனர்.) இங்ஙனம் வாயு தேவனல் கூனிகளாகச் செய்யப்பட்ட அக்கன்னிகைக ளும் தங்கள் தகப்பனுகிய மஹீபதியின் மாளிகைக்குச் சென்று சரீரவிகாரத்தைப்பற்றி மிகவும் வெட்கித்து,

கணணுங் கண்ணீருமாகி நின்று பரபரப்புடன் கீழேவிழுந்தனர். அப்பொழுது குசநாபனும் முன்பு மிகவுங் காந்திகொழுந்துவிட்டெரிவிளங்கி, தனக்கிஷ்டர்களாயிருந்த அப்பெண்கள் அவ்விதமாகச் சரீரபங்கமுற்று வருந்துவதைக் கண்டு மனக்கொதிப்புடன் அவர்களைநோக்கிப் 'பெண்களே! இதென்ன? சொல்லுங்கள் தர்மத்தைத் தவறி இப்படி நடந்தவன் எவன்? உங்களனைவரையும் இங்ஙனங் கூனிகளாகச் செய்தவன் எவன்? ஏனிப்படி கீழே விழுந்துசுழன்றுகொண்டு பேசமுடியாமலிருக்கின்றீர்கள்?' என்று இங்ஙனம் விஞ்வி மனவருத்தமுற்றுப் பெருமூச்சுவிட்டுப் பின்பு அவர்கள் சொல்வதைக்கேட்க ஊக்கத்துடனிருந்தனன். முப்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ப்ரம்ஹதத்தன் விருத்தாந்தமும்,
அவன் குசநாபன் பெண்களை
மணமபுரிவதும்.

அறிஞனாகிய அக்குசநாபன் மொழிந்த அம்மொழியைக் கேட்ட அவனது புத்திரிகளாகிய அப்பெண்கள் நாறுபேர்களும்அவனது கால்களில் தமது சிரங்கள் படநமஸ்காரஞ்செய்து இங்ஙனமுரைத்தனர். 'ராஜனே! ஸர்வர்க்கும் உள்ளே புகுந்து ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிறவாயுதேவனைவன் எங்களையவமதிக்க நினைத்தனன். பலாத்காரஞ்செய்வது கெட்டவழியென்று நினையாமல் பலாத்காரஞ்செய்ய உத்யோகித்து, தர்மத்தைச்சிறிதும் ஆலோசிக்காமற் போயினன். அப்பொழுது நாங்கள் அத்தேவனை நோக்கி 'எங்களுக்குத் தகப்பன் இருக்கின்றனன். ஆகையால் பர்த்தாவை நாங்களே வரிக்கும்படியான ஸ்வாதந்த்ரியத்தில் இருப்பவர்களன்று. நீ எங்கள் தகப்பனிடஞ்சென்று வேண்டிக்கொள்வாயாக. அவனும்

எங்களை உனக்குக்கொடுப்பதனால் நாங்கள் உன்னுடைய ஸொத்தாகின்றனம். உனக்குச் சுபமுண்டாகவேண்டும்' என்று இங்ஙனம் அனைவருமாகச் சொல்லியும் அதைச் சிறிது மேற்றுக்கொள்ளாமல் தீயவழியே தொடர்ந்து சென்று எங்களை மிகவுங் கொலைத்துவிட்டனன்' என்றனர். இவர்கள் பொறுமையைக்கேட்ட ராஜனும் தான் மஹாதேஜஸ்வியாயினும் பரமதார்மிகனுதபற்றி வாயுவினிடத்தில் சிறிதுங் கோபங்கொள்ளாமல் தன்னைப்போலவே கோபமின்றி வெறுமனே திரும்பிவந்தமையால் பொறுமையில் ஒப்பில்லாதிருக்கும் தன்புதல்விகளைப்பார்த்து 'குழந்தைகளே! பொறுமையுள்ளவர்கள் தமக்கு எவரேனுங்கெடுதிசெய்யும்பொழுது தாங்கள் பதிலாகச்செய்யவேண்டிய காரியம் பொறுமையேயொழிய வேறில்லை. நீங்களும்இப்பொழுது அப்படியே பொறுமையைப் பாராட்டிப் பெருங்காரியம்நிறைவேற்றினீர்கள். தேவதையாயிருப்பவனெருவன் வேண்டிக்கொள்ளும்போது மனமயக்கமற்றிருப்பதும், அவன்கோபித்துப் பங்கஞ் செய்யினும் கோபங்கொள்ளாதிருப்பதுமாகிய இது பெருங்காரியமன்றே? பின்னும், நீங்களெல்லோரும் ஒரே எண்ணத்துடன் கூடியிருந்து தங்குலத்தையாலோசித்து அதுக்குத்தக்கபடி மேலான காரியஞ்செய்தீர்கள். பெண்களுக்காயினும் புருஷர்களுக்காயினும் பொறுமையன்றே பூஷணமாய் விளங்குவது. அங்ஙனம் பொறுமைகொள்வதுதான் அரிதாயிருக்கும். அதிலும் ரூபைச்வர்யங்களிற் சிறந்தவராகிய தேவதைகள்மீது விருப்பங்கொள்ளாமல் பொறுத்திருப்பது பின்னும் அரிது. அதைப் பார்க்கிலும் நீங்கள் எல்லோருமொருமித்துப் பொறுத்திருந்தது மிகவுமரிது. புதல்விகளே! தாநத்திலும், யஜ்ஞத்திலும், ஸத்யத்திலும், கீர்த்தியிலும், தர்

மத்திலும், உண்டாகும் பயனெல்லாம் பொறுமையிலுமுண்டாகத்தடையில்லை. ஆகையால் பொறுமையே தானமும், யஜ்ஞமும், ஸத்யமும், கீர்த்தியும், தர்மமுமென்று சொல்லப்படும். பூமிக்குள்ள பொறுமையாலேதான் ஸ்தாவரஜங்கமரூபமான ஜகத்தும் அதில் நிலைபெற்றிருக்கின்றது' என்று மொழிந்தனன். பராக்ரமத்தில் தேவர்களோடொத்திருக்கும் அவ்வரசன் இங்ஙனம் மொழிந்து அப்புதல்விகளுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுக்காரியங்களை ஆலோசிப்பதில் வல்லவனானதுபற்றி அப்பெண்களை விவாஹஞ்செய்து கொடுப்பதற்குத்தக்க தேசகாலங்களையும் தகுந்த புருஷனையும் தேடவேண்டியதற்காக மந்திரிகளோடுகூடி ஆலோசனைசெய்யத் தொடங்கினன். இக்காலத்தில் தானே ப்ரஹ்மசாரியாகி கல்ல ஆசாரமுடையவருமான சூலியென்னும் ஓர் மாமுனிவர் வேதங்களிற் சொல்லியபடி தவஞ்செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது ஊர்மிளையென்னும் அப்ஸரஸ்ஸ்த்ரீயின் பெண்ணாகிய ஸோமதையென்னும் ஓரு கந்தருவப்பெண் அவ்விடம் வந்து தவஞ்செய்யும் அம்மாமுனிக்குச் சுச்ரூஷை செய்துகொண்டிருந்தனள். ராமா! உனக்குச் சுபமுண்டாகவேண்டும். தர்மிஷ்டையாகிய அந்தஸோமதையென்பவள் வணக்கத்துடன் அம்மாமுனிக்கு ஸமயமறிந்து சுச்ரூஷை செய்துகொண்டு அங்கே வஸித்திருந்தனள். பின்பு சிலகாலஞ்செல்ல, அம்மாமுனி அந்த ஸோமதையின் சுச்ரூஷைக்கு ஸந்தோஷமடைந்தனர். ரகுநந்தன! அவளுடைய சுச்ரூஷை பரிபக்வமாகுங்காலம் வர, அம்முனி அவளை நோக்கி 'நான் உனது சுச்ரூஷையால் ஸந்தோஷமடைந்தனன். உனக்கு மங்களமுண்டாகவேண்டும். உனக்குநான் செய்யவேண்டும் ப்ரியம் யாது? சொல்' என்றனர். அதைக்கேட்டு அந்தக் கந்தருவப்பெண் அம்

மாமுனி ஸந்தோஷமடைந்திருப்பதைக்கண்டு தானும் மிகவும் ஆநந்தமடைந்துபேசுவதில் வல்லவராகிய அம்மர முனியை நோக்கிப் பேசுவதில் தனக்குள்ள வல்லமை வி ளங்கும்படி மதுரஸ்வரத்துடன் 'தார்மிகசிரோமணீ! நீர் ப்ரஹ்மதேஜஸ்ஸினல் யாவரையும் அதிசயித்து நிற்பவர்; ப்ரஹ்மதேவனேடொத்தவர்; மிகத்தவம்பொருந்திவிள ங்குமவர். இப்படிப்பட்டவராகையால் ப்ரஹ்மசக்தியுட ன்கூடிய புதல்வனை எனக்குத்தரவேண்டுமென்று உம் மைவேண்டிக்கொள்ளுகிறேன். நான் பதியில்லாதவள். உமக்குச் சுபமுண்டாகுக. என்னை விதவையென்றுநினைக் கவேண்டாம். ஏனெனில், இதுவரையிலும் எனக்குப் புரு ஷனில்லை. இப்போதும் நானெருவனுக்குப் பாரியையா யிருக்கவில்லை. ஆனல் நான் கிஷ்டையுடன் ப்ரஹ்ம சர்யங்கொண்டிருப்பவள். இப்படிப்பட்ட நான் உம்மைச் சரணமடைந்தனன். ஆகையால் உமது தபோமஹிமை யைக்கொண்டு எனக்கு ஓர் புதல்வனைத்தரவேண்டும்'என் றனள். அந்த ப்ரஹ்மர்ஷியும் அவளிடத்தில் அனுக்கிர கஞ்செய்து தன் மனத்தினின்றும் பிறந்த ப்ரஹ்மதத்த னென்னும் ஓர் உயர்ந்த புதல்வனை அவளுக்குத்தந்தி னர். அந்தக் கந்தருவியும் க்ஷத்ரியஜாதியானதுபற்றி அ வள் பிள்ளையாகிய அந்த ப்ரஹ்மதத்தனும் ராஜாவாயி னன். குசநாபன் தனது பெண்களின் விவாஹத்தைக் குறித்து ஆலோசனை செய்யும் அச்சமயத்தில் ஸோம தையின் புதல்வனுகிய ப்ரஹ்மதத்தனென்னும் அவ்வர சன் ஸ்வர்க்கத்தில் இந்திரன்போல் தான் காம்பில்யாநக ரத்தில் வஸித்திருந்தனன். காகுத்ஸ்த வம்சத்திற் பிறந் த மஹானுபாவனே! அப்பொழுது தார்மிகனுகிய குசநா பன் ப்ரஹ்மதத்தனுக்குத்தனது புதல்விகள் நூறுபேரை யும்கொடுக்க நிச்சயித்து மனக்கவலையற்று மிக்க ஒளி

ருக்கிவருகின்றனள். அக்கௌசிகி ஹிமாலயத்தினருகிற் பெருக ரானும் கூடப்பிறந்தமையாலுண்டாகும் நேசத்தினல் அம்மலைச்சாரலில்தானே எப்போதும் ஸுகமாக வஸித்திருக்கின்றனள். அந்தஸத்யவதி மிகவும் பரிசுத்தையாயிருப்பவள்; தன்பேருக்குரியபடி ஸத்தியத்திலும் நிலைகின்றிருப்பவள்; கணவனைக் கைவிடாதிருப்பவள்; மஹாபாக்யமுடையவள். அந்தஸத்யவதியே இப்பொழுது கௌசிகியென்னும் பேர்பெற்று நதிகளிற் சிறந்து விளங்குகின்றனள். நான் யாகநியமத்திலான்றி அக்கௌசிகிநதியை விட்டு ஸித்தாச்ரமத்துக்கு வந்து அதில் உனது தேஜஸ்ஸினல் காரியஸித்தியை யடைந்தவனுயினன். மஹாபாஹோ! ப்ரஸக்தி நேரிட்டதுபற்றி இங்ஙனம் எனது பிறப்பையும் எனது வம்சோற்பத்தியையும் தெரிவித்தனன். நீ என்னைக்கேட்ட இத்தேசத்தினது விபவத்தையும் மொழிந்தனன். காகுத்தனே! நானிப்படி கதையைச் சொல்லிக்கொண்டிருக்க ராத்ரியில் சிலபொழுது நடந்தது. கண்வளரவேண்டியபொழுது வந்தமையால் இனி கண்வளருவாயாக. உனக்கு மங்களமுண்டாகவேண்டும். விழித்துக்கொண்டிருந்தோமாயின் இங்கு வழிநடக்கைக்கு விரோதம் நேரிடும். விருக்ஷங்களெல்லாம் பக்ஷிஸஞ்சாரமில்லாமையைப்பற்றிச்சலகமின்றியிருக்கின்றன. மிருகங்களும் பக்ஷிகளும் தந்தமிடங்களிலடங்கி நித்ரைபோகின்றன. திசைகளெல்லாம் இரவிலுண்டாகுமிருள் நிரம்பப்பெற்றிருக்கின்றன. மாலைச்சந்தியும் மெல்லமெல்லக் கடந்து செல்கின்றது. ஆகாயமும் அச்வினி முதலிய நக்ஷத்ரங்களாலும் மற்றுமுள்ள நக்ஷத்ரங்களாலும் நெருங்கப்பெற்றுத் தேஜோமயமான கண்களால் எங்கும் சூழப்பட்டதுபோல் ப்ரகாசிக்கின்றது. சந்திரனும் குளிர்ந்த கிரணங்களை வீசி உலகத்தி

ஹுள்ள இருளையோடச்செய்து தனது கிலவினல் ஸமஸ்த ப்ராணிகளுடையவும் உள்ளத்தை உல்லாஸப்படுத்திக் கொண்டு உதிக்கின்றனன். இரவில் திரியுந்தன்மையுடைய கோட்டான் முதலிய ஜந்துக்கள் இங்குமங்கும் நடமாடிக்கொண்டிருக்கின்றன. மாம்ஸத்தைப் புசிப்பவர்களும் பயமுறுத்துந்தன்மையருமாகிய யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் ஆங்காங்கு ஸஞ்சரித்துக்கொண்டிருக்கின்றனர்' என்றிப்படி மஹா தேஜஸ்வியாகிய அம்முனிமன்னவர் மொழிந்து [1] விரமிக்க, முனிவர்கள் அனைவரும் 'மேல்மேல்' என்று கொண்டாடினர். மீளவும் அவர்கள் 'குசிகர்களின் இவ்வம்சமானது மிகவும் பெருமை பொருந்தியது. அது எப்பொழுதும் தர்மத்தில் நிலைகின்று விளங்கியது. குசவம்சத்திற் பிறந்தவர் யாவரும் மிக்க மகிமை பொருந்தி மானிடவரில் ஒப்பின்றி கின்று ப்ஹ்மதேவனைடொத்தவரா யிருப்பவர்கள். அவர்களில் மஹாயசம்பொருந்திய விச்வாமித்ரனெனப்படும் நீரே விசேஷித்து மஹாதபோவராயிருப்பவர். நதிகளிற் சிறந்த இக்கௌசிகியும் உமது குலத்தை விளங்கச்செய்கின்றனள்' என்று ப்ரசம்ஸிக்க, அக்கௌசிகரும் ஸந்தோஷிவெள்ளத்தில் மூழ்கி விளங்கிக்கொண்டு அஸ்தமித்த ஸூர்யன்போல நித்ரை செய்தனர். ராமனும் லக்ஷ்மணனும் மிகவும் அற்புதத்தை விளைவிக்குமதாகிய அவ்விருத்தாந்தத்தைக்கேட்டும் நித்ரைக்குட்பட்டுக் கொஞ்சமாகவே ஆச்சரியமடைந்து அம்மாமுனியைக்கொண்டாடி வழிநடந்துவந்த ச்ரமத்தினல் கன்கு நித்ரை போயினர். முப்பத்துநாலாவது ஸர்க்கம் முற்றிற்று.

---

1. விரமிக்க-முடித்து வெறுமனே யிருக்க.

களுக்குத் தாய். அம்மகோரமையென்பவளிடத்தில் ஹிமவந்தனுக்குக் கங்கையென்பவள் மூத்தபெண்ணாகப்பிறந்தவள். அவனுக்கேஇரண்டாவதுபெண் உமையென்பவள் உண்டாயினள். தேவதைகள்அனைவரும் தமக்குள்ள ஓர் காரியத்தை நிறைவேற்றும்பொருட்டு ஹிமவந்தனிடம் சென்று த்ரிபதகையென்னும் பேர்பெற்ற கங்கையைக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டனர். பர்வதராஜனாகிய ஹிமவந்தனும் யாசகர்கள்கேட்டதை மறுக்கவொண்ணாதென்று தர்மத்தில்மனஞ்செலுத்தி மூவுலங்களுக்கும் நன்மையைச்செய்யவிரும்பித் தனது புதல்வியாகிய கங்கையைத்தேவர்களுக்குத் தந்தனன். அவள் உலகங்களனைத்தையும் பரிசுத்தமாக்குந்தன்மையள். தான் நினைத்தபடி எவ்வழியிலும் ப்ரவாஹங்கொள்ளவல்லவள். தேவதைகளும் உலகங்களுக்கெல்லாம் நன்மைசெய்யும்பொருட்டு அக்கங்கையைவாங்கி அழைத்துக்கொண்டு தமது இஷ்டம் நிறைவேறி மனக்களிப்புடன் சென்றனர். ராகவனே! அந்த ஹிமவந்தனுடைய மற்றொருபெண்ணாகிய உமையென்னும் கன்னிகை கடும்விரதத்தைக்கைக்கொண்டு தவமே தருமமென்று நினைத்துச் சிவனைக்குறித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தனள். அங்ஙனங் கடுந்தவம்புரிந்து உலகமனைத்தும் வணங்கும்படி விளங்கிய தன்பெண்ணை உமாதேவியை அப்பர்வதராஜனாகியஹிமவந்தன் அருளுருவாகி அருள்புரிந்து வந்த ருத்ரனுக்கு மனைவியாகக் கொடுத்தனன். ராகவனே! நதிகளிற்சிறந்த கங்கையும் உமாதேவியும் ஆகிய இவ்விருவரும் உலகங்களில் மிகப்பெருமை பெற்றவர்கள்; பர்வதராஜனாகிய ஹிமவந்தனுடைய பெண்கள். மிகவும் அழகான நடையுள்ளவர்களிற் சிறந்த ராமனே! இங்ஙனம் இக்கங்காநதி பிறந்தவிதமெல்லாம் மொழிந்தனன். இந்நதி மூன்றுமா

ர்க்கங்களைப்பெற்ற விதத்தைச்சொல்லுகிறேன். இக்கங்கை, முதலில் ஆகாயமார்க்கத்தே சென்றனள். பின்பு பாபமின்றி அழகாய் விளங்கி வற்றுத வெள்ளங்கொண்ட பர்வதராஜன் மகளாகிய இந்நதியே தேவலோகத்திற் சென்று தேவநதியென்னும் பேர் பெற்றனள். மூப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

பார்வதி விருத்தாந்தம்.

அவ்விச்வாமித்ரமாமுனிவர் இங்ஙனம் உரைத்து விரமிக்க, அதைக்கேட்டு வீரர்களாகிய ராமலக்ஷ்மணர்களிருவரும் அக்கதையைக் கொண்டாடி அம்மாமுனியை 'அந்தணரிற் சிறந்த முனிமன்னரே! பர்வதராஜனுகிய ஹிமவந்தனுடைய மூத்தபெண்ணுகிய கங்காதேவியின் விருத்தாந்தம் தர்மம்பொருந்தி மிகவுஞ் சிறப்புற்றது. அதையிவ்வளவுமாத்ரமே மொழிந்தீர். நீர் ஸமஸ்த கதைகளையும் பரக்க அறிந்தவர். ஆகையால் ஸ்வர்க்கத்திலும் பூமியிலும் நடந்த அக்கங்கையின் விருத்தாந்தங்கள் அனைத்தும் ஸவிஸ்தரமாகச்சொல்லவேண்டும். உலகங்களையெல்லாம் பாவநமாக்குந் தன்மையுள்ள அக்கங்காநதி மூன்று மார்க்கங்களாகப் பெருகுவதற்குக் காரணமென்? த்ரிபதகையென்னும் இந்நதி எப்படி எக்காரியஞ் செய்து நதிகளிற் சிறந்ததென்னுங் கியாதியடைந்தது?" என்று விணவினர். அதைக் கேட்டு அந்தத் தபோதனர் தேவலோகங்களிலும் மநுஷ்யலோகங்களிலும் நடந்த அக்கங்கையினது விருத்தாந்தங்கள் அனைத்தையும் ஸவிஸ்தரமாக இப்படியென்று ரிஷிக்கூட்டத்தினிடையில் மொழிந்தனர். "குத்ஸத்தவம்சத்திற் பிறந்த கருமாணிக்கமே! ராமா! முன்பு மிகத்தவம் பொருந்திய சிவன், பார்வதியை மணம்புரிந்து அப்பார்வதீதேவியைப் பார்த்து

தபோகிஷ்டனுயிருந்தும் மந்மதபாணங்களா லடியுண்டு மனமயங்கி அவளோடு ரதிகேளிக்குத் தொடங்கினவனுயினன். பகைவரைத் தபிக்கச்செய்யும் பாகசாசனரலியே! ராமா! இப்படி மந்மதக்ரீடையில் தேவமானத்திலுல் நூறுண்டுகள் நடந்து சென்றும் அச்சிவபிரானுக்கு அப்பார்வதியினிடத்தில் ஒருபுதல்வனுண்டாகவில்லை. பின்பு காண்முகன் முதலிய வானவர் அனைவரும் இப்பார்வதியினிடத்தில்பிறக்கும் புதல்வனைப் பொறுக்கவல்லவன் எவனென்று ஆலோசித்து அதற்கு எப்படியாவது தடைசெய்ய வேண்டுமென்று உத்தேசங்கொண்டு அனைவரும் சிவபிரானிடம் வந்து தலைவணங்கி நமஸ்காரஞ்செய்து 'வானவர்க்கரசே! மஹாதேவா! நீர் உலகங்களுக்கு ஹிதத்தையே செய்யுந்தன்மையுடையவர். ஆகையால் உமது பாதாரவிந்தத்தில் விழுந்து வேண்டிக்கொள்கிற இத்தேவர்கள்மீது நீர் அருள்புரிந்து ரக்ஷிக்கவேண்டும். தேவாதிநாதனே! உமது வீரியத்திலுல் பிறக்கும் புதல்வனை உலகங்கள் தரிக்கமாட்டா. ஆகையால் நீர் இச்செயலை விட்டு வேதங்களிற் சொல்லியபடி யோகத்தில் முயன்று பார்வதிதேவியுடன் கூடி தவம்புரிவீராக. மூவுலகங்கட்கும் நன்மையுண்டாகும்பொருட்டு உமதுவீரியத்தை உமது தேஜோமயமான சரீரத்திலேயே நிறுத்தி அடக்கிக்கொள்ளவேண்டும். வெளிவிடவேண்டாம். (இவ்வுலகங்களனைத்தையும் காப்பீராக. உலகங்களையெல்லாம் ஒழிக்கமுயல்வது உமக்குத்தகாச்செயலல்லவா?") என்று மொழிந்தனர். தேவதைகளின் அம்மொழியைக்கேட்டு உலகங்கட்கெல்லாம் தனியாளுகிய அச்சிவபெருமானும் அப்படியேயென்று அத்தேவதைகளை நோக்கி 'எனது வீரியத்தை நான் எனது சரீரத்திலேயே அடக்கிக்கொள்கின்றனன். பார்வதியும் அப்படியே தனது சுக்லசோணிதங்களைத் தனது

சரீரத்திலேயே நிறுத்திக்கொள்கின்றனள். தேவதை களே! உலகங்களெல்லாம் ஸுகத்துடன் வாழ்க. வானவர் களே! நான் என்னுடைய ரேதஸ்ஸை உள்ளேயே அட க்கிக்கொள்வேன். ஆனல் அதில் சிறிதுபாகம் ஸ்தாணத் தினின்றுஞ் சலித்து வெளிநோக்கிவிட்டது. ஆகையால் அங்ஙனம் கழுவினபாகத்தைமாத்திரம் விட்டுவிடவேண் டியதாயிருக்கின்றது. இப்பொழுது எனதுரேதஸ்ஸில் யாதொருபாகம் ஸ்தாணத்தினின்றும் கழுவியிருக்கின் றது, அது மிகவும் தேஜோமயமாகையால் யாவராலும் பரிக்கழுடியாதது. சிறப்புற்ற தேவர்களே ! அப்படிப்ப ட்ட எனதுரேதஸ்ஸைப் பரிக்கவல்லவன் யாவன்? அதை எனக்குச்சொல்லவேண்டும்' என்றுமொழிய, தேவதை களனைவரும் அவ்வெருத்துக்கொடியானை நோக்கி 'தே வா! இப்போது உமதுசரீரத்தினின்றும் வெளியான ரே தோபாகத்தை இப்பூமிதரிக்கவல்லது' என்றுத்தரமுரை த்தனர். பின்பு உருத்திரனும் தேவர்களால் இங்ஙனம் சொல்லப்பட்டுத் தனதுவீரியத்தைப் பூமியில் விட்டுவிட் டனன். அவ்வீரியமானது மலைகளுங்காடுகளுமாகிய பூமி யெங்கும் நிரம்பிவிட்டது. பிறகு தேவதைகள் அத்தே ஜஸ்ஸை பூமியிலெங்கும் பரந்துவருவதைக்கண்டு பயந்து அக்நிதேவனைப் பார்த்து அவன் முதலில் பயப்பட்டபோ திலும் நிலைப்படுத்தி 'நீ வாயுவுடன்கூடி இந்தச் சிவரே தஸ்ஸைக்குட் புகுரவேண்டும்' என்றுரைக்க, அக்நியும் அந் தரேதஸ்ஸில் நுழைந்து வியாபித்திருக்கையில் அது வெ ள்ளிமலையாயிற்று. பின்பு காலவசத்தினல் அது நாணற் காடாகவும் தோன்றி அக்நியையும் ஆதித்யனையும் நிகர் த்த ஒளிபெற்றிருந்தது. அந்த நாணற்காட்டில்தான் கிரு த்திகாதேவிகளின் ஸ்தன்யபானஞ்செய்தமையால் கார்த்தி கேயனென்றும், அக்நி தரித்திருந்ததுபற்றி அக்நிஜம்

பவனென்றுஞ் சொல்லப்பட்ட ஆறுமுகன் பிறந்தனன். இப்படிக்கு உருத்திரன் ரதிகேளியினின்றும் கைவாங்கி வெளிவந்த வீரியத்தைப் பூமியில் விட, அதை அக்நியும் வாயுவுமாக உள்ளுழைத்து வியாபித்து நிற்கக்கண்டு, தேவர்களும் ரிஷிகளும் கூட்டங்கூட்டமாக மிகவும் ஸந்தோஷங்கொண்டு பார்வதிக்கும் பரமேச்வரனுக்கும் ரதிகேளிஸுகத்தைக் கெடித்தமையால் கோபம் உண்டாகுமேயென்று நினைத்து அதுண்டாகாமைக்காகவும் அவன் பண்ணின உபகாரத்தைப் பற்றியும் அவ்விருவர்களையும் அளவற்றபடி பூஜித்தனர். பின்பு பார்வதி அவ்வானவர்களனைவரையும் நோக்கி 'எனக்குப் பர்த்தாவுடன் ஸம்போகத்தைத்தடுத்த இவ்வநிஷ்டத்திற்கு ப்ரதிபலத்தை அநுபவியுங்கள்' என்று சொல்லிக்கொண்டே கோபாவேசத்தினால் ஸூர்யன்போல் எரிவீசி விளங்கின்று கையில் ஜலமெடுத்துக் கோபத்தின் மிகுதியால் கண்களிரண்டிலும் சிவப்பு மீற, 'புதல்வனைப்பெற விரும்பி முயன்ற எனக்குப் பர்த்தாவுடன் நடந்த ஸம்போகத்தைத் தடுத்தீர்களாகையால் உங்களுக்கும் உங்கள் பாரிஷைகளிடத்தில் ஸந்தானமுண்டாகாமற்போகக்கடவது. இன்றுமுதல் உங்கள் மனைவிகள் மலடிகளாகக்கடவர்' என்று இங்ஙனம் சாபத்தைக்கொடுத்தனள். இப்படி தேவர்களனைவரையும் சபித்துப் பூமியைப்பார்த்து 'அவநியே! நீ ஒருருவத்துடன் நிலைபெறுமல் களர்முதலிய பலவித ரூபங்கொண்டு பல அரசர்களுக்குப் பத்தினியுமாயிருப்பாயாக. நீ மிகவும் கொடியமதியுடையவள். ஆனதுபற்றியே நீ யெனக்குப் புதல்வனுண்டாக ஸம்மதிக்காமற்போயினை. ஆகையால் என்னிடமிருந்து நீ சாபம்பெற்று இயற்கைமாறிப் புதல்வனுண்டாகு மாறந்தத்தை அடையாதிருப்பாயாக' என்

று சபித்தனள். சபிக்கப்பட்ட தேவர்களனைவரும் வெட்கங்கொண்டு தலையிரக்கமுற்றிருப்பது கண்டு, வானவரேறுகிய சிவன் தனக்குள் 'பார்வதியிட்ட சாபத்தைமறுக்கப்போகாது; நமது அநுசரர்களாகிய தேவர்கள் படுந்துயரத்தையுங் காணலாகாது' என்று நினைத்து அப்பொழுதே வருணன் பாதுகாக்கும் மேற்றிசையை நோக்கிச் செல்லத்தொடங்கினன். பின்பு அப்படியே அம்மஹாதேவன் ஹிமாலயபர்வதத்தினது வடபக்கத்திலுள்ள ஓர் சிகரத்தில் தனது பத்னியாகிய பார்வதியுடன்கூடி எப்பொழுதும் தவஞ்செய்யும்படி ஸங்கல்பித்திருந்தனன். ராமா! பர்வதத்தின் புதல்வியாகிய பார்வதியின் வரலாற்றையெல்லாம் இங்ஙனம் ஸவிஸ்தரமாக உனக்கு மொழிந்தனன். இனி கங்காநதியின் ப்ரபாவத்தைச் சொல்லுகிறேன். நீ லக்ஷ்மணனுடன் கூடிக் கேட்பாயாக. முப்பத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

குமரன் பிறந்த விருத்தாந்தம்.

முன்பு சிவன் அவ்வாறு தவம்புரிந்திருக்கையில் வானவர்கள் தமக்கொரு ஸேநாபதி வேண்டுமெனக் கருதி, ரிஷிகணங்களோடுகூடி ப்ரஹ்மதேவனிடம் வந்து சேர்ந்தனர். ராமா! பின்பு அக்நிமுதலிய தேவர்களனைவரும் இந்திரனுடன்கூடி மஹாத்மாவாகிய நான்முகனை நமஸ்காரஞ்செய்து 'தேவனே! முன்பு நீர் எங்களுக்கு ஸேநாபதியாக ஏற்படுத்தின சிவபகவானுனைவன் பகைவரையடக்க வல்லவனாயினும் இப்பொழுது எங்களுக்கு ஸேநாபதியாக நிற்கவில்லை. எங்களுக்குத் தகப்பனைப்போல நன்மையைச்செய்யவல்ல அச்சிவபெருமான் இப்பொழுது ஹிமாலயத்தின் சிகரத்தில் பெருந்தவம்புரியக் கருதிப் பார்வதியுடன்கூடி அதை நடத்திக்கொண்டிருக்

கின்றனன். இனி உலகங்களுக்கு ஹிதமுண்டாகும்பொரு ட்டுச் செய்யவேண்டிய கார்யமெதுவோ, அதை நீர் செய் யவேண்டும். நீர் எல்லாவற்றையும் நேர்மைப்படித்தும் வழி யை அறிந்தவர். நீரே எங்களுக்கு மேலான கதி' என்று ரைத்தனர். இங்ஙனம் தேவர்கள் மொழிந்தமொழியை க்கேட்டு உலகங்கட்கெல்லாம்பிதாமஹனுகிய திசைமுகக் கடவுள் தேவர்களை நோக்கி 'சிவன் கடுந்தவம்புரிந்திருக் கின்றனன். அவனைத் திருப்பத் தரமில்லை. ஆகையால் அ தில் முயல்வது வீண்' என்று இனியமொழிகளால் ஸமா தானஞ்சொல்லி இங்ஙனமுரைத்தனர். பார்வதிதேவி, தே வதைகளுக்குத் தங்கள் மனைவிகளிடத்தில் ஸந்தானமு ண்டாகாதென்று சாபங்கொடுத்ததுபற்றி நீங்கள் உங்களு டைய கொண்டபெண்டிர்களிடத்தில் மக்களைப்பெறவல்ல ரல்லர். அத்தேவியினதுசாபம் அமோகமாயிருக்கவற்று. இதுண்மையே. இதிற்சந்தேகம் வேண்டாம். ஆனால் இனி கதியெப்படியென்பீர்களாயின், இதோ இவ்வாகாசகங் கையினிடத்தில் அக்நிதேவன் ஓர் புதல்வனை உண்டாகச் செய்வான். அவன் பகைவரையெல்லாமடக்கவல்ல மஹா பராக்ரமம் பொருந்தியிளங்கி தேவதைகளனைவர்க்கும் ஸேநாபதியாகி நிற்பான். 'கங்கை இதற்கெப்படி சம்மதிக் கும், பார்வதியுமெப்படிகோபியாதிருக்கும்' என்று ஸந்தே கிக்கவேண்டாம். கங்கை ஹிமவந்தனுடைய மூத்தபெண் ணன்றே? அக்கங்காதேவி அக்நிதேவனால் புதல்வனைப் பெற ஸம்மதிப்பாள். தனது தமக்கையினிடம் ப்ரீதிகொ ண்டு பார்வதியும் அப்புதல்வனைக் கைக்கொண்டு ஸம்மதி யடைவாள். இதற்குச் சந்தேகமில்லை' என்றனர். ரகுநந் தன! தேவதைகளனைவரும் அவ்வயன்மொழியைக் கேட் டுத் தமது கருத்து நிறைவேறிற்றென்று மனத்திலெண் ணங்கொண்டு அந்தான்முகக்கடவுளை நன்கு பூசித்து நம

ஸ்காரஞ்செய்து ஸமஸ்தமான தேவர்களும் பலவகைப்பட்ட லோஹதாதுக்களால் அலங்காரம்பெற்று விளங்கிய உருத்திரனுடையவீர்யத்தினுட்புகுந்து அதைக்கொளுத்தி நின்ற அக்நிதேவனிருப்பிடமாகிய கைலாஸபர்வதத்திற் குச்சென்று ஸேநாபதியாகவல்ல ஒரு புதல்வனை உண்டாக்கும் பொருட்டு அங்குச் சிவனது வீர்யத்தினுட்புகுந்து வேறொரு சரீரங்கொண்டிருக்கிற அவ்வக்நி தேவனைப் பார்த்து ‘ ஓ அக்நியே! தேவர்களின் காரியமிது, நீ நிறைவேற்றவேண்டும். அதுவென்னென்னில், நீ மஹா தேஜஸ்வியாகையால் பர்வதத்தின்மகளாகிய கங்காதேவியினிடத்தில் உன்னிடமிருக்கும் உருத்திரவீர்யத்தை விடுவாயாக ’ என்று நியோகித்தனர். அவனும் அப்படியேயாகட்டுமென்று தேவர்களுக்கு உறுதிமொழி சொல்லிவிட்டுக் கங்காதேவியிடம் வந்து ‘ தேவீ! நீ சிவனது வீர்யத்தை வாங்கிக்கொண்டு கர்ப்பந்தரிக்கவேண்டும். ஏனெனில், இது தேவர்களுக்கு மிகவும் ப்ரியமாயிருக்கின்றது’ என்று உரைக்க, அதைக்கேட்ட அக்கங்கையம்மனும் ஓர் அழகான திவ்யஸ்த்ரீ வேஷந்தரித்து எதிரே வந்து நின்றனள். அக்நிதேவனும் அவளுடைய ஸௌந்தர்யாதிசயத்தைக் கண்டு மிகவும் மோகித்துத் தனது அவயவங்களனைத்திலும்மிருந்த அவ்வீர்யத்தைப் பொழிந்து அத்தேவியினது அங்கங்களிலெங்கும் பரம்பும்படி அதையெல்லாஞ்சொரிந்தனன். ரகுநந்தன! பின்பு அவ்வீர்யமானது அக்கங்காதேவியினது அவயவங்களெங்கும் நிறைந்துநின்றது. அங்ஙனந் தரிக்கப்பட்ட அக்நியினுடைய தேஜஸ்ஸானது தன்னையெரிக்கவே, அதைப் பொறுக்கமாட்டாமல் மிகவும் மனந்தத்தளித்துத், தேவர்களுக்கெல்லாம் புரோஹிதனாகிய அவ்வக்நிதேவனை நோக்கித், ‘தேவனே! என்னிடத்தில் நீ சொரிந்த சிவ

பிரானுடைய வீரியமானது எனது அவயவங்களெங்கும் பரந்து என்னையெரிக்கின்றது. ஆகையால் நான் அதைத் தரிக்கவல்லளல்லேன்' என்றுரைத்தனள். அதைக் கேட்டு, யாகங்களில் தேவதைகளைக் குறித்து ஹோமஞ்செய்யும் ஹவிஸ்ஸை அவர்க்கு முகமாய் நின்றுட்கொள்ளுந் தன்மையுடைய அவ்வக்நிதேவன் கங்காதேவியைப் பார்த்து 'இதோ இந்த ஹிமவத்பர்வதத்தினுடைய அருகிலிருக்கின்ற இச்சிறிய மலையில் இந்தக் கர்ப்பத்தை விட்டுவிடு' என்றனன். பாவமற்றுவிளங்கும் பரமோதாரனே! ராமா! அம்மொழியைக் கேட்ட கங்காதேவியும் சோதிவெள்ளங்கொண்டு விளங்குகின்ற அந்தக்கர்ப்பத்தைத் தனது ஸர்வாவயவங்களினின்றும் வாங்கி அப்படியே அம்மலையில் விட்டுவிட்டனள். இங்ஙனம் கங்கையினிடத்தினின்றும் வெளியாய்ப் பூமியிற்சென்று உருக்கிக்கொட்டின உயர்ந்த பொன்குழம்புபோல் நிர்மலமாகி விளங்குகின்ற அச்சுக்லசோணிதங்களே சிறந்த தங்கமாகவும், மேலான வெள்ளியாகவுந் தோன்றி விளங்கின்றன. அதிலுள்ள க்ஷாரபாகமானது தாம்ரமும் இரும்பும் ஆயிற்று. அதின் அழுக்குபாகமானது தகரமும் ஈயமும் ஆயிற்று. இவ்வாறு கங்கையினிடமிருந்து வெளியான சிவபிரானது வீரியம் பூமியில் வீழ்ந்து பலவித லோஹங்களாகத்தோன்றலுற்று வளர்ந்தது. கங்காதேவி அந்தக் கர்ப்பத்தை அங்ஙனம் விட்டவுடனே அவ்வெள்ளிமலையில் மூளத்திருந்த காணற்காடனைத்தும் அவ்வீரியத்தினுடைய சோதிவெள்ளத்திலாழ்ந்து ஸ்வர்ணமாய்விட்டது. புருஷர்களிற்சிறந்த ராமனே! ஸ்வர்ணம் அப்பொழுதுண்டானபடியால், அதுமுதலாக அக்நிபோல் நிகுநிகென்று ஒளிகொண்டு விளங்குகின்ற அம்மேலான ஸுவர்ணமானது ஜாதரூப

மென்னும் பேர்கொண்டதாயிற்று. (ஜாதரூபம் - உண்டானரூபத்தையுடையது) அவ்வநத்திலுள்ள புல் மரம் கொடி புதர் முதலியவையனைத்தும் ஸுவர்ணமயமாயிற்று. கங்கை ரோதஸ்ஸை விட்டபின்பு சூமான் பிறந்தனன். உடனே இந்திரன்முதலிய தேவர்கள்யாவரும் கிருத்திகாதேவிகளைப் பார்த்து 'நீங்கள் பாலைக் கொடுத்து இக்குழந்தையை வளர்ப்பீர்களாக' என்று கட்டளையிட்டனர். அத்தேவிகளும் தேவர்களுக்கெதிரில் 'இக்குழந்தை நம்மனைவர்க்கும் புத்திரனுகட்டும்' என்று தீர்மானித்து மேலான ஏற்பாடு செய்துகொண்டு அப்பொழுது பிறந்த அச்சிறுவனுக்குப் பால்கொடுக்கத் தொடங்கினர். பின்பு தேவர்கள் அனைவரும் 'இக்குமரன் கார்த்திகேயனென்று மூவுலகங்களிலும் கியாதிபெறப்போகின்றனன். இதற்குச் சந்தேகமில்லை' என்றுரைக்க, அவ்வுரைகளைக் கேட்டு அக்கிருத்திகாதேவிகளும் அங்ஙனம் அங்கீகரித்து, அக்கினியைப்போல் மிகுந்தசோதி வீசும்படி விளங்கி கர்ப்பஜலத்தில் விழுந்து கிடக்கிற அக்குமரனை எடுத்துக்கொண்டு அவ்வழுக்கெல்லாம் போகும்படி ஸ்நானஞ்செய்வித்தனர். ககுத்ஸ்தவம்சத்திற்பிறந்த மஹாவீரனே! ராமா! அப்பொழுது மஹாபாக்யசாலியாய் அக்கினியை கிகர்த்து விளங்கும் அக்கார்த்திகேயனென்னும் குமரனைக் கங்காதேவியின் உதரத்தில் நிலைபெறுமல் கீழே கழுவி விழுந்ததுபற்றி [1] 'ஸ்கந்தன்' என்று தேவதைகள் பேரிட்டழைத்தனர். அக்குழந்தையை ஸ்நானஞ் செய்வித்த பின்பு அக்கிருத்திகாதேவிகளுக்கு ஸ்தந்யஞ்

1 (ஸ்கந்தன்) 'ஸ்கந்தீர் ஆதிரோஷணயோஃ' என்கிற தாதுவின்மேல் இப்பதம் உண்டாயிருக்கின்றது. அந்தத் தாது கதியைச் சொல்லுமாகையால் இங்குக் கதியாவது கங்கையின் வயிற்றில் நிலைபெறுமல் கீழே விழுகையே யென்று கொண்டு ஸ்கந்தனென்று பேரிட்டனரென்றுணர்க.

சுரந்து அதிகமாயுண்டாக, அப்பொழுது அந்தஸ்கந்தனும் அவ்வறுவர்களுடைய ஸ்தந்யங்களையும் ஆறுமுகங்களைத் தரித்துக்கொண்டு பாகஞ்செய்தனன். அக்குழந்தை ஒரு பகலீமாத்திரம் முலைப்பால் குடித்துப் பின்பு க்ரமமாக வளர்ந்துவந்து மிக்க மிருதுவான சரீரமுடையனாயிருந்தும் சிவனது வீரியத்திற் பிறந்தவனைதுபற்றி யாவராலும் தடுக்கவொண்ணாதிருக்குந் தனது பராக்ரமத்தினால் அஸுரப்படைகளைக் கூட்டங்கூட்டமாக வென்றுவிட்டனன். பிறகு அக்நி முதலிய தேவர்களெல்லோரும் ஒன்றுகூடி ஆலோசித்து ஒப்பில்லாத ஒளியுடன் விளங்கும் அவ்வாறுமுகக்குமரனைத் தமதுபடைகளுக்கெல்லாம் அதிபதியாயிருக்கும்படி அபிஷேகஞ்செய்தனர். ராமா! நீ என்னைத் தேவலோகத்தில் நடந்த கங்காதேவியின் விருத்தாந்தமனைத்தும் ஸவிஸ்தரமாகச் சொல்லவேண்டுமென்று விஞ்விஞன். இக்குமாரனது உற்பத்தியே அக்கதையின் விஸ்தரம். இதை உனக்கு மொழிந்தனன். காகுத்தனே! ராமா! இது பாவத்தைப் போக்கவல்லது. அப்படியே மிகுந்த செல்வத்தையும் தரக்கூடியது. ராமா! இப்பூமியில் யாதொருவன் இக்கார்த்திகேயனிடத்தில் பத்தியைச் செய்கின்றனனோ, அம்மனிதன் ஆயுள்க்ரஹம் பப்பெற்றுப் பிள்ளை பேறன் முதலிய பந்துவர்க்கத்துடன் கூடிச் செல்வத்துடன் ஸுகமாக வாழ்ந்திருந்து கடைசியில் அந்த ஸ்கந்தனுடைய லோகத்தைச் சென்றுசேருவான்' என்று மொழிந்தனன். முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸகர சக்ரவர்த்தியின் விருத்தாந்தம்.

இங்ஙனம் விச்வாமித்ரமாமுனிவர் ககுத்ஸ்தவம்சத்திற் பிறந்த ஸ்ரீராமனுக்கு அக்கங்கையின் கதையெல்

லாம் இனிதாகச்சொல்லி முடித்து மீளவும் மற்றொரு வார்த்தை இங்ஙனம் மொழிந்தனர் ‘ராமா! முன்பு அயோத்யாநகரில் ஸகரனென்னும் ஓர் அரசனிருந்தனன். அவன் தர்மவிருப்பங்கொண்டு பகைவரையட்க்கும் வல்லமையமைந்து மஹாவீரனாகி விளங்கியிருந்தனன். அவன் பிள்ளையில்லாமலிருந்தது பற்றிப் பிள்ளையைப் பெறவேண்டுமென்று விருப்பங்கொண்டனன். அம்மன்னவனுக்கு இரண்டு மனைவிகளிருந்தனர். அவர்களில் ஒருத்தி விதர்ப்பதேசத்தரசன் மகளாகிக் கேசிநியென்னும் பேர் கொண்டு மிகவும் கியாதிபெற்றவள்; தர்மத்தில் நிலைகின்றவள்; ஸத்யந்தவரு திருப்பவள்; அவளே ஸகரனென்னும் அம்மஹாராஜனது பாரியைகளிருவரிலும் மூத்தவள். மற்றொருத்தி அரிஷ்டநேமியென்று சொல்லப்படுகிற காச்யப மஹர்ஷியின் புதல்வி ஸுமதியென்னும் பேர்கொண்டவள்; அழகில் இப்பூமியிலெங்கும் ஒப்பற்றிருப்பவள். அவள் ஸகரமஹாராஜனுக்கு இளையபாரியையாக வாழ்க்கைப்பட்டிருந்தனள். அவ்வரசன் அம்மடந்தையிருவரோடுங்கூடி பிருகுமஹர்ஷி ஸ்நானஞ்செய்துவருவதுபற்றிப் பிருகுப்ரஸ்ரவணமென்னும்பேர்பெற்ற ஹிமாலயத்தின் அருகிலிருக்கிற ஓர் சிறிய பர்வதத்தையடைந்து அங்குத்தவஞ்செய்துகொண்டிருந்தனன். இங்ஙனம் அம்மன்னவன் தவஞ்செய்துகொண்டிருக்கையில் நூறுவருஷங்கள் நிரம்பிச்சென்றன. பின்பு ஸத்யவான்களில் மேன்மையடைந்திருக்கின்ற பிருகுமஹர்ஷியானவர் அவர்களுடைய தவத்தினால் நன்கு ஆராதிக்கப்பட்டு ஸந்தோஷமடைந்து அம்மன்னவன் எதிரில் வந்துநித்து ஸகரமஹாராஜனைப்பார்த்து ‘பாபமற்றவனே! உனக்கு வேண்டியவரையில் அளவின்றி புத்ரர்கள் உண்டாவார்கள். ஆண்சிங்கமே! அவர்களால் உனது கீர்த்தியானது ஓப்

பின்றி உலகமெங்கும் பரவப்போகின்றது. உன்மனைவிகளில் ஒருத்தி வம்சத்துக்கு விருத்தி செய்யவல்ல ஓர் புதல்வனைப்பெறுவாள்; மற்றொருத்தி அறுபதினாயிரம புதல்வர்களைப் பெறுவாள்' என்றிங்ஙனம் வரமளித்தனன். இங்ஙனம் மொழிந்த அம்மஹாத்மாவாகிய பிருகு மஹர்ஷியை அப்பொழுது ஸகரனது மனைவிகளிருவரும் ஆராதித்து மிகுத்தஸந்தோஷத்துடன் கைகளைக்கூப்பிக் கொண்டு அம்மாமுனியை நோக்கி 'ப்ராஹ்மணோத்தமா! எவள் ஒருவனைப்பெறுவாள். பலபேர் எவளுக்குப்பிறப்பர். இதை யாம்கேட்கவிரும்புகின்றனம். நீ யாருக்கு எதைச் சொல்லுகின்றாய், அது அப்படியே தப்பாமல் நடக்கவேண்டும்' என்று வேண்டிக்கேட்டனர். அம்மொழிகளைக் கேட்டுத் தார்மிகராகிய அம்மாமுனிவர் அவ்விருவரையும் நோக்கி 'உங்களிருவருக்குள் ஒருத்தி ஒரு புதல்வனை விரும்பினால் வம்சத்தை விருத்திசெய்யவல்ல ஓர்புதல்வனையுண்டாவான். மற்றொருத்திப் பலரைவிரும்பினால் மிகுந்த பலமுடையவர்களும், சிறந்த கீர்த்தியமைந்தவர்களும், பரந்த உத்ஸாஹம்படைத்தவர்களுமாகிய புதல்வர்கள் பலருண்டாவார்கள். எவளுக்கு எத்தவரம் வேண்டும்? இது விஷயத்தில் உங்களபிப்ராயத்தை நீங்களே தெரியச்சொல்லுங்கள்' என்று இங்ஙனம் மேலான ஓர்மொழியையுரைத்தனர். ரகுகுலகுமாரனே! அம்மாமுனிவர் இங்ஙனம்மொழிய, அதைக்கேட்டுக் கேசிநியென்னும் [1]மத்தகாசினி, மற்றராஜனது முன்னிலையில் வம்சத்துக்கு மேன்மையை விளைவிக்கும் புதல்வனொருவன் வேண்டுமென்று விரும்பினள். அப்பொழுது கருடனுடன் பிறந்தவளாகிய ஸுமதியென்பவள் சிறந்தகீர்த்தியும் உயர்ந்த

1 மத்தகாசினி-உயர்ந்த பெண்மணி. 'மத்தகாஸிந்யுத்தமா வாவ்ணி நீ' என்று நிகண்டுவிற் சொல்லப்பட்டது.

உத்ஸாஹமுமுடைய அறுபதினாயிரம்புதல்வர்களை ஆசை
ப்படடனள். ரகுகுலத்துக்கு மஹாகீர்த்தியைவிளைவிக்குக்
திறமுடைய மஹாநுபாவனே! ராமா! பின்பு அவ்வரச
னும் மனைவிகளோடுகூட அம்மாமுனியை வலம்வந்து
தலையை வணக்கி நமஸ்காரஞ்செய்து தனது நகரத்துக்
குச்சென்றனன். பின்பு சிலகாள் செல்ல முதற்பத்தினி
யாகிய கேசிநியென்பவள் ஸகரனிடத்து அஸமஞ்சனெ
ன்னும் பிள்ளையைப்பெற்றனள். புருஷோத்தமனே!
ராமா! இரண்டாம் பத்தினியாகிய ஸுமதியானவள் சு
ரைக்காயைப்போல் குண்டாயிருக்கிற ஓர் கர்ப்பப்பிண்
டத்தைப் பெற்றனள். பின்பு அப்பிண்டம் வெடித்துடை
ந்து அதினின்றும் அறுபதினாயிரம்பிள்ளைகள் வெளியா
யினர். மாற்றுள்தாய்கள் அப்பிள்ளைகளை நெய்க்குடத்தி
விட்டு வளர்த்துவந்தனர். பின்பு வெகுகாலம்செல்லவே,
அப்புதல்வர்கள் அனைவரும் யௌவகப்பருவமடைந்த
னர். அப்படி வெகுகாலஞ்சென்ற பின்பு, ஸகரமஹாராஜ
னது அவ்வறுபதினாயிரம் பிள்ளைகளும் யௌவகம் பெற்
று அழகு பொருந்தி நன்கு விளங்கினர். மானவரேறே!
ராகவா! ஸகரனது மூத்தகுமாரனுகிய அவ்வஸமஞ்ச
னென்பவன் திகந்தோறும் ஊரிலுள்ளபிள்ளைகளையெல்
லாங்கொண்டி ஸரயூநதியினது வெள்ளத்தில் பொகட்டு
அப்பிள்ளைகள் நீரில் மூழ்கிப் பரிதபிப்பது கண்டு சிரித்
துக்கொண்டிருந்தனன். இவ்வாறு கொடிய செயல்களைச்
செய்துகொண்டு பெரியோர்களை வருத்தமுறச்செய்து நக
ரத்திலுள்ளோர்க்கெல்லாம் தீங்கை விளைவிப்பதுபற்றி
அப்புதல்வனை அவ்வரசன் பட்டணத்திலிருக்கவொட்
டாமல் துரத்திவிட்டனன். அவ்வஸமஞ்சனுடைய பி
ள்ளை அம்சுமானென்பவன் மிகுந்த வீரியம்பொருந்தி
உலகமனைத்தும் விரும்பும்படி நற்செய்கைகொண்டி யாவ

ர்க்கும் இன்சொல் லுரைப்பவனுமா யிருந்தனன். ஆண் சிங்கமே ! ராமா ! பின்பு வெகுகாலம் கடக்கையில் அந்த ஸகரமஹாராஜனுக்கு யாகஞ்செய்யவேண்டுமென்று நிச் சயத்துடன் ஓரெண்ணம் பிறந்தது. அப்பொழுது வே தங்களையறிந்த அம்மன்னவன் அப்படியே நிச்சயங் கொண்டு புரோஹிதர்களுடன்கூடி யாகஞ்செய்யத் தொ டங்கினன். முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸகாசக்ரவர்த்தி அச்வமேதஞ் செய்தல்.

ஸ்ரீரகுகுலகுமாரனாகிய ராமன் இவ்வாறு விச்வாமித் ரமாமுனிவர் மொழிந்த கதையைக் கேட்டு, அதற்குக் கடைசியில் ஸகரசக்ரவர்த்தி யாகஞ் செய்யுத் தொடங் கினனென்ற இம்மாத்திரத்தில் அளவற்ற ஆநந்தமடை ந்து அக்நியைப்போல் விளங்குகின்ற அம்மாமுனியை நோக்கி 'ப்ராஹ்மணேத்தமரே ! உமக்குச்சுபமுண்டாக வேண்டும். இந்த யாகவிருத்தாந்தத்தை ஸவிஸ்தரமாகக் கேட்க விரும்புகின்றனன். எங்களது வம்சத்துக்குக்கூ டஸ்தராகிய அச்சகாமஹாராஜர் எப்படி யாகஞ்செய்தன ர்? இதைச்சொல்லவேண்டும்'என்றனன். அதைக்கேட்டு விச்வாமித்ரமாமுனியும் தன் மனத்தில்தானே 'நான் எ தைச்சொல்ல நினைத்தேனோ, அதையே கேட்கின்றனன். எல்லாவற்றையும் அறிந்த தான்அதை அறிந்துவைத்தும் அறியாதவன்போல் கேட்கின்றனன். லோகத்தார்களுக் குப்போல் ராமனுக்கும் தனது வம்சத்திற்பிறந்த பூர்விக ரிடத்தில் எவ்வளவு கௌரவபுத்தி ! அதைக் கேட்ப தில் எவ்வளவு கௌதூஹலம் !'என்று நினைத்துச்சிரிப்ப வன்போல மிகவும் முகமலர்த்திகொண்டு ராமனை நோக் கி, இங்ஙனம் உரைத்தனன். 'ராமா ! மஹாத்மாவாகிய

ஸகரசக்ரவர்த்தியினது விருத்தாந்தத்தை விஸ்தரித்துச்சொல்லுகிறேன்; கேட்பாயாக. சிவபிரானுக்கு மாமனாகிய ஹிமாலயபர்வதமும் பர்வதராஜனாகிய விந்திய பர்வதமும் ஒன்றுக்கொன்றுதெருங்கியிருப்பதுபற்றியும், அவ்விரண்டுக்குமிடையில் வேறொரு பர்வதம் மறைவாயிராததுபற்றியும், மிகவு முயர்ந்திருப்பதுபற்றியும் ஒன்றுக்கொன்று பார்த்துக்கொண்டிருப்பதுபோல் விளங்குகின்றன. அவ்விரண்டுபர்வதங்களுக்கும் இடையிலிருக்குந்தேசமானது யாகஞ்செய்வதற்குப்[1] புண்யபூமியானதுபற்றி மிகவும் சிறந்தது. ஆகையால் அம்மத்யதேசத்திலேயே ஸகரனது யாகம் நடந்தது. குழந்தாய்! காகுத்தனே! ராமா! மஹாரதனென்று பேர்பெற்று விளங்கிய அம்சுமானனவன் ஸகரனது இஷ்டத்தில் நிலைகின்று அப்பொழுது வலியதோர்வில்லைக் கையில் தரித்துக்கொண்டு அவனது யாகத்தில் பூர்வதக்ஷிணஞ்செய்யத்தொடங்கிய குதிரையைக் காத்துக்கொண்டு பின்சென்றனன். இங்ஙனம் ஸகரசக்ரவர்த்தி அந்த யாகத்தை நடத்திக்கொண்டிருக்கும்பொழுது இந்திரன் ராக்ஷஸர்களுக்குரிய மாயையைக் கைக்கொண்டு யாவருமறியாது வேறொரு சரீரம்பூண்டு உக்த்யம் நடத்தவேண்டிய திநத்தினன்று அவனது யாகக்குதிரையை அபஹரித்துக்கொண்டு போய்விட்டனன். இங்ஙனம் அம்மஹாத்மாவாகிய ஸகரசக்ரவர்த்தியினது யாகக்குதிரை அபஹரிக்கப்பட்டிருக்கும்பொழுது, புரோஹிதர்கள் அனைவரும் யஜமானனாகிய அம்மஹாராஜனைப் பார்த்து 'ககுத்ஸ்த்த வம்சத்திற்பிறந்த ஸகரமன்னவனே! உக்த்யதிநத்தினன்று உனது யாகததைக்கெடுக்கும்பொருட்டு யாகக்குதிரையைவ

---

1 'ஆர்யாவர்த்தஃ புண்யஶ்சாயம் தேஶோ விக்ந்யஹிமாலயயோஃ' என்று சொல்லப்பட்டது.

னே வேகமாய் அபஹரித்துக்கொண்டுபோய்விட்டனன். இக்குதிரையைக்கொண்டுபோகுமவனைக் கொன்று குதிரையைத் திருப்பிக் கொண்டுவரச்செய்வாயாக. யஜ்ஞத்துக்கு சேர்ந்த இவ்விக்நமானது நம் யாவர்க்கும் அமங்களத்தை விளைவிக்குமதாயிருக்கின்றது. ஆகையால் ஸகரமஹாராஜனே ! இத்யாகம் எப்படி கெடுதி நீங்கிக் நிரமப்படி நிறைவேறுமோ, அப்படிசெய்வாயாக' என்றனர். அவ்வாசனும் அங்ஙனம் புரோஹிதர்கள்மொழிந்த மொழியைக் கேட்டு அந்த ஸபையில் தனது புதல்வர்கள் அறுபதினாயிரம்பேரையும் பார்த்து 'புருஷர்களில் சிறந்தபுதல்வர்களே! இம்மஹாயஜ்ஞமானது மந்த்ரங்களையெல்லாம் அறிந்து மிகவும் பரிசுத்தர்களும் மிகுந்தமகிமையெல்லாமமைந்தவர்களுமாகிய இம்மஹாநுபாவர்களால் நடத்தப்படுகின்றதுபற்றி ராக்ஷஸர் வந்து குதிரையை அபஹரித்துக் கொண்டு போகும் வழி ஒன்றுந் தோற்றவில்லை. ஆகையால் நீங்கள் போய்த் தேடுங்கள். குழந்தைகளே! உங்களுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டும். கடல்சூழ்ந்த இப்பூமியெல்லாந்திரிந்து தேடிப்பாருங்கள். பூமியோ மிகவும் ப்ரந்து கிடக்கின்றது. ஆகையால் நீங்கள் ஒவ்வொருவனும் ஒவ்வொரு யோஜனாதூரம் விழுக்காடாக இப்பூமியெங்குந்திரிந்து தேடுங்கள். பிள்ளைகளே ! எனது கட்டளைத்தவறுதபடி குதிரையைக் கொண்டுபோனவனைத் தேடிக்கொண்டு சென்று அவன் பூமியிலெங்கும் அகப்படாது போவானுயின், பின் திரும்பாமலே சென்று அக்குதிரை அகப்படும்வரையில் பூமியைக் கொத்திப் பாருங்கள். நான் யாகதீக்ஷையில் முயன்றிருக்கிறேனுகையால் இங்கிருந்து வெளிக்கிளம்புவது யுக்தமன்று. ஆனதுபற்றி நான் பேரன்களோடும் ரித்விஜர்களோடுங்கூடி மீளவும் குதிரையைப் பார்க்கும்வரையில் தீக்ஷைகொ

ண்டு இவ்விடத்திலேயே இருக்கவேண்டியவன். உங்களுக்கு நன்மையுண்டாகவேண்டும்' என்றனன். இங்ஙனம் உரைக்கப்பட்ட மஹாபலங்கொண்ட ராஜபுத்ரர்கள் அனைவரும் மிகுந்த மனமகிழ்ச்சி பெற்றுத் தகப்பனது கட்டளைக்குட்பட்டுப் பூமியெங்கும் தேடத்தொடங்கினர். ஆண்சிங்கமே! ராமா! இங்ஙனந்தேடச்சென்ற மன்னவனது புதல்வர்களில் ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு யோஜனைதூரம் அகலமும் நீளமுமுள்ள பூமிவிழுக் காட்டிற் பங்கிட்டுக்கொண்டு, கீழே படும்பொழுது வஜ்ராயுதத்தை நிகர்த்திருக்கும் தமது நகங்களால் பூமியை யெங்கும் கொத்தியெறிந்தனர். ரகுநந்தன! இங்ஙனம் நகங்களாலும் வஜ்ராயுதம்போன்ற சூலாயுதங்களாலும் மிகவும்பயங்கரமான கலப்பைகளாலும் பூமியானது பிளக்கப்பட்டு மிகுந்தசப்தஞ்செய்தது. அப்பொழுது ஸர்ப்பங்களும் பாதாளவாஸிகளான அஸுரர்களும் ராக்ஷஸர்களும் மற்றுமுள்ள ஜந்துக்களும் ஹிம்ஸிக்கப்பட்டுக் கூச்சலிடவே ஸஹிக்கமுடியாத ஓர் கோஷம் கிளம்பிற்று. ராகவனே! இங்ஙனம் அவ்வீரர்கள் அறுபதினாயிரம்யோஜனைதூரம் பூமியைப் பாதாளம்வெளித்தோற்றும்படி தோண்டிவிட்டனர். ஆண்சிங்கமே! ராமா! இவ்வாறுஅம்மன்னவனது புதல்வர்கள்யாவரும் பர்வதங்கள்நெருங்கிய ஜம்பூத்வீபத்தை முழுதுந்தோண்டி கான்குபக்கங்களிலும் திரிந்தனர். பின்பு தேவர்களும் அஸுரர்களும் உரகர்களும் ஆகிய அனைவரும் மிகவும் பயந்து மனந்தத்தளித்து ப்ரஹ்மாவினிடஞ்சென்று பல விதங்களில் துதிசெய்து மனத்தில் பயம்மீறி முகத்தில்வருத்தந்தோற்ற வணங்கிநின்று 'மஹாநுபாவரே! ஸகரசக்ரவர்த்தியினது புதல்வர்கள் பூமியனைத்துங்கொத்திக் குரம் பறிக்கின்றனர். பாதாளவாஸிகளான மஹாத்மாக்கள்

பலரும் ஹிம்ஸிக்கப்படுகின்றனர். 'இவனே எமது யாகத் தைக்கெடுத்தனன். இவனே எமது குதிரையைக் கொண்டுபோயினன்' என்று சொல்லிக்கொண்டு ஸமஸ்தப்ராணிகளையுங் கொன்றுவிடுகின்றனர்' என்று மொழிந்தனர். முப்பத்தொன்பதாவதுஸர்க்கம் முற்றிற்று.

ஸகாகுமாரர்கள் கபிலமுனியால் நீறுகுதல்.

மஹிமையெல்லாமமைந்த ப்ரஹ்மதேவனுனவன் இங்ஙனம் தேவதைகளின் மொழியைக் கேட்டு, ஜகங்களையெல்லாம் [1]வதித்துக்கொண்டுவருகிற ஸகரபுத்ரர்களின் பலத்தைக்கண்டு மோகித்து அவ்வானவரனைவரும் மிகவும் பயமடைந்திருப்பது கண்டு, அவர்களை நோக்கி 'இத்தாரணிமுழுதும் மஹாத்மாவாய் [2]ஸமஸ்தபதார்த்தங்களிலும் உள்ளும்புறமும் பரந்துவஸித்திருந்தும் தான் அவற்றுக்காதாரமாயிருந்தும் அவைகளில் பற்றற்று விளங்கின்றமையால் வாஸுதேவனென்னும் பேர்கொண்டு மிகுந்தஅறிவுடைய ஸ்ரீமஹாவிஷ்ணுதேவனுக்கு அதீநமாயிருக்கின்றது. அம்மஹாநுபாவன் கபிலாவதாரஞ்செய்து எப்பொழுதும் இப்பூமிசக்ரத்தைத் தரித்துக்கொண்டிருக்கின்றனன். ஆகையால் ஸகரமஹாராஜனுடைய குமாரர்கள் பூமியைக்கொத்திக்கொண்டு உள்ளே புகு

---

1. (வதித்துக்கொண்டு) வதஞ் செய்துகொண்டு, அதாவது-ஹிம்ஸை செய்துகொண்டென்க.

2 'ஸர்வத்ராஸௌ ஸமஸ்தஞ்ச வஸத்யத்ரேதிவை யதஃ, ததஸ் ஸவாஸுதேவேதி வித்வத்பிஃ பரிபட்யதே' என்று வாஸுதேவசப்தத்துக்கு நிருக்தி. நிருக்தியாவது- ஒரு பதத்தின் பொருளை விடுத்துச்சொல்லுதல். அதில் (ஆதாரமாயிருந்தும்) என்றிதுவரையில் வாஸுசப்தார்த்தம். அதற்குமேல் தேவசப்தார்த்தம் (வஸதி ஸர்வத்ரே

வார்களாயின் அப்பூமிக்கு [1] நேரேயுடையவரும் பர்த்தாவுமாகிய அக்கபில [2] மஹாதேவனுடைய கோபாக்நியால் கொளுத்தப்பட்டு நீறுகப்போகின்றனர். மேலும் இப்பூமியானது கல்பந்தோறும் இங்ஙனமே தோண்டப்பட்டு வருகின்றது. 'இது அநாதியாய் நிர்ணயிக்கப்பட்ட விஷயமே. இவ்வளவேயன்றி இச்சகரபுத்ரர்கள் வெகுகாலம் பிழைத்திராமல் சீக்கிரத்திலே மாளப்போகின்றனரென்பதும் முன்னமே நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது' என்று மொழிந்தனன். பகைவரைத் தபிக்கச்செய்யும் பராக்ரமசாலியே! ராமா! இங்ஙனம் ப்ரஹ்மதேவனது வார்த்தையைக்கேட்டு முப்பத்துமூன்றுகோடி தேவர்களும் மற்றுமுள்ள கந்தருவர் முதலியவர்களும் மிகுந்த ஸந்தோஷ

திவாஸ-꞉) (வஸதி ஸமஸ்தமஸ்மிந்நிதி வாஸ-꞉) எல்லாவற்றிலுமிவன் நிரம்பி யிருப்பதனாலும்எல்லாமிவனிடத்தில்இருப்பதனாலும் (வாஸ-꞉)என்றுசொல்லப்படுகின்றனன். முதலர்த்தத்தில் (கர்தரி உண்ப்ரத்யய ஔணாதிக꞉) இரண்டாமர்த்தத்தில் (அயிகாணே ஸுவப்பாத்யய꞉) (ஜீவ்யதீதி ஜேவ꞉) (கர்தரிபசாத்யச்) (ஜிவு க்ரீ ளாவிஜி-மிஷாம் யவஹாரஸ்துதிமோஹமதஸ்வப்நகாந்திமதிஷ-꞉) ஒளிபெற்றிருப்பவனாகையால் தேவனென்று சொல்லப்படுகின்றனன். (வாஸ-ஸீ சாஸௌஜேவஸீசேதி வாஸ-ஜேவஇதி விசீரஹ꞉) இவை யெல்லாம் மனத்திற்கருதி (ஸமஸ்தபதார்த்தங்களிலும் உள்ளும் புறமும் பரந்துவஸித்திருந்தும், தானவற்றுக்காதாரமாயிருந்தும் இவைகளில் பற்றற்று விளங்கிநின்றமையால் வாஸ-தேவனென்னும் பேர்கொண்டு) என்று கூறப்பட்டது. பற்றற்று-ஸம்பந்தமின்றி.

1 (நேரே உடையவனும்) 'தமீஸ்வராணாம் பரமம் மஹேஸ்வரம்' இதுமுதலாகிய பலவேதப்ரமாணங்களால் ஸ்ரீமஹாவிஷ்ணுவே ஸர்வத்துக்கும் மேலான உடையவனுகையால் இப்பூமிக்கு அவன்தான் நேரே உடையவனுதுபற்றி இங்ஙனஞ் சொல்லப்படுகின்றது.

2 ஆகையால் இதைப்பற்றி வருத்தப்பட வேண்டாமென்று கருத்து.

மடைந்து மீளவும் தாம் வந்தவழியே போய்ச்சேர்ந்தனர். அப்பொழுது அளவற்ற தைரியம்பொருந்திய அந்தஸகர புத்ரர்களனைவரும் முன்போலவே பூமியைப் பிளந்து கொண்டுபோகையில், அவர்களுக்கே கேடிடப்போகிற கெடுதியைத் தெரிவிக்கும் பொருட்டு ஓரிடியிடிப்பதுபோலப் பெரியசப்தமொன்றுண்டாயிற்று. பின்பு அந்த ஸகர குமாரர்கள் பூமியைப் பிளந்து அங்கு முழுதுஞ்சுற்றித்திரிந்துங் குதிரையைக் காணுமல் அனைவருங் கூடிக்கொண்டு தகப்பனிடஞ்சென்று 'நாங்கள் பூமியெல்லாஞ்சுற்றித்திரிந்தனம். மிகுந்தபலமுள்ள தேவர்களையும் தானவர்களையும் ராக்ஷஸர்களையும் பிசாசர்களையும் உரகர்களையும் கிந்நரர்களையும் ஆகப் பலரையும் ஹிம்ஸித்தனம். இப்படி செய்தும் அக்குதிரையாயினும்அதைத் திருடிக்கொண்டு போனவனையினும் எங்களுக்குப் புலப்படவில்லை. இன்னமும் என்ன செய்யவேண்டும்? உமக்குச் சுபமுண்டாகவேணும். இவ்விஷயத்தில் உபாயத்தை ஆலோசித்துச் சொல்லவேண்டும்' என்றனர். அரசர்களிற் சிறந்த ரகுநந்தன! ராமா! ஸகரசக்ரவர்த்தியானவன் இங்ஙனந் தனது குமாரர்கள் மொழிந்தமொழியைக் கேட்டுக் குதிரை அகப்படாமைக்கு மிகவுங் கோபித்துக்கொண்டு புத்ரர்களைப்பார்த்து 'உங்களுக்கு கன்மையுண்டாகவேண்டும். மீளவும் போய் பூமியைப் பிளந்து வெட்டுங்கள். குதிரையைக்கொண்டு போனவனைக் கண்டுபிடித்துக் காரியம்முடித்துக் கொண்டு நீங்கள் திரும்பிவரவேண்டும்' என்று கட்டளையிட்டனன். பின்பு கம்பீரமானமனமுடையதமது பிதாவாகிய ஸகரமஹாராஜனது கட்டளைப்படிக்கு அவ்வறுபத்தாயிரம்பேர்களும் பாதாளலோகத்தை நோக்கி வேகமாகச்சென்று மீளவும் பூமியைத் தோண்டிக் கொண்டிருக்கும்பொழுது அங்குப் பர்வதம் போன்றவடி-

வங்கொண்டு பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிற விரூபாக்ஷமென்னும் திக்கஜத்தைக் கண்டனர். ரகுகுலதிலகனே! ராமா! யானைகளிற்சிறந்த அவ்விரூபாக்ஷமென்னும் திக்கஜமானது பர்வதங்களுங் காடுகளும் நிரம்பின இப்பூமண்டலம் முழுதும் தனது தலையினல் தரித்துக்கொண்டிருந்தது. அம்மஹாகஜமானது இம்மிகுந்தபூபாரத்தை ஓயாமல் தரித்துக்கொண்டிருப்பதனுலுண்டானச்ரமத்தைச் சிறிதுகாலம் ஆற்றும்பொருட்டு எந்தக்ஷணத்தில் தலையை அசைக்கின்றதோ, அப்பொழுது பூகம்பம் உண்டாகும். அவர்கள் அத்திசையைப்பரிபாலித்து வருகிற அம்மஹாகஜத்தை ப்ரதக்ஷிணஞ்செய்து மேன்மைப்படுத்தி, பாதாளலோகத்தைப்பிளந்துகொண்டே சென்றனர். அங்ஙனங்கிழக்குத்திசையைப் பிளந்தபின்பு மறுபடியுந்தென்திசையைப் பிளக்கச்சென்றனர். அத்திசையிலும் பெரிய மலையோடொத்து மிகுந்த மகிமைபெற்று விளங்கிய மஹாபத்மமென்னும் பேர்கொண்ட திக்கஜத்தைக்கண்டு அது பூமண்டலத்தையெல்லாந் தரித்துக்கொண்டிருப்பதற்கு மிகவும் ஆச்சரியமடைந்தனர். பின்பு மஹாத்மாவாகிய ஸகரனது புத்ரர்களர்கிய அவ்வறுபதினாயிரம்பேர்களும் அக்கஜத்தை ப்ரதக்ஷிணஞ்செய்துவிட்டு மேற்திசையைப் பிளந்தனர். அம்மேற்றிசையிலும் மஹாபலிஷ்டர்களாகிய அந்த ஸகரபுத்ரர்கள் பெரியமலையோடொத்து நின்ற ஸௌமனஸமென்னும் ஓர் பெரிய திக்கஜத்தைக் கண்டனர். அவர்கள் அதை வலஞ்செய்து க்ஷேமம் விசாரித்து விடைபெற்றுக்கொண்டு, பூமியைத்தோண்டிக்கொண்டே ஹிமவத்பர்வதத்தினுல் அலங்காரம் பெற்று விளங்குகின்றவடதிசைக்குச் செல்லத்தொடங்கினர். ரகுகுலத்திற் பிறந்த மன்னவர்களிற்சிறந்த ராமனே! அந்த ஸகரகுமாரர்கள் அவ்

வடதிசையிலும் பனிபோல் வெளுத்துப், பருத்து அழகான தேஹத்திலுல் இத்தரணிமுழுதுங் தரித்துக்கொண்டிருக்கிற பத்ரமென்னும்பேர்கொண்ட திக்கஜத்தைப் பார்த்து, அவ்வறுபதினாயிரம்பேர்களும் அத்திசை வேழத்தைக் கைகொண்டு தட்டிக்கொடுத்து ப்ரதக்ஷிணஞ் செய்து மேலும் பூமியைப் பிளந்துகொண்டேசென்றனர். பின்பு ஸகரபுத்ரர்களெல்லோரும்குதிரை அகப்படத்தக்க வடகிழக்குத் திக்கை நோக்கிச்சென்று சினம்மீறி பூமியைப் பயங்கரமான வேகத்துடன் பிளந்தெறிந்துகொண்டுபோயினர். பெரிய சரீரம்பெற்று மிக்க வலிவுகொண்டியாவரையும் பயமுறுத்தும்படி ஓடித்திரிகிற ஸகரகுமாரர்கள் அனைவரும் அங்கு அநாதியாகக் கபிலாவதாரஞ் செய்து விளங்கிநிற்கிற வாஸுதேவனையும், அத்தேவனருகில் புற்களே மேய்ந்துகொண்டிருக்கிற தமது குதிரையையும் கண்டனர். அங்ஙனங்கண்டு அனைவரும் மிகுந்த ஸந்தோஷமடைந்து அவ்வாஸுதேவனையே குதிரையைத் திருடிக்கொண்டுபோனவனாக நினைத்து, கோபத்தினால் கண்கள் சிவந்து, மண்வெட்டிகளையும் கலப்பைகளையும் மற்றும்பலவித விருக்ஷங்களையுங் கற்களையும் எடுத்துக்கொண்டு அவரைஅடிக்க எதிர்த்தோடிவந்து 'நில் நில்' என்று அதட்டி 'அடே எமது யாகக்குதிரையை நீயன்றே அபஹரித்துக்கொண்டு போனவன். அடா அறிவு கெட்டவனே! இதோ ஸகரகுமாரர்களாகிய காங்கள் வந்தோமென்று தெரிந்துகொள்வாயாக' என்று உரைத்தனர். காகுத்தனே! ரகுநந்தனே! ராமா! இங்ஙனம் அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு அக்கபில தேவனும் அளவற்ற கோபங்கொண்டு அப்பொழுது ஓர் ஹுங்காரஞ்செய்ய, அளவிடவொண்ணாத மஹிமையெல்லாமமைந்து ஆழ்ந்தமனமுடைய அம்மஹாநுபாவனால்

230 ஸ்கரபுத்ரர்கள் கபிலமஹர்ஷியினருகில் யாகக் குதிரையைக் காணுதல்.

அந்த ஸகரகுமாரர்கள் அனைவரும் பஸ்மராசியாகக் குவிந்தனர். நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அம்சுமந்தன் ஸகரனது யாகாச்வத்தைக் கொண்டு வந்தது.

ரகுகுலகுமாரனே! ராமா! பின்பு ஸகரமஹாராஜன் தனது குமாரர்கள் குதிரையைத் தேடப்போய் வெகுகாலமாயும் திரும்பிவராதது கண்டறிந்து தனது ஒளியால் ப்ரகாசிக்கின்ற தன்பேரனைப்பார்த்து 'குழந்தாய்! நீ வல்லமையெல்லாம் அமைந்திருக்கின்றனை. மேலும் சஸ்த்ரவித்யைகளிலும் அஸ்த்ரவித்யைகளிலும் மற்றுமுள்ள பலகல்விகளிலும் தேர்ச்சியடைந்திருக்கின்றனை. பராக்ரமத்தில் நீ முன்புள்ள அரசர்களோடொத்து விளங்குகின்றனை. ஆனதுபற்றி நீ உனது சிறியதந்தைகள் போனவழியையும் குதிரையைக் கொண்டுபோனவனையும் தேடிப்பிடிப்பாயாக. பூமிக்குள்ளிருக்கும் ஜந்துக்கள் மிக்கவலிமைகொண்டு மிகவும் பெருமைபெற்று விளங்கிநிற்குமவை. அப்படிப்பட்ட ஜந்துக்களைக் கொல்லுவதற்காக வாளையும் வில்லையுந் தரித்துக்கொண்டு புறப்பட்டுச்சென்று அங்குள்ளமகிமை பொருந்தி வணங்கத்தக்க மஹாநுபாவர்களை வணங்கி மேன்மைப்படுத்தி இடையூறு செய்கின்றவர்களை வதித்துப் போனகாரியத்தை நிறைவேற்றிக்கொண்டு திரும்பிவந்து எனது யாகத்தைக் கடைத்தேறவைப்பாயாக' என்றனன். இங்ஙனம் மஹாத்மாவாகிய ஸகரசக்ரவர்த்தியால் நன்கு சொல்லப்பட்ட அம்சுமந்தனும் அப்படியே செய்ய முயன்று தநுஸ்ஸையும் கத்தியையும் தரித்துக்கொண்டு வெகுவேகமாகப் புறப்பட்டனன். அங்ஙனம் ஸகரனது கட்டளைப்படி புறப்

பட்ட அம்சுமந்தன் மஹதீர்களாகிய தனது சிறியதந்தைகளால் பூமிக்குள் தோண்டப்பட்ட வழியாகச்சென்று அவ்விடத்தில் திதிபுத்ரர்களாகிய அஸுரர்களாலும் ராக்ஷஸர்களாலும் பிசாசர்களாலும் பதகர்களாலும் உரகர்களாலும் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஒளியுடன் விளங்குகின்ற ஓர் திக்கஜத்தைக்கண்டனன். அங்ஙனங் கண்டு அதை ப்ரதக்ஷிணஞ்செய்து க்ஷேமம் விசாரித்துத் தனது தந்தைகள் போனவிதத்தையும், குதிரையைத் திருடிக்கொண்டு போனவன் எவனென்பதையும் விசாரித்தனன். அத்திசைவேழமும் அவ்வம்சுமந்தன் கேட்ட வார்த்தைகளைச் செவியுற்று 'ஓ அஸமஞ்சகுமாரனே! நீ குதிரையைக்குறித்துவந்த காரியம் நிறைவேறி சீக்கிரத்தில் திரும்பிவருவாய்'என்று பதிலுத்தரம் மொழிய, அதைக் கேட்டு அவ்வம்சுமந்தன் திக்கஜங்கள் எல்லாவற்றையும் க்ரமமாகவே நியாயப்படி வணக்கத்துடன் பேசுவதில் தனக்குள்ள வல்லமையெல்லாம் விளங்கும்படி கேட்க, அத்திசைவேழங்களும் பிறர் மொழிந்தவார்த்தைகளின் அபிப்ராயங்களையறிவது மாத்ரமேயன்றித் தாங்களும் அழகாய் வாயாரப்பேச வல்லமையுள்ளவைகளாகையால் அங்ஙனம் விளைய அவ்வம்சுமந்தனைப் பூஜித்து 'குதிரையுடன் கூடவே நீ திரும்பிச் செல்லப்போகின்றனை' என்று உத்ஸாஹப்படுத்தியுரைக்க, அதைக் கேட்டு அவனும் மிகவும் வேகத்துடன் நடந்துசென்று தனது சிறிய தந்தைகளாகிய ஸகரகுமாரர்கள் தூங்கிக்கிடந்திருக்கிற இடத்துக்குப்போய்ச்சேர்ந்தனன். முன்பே அவர்கள் அகப்படாமைக்கு மிகவும் வருத்தமுற்றிருந்த அவ்வஸமஞ்சகுமாரனாகிய அம்சுமந்தன் அப்பொழுது அவர்களனைவரும் செத்துச்சாம்பலாய்க்கிடப்பதுகண்டு மனவருத்தம் மேலெழ மிகவும் துக்கத்துடன் அழுதுக்கொண்டே

அங்கு அருகில் மேய்ந்துகொண்டிருக்கிற யாகக்குதிரை யையும் கண்டு தான் ஆண்சிங்கமாய் மஹதீரணுயிருந்தும் அப்பொழுதுண்டான துக்கத்தையடக்க முடியாமல் மிகவும் சோகித்தனன். பின்பு அம்மஹாதேஜஸ்வியாகிய அம்சுமந்தனும் தனது சிறியதந்தைகளாகிய ராஜகுமாரர்களுக்குத் தர்ப்பணஞ்செய்ய விரும்பி ஜலம்வேண்டித் தேடிப்பார்க்கையில் ஜலமுள்ள இடம் ஒன்றும் அகப்படவில்லை. ராமா! இங்ஙனம் வெகுதூரம் சென்றறியவல்லவைகளாகிய தனது கண்களைவிட்டு உற்றுப்பார்த்தும் ஜலம் அகப்படும்படியான இடமொன்று மகப்படாமலிருக்கப் பின்பு வாயுவேகடொத்தவேகம் பொருந்திப் பக்ஷிக்களில் தலைவனும் தனது சிறிய தந்தைகளுக்கு மாமனுமாகிய கருடனைக் கண்டனன். மஹாபலமுள்ள அவ்வைநதேயனும் அம்சுமந்தனைப் பார்த்து 'புருஷஸிம்ஹமே! உனது சிறிய தந்தைகளுக்குநேரிட்ட இவ்வதமானது உலகங்களுக்கெல்லாம் நன்மையை விளைவிக்கவற்றாயிருக்கின்றது. ஆகையால் நீ இதைப்பற்றிச் சோகிக்கவேண்டிய நிமித்தமில்லை. அளவிடவொண்ணாத மகிமையுடைய கபிலமாமுனிவரால் இம்மஹாபலிஷ்டர்கள் கொளுத்தப்பட்டனர். அக்கபிலர் * ப்ராஹ்மணராகையால் அவரால்

* 'சண்டாலாத்ஸகாசாத் ஸர்பாணாம்வைநதேயராத்ஸகாசாத்,
ப்ராஹ்மணாத்பிரஜ்வலிதாத்பசுமாநுஷயோச மரணம் பாபகர்மணாம்.
உதகம் பிண்டஞ்ச ஏதேஷாம் நோபதிஷ்஠தி தத்ஸர்வ மந்தரிக்ஷே விநஷ்யதி'

என்று பாபிஷ்டர்களுக்குச் சண்டாலனிடத்திலிருந்தும், ஜலத்திலிருந்தும், ஸர்ப்பத்தினிடத்திலிருந்தும், இடியிலிருந்தும், ப்ராஹ்மணனிடத்திலிருந்தும், கோரைப்பற்களையுடைய ஜந்துக்களிடத்தினின்றும், பசுக்களிடத்தினின்றும், மரணமுண்டாகின்றது. கீழ்ச்சொன்ன விதத்தில் மரணமடைந்தவர்களுக்குச் செய்யும் ஜலதர்ப்பணம் முதலிய பரலோகவ்யாபாரங்கள் அவர்களுக்குப் போய்ச் சேருகின்றனவையல்ல. இடையில் நசித்துப்போகின்றன. ஆகையால் அவை வீண் என்று சொல்லப்பட்டது. இதைத்தருதியே இங்கு (ப்ராஹ்மணராகையால்) என்றது.

கொளுத்தப்பட்ட இவர்களுக்கு லோகவழக்கத்தின்படி ஜலங்கொண்டு தர்ப்பணஞ்செய்கை வீணுகையால் அங்ஙனஞ்செய்ய நீ முயலவேண்டாம். எல்லாவற்றையுமறிந்த உனக்கிது தெரியாதவிஷயமன்று. புருஷர்களிற் சிறந்த வீரனே! ஹிமாலயத்தினுடைய மூத்தபுதல்வியாகிய கங்கையென்னும் ஓர் நதியுண்டு. மஹாபாஹுவே! உனது தந்தைகளாகிய இவர்களுக்கு அந்நதியிலிருந்து ஜலங்கொண்டு தர்ப்பணஞ்செய்வாயாக. அதின் ஜலத்தைக் கொண்டு தர்ப்பணஞ்செய்கை மாத்ரமேயன்றி, அந்நதி உலகங்களனைத்தையெல்லாம் பாவநமாக்கவல்லதாகையால் அதின் ஜலத்தைக்கொண்டு இத்தப் பஸ்மராசியை நனைக்கவேண்டும். இப்படி மிகுந்த மகிமைகொண்டு உலகமெல்லாம் புகழும்படி விளங்கிய அக்கங்காநதியைக்கொண்டு இக்ஷ்வாகுவம்சத்தை நனையச்செய்தாயாயின் இதுவே அந்த ஸகரகுமாரர்கள் அறுபதினாயிரம்பேர்களையும் ஸ்வர்க்கலோகம் அடையச் செய்யும். புருஷர்களிற் சிறந்த அம்சுமந்தனே! நீ மிகுந்தபாக்யமுடையனுகையால் குதிரையைப்பெற்றனை. அதைக்கொண்டு ஸகரனிடஞ்செல்வாயாக. நீ மஹாவீரனாயிருப்பதுபற்றி நீயே உன்பாட்டனது யாகத்தை நிறைவேற்ற வல்லவன்' என்று மொழிந்தனன். இங்ஙனம் மிகுந்தபராக்ரமமுடைய [1] அக்கருத்மந்தன் மொழிந்தமொழியைக் கேட்டுக் குதிரையைக் கைக்கொண்டு தனதுகீர்த்தி நான்குபக்கத்திலும் விளங்கும்படி திரும்பிவந்து யாகத்தில் தீக்ஷைபெற்றிருக்கிற ஸகரமஹாராஜனைக் கிட்டிக் கருடன் சொல்லியபடி தனது சிறியதந்தைகளின் விருத்தாந்தத்தையெல்லாந்தெரியச்சொல்லினன். ஸகரசக்ரவர்த்தியும் அம்சுமந்தன் மொழிந்த பயங்கரமாயுள்ள அவ்வார்த்தையைக்கேட்டுப் பின்பு க்ரமமாக சாஸ்த்ரங்களிற்சொல்

1 (அக்கருத்மந்தன்) அந்தக் கருடன்.

லியபடி யாகத்தை நிறைவேற்றித் தானங்களைச் செய்து மிகவும் காந்திவெள்ளம்பெற்று விளங்கித் தனதுபட்டணத்தைச் சேர்ந்தனன். அவ்வரசனுக்குக் கங்காநதியைக் கொண்டுவர யாதொரு உபாயமும் தோன்றாமல் போய்விட்டது. இப்படி ஸகரமஹாராஜன் வெகுகாலம்வரையில் ஆலோசித்தும் அவ்விஷயத்தில் யாதொரு உபாயமும் தோன்றாமல் முப்பதினாயிரம் வருஷங்கள் ராஜ்யபரிபாலஞ் செய்து ஸ்வர்க்கலோகஞ்சென்றனன். கரப்பத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

பகீரதன் கங்கைக்காகத் தவஞ்செய்தல்.

ராமா! ஸகரமஹாராஜன் இங்ஙனம் காலதர்மத்தையடைந்தபின்பு மந்திரிஜநங்கள் பரமதார்மிகனாகிய அம்சுமந்தனை ராஜாவாக விரும்பினர். ரகுநந்தனாகிய அவ்வம்சுமந்தனும் மஹாராஜனாகி மிகப் பெருமையுடன் விளங்கினன். அவ்வம்சுமந்தனுக்குத் திலீபனென்று எங்கும் கியாதிபெற்றச் சிறந்த ஓர் குமாரன் பிறந்தனன். அவனும் மிகப் பெருமை பொருந்தி விளங்கினன். மிகவும் கீர்த்தி பொருந்திய அவ்வம்சுமந்தனென்பவன் தீலீபனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டுக் கங்காநதியைக்கொண்டுவந்து சாம்பலாய்க்கிடக்கும் தனது நூறாயிரம் பன்மார்களை நற்கதியடையச்செய்ய உத்தேசங்கொண்டு பரிசுத்தமாகிய ஹிமவத்பர்வதத்தின் சிகரத்திலுள்ள ஓர் தபோவநத்திற்குச் சென்று தவமே தனமென்றெண்ணங்கொண்டு முப்பத்திரண்டாயிரமாண்டுகள் மிகவும் தாருணமாகத் தவம் புரிந்திருந்தும் கங்கையைப்பெறாமலே ஸ்வர்க்கத்தை யடைந்தனன். பின்பு மஹாதேஜஸ்வியாகிய திலீபமன்னவனும் தனது பாட்டன்மார்கள் அபமி

ருத்யுவாக மாண்டுபோனதைக் கேட்டுத் தனது தகப்ப னுகிய அம்சுமந்தன் அப்படியாவரும்செய்ய முடியாத கடி க்தவஞ்செய்தும் அவர்களுக்கு நற்கதியுண்டாகாமைக்கு மிக்கமனவருத்தங்கொண்டு மதிமயங்கி யாதொரு உபா யத்தையும் நிச்சயிக்க நேராமல் 'கங்கையைக்கொண்டு வ ருவதெப்படி? அவர்களுக்கு அந்தநீரலத்தைக் கொண்டு தர்ப்பணஞ் செய்வதெப்படி? இவர்களை இந்தத்துர்க்கதி யினின்றும் உத்தரிக்கச்செய்வதெப்படி?' என்று ஓயா மல் மனக்கவலையுற்றிருந்தனன். ஆத்மவித்தாகிய அத்தி லீபமஹாராஜன் அங்ஙனம் தர்மத்தில் மனம் ஊன்றிப் பாட்டன்மார்களை உத்தரிப்பிக்கும்வழி ஏதென்று எப் பொழுதுஞ்சிந்தித்துக்கொண்டிருக்கையில் அவனுக்கு மிகவும் தார்மிகனுகிய பகீரதனென்னும் குமாரன் பிறந்தனன். திலீபனும் தனது பராக்ரமம் தான்குபக் கத்திலும் அளவின்றி விளங்கும்படி நின்று பலயாகங் களைச்செய்து முப்பதினுயிரம்வருஷங்கள் ப்ரஜைகளுக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாகும்படி ராஜ்யபாலனஞ் செய் துவந்தனன். அவ்வளவுகாலஞ் சென்றும் அத்திலீப மஹீபாலனுக்கு ஸகரபுத்ரர்களை உத்தரிப்பிக்கும் உபாயம் ஒன்றுந்தோன்றுமல் அம்மன்னவன்வருத்தத்தினுல் வியா திக்ரஸ்தனுகித் தனது புத்ரனுகிய பகீரதனுக்கு ராஜ்யா பிஷேகஞ்செய்வித்து அவ்வியாதி மூலமாகவே காலதர்ம மடைந்து தான்செய்தபுண்யகருமங்களால் தேவலோகஞ் சென்றனன். திலீபகுமாரனுகிய அப்பகீரதமன்னவன் ரா ஜர்ஷியென்று பேர்பெற்று மிகவும் தர்மங்களெல்லாம் நி றைவேற்றுந்தன்மைகொண்டு மஹாதேஜஸ்வியாகி விள ங்கினின்றும் தனக்கு ஸந்தானமில்லாமையால் அதைப்பெ றவிரும்பினன். அம்மன்னவன் அங்ஙனம் ஸந்தானம் அற் றிருந்ததுபற்றித் தனது ராஜ்யத்தை மந்த்ரிகளிடம் ஒப்

புவித்து, கங்கையைப் பூமிக்கு இழியச்செய்வதில் மிக்க விருப்பங்கொண்டு ஹிமாலயமலைச்சாரல்களில் ஒன்றாகிய கோகர்ணமென்னும் ஓர் சிறிய பர்வதத்திற்குச் சென்று கைகளிரண்டையும் உயர எழுப்பிக்கொண்டு ஐம்புலன் களையும்தீரவென்று மாஸத்துக்கொருதரமாகப்போஜநஞ் செய்துகொண்டு பஞ்சாக்நிமத்யத்தில் நின்று ஓயாத்த வம்புரிந்தனன். பகீரதமன்னவன் இப்படி பயங்கரமாகத் தவம் நடத்திக்கொண்டிருக்கையில் பல ஆயிரமாண்டு கள் கடந்துசென்றன. பின்பு எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு செல்லுந்திறம்பெற்று ப்ரஜைகள் அனைத்துக் கும் அதிபதியாகி நின்று மகிமையெல்லாமமைந்த ப்ரஹ்ம தேவன் அம்மஹாநுபாவனாகிய பகீரதமன்னவனது கடுந் தவத்துக்கு அளவற்ற ஸந்தோஷமடைந்து தேவகணங்க ளோடுகூடி, தவஞ்செய்துகொண்டிருக்கிற அம்மஹாநீய னிடம் வந்து 'பகீரதமன்னவனே! நீ மிகுந்தபாக்யம் பொ ருந்தியிருப்பவன். திடமான ஸங்கல்பத்துடன் நீ மிக வும் அரிதாகத் தவஞ்செய்தனை. ஆகையால் எனக்கு உன்னிடத்தில் ப்ரீதி அளவற்றிருக்கின்றது. வரம் வேண் டுவாயாக' என்றனன். அதைக்கேட்டுத் தவத்தின் மிகுதி யால் மிகவும் ஒளிபெற்று விளங்குகின்ற பாக்யநிதியாகிய அப்பகீரதமன்னவன் பரஹ்மதேவனுக்கெதிரில் கையைக் கூப்பிக்கொண்டு நின்று ஸர்வலோகபிதாமஹனாகிய அத் தேவனைப் பார்த்து 'மஹாநுபாவரே! நீர் எனது தவத் துக்கு ஸந்தோஷம் அடைந்திருப்பீராயினும், நான் செ ய்த தவத்துக்குப் பலனுளதாயினும் ஸகரகுமாரர்களனை வரும் என்னால் கங்காநதிஜலப்ரவாஹத்தில் தர்ப்பணம் பெறவேண்டும். ஜலதர்ப்பணமாத்ரமேயன்று. எனதுமுப் பாட்டன்மார்களாகிய இம்மஹாத்மாக்களனைவருடைய இச்சாம்பற்குவியலானது கங்காஜலத்தினால் நனையு

மாயின் இவர்கள் எல்லோரும் அழிவில்லாது விளங்கும் ஸ்வர்க்க லோகத்தைப் பெறுவார்கள். ஆகையால் இப்படியாகும்படி அருள்புரியவேண்டும். இதுவேயன்று; இக்ஷ்வாகுவம்சத்திற்பிறந்த எனக்கு ஸந்தாநமுண்டாகும்படி அனுக்கிரகம் செய்யவேண்டும். எமதுவம்சமற்றுப்போகாதிருக்கவேண்டும். நான் வேண்டும் இந்த மற்றொருவரத்தையும்அருள்புரிந்து எனக்குத் தரவேண்டும்'என்றனன். அம்மன்னவன் இங்ஙனஞ்சொல்ல அதைக்கேட்டு உலகங்களுக்கெல்லாம் பாட்டனாகிய அந்நான்முகக்கடவுள் அவ்வரசனை நோக்கி மதுரமானபதங்களடங்கிமனத்துக்கினிய பொருள்நிறைந்து சுபமான வாக்கியங்களை இங்ஙனமுரைத்தனன். 'மஹாராஜா! பகீரதனே! நீ விரும்பின மநோரதமானது மிகவும் பெரிதாயிருக்கின்றது. ஆயினும் இது அப்படியே நடந்தேறும். மன்னவனே! உனக்குச் சுபமுண்டாகவேண்டும். இக்ஷ்வாகுவம்சம் விருத்தியாகும்படி உனக்கு ஸந்தாநமுண்டாகும். இதோ ஹிமவத்பர்வதத்தின் அருகில் தோன்றுகிற இக்கங்கையானது ஹிமவத்பர்வதத்தின் மூத்தபுதல்வி. அதைத் தரிக்கவல்லவன் உருத்திரன் ஒருவனேயாகையால் அம்மஹாதேவனை வேண்டிக்கொள்வாயாக. ராஜனே! கங்கை ஆகாயத்தினின்றும் கீழேவர விழுமாயின் அவ்வேகத்தை இப்பூமி ஸஹிக்கமாட்டாது. மஹாவீரனே! அக்கங்கையைத் தரிக்கவல்லவன் சிவனையொழிய மற்றொருவனும் எனக்குத்தோற்றவில்லை' என்றனன். இங்ஙனம் உலகங்களையெல்லாம் படைக்குந்தன்மையுடைய ஸரஸ்வதீவல்லபன் அம்மன்னவனுக்குச் சொல்லிவிட்டு, கங்கையைப் பார்த்து 'இம்மன்னவன் விருப்பியபடி நீ அநுக்ரஹஞ் செய்வாயாக' என்று மொழிந்து ஸமஸ்தமேதவர்களும் கூட்டங்கூட்டமாகச் சூழ்ந்து பின்றொடர்ந்

தேவலோகஞ்சென்றனன். நாற்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பகீரதன் கங்கையைக்கொண்டுவந்தது.

ராமா! தேவர்களுக்கெல்லாந் தேவனாகிய அந்த ப்ரஹ்மதேவன் அங்ஙனம் புறப்பட்டுப்போனபின்பு பகீரதவேந்தன் பூமியில் நாற்கட்டைவிரலை ஊன்றிக்கொண்டு நின்று (புஜங்களிரண்டையும் உயரத்தூக்கி நிறுத்தி வாயுபக்ஷணஞ்செய்துகொண்டு எவ்விதத்திலும்அவலம்பமின்றி இரவுபகலும் மொட்டைமரம்போல் அசையாமல்நின்று நிலைபெற்று)ஒருவருஷகாலம் சிவனை உபாஸித்தனன். பின்பு ஒருவருஷம் நிரம்பிச் செல்ல, உலகங்களெல்லாம் வணங்கநின்ற பசுபதி உமையுடன்கூடி ப்ரத்யக்ஷமாய் வந்து நின்று அரசனை நோக்கி 'நரேச்வரனே! கடுந்தவம்புரிந்த உன்னிடத்தில் நான் மிகவும் ஸந்தோஷமடைந்தனன். பர்வதராஜனது புத்திரியாகிய கங்காநதியை எனது சிரத்திலில் தரித்து உன்மநோரதத்தைச் செய்து நிறைவேற்றப்போகிறேன்' என்றனன். பின்பு லோகங்களெல்லாம் வணங்கும்படி மஹிமைபொருந்திய ஹிமாலயத்தின் மூத்த மகளாகிய கங்காநதி அப்பொழுது தனது உருவத்தைப் பெருக்கச்செய்துகொண்டு பயங்கரமான வேகத்துடன் ஆகாயத்தினின்றும் பரிசுத்தமாகிய சிவபிரானது சிரத்தில் விழுந்து தனக்குள் இங்ஙனம் சிந்தைகூர்ந்தனள்.'யாவரும்தரிக்கத்தாமல்லாத என்னைச் சிவன் தரிக்கமுயன்றனன். இங்ஙனமாகட்டும். எனதுப்ரவாஹங்களால் இவனையெடுத்துக்கொண்டு பகீரதனிஷ்டப்படி பாதாளஞ்செல்லுகின்றேன்' என்று இங்ஙனம் ஆலோசித்துக்கொண்டு அதற்குத்தக்கபடி உருவத்தையும் வேகத்தையும்தரித்து விழுந்துவருகிற அக்கங்காதேவியின் கர்வத்தைக் கண்ட

றித்து மகிமையில்லாமமைந்த முக்கண்ணனுகியசிவபெரு மானுவன் மிகுந்தகோபங்கொண்டு அக்கங்கையை வெளியிற் புறப்படவொட்டாமல் தன்னிடத்திலேயே மறைந் திருக்கும்படி அடக்கவேண்டுமென்று மனத்திலெண்ணங் கொண்டனன். ராமா! அப்புண்யகதி பெருத்தஜடாமண்ட லங்களால் சூழப்பட்டுப் பயங்கரமான தொருகுகைபோல் இருண்டு ஹிமாலயத்தோடொத்து விளங்கி மிகவும் பரி சுத்தமாயிருக்கின்ற சிவபிரானது சிரத்தில் விழுந்து கஷ்டப்பட்டு எவ்விதப்பிரயத்தங்கள் செய்தும் அச்சிரத்தி னின்றும் பூமியைச் சேருகைக்குச் சிறிதுஞ்சக்தியில்லா மற்கிடந்தனள். ஆயிரம்படச் சொல்லியென். அந்தஜடா மண்டலத்தில் அகப்பட்டுக்கொண்டு யாதுந்தோன்றுமல் மனமயங்கிச் சிறிதேனும் வெளியேபுறப்பட்டுப் பொகிய வும் முடியாமல் சக்தியற்றிருந்தனள். இனிப் பூமியைக்கு றித்து இழிய முடியவில்லையென்பதுசொல்லவேண்டுமோ? இப்படி அக்கங்காதேவியானவள் அச்சடாமண்டலத்தில் அகப்பட்டு மிகவும் கட்டுண்டு வெகுவருஷங்கள் அதிலே யே சுழலமிட்டுக்கொண்டிருந்தனள். பின்பு பகீரதன் அங் குக் கங்கையைக்காணுமல் மீளவும்பெருந்தவம்புரிய, அத ற்குச் சிவன் அளவற்ற ஸந்தோஷங்கொண்டு, பிரமதேவ னல் கிருமிக்கபட்ட பிந்துஸரஸ்ஸென்னும் பேர்பெற்ற தோர் ஸரஸ்ஸில் அக்கங்கையை விழவிட்டனன். அங்ங னம் அக்கங்கையை விடும்பொழுது ஏழுப்ரவாஹங்கள் உ ண்டாயின. மங்களமான ஜலங்கொண்டு மிகவுமழகாய் விளங்கிய ஹ்லாதிநி, பாவநி, நளிநியென்னும் மூன்று கங் காப்ரவாஹங்கள் கிழக்குமுகமாய்ப் பெருகிச்சென்றன. பரிசுத்தமான தீர்த்தத்துடன் விளங்கிய ஸுசக்ஷுஸ், ஸீதை, மஹாநதியாகிய ஸிந்து என்னும் இம்மூன்று நதி கள் மேற்குமுகமாய்ப் பெருகிச்சென்றன. அவைகளில்



240 சிவன் பகீரதனிடம் அருள்புரிந்து கங்கையை விடுதலும், அக் கங்கை ஏழு ப்ரவாஹங்களாகப் போதலும்.

ஏழாவதாகிய கங்காநதிப்ரவாஹமொன்று பகீரதமன்ன வனைப் பின்சென்றது. ராஜரிஷியாகிய அப்பகீரதமன்ன வனும் திவ்வியமானதொரு ரதத்தின் மீதேறிக்கொண்டு தனது பராக்ரமம் அளவின்றி விளங்கும்படி முன்னேசெல்ல, கங்கை அவனைப் பின்றொடர்ந்து போயினள். [1]அப்படி ஆகாயத்திலின்றும் சிவனது சிரத்தில் விழுந்து, அவ்விடத்திலிருந்து பூமியில் விழுந்து, பயங்கரமான சப்தங்கள் கிறைந்து வருகின்ற அக்கங்கையின் ஜலப்ரவாஹமானது பூமியெங்கும் பரவி கின்றது. அப்பொழுது ஜலப்ரவாஹத்துடன் கூட்டங்கூட்டமாகப் பூமியில் விழுந்தும், மேன்மேலென விழுந்துகொண்டுமிருக்கின்ற மத்ஸ்யங்களாலும், ஆமைகளாலும், முதலைகளாலும், மற்றுமுள்ள ஜலஜந்துக்களாலும் பூமியானது நிறையப்பெற்று மிகவுமழகாய் விளங்கிற்று. பிறகு தேவர்களும், ரிஷிகளும், கந்தர்வர்களும், ஸித்தர்களும் அங்ஙனம் ஆகாயத்தினின்றும் கங்கை பூமிக்கு வந்து விழுவதைக் கண்டு கூட்டங்கூட்டமாக நடந்துவருகிற நகரங்கள்போல் விளங்குகின்ற விசாலமான விமாநங்களின்மீதும், குதிரைகளின்மீதும், யானைகளின்மீதும் ஏறிக்கொண்டு பரபரப்புடன் கங்கை விழுமிடத்துக்கு வந்துசேர்ந்தனர். பூமியில் கங்கைவிழுவது மிகவுமற்புதமாய் உலகத்தில் ஒப்பற்றுச் சிறந்திருந்தமையால் அதைப் பார்க்க விருப்பங்கொண்டு, தமது அபாரதேஜஸ்ஸானது நான்குபக்கத்திலும் நிரம்பி விளங்கும்படி மஹாதேஜஸ்விகளாகிச் சிறப்புற்ற தேவர்கள் அனைவரும் கூட்டங்கூடி வந்து அவ்விடம் சே

1 இவ்விடத்தில் கங்கை ஸ்வர்க்காகாசபூமிகளாகிற மூன்று இடங்களிலும் ப்ரவஹித்தபடியால் 'த்ரிபதகை' என்னும் பேர்பெற்ற தென்று சிலர் சொல்லுகின்றனர். மூன்றுத் திசைகளிலும் ப்ரவஹித்தபடியால் அந்தப் பெயர் வந்ததென்று சிலர்.

ர்ந்தனர். அங்ஙனம் தேவலோகத்தினின்று கும்பற்கூடி வரும்பொழுது அவர்களது மிகுந்த சரீர தேஜஸ்ஸினாலும், ஆபரணங்களில் இழைக்கப்பட்டிருக்கின்ற பலவித உயர்ந்த ரத்நகாந்திகளாலும் ஆகாசமானது எங்கும் பரவப்பெற்று, மேகங்களின்றி அநேக ஸூர்யர்கள் கூடி உதிக்கப்பெற்றதுபோல் கிரணங்கள் பரந்து ப்ரகாசித்தது. பின்னும் முதலைகளும் பாம்புகளும் மீன்களும் கூட்டங்கூட்டமாகத் தம்மிடத்திலிருந்து இங்குமங்கும் துள்ளித்திரிந்து ஜலத்தில் மறைந்துகொண்டிருக்கையில் மின்னற்கொடிகளால் எங்கும் நிரம்பியதுபோல் ஆகாயம் விளங்கிற்று. ப்ரவாஹவேகத்தினால் பலவாறுகத் தெரிந்து சென்று வெளுத்து விழுகின்ற நுரைகளால் நிரம்பிய ஆகாயமானது, ஹம்ஸங்களோடுகூடிய சரத்காலத்திலுண்டான வெளுத்த மேகங்களால் சூழப்பட்டதுபோல் தென்பட்டது. அக்கங்காநதியானது சிற்சிலவிடங்களில் வெகுவேகமாகவும், மேடுபள்ளங்களாகிய சிற்சிலவிடங்களில் வளைந்து வக்ரமாகவும், சதுரச்ரமாகிய சிற்சிலவிடங்களில் நேராகவும், பள்ளங்களில் கீழேயிழிந்தும், கல்முதலியவைகளில் மேலெழும்பியும், மேடுகளில் மெதுவாகவும் பாய்ந்து ப்ரவஹித்தது. மற்றோரிடத்தில் அடிக்கடி நீரின்மீது நீர்மோதிக்கொள்வதனால் அடிக்கடி உயர எழும்பிக் கீழே விழுந்துகொண்டும் போயிற்று. இப்படி ஆகாயத்தினின்றும் சிவனது சிரத்தில் விழுந்து, அவ்விடமிருந்து பூமியில் விழுந்து வருகிற அக்கங்காப்ரவாஹஜலமானது நிர்மலமாகி ஸகல கல்மஷங்களையும் போக்கவல்லதுமாகி விளங்கிற்று. ஆகாசஸஞ்சாரிகளான தேவர்களும், ரிஷிகளும், கந்தர்வர்களும், பூமியில் வஸிக்கும் ஜநங்களும் ஸர்வஜ்ஞனாகிய சிவன் தலையால் தரித்திருந்து, அச்சிரத்தினின்றும் வெளிவந்த இக்கங்

காஜலமானது மிகவும் பரிசுத்தமென்று நினைத்து அக்க
தியின் ப்ரவாஹத்தில் ஸ்நாநஞ்செய்தனர். சாபதோஷத்
திலை ஆகாயத்தினின்றும் பூமியில் விழுந்தவர்யாவரும்
அதில் ஸ்நாநஞ்செய்து சாபத்தினின்றும் விடுபட்டு,
நின்மலமாகி ஒளிபெற்று விளங்குகின்ற அந்நதிஜலத்தி
லை பாவங்களெல்லாந்தொலைத்து மீளவும் ஆகாயமார்
க்கத்திலை தமது உலகங்களுக்குப் போய்ச்சேர்ந்தனர்.
அழுக்கின்றி அழகாய் விளங்குகின்ற அக்கங்கையின்
ஜலப்ரவாஹத்தைக்கண்டு ஜநங்கள் மிகவும் ஆநந்தமடை
ந்து அதில் ஸ்நாநஞ்செய்து சிரமந்தீர்ந்து ஸுகமடைந்
தனர். ராஜர்ஷியாகிய பகீரதனும், திவ்யமானதொரு
தேரின்மீதேறிக்கொண்டி தனது தேஜஸ்ஸெல்லாம் விள
ங்கும்படி முந்துற நடக்க, அக்கங்கையும் அவனைப்பின்
ரொடர்ந்து சென்றனள். தேவர்களும், ரிஷிகளும், திதி
குமாரர்களாகிய தாநவர்களும், ராக்ஷஸர்களும், யக்ஷர்
களும், கந்தர்வர்களும், கிந்நரர்களும், மஹாஉரகர்க
ளும், அப்ஸரஸ்ஸுக்களென்கிற ஸமஸ்ததேவஸ்த்ரீக
ளும் பகீரதமன்னவனைப் பின்ரொடர்ந்துசெல்லுங் கங்
கையின் ப்ரவாஹத்தைப் பார்த்துக்கொண்டு மிகுந்த ஸந்
தோஷத்துடன் பின்ரொடர்ந்தனர். அப்படியே ஜலஜந்
துக்கள்யாவும் அந்த ப்ரவாஹத்துடன் பின்சென்றன.
ஸமஸ்த பாபங்களையும்போக்கவற்ருகி நதிகளிற் சிறந்து
எங்கும் புகழ்பெற்று விளங்கிய அக்கங்காநதியானது,
அப்பகீரதன் எவ்வெவ்விடம் செல்லுகின்றனனை,அவ்வவ்
விட மெல்லாந் தானுஞ் சென்றது. அக்கங்காதேவி அங்
ஙனம் போய்க்கொண்டிருக்கையில், அவ்வழியில் மஹாத்
மாவாகி அற்புதமான காரியங்களைச்செய்ய வல்லவருமா
கிய ஜஹ்நுவென்னும் மஹர்ஷி யாகஞ்செய்துகொண்டி
ருக்கிற யாகபூமி கோரிட, அதைத் தனது ப்ரவாஹத்தில்

மூழ்கச்செய்தனள். யாகஞ்செய்கிற அம்மஹர்ஷியும் அ தன் கர்வத்தையறிந்து, மிகவும் அற்புதமாக அக்கங்கை யின் ப்ரவாஹத்தையெல்லாம் குடித்துவிட்டனர். பின்பு தேவர்களும், ரிஷிகளும், கந்தர்வர்களும் மிக்க வியப்ப டைந்து மஹாப்ரபாவம் பொருந்தி புருஷர்களிற் சிறந்த ராயுள்ள ஜஹ்நுமஹர்ஷியினிடம் வந்து பூஜித்துக் கங் கையை அம்மஹாநுபாவருக்குப் பெண்ணாக ஏற்படுத்த, மஹாதேஜஸ்வியாகிய அம்மஹர்ஷியும் அதற்கு மிகவும் ஸந்தோஷமடைந்து காதுவழியாக மீளவும் வெளிவிட்ட னர். ஆனதுபற்றியே கங்கையானது ஜஹ்நுமஹர்ஷி யின் பெண்ணாகி, 'ஜாஹ்நவி' என்று சொல்லப்பட்டு வருகின்றது. நதிகளிற்சிறந்த அக்கங்கையானது மீள வும் பகீரதனது ரதம்போகும் வழியாகப் பின்தொடர்ந்து அவனது காரியஸித்திக்காகச் சென்று ஸமுத்திரத்தில் விழுந்து பாதாளத்துக்குச் சென்றது. அந்த ராஜர்ஷியும், மிகுந்தயத்நங்கள் செய்து கங்கையைக் கொண்டுசென்று சாம்பலாய் கிடக்கின்ற தனது பாட்டன்மார்களைக் கண்டு மிகமனவருத்தமடைந்தனன். அப்பொழுது அக்கங்கா நதி அப்பஸ்மராசியை நனைக்க, ஸகர குமாரர்களும் பாவ மெல்லாந்தொலைந்து ஸ்வர்க்கத்தையடைந்தனர். காற்ப த்துமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

ப்ரஹ்மதேவன் பகீரதனுக்கு ஸம்பாஷிக்கை.

அப்பொழுது அப்பகீரதமன்னவன் கங்காநதி தன் னைப்பின்தொடர்ந்துவர ஸமுத்திரத்திற்குச் சென்று அவ் விடமிருந்து ஸகரகுமாரர்கள் நீருயிருக்கிற பாதாளத்திற் பிரவேசித்தனன். ராமா! பின்பு கங்காஜலம் அத்தச்சாம்ப லின்மீது ப்ரவஹித்துச் செல்லும்பொழுதே ஸ்வலோ

கநாயகனுகிய ப்ரஹ்மதேவன் வந்து பகீரதமன்னவனை நோக்கி ‘ ஆண்சிங்கமே ! மஹாத்மாவாகிய ஸகரமஹாராஜனது குமாரர்கள் அறுபதினாயிரம்பேர்களும் உன்னால் ப்ரேதபாவத்தினின்றும் விடுபட்டுக் கடைத்தேறி தேவர்களைப்போல் ஸ்வர்க்கமடைந்து விட்டனர். மன்னவனே! ஸமுத்ராஜலம் எவ்வளவுகாலம் இவ்வுலகத்திலிருக்குமோ, அவ்வளவுகாலம் ஸகரகுமாரர்கள் அனைவரும் தேவதைகளைப்போல் வானுலகில் வாழ்ந்திருப்பார்கள். அவ்வளவு மாத்ரமேயல்லாமல் இக்கங்கையும் உனக்கு மூத்தபெண்ணென்று எங்கும் கியாதி பெற்று விளங்கப் போகின்றது. அது நீ[1] தகப்பனுயிருப்பதுபற்றி உண்டான பெயரினால் இனி இவ்வுலகில் ப்ரஸித்தியடையப் போகின்றது. மன்னவனே ! ஸ்வர்க்கத்திலுண்டான இக்கங்கா நதி த்ரிபதகையென்றும் உனது பேரால் பாகீரதியென்றும் இரண்டு நாமங்களைப்பெற்று விளங்கும். ஸ்வர்க்கம் பூமி பாதாளம் ஆகிய இம்மூவுலகங்களிலும் ப்ரவாஹம் பெற்று வந்தமையால் இந்நதி த்ரிபதகையென்று சொல்லப்பட்டது. நராதிபதியே! உனது பாட்டன்மார்களாகிய ஸகரகுமாரர்களனைவர்க்கும் இக்கங்காஜலத்தில் தர்ப்பணஞ்செய்து ‘கங்காஜலங்கொண்டு ஸாகரர்களை உத்தரிக்கச் செய்கிறேன்’ என்கிற நீ செய்தப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக்கொள்வாயாக. உனக்குப் பூர்விகனுகிய ஸகரன் மிகவும் கீர்த்திபெற்றவன்; தார்மிகஜநங்களனைவரிலும் முன்னே கணக்கிடத்தக்கவன். அப்படி மஹாநுபாவனுகிய ஸகரமஹாராஜனும் இப்பொழுது நீ நிறைவேற்றின இக்காரியத்தை முன்பு தான் செய்யமுயன்றும் அம்மநோரதத்தை நிறைவேற்றமற்போயினன். அப்பா! பகீரதனே!

---

1 (தகப்பனுயிருப்பதனால் உண்டான பெயரினால்) அதாவது பாகீரதி’ என்னும் பெயரினாலென்கை.

ஒப்பில்லாதுவிளங்கிய தனது பராக்ரமத்தினால் உலகமெங்கும் புகழ்பெற்ற அம்சுமந்தனும் அவ்விதமாகவே கங்கையைப்பெற ப்ரார்த்தித்துக்கொண்டிருந்தனனேயன்றி அவனும் ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றவில்லை. உனதுதகப்பனுகிய திலீபனும் ஸாமாந்யனன்று. அவன் ராஜர்ஷியென்னும் பேர்பேற்று நற்குணங்களுக்கு நிதியாகி மஹர்ஷிகளைப்போல் ப்ரபாவத்தினால் விளங்குமவன்; மிகுந்த பராக்ரமமுடையவன்; க்ஷத்ரியதர்மங்களைப் பரிபாலித்துவருவதே தொழிலாயிருப்பவன்; ஆயிரம்படச்சொல்லியென்? தவத்தில் என்னைடொத்தவன். அப்படிப்பட்ட மஹாபாக்யசாலியும் கங்காநதியைக் கொண்டுவரவேணுமென்று விருப்பமுற்றிருந்தனனேயன்றிக் கடைசியில் அதைக்கொண்டுவரும் விசாரமுமற்றிருந்தனன். இப்படிப்பட்ட மஹாநுபாவர்களுக்குஞ் செய்து நிறைவேற்ற அரிதன்றோ இக்கங்கையை இங்ஙனம் இழியச்செய்யும் ப்ரதிஜ்ஞை. இப்படிப்பட்ட ப்ரதிஜ்ஞையை நீ புருஷர்களிற் சிறந்தவனுகையால் நிறைவேற்றிவிட்டனை. அதனால் உலகங்களில் யாவரும் மிகக் கொண்டாடும்படி அபாரமான கீர்த்தியைப்பெற்றனை. சத்ருக்களையடக்கவல்ல மஹாபராக்ரமசாலியே! பகீரதா! நீ நிறைவேற்றின இக்கங்காவதாரணத்தினால் நீ தர்மத்தில் மிகுந்த ப்ரதிஷ்டை அடைந்தனை. ஆண்சிங்கமே! இதரநதிகளைப்போலன்றியே எப்பொழுதும் ஸ்நாநயோக்யமாய் விளங்குகிற இந்நதிஜலத்தில் ஸ்நாநஞ் செய்வாயாக. அதனால் பரிசுத்தியையும் புண்யபலன்களையும் பெறுவாயாக. உனது பாட்டன்மார்களனைவர்க்கும் இதில் தர்ப்பணஞ்செய்வாயாக. உனக்குச்சுபமுண்டாகவேண்டும். இனி நான் எனதுலோகத்துக்குப் போகின்றனன். நீயும் தர்ப்பணத்தைச் செய்துவிட்டு உனது பட்டணஞ்சென்று சேருவாயாக'என்றிவ்வாறுமொழிந்தனன்

இப்படி ஸகல தேவர்களுக்கும் அதிபதியாகி ஸகலலோகங்களுக்கும் பாட்டனாகிய ப்ரஹ்மதேவன் அவ்வரசனுக்கு மொழிந்துவிட்டுக் கீர்த்தி நான்குபக்கத்திலும் ப்ரகாசிக்கும்படி தான் வந்தவழியே புறப்பட்டு ப்ரஹ்மலோகம் போய்ச் சேர்ந்தனன். பின்பு ராஜர்ஷியாகிய பகீரதனும் ஸ்மருதிகளிற் சொல்லியபடி ஜ்யேஷ்டக்ரமமாகத் தனது பாட்டன்மார்களாகிய ஸகரகுமாரர்களுக்கு உத்தமலோகத்தை யளிக்கும்படியான உதகக்ரியை செய்துமுடித்து மிகவும் பரிசுத்தனாகித் தனது கீர்த்தி எங்கும் விளங்கும்படி பட்டணத்திற்சென்று ப்ரவேசித்து ஸமஸ்த ஸம்பத்துக்களும் நிறைந்து நிலைநிற்கும்படி ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தனன். ரகுநந்தன! ராமா! உலகங்களெல்லாம் வெகுகாலம் தோன்றுதிருந்த அம்மன்னவனை அடைந்து மனவருத்தமனைத்தும் தொலைந்து செல்வங்களெல்லாம் நிறைந்து கன்று ஆரோக்யம்பெற்று மிகுந்த ஸந்தோஷமாகிற ஸமுத்ரத்தில் மூழ்கிக் கிடந்தனர். ராமா! நீ ஸவிஸ்தரமாகக் கேட்ட கங்காவிருத்தாந்தத்தை இதோ சொல்லிமுடித்தனன். நீ க்ஷேமம்பெறுவாயாக. உனக்குச் சுபமுண்டாகவேண்டும். ஸந்த்யாகாலம் கடந்துபோகின்றது. இனி இப்பொழுது என்னை ஒன்றும் வினவாதிருப்பாயாக. பொருளைப்பொழிய வல்லதும், புகழைப் படைக்குந் திறமுடையதும், ஆயுளைப்பெருகச் செய்யவற்றும், ஸந்ததியைக் கொடுக்கவற்றும், ஸ்வர்க்கத்தை அளிக்கவற்றுமாகிய இக்கங்காவதார விருத்தாந்தத்தை ப்ராஹ்மணர்களிலும் க்ஷத்ரியர்களிலும் மற்றுமிதரஜாதிஸ்தர்களிலும் எவனாயினும் ஒருவன் கேட்பிப்பானாயின் அவனிடத்தில் பித்ருதேவதைகளும் மற்றுமுள்ள தேவதைகளும் களிக்கின்றனர். கங்காவதரணமென்னும் இச்சுப உபாக்யானத்தை இதரவிஷயங்களிற் செல்லாமல்

ஹக்கத்துடன் கூடிய மனத்தோடு யாவனொருவன் கேட்கின்றனனோ, அவனுக்கு ஸர்வாபீஷ்டங்களும் ஸித்தித்துக் கைகூடும். அவனது பாவங்களெல்லாம் தொலைத்து ஆயுஸ்ஸும் யசஸ்ஸும் மேன்மேலென வளர்ந்துவரும்' என்றிங்ஙனம் விச்வாமித்ரமாமுனிவர் மொழிந்துகின்றனர். காற்பத்துகான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

விசாலாபுர விருத்தாந்தமும், பாற்கடலைக் கடைந்ததும்.

இங்ஙனம் விச்வாமித்ரமாமுனிவர் மொழிந்த கங்காநதியினது விருத்தாந்தத்தைக் கேட்டு ராமலக்ஷ்மணர்களிருவரும் மிகவும் வியப்படைந்து அம்மாமுனியை நோக்கி' மஹாநுபாவரே! நீர் சொன்ன கங்காவதாண விருத்தாந்தமும், ஸகரகுமாரர்கள் ஸமுத்ரம் தோண்டிவைத்ததும், அதைக் கங்கையின் ப்ரவாஹத்தினால் நிரம்பச் செய்ததும் ஆகிய இவையெல்லாம் மிகச்சிறந்ததும் மிகுந்த பரிசுத்திபெற்றதும் மிக்க அற்புதத்தை விளைப்பதுமாயிருக்கின்றன' என்று மொழிந்து விச்வாமித்ரமாமுனிவர் சொன்ன அவ்வழகான கதையைச் சிந்தித்துக்கொண்டே அவ்விருவரும் அன்றிரவெல்லாங் கடக்கச்செய்தனர். பின்பு பலபலவென்று பொழுதுவிடிந்து ஸூர்யோதயமாகையில், சத்ருக்களை யடக்கவல்லவனகிய ராகவன், நித்யகர்மங்களையெல்லாம் முடித்து உட்கார்ந்துகொண்டிருக்கிற விச்வாமித்ரமுனிவரை நோக்கி, 'தபோநிதியே! கேட்கவேண்டிய விஷயங்களிற்சிறந்த இக்கதையைக் கேட்டனன். அதனால் இந்த ராத்ரியானது மிகவும் பூஜிக்கத்தக்கதாயிருக்கின்றது. நீர் மொழிந்த இக்கதை முழுதும் அழகாயிருந்தமையால் அதை ஆதியோடந்தமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் எங்களுக்கு இன்றிர

வெல்லாம் ஒருக்ஷணப்பொழுதுபோல் கடந்துபோயிற்று. மிக்கஸுகமாய்உட்காரும்படி நன்கு விஸ்தாரம்பெற்றுப் புண்யகர்மபராயணர்களாகிய ரிஷிகள் ஏறிப்போக யோக்யமான இவ்வோடமானது யாவரும் மகிழ்ந்து பூஜிக்கும்படி மஹாநுபாவராகிய நீர் இவ்விடம் வந்திருப்பதுகண்டு மிக்கவேகமாய் வந்து சிற்கின்றது. இதனுல் புண்யநதிகளிற் சிறந்த இக்கங்காநதியைத்தாண்டிப்போவோம்' என்றுரைக்க, மஹாத்மாவாகிய அந்த ராகவனது வார்த்தையைக் கேட்டு விச்வாமித்ரமாமுனியும் ரிஷிகள் அனைவரும் கூட்டங்கூட்டமாகப் பின்சென்றுவர ரகுகுலத்திற் பிறந்த ராமலக்ஷ்மணர்களோடுகூடி கங்காநதியைத்தாண்டி அந்நதியினது வடகரையைச்சேர்ந்து ஓடத்தைக்கொண்டு நதியைத்தாண்டுவிக்கும்பொருட்டுத் தன்னுடன்வந்த மஹர்ஷிக்கூட்டத்தைப் பூஜித்து மீளவுந்திரும்பிப்போகவிட்டு அந்நதிக்கரையில் க்ஷணகாலம் உட்கார்ந்திருந்து விசாலியென்னும் பட்டணத்தைக்கண்டனர். பின்பு விச்வாமித்ரர் அப்பொழுது ராமலக்ஷ்மணர்களோடு கூடிப்புறப்பட்டு ஸகலஸம்பத்துக்களும் நிறைந்து பூமியிலெங்கும் ஒப்பில்லாதபடி சிறப்புற்று, தேவலோகத்தை சிகர்த்து மிகவும் அழகாகவிளங்கிய விசாலியென்னும் அந்நகரத்துக்கு வேகமாகப் போய்ச்சேர்ந்தனர். பின்பு எல்லாமறிந்து சிறந்தவற்களிற்றலிவனுகிய ராமன் விச்வாமித்ரமாமுனியைப் பார்த்துக் கைகளைக்கூப்பிட்டுக்கொண்டு 'மஹாநுபாவரே! நகரங்களிற்சிறந்த இவ்விசாலாநகரத்தின் மஹிமை யாது? மாமுனியே! இவ்விசாலாநகரத்தில் இப்பொழுது வாஸஞ்செய்யும் மன்னவர்குலம் யாது? இதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று எனக்கு மிகவும் குதூஹலமாயிருப்பதுபற்றி, இதை நான் கேட்கவிரும்புகின்றனன். உமக்குச் சுபமு

ண்டாகவேண்டும்' என்றனன். இங்ஙனம் மொழிந்த ராமனது வார்த்தையைக் கேட்டு அம்மாமுனிவர் விசாலாக்ஷத்தைப்பற்றி முன்பு நடந்த விருத்தாந்தத்தை யெல்லாஞ் சொல்லத்தொடங்கினர். 'ராமா! இத்தேசத்தில் யாது நடந்ததோ, அதைச்சொல்லுகின்றேன்; கேட்பாயாக. இந்திரனது விருத்தாந்தமும் இதில் ஸம்பந்தித்திருக்கின்றது. மிகவும் அழகான அவ்விருத்தாந்தத்தை நான் சொல்லிக்கொண்டுவர, ஊக்கத்துடன் கேட்பாயாக. மஹாநுபாவனே! ராமா! முன் கிருதயுகத்தில் திதிபுத்ரர்கள் மிகுந்த பலமுடையவர்களாக மாத்திரம் இருந்தனர். அதிதிபுத்ரர்கள் நன்குபராக்ரமமுடையவர்களும், மிக்க தார்மிகர்களுமாயிருந்தனர். புருஷோத்தமா! பின்பு அந்த மஹா வீரர்களாகிய இருவகைப்பட்டவர்களுக்கும் 'நாம் யாது செய்யில் சாவும் கிழத்தனமும் நோயுமின்றி இருப்போம்' என்று ஓரெண்ணமுண்டாயிற்று. அங்ஙனம் ஆலோசித்துக்கொண்டிருக்கையில் அளவற்ற தைரியம் பொருந்தி விளங்கும் அவ்வீரர்களுக்கு 'நாம் பால்ஸமுத்திரத்தைக் கடைந்து அதினின்று வெளியாகும் ஸாரமாகிய அம்ருதத்தைப் பெறவேண்டும்' என்று புத்தி உண்டாயிற்று. அங்ஙனம் நிச்சயித்து அவர்கள் மிகுந்த பராக்ரமமுடையவர்களாகையால் ஸர்ப்பராஜனாகிய வாஸுகியைக் கயிறுகவும், மந்தரபர்வதத்தை மத்தாகவும் செய்துகொண்டு பாற்கடலைக் கடையத் தொடங்கினர். (அப்படியே கடைந்துகொண்டிருக்கையில் ஆயிரமாண்டுகள் சென்றபின்பு வாஸுகியினது சிரங்களெல்லாம் பயங்கரமாக விஷத்தை வெளியில் கக்கிக்கொண்டிருக்க மத்தாகிய மந்தரபர்வதத்தினுடைய கற்களெல்லாம் வெடித்துப்போகையில், நெருப்புப்போல் எரிந்துகொண்டிருக்கிற ஹாலாஹல மென்னும் மஹாவிஷம் மே

லே இளம்பிற்று. அதனுல் தேவாஸுரமநுஷ்யர்கள் அனைவருமடங்கிய உலகங்களெல்லாம் கொளுத்தப்பட்டன. பின்பு தேவதைகள் தேவர்களில் பெருமைபெற்று யாவர்க்கும் ஆநந்தத்தை விளைவிப்பவனுமான பசுபதியைச் சரணமடைந்து 'காப்பாற்றவேண்டும், காப்பாற்றவேண்டும்' என்று துதிசெய்கையில் அப்பொழுது அவ்வுமாபதியாகிய சிவனிருக்குமிடத்திற்குச் சங்கு சக்கரம் முதலிய ஆயுதங்களைத்தரித்துக்கொண்டு, தேவதேவனென்னும் பேரிட்டுக்கொண்டிருக்கின்ற ப்ரஹ்மா ருத்ரன் முதலியவர்களுக்கும் தேவருஷி ஸமஸ்தகாரியங்களையும் அபாயமின்றி நிறைவேற்ற வல்லவனுமாகிய ஸர்வேச்வரன் ஸ்ரீமஹாவிஷ்ணு எழுந்தருளி புன்சிரிப்பு விளங்கும்படி அச்சூலபாணியாகிய சிவனைக் கண்டு 'தேவாதிபதியே! நீ தேவர்களுக்கெல்லாம் முதலிற் பிறந்தவன். ஆனதுபற்றிப் பாற்கடலைக் கடையத் தொடங்க, அதில் யாது முதலில் உண்டாயிற்றோ, அது உன்னுடையதன்றோ. ஆகையால் இவ்விஷத்தை அக்ரபூஜையாக நினைத்து அங்கீகரிப்பாயாக' என்று மொழிந்து அம்மஹாதேவனுகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு அவ்விடத்திலேயே அந்தர்த்தாகமடைந்தனன். பின்பு மகிமைபொருந்திய சிவபிரானும் தேவதைகளுக்குண்டான பயத்தைக் கண்டும் ஸ்ரீமஹாவிஷ்ணுநியமநத்தைக்கேட்டும் பயங்கரமாகிய ஹாலாஹலவிஷத்தை அம்ருதம்போலுட்கொண்டு தேவதைகளை விடுவித்துக்கொண்டு போயினன். பின்பு தேவதைகளும் அஸுரர்களும் அக்கடலை மீளவும் கடையத் தொடங்குகையில் அம்மத்தாகிய மந்தரபர்வதம் பாதாளத்தில் மூழ்கிக்கிடந்தது. அதைக்கண்டு தேவர்களும் கந்தர்வர்களும் மதுவென்னுமஸுரனைக்கொன்று மஹாபகாரஞ்செய்த ஸ்ரீமஹாவிஷ்ணுபகவானைச் சென்று

கிட்டி 'திரண்டிருண்டு நீண்ட புஜதண்டங்களையுடைய மஹாநுபாவனே! நீயே ஸகலபூதங்களுக்கும், விசேஷித்து தேவர்களுக்கும் கதியாயிருக்கின்றனை. ஆகையால் நீ எங்களைக் காக்கவேண்டும். காங்கள் மத்தாகக்கொண்ட மந்தரபர்வதம் பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. அதை மேலெடுத்தருளவேண்டும். அதற்கு நீ ஒருவனே வல்லவனாகின்றனை' என்று ஸ்தோத்ரஞ் செய்யக்கேட்டு, [1] இருடீகேசனென்று ஓதப்படுகிற அம்மஹாதேவன் கூர்மரூபங்கொண்டு தனது முதுகினால் அப்பர்வதத்தைத் தூக்கிக்கொண்டு அப்பாற்கடலில் பள்ளிகொண்டிருந்தனன். மேலும் அப்புருஷோத்தமன் ஸமஸ்தவஸ்துக்களிலும் உட்புகுந்து உலகங்களெல்லாம் அவனேயென்னும்படி விளங்குவதுபற்றி அப்பர்வதத்தின் நுனியைக் கையினால் அமுக்கிக்கொண்டு தேவதைகளின் நடுவில் நின்று தானுங்கடைந்தனன்.) இங்ஙனம் ஆயிரமாண்டுகள் சென்றபின்பு தண்டத்தையும் கமண்டலுவையும் தரித்துக்கொண்டு தன்வந்தரியென்னும் பேர்பெற்ற தேவலோகத்து வைத்தியன் முதலில் வெளித்தோன்றினன். பின்பு அழகான ஒளியுடைய அப்ஸரஸ்ஸ்த்ரீகளும் வெளியாயினர். அப்பாற்கடலிற் பாலைக்கடையும் பொழுது அதினின்றும் ஒரு ரஸமுண்டாக, அதினின்றும் இவர்களுண்டானதுபற்றி [2] அப்ஸரஸ்ஸுக்களென

1 இருடீகேசன். இது (ஹ்ருஷீகேச) என்னும் வடமொழியினின்று திரிந்துவந்தது. (ஹ்ருஷீக)ங்களென்றால் இந்திரியங்கள். (ஈச) னென்றால் அவைகளையடக்கித்தன்வசமாகச் செய்பவனென்று பொருள்.

2 அப்பென்றால் ஜலம். இங்கு ஜலம்போல் த்ரவமாகி அதன் விகாரமுமாகிய பால்லைச் சொல்லுகிறது. அதினின்று முண்டான ரஸம் அப்ரஸம். அதினின்றும் பிறந்தவர் அப்ஸரஸ்ஸுக்கள். (அப்ரஸர்) என்றுரைக்க வேண்டியிருக்க, ரஸசப்தம் 'பூஷோதராதீய

ன்று யதார்த்தமாகிய நாமத்தைப்பெற்றனர். அழகான ஒளியுடைய அவ்வப்ஸரஸ்ஸ்த்ரீகள் அறுபதினாயிரகோடிக் கணக்கிற்பிறந்தனர். அவர்களுடன் உண்டான அவர்களது வேலைக்காரிகள் இவ்வளவினரென்று கணக்கிடத்தரமன்று. அவ்வப்ஸரமடந்தையர் தமக்குப்பதியாரென்று விசாரமற்றிருந்தமையால் தேவாஸுரர்களில் ஒருவரும் அவர்களை விதிப்படி மணம்புரியவில்லை. ஆனால் பொதுவாக அநுபவித்துக்கொண்டிருந்தனர். ஆனதுபற்றியே அவர்கள் வேசிகளென்னுங் கியாதி பெற்றனர். பின்பு ஸமுத்ராதிதேவதையாகிய வருணனது புத்ரியாகி மஹாபாக்யம்பொருந்திய [1] வாருணியென்னுந் தேவதை கடலினின்றும் வெளிவந்து தன்னைக் கைப்பற்றுவார் யாரொன்று தேடிக்கொண்டிருக்கையில் திதிகுமாரர்களாகிய அஸுரர்களனைவரும் அவ்வருணபுத்ரியாகிய வாருணியைக் கைப்பற்றவில்லை. மஹாவீரனே! ராமா! அதிதிபுத்ரர்களாகிய தேவதைகள்மாத்திரம் தோஷமொன்றுமின்றி விளங்கிய அவ்வாருணியைக் கைக்கொண்டனர். வாருணியைக் கைப்பற்றுதது பற்றியே திதிகுமாரர்கள் [2] அஸுரரென்று பேர்பெற்றனர். அதை அங்கீகரித்தது பற்றியே தேவர்கள் ஸுரரென்று கியாதி அடைந்தனர்.

யோபஷிஷ்டம்' என்கிற வ்யாகரணஸூத்ரத்தின்படி (ஸரஸ்) என்று மாறிக்கிடக்கிறது. ஆகையால் (அப்ஸரஸ்) என்று காரணப் பெயராயிருக்கின்றது.

1 (வாருணி) யென்றால் கள்ளு. அதற்கு அதிஷ்டாநதேவதை இங்கு வாருணி யென்னப்பட்டது.

2 ஸுரை யென்றால் கள்ளு. இதுவே வாருணியென்றுரைக்கப் படுகின்றது. (ஸுரா ஏஷாமஸ்தீதி ஸுராஃ) அந்த வாருணியை உடையவர்களாகையால் ஸுரர்கள். மத்வர்த்தத்தில் (அர்ஶஆதிப்வாத் அச்ப்ரத்யயஃ) இங்ஙனமே (ஸுரா நாஸ்தி ஏஷாமிதி அஸுராஃ) அந்த வாருணியில்லாதவராகையால் அஸுரர்கள்.

அங்ஙனம் தேவதைகள் அவ்வாருணியைக் கைப்பற்றின மையால் உடம்பெங்கும் மயிர்க்கூச்செறியும்படி மிகுந்த ஸந்தோஷமடைந்தனர். புருஷோத்தமா! ராமா! பின்பு உச்சைச் சிரவஸ்ஸென்னும் உயர்ந்த குதிரையொன்றும் கௌஸ்துபமென்னும் சிறந்த ரத்நமொன்றும், அப்படியேமேலான அம்ருதமும் ஸமுத்திரத்தினின்று வெளியாயின. அவ்வம்ருதத்தைப் பீற்றித் தேவாஸுரர்களிருவரும் பெருத்த சண்டைசெய்து குலங்குலமாய் மாண்டனர். பின்பு தேவதைகள் அஸுரர்களை அதிகமாய்க் கொன்றனர். அப்பொழுது அஸுரர்கள் அனைவரும் தமக்குப் பலம் அதிகமாகும்பொருட்டு ராக்ஷஸர்களோடு ஒருமித்துக் கூடிக்கொண்டனர். பின்பு மூவுலகங்களையும் நடுநடுங்கச் செய்யும்படி மிகவும் பயங்கரமான யுத்தம் ஒன்று நடந்தது. அப்பொழுது தேவாஸுரர்கள் அனைவரும் அழிந்து போகுந்தசையைக்கண்டு மஹாபலமுடைய விஷ்ணு தேவன் ஜகத்தெல்லாம் மோஹிக்கும்படியான தனது மாயையைக்கொண்டு பார்த்ததே குடியாக யாவரும் காமவேட்கைகொண்டு மனமயங்கும்படி அற்புதமான மோஹினீரூபந் தரித்து அவர்களை வஞ்சித்து அவர்களிடமிருந்து அம்ருதத்தை அபஹரித்துக்கொண்டனன். எக்காலத்திலும் [1]அழிவின்றிப் புருஷோத்தமனென்று அஸாதாரணமாக நாமம்பெற்று ஸமஸ்தமும் நிறைவேற்றவல்லமையும் பொருந்தி விளங்கும் மாஹாநுபாவனாகிய அம்மஹாவிஷ்ணு தன்னையெதிர்த்து வந்தவர்கள் அனைவரையும்

---

1 (அழிவின்றி) அதாவது — (அஸ்தி, ஜாயதே, பரிணமதே, விவர்யதே, அபக்ஷீயதே, நஸ்யதி) என்று வழங்கிவருகிற ஸத்தை, ஜந்மம், பரிணாமம், வ்ருத்தி, அபக்ஷயம், நாசம் ஆகிய பாவவிகாரங்களாறுமற்றிருக்கை. இவற்றில் - ஸத்தை - இருத்தல். ஜந்மம் - பிறப்பு. வ்ருத்தி - வளர்தல். அபக்ஷயம் - குறைதல். நாசம் - தோன்றுதிருத்தல்.

வென்று பலமற்றவர்களாகச் செய்துவிட்டனன். பின்னும் தன்னைச் சரணம்புகுந்த வானவர்களையெல்லாம் ஆவேசித்து அவர்களுக்கு மிகுந்த பலமுண்டாகச் செய்தனன். பயங்கரமாகிய அத்தேவாஸுரயுத்தத்தில் அம்மஹாவிஷ்ணுவின் ஆவேசத்தால் பலம் அதிசயித்து விளங்கும் அதிதிகுமாரர்களாகிய தேவதைகள் திதிபுத்ரர்களாகிய அஸுரர்களை அடித்துக் கொன்றுவிட்டனர். இப்படி இந்திரன் திதிபுத்ரர்களைக்கொன்று த்ரிலோக ராஜ்யம் பெற்று அம்ருதங்கைபுகுந்து ஸந்தோஷமடைந்து கூட்டங்கூட்டமாக மஹர்ஷிகளோடும் சரணர்களோடும் மற்றுமுள்ளதேவர்களோடும் கூடி ஸமஸ்தலோகங்களையும் பரிபாலித்துவந்தனன். நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

திதி தவஞ்செய்தல்

திதி தன்புத்ரர்களாகிய அவ்வஸுரர்கள் அனைவரும் தேவர்களால்அடியுண்டு மாண்டுபோகையில் மிகத்துயரமடைந்து மரீசிமாமுனிவர் குமாரராகிய காச்யபரென்னும் தன்பர்த்தாவை நோக்கி ‘நாதா! மாஹாநுபாவரே! மிக்க பலம்பொருந்திய உமது புத்ரர்களால் என்பிள்ளைகள் யாவரும் அடியுண்டு மாண்டுவிட்டார்களே; ஆதலால் வெகுகாலம் தவஞ்செய்து அத்தவமஹிமையால் மிகுந்த வலிவுடன்கூடி இந்திரனைக் கொல்ல வல்லவனும் மூவுலகங்களையும் ஆளத்தக்கவனுமாகிய ஓர் புதல்வனைப் பெற யான் விரும்புகின்றனன். ஆனதுபற்றிப் பிள்ளையில்லாத யான் தவஞ்செய்யப்போகின்றேன். எனக்கு (நன்கு பலம்பொருந்தி மேலான வில்லெத்தாங்கத்தக்க வல்லமை பெற்று எனது நிலையை அறிந்தவனும் யாவரையும் ஔமித்துப் பார்க்குந் தன்மையுடையவனும்) உலகங்கட்கெல்லாம்

அதிபதியாகுந் திறமுடையவனும் இந்திரனை ஸம்ஹரிக்க வல்லவனுமாகிய புதல்வனைத் தரவேண்டும். அதற்காக யான் தவஞ்செய்யும்படி எனக்கு [1]அநுமதியும் அளிக்கவேண்டும்' என்றிவ்வாறு வேண்டிக்கொண்டனள். மஹாநுபாவராகிய காச்யபரும் அங்ஙனந் திதி கூறிய அம்மொழிகளைக்கேட்டு, மிகத்துயரங்கொண்டு நிற்குந் திதியைப் பார்த்து, 'நீ வேண்டினபடி ஆகட்டும். உனக்குச்சுபமுண்டாகவேண்டும். நீ மிகத்தவம்புரிந்து நன்கு ஆசாரத்துடன் பிள்ளை பிறக்குமளவும் பரிசுத்தியோடிருக்கவேண்டும். அப்படி இருந்தாயாயின் யுத்தத்தில் இந்திரனைக் கொல்ல வல்லவனுகிய புதல்வனைப்பெறுவாய். ஆயிரமாண்டுகள் நிரம்பும்வரையில் சுசியாயிருப்பாயாயின் மூவுலகங்களையும் ஆளவல்லவனுகிய குமாரனை எனது அனுக்கிரகத்தினால் பெறுவாய்' என்றுரைத்து அம்மடந்தையைத் தன்கையினல் தடவிக்கொடுத்துத் தேறுதல்சொல்லி வயிற்றைப் பரிசித்து 'உனக்கு க்ஷேமம் உண்டாகுக' என்று மொழிந்துவிட்டுத் தவஞ்செய்யச் சென்றார். புருஷோத்தமா! ராமா! இவ்வாறு காச்யபர் உரைத்துச் சென்றபின்பு திதி மிக்க ஆநந்தங்கொண்டு விசாலாபுரத்துக்குப் பூர்வஸ்தாகமாகிய குசப்லவமென்னுமிவ்விடம் வந்து தாருணமாகத் தவம்புரிந்தனள். அம்மடந்தை அங்ஙனந் தவம் நடத்திக்கொண்டிருக்கையில் ஆயிரக்கண்ணனுகிய தேவேந்திரன் விநயம் முதலிய ஸகலநற்குணங்களும் அளவின்றி விளங்கும்படி அம்மாதரசுக்குப் பணிவிடைகள்யாவுஞ் செய்துவந்தனன். அவ்வானவராதிபதி அவளுக்கு வேண்டிய அக்நி தர்ப்பம் ஸமித்தை தீர்த்தம் பழம் கிழங்கு முதலி

---

1 ஸ்திரீகளுக்குப் பர்த்தாவின் அநுமதி யில்லாமல் ஸ்வதந்த்ரமாகத் தவம்முதலியவற்றில் அதிகாரமில்லாமையால் திதி காஸ்யபரை அநுமதி கொடுக்கும்படி ப்ரார்த்திக்கின்றாள்.

யவற்றையும் மற்றும் யாதுயாது வேண்டுமெனினும் அ வையெல்லாவற்றையும் கொண்டுவந்து கொடுத்தல், ச்ரம மாயிருக்கும்பொழுது உடம்பைப்பிடித்தல், விசிறியைக் கொண்டு வீசுதல் முதலிய கார்யங்களைச் செய்துகொண் டு ஒவ்வொருபொழுதும் தவறுமல் பரிசர்யையெல்லாம் நடத்திக்கொண்டிருந்தனன். பின்பு ஆயிரமாண்டுகள் நிரம்பப் பத்துவருஷங்கள் குறைந்திருக்கையில் திதி இந்திரன்செய்த சுச்ரூஷைக்கு மிகவும் ப்ரீதி யடைந்து அவனைப் பார்த்து 'வானவர்க்கதிபதீ! மஹாநுபாவரா கிய உன் தந்தையைக் கேட்டு ஆயிரமாண்டுகள் நிறைந்த பின்பு பிள்ளையைப் பெறும்படி யான் ஒருவரம் பெற்றனன். அதற்காக யான் தவஞ்செய்துகொண்டிருக்கின்றனன். வீரர்களிற்றலைவனே! இன்னும் ஆயிரமாண்டுகள் நிரம் பப் பத்துவருஷங்கள் குறைவாயிருக்கின்றன. உனக்குச் சுபமுண்டாகுக. அப்பத்துவருஷங்கள் நிறைந்த பின்பு உனது உடன்பிறந்தவனைக் காண்பாய். அவன் உன்னை வெல்லுவதற்கு உத்ஸாஹங் கொண்டிருப்பான். ஆயி னும் உனக்காக யான் ஸமாதானப்படுத்தி உன்னிடத்தில் நேசத்துடன் இருக்கச் செய்கின்றேன். நீ அவனுடன் கூடி மூவுலகங்களையும் வென்று மனக்கவலை தீர்ந்து ஸு கமாக வாழ்ந்திருப்பாய்'என்று சுச்ரூஷையாலுண்டான ஸந்தோஷத்தில் மதிமறந்து மொழிந்தனள். இங்ஙனம் மொழிந்து அந்தத் திதியானவள் ஸூர்யன் ஆகாயமத் தியிற் சென்றுவிளங்கி நடுப்பகலாகையில் நித்திரையால் தேகம் பரவசமாகத் [1]தலைமாட்டில் காலைவைத்துப்படுத்த

---

1 பகலில் நித்தை கூடாதென்று சாஸ்த்ர நிஷேதத்தால் ஆஸு நத்திலிருந்துகொண்டே உறங்கும்போது தலை சாய்ந்து காலில் படு வதால் அசுசித்வம் வந்ததென்று சிலர். தலை வைக்குமிடத்தில் காலை யும் கால் வைக்குமிடத்தில் தலையையும் வைத்துப் படுத்தாளாகை

னள். இந்திரன் இப்படி அவ்வம்மை சுசி தப்பிக் கால்மாட்டில் தலையையும் தலைமாட்டில் காலையுமாக வைத்துக்கொண்டு நித்திரைபோயிருப்பது கண்டு, இவள் வீண்கர்வப்பட்டாளென்னு தனக்குள் சிரித்துக்கொண்டு அவளது கர்ப்பத்தைக்கெடுக்க அவகாசம் நேரிட்டதுபற்றி ஸந்தோஷங்கொண்டு அவளதுசரீரத்தினுட்புகுந்து மிகவுந் தீரனாகையால் அக்கருவை ஏழுதுண்டங்களாகப் பிளந்துவிட்டனன். இங்ஙனம் இந்திரன் அநேகங்கணுக்களையுடைய தனது வஜ்ராயுதத்தினால் கருவைப் பிளந்துகொண்டிருக்கையில் அச்சிசு இனியகுரலுடன் அழத்தொடங்கிற்று. பின்பு திதியும் அவ்வழுகுரலைக் கேட்டு எழுந்திருந்தனள். தேவேந்திரன் அதுகண்டு சிசுவைப் பார்த்து 'அழவேண்டாம், அழவேண்டாம்' என்றுரைத்து அது அழுதுகொண்டேயிருப்பினும் மிகக்களிப்புடன் துண்டு துண்டாகச்செய்தனன். திதியும் 'கொல்லவேண்டாம், கொல்ல வேண்டாம்' என்று மொழிய, தேவாதிபதியும் தாய்வார்த்தையில் கௌரவம் வைத்து வயிற்றிலிருந்து வெளியே வந்து வஜ்ராயுதமும் கையுமாகத் தோற்றிக்கொண்டு நின்று கையைக் கூப்பித் திதியைப் பார்த்துத் 'தாயே! நீ சுசிதப்பிக் கால்மாட்டில் தலையை வைத்துக்கொண்டு நித்திரைசெய்தனை. ஆகையால் நான் அவகாசம்பெற்று இந்திரனை யுத்தத்தில் கொல்ல வல்ல இச்சிசுவை ஏழுதுண்டங்களாகக் கண்டித்துவிட்டனன். தாயே! நீ இதைப்பொறுக்கவேண்டும்' என்று மொழிந்தனன். காற்பத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

யால அசுசித்வமென்று சிலர். கிழக்குத் தெற்குகளில் தலை வைக்க வேணுமென்கிற ஸ்மருதிக்கு விரோதமாய்ப் படுத்தாளாகையால் அசுசித்வமென்று சிலர். மற்றுஞ் சிலர் கிருஷ்ணஜினத்தின் தலைப்பக்கம் காலையும் கால்பக்கம் தலையையும் வைத்துப் படுத்தாளாகையால் அசுசித்வம் வந்ததென்று கூறுவர்.

ஸப்தமாருத விருத்தாந்தம்.

இவ்வாறு தன் கருவை இந்திரன் ஏழுதுண்டங்களாகச் செய்யக்கண்டு, திதி மிகவும் துயரமடைந்து யாவராலும் வெல்லமுடியாத வல்லவனுகிய தேவேந்திரனை நோக்கி 'ஓ வானவர்க்கரசே! எனது அபராதத்தால். இக்கரு ஏழுதுண்டங்களாக வீணுய்விட்டது. இதில் உனது பிழையாதொன்றும் இல்லை. வீணுயொழிந்த இக்கருவுக்கு ஓர் மேன்மை கொடுக்கவேண்டுமாக விரும்புகின்றேன். இத்துண்டங்களேழும் [1]வாயுலோகங்களேழையும் பாதுகாப்பவர்களாகவேண்டும். குழந்தாய்! என்னிடமுண்டான இவ்வேழுபுத்ரர்களும் வாதஸ்கந்தாபிமானிதேவதைகளாகி, தேவரூபந் தரித்து [2]மாருதர்களென்னும்பேர்பெற்று வானுலகில் வாழ்ந்திருக்கவேண்டும். ஒருவன் ப்ரஹ்மலோகத்தில் ஸஞ்சரிக்கவேண்டும். மற்றொருவன் இந்த்ரலோகத்தில் திரிந்துகொண்டிருக்கவேண்டும். மூன்றுவன் பெரும்புகழ்பெற்று வாயுவென்னும் பேர்கொண்டு விஷ்ணுபதமென்று வழங்கும் விஷ்ணுலோ

---

1 (வாயுலோகங்க ளேழையும்) 'ஸ்பர்ஶநோ வாயுராகாஶஸ்ய தயாபரः। ப்ராணः ப்ராணேஶ்வரோ ஜீவ இத்யேதே ஸப்த மாருதாः' என்று வாயுக்கள் ஏழுவர். அப்படியே அவர்களது லோகங்களும் ஏழாயிருக்கும். ஆவஹ, ப்ரவஹ, ஸம்வஹ, உத்வஹ, விவஹ, பரிவஹ, பராவஹர்கள் என்று ஸப்தமருத்துக்கள் ஸ்ரீவிஷ்ணு புராணத்திற் சொல்லப்பட்டனர்.

2 (மாருதர்களென்னும் பேர்பெற்று) மருத்துக்களென்பது வாயுக்கள். அவைகளுக்கு அபிமானிதேவதைகளாகையால் (மருதாமிமே மாருதாः) என்று மாருதர்களென்னும் பேர் பெற்று. அன்றியே ஈ இச்சுசுவைப் பார்த்து 'மா ருதः, மா ருதः' 'அழவேண்டாம், அழவேண்டாம்' என்று மொழிந்தாயாகையால் மாருதர்களென்னும் பேர் பெற்று-என்க. உகாரம் 'பூஷோதராதீநி' என்கிற ஸூத்ரத்தின்படி தகாரமாக மாறிக்கிடக்கிறது.

கத்தில் வஸித்திருக்கவேண்டும். தேவாதிநாதனே! என
து புத்ரர்கள் மற்றை நால்வரும் உனதாணைக்குட்பட்டு
தேவத்வம்பெற்று நீஇட்டபேரைக்கொண்டே மாருதர்க
ளென்னும் கியாதி அடைந்து திசைகள் தோன்கிலும் ஸஞ்
சரித்துக்கொண்டிருக்கவேண்டும்' என்றிவ்வாறு இனிய
சொற்களைச்சொல்லினள். திதி இங்ஙனம் உரைத்தமொ
ழிகளைக்கேட்டுப் பகைவரைவெல்லுந்திறமுடைய ஆயிர
ங்கண்ணனாகிய தேவேந்திரன் கையைக் கூப்பிக்கொண்டு
'தாயே! எல்லாம் நீ சொன்னபடியே நடக்குமாக. இதிற்
சந்தேகமில்லை. உனது புத்திரர்கள் யாவரும் தேவத்
வம்பெற்று ஸஞ்சரிப்பார்களாக. உனக்கு நன்மையுண்டா
குக' என்றுரைத்தனன். ராமனே! தாயும் பிள்ளையுமா
கிய திதியும் தேவேந்திரனும் இப்படி அத்தபோவனத
தில் நிச்சயம்பண்ணிக்கொண்டு தந்தங்கருத்து நிறை
வேறப்பெற்று ஸ்வர்க்கத்துக்குப் போயினர்' என்று எனக்குக் கேள்வி. முன்பு இந்திரன் யாதோரிடத்தில் வஸித்திருந்து தவத்தினன்றிய திதிக்குப் பணிவிடைகள் செய்துகொண்டிருந்தனன், அத்தேசம் இதுவே. அது இப்பொழுது விசாலியென்னும் பேற்பேற்றிருக்கின்றது. இனி எந்தராஜவம்சத்தார் இப்பொழுது இங்கு வஸித்திருக்கின்றார்களோ, அதைச்சொல்லுகின்றேன்; கேட்பாயாக. இக்ஷ்வாகு மஹாராஜனுக்கு அலம்புஸை என்பவளிடத்தில் பரமதார்மிகனாகிய விசாலனென்றொருபுத்திரன் பிறந்தனன். அவ்விசாலன் தான் இங்கு விசாலியென்னும் இப்பட்டணத்தை நிருமித்தனன். விசாலமஹாராஜனுக்கு மிகுந்தபலமுள்ள ஹேமசந்திரனென்னும் புதல்வன் உண்டாயினன். ஹேமசந்திரனுக்கு ஸுசந்திரனென்பவன் தோன்றினன். ஸுசந்திரனுக்கு தூம்ராச்வனென்னும் பிள்ளை பிறந்தனன். தூம்ராச்வனுக்கு ஸ்ருஞ்ஜய

னென்பவன் உதித்தனன். ஸ்ருஞ்ஜயனுக்கு மிகுந்த பராக்ரமும் சிறந்தலம்பத்தும் அமைந்த ஸஹதேவனென்னும் குமாரன் பிறந்தனன். ஸஹதேவனுக்குப் பரமதார்மிகனாகிய குசாச்வனென்னும் புத்திரன் உண்டாயினன். குசாச்வனுக்கு மிகுந்ததேஜஸ்ஸும் அளவற்ற பராக்ரமும் பொருந்திய ஸோமதத்தனென்பவன் பிறந்தனன். ஸோமதத்தனுக்குக் காகுத்தனென்னும் குமாரன் தோன்றினன். அந்தக் காகுத்தனுடைய பிள்ளை மிகுந்த பராக்ரமசாலியும் தேவர்களோடொத்தவனும் பகைவரால் வெல்லமுடியாதவனுமாகிய ஸுமதியென்பவன். அவன் தான் இப்பொழுது இவ்விசாலாநகரத்தில் வஸித்திருக்கின்றனன். இக்ஷ்வாகுவின் அனுக்கிரகத்தினால் விசாலர்புராதிபதிகளாகிய அரசர்களாவரும் தீர்க்கமான வாழ்நாளையும் மிகுந்த தைரியத்தையும் சிறந்த வீரியத்தையும் பெற்றுப் பரமதார்மிகர்களுமாயிருப்பார்கள். ராமனே! நாம் இன்றிரவு இங்கு ஸுகமாக வஸித்திருப்போம். நாளை விடியற்காலத்தில் ஜநகமஹாராஜனைப் பார்க்கப் போகலாம்' என்றனர். மஹாதேஜஸ்வியும் மஹாயசஸ்வியுமாகிய ஸுமதியும் விச்வாமித்ரமாமுனியின் வரவைக் கேட்டு புரோஹிதர்களோடும் பந்துக்களோடுங்கூடி எதிர்கொண்டுவந்து அம்மாமுனியை நன்கு பூஜித்துக் கையைக்கூப்பிக்கொண்டு க்ஷேமம் விசாரித்து 'விச்வாமித்ரமாமுனிவரே! எனது தேசத்துக்கெழுந்தருளீர்சகங் கொடுத்ததுபற்றியான் மிகவும் தந்யனாகின்றனன். மஹாநுபாவராகிய உமது அனுக்கிரகத்தையும் யான் பெற்றனன். இனி எனக்கு நிகரான பாக்கியசாலிகள் எவருமில்லை' என்று மொழிந்தனன். நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஹல்யாவிருத்தாந்தம்.

இங்ஙனம் ஸுமதிமஹாராஜனும் விச்வாமித்ரமாமுனியுமாகிய இருவரும் ஒருவருக்கொருவர் க்ஷேமம் விசாரித்து, மறுமொழி சொல்லி முடிக்கும்போது, ஸுமதிமன்னவன் அம்மாமுனியைப் பார்த்து 'விச்வாமித்ரமாமுனிவரே! இக்குமாரர்களிருவரும் யாவர்? உமக்கு கன்மை உண்டாகவேண்டும். உருவத்தைப் பார்க்கில் விஷ்ணுவைப்போன்ற பராக்ரமமுடையவர்களாகத் தோன்றுகின்றனர். யானையைப்போல் கம்பீரமாகவும் சிங்கத்தைப்போல் மிக்க அழகாகவும் பெரும் புலியைப்போல் மிகப்பயங்கரமாகவும் மதித்த விருஷபத்தைப்போல் கர்வம் நிரம்பியதாகவும் இம்மஹாவீரர்களின் நடை புலப்படுகின்றது. இவரது கண்கள் தாமரையிதழ்போல் அகன்று செவ்வரிபோடி யாவருங்கண்டு மதிமயங்கும்படி லாவண்ய வெள்ளங் குடிகொண்டு விளங்குகின்றன. இவ்விருவரும் கத்தி அம்பறாத்தூணி வில்லென்னுமிவைகளைத் தரித்துப் பல ஆபரணங்களை யணிந்தாற்போல் பிரகாசிக்கின்றனர். அச்விநீதேவதைகளைப்போல் உருவத்திலொப்பற்று அதற்கேற்ற யௌவநப்பருவமும் பெற்றுப் பூமியில் ஸஞ்சரிக்கவேண்டுமென்றெண்ணிக்கொண்டிவந்த அழகிய தேவகுமாரர்களோ என்னும்படி தோன்றுகின்றனர். மிகவும் மெதுவான இவ்வடிகளைக்கொண்டு இக்குமாரர்கள் எப்படி இக்கடுங்கானகத்தைக் கடந்து இங்கு வந்தனர்? இவர்களது உருவத்தைப் பார்த்தமாத்திரத்தில்தானே கருத்தெல்லாம் நிறைந்திருப்பவர்களைனத்தோன்றுகின்றது. அப்படியிருக்க யாதுபயனை விரும்பியாருக்காக இங்குவந்தனர்? மாமுனிவரே! நீர் எல்லாமறிந்தவராகையால் இதைத் தெரியச் சொல்லவேண்டும். சந்த்ரஸூர்யர்கள் ஆகாயத்தை விளங்கச்செய்வதுபோல்

இவர்கள் இத்தேசத்தை விளங்கச்செய்கின்றனர். உயரம் முதலியதேஹப்ரமாணத்தாலும் மனத்திலுள்ள கருத்தை வெளிப்படுத்துகின்ற சிரிப்புமுதலியகுறிப்புகளாலும் பேச்சுகடைமுதலிய சேஷ்டைகளாலும் ஒருவர்க்கொருவரே ஒத்திருக்கின்றனர். மேலான ஆயுதங்களைத்தரித்து மிகுந்தவல்லமை அமைந்து விளங்குகின்ற இம்மஹாநுபாவர்களிருவரும் நடக்கமுடியாத இக்கொடியவழியைக்கடந்து வருவதற்குப் பயன் யாது? இதன் உண்மையை அறியவிரும்புகின்றேன்' என்று வினவினன். இங்ஙனம் வினவிய அம்மன்னவனது மொழிகளைக் கேட்டு விச்வாமித்ரமாமுனியும் ஸித்தாச்ரமத்துக்கு வந்திருந்தது, அங்கு யாகத்தையழிக்கவந்த அரக்கர்களைக்கொன்றது, ஜநகமஹாராஜனது யாகத்தைப்பார்க்கும் பொருட்டு மிதிலாபுரத்துக்குப் போவது முதலிய விருத்தாந்தங்களை எல்லாம் நடந்தபடியே சொல்லி முடிக்கக்கேட்டு, ஸுமதிமன்னவன் நமக்குமேலான அதிதிகள் கிடைட்டார்களேயென்று மிகுந்த சந்தோஷமடைந்து யாவரும் பூஜிக்கத்தக்க மஹிமைபொருந்தி மிகுந்த பலசாலிகளாகிய அத்தசாத சக்ரவர்த்தியின் குமாரர்களிருவரையும் மிகப்பரிவுடன் விதியின்படியே உபசரித்துக் கொண்டாடினன். பின்பு ராமலக்ஷ்மணர்களிருவரும் ஸுமதிமன்னவன்செய்த மேலான ஸத்காரம்பெற்று அங்கு ஓரிரவு வஸித்திருந்து மற்றை நாள் விடியற்காலத்திலெழுந்திருந்து புறப்பட்டு மிதிலாநகரை நோக்கிச் சென்றனர். அப்பொழுது முனிவர்கள் யாவரும் ஜநகராஜன் பட்டணமாகிய அழகான அம்மிதிலை மாநகரைக் கண்ணுற்று 'நன்று நன்று' என்று மகிழ்ந்து புகழ்ந்து கொண்டனர். இங்ஙனம் நடந்து போகையில் ராமன் அம்மிதிலைக்கருகானதொரு வநத்தில் ஜநங்களைருவருமின்றிப் பர்ணசாலையுமொன்று

மில்லாமல் ஆயினும் அழகாய்விளங்கும் பழையதோரா
ச்ரமத்தைக்கண்டு விச்வாமித்ரமாமுனியை நோக்கி
'மாமுனியே! மஹாநுபாவரே! இவ்விடம் மிகவும் அழகு
பொருந்தி ஓராச்ரமம்போல் தோற்றுகின்றது. ஆனால்
இங்கு ரிஷிகள் ஒருவரும் புலப்படவில்லை. ஆகையால்
இதுவென்? முன்பு இது யாருடைய ஆச்ரமம்? இதைக்
கேட்க விரும்புகின்றனன்' என்று வினவ, அவ்வார்த்தை
யைக்கேட்டுப் பேசவல்லவராகிய விச்வாமித்ரமாமுனிவ
ரும் அஹல்யையின் சாபத்துக்கு விடுமுறை நேரிட்டதே
யென்று ஸந்தோஷமடைந்து மிகவும் ஒளிபெற்று விள
ங்கி ராமனைப் பார்த்து 'ராமா! இவ்வாச்ரமம் யாருடை
யதோ? யாருடைய கோபத்தினால் இது சாபமடைந்த
தோ? அம்மஹாநுபாவரை உள்ளபடி சொல்லுகின்
றேன், கேளாய். முன்பு இது மஹாநுபாவராகிய கௌதம
மஹர்ஷியின் ஆச்ரமம். இது மிகவும் பெருமை பொரு
ந்தி விளங்கியிருந்ததுபற்றித், தேவர்களுங்கூட இதை
அதிகமாய்ப் புகழ்ந்துகொண்டிருந்தனர். பெருங்கீர்த்தி
பொருந்திய அந்தக் கௌதமமாமுனிவர் தன்பத்நியா
கிய அஹல்யையுடன்கூடி முன்பு பலஆண்டுகளாக இதில்
தவஞ்செய்துகொண்டிருந்தனர். ஒருகாலத்தில் இந்திரன்
அம்முனிவரில்லாததோரு ஸமயந் தெரியக்கண்டு அக்
கௌதமமுனிவரைப்போல வேடம்பூண்டுவந்து அஹல்
யையைப் பார்த்து 'ஓ மடந்தையர்மணியே! காமம் மீறி
போகத்தை விரும்புகிறவர்கள் இஷ்டப்படி க்ரீடிப்பர்களே
யன்றி ருதுகாலத்தை எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.
மேலும் பிரமனுல் தனக்குப் படைப்பதிலுள்ள வல்லமை
யெல்லாந்தோற்றும்படி ஒரு குறையுமின்றி நிருமிக்கப்ப
ட்டு, மிகவும் அழகுபொருந்தி விளங்குகின்ற உன்னைக்க
ண்டால் எவனுக்குத்தான் மனந்தளராதிருக்கும்? உனது

அழகான இடையைப் பார்த்து நான் இப்பொழுதே உன்னைப் புணர விரும்புகின்றேன்' என்றிங்ஙனம் வேண்டிக் கொள்ள, அதைக் கேட்டு அஹல்யையும் தனக்குள் 'என் பர்த்தாவாகிய கௌதமமுனி எப்பொழுதும் இவ்வண்ணம் வேண்டிக்கொள்ளார். மற்றொருவனும் இங்கு வரவல்லனல்லன். ஆனால் இந்திரனொருவனே வெகுநாளாக என்னை விரும்பியிருப்பதாகக் கேள்வி. ஆகையால் இவன் ஆயிரங்கண்ணனாகிய தேவேந்திரனே முனிவேடம்பூண்டு வந்தானகவேண்டும்' என்றறிந்து வானவர்க்கரசனாகிய அவ்விந்திரனைநோக்கி புணரவேண்டுமென்னுங் குதூஹலங் கொண்டு மதி மயங்கி அதற்குச் சம்மதித்து அவனை கலந்தநுபவித்துத் தன்கருத்தினேறி மனமகிழ்ச்சியடைந்து அவ்விந்திரனைப்பார்த்து 'வானவர்கோனே! நான் உன்னுடன் புணர்ந்து பயன்பெற்று மகிழ்ந்தேன். இனி இவ்விடம் விட்டு வேகமாய்ச் செல்வாயாக. நீ தேவர்களுக்கதிபதி. யாவர்க்கும் பெருமையைக் கொடுக்கவல்லவன். ஆகையால் ஒருவர்க்குந் தெரியாதபடி இவ்வண்ணஞ்செய்த உன்னையும் என்னையும் எப்பொழுதும் பாதுகாத்துக்கொள்வாயாக' என்று மொழிந்தனள். இந்திரனும் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே அஹல்யையைப் பார்த்து 'மங்கையர்க்கரசியே! நான் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். ஆகையால் இனி நில்லேன். வந்தவழியே போகின்றேன்' என்று சொல்லி இவ்வண்ணம் அம்மடந்தையுடன் கலந்து ஸுகித்து இடையில் கௌதமமுனி வந்துவிடுவரோ வென்று மனத்தில் அச்சங்கொண்டு விரைந்து அவ்வாச்ரமத்தினின்று வெளியே வந்தனன். அங்ஙனம் புறப்பட்டு வெளிவருகையில், பரிசுத்தமானதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஸமித்தையும் தர்ப்பத்தையும் எடுத்துக்கொண்டு அக்நியைப்போல் பளபளவென்று மிகுந்த

ஒளியுடன் ஜொலித்து விளங்குகின்ற கௌதமமஹர்ஷி உள்ளே புகுந்தனர். அம்மாமுனி தனது தவமஹிமையால் தேவாஸுரர்களாலும் எதிரிடமுடியாதவர். அப்படிப்பட்ட தபோநிதியாகிய கௌதமமுனி ஆச்ரமத்துக்குள் நுழைந்து வருவதைக்கண்டு தேவேந்திரன் அச்சமுற்று நடுநடுங்கி கலங்கொலிந்து முகவொளி மாறி நின்றனன். உடனே கல்லொழுக்கம் பொருந்திய அக்கௌதம மஹர்ஷியானவர் முனிவேடம்பூண்டு கொடுஞ்செயலுக்காகவந்த இந்திரனைக் கண்டு கோபாவேசங்கொண்டு 'அடா! மதிகேடனே! நீ எனது வேஷங்கொண்டு செய்யத்தகாத இச்செயலைச் செய்தனை. ஆகையால் உனது அண்டங்கள் இரண்டுமற்று நபும்ஸகனைப்போலிருப்பாயாக' என்று சபித்தனர். இங்ஙனம் மஹாநுபாவராகிய அம்மாமுனி கோபாவேசங்கொண்டு சபிக்க, அந்தக்ஷணத்திலேயே ஆயிரங்கண்ணனாகிய அவ்வானவர்க்கரசனது அண்டங்களிரண்டும் அறுந்து கீழே விழுந்துவிட்டன. அப்படி தேவேந்திரனுக்குச் சாபங்கொடுத்து அம்மாமுனி உடனே அஹல்யையைப் பார்த்து 'நீ இவ்வாச்ரமத்தில் அநேகமாயிரமாண்டுகள் வாயுபக்ஷணஞ் செய்துகொண்டு அந்தபாதாகளின்றி அதனால் வருத்தமடைந்து [1] இப்புழுதியில் புரண்டுருண்டு எவ்வகை

---

1. அஹல்யை புத்திபூர்வகமாக வியபிசாரம் செய்ததற்காகக் கௌதமமாமுனிவர் சாபரூபமாக ப்ராயச்சித்தம் விதித்தனர். ஆகையால் அஹல்யையைக் கல்லாகச் சபித்தாரென்று சொல்லலாகாது. ஆகையாலேயே (உனது உருவம் பெறுவாய்)என்கிற விடத்தில் முன்போல எல்லோருக்கும் புலப்படும்படியான உன்னுடைய தேஹத்தைப் பெறுவாயென்று பொருள் கொள்ளவேணும். ஆனாலும் 'ஸாததஸ் தஸ்ய ராமஸ்ய பாதஸ்பர்ஶாந் மஹாத்மநஃ। அஹல்யா ஸாபி நிர்முக்தா மஹாஸில்பா' என்று பாத்மபுராணத்தில் அஹல்யைக்குச் ஜொல்லப்பட்டது. இது கல்பாந்தரவ்ருத்

ப்ராணிகளுக்கும் புலப்படாதவளாகி வஸித்திருப் பாயாக. எப்பொழுது, யாவராலும் எதிரிடப்போ காத பராக்ரமம்பொருந்தியவனும் தசரதசக்ரவர்த்தி யின் புதல்வனுமாகிய ராமன் பாழடைந்து பயங்கரமாயி ருக்கின்ற இவ்வாச்ரமத்துக்கு வருவானே, அப்பொழு தது அவனுடைய பாதாரவிந்தத்தின் [1] பராகம்பட்டுப் பரி சுத்தையாகி லோபமோஹங்களைவிட்டு அவனை அதிதி லக்ஷணங்கொண்டு பூஜித்து என்னருகில் ஸந்தோஷத் டன் மறுபடியும் உனது உருவம்பெறுவாய்' என்று சாப மிட்டுச் சாபத்திற்கு முடிவையுங்கூறினர். மிகத் [2] தேஜ டையவரான அக்கௌதமமாமுனிவர் கொடுந்தாழில் புரிந்த அவ்வஹல்யையைக் குறித்து இவ்வண்ணமுரைத் து இவ்வாச்ரமத்தைவிட்டு ஸித்தர்களாலும் சாரணர்க ளாலும் எப்பொழுதுஞ் சூழப்பட்டு மிகவும் பாவநமாகிய இமயமலையின் சிகரத்திற்சென்று சாபங்கொடுத்த பாபத் துக்கு ப்ராயச்சித்தத்தின் பொருட்டு மிகத்தவஞ்செய்த னர். காற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஹல்யை சாபந்தீர்ந்து ராமனைப் பூஜித்தல்

பின்பு தேவேந்திரன் அண்டங்களற்று முகத்தில் வருத்தந்தோற்றும்படி மிகுந்த மனக்கலக்கமுற்று ரிஷிக் கூட்டங்கள் நிறைந்து சாரணர்களோடுகூடிய அக்நிமுத

தாந்தத்தை அநுஸரித்துச் சொல்லப்பட்டதென்று சிலர். மற்றுஞ் சிலர் பாத்ம புராணத்தை அநுஸரித்து அஹல்யை சிலையாகச் சபிக் கப்பட்டாளென்று கொண்டு, அதற்கநுகுணமாக (உனது உருவம் பெறுவாய்) என்கிறவிடத்தில் நீ சிலாரூபத்தை விட்டு உனக்கு அஸா தாரணமாயுள்ள தேஹத்தைப் பெறுவாயென்று கருத்துக் கூறுகின் றனர்.

1 பராகம்-தூசி. 2 தேஸு-தேஜஸ்ஸு.

லான தேவர்களை நோக்கி 'மஹாதபாவராகிய கௌதம முனி ஸமஸ்ததேவர்களையும் தந்தம்பதத்திலிருந்து கழுவச்செய்யும்படி மிகவுங்கோரமாகத் தவம்புரிந்திருக்கையில் அவர்க்குக் கோபத்தை யுண்டுபண்ணித் தவத்தைக் கெடுக்கும்பொருட்டு நான் இப்படிப்பட்ட செயலைச் செய்தனன். இக்காரியம் தேவர்களுக்காகவேயன்றி வேறில்லை. அம்முனியும் பெருத்த கோபாவேசங்கொண்டு எனது அண்டங்களைப் போக்கினர். அஹல்யையையும் சபித்துவிட்டனர். எனக்கும் அஹல்யைக்கும் பெருஞ்சாபங்கொடுத்ததுபற்றி அவருடைய தவங் குன்றிவிட்டதாகையால் நான் அவரது தவத்தைப் போக்கினேன். ஆகையால் தேவர்களே! நீங்களனைவரும் ரிஷிகளும் சாரணர்களுங்கூடி உங்களுக்கு ஸஹாயஞ்செய்த எனக்கு அண்டங்களுண்டாகும்படி செய்யவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனன். இங்ஙனம் இந்திரன் மொழிந்த மொழிகளைக் கேட்டு அக்நிமுதலாகிய தேவர்களியாவரும் ஸகல மருத்துக்களோடுங்கூடி பித்ரு தேவதைகளிடஞ்சென்று இப்பொழுது யாகத்தில் உங்களுக்குப் பாகமாக ஏற்படுத்தியிருக்கிற இம்மேஷங்களுக்கு அண்டங்களிருக்கின்றன. இந்திரனுக்கு அண்டங்கள் போயின. ஆகையால் இம்மேஷத்தினண்டங்களைக் கொய்து இந்திரனுக்குக் கொடுக்கவேண்டும். அண்டங்களில்லாவிடில் அதனால் வரும் ஸந்தோஷம் குறையுமே யென்ன வேண்டாம். இவைகளை அண்டமற்றவையாகச் செய்த போதிலும் உங்களுக்கு மிகுந்த ஸந்தோஷத்தைக் கொடுப்பனவாகும் இதுவேயன்றி, உங்களுக்கு ஸந்தோஷமுண்டாகும்பொருட்டு யாகஞ்செய்யும் மானிடவர்களும் அண்டமில்லாத மேஷத்தின்மாம்ஸத்தையே கொடுப்பார்கள். அது உங்களுக்கு மிகுந்தஸந்தோஷத்தை விளைவிப்

பதாயிருக்கும்' என்றனர். இங்ஙனம் அக்நி முதலிய தேவர்களின் வசநத்தைக் கேட்டு பித்ருதேவர்கள் யாவருங் கூடி அப்பொழுதே யூபஸ்தம்பத்திற் கட்டப்பட்டிருக்கிற மேஷத்தின் அண்டங்களைக் கொய்து வாங்கி இந்திரனுக்கு உபயோகப்படுத்தினர். காகுத்தனே! அதுமுதலாகப் பித்ருதேவதைகள் யாகங்களில் வந்து தமக்குக்கொடுக்கிற மேஷங்களினண்டங்களைப் போக்கியே அவைகளைப் புசித்து வருகின்றார்கள். மேஷங்களை அண்டங்களின்றியே தமக்குக் கொடுக்கிற மானிடவர்க்கும் அந்தப் பித்ருதேவதைகள் முன்போலவே பலங்களைக்கொடுக்கின்றனர். இந்திரனும் மிகுந்த ப்ரபாவமுடைய கௌதம மஹர்ஷியின் தவமகிமையால் அண்டங்களற்று அதுமுதலாக மேஷத்தின் அண்டங்களைப் பெற்றவனுயினன். ராமா! நீ மிகுந்த மகிமையமைந்தவன். அப்படிப்பட்ட நீ இங்குப் புகும்வரையில்தான் இவ்வஹல்யைக்குச் சாபங்கிடப்பது. ஆகையால் கல்லொழுக்கமுடையவராகிய அம்மாமுனிவரின் ஆச்ரமத்துக்கு வந்து தேவகன்னிகையைப்போல் ஒப்பில்லாத ரூபம்பொருந்தி மிகுந்த பாக்கியசாலினியாகிய அவ்வஹல்யையைச் சாபத்தினின்றும் ஈடேற்றச்செய்வாயாக' என்று இவ்வாறு விச்வாமித்ரமாமுனிவர் சொல்லிமுடிக்க, அவ்வசநத்தைக் கேட்டு ராமனும் லக்ஷ்மணனுங்கூடி விச்வாமித்ரமுனிவரை முன்னிட்டுக்கொண்டு அவ்வாச்ரமத்துக்குச் சென்று அஹல்யைக் கண்டனன். மிகுந்த பாக்கியம் பொருந்திய அவ்வஹல்யையும் தன்பர்த்தாவினது சாபத்தின்படி வாயுபக்ஷணம் முதலிய தவப்பெருக்கினல் மேன்மேலெனப் பெருகிவருகின்ற ஒளியுடன் பளபளவென்று விளங்கி மனிதர்களும் தேவர்களும் அஸுரர்களுமாகிய யாவராலும் அருகில் வந்து கண்கொண்டு காணக்கூடா

து நின்று, தனக்குள்ள வல்லமையனைத்தும் விளங்குமாறு மிக்க ஊக்கத்துடன் நெடுநாள் முயன்று கான்முகன் படைத்தானென்னும்படி யாவருங்கண்டு மதிமயங்குகைக்குரிய திவ்யரூபலாவண்யங்களுமமைந்து, தேவர்கள் அனைவருங்கூடித் தமது அற்புதசக்தியைக்கொண்டு நிருமிக்கப்பட்டவள்போலவும், விருக்ஷங்களும் கொடிகளும் பூக்களுமாகிய இவைகளினிடையிலிருப்பது பற்றிப் பனியும் மேகமும் மூடிய பூர்ண்சந்திரன் போலவும், புகையுடன்கூடியெரிகிற அக்நிபோலவும், ஜலத்தின் மத்தியில் பளபளவென்று ப்ரகாசிக்கிற சூரியமண்டலம்போலவும் தோன்றினள். அவ்வம்மையும் கௌதமமஹர்ஷியினுடைய சாபவசநத்தின்படி ராமதர்சநம்வரையில் யாவர்க்கும் புலப்படாதிருந்து அப்பொழுது சாபத்தின்முடிவு கேரிட்டதுபற்றி விச்வாமித்ரமாமுனிமுதலியவர்களது கண்ணுக்குப் புலப்பட்டவளாயினள். அப்பொழுது ராமலக்ஷ்மணர்களிருவரும் மிக்க ப்ரபாவம்பொருந்திய கௌதமமுனியின் பத்நியாகிய அவ்வஹல்யையினதுபாதங்களில் வீழ்ந்து வந்தநஞ் செய்தனர். அவ்வம்மையும் தன் பர்த்தாவாகிய கௌதமமஹர்ஷியின் மொழியை நினைத்து அவர்களைப் பூஜிக்க முயன்று மிக்க ஊக்கத்துடன் சாஸ்த்ரங்களிற்சொல்லியபடி அர்க்கியபாத்தியங்களைக் கொடுத்து அதிதிஸத்காரம் நடத்தக் காகுத்தனும் அதை அங்கீகரித்தனன். அப்பொழுது தேவர்கள் புஷ்பவர்ஷங்களைப் பெய்தனர். துந்துபிவாத்தியங்களை முழங்கச்செய்தனர். கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸ்த்ரீகளும் கூட்டங்கூட்டமாக வந்து ந்ருத்யகீதவாத்யங்களை நடத்தினர். அஹல்யையும் தனது தவமகிமையால் சரீரதோஷங்களற்று மிகப்பரிசுத்தியும்பெற்று, அப்பொழுது ராமன்வந்தது முதலிய விருத்தாந்தங்களையெல்லாங்கண்டறிந்து யோக

ப்ரபாவத்தினால் அவ்விடம் வந்த கௌதமமஹர்ஷியின் வசஞ்சேர்ந்திருக்கக்கண்டு தேவர்கள் அனைவரும் நன்று நன்றென்று அம்மடந்தையைக் கொண்டாடினர். மஹாதபாவராகிய கௌதமமஹர்ஷியும் வெகுகாலமாகப் பிரிந்திருந்த அவ்வஹல்யையுடன் கலந்து ஸுகத்தை அடைந்து ராமனை விதிப்படி நன்கு பூஜித்துப் பத்னியாகிய அஹல்யையுடன் பொருந்தி அவ்வாச்ரமத்தில் தவஞ்செய்யத் தொடங்கினர். ராமனும் அம்மாமுனியிடம் விதிப்படி நன்கு பூஜையைப்பெற்று அங்கிருந்து புறப்பட்டு மிதிலாநகரத்தைக்குறித்துச் சென்றனன். காற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமாதிகள் மிதிலைக்குப் போதலும், ஜநகன் விச்வாமித்ரரோடு ஸம்பாஷித்தலும்.

பின்பு ராமன் லக்ஷ்மணனுடன் கூட விச்வாமித்ரமாமுனியை முன்னிட்டுக்கொண்டு அவ்வாச்ரமத்துக்கு வடகிழக்காகச் சென்று ஜநகமஹாராஜனது யாகசாலைக்குப் போய்ச் சேர்ந்தனன். அப்பொழுது யாகசாலையைக் கண்ட ராம லக்ஷ்மணர்களிருவரும் அவ்விச்வாமித்ரமாமுனியைப் பார்த்து 'மஹாபாக்யசாலியே! மஹாதபாவனாகிய ஜநகமஹாராஜனது யாகஸம்பாரஸமக்ரி மிகவும் அழகாகப் புலப்படுகின்றது. வேதங்களை யோதியுணர்ந்தவர்களும் பல தேசாந்தரங்களில் வாஸஞ்செய்பவர்களுமாகிய ப்ராஹ்மணோத்தமர்கள் அநேகமாயிரம்பேர் இந்தயாகசாலையில் வந்திருக்கின்றார்கள். ரிஷிகள் வந்திறங்கியவிடங்களும் அக்நிஹோத்ரத்துக்குரிய ஸம்பாரங்களை யேற்றிக்கொண்டு வந்த வண்டிகள் நூறுநூறாக நிறைந்து விளங்குகின்றன. நாம் இறங்கியிருப்பதற்குரியதோரிடத்

தை யேற்படித்துவீராக' என்றனர். இவ்வண்ணமுரைத்த ராமனது வசநத்தைக் கேட்டு அம்மாமுனியும் ஜநக கூட்டமின்றி ஜல ஸௌக்கியமும் பொருந்தி மிகப்பரிசுத்தமுமாகிய ஓரிட்த்தில் விடுதி ஏற்படித்தினர். அப்பொழுது விச்வாமித்ரமாமுனிவர் வந்திருப்பதைக் கேட்டு ஜநகமஹாராஜன் யாதொரு தோஷங்களுமின்றி மிகப்பரிசுத்தராகி விளங்கும் தனது புரோஹிதராகிய சதாநந்தரை முன்னிட்டுக்கொண்டு மிக்க வணக்கத்துடன் வேகமாக யெதிர்கொண்டனன். மஹாநுபாவர்களாகிய ஜநகனது ரித்விக்குகளும் வெகு வேகத்துடன் அர்க்கியம் முதலியவற்றை யெடுத்துக்கொண்டுவந்து விதிப்படி மந்த்ரங்களைச் சொல்லி அம்முனிவருக்குக் கொடுத்து அதிதி ஸத்காரம் நடத்தினர். மஹாநுபாவனாகிய ஜநகமஹாராஜன் நடத்தின அதிதிபூஜையை அங்கீகரித்து விச்வாமித்ரமாமுனி அம்மன்னவனைப் பார்த்து க்ஷேமத்தையும் யாதொரு தீங்குமின்றி யாகம் நடக்கும் விதத்தையும் விசாரித்துப் பின்பு வந்திருக்கிற ரித்விக்குகளையும் புரோஹிதராகிய சதாநந்தரையும் க்ரமப்படி [1]குசலம் விசாரித்துவிட்டு அனைவரோடும்கூடி ஸந்தோஷித்திருந்தனர். பின்பு அம்மன்னவன் கையைக் கூப்பிக்கொண்டு அம்முனிவரை நோக்கி 'மஹாநுபாவரே! இம்முனிவர்களோடு கூடி ஆஸநத்தில் வீற்றிருப்பீராக' என்று வேண்டிக்கொள்ள, அதைக் கேட்டு விச்வாமித்ரமாமுனியும் ஆஸநத்தில் உட்கார்ந்தனர். பின்பு புரோஹிதராகிய சதாநந்தரும் மற்றுமுள்ள ரித்விக்குகளும் உட்கார, ஜநகமன்னவன் தானும் தனது மந்திரிகளுடன் உட்கார்ந்தனன். இப்படி சுற்றுப்பக்கத்திலும் ஆஸநங்களில் க்ரமப்படி யாவரும் உட்காரக்கண்டு பிறகு ஜநகமஹாராஜன் விச்வாமி

1 குசலம்-க்ஷேமம்.

த்ரரைப் பார்த்து 'மாமுனியே! இப்பொழுதுதான் எனது யாகம் நிரம்பப்பெற்றது. தேவர்களும் எனது யாகத்தை ஸபலமாக்கிவிட்டனர். யாகம் அப்படி யிருக்கட்டும். உம்மைக் கண்டகாட்சியே எனக்கு யாகத்தின்பயன். நீர் முனிவர்களுடன் கூடி எனது யாகசாலைக்கு வந்தது பற்றி நான் மிகவும் தன்யனினன். உமது கருணையும் பெற்றேன். ப்ரஹ்மர்ஷியே! கற்றுணர்ந்தவராகிய ரித்விக்குகள் யாவரும் எனது யாகம் முடிய இன்னும் பன்னிரண்டு காளிருக்கின்றனவாகச் சொல்லுகின்றனர். அவை கடந்தபின் தந்தமது ஹவிர்ப்பாகங்களைவாங்கிக்கொள்ள வரும் தேவர்களைப் பார்க்கத்தகும்' என்றுரைத்து முகத்திற்சந்தோஷம் நிரம்ப மறுபடியும் அம்மாமுனியை நோக்கிக் கையைக் கூப்பிக்கொண்டு இவ்வாறு விளவினன். 'மாமுனியே! உமக்குச் சுபமுண்டாகவேண்டும. இக்குமாரர்களிருவரும் யாவர்? உருவத்தைப் பார்க்கில் விஷ்ணுவைப்போன்ற பராக்ரமமுடையவர்களாகத் தோற்றுகின்றனர். யானையைப் போல் கம்பீரமாகவும், சிங்கத்தைப் போல் மிக்க அழகாகவும், பெரும்புலியைப்போல் மிகப்பயங்கரமாகவும், மதித்த விருஷபத்தைப்போல் கர்வம் நிரம்பியதாகவும் இம்மஹாவீரர்களின் நடை புலப்படுகின்றது. இவரது கண்கள் தாமரையிதழ்போல் அகன்று செவ்வரியோடி யாவருங்கண்டு மதிமயங்கும்படி லாவண்யவெள்ளங்குடிகொண்டு விளங்குகின்றன. இவ்விருவரும் கத்தி அம்பறாத்தூணி வில்லென்னுமிவ்வாயுதங்களைத் தரித்திருப்பினும் பல ஆபரணங்களை யணிந்தாற்போல் ப்ரகாசிக்கின்றனர். அச்வினீதேவதைகளைப்போல் உருவத்தில் ஒப்பற்று அதற்கேற்ற யௌவனப்பருவமும் பெற்றுப் பூமியில் ஸஞ்சரிக்கவேண்டுமென்றெண்ணங்கொண்டு வந்த அழகிய தேவகுமாரர்களோ வென்னும்படி தோற்

றுகின்றனர். இக்குமாரர்கள் மிக மெதுவான இவ்வடிக ளைக்கொண்டு எப்படி இக்கடுங்கானகத்தைக் கடந்து இங்கு வந்தனர். இவர்களது உருவத்தைப் பார்த்தமாத்திரத்தில்தானே கருத்தெல்லாம் நிரம்பப்பெற்றவரென த்தோற்றுகின்றது. இங்ஙனம் இருக்க யாது பயனை விரும்பி யாருக்காக இங்கு வந்தனர்? மாமுனியே! நீர் எல்லாமறிய வல்லவர். மேலான ஆயுதங்களைத் தரித்து மிகுந்த வல்லமையமைந்து விளங்குகின்ற இவ்விருவரும் சுந்தமஹாநுபாவனுடைய புத்திரர்கள். சந்த்ர ஸூர்யர்கள் ஆகாயத்தை விளங்கச் செய்வதுபோல் இவ்விருவரும் இத்தேசத்தை விளங்கச் செய்கின்றனர். உயரம் முதலிய தேகப்ரமாணத்தாலும், மனத்திலுள்ள கருத்தை வெளிப்படுத்துகிற சிரிப்புமுதலிய ஆகாரங்களாலும் பேச்சு நடை முதலிய சேஷ்டைகளாலும் ஒருவருக்கொருவரே ஒத்திருக்கின்றனர். [1]காகபக்ஷங்களைத் தரித்து இளமைப்பருவத்திலிருப்பவர்களாயினும் மிக்க வீரத்தன்மை பொருந்திய இக்குமாரர்களது விருத்தாந்தத்தை உள்ளபடி கேட்க விரும்புகின்றனன்' என்று மஹாநுபாவனுகிய அம்மன்னவன் மொழிந்த உரைகளைக் கேட்டு, விச்வாமித்ரரும் மிக்கமகிமைபொருந்திய அவ்விருவரையும் தசரத சக்ரவர்த்தியின் குமாரர்களெனத் தெரிவித்து, மேலும் ஸித்தாச்ரமத்துக்கு வந்தது, அங்கு யாகத்துக்கு விக்நஞ் செய்யவந்த ராக்ஷஸர்களைக் கொன்றது, ராக்ஷஸர் குடி புகுந்து வஸித்திருக்கிற அக்கடுங்கானகத்தில் பயமின்றி அவர்கள் நடந்து வந்தது, விசாலாபுரியைக்கண்டது, அஹல்யையைப் பார்

(1) ராஜபுத்ரர்கள் வைத்துக்கொள்ளும் முக்குடுமி. இதைப் பக்கக் குடுமியென்றும் சிறு குடுமியென்றும் கன்றுக்குடுமி யென்றும் ஜில்பா என்றுஞ் சொல்லுவார்கள்.

த்தது, கௌதமரோடு கலந்தது, ஜநகனிடத்திலிருக்கிற பெரிய வில்லின் ஸரித்தை அறிபக்கோலி வந்தது ஆகிய இவை யெல்லாவற்றையும் மஹாநுபாவனாகிய ஜநக மஹாராஜனுக்குச் சொல்லி மிக்கப்பரபரவமுடைய விச்வாமித்ரமாமுனிவர் முடித்து நின்றனர். ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

சதாநந்தர் விச்வாமித்ரமுனிவரது சரித்திரத்தைக் கூறுதல்.

[1] மிகுந்த மதியுடைய விச்வாமித்ரமாமுனி அவ்வாறு சொன்ன மொழிகளைக்கேட்டு மிகத் தவம்பொருந்தி மஹாதேஜஸ்வியுமாகிய சதாநந்தர் தனது சரீரமெங்கும் மயிர்க்கூச்சலடைந்தனர். [2] தவப்பெருக்கினால் அளவின்றி வளர்ந்து மிகவும் பரபரவென்று ஜ்வலிக்கிற தேஜஸ்ஸையுடைய மஹாநுபாவராகிய அச்சதாநந்தர் கௌதம மஹர்ஷியின் மூத்த குமாரர். ஆனதுபற்றி அவர் ராமனைப்பார்த்த மாத்திரத்திலேயே 'எனது தாயைச் சாபத்தினின்றும் நீக்குவித்த ராமனது மகிமையே மகிமை' என்று மிக்கவியப்படைந்தனர். பிறகு இந்தச் சதாநந்தர் ராஜகுமாரர்களாகிய அவ்விருவரும் ஸுகமாக ஆஸநத்தில் வீற்றிருக்கக் கண்டு விச்வாமித்ரமுனிவரை நோக்கி

---

(1) ஆசார்ய வைபவம் அவச்யம் அறியத்தக்கதென்னு மபிப்ராயங்கொண்டு இது முதலாகப் பதினேந்து ஸர்க்கங்களாலே விச்வாமித்ரது சரித்திரத்தைச் சொல்லுகிறார் வால்மீகி சதாநந்தர் வாக்யத்தாலே.

(2) மிகத்தவம்பொருந்திய கௌதமமஹர்ஷியின் புத்திரராகிய சதாநந்தரும் 'பிதுர்மஹத்தபஸோ புத்ரஃ' என்கிற்சொற்படி தகப்பனுக்கு மேலான தவப்பெருக்குடையவரெனக் கருதி (தவப்பெருக்கினால்) என்றது முதலாக (கௌதம மஹர்ஷியின் மூத்த குமாரர்) என்றதீறுகச்சொல்லப்பட்டது.

'மாமுனிவரே! நெடுநாளாகப் புழுதியிற் புரண்டு காற்று மழை வெயில் பசி யென்னுமிவைகளைப் பொறுத்திருப்ப தாகிய தவத்தைப் புரிந்து பெரும்புகழ்பெற்ற எனது தா யைத் தசரதச்சக்ரவர்த்தியின் குமாரனுகிய ராமனுக்குக் காண்பித்தீரா? மஹாப்ரபாவமுடையவனும் பெருங்கீர்த்தி பெற்றவளுமாகிய அவ்வம்மை ஸமஸ்தப்ராணிகளும் ஒரு மித்துப் புகழுகைக்குரிய மஹாநுபாவனுகிய ராமனுக்கு வநத்திலுண்டாகுங் காய் கிழங்கு முதலியவற்றைக் கொண்டு அதிதிஸத்காரம் நடத்தினளா? முன்பு தெய் வச்செயலால் எனது தாய்க்கு இந்திரனைப்பற்றி நேரிட் டகொடிய விருத்தாந்தத்தை ராமனுக்குத் தெரிவித்தீ ரன்றே? குசிகவம்சத்திற்பிறந்த மஹாநுபாவரே! உம க்கு நன்மையுண்டாகவேண்டும். எனது அன்னையும் ராம னைக்கண்டு ஸத்காரம் முதலியவை நடத்தினபின்பு அம் மகிமையால் எனது தந்தையுடன் கூடினளா? எனது தந் தையும் ராமனைப் பூஜித்தனரா? இமாலயத்தினின்று அப்பொழுது எமதாச்ரமத்துக்கு வந்த மிக்க ப்ரபாவம் பொருந்திய எனது தந்தையும் மஹாநுபாவனுகிய ராமனி டமிருந்து அஹல்யாதாநமென்னும் பூஜையைப் பெற்றன ரா? எனது தந்தை மனத்திற் சினம்மாறித் திரியவும் இவ்வாச்ரமத்துக்கு வரும்பொழுது ராமன் மனஸ்காங் கொண்டு நமஸ்கரித்தனனு? என்று இவ்வண்ணம் வின வ, அதைக் கேட்டு விச்வாமித்ரமாமுனியும் அவ்வாக்கிய த்தின் கருத்தை யெல்லாமுணர்ந்து பேசவல்லவராகிய சதாநந்தரைப் பார்த்து 'முனிவேழமே! சதாநந்தா! நான் ஒன்றையும் மறந்துவிடவில்லை. எச்சமயத்தில் எதைச் செய்யவேண்டியது அவச்யமோ, அதையெல்லாஞ் செய் து முடித்துவிட்டனன். ரேணுகை ஜமதக்நியைப்போல அஹல்யையும் கௌதமரோடு கூடினள்' என்றுரைத்த

னர். விச்வாமித்ரர் மொழிந்த அவ்வசநத்தைக்கேட்டுச் சதாநந்தர் முகத்தில் ஒளிபரவும்படி மிகவுங்களிப்புற்று ராமனைப் பார்த்து இவ்வாறுமொழிந்தனர். 'மாணிடவரில் சிறந்தவனே! ராகவா! உனக்கு நல்வரவுண்டாக வேண்டும். ராமா! எவ்வண்ணத்திலும் யாவராலும் எதிரிட வொண்ணாத வைபவமுடைய இவ்விச்வாமித்ரமஹர்ஷியை முன்னிட்டுக்கொண்டு நீ இவ்விடம் வந்தது என் பாக்கியவசத்தினாலன்றி வேறில்லை. இவ்விச்வாமித்ரமாமுனி மனங்கொண்டு சிந்திக்கவும் முடியாத மேலான காரியங்களை நடத்தின மஹாநுபாவர். தவமகிமையால் இவர் ப்ரஹ்மர்ஷியாகி ஒப்பில்லாத ஒளிமீறி விளங்கிநிற்பவர். மிகுந்த ப்ரபாவமுடையவர். இவர் உனக்கு மேன்மேலும் பரமஹிதங்களை நடத்துமவரென்று நன்கு அறிவாயன்றே? மிகக்கடுமையான தவங்களை நடத்தின குசிகபுத்திரராகிய விச்வாமித்ரர் காப்பவராயிருப்பது பற்றி இப்புவனியில் உன்னையொழிய பாக்கியசாலி மற்றொருவன் எவனும் இல்லவேயில்லை. மஹாநுபாவராகிய இக்கௌசிகரது தவமகிமை எவ்வகைப்பட்டதோ, இவரது சரித்திரம் எவ்வண்ணங்கொண்டதோ, அதைச்சொல்லுகின்றேன், அவதாநத்துடன் கேட்பாயாக. தர்மத்தையே சரீரமாகப் பெற்றிருக்கின்ற இவ்விச்வாமித்ரமுனிவர் வெகுகாலம் அரசனாயிருந்து பகைவரைப் பயந்தோடச்செய்பவரும் தர்மங்களையறிந்து நடத்துந்திறமுடையவரும் கல்விகளனைத்தையும் கற்றறிந்தவரும் ப்ரஜைகளுக்கு நன்மைசெய்வதிலூக்கமுடையவருமாயிருந்தனர். இவரது வம்சபரம்பரையைச் சொல்லுகின்றேன், கேள். ப்ரஹ்மதேவனது குமாரன் குசனென்னும் ஓரரசனுண்டு. அந்தக்குசனுக்கு மிகுந்த பலமுடையவனும் மிக்கதார்மிகனுமாகிய குசநாபனென்று ஒரு புதல்வன்

உண்டாயினன். அந்தக் குசநாபனுக்குக் காதியென்று ஓ ருவன் பிறந்தனன். மஹாதேஜஸ்வியாகிய இவ்விச்வாமித் ரமாமுனி அந்தக்காதியின்குமாரர். இந்த விச்வாமித் ரரும் தமது பராக்ரமம் மிகுந்து எங்கும் விளங்குமாறு பல ஆயிரமாண்டுகள் அரசனுயிருந்து பூமியைப் பரிபாலி த்துக்கொண்டு ராஜ்யஞ்செய்து வந்தனர். மிகவும் பரா க்ரமசாலியாகிய இவ்விச்வாமித்ரர் ஒருகாலத்திற்புறப் பட்டுச் சதுரங்கபலத்தையுங் கூட்டிக்கொண்டு அக்ஷௌ ஹிணிக்கணக்கில் நான்கு பக்கத்திலும் ஸைந்யங்கள் சூழப்பெற்றுத் தரணிமுழுதுந் திரிவதாகக்கோலி, நாநா தேசங்களையும் அதிலுள்ள பலவகை நகரங்களையும் [1]நதீ நதங்களையும் பர்வதங்களையும் புண்யாச்ரமங்களையும் க்ரம மாகச் சுற்றிக்கொண்டு வஸிஷ்டாச்ரமத்துக்கு வந்து சேர்ந்தனர். அது தழைத்தோங்கிய பலவகை விருக்ஷ ங்களால் எங்கும் நிறைந்து நெருங்கி அழகாயிருக்கும். அதில் சிங்கம் புலி யானை காடிமுதலிய பலவகை மிருக ங்களும் கூட்டங்கூட்டமாக நிறைந்து திரிந்துகொண்டி ருக்கும். பின்னும் அவ்வாச்ரமம் ஸித்தசாரணதேவதா கண கந்தர்வ கிந்நர பந்நகர்முதலிய மஹாநுபாவர்களால் எப்பொழுதும் எங்கும் நிரம்பப்பெற்று விளங்கும். அங்கு மனிதர்களைக் கண்டு மான்கள் பயந்தோடாதிருக்கும். எவ்வகை மிருகங்களும் ஒன்றோடொன்று வைரமின்றி நேசம் பொருந்தியிருக்கும். அங்குப் பறவைகள் பலவும் உலாவிக்கொண்டிருக்கும். மேலும் அது ப்ரஹ்மர்ஷிக ளாலும் தேவர்ஷிகளாலும் கூட்டங்கூட்டமாக நிறையப் பெற்று மிகவுமழகாயிருக்கும். இவ்வளவேயன்றித் தவ ஞ்செய்து ஸித்தி பெற்றவர்களும் அக்கியை நிகர்த்தவர்

1 நதிகள்-இழக்குமுகமாகப் பெருகுமாறுகள். நதங்கள் மேற் குமுகமாகப் பெருகுமாறுகள்.

களும் மஹாதேஜஸ்விகளும் ஜலத்தையே ஆகாரமாகக் கொண்டவர்களும் வாயுபக்ஷணமாத்திரத்தில் ப்ராணதாரணஞ்செய்பவர்களும் உலர்ந்த சருகு காய் கிழங்குகளைப் புசித்து ஜீவித்துத் தவம்புரிபவர்களும் மனத்தையடக்கி வென்றவர்களும் கோபமற்றவர்களும் ஐம்புலன்களையடக்கி ஜயித்தவர்களுமாகிய ரிஷிகளும், ஜபஹோமங்களையொழிவறச் செய்து விளங்கிய [1] வாலகில்யமஹர்ஷிகளும், மற்றுமுள்ள வைகாநஸர்முதலிய முனிவர்களும் எங்கும் நிரம்பி அவ்வாச்ரமம் மிகப் பரிசுத்தமாயிருக்கும். இப்படி வேறொரு ப்ரஹ்மலோகம்போல் ப்ரகாசித்து நிற்கிற அவ்வஸிஷ்டாச்ரமத்தை அளவற்ற ஸைந்யத்தோடு கூடி ஜயசீலர்களில் தலைவராகிய விச்வாமித்ரமன்னவர் கண்டு களித்தனர். [2] ஐம்பத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டமாமுனிவர் விச்வாமித்ரருக்கு ஆதித்யஞ்செய்தல்.

மிகுந்த பலம் பொருந்தியும் மிக்கபராக்ரமசாலியுமாகிய விச்வாமித்ரமன்னவர் முனிவர்களில் தலைவராகிய வஸிஷ்டரைப்பார்த்து ஸந்தோஷம் மேலெழ வணக்கத்துடன் நமஸ்காரஞ்செய்து நிற்க, அம்மஹாநு

---

1 ப்ரஹ்மாவினது வாலத்திலிருந்து உண்டான ரிஷிகள் வாலகில்யர்களென்றும், ப்ரஹ்மாவினது நகத்திலிருந்து உண்டான ரிஷிகள் வைகாநஸர்களென்றும் சொல்லப்படுகின்றனர். இங்கு 'யே நவாஃ, தே நெவாநஸாஃ. யே வாலாஃ, தே வாலவில்யாஃ' என்று ச்ருதி ப்ரமாணம்.

2 வஸிஷ்டருடைய ஆச்ரமத்தின் வைபவத்தை இங்ஙனம் பரக்கச் சொன்னது—இப்படிப்பட்ட மஹாநுபாவராகிய வஸிஷ்டமாமுனிவராலும் விச்வாமித்ரர் பூஜிக்கத்தக்க பெருமையுடையவரென்று தோற்றுகைக்காக.

பாவரும் 'உனக்கும் உனது பரிவாரங்களுக்கும் கல்வ ரவா' என்று விசாரித்து அவருக்கு ஆஸநங் கொ டுப்பித்தனர். பின்பு சிறந்த மதியுடைய விச்வாமி த்ரமன்னவர் அவ்வாஸநத்தில் உட்கார, அம்மாமுனிவ ரும் விதிப்படி அம்மன்னவருக்குக் காய் கிழங்கு மூதலிய வைகளைக் கொடுத்து அதிதிஸத்காரஞ்செய்தனர். அவ்வ ரசனும் அம்முனிமன்னவர் செய்த அப்பூஜையைப் பெற் றுக்கொண்டு அம்முனிவரைப் பார்த்துத் 'தவம் கடக்கின் றதா? அக்நிஹோத்ரகாரியங்களெல்லாம் யாதோரிடை யூறுமின்றி நடேறிவருகின்றனவா? சீடர்களனைவரும் க்ஷேமமா? இங்குள்ள விருக்ஷவகையெல்லாம் நன்கு வள ர்ந்து வருகின்றனவா' என்று தனது ஒளி விளங்கும்படி க்ஷேமம் விசாரித்தனர். வஸிஷ்டமாமுனியும் 'மன்னவர் தலைவனே! நீ கேட்டவையெல்லாம் க்ஷேமமே' என்று மறுமொழியுரைத்தனர். பிரமனுடைய புதல்வராகிய அம் மெய்த்தவமாமுனியும இவ்வண்ணம் க்ஷேமம் விசாரித்து விச்வாமித்ரமன்னவர் ஆஸநத்தில் ஸுகமாக உட்கார் ந்தபின்பு இவ்வாறு விளவினர். 'மன்னவனே! உனக்கு க்ஷேமமா? நீ பராக்ரமசாலியும் மிக்க தார்மிகனுமாயிருப் பவன். ஆகையால் ப்ரஜைகளைத் தர்மத்தின்வழியாகவே ஸந்தோஷிக்கச்செய்துகொண்டு [1]ராஜமார்க்கத்தை யநு ஸரித்து அவர்களைப் பரிபாலித்து வருகின்றீரன்றே? வேலைக்காரர்களையும் நன்கு ஸந்தோஷிக்கச்செய்கின்றீ ரன்றே? அவர்களும் உனது கட்டளை தவறாது நடந்து

---

1 'ந்யாயேநார்ஜநமர்யஸ்ய வர்யரம்பாலநந்தயா, ஸத்பாத்ரே ப்ரதிபத்திஸ்ச ராஜ்ஞ்யத்தஞ் சதுர்விதம்' 'ந்யாயமாகப் பணத்தைச் சம்பாதிப்பது, அதை விருத்தி செய்வது, அதைக் காப்பது, நல்லொ ழுக்கமுடையவர்களிடத்தில் அதை உபயோகப்படுத்துவது' என்று. ராஜமார்க்கம் நாலுவகைப்பட்டிருக்கும்.

வருகின்றீர்களே? நீ பகைவரைப்பறந்தோடச்செய்யவல்ல பராக்ரமம் பொருந்தி விளங்குகின்றனை. ஆனதுபற்றிச் சத்ருக்களனைவரும் தோற்புறப்பறந்தோடினரன்றே? சத்ருக்களைத்தபிக்கச்செய்யும் திறமுடையம்ஹாவீரனே! உனது சதுரங்கபலங்களும் பொக்கிஷங்களும் கண்பர்களும் புத்திரபௌத்திரர்களும் க்ஷேமமா?" என்று இப்படி வஸிஷ்டமஹாமுனிவர் கேட்க, விச்வாமித்ரரும் அம்மெய்த்தவரைநோக்கி மிக்கவணக்கத்துடன் 'நீர் விஜயியவை அனைத்தும் க்ஷேமமே' என்று பதிலுரைத்தனர். இங்ஙனம்பரமதார்மிகர்களாகிய அவ்விருவரும் நெடும்பொழுது மிகுந்தகளிப்புடன் ஒருவருக்கொருவர் க்ஷேமம் விசாரிப்பது பதிலுரைப்பதாகியஸல்லாபங்களைச் செய்துகொண்டு ஸந்தோஷித்திருந்தனர். ரகுகுலமனைத்தையுங் களிக்கச்செய்யவல்ல மஹாநுபாவனே! ராமா! அவ்விருவரும் இவ்வாறு ஒருவருக்கொருவர் பேசிமுடிந்தபின்பு, வஸிஷ்டமாமுனிவர் புன்னகையோடுகூடி விச்வாமித்ரரைப்பார்த்து 'மன்னவனே! நீ மிகுந்த விஸ்தாரத்துடன் இவ்விடம் வந்தனை. ஆகையால் இச்சதுரங்கபலத்துக்கும் அளவிடவொண்ணாத மஹிமைபொருந்திய உனக்கும் தகுந்தபடி விருந்து செய்ய விருப்பமுற்றிருக்கின்றனன். நீயும் எனது வேண்டுகோளுக்குட்பட்டு நான்செய்ய முயன்ற இவ்வதிதிஸத்காரத்தை அங்கீகரிக்கவேண்டும். நீ அரசனும், சிறந்த அதிதியுமாயிருக்கின்றனை. ஆனதுபற்றி உன்னை நான் யத்நத்துடன் பூஜிக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர். விச்வாமித்ரரும் வஸிஷ்டர் மொழிந்த மொழியைக் கேட்டு மிகுந்தமதியுடையவராய், அதுபற்றி அவருக்குச்ரமங்கொடுப்பது தகாதென்று மனத்திற்கருதி அவரைப் பார்த்து 'மஹாநுபாவரே! அதிதிஸத்காரஞ்செய்யவேண்டுமென்று மொழிந்த வசனமாத்திரத்திலேயே

எனக்கு உம்மிடமிருந்து அப்பூஜையெல்லாம் சேர்ந்து விட்டது. இனி வேறென்று செய்யவேண்டுமா? உமதாச்ரமத்திலுள்ள காய்கிழங்குகள், பாத்தியம், ஆசமனீயம், மிகுந்த மகிமையெல்லாமமைந்த உமது தர்சநம் ஆகிய இவைகளைக் கொடுத்து ஸமஸ்த ப்ரகாரங்களாலும் என்னை நன்கு பூஜித்தனர். நான் பூஜிக்கவேண்டியிருக்க, நீர் இவ்வளவு என்னை ஸத்கரிப்பது எனக்கு மேலானபூஜையாயிற்று. மேலும் பூஜையேதுக்கு? இது மிகவும் கற்றறிந்தவராகிய உமக்குத் தெரியாதவிஷயமன்று. ஆனதுபற்றி நான் போய் வருகின்றேன். இதோ நமஸ்காரஞ்செய்கின்றேன். என்னை நேசத்துடன் நோக்கிக் கடாக்ஷித்தருள் வீராக'என்றனர். இப்படி விச்வாமித்ரர் எவ்வளவு வேண்டாமென்று வேண்டிக்கொண்டபோதிலும் அவ்வஸிஷ்டமாமுனிவர் ஆழ்ந்த மனமுடையராயிருப்பதுபற்றி மேன்மேலும் விருந்துண்ணும்படி வேண்டிக்கொள்ள, விச்வாமித்ரரும் அப்படியேயென்று அங்கீகாரஞ்செய்து வஸிஷ்டரைப்பார்த்து 'மாமுனிவரே! உமது மனத்துக்கு எப்படியாகில் களிப்புண்டோ, அப்படியே ஆகட்டும்' என்றனர். அதற்கு வஸிஷ்டமாமுனியும் மனக்கலக்கம் நீங்கி அளவற்ற ஸந்தோஷமடைந்து முகத்தில் மிகவும் ஒளிமீறிமேலெழப் பலவகைவர்ணங்களமைந்து அழகான கமதேநுவை அழைத்துச் 'சபலையே! கடுக வருவாயாக. நானொருவார்த்தை சொல்லுகின்றேன். அதை நீ கேட்கவேண்டும். நான் இந்த ராஜர்ஷிக்கும் இவனது ஸைன்யங்களுக்கும் மிகச்சிறப்புடன் மேலானவிருந்துசெய்ய உத்தேசித்திருக்கின்றனன். நீ அதற்குவேண்டிய ஸம்பாரங்களைச் சித்தப்படுத்தவேண்டும். நீ வேண்டினவற்றையெல்லாம் கொடுக்கவல்லவளன்றோ? ஆனதுபற்றி ஆறுவகை ரஸங்களிலும் எவனுக்கு எது இஷ்டமோ, அதையெல்

லாம் அவர்களுக்கு நீ என்னைப்பற்றி அளிக்கவேண்டும். ரஸாயநங்களும் பக்ஷ்யங்களும் பாநகங்களும் தேன்முதலிய லேஹ்யங்களும் தயிர்முதலிய சோஷ்யங்களும் குவியல்குவியலாக அக்கங்களும் ஆகிய வேண்டியவற்றையெல்லாம் போரும்படி நிரூபிப்பாயாக. விளம்பிக்கவேண்டாம்' என்றனர். ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் காமதேநுவைத் தனக்குக் கொடுக்கும்படி வஸிஷ்டரை வேண்டிக்கொள்ளுதல்.

பகைஞரைப் பகுக்கின்ற மஹாவீரனே! ராமா! வஸிஷ்டர் இங்ஙனம் மொழிந்தபின்பு சபலையென்னும் காமதேநுவானது வேண்டினவற்றையெல்லாங் கொடுக்கவல்லமையுடையதுபற்றி எவனெவனுக்கு எப்படிவேண்டுமோ, அவனவனுக்கு அப்படியேவேண்டியவற்றையெல்லாம்நிரூபித்துச் சித்தப்படுத்திவிட்டது. கரும்பு, தேன், பொரி, புஷ்பங்களிலிறங்கிய மேலானகள், உயர்ந்தபாநகம், பலவகைப்பணியாரங்கள் ஆகிய இவை யெல்லாவற்றையும் சித்தஞ்செய்துகொடுத்தது. பின்னும் அவ்வாச்ரமத்தில் அப்பொழுதே சமைத்தனபோல் சுடுகையாறுமல் மலைகள் போல் குவிற்குவிலாகக் குவிந்த அந்நராசிகளும், பாயஸம் முதலிய மேலான ஆஹாரவர்க்கங்களும், பருப்புகளும், அப்படியே ஆற்றங்கால்போற் பெருகிவருகின்ற தயிர்ப்பெருக்குகளும், பலவகை ருசிகளுண்டாகும்படி ஆறுரஸங்களுமமைத்துச் செய்யப்பட்டு அளவற்ற பக்ஷ்யவிசேஷங்களும், பலவகை ஆஹாரங்கள் நிறைந்த போஜநபாத்ரங்களும் கணக்கின்றிச்சித்தஞ்செய்யப்பட்டிருந்தன. ராமா! விச்வாமித்ரரது ஸைந்யத்திலுள்ள ஜநங்களனைவரும் வஸிஷ்டமாமுனிவரதுவிருந்தைவேண்டியவரையிலுண்டு

மிகவும் களிப்புற்றுச் சரீரம்பூரித்துவலிவுபெற்றுப் போரா நந்தம் அடைந்தனர். ராஜர்ஷியாகிய விச்வாமித்ரரும் அவரதுஅந்தப்புரத்திலுள்ள மங்கைமார்களும் அவனுடன் வந்தஅந்தணர்களும் புரோஹிதர்களும் அப்படியே அவ்விருந்தையுண்டு மிக்க ஸந்தோஷமடைந்தனர். விச்வாமித்ரர் தன்னையும் தன்னுடன் காரியங்களை நிறைவேற்றும் பொருட்டும் ஆலோசனை செய்யும் பொருட்டும் வந்திருக்கிற மந்திரிகள் வேலைக்காரர்களாகிய தனது பரிவாரங்களையும் வேண்டியஅளவுக்குமேலாக ஸத்கரித்ததைப்பற்றி அப்பொழுது மிகுந்த ஸந்தோஷமடைந்து, அம்முனிவரை நோக்கி 'அந்தணர்களில் தலைவரே! நீர் என்னைப் போன்றவர்களால் மிகவும் பூஜிக்கத் தக்கவர். இப்படியிருக்க, நீர் என்னை இங்ஙனம் அதிதிஸத்காரம் அபாரமாகச்செய்து கன்கு பூஜித்தீர். இத்தைபொழிய மேன்மை எனக்கு யாதும் தோற்றவில்லை. அதெல்லாம் அப்படியிருக்கட்டும்.பேசுவதில் நீர் மிக்கவல்லமை அமைந்தவர். ஆனதுபற்றி உம்மிடத்தில் ஒரு வார்த்தை சொல்லுகின்றேன்;கேட்பீராக. உமக்கு லக்ஷம் பசுக்களைக் கொடுக்கின்றேன்.அவற்றை வாங்கிக்கொண்டு எனக்கு இந்தக்காமதேநுவைக் கொடுக்கவேண்டும். இது பசுஜாதிகளெல்லாவற்றிலும் மிகச்சிறப்புற்றது. ஆகையால் இதை ரத்நமெனத் தகும். ரத்நங்களனைத்தும் அரசனைச் சேரவேண்டுமென்பது உமக்குத்தெரியாதவிஷயமன்றே? ஆனதுபற்றி இதை எனக்குத் தாவேண்டும். தர்மத்தை ஆலோசித்துப் பார்க்கில் இது ராஜாவாகிய எனதேயன்றி அந்தணராகிய உமதன்று' என்றிவ்வாறு மொழிந்தனர். இங்ஙனம் அவ்விச்வாமித்ரர் மொழிய மஹாத்மாவாகிய அவ்வஸிஷ்டமாமுனிவர் இதைக் கேட்டும் தர்மஸ்வபாவராயிருப்பது பற்றித் தனது தர்மாநுஷ்டா

நங்களுக்கு ஸாதகமாகிய அக்காமதேநுவைக் கொடுக்க முடியாமல் அவ்வரசனை நோக்கி 'மஹாராஜனே! நீ யெனது சபனை ஒன்றுக்காக நூறுயிரம் பசுக்களைக் கொடுத்தாயாயினும் அதை நான்கொடுக்கத்தகாது. இதுவன்றி நீ நூறுகோடிப் பசுக்களைக் கொடுத்தாயாயினும் இக்காமதேநுவைக் கொடுக்கமுடியாது. இதுவுமன்றி நீ ராசி ராசியாக வெள்ளியைக் கொடுத்தாயாயினும் நான் இச்சபனையைக்கொடுக்கவல்லனல்லேன். நீ சத்ருக்களனைவரையும் அடக்கத்தக்க வல்லமையுடையவனென்று நானறிவேன். ஆயினும் 'இப்படிப்பட்ட இம்மன்னவன் நமக்குயாது கெடுதியைச் செய்வனோ' என்று பயந்து இதைப் போகவிடுவேனோ? விடமாட்டேன். ஏனெனில்-இது என்னிடத்திலேயே இருக்கவேண்டுமன்றி என்னைத்தப்பியிருக்கத் தக்கதன்று. மாமியாயிருப்பவனுக்குக் கீர்த்தி சாச்வதமாயிருப்பதுபோல எனக்குமிது எப்பொழுதும் இடைவிடாது ஸ்திரமாயிருப்பதொன்று. இதற்குக் காரணஞ் சொல்லுகின்றேன்; கேட்பாயாக. தேவர்களுக்குக் கொடுக்கிற ஹவ்யங்களும் பித்ருக்களுக்குக் கொடுக்கிற கவ்யங்களும் காலையிலும் மாலையிலும் நடந்தேறிவருகின்ற அக்நிஹோத்ரங்களும் பூதங்களுக்குக் கொடுக்கிற பலிகளும் அமாவாஸ்யை பர்வம் முதலியவற்றிற் செய்கிற ஹோமங்களும் இச்சபனையினுலேயே எனக்கு நடக்கவேண்டியிருக்கின்றன. இவையவையென்னுபலபடச்சொல்லியென்? எனது சரீரயாத்திரையும் இக்காமதேநுவின் அதீகமாகவே நடந்துவருகின்றது. ராஜர்ஷியே! உனக்குத்தெரியாததலைமில்லை. ஸ்வாஹாகாரவஷட்காரமந்த்ரங்களும் வேதம் முதலிய பலவகைவித்யாப்யாஸங்களும் நடக்கைக்குக் காரணம் இக்காமதேநுவேயன்றி வேறில்லை. இதற்குச் சந்தேகமில்லை. மன்னவனே! இவையெல்லாமுண்

மையாகச் சொல்லுகின்றேன். எனக்குள்ள பொருளனைத்தும் இக்காமதேநுவேயன்றி வேறன்று. எனக்கு எப்பொழுதும் ஆநந்தத்தைக் கொடுப்பதும் இதுவே. இப்பொழுது நான் இங்ஙனம் மொழிந்த காரணங்களேயன்றி மற்றும்பல காரணங்களுமுண்டு. அவைகளைப்பற்றியும் நானிந்தப் பசுவை உனக்குக் கொடுக்கநேராது' என்றனர். வஸிஷ்டமாமுனிவர் இங்ஙனம் மொழிந்துநிற்க விச்வாமித்ரரும் மிகுந்த பிடிவாதத்துடன் படபடப்புங்கொண்டு பேசுவதில் தனக்குள்ள வல்லமையனைத்தும் விளங்குமாறு மேன்மேலும் அம்முனிவரை நோக்கிக் 'கழுத்துக்குப் பொற்சங்கிலிகள் பூட்டிக் காதுக்குப் பொன்மாவெட்டிகள் மாட்டி அலங்காரஞ்செய்து அழகாய் விளங்கும் பதினாயிரம் யானைகளை நான் உமக்கு கொடுக்கின்றேன். ஒவ்வொன்றிலும் நான்கு வெள்ளைக்குதிரைகள் பூட்டி அழகிய சிறுமணிகள் கட்டிவிளங்கும் எண்ணூறு பொன்தேர்களை உமக்குத் தருகின்றேன். விரதங்களை நன்கு நடத்துந்தன்மையுடைய மாமுனியே! மேலும் கம்போஜம் பாஹ்லிகம் முதலிய நல்ல தேசங்களிலுண்டாகி மேலானஜாதியிற் பிறந்து மிகுந்த வலிவுபொருந்தி சிறிய மணிகள்கட்டி அலங்காரமுஞ் செய்யப்பெற்று அழகிய குதிரைகள் பதினாயிரம் உமக்குக் கொடுக்கின்றேன். இவ்வளவேயன்றிப் பலவகை வர்ணங்கள் பொருந்தி வேறுவேறாக விளங்குகின்ற ஒருகோடி இளம்பசுக்களைக் கொடுக்கின்றேன். சபலையை எனக்குக் கொடுத்துவிடுவீராக. அந்தணர்களில் தலைவரே! உமக்கு ரத்நங்களாயினும் ஸ்ரீவர்ணங்களாயினும் எவ்வளவு வேண்டுமோ, அவையெல்லாவற்றையும் அவ்வளவும் கொடுக்கின்றேன். இக்காமதேநு வொன்றைமாத்திரம் எனக்குக் கொடுத்துவிடுவீராக' என்றனர். இங்ஙனம் மிகுந்த மதியுடை—

விச்வாமித்ரமன்னவர் காமதேநுவைத் தரவேண்டிக் கேட்க, மஹாநுபாவராகிய வஸிஷ்டமாமுனிவரும் அம் மன்னவரைப் பார்த்து 'மஹாராஜனே! நான் இப்பசுவை எவ்விதத்திலாயினும் கொடுக்கமுடியாது. நீ கொடுக்கிற ரத்நம் முதலியவை யெல்லாம் எனக்கேதுக்காக? இதுவே எனக்கு ரத்நம். இதுவே எனக்கு தநம். எனது ஸகலஸொத்துக்களும் இதுவே. இதுவே எனக்கு ப்ராணன். அமாவாஸ்யைகளிலும் பௌர்ணமாஸிகளிலும் செய்யவேண்டிய செயல்கள் யாவும் எனக்கு இதன் மூலமாகவே நடக்கின்றன. இதுவுந் தவிர நன்கு தக்ஷிணைகளுடன் நடத்தப்படுகிற யாகங்களும் இக்காமதேநுவின் மஹிமையாலேயே எனக்கு நடந்தேறுகின்றன. பின்னும் பலவகைக் காரியங்களும் இதனால் நடக்கின்றன. இவ்வளவென்? நான் செய்யும் கர்மங்களனைத்துக்கும் இதுவே மூலமாயிருக்கின்றது. வீணுகப் பலசொல்லியென்? நான் விரும்பியவற்றை யெல்லாங் கொடுக்கவற்றாகிய இக்காமதேநுவைக் கொடுக்கமாட்டேன்' என்று இங்ஙனம் மொழிந்தனர். ஐம்பத்துமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

சபலை பலங்களை நிருமித்து விச்வாமித்ரது ஸேனையை அழித்தல்.

இவ்வாறு வஸிஷ்டமாமுனிவர் தனது காமதேநுவைக் கொடுக்க முடியாதென்று ஒரேமொழியாக மறுத்துரைத்து நிற்கும்பொழுது, விச்வாமித்ரமன்னவர் இக்காமதேநுவை பலாத்காரமாக இழுத்துக்கொண்டுபோகத்தொடங்கினர். ராமா! மிகவுந் தைரியசாலியாகிய விச்வாமித்ரமன்னவரால் அங்ஙனம் இழுக்கப்பட்ட சபலையானது வஸிஷ்டரைப் பிரிந்து போகின்றேமென்கிற

சோகத்தினால் இளைத்து மிகவும்துயரமடைந்து அழுது கொண்டு தனக்குள் ' இவ்வரசனது சேவகர் என்னை மிகவருத்தங்கொண்டு தீகையாகி நிற்கும்படி பிடித்துக்கட்டி யிழுத்துக்கொண்டு போகின்றார்கள். இதேனே? மஹாநுபாவராகிய வஸிஷ்டர் என்னைத் துரந்துவிட்டாரோ. அம்மஹர்ஷிக்கு நான் யாதோரபகாரமும் செய்யவில்லையே. எல்லாவற்றையு மறிந்த அம்மாமுனிவருக்கு எதுதான் தெரியாது? அப்படிப்பட்ட தார்மிகர் யாதோரபாதமும் செய்யாமல் தன்னிடத்தில் மிக்க பக்தியுடன் நடந்து தானும் அன்புடன் பாதுகாத்துவந்த என்னை இங்ஙனம் போகவிடுவதற்கு யாது காரணமோ' என்று சிந்தித்து அடிக்கடி பெருமூச்சுவிட்டுக்கொண்டு, தன்னை இழுத்துக்கொண்டு போகிற ராஜபடர்களைப் பல வகையாக உதறிவிட்டு வேகமாய்ச் சென்று மஹாநுபாவராகிய வஸிஷ்டரது பாதமூலத்தைச் சேர்ந்து அம்மாமுனியின் எதிரில் நின்று அழுதுகொண்டு மேகத்தின் கர்ஜனைபோலவும் துந்துபிவாத்தியத்தின் முழக்கம்போலவும் கம்பீரமாகச் சத்தமிட்டுக்கொண்டு அம்முனிவரை நோக்கி ' மஹாநுபாவரே நீர் என்னைப் போகவிட்டீரா? இல்லையாயின், என்னை ஏன் இந்த ராஜபடர்கள் உம்மிடமிருந்து இழுத்துக்கொண்டு போகின்றார்கள்? ப்ரஹ்மபுத்ரரே! நீர் என்னை விடத் தகுமா?" என்றுவிளவ, அந்த ப்ரஹ்மர்ஷியும் மிகுந்த சோகத்தால் மனக்கலக்கமுற்றுத் துக்கித்துத் தங்கையைப்போல் அழுதுகொண்டு நிற்கிற அந்தச்சபலையை நோக்கி 'உன்னை நான் விடமாட்டேன். நீயும் எனக்கு யாதோரபகாரமுஞ் செய்யமாட்டாய். உனனை விடுவேனோ? மிகுந்த பலமுடைய இம்மன்னவன் தனது பலத்தின் மிகுதியால் மதித்து வழிதப்பி உன்னை இழுத்துக்கொண்டு போகின்றான்.

அவனை அடக்கி உன்னை விடுவித்துக்கொள்ள எனக்கு இம்மன்னவனுடை நிகர்த்த பலமில்லை. தவமகிமையால் நிக்கிரகஞ்செய்யலாமென்னில்-அவன் நமக்கு அரசனுயிருக்கின்றனன். அரசனைத் தவபலத்தினுல் தண்டிப்பது யுக்தமல்லவே. அதிலும் விசேஷித்து அதிதி ஸத்காரஞ்செய்த இச்சமயத்தில் யாதுஞ் செய்யத்தகாது. இவ்வரசன் மிகுந்த பலம்பொருந்திய க்ஷத்ரியனுகிப் பூமியையெல்லாம் பரிபாலித்து வருகின்றவன். பூமியைப் பாதுகாத்துவருகின்றவனை நிக்கிரகித்தால், அது மிகுந்த பாபத்துக்கிடமாகுமே. இச்சேனையோ ஸாதாரணமாகப் புலப்படவில்லை. நிரம்ப ஓரக்ஷௌஹிணியா யிருக்கின்றது. இச்சைன்யம் குதிரைகளும் தேர்களும்நெருங்கி யானைகளும் கொடிமரங்களும் சூழ்ந்து மிகப் பயங்கரமாக விளங்குகின்றது. இப்படிப்பட்ட ஸைன்யத்தை யுடைய இம்மன்னவனன்றே மிக்கபலிஷ்டன். ஆனதுபற்றி காமென் செய்யக் கூடும்' என்று மறுமொழி உரைத்தனர். மொழிகளின் கருத்தையெல்லா மறியுந் திறமுடைய அச்சபலையும் வஸிஷ்டரது மொழிகளைக் கேட்டு மிக்க வணக்கத்துடன் கூடி அளவற்ற ஓளிபொருந்திய அந்த ப்ரஹ்மர்ஷியை நோக்கி, அந்தணர்களிற் றலைவரே ! க்ஷத்ரியனது பலத்தை ஓருபலமாகச் சொல்லமாட்டார்கள். ப்ராஹ்மணனன்றே மேலானபலமுடையவன். அந்தணரே ! ப்ராஹ்மணனது பலம் மேலான மகிமையெல்லாமைந்து விளங்கவற்றுயிருக்கும். ஆகையால் க்ஷத்ரிய பலத்தைக்காட்டிலும் ப்ராஹ்மணனது பலம் மிகச்சிறந்தது. ஆனதுபற்றி அந்தணர்களிற் சிறந்த உமது பலம் அளவிடமுடியாதிருக்கும். விச்வாமித்ரர் மிகுந்த வீரத்தன்மை யமைந்தவரா்யினும் உம்மைக் காட்டிலும் பலிஷ்டரன்று. உமது பராக்ரமம் யாவராலும் வெல்லமுடியா

தது. நீர் இங்ஙனம் மிகுந்த மகிமையுடையவராகையால் உமது ப்ரஹ்மபலத்தைக்கொண்டெனக்கு ப்ரபாவத்தைக் கூற்பித்துக் கட்டளையிடுவீராக. கொடிய எண்ணங்கொண்ட இவ்வரிசனது செருக்கையும் ஸைன்யத்தையும் இப்பொழுது நாசஞ்செய்து விடுகின்றேன்' என்றுரைத்தது. ராமா! பெரும்புகழுடைய வஸிஷ்டமாமுனியும் அதைக் கேட்டு அச்சபலையை நோக்கி 'இச்சத்ருபலத்தை அழிக்கும்படியான ஸைன்யத்தைப் படைப்பாயாக' என்று கட்டளையிட்டனர். அம்மொழியைக் கேட்டு அச்சபலையானது படையைப் படைக்க முயன்று 'ஹுங்பா' என்று சப்தஞ்செய்தது. அங்ஙனம் சப்தித்தவுடனே பப்லவ ரென்னும் சில ம்லேச்சர்கள் கணக்கின்றி உண்டாகி விச்வாமித்ரரது கண்முன்பாகவே அவரது ஸைன்யத்தையெல்லாம் நிர்மூலமாகச் செய்துவிட்டனர். கௌசிகரும் தமது ஸைன்யம் இவ்வாறு நிர்மூலமாய் விட்டதைக் கண்டு ரதத்தின்மேலேறிக்கொண்டு சத்ருக்களின் மீது முயன்று மிகக் கோபாவேசத்துடன் கண்களை மருட்டி விழித்துப் பலவகை அஸ்த்ரங்களை எய்து அந்தப் பப்லவர்களை அடித்து முடித்துவிட்டனர். இங்ஙனம் விச்வாமித்ராஸ்த்ரால் பப்லவர்கள் அனைவரும் முடிந்து போகக் கண்டு, மிகக் கோபங்கொண்ட காமதேநுவானது மேலும் சகர்களையும் யவகர்களையும் கிருமித்துவிட, அவர்களும் சண்பகமலரினொளியை நிகர்த்த தேககாந்தியமைந்து பொன்மயமான ஆடைகளை உடுத்து, மிகுந்த வீரத்தன்மைபொருந்தி நீண்ட கத்திகளையும் பட்டயங்களையும் கைகளிலேந்திக்கொண்டு பார்முழுதும் எங்குப் பார்க்கிலும் தாமேயாகி நிறைந்து பளபளவென்று ஜ்வாலிக்கிற அக்நிபோல் விளங்கி அவ்விச்வாமித்ரரது ஸைன்யத்தையெல்லாம் எரித்து விட்டனர். பிறகு விச்வாமித்ரரும்

தனது பராக்ரமம் விளங்கும்படி விளியிட்டு பாணங்களை அந்த ம்லேச்சர்கள்மீது ப்ரயோகிக்க, யவநர் காம்போஜர் பப்லவர் என்னும் அம்மிலேச்சர்கள் யாவரும் சிதறுண்டு புறங்காட்டியோடிக் குழப்பமடைந்தனர். ஐம்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் தோல்வியடைந்து பின்பு சிவனிடமிருந்து அஸ்த்ரங்களைப்பெற்று வந்து வஸிஷ்டருடன் போர்புரிதல்.

பின்பு வஸிஷ்டமாமுனிவர் விச்வாமித்ரருடைய பாணவர்ஷங்களால் மனமயங்கிச் சிதறிப்போகின்ற ம்லேச்சபலங்களைக்கண்டு காமதேநுவைப் பார்த்து 'யோகமகிமையால் இன்னும் சில படைகளைப் படைப்பாயாக' என்று கட்டளையிட்டனர். பின்பு அந்தக் காமதேநுவும் 'ஹும்பா' என்று கோஷிக்க, அப்பொழுது ஸூர்யனை நிகர்த்த ஒளிபொருந்திய காம்போஜர்கள் உண்டாயினர். மேலும் அப்பசுவின் மடியிலிருந்து கையும் கத்தியுமாகப் பப்லவர்கள் என்னும் ம்லேச்சர்கள் பிறந்தனர். பின்னும் அதன் மூத்ரத்வாரத்திலிருந்து யவநர்களும், மலத்வாரத்திலிருந்து சகர்களும், மயிர்க் கால்களிலிருந்து ம்லேச்சர்களும் ஹாரீதர்களும் கிராதர்களும் தோன்றினர். ரகுகுலத்திற் பிறந்த மஹாவீரனே! அவர்களனைவரும் வேறுவேறுக ரதகஜதுரக பதாதிகளுடன் (யானை குதிரை தேர் காலாள்களுடன்) கூடிய விச்வாமித்ரரது ஸைந்யங்களை உடனே பறந்தோடச்செய்தனர். அப்பொழுது விச்வாமித்ரரது புத்திரர்கள் நூறுபேர்களும் தமது ஸைந்யங்களை வஸிஷ்டமஹர்ஷி தனது யோகமகிமையால் இங்ஙனம் நாசஞ்செய்யக்கண்டு, நாநாவிதங்களாகிய ஆயுதங்களைத்தரித்து, மிகச் சினங்கொண்டு நிற்

ற வஸிஷ்டமாமுனிவர்மீது எதிர்த்தோடிவர, அம்மா முனியும் நிறந்த மகிமைகளெல்லா மமைந்திருப்பது பற்றித் தனது ஹுங்காரத்தினாலேயே அவர்களனைவரையும் தஹித்துவிட்டனர். அப்பொழுது அவ்விச்வாமித்ரரது குமாரர்களும் அவரது குதிரைகளும் தேர்களும் அவர்களைப் பின்றொடர்ந்த காலாட்களும் ஒன்றுந்தவறாமல் அந்தக்ஷணத்திலேயே நீறுபவிட்டனர். பெரும்புகழுடையவிச்வாமித்ரமன்னவரும் அப்பொழுது தனது புதல்வர்களும் படைகளும் மிகுதியில்லாமல் மாண்டுவிட்டதைக்கண்டு தனது பெருங்கீர்த்திக்குக் குறைநேரிட்டதே யென்று மிகுந்த வெட்கங்கொண்டு சிந்தையில் மூழ்கி அலையற்ற கடல்போல் யுத்தோத்ஸாஹமின்றி மழுங்கியும், பல்லைப்பிடுங்கின பாம்புபோல் யாதுஞ்செய்யச் சக்தியில்லாமலும், இராகுவினால் பிடிக்கப்பட்ட ஸூர்யனைபோல் அப்பொழுதே ஒளியெல்லாங்குன்றியு மிருந்தனர். மேலும் அம்மன்னவர் பிள்ளைகளும் படைகளும் முடிந்துபோனது பற்றி மிகவும் வருந்தி இறகொடிந்த பக்ஷிபோலாகி மிடுக்கும் உத்ஸாஹமும் குலைந்து இச்சதுரங்கபலத்திற் சிறிதும் பயனில்லையென்றெண்ணி அதில் மிகவும் மனவெறுப்புற்றனர். பின்பு அம்மன்னவர் யுத்தத்தில் தப்பிப்பிழைத்து நின்ற தன்புத்திரனொருவனுக்குப் பட்டங்கட்டிவைத்து ‘அப்பா! நீ க்ஷத்ரியதர்மத்துக்கிணங்க இப்பூமியனைத்தும் பாதுகாத்துவருவாயாக’ என்று கட்டளையிட்டுத்தான் காடேறச் சென்று, கிங்கர் உரகர்முதலிய தேவகணங்கள் வஸிக்கக்கூடிய ஹிமாலயத்தினருகிற் போய்ச் சேர்ந்து அங்குத் தேவர்க்குந் தேவனாகிய சிவபெருமானது அருள்பெறவேண்டிக் கடுமையாகத் தவம்புரிந்திருந்தனர். பின்பு இங்ஙனஞ் சிலகாலஞ்செல்ல எருத்துக்கொடியுடையானாகிய தேவாதிதேவன் சிவபெருமான் தன்னைப்

பற்றினர்க்கு வரங்கொடுக்கும் தன்மைய ஞகையால் மிகு
ந்த பலமுடைய விச்வாமித்ர மன்னவருக்குத் தர்சகங்
கொடித்து 'மன்னவனே! நீ தவஞ்செய்வது ஏதுக்காக?
நீ மனத்திற்கருதியவற்றைச் சொல்வாயாக. நான் என்
னைப் பற்றினர்க்கு வேண்டிய வரங்களைக் கொடுப்பவன்.
ஆகையால் நீ விரும்பிய வரம் ஏதோ; அதைச்சொல்'என்
றனன். மிகத்தவம்பொருந்திய விச்வாமித்ர மன்னவர்
அவ்வுரைகளைக்கேட்டு அந்த மஹாதேவனுக்கு நமஸ்கா
ரஞ் செய்து 'மஹாதேவனே! பாவங்களொன்று மின்றி
யிருப்பவனே! உனக்கு என்மீது மிகுந்த ப்ரீதி இருக்குமா
யின், தநுர்வேதங்களும் அதின் அங்கங்களும் அவைக
ளுக்குள்ள ரஹஸ்யமந்த்ரங்களும் குருபதேசத்தினு லறி
யவேண்டிய ரஹஸ்யார்த்தங்களும் எனக்குத் தானே
தோற்றும்படி அருள்புரிந்தளிக்கவேண்டும். பாபமற்றவ
னே! தேவர் தானவர் மஹர்ஷிகள் யக்ஷர் கின்னரர் ரா
க்ஷஸர் கந்தர்வர் முதலிய மஹாநுபாவர்களிடத்தில் யா
வையாவை அஸ்த்ர விசேஷங்களுண்டு, அவையெல்லாம்
எனக்குத் தோற்றும்படி யருளவேண்டும். நீ ஸாதாரண
தேவதையோ? தேவர்க்குந் தேவனன்றே? உனது அணுக்
ரகத்தினுல்மற்றுமுள்ள மநோரதங்களும் நிறைவேறும்
படி அருளவேண்டும்'என்று வேண்டிக்கொள்ள, அத்தத்
தேவதேவனும் 'அப்படியே' என்று மொழிந்து அப்
பொழுதே தன்னிடத்துக்குப் போய்ச்சேர்ந்தனன். விச்
வாமித்ர இதற்கு முன்னமே மிகுந்த பலமுடையவ
ரும் க்ஷத்ரியத்தனம் முதலியவற்றால் வந்த மேலான
கர்வங்கொண்டவருமா யிருந்தனர். இப்பொழுது மஹா
தேவனது அணுக்ரகத்தினுல் சிறந்த அஸ்த்ரங்கள்
பலவும் பெற்ற பின்பு அவருடைய செருக்கு அளவிடமு
டியாதிருக்குமன்றே? அவ்விச்வாமித்ரர் பர்வகாலத்

தில் கடல் பொங்கி வருவதுபோல் மிக்க பராக்ரமத்துடன் மேன்மேலெனப் பெருகி வளர்ந்துகொண்டிரிஷிகளில் தலை வராகிய வஸிஷ்டரை 'இனி இவனெங்கே பிழைக்கப்போ கின்றனன்? இதோ என்கையிலகப்பட்டு முடிந்தாணிவன்' என்று அப்பொழுதே காசஞ்செய்துவிட்டதாக நினைத் தனர். பின்பு அவ்விச்வாமித்ரவேந்தர் வஸிஷ்டரது ஆச் ரம ப்ரதேசத்துக்குச் சென்று பலவகை அஸ்த்ரங்களை ப்ரயோகிக்க, அவ்வஸ்த்ரங்கள் தமது தேஜஸ்ஸினால் வஸிஷ்டரது ஆச்ரமத்தை முழுதும் எரித்துவிட்டன. இங்ஙனம் விச்வாமித்ரர் தனது மோஹன மதியைக் கொண்டு ப்ரயோகஞ்செய்கிற அந்த அஸ்த்ரங்களைக்கண் டு அங்குள்ள முனிவர்களனைவரும் கூட்டங்கூட்டமாகப் பத்துத்திசைகளிலும் பறந்தோடிவிட்டனர். அவ்வாச்ர மத்திலுள்ள வஸிஷ்டரது சீடர்களும் மிருகங்களும் பக்ஷிகளும் மிகவும் பயமுற்று ஆயிரமாயிரமாகத் தந்த மிருப்பிடங்களை விட்டு ஓடலாயினர். இங்ஙனம் மஹாநு பாவராகிய வஸிஷ்டரது புண்யாச்ரமம் கெட்டுப் பாழ டைந்து மனிதர் மிருகங்கள் பக்ஷிகள் மரங்கள் ஆகிய இவையெல்லாமற்று நிச்சப்தமாகிக் களர்பூமியைப் போ லாய்விட்டது. இவ்வளவுங் கண்டு வஸிஷ்டர் வெறுமனே இருக்கலாகுமா? அப்பொழுது அம்முனிவரும் 'இதோ ஸகர்யன் பணியைத் தொலைப்பதுபோல் இவ் விச்வா மித்ரனை நாசஞ்செய்து விடுகின்றேன். ஒருவரும் பயப் படவேண்டாம்' என்று அடிக்கடி சொல்லிக்கொண் டேயிருந்தனர். ஆயினும் அம்மொழியைக் காதுகொ டுத்துக் கேளாமலே யாவரும் பயந்தோடிவிட்டனர். இங்ஙனம் வஸிஷ்டமாமுனிவர் ஆச்ரமத்தினின்று பயந் தோடுகிற ஜந்துக்களுக்குச் சொல்லிவிட்டு, உடனே மிக வும் ஒளிமீறி விளங்கிக் கடுஞ்சினங்கொண்டு விச்வா

மித்ரரை நோக்கி, 'அடா மூடனே! இவ்வாச்ரமம் வெகு காலமாக வளர்ந்து மிகவும் தவம்பொருந்தி விளங்கி வருவதைச் சிறிதும் பாராட்டாமல் பாழாகச் செய்தனை. ஆனதுபற்றி நீ மிகக் கொடுஞ்செயலுடையாய். நீ உயிருடன் பிழைத்திருக்கத்தகுமா? நீ இனி இருக்கப்போகிறதில்லை' என்று மொழிந்துகொண்டு கோபாக்நி மேலெழுந்தெரியப் புகையின்றி விளங்கிய காலாக்நிபோலவும் மற்றொரு யமதண்டம்போலவும் ப்ரகாசிக்கிற தனது ப்ரஹ்மதண்டத்தை எடுத்துக்கொண்டு எதிரே வந்து நின்றனர். ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டர் விச்வாமித்ரரை வென்றது

அங்ஙனம் வஸிஷ்டமாமுனிவர் மொழிந்த மொழியைக் கேட்டு விச்வாமித்ரரும் மஹாபலசாலியானது பற்றி வெறுமனே இராமல் ஆக்நேயாஸ்த்ரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு 'வஸிஷ்டா! நில்லு நில்லு; உன்னைச் சும்மா விடுகிறதில்லை' என்று அதட்டினர். வஸிஷ்டபகவானும் மிக்க கோபாவேசங்கொண்டு இரண்டாவது யமதண்டமோவென்னும்படி மிகப்பயங்கரமாயிருக்கிற தனது ப்ரஹ்மதண்டத்தை எடுத்துக்கொண்டு 'அடா க்ஷத்ரியாதமனே! இதோ நீ சொன்னபடி நின்றேன். எதோ உனக்குண்டான பலத்தைக்காட்டுவாய். அடா காதிகுமாரனே! உனது கொழுப்பையும் நீ ஸம்பாதித்துக்கொண்டுவந்த அஸ்த்ரங்களின் செருக்கையும் நாசஞ் செய்துவிடுகின்றேன். பார். க்ஷத்ரியனாகிய உனது பலம் எங்கே? யாவரும் புகழும்படியான மேன்மையுள்ள எனது ப்ரஹ்ம பலம் எங்கே? க்ஷத்ரிய குலத்துப்பெருமையைக் கெடுக்கவந்த பாதகனே! யாவராலுங் கொண்டாடத்தக்க எனது ப்ரஹ்மபலத்தை இதோ காட்டுகின்

றேன்; பார்' என்று சொல்லிக்கொண்டே யிருக்கையில் விச்வாமித்ர ப்ரயோகித்த பயங்கரமாகிய அவ்வாக்நேயாஸ்த்ரமானது ஜலம்பட்டணைந்த நெருப்பு வேகம்போல் அந்தப்ரஹ்மதண்டத்தின் மஹிமையால் அடங்கிவிட்டது. காதியின் குமாரராகிய விச்வாமித்ர அவ்வளவோடு விடாமல் மேலும் நிலைநின்று கோபம் மேலெழுந்து விளங்கி வாருணாஸ்த்ரம், ரௌத்ராஸ்த்ரம், ஐந்த்ராஸ்த்ரம், பாசுபதாஸ்த்ரம், ஐஷீகாஸ்த்ரம் ஆகிய இவ்வஸ்த்ரங்களை ஒருதடவையிற் ப்ரயோகஞ்செய்தனர். பின்னும் மாநவாஸ்த்ரம், மோஹநாஸ்த்ரம், காந்தர்வாஸ்த்ரம், ஸ்வாபநாஸ்த்ரம், ஜ்ரும்பணாஸ்த்ரம், மாதநாஸ்த்ரம், ஸந்தாபநாஸ்த்ரம், விலாபநாஸ்த்ரம், சோஷணாஸ்த்ரம், தாரணாஸ்த்ரம், யாவராலும் வெல்லமுடியாத வஜ்ராஸ்த்ரம், ப்ரஹ்மபாசம், காலபாசம், வாருணபாசம், பைநாகாஸ்த்ரம், தயிதாஸ்த்ரம், [1]சுஷ்காசநி [2]ஆர்த்ராசநி, தண்டாஸ்த்ரம், பைசாசாஸ்த்ரம், க்ரௌஞ்சாஸ்த்ரம், தர்மசக்ரம், காலசக்ரம், விஷ்ணுசக்ரம், வாயவ்யாஸ்த்ரம், மதநாஸ்த்ரம், ஹயக்ரீவாஸ்த்ரம், இரண்டு சக்திகள் ஆகிய இவற்றை அவ்வஸிஷ்ட மாமுனிவர்மீது ஏய்தனர். இவ்வளவேயன்றிக் கங்காளாஸ்த்ரம், மூஸலாஸ்த்ரம், மஹிமைபொருந்திய வித்யாதராஸ்த்ரம், காலாஸ்த்ரம், தாருணாஸ்த்ரம், கோராஸ்த்ரம், காபாலாஸ்த்ரம், கங்கணாஸ்த்ரம் என்கிற இவ்வஸ்த்ரங்களை யெல்லாம் ப்ரயோகஞ் செய்தனர். எவ்வளவு அஸ்த்ரப்ரயோகஞ்செய்தபோதிலும் வஸிஷ்டர் மேலான தபஸ்வியாகையால் அவரிடத்திற் சிறிதும் பயன்படாமற் போய்விட்டன. அது மிகவுமாச்சரியமாயிருந்தது. ப்ரஹ்மபுத்ரராகிய வஸிஷ்டமாமுனிவர் விச்வா

1 சுஷ்காசநி-நெருப்பிடி.

2 ஆர்த்ராசநி - நீரிடி.

மித்ரர் பிரயோகித்த அவ்வஸ்த்ரங்களையெல்லாந் தனது ப்ரஹ்மதண்டத்தில் அடக்கிவிட்டனர். விச்வாமித்ரர் தமது அஸ்த்ரங்கள் அனைத்தும் அங்ஙனம் அடங்கிவிட்டது கண்டு ப்ரஹ்மாஸ்த்ரத்தை பிரயோகித்தனர். அங்ஙனம் ப்ரஹ்மாஸ்த்ரப்ரயோகஞ்செய்ய, அதைக் கண்டு அக்நிமுதலிய தேவதைகளுந் தேவரிஷிகளும் கந்தர்வர்களும் உரகர்களும் பெரிய குழப்பமுற்றனர். பலபடச் சொல்லியென் ? ப்ரஹ்மாஸ்த்ரம் பிரயோகித்தது கண்டு மூவுலகங்களும் இடிந்திடுவென்று நடுங்கிவிட்டன. ராகவனே! மிகவும் பயங்கரமாகிய அந்த ப்ரஹ்மாஸ்த்ரத்தையும் வஸிஷ்டமாமுனிவர் ப்ரஹ்மவித்யாப்யாஸத்தினுண்டாகிய தமது ப்ரஹ்மதேஜஸ்ஸினால் மிகவும் மேன்மை பெற்று விளங்கிய ப்ரஹ்மதண்டத்தைக் கொண்டு அடக்கிவிட்டனர். அம்மஹாநுபாவர் அந்த ப்ரஹ்மாஸ்த்ரத்தையும் அங்ஙனம் அடக்கி நிற்கையில் அம்முனிவரது உருவமானது மூவுலகங்களும் மிகுந்த பயங்கொண்டு மதிமயங்கும்படி நெஞ்சினும் நினைக்க முடியாததாகி மிக்க தாருணமாகத் தென்பட்டது. அப்பொழுது அம்மஹாநுபாவருடைய மயிர்க்கால்களெல்லாவற்றினின்றும் புகை சூழ்ந்த பொறிகளை யுகுக்கின்ற அக்நியின் ஜ்வாலைகள் வெளிப்புறப்பட்டனபோற் றோன்றிற்று. அவ்வஸிஷ்டமாமுனிவர் கையிற் பிடித்திருந்த ப்ரஹ்மதண்டமும் புகையின்றி விளங்கிய காலாக்நி போலவும் இரண்டாவது யமதண்டம் போலவும ஜொலித்துக்கொண்டிருந்தது. பின்பு முனிவர்கள் அனைவரும் அம்மஹர்ஷியைப் பார்த்து 'அந்தணர்களில் சிறந்தவரே ! உமது ப்ரஹ்மபலம் அமோகமாயிருக்கின்றது. உமது மஹிமையைக் கொண்டு அந்த ப்ரஹ்மாஸ்த்ரத்தினது தேஜஸ்ஸை அடங்கச்செய்ய வேண்டும். விச்வாமித்ரர் மிகத்தவம்புரிந்

தவாயினும் உம்மிடத் தோற்றுப் போயினர். இனிக் கோப மேதுக்காக? அருள்புரியவேண்டும். முனிவர்களிற் சிறந்தவராகிய உமது அனுக்கிரகத்தினால் உலகங்களெல்லாம் க்ஷயம் நீங்கியிருக்குமாக' என்று இவ்வாறு சொல்லிப் புகழ்ந்து கொண்டனர். அதைக் கேட்டு மஹாதபஸ்வியும் மஹா தேஜஸ்வியுமாகிய அவ்வஸிஷ்டமாமுனிவரும் கோபந் தணிந்தனர். விச்வாமித்ரரும் தோல்வியடைந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு 'சீ! க்ஷத்ரியபலத்தையும் ஓரு பலமாகச் சொல்லலாகுமா! ப்ரஹ்மதேஜஸ்ஸினுண்டாகிய பலமே மிகுந்த பலம். இதுக்கு மற்றொரு நிதர்சநம் வேண்டுமோ? இதோ ஓரு ப்ரஹ்மதண்டத்தினால் எனது அஸ்த்ரங்களெல்லாம் அடிபட்டுப் பயனற்றவையாயின. இதுவே போராதா. இந்தத் தாரதம்யத்தை நன்கு ஆராய்ந்து மனத்தையும் மற்றும் புலன்களையும் அடக்கித் தெளிவுறச் செய்து க்ஷத்ரியத்தனத்தால் வரும் அஹங்காரத்தை ஒழித்துவிட்டுப் பெருந்தவஞ் செய்து யான் ப்ராஹ்மண்யத்தைப் பெறவேண்டும்' என்று இவ்வாறு தனக்குள் மொழிந்துகொண்டனர். ஐம்பத்தாருவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் தவஞ்செய்து ராஜர்ஷியாதல்

ராகவனே! இங்ஙனம் வஸிஷ்டமாமுனியுடன் வீணாகவைரத்தை ஏறிட்டுக்கொண்ட அவ்விச்வாமித்ரமன்னவர் தனக்கு நேரிட்ட மாநக்கேட்டைப் பலமுறையாகச் சிந்தித்து மனங்கொந்தித்து அடிக்கடி பெருமூச்செறிந்து கொண்டு இருந்தனர். அவ்வளவேயன்றி வஸிஷ்டருக்கு இவர் யாதுஞ் செய்யவல்லரல்லர். அவ்வளவு தவமகிமை இவருக்கில்லை. மஹாநுபாவராகிய அவ்வஸிஷ்டருடன் வீணாக வைரமேறிட்டுக்கொண்டது பற்றித் தான்

செய்திருந்த தவமும் நசித்துப்போய்விட்டது. ஆகையால் மறுபடியும் தவத்திலில் அவரை வெல்லுமெம்பாருட்டு முயன்று பட்டமஹிஷியுடன் தென்திசைக்குச்சென்று அங்குக் (காய்கிழங்குகளை ஆகாரஞ்செய்துகொண்டு இம்புலன்களையுமடக்கி) மிகவும் பயங்கரமாகிய பெருந்தவஞ்செய்தனர். பின்பு அம்மன்னவருக்கு ஸத்யத்தில் நிலைகின்றவர்களும் தர்மத்தில் மனஞ்சென்றவர்களும் மிகுந்த பராக்ரமமுடையவர்களுமாகிய ஹவிஷ்யந்தன் மதுஷ்யந்தன் த்ருடநேத்ரன் என்னும் பிள்ளைகள் பிறந்தனர். பின்பு ஆயிரமாண்டுகள் நிரம்ப, உலகங்களுக்கெல்லாம் பாட்டனாகிய ப்ரஹ்மதேவன் வந்து தவம்புரிந்திருக்கிற விச்வாமித்ரரைநோக்கிக் 'கௌசிகனே! நீ ராஜர்ஷிகளுக்குரிய உலகங்களையெல்லாம் வென்று கைக்கொண்டனை. இத்தவத்திலில் உன்னை ராஜர்ஷியாக அங்கீகரிக்கின்றனம்' என்று அதிமதுரமான மொழிகளை உரைத்துவிட்டு ஸர்வலோகங்களுக்கும் பரமேச்வரனாகிய அந்த நான்முகக்கடவுள் தனது ஒளி விளங்கும்படி ப்ரஹ்மலோகத்துக்குச் சென்றனன். அவனுடன் வந்திருந்த தேவர்களும் ஸ்வர்க்கத்துக்குப் போய்ச் சேர்ந்தனர். காமக்ரோதங்களை விடாமற் பின்சென்றவனுக்குப் பயன் இவ்வளவேயன்றி ப்ரஹ்மத்வம் வந்துவிடுமா? காகுத்தனே! விச்வாமித்ரரும் பிரமன்மொழிந்த உரைகளைக்கேட்டு மிகுந்த வெட்கமடைந்து தலைவணக்கமுற்று மிகவுந் துக்கித்துப் பரிதாபம் மேலிட்டு நான் மிகவும் பெரியதவஞ் செய்தனன். நிஷிகணங்களோடு கூடிய தேவர்கள் அனைவரும் என்னை ராஜர்ஷியாகக் கொண்டனர். ஆனால் நான்செய்த பெரியதவத்துக்குப் பயன் இவ்வளவுமாத்ரமேயன்று. ப்ரஹ்மத்வமே அதுக்குத் தக்க பயன்' என்று மனத்தில் ஆலோசித்து மிக்க மனஉறுதிகொண்டு (மிகுந்த

கோபாவேசத்துடன் மூவுலகங்களையும் வருந்தச்செய்ய முயன்றவர் போல) முன்செய்த தவத்தைக்காட்டிலும் ஆயிரம்பங்கு அதிகமென்னும்படி மீளவும் கடுமையான தவஞ்செய்தனர். இப்படி அவர் தவஞ் செய்துகொண்டிருக்குங்காலத்தில் இக்ஷ்வாகுவம்சத்தை வளரச்செய்பவனாகிய த்ரிசங்கு வென்னும் பிரஸித்திபெற்ற ஓர் அரசன் இருந்தனன். அவன் உண்மையே உரைக்குந்தன்மையன்; ஐம்புலன்களையும் அடக்கி கடப்பவன். இப்படிப்பட்ட அவ்வரசனுக்கு 'யாகஞ் செய்து சரீரத்துடனே தேவதைகளின் உயர்ந்த ஸ்தானமாகிய ஸ்வர்க்கலோகத்தைப் பெறவேண்டும்' என்று புத்தி பிறக்கத், தனது குலபுரோஹிதராகிய வஸிஷ்டரை வரவழைத்துத் தான் மனத்தில் நினைத்த காரியத்தை விண்ணப்பஞ்செய்ய, அம்மஹானுபாவரும் 'சரீரத்தோடு ஸ்வர்க்கம்போவது முடியாது' என்று மொழிந்து அவனது முயற்சியைத் தடுத்துவிட்டனர். பின்பு அம்மன்னவன் வஸிஷ்டர் அங்ஙனம் தடுத்தபிறகு அவரிடம் கசையற்று, அக்காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டுத் தென்திசைக்குச் சென்று மிக்க தேஜஸ்ஸுடன் விளங்குகின்ற வஸிஷ்டபுத்திரர்கள் நூறு பேர்களும் பெருந்தவம் புரிந்திருக்குமிடம் போய்ச்சேர்ந்தனன். அங்ஙனம் போய்ச்சேர்ந்து பெருங்கீர்த்தியாகிய அந்த வஸிஷ்டபுத்திரர்கள் தவம் புரிந்திருக்கக் கண்டு, மஹானுபாவர்களாகிய அக்குருபுத்திரர்கள் அனைவர்க்கும் கிரமம் தவறுதபடி [1] அபிவந்தநஞ்செய்தனன் ஆனாலும் வஸிஷ்டரிடஞ்சென்று நிராகரிக்கப்பட்டு வந்ததுபற்றி வெட்கத்தினால் தலைவணக்கத்துடன் நின்றனன். அவ்வரசன் அவர்கள் அனைவரையும் நோக்கிக் கையைக் கூப்பிக்கொண்டு 'குருபுத்திரர்களே!

1. அபிவந்தநம்-நமஸ்காரம்.

யான் சரணம் பெறவேண்டிவந்தனன். நீங்கள் சரணம்புகுந்தவர்களைக் காக்க வல்லவர்களாகையால் உங்களையான் சரணம்புகுகின்றனன். குலகுருவாகிய வஸிஷ்டரை முன்பே சரணமடைந்தேனுயினும் அம்மஹாநுபாவர் எனது அபிப்ராயத்தைத் தடுத்துவிட்டனர். நான் வேண்டிக்கொண்டது மற்றொன்றும் அன்று. நான் ஒரு பெரிய யாகத்தைச் செய்ய வேண்டிக்கொண்டனன். நீங்கள் அதற்கு அநுமதி செய்யத்தக்கது. குருகுமார்கள் அனைவர்க்கும் நமஸ்காரஞ்செய்கின்றேன். நீங்கள் என்மீது அருள்புரியவேண்டும். தலையை வணக்கிநமஸ்காரஞ்செய்து, தவம்புரிந்து ப்ராஹ்மணர்களிற் சிறந்த உங்களை வேண்டிக்கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படிப்பட்ட நீங்களும் அவதாகத்துடன் நான் வேண்டிக்கொண்ட காரியஸித்தியை நிறைவேற்ற முயன்று நான் இத்தச்சரீரத்துடனே தேவலோகஞ்செல்லும்படி என்னைக்கொண்டு யாகம் கடத்திவைப்பீர்களாக. வஸிஷ்டமாமுனிவர் என்னை நிராகரித்துவிட்டனர். நீங்கள் அனைவரும் தவத்தையே தனமாகக் கொண்டிருப்பவர்; மேலும் குருபுத்திரர்கள். ஆதலால் உங்களைத் தவிர யாகஞ்செய்விக்க மற்றொருபாயம் ஒன்றும் நான் காண்கிறிலேன். இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த மன்னவர் அனைவர்க்கும் புரோஹிதராகிய வஸிஷ்டரே மேலான கதி. கற்றுணர்ந்திருக்கிற புரோஹிதர்களே எப்பொழுதும் அரசர்களைக் கரையேற்றுவிக்கின்றனர். அப்படிப்பட்ட புரோஹிதர் ரக்ஷகராகாமற் கைவிட்டாரென்றால், அவருக்குப் பின்பு நீங்கள் யாவருமே என்னைத் தைவம்போற் காக்கவேண்டும்' என்றனன்.

ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டபுத்திரர்களும் நிராகரித்துப்போக, த்ரிசங்கு விச்வாமித்ரரை ஆச்ரயித்தல்

ராமா! பிறகு வஸிஷ்ட புத்திரர்கள் நூறுபேர்களும் த்ரிசங்குவின் மொழிகளைக் கேட்டுக் கோபங்கொண்டு 'நீ மதிகெட்டுக் காரியஞ் செய்ய முயன்றமைபற்றி ஸத்யவராகிய உன்குரு அதற்குச் சம்மதிக்காமல் உன்னை நிராகரித்துப் போகவிட்டனர். அப்படிப்பட்டகுருவை உல்லங்கநஞ்செய்து மற்றொரு அவலம்பநத்தை அடுப்பது எப்படி? இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்தார் அனைவர்க்கும் அவரே புரோஹிதரும் பரமாசார்யருமாகியிருக்கின்றனர். இவ்வளவேயன்றி அவர் எப்பொழுதும் ஸத்யத்தையே உரைப்பவரன்றி வேறொன்றுரையார். அப்படிப்பட்டவரது வார்த்தை சிறிதுந்தாண்டத்தகாது. மஹாநுபாவராகிய வஸிஷ்டமஹர்ஷி அவ்வித யாகஞ்செய்யமுடியாதென்று சொல்ல, அப்படிப்பட்ட யாகத்தை நாங்கள்தான் எப்படி உனக்குச் செய்விக்கமுடியும்? நீ மன்னவர்கள் அனைவரிலும் சிறந்தவனாயிருந்தும் இப்படிப்பட்ட பிரயத்தினஞ் செய்வது கண்டால் மூர்க்கனைத் தோற்றுகின்றனை. நீ ஸுகமாக உனது நகரத்துக்குப் போய்ச்சேருவாயாக. அரசனே! அம்மஹாநுபாவர் உன்னை மாத்திரமேயன்றி, இம்மூவுலகங்களிலுள்ளவர்களையும் யாகஞ் செய்விக்க வல்லவர். அப்படிப்பட்ட அம்மாமுனிவருக்கு அவமதியான காரியத்தை நாங்கள் எப்படி செய்யக்கூடும்?' என்றனர். இங்ஙனம் அந்த வஸிஷ்டபுத்திரர்கள் கோபாவேசங்கொண்டு எழுத்துக்கள் தழுதழுக்கும்படி உரைத்த அவ்வுரைகளைக் கேட்டு மீளவும் அவர்களை நோக்கி, 'குருவாகிய் வஸிஷ்டர் முதலில் என்னை நிராகரித்தனுப்பினர். அப்படியே குருபுத்திரர்க

ளும் நடத்திவிட்டனர். இனி மற்றொரு கதியைத் தேடிக் கொள்ளுகின்றேன். தபோதனர்களே! உங்களுக்கு நன்மையுண்டாக வேண்டும்' என்றுரைக்க, அந்த வஸிஷ்ட புத்திரர்களும் அவ்வாக்கியத்தைக்கேட்டு "'அடா துர்ப்புத்தியே! உனக்கு நேரே குலகுருவும் ப்ரஹ்மபுத்திரருமாகிய வஸிஷ்டரை உல்லங்கனஞ்செய்து மற்றொரு புரோஹிதரை அடுக்க நினைத்தாய். இப்படி கொடிய எண்ணங்கொள்வதும் உண்டோ!' என்று மிகுந்த கோபங்கொண்டு 'நீ சண்டாளனுகக்கடவை' எனச் சாபமிட்டு உடனே அம்மஹாநுபாவர்கள் தமது ஆச்ரமத்தேதறச் சென்றனர். பிறகு அன்றிரவு கடந்து பொழுது விடிந்தவுடனே அவ்வரசன் சண்டாளத்தன்மையடைய, அவனிடையில் விளங்கிநின்ற பீதாம்பரமானது சண்டாளர் உடுக்குங்கரிச்சீலையாயிற்று. முன்பு அவனிடத்திற் பிரகாசித்துக் கொண்டிருந்த ராஜதேஜஸ்ஸும் மறைந்து கண்கொண்டு காணக்கூடாத ஓர் கரியவண்ணம் அவனைக்கவர்ந்து கொண்டது. மஹாராஜலக்ஷணங்கள் அமைந்து ஸௌபாக்கியத்தை வெளியிட்டுக்கொண்டிருந்த அம்மன்னவனது சரீர ஸௌந்தர்யமும்குலைந்தது. அவனதுஉருவம் பார்க்கப்பயங்காரமாயிற்று. நீண்டு நிகுநிகென்று கறுத்துக் கடைகுழன்ற கேசங்களும் குறுகிப் பருத்த செம்மயிர்த்திரளாயின. குமுகுமென்று மணங்கமழ்ந்து அழகான பூமாலையும் சவமாலையாயிற்று. புனுகு ஜவ்வாது முதலிய வாஸனைகள் கலந்தணிந்த கலவைச்சாந்துஞ் சுடலைச்சாம்பலாய்விட்டது. சிறந்தழகிய ரத்தினங்கள் இழைத்த ஸுவர்ணபரணங்கள் முழுதும் இரும்பாபரணங்களாயின. அம்மன்னவன் அங்ஙனம் சண்டாளத்தன்மையடைந்திருப்பது கண்டு அவனுடன் வந்திருந்த மந்திரிகளும் பட்டணத்து ஜனங்களும் ஆகிய அனை

வரும் அவனை விட்டுப் பிரிந்து ஓடிப்போயினர். அரசன் ஒருவன் மாத்ரமே தங்கி நின்றனன். அவன் அத்தத் துயரத்தினால் பகலுமிரவும் பரிதபிக்கப்பெற்றவனாயினும் மிகுந்த தைரியத்துடன் வஸிஷ்டருக்கு வைரியாகிக் கடுந்தவம்புரிந்திருக்கிற விச்வாமித்ரரிடம் சென்றனன். குருவினாலும் குருபுத்ரர்களாலும் தனது மநோரதம் விபலமாகச் செய்யப்பட்டுச் சண்டாளரூபமும் பெற்று இகபரலோக ஸுகங்களிலொன்றுமின்றி வருத்தமுற்றிருக்கிற அம்மன்னவனை நோக்கி விச்வாமித்ரருக்கு மிகவுங் கருணை உண்டாயிற்று. அம்முனிவர் தார்மிகோத்தமரும் மிகுந்த ப்ரபாவம் பொருந்தியவருமானதுபற்றிக் கோரமான உருவங்கொண்ட அம்மன்னவனை நோக்கிக் கருணை மேலிட்டு 'உனக்கு நன்மை உண்டாகுக' என்று அனுக்ரஹஞ்செய்து 'அப்பா! மன்னவர் புதல்வனே! நீ இங்கு வந்த காரியமென்? மேலான உனது பலத்தை அடக்க யாவர்க்கும் ஸுலபமன்று. மேலும் அயோத்திமாநகருக்கதிபதியாகின்றனை. இப்படி ஸ்ரீயினையுனக்குச் சாபத்தினால் சண்டாலத்தன்மை உண்டாவதற்குக் காரணமென்?" என்று வினவினர். வாக்கியங்களை உரைக்கவல்ல அம்மாமுனிவர் மொழிந்த மொழியைக் கேட்டுச் சண்டாலத்தன்மை அடைந்திருக்கிற அம்மன்னவன் வாக்கியங்களின் கருத்தை அறிந்தவனது பற்றிக் கையைக் கூப்பிக்கொண்டு 'நான் ஒருமநோரதத்தை உத்தேசித்து எனது குலகுருவையும் குருபுத்ரர்களையும் அந்த மநோரதத்தை பூர்த்தி செய்யும்படி வேண்டிக்கொள்ள, அவர்கள் என்னை நிராகரித்துவிட்டனர். அம்மநோரதம் கைகூடாமற் போயிற்று. இப்படி அது பூர்த்தியாகாமற்போனது மாத்ரமன்றியே அதற்கு விபரீதமான பலனும் எனக்கு நேரிட்டது. அந்த மநோரதம்

மற்றொன்றுமன்று. நற்கருத்துடையவரே! இத்தச்சரீரத் தோடுகூடவே ஸ்வர்க்கமேறவேண்டுமென்று எனக்கு ஓரெண்ணம் உண்டாயிற்று. நான் வீணாக அங்ஙனம் ஆசைப்படவில்லை. அதற்காக நூறு யாகங்களைச் செய் தேன். அவைகளுக்குப் பயன் ஒன்றும் யான் பெறவில்லை. [1]பொய்யுரைப்பதினால் அந்த யாகத்தின் பயன் கெட்டுப் போயிற்றேயென்று கிஞ்சுக்கவும் வழியில்லை. எப்படிப்ப ட்ட ஆபத்காலத்திலும் நான் இதுவரையில் ஒரு பொய் யுஞ் சொன்னதில்லை. இவ்விஷயத்தில் இப்பொழுது உன்னெதிரில் எனது க்ஷத்திரிய தர்மத்தின் மீது ஆணை யிட்டுப் பிரமாணஞ் செய்கின்றேன். பலவகை யாகங்க ளைச் செய்தனன். தர்மத்வரூமல் பிரஜைகளைப் பரிபாலி த்து வந்தனன். மஹானுபாவர்களாகிய குருஜனங்களையுங் ஷிநயம் முதலிய எனது நற்குணங்களைக்கொண்டு சந்தோ ஷிக்கச் செய்தனன். இன்னும் என் செய்யக்கூடும்? இப் படி தர்மத்தைச் சம்பாதிக்கும்பொருட்டு யத்நஞ் செய் துகொண்டு அதற்காக யாகஞ்செய்ய முயன்று வேண் டிக்கொள்ள, எனது குருக்கள் அவ்விஷயத்திற் சந்தோ ஷம் பெற்றிலர். மற்றெதுக்குச் சந்தோஷிப்பரோ? இவை யெல்லாவற்றையும் பார்க்கில்ஒருத்தரிடத்திலும் ஒருகுற்ற முஞ்சொல்ல வழியில்லை. தெவய்மே மேலென்றுஎனக்குத் தோற்றுகின்றது. அதுவே மனிதனுக்கு நன்மை தீமைக ளை விளைவிக்கின்றதன்றி, மற்றெதுவுமன்று. பௌருஷத்தி னால் பிரயோஜனமொன்றுமில்லை. அதனால் தெய்வத்தை மீறிப் போக முடியாது. ஆனதுபற்றி எனது தர்மாநுஷ் டாநங்களெல்லாம் வீணாய்விட்டன. தெய்வம் எல்லாவற்

---

1 'யஜ்ஞோஸ்ருதேந க்ஷதி' என்று 'யாகம் பொய்சொல்லுவ தால் க்ஷயித்துப்போகும்' என்கிற வசநத்தை இவ்விடத்தில் கண்டு கொள்வது.

றையும் மறுத்துத் தானென்றே மேலாகி நிற்கின்றது. அதுவே யாவற்றையும் உண்டாக்கவல்ல முக்கியகாரணம். ஆகையால் என்னைப்போன்றவன் என் செய்தால் எது உண்டாகும்? தெய்வம் நான் செய்கிற புருஷப்ரயத்நங்களெல்லாவற்றையும் பறக்கடிக்கின்றது. ஆனதுபற்றி மிகத் துயரங்கொண்டு நிற்கிற யான் உமது அனுக்கிரகத்தை வேண்டுகின்றனன். உமக்கு நன்மையுண்டாக வேண்டும். என்மீது அருள்புரியவேண்டும். நான் மற்றெவரிடத்தும் போகேன். உம்மைத் தவிர மற்றெவரும் எனக்குத் திக்கன்று. வஸிஷ்டரே நேராக இனி அழைத்தாராயினும் நான் அவரைச் சரணம்புகேன். ஆகையால் உமது அனுக்கிரகமாகிய புருஷகாரத்தினால் ப்ரதிகூலமாகிய எனது தெய்வத்தைத் திருப்பி அநுகூலமாகச் செய்யவேண்டும்' என்றனன். ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் த்ரிசங்குவுக்காக யாகஞ் செய்ய முயன்றது.

சண்டாளனைப்போலவே உருவந்தரித்து நிற்கிற அம்மன்னவன் இங்ஙனம் வேண்டிக்கொள்ள, விச்வாமித்ரர் அருள்புரிந்து இங்ஙனம் இனிதாக மொழிந்தனர். 'இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்த மஹாராஜனே! குழந்தாய்! த்ரிசங்குவே! உனக்கு நல்வரவு உண்டாகவேண்டும். நீ மிகவும் தர்மிஷ்டனென்பது எனக்குத் தெரியும். உன்னை நான் காப்பாற்றுகின்றேன். நீ இனி பயப்படவேண்டாம். அரசர்களிற் றலைவனாகிய உனக்குப் பயம் தகுமோ? நீ கடத்துகிற யாகத்திற்குச் சகாயமாகும்பொருட்டு நற்செய்கையுடைய மஹர்ஷிகள் யாவரையும் வரவழைக்கின்றேன். அதனால் நீ ஸுகமாக யாகஞ்செய்யலாம். உனக்கு நேரிட்டிருக்கின்ற இச்சண்டாளரூபம் குருசாபத்தினுண்டா

னது பற்றிப் பிரமனுலுந் தடுக்கமுடியாது. ஆகையால் இவ்வுருவம்உன்னிடத்திலேயே இருக்கட்டும். ஆனலென்? இவ்வுருவத்தோடு கூடிய இச்சரீரத்துடனே நீ ஸ்வர்க்க லோகம் போவாய். விச்வாமித்ரன் சரணமடைந்தவர் களை எவ்விதத்திலும் கைவிடாது காப்பாற்றவல்லவன். அப்படிப்பட்டவனை நீ சரணம் புகுந்தனை. ஆகையால் ஸ்வர்க்கம் உன் கையிலிருப்பதாகவே நான் எண்ணுகின் றேன்' என்றிவ்வாறு மொழிந்தனர். பின்பு மஹாதே ஜஸ்வியாகிய விச்வாமித்ரர் மிகவுந் தர்மிஷ்டர்களும் மிகக் கற்றறிந்தவர்களுமாகிய தனது புத்ரர்களைப் பார் த்து யாகஸம்பாரங்களைச் சித்தப்படுத்தும்படி ஆஜ்ஞா பித்துப் பிறகு சிஷ்யர்கள் அனைவரையும் அழைத்துக் 'குழந்தைகளே! நீங்கள் எனது ஆணையைக் கொண்டு சென்று ரிஷிகளையும் அவர்களது சிஷ்யர்களையும் ஸ்நே ஹிதர்களையும் ரித்விக்குகளையும் வித்துவான்களையும் மற்ற அனைவரையும் அழைத்துவாருங்கள். நீங்கள் சென்று கூப்பிடும்பொழுது எனது வாக்ய பலத்தாலேவப் பட்டவன் எவனுவது அநாதரஞ்செய்து ஏதாவது மறு மொழி உரைப்பானுயின், அவ்வுரைகள் அனைத்தையும் எனக்குச் சொல்லவேண்டும்'என்று ஆஜ்ஞாபிக்க, அதை க்கேட்டு அவரது சிஷ்யர்கள் குருவின் ஆணையைக் கொ ண்டு நான்குத் திசைகளுக்குஞ் சென்று ஸகல தேசங்களி லுமுள்ள ப்ராஹ்மணர்களையும் அழைத்துவிட்டு வந்த னர். அப்படியே எல்லாத்தேசங்களினின்றும் வேதங்களை ஓதியுணர்ந்த முனிவர்கள் யாவரும்வந்து சேர்ந்தனர். சி ஷ்யர்கள் அனைவரும் மிகத் தேசுபொருந்தி விளங்கிய குருவினிடம் வந்து ப்ரஹ்மவாதிகள் அனைவரும் உரைத் த உரைகளை இங்ஙனம் மொழிந்தனர். உமது வார்த்தை யைக் கேட்டு ப்ராஹ்மணர்கள் அனைவரும் வந்துசேர்ந்

டிருக்கின்றனர். மஹோதயனென்றொரு முனிவனும் வஸிஷ்டபுத்ரர்கள் நூற்றுவரும் தவிர, ஸகல தேசங்களிலுமுள்ள மற்றை யாவரும் வெகுவாக வந்துவிட்டனர். வஸிஷ்டபுத்திரர்கள் நூறுபேர்களும் மஹோதயனும் மிகக்கோபங்கொண்டு எழுத்துக்கள் தெறித்து மறையும்படி உரைத்த உரைகளெல்லாஞ் சொல்லுகின்றனம்; கேளீர். 'யாகஞ்செய்விப்பது ப்ராஹ்மணன் ஒருவனுக்கே தகும். இப்படியிருக்க, யாகஞ்செய்விப்பவன் க்ஷத்ரியனும், மேலும் யாகஞ்செய்பவனே சண்டாளனும். இது மேலும் விசேஷம், கல்லதுகல்லது. அச்சண்டாளனது ஸபையில் வந்து தேவதைகள் எப்படி ஹவிர்ப்பாகம் பெறுவார்கள். ரிஷிகள் தானுமினும் ரித்விக்குகளாகியாகத்தின்பிச்சமாகிய ஹவிஸ்ஸை எப்படி புசிப்பார்கள். மஹாநுபாவர்களாகிய ப்ராஹ்மணர்களும் விச்வாமித்ரன் தம்மைப் பாதுகாத்து வந்தானுமினும் சண்டாளனது அந்நத்தைப் புசித்து எங்ஙனம் ஸ்வர்க்கமேறப் போகவல்லர்?'. இப்படி மஹோதயனும் வஸிஷ்டகுமாரர்களும் கண்கள் சிவக்கும்படி மிகக் கோபாவேசங்கொண்டு கடோரமாகிய இம்மொழிகளை மொழிந்தனர்' என்றிவ்வாறு விச்வாமித்ரருக்குச் சிஷ்யர்கள் சொல்லி முடிக்க, விச்வாமித்ரரும் அவர்களனைவரும் இங்ஙனஞ் சொன்ன சொற்களைக்கேட்டுப் பெருஞ்சினங்கொண்டு கண்கள் சிவந்து அத்தக் கோபாவேசம் உள்ளடங்காமல் 'மஹாநுபாவர்களின் தேஜோவிசேஷத்திலுள் எவ்வித கெடுதியும் உண்டாகாதென்கிற நியாயம் ஒன்றில்லையோ? அதைப்பற்றியன்றே சண்டாளனுமினும் அவனைக்கொண்டு யாகஞ்செய்விக்க யான் முயன்றனன். ஆகையால் நான் துஷ்டனைக்கூடுமா? மேலும், நான் மிகக்கடுமையாகத் தவம்புரிந்தவனேயன்றி, ஸாமான்யனன்று. இவையெல்லாவற்றையும்அறியாமலும் எனது

பெருந்தவத்தைக் கணிகியாமலும் என்னைத் தூஷிக்கிற துராத்மாக்கள் சாம்பலாகப்போகின்றனர். இதற்குச் சந்தேகமில்லை. இப்பொழுது அவர்கள் காலபாசத்தினால் கட்டுண்டிழுக்கப்பட்டு யமனதுவீட்டுக்குச் செல்வார்கள். இவ்வளவேயன்றி அவர்கள் எழுநூறு ஜன்மங்கள் வரையிலும் எங்குமுள்ள பிணங்களைப்பிடுங்கித் தின்றுகொண்டு மூஷ்டிகரென்னும் ஹீனஜாதியிற்பிறந்து மனஇரக்கமின்றி காய்மாம்ஸத்தைத் தவறுதுபுசித்துச் செயல் பேச்சுமுதலிய ஸகல வியாபாரங்களும் விகாரமாகி விகாரரூபமுங்கொண்டு இவ்வுலகமெங்குந் திரிவார்கள். மஹோதயன் துர்ப்புத்தியாகித் தூஷிக்கத்தகாத என்னைத் தூஷித்தானன்றோ? அவனே ஸகலலோகங்களிலும் தூஷிக்கப்பட்டு வேடத்தனம் பெற்றுத் தபையற்றுப் பலாத்காரமாகப் பிராணிகளைப் பீடிப்பதில் விருப்பங்கொண்டு வெகுகாலம் எனது கோபத்தினால் துர்க்கதியைப் பெறவேண்டும்' என்றனர். பெருந்தவம்புரிந்து மஹர்ப்ரபாவம்பெற்ற விச்வாமித்ரர் ரிஷிகளின் இடையில் இவ்வளவுமட்டுஞ் சொல்லி நிறுத்திவிட்டனர். ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ர் த்ரிசங்குவுக்காக மற்றொருஸ்வர்க்கம் நிர்மிருத்தல்.

மிகப் பிரபாவம் பொருந்திய விச்வாமித்ரர் தனது தவமகிமையால் மஹோதயனுடன் வஸிஷ்டகுமாரர்கள் அனைவரையும் பாழாகச்செய்து ரிஷிகளின் இடையில் 'நானும்' இவன் இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்தவன்; த்ரிசங்குவென்று எங்குங் கியாதி பெற்றவன்; மேலும் மிக்க தர்மம் பொருந்தியவன். தானஞ்செய்வதில் இவனுக்கொத்தவன் எவனுமில்லை. முன்பு க்ஷத்ரியனாயிருந்த இவன் இப்பொழுது சாபத்தினால் சண்டாளரூபம்பெற்று இந்தச்

சரீரத்தோடுகூடவே ஸ்வர்க்கம்போகவேண்டி என்னைச் சரணமடைந்தனன். இவன் தனது சரீரத்துடன்கூடவே ஸ்வர்க்கத்துக்குப் போகும்படி நீங்களும் நானுங்கூடி யாகத்தை நடப்பிக்கவேண்டும்' என்றனர். விச்வாமித்ர ரது வார்த்தையைக் கேட்டு, மஹர்ஷிகள் அனைவரும் ஒருமித்துக்கூடி தர்மத்தை அறிந்தவர்களாகையால் தர் மம் பொருந்தியிருக்குமாறு தமக்குள் 'இவ்விச்வாமித்ர முனிவர் குசிகவம்சத்திற் பிறந்தவர். மிகவும் கோபஸ்வ பாவமுடையவர். ஆகையால் இவர் சொல்லியதை வேறு மெனச் செய்வதையன்றி நன்றாகச் செய்து முடித்தே யாகவேண்டும். இதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில்:— இவர் அக்நியைப் போன்றவர்; அபாரமகிமையுள்ளவர். நாம் இவருக்குக் கோபத்தை உண்டாக்கினோமாயின், நம்மைச் சபித்துவிடுவர். ஆகையால் நாம் இந்த யாகத் தை நடப்பிக்கவேண்டும். வேறுமென நடத்துவதுமாத் திரமேயன்றி இவ்விக்ஷ்வாகுவம்சத்து மன்னவன் விச்வா மித்ரரது பிரபாவத்தினால் இச்சரீரத்தோடு கூடவே ஸ்வ ர்க்கத்துக்குப் போகும்படி இதை நடத்தவேண்டும். ஆன துபற்றி அனைவரும் தொடங்கி ரித்விக்குகளாகி நின்று, தந்தமது காரியத்தை நிறைவேற்றவேண்டும்'என்று ஒரு வருக்கொருவர்பேசிக்கொண்டு, அப்பொழுதே அனைவரு ம் அந்தந்தக்காரியங்களை நடத்தத்தொடங்கினர். அவ்வே ள்வியில் மஹா தேஜஸ்வியாகிய விச்வாமித்ரர் அத்வர்யு வாயிருந்தனர். மந்திரங்களை நன்குணர்ந்த ரித்விக்குகள் யாவரும் சாஸ்த்ரங்களை அநுஸரித்துக் கல்பஸூத்ரங்க ளிற்சொல்லியபடி க்ரமந் தவறாமல் ஸகல கர்மங்களையும் நடத்தினர். பின்பு விச்வாமித்ரரும் தனது தவத்தின் மகிமையால் ஹவிர்ப்பாகங் கொடுப்பதற்காகத் தேவதை கள் அனைவரையும் மந்த்ரங்களைச் சொல்லி அழைத்தனர்

மீளவும் மந்திரங்களைச் சொல்லி வெகு கோரமாக அழைத்தும் தந்தமது பாகத்தைப் பெறுவதற்குத் தேவர்களில் ஒருவரும் வரவில்லை. பின்பு அம்முனிவர் மிகக் கோபாவேசங்கொண்டு ஹோமஞ் செய்கிற அகப்பையை உயரஎடுத்துக்கொண்டு திரிசங்குவைப் பார்த்து 'திரிசங்குமன்னவனே! உனது யாகம் அப்படி இருக்கட்டும். நான் சேர்த்து வைத்த எனது தவத்தின் பிரபாவத்தைப் பார். இதோ எனது தவமகிமையால் உன்னை ஸ்வர்க்கலோகத்துக்கு இத்தேகத்தோடுகூடவே போகச் செய்கின்றேன். மற்றொருவன் எப்பாடு பட்டபோதிலும் சரீரத்தோடு போகமுடியாத ஸ்வர்க்கத்துக்கு நீ சரீரத்துடன்போவாயாக. மன்னவனே! நான் இத்தனை காலமாகச் செய்து ஸம்பாதித்து வைத்த தவத்தின் பயன் சிறிதாயினும் இருக்கின்றதன்றோ? அதற்குள்ள அஸாதாரணப்ரபாவத்தினால் நீ சரீரத்தோடுகூடவே ஸ்வர்க்கத்துச் செல்வாயாக' என்றனர். அம்முனிவர் அங்ஙனஞ் சொல்லுகையில் ரிஷிகள் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கையில் அம்மன்னவன் அப்பொழுதே ஸ்வர்க்கலோகம் போய்ச் சேர்ந்தனன். தேகத்தோடுகூடவே ஸ்வர்க்கத்துக்கு வந்திருக்கிற திரிசங்கு மன்னவனைப் பார்த்து, தேவேந்திரன் ஸமஸ்த தேவர்களோடுங்கூடி 'திரிசங்குவே! நீ மீளவும்போய்ச் சேருவாயாக. நீ ஸ்வர்க்கத்தில் வாஸஞ்செய்யத் தகுந்தவனல்லை. மதிகெட்டவனே! குரு சாபம் பெற்றுக் கெட்டுப்போயிருக்கிற நீ எங்கே? ஸ்வர்க்கம் எங்கே? போரும் போரும். தலைகீழாகப் பூமியில்விழுவாய்'என்றனன். அங்ஙனம் தேவேந்திரன் சொல்ல, திரிசங்குமன்னவன் தபோதனராகிய விச்வாமித்ரரைப் பார்த்து 'ஸ்வாமீ! என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று கதறிக்கொண்டு மீளவும் பூமியில் வந்து விழுந்தனன். விச்வாமித்ரரும்

அங்ஙனங் கதறிக்கொண்டு விழுகிற அம்மன்னவன் மொழியைக்கேட்டு மிகுந்த கோபாவேசங்கொண்டு 'த்ரிசங்கு! அவ்விடத்திலேயே நில்; நில்' என்று மொழிந்து மிக்க ஒளியுடன் விளங்கிய விச்வாமித்ரர் ரிஷிகளின் நடுவில் வேறொரு ப்ரஹ்மதேவனென்னும்படி நின்று, த்ரிசங்கு மன்னவன் இருக்குமிடத்தில் மற்றொரு ஸ்வர்க்கத்தை நிருமிக்க முயன்று, தெற்குத் திசையின் வழியில் வேறுக வே ஸப்தரிஷிகளைப் படைத்தனர். இவ்வளவேயன்று; கோபக் தலையெடுக்குமாயின், அது எதைத்தான்செய்விக் காது? அம்முனிமன்னவர் ரிஷிகளின் நடுவில் நின்றுகொண்டு தனது கீர்த்தி எங்கும் விளங்குமாறு தென்திசையில் புதிதாக வேறு நக்ஷத்திரங்களை வரிசையாகப் படைத்து, அவ்வளவோடு நிற்காமல், கோபத்தினால் மனக்கலக்கமுற்று 'மற்றொரு இந்திரனையாவது படைத்துவிடுகின்றேன். இல்லையாயின், நான் படைத்த லோகத்துக்கு த்ரிசங்கு இருக்க, இந்திரனென்று மற்றொருவன் ஏதுக்காக வேண்டும்' என்று முயன்று இந்திரனுடைய த்ரிசங்குவுக்குப் பரிவாரமாகத்தக்க வேறு தேவர்களையும் படைக்கத் தொடங்கினர். அதைக் கண்டு தேவாஸுரர்களும் ரிஷிகளும் கூட்டங்கூட்டமாகி 'நமக்கெதிராக வேறு தேவர்களைப் படைத்தால், நாம் ஸஹிக்கமுடியுமா' என்று மிகவும் பரபரத்து, அம்மாமுனிவரிடம் வந்து பலவகைகல்வார்த்தைகளைச் சொல்லிக் கோபத்தைத் தணித்து 'மிகுந்த பாக்கியம் பொருந்தினவரே! உமக்குத் தெரியாதது யாதும் இல்லை. இவன் குருசாபத்தினால் கெட்டுப்போனவன். ஆனதுபற்றி இச்சரீரத்தோடு கூடவே ஸ்வர்க்கமேறத் தக்கவனல்லவேயல்லன்' என்றுரைக்க, அம்முனிமன்னவரும் அவர்களது வசநத்தைக் கேட்டு 'தேவர்களே! உங்களுக்குச் சுபமுண்டாகவேண்டும். இந்த த்ரிசங்குமன்

னவனுக்குச் சரீரத்தோடுகூடவே ஸ்வர்க்கம் போகும்படி பிரதிஜ்ஞை செய்து, யான் அதைப் பொய்யாகச் செய்யப் போறேன். இந்த த்ரிசங்கு தன் சரீரத்தோடு கிலிபெற்றி ருக்கிற இத்தேசமே சாச்வதமான ஸ்வர்க்கமாகவேண் டும். மேலும் இந்த லோகங்கள் எத்தனை காலமிருக்கு மோ, அத்தனைகாலமும் நான் படைத்த இந்த நக்ஷத்தி ரங்கள் யாவும் சாச்வதமாயிருக்கவேண்டும். இதை நீங் கள் அனைவரும் ஒத்துக்கொள்ளவேண்டும்' என்றனர். அம்முனிவர் அங்ஙனம் மொழியத் தேவர்கள் எல்லோரு ம் 'மாமுனியே! அப்படியே ஆகட்டும். உமக்குச் சுபமுண் டாகுக. நீர் நிருமித்த பலவகை நக்ஷத்திரங்கள் யாவும் ஆகாயத்தில் அநாதியாகிய சோதிமண்டல வழிக்கு வெ ளியில் சாச்வதமாக நிலைபெற்று விளங்குக. நீர் படைத்த இச்சோதிகளின் இடையில் த்ரிசங்கு மன்னவன் குருவி னிடம் அபசாரப்பட்டது பற்றித் தலை கீழாகவே இரு ந்து மிக்க ஒளிபொருந்தி தேவர்களைப்போல் விளங்க ட்டும். இந்த மன்னவர்தலைவன் ஸ்வர்க்கலோகமடைந்த வரைப்போல் பயனெல்லாம் பெற்றவனைப் பெருங்கீர்த்தி அமைந்திருப்பான். இந்தச்சோதிக ளெல்லாம் த்ருவனை ஸ்வர்க்கநக்ஷத்திரங்கள் தொடர்ந்து செல்வதுபோல, இவனைத் தொடர்ந்து போகட்டும்' என்றனர். தர்ம சிந் தையுடையவரும் மிக்க ப்ரபாவம் பொருந்தினவருமா கிய அவ்விச்வாமித்ரமாமுனிவரும் ஸகலதேவர்களா லும் ரிஷிகளாலும் துதிக்கப்பெற்றுத் தேவர்களை நோ க்கி 'அப்படியே ஆகட்டும்' என்று மொழிந்தனர். புரு ஷோத்தமா! ராமா! பிறகு யாகம் முடிகையில், தவத் தையே பொருளாகப்பெற்று மஹாதபாவர்களாகிய ஸக லமான முனிவர்களும் தேவர்களும் வந்தவழியே திரும் பிப் போயினர். அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அம்பரீஷன் தனது யாகத்துக்குச் சுநச்சே
பஸே நரபசுவாக வேண்டிக்கொள்ளல்.

பிறகு ஜுண்சிங்கமென விளங்கிய மஹாவீரரும் மஹாதபாவருமாகிய விச்வாமித்ரமாமுனிவர் தனது கட்டளையின்படி யாகத்திற்கு வந்திருந்த ரிஷிகள் யாவரும் புறப்பட்டுப் போகக்கண்டு தனது தபோவநத்தில் வாஸஞ்செய்கிற முனிவர்களை நோக்கி 'மஹாதபாவர்களே! நாம் செய்ய முயன்ற தவத்திற்கு இந்தத் தென் திசையில் பெரிய இடையூறு உண்டாய்விட்டது. ஆகையால் நாம் வேறொரு திசைக்குச் சென்று அங்கு தவம் புரிவோம். மேற்குத்திசையில் மிக விசாலமாகிய தபோவநங்கள் உண்டு. அதில் புஷ்கரதீர்த்தத்தின் கரைகளிற் சென்று ஸுகமாகத் தவஞ்செய்வோம். அதுவன்றே? தபோவநங்கள் அனைத்திலும் மேன்மை பெற்றது' என்றனர். இப்படி மஹாதேஜஸ்வியாகிய அம்முனிமன்னவர் உரைத்து மேற்குத்திசைக்குச் சென்று அங்குக்காய் கிழங்குகளை ஆஹாரஞ்செய்துகொண்டு புஷ்கர தீர்த்தத்தின் கரைகளில் யாவராலும் இடையூறு செய்யமுடியாதபடி மிகப் பயங்கரமாகத் தவஞ்செய்துகொண்டிருந்தனர். இக்காலத்திலேயே அயோத்யைக்கு மன்னவனாகிய அம்பரீஷனென்னும் அரசன் தான் ஒரு யாகஞ் செய்ய முயன்று நடத்திவருகையில் அவனது வேள்விக்குதிரையை இந்திரன் திருடிக்கொண்டு போயினன். அங்ஙனம் யாகபசு கண்ணுக்குப் புலப்படாமற் போகையில் புரோஹிதர் அரசனைப் பார்த்து 'மன்னவனே! நீ ஊக்கமற்றிருந்ததுபற்றி உனதுயாகக்குதிரையை இப்பொழுது யாரோ கொண்டுபோய்விட்டனர். ஆகையால் அது புலப்படவில்லை. இங்ஙனம ஊக்கமின்றி வேள்விப்பசுவைப் பத்திர

மாகக் காப்பற்றுவிடில் அந்தப்பசு கெட்டுப்போவது முதலிய தோஷங்கள் பலவும் உண்டாகி அரசனைக்கெடுத்துவிடும். இப்பொழுது இப்பசு கெட்டுப்போனதற்குச் செய்யவேண்டிய ப்ராயச்சித்தமோ நிறைவேற்ற மிகவும் அரிதாயிருக்கின்றது. இந்த யாககாரியந் தொடங்குவதற்கு முன்னமே கெட்டுப்போனபசுவைத் தேடிக்கொண்டு வருவாயாக. இல்லையாயின் எவனாவது ஒருமனிதனை இந்த யாகத்திற்குப் பசுவாக விரைவிற் கொண்டுவருவாயாக' என்றுரைத்தனர். இங்ஙனம் உபாத்தியாயர் மொழிந்தமொழிகளைக் கேட்டுப் பேரறிவுபெற்றுப் புருஷர்களிற் சிறந்த அவ்வம்பரீஷமன்னவன் அநேகமாயிரம் பசுக்களைக்கொடுத்து நரபசுவைத்தேடிக்கொண்டுவர முயன்று புறப்பட்டு அந்தந்த நாடுகளும் நகரங்களும் காடுகளும் ரிஷிகள் வஸித்திருக்கிற புண்யாச்ரமங்களுமாகிய ஓவ்வோரிடத்திலும் தேடிக்கொண்டு சென்று எங்கும் நரபசுவைப் பெறாமல் ப்ருகுதுங்கமென்னும் ஓர் பர்வதத்துக்குச் சென்று அங்கு ரிசீகரென்னும் மாமுனிவர் தனது பிள்ளைகளோடும் மனைவியோடும் ஸுகமாக வாஸஞ்செய்துகொண்டிருக்கக் கண்டனன். மஹாதேஜஸ்வியாகிய அவ்வம்பரீஷனென்னும் ராஜர்ஷி தவப்பெருக்குற்று மிக்க ஒளியுடன் விளங்கி நிற்கிற அந்த ப்ரஹ்மரிஷியைக் கண்ட மாத்திரத்திலேயே மிகுந்த ஸந்தோஷம் அடைந்து அதனால் வடிவெங்கும் ஒளி மீறப்பெற்று அம்முனிவருக்கு நமஸ்காரஞ் செய்து அவரை அருள்புரியச் செய்து எல்லாவற்றிலும் க்ஷேமம் விசாரித்து 'மஹாநுபாவரே! யான் ஒரு யாகஞ் செய்யத் தொடங்கி அந்த யாகத்தின் பசு கெட்டுப்போகையில் அதற்குப் பதிலாக நரபசுவை வேண்டுகின்றனன். நான் உமக்கு நூறுயிரம் பசுக்களை விலையாகக் கொடுக்கின்றேன். அதைப் பெற்றுக்கொண்டு

உமது புதல்வனை யாகத்துக்குப் பசுவாக எனக்குக் கொடுப்பீராயின், நான் காரியங் கைகூடப் பெறுவேன். ப்ருகுவம்சத்திற்பிறந்த மஹாபாக்யசாலியாகிய ரிசீகமுனிவரே! தேசங்களெல்லாம் போய்ச் சுற்றிப்பார்த்தனன். ஆயினும் எங்கும் கரபசு அகப்படவில்லை. உமது புதல்வர்களில் ஒருவனை விலை பெற்றுக்கொண்டு எனக்குக் கொடுக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டனன். அதைக் கேட்டு மிகத்தேசுபொருந்திய ரிசீகமுனிவரும் 'மன்னவனே! நீ என்னவிலை கொடுத்தாயாயினும் எனது மூத்த குமாரனைக் கொடுக்கமாட்டேன்' என்று தீரமாகச் சொல்லிவிட்டனர். மஹாநுபாவர்களாகிய அப்புதல்வர்களின் தாயும், மிகத்தவம்புரிந்த ரிசீகமுனிவர் இங்ஙனம் மொழிந்தது கேட்டு அம்பரீஷ மன்னவனைப் பார்த்து 'வேந்தே! ப்ருகுவம்சத்திற் பிறந்த இம் மஹாநுபாவர் மூத்த குமாரனை விற்கமாட்டேனென்று மொழிந்துவிட்டனரன்றோ? எனக்கும் கடைசிப் புதல்வனாகிய சுநகன் என்பவன் மிகவும் அன்புக்கிடமாயிருக்கின்றனன். மன்னவனே! ஆதலால் கடைசிக்குமாரனை உனக்குக் கொடுக்கமாட்டேன். நான் விபரீதமாக யாதுஞ் சொல்லவில்லை. மஹாராஜனே! பெரும்பாலும் தந்தைகளுக்கு மூத்த பிள்ளைகளிடத்திற் பிரீதி அதிகமென்பதும், அப்படியே தாய்மார்களுக்குக் கடைசிக்குமாரர்களிடத்திற் பிரீதி அதிகமென்பதும் உலகத்தி லெங்குமுள்ள வழக்கமேயன்றி வேறில்லை. ஆகையால் கடைசிப் புதல்வனை யான் காத்துக் கொள்ளுகின்றேன்' என்றனள். ராமா! இங்ஙனம் அந்த ரிசீகமுனிவரும் அம்முனிவரது மனைவியும் மொழிந்துவிடுகையில், நடுவிற்பிள்ளையாகிய சுநச்சேபன் என்பவன் தானுகவே அரசனைப் பார்த்து 'மஹாராஜனே! எனது தகப்பன் மூத்தகுமாரனை விற்கமாட்டேனென்றனன்.

தாயும் கடைசிக் குமாரனைக் கொடுக்கமாட்டேனென்றனள். ஆகையால் நடுப்பிள்ளையாகிய என்னை உனக்கு[1] விற்றுவிட்டார்களாக நினைக்கின்றேன். ஆனதுபற்றி என்னை நீ கொண்டுபோவாயாக' என்றனன். பின்பு அத்தரணியாளன் மிக்க ஆநந்தம் அடைந்து நூறுயிரம்பசுக்களைக் கொடுத்து சுநச்சேபனை வாங்கிக்கொண்டு அவனை விரைவில் தேரில் ஏற்றிக்கொண்டு மிகவுமொளி பெற்றுத் தனது கீர்த்தி எத்திசையிலும் பரம்பும்படி பட்டணமேறச் சென்றனன். அறுபத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் சுநச்சேபனைக் காத்தல்.

புருக்ஷோத்தமா! ரகுநந்தனா! பெருங்கீர்த்தி பெற்ற அம்மன்னவன் சுநச்சேபனை அழைத்துக்கொண்டு செல்ல மத்யாஹ்ந மாகையில் புஷ்கர க்ஷேத்திரத்தில் இளைப்பாறத் தங்கினன். சுநச்சேபன் தனது குணங்களால் எங்கும் புகழ் பெற்றவன். ஆனலென்? தகப்பனது கட்டளை மிக்க மேலாயினும் பிராணங்கள் அதிலும் இனியவையன்றே? ஆகையால் தன்னை யாகத்துக்குப் பசுவாக வேண்டிக் கொண்டுபோவதற்கு மிகவும் பரிதபித்து அம்மன்னவன் இளைப்பாறும் தருணங்கண்டு புஷ்கர க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கு ரிஷிகளுடன் தவஞ் செய்துகொண்டிருக்கிற தனது மாமனுகிய விச்வாமித்ரரைக் கிட்டி மிக்க மனத்துயரத்துடன் கண்டு நீர்வேட்கையா

---

1. பிள்ளையைத்தானம் செய்கையும் விக்ரயம் செய்கையும் கூடாதென்று சாஸ்த்ரம் நிஷேதித்திருந்தாலும், ஒருவம்சம் முதலே நசித்துப்போகையில் பிள்ளையைத்தானம் செய்வது எப்படி தர்மமோ, அப்படியே யாகத்திற்காக விக்ரயம் செய்வதும் தோஷமாகாதென்று தெரியவருகின்றது.

லும் வழிநடந்து வந்த இளைப்பினாலும் முகம் வாடி மிக்க பேதைத்தனம் வழிய அம்முனிவரது மடியில் வெகு வேகத்துடன் வந்து விழுந்து 'நற்கருத்துடைய மாமுனியே! (மாமா) எனக்குத் [1] தாயும் இல்லை. தந்தையும் இல்லை. ஆனபின்புனாதிகளும் பந்துக்களும் இருக்கிறார்களென்பது எதுக்காக? நீர் முனிவர்களில் மேன்மைபெற்று மஹாநுபாவராயிருக்கின்றீர். ஆகையால் தர்மத்தை நினைத்து நீர் என்னைக் காக்கவேண்டும். நீர் கேவல ரிஷிகளைப் போலன்றி மிகுந்த மகிமை யெல்லாம் அமைந்தவர். ஆனதுபற்றியே நீர் யாவரையுங் காக்கின்றவர். இயற்கையாகவே நீர் யாவர்க்கும் நன்மை செய்பவர். ஆகையால் என்னொருவனைக் காப்பது உமக்கு ஒரு விஷயமோ? ஆயினும் என்னைக் காக்கும்பொழுது இம்மன்னவன் செய்ய முயன்ற யாகத்துக்கு யாதொரு கெடுதியும் நேரிடாமலிருக்க வேண்டும். மன்னவனது காரியங் கைகூடும்படிக்கும், நானும் உமது கருணையால் வாழ்நாள் வளரப் பெற்று யாதொரு கெடுதியும் நேரிடப் பெறாமல் மேலான தவங்களை நடத்தி ஸ்வர்க்க மேறும்படிக்கும் நீர் என்னைக் காக்க வேண்டும். தர்மத்தில் மனஞ்சென்ற மாமுனியே! காதனற்ற எனக்கு நீர் மனமிரங்கி நன்மனத்தோடு காதலுகவேண்டும். மகனைத் தந்தை காப்பதுபோல, எனது பாபத்தினாலுண்டாகிய இவ்வருத்தத்தினின்றும் விடுவித்து நீர் என்னைக் காக்கவேண்டும்' என்றிங்ஙனம் உரைத்தனன். விச்வாமித்ரரும் அதைக் கேட்டுத் தனது பெருக்தவத்தின் மகிமையால் அவனைக் காக்கவல்லமை யுள்ளதுபற்றி அவனுக்குப் பலவாறுகத் தேறுதல் சொல்லிவிட்

---

1. (தாயுமில்லை, தந்தையுமில்லை) தாய் தந்தைகளிருக்கையில் இது எப்படியெனில்—இருந்தும் தன்னைக் காக்காமற் கைவிட்டபடியால் இங்ஙனஞ் சொல்லுகின்றான்.

டித் தன் புதல்வர்களை நோக்கி 'நன்மையை விரும்புந் தந்தையர் எந்த ப்ரயோஜநத்திற்காகப் புத்திரர்களைப் படைக்கின்றார்களோ; அப்படிப்பட்ட ப்ரயோஜநத்திற்கு இப்பொழுது ஸமயம் வந்திருக்கின்றது. அந்த ப்ரயோஜநம் தந்தையர் மொழிந்தவற்றைத் தவறுமல் நடத்துகையன்றோ? அங்ஙனஞ் செய்வதனால் உங்களுக்கு மாத்திரமேயன்றி எனக்கும் பரலோகத்தை விளைவிக்க வல்ல தர்மம் ஸித்திக்கும். ஒரு முனிகுமாரனுடைய இப்பாலகன் தன்னைக் காப்பாற்றும்படி என்னை வேண்டிக்கொள்ளுகின்றனன்..புத்திரர்களே! நீங்கள் இவனுக்குப் ப்ராணனைக் கொடுத்து நீங்கள் ப்ரியஞ் செய்யவேண்டும். நீங்கள் எல்லோரும் புண்யத்தையே செய்பவர்; தர்மத்திலேயே ஊற்றமுடையவர். ஆகையால் அம்பரீஷனது யாகத்திற்கு உங்களில் எவனாவதொருவன் பசுவாகச்சென்று அக்கிக்குத் திருப்தி செய்யவேண்டும். நீங்கள் இப்படிக்குச் செய்வீர்களாயின், சுநச்சேபன் காதலுள்ளவனுகிப் பிழைத்துப் போவான். அம்பரீஷனது யாகமும் இடையூறின்றி நிறைவேறும். தேவர்களும் திருப்தியடைவார்கள். தந்தையாகிய என்து வசநத்தையும் தவறுமற் செய்ததாகும்' என்று மொழிந்தனர் மதுஷ்யந்தன்முதலிய குமாரர்கள் அம்முனி வசனத்தைக்கேட்டு அஹங்காரங் கொண்டி பரிஹாஸத்துடன் 'தந்தையே! நீர் எங்களுக்கு பிரபு ஆயினும் தனது வயிற்றிற் பிறந்த பிள்ளைகளைப் பாதுகாப்பது தவிர்ந்து மற்றொருவன் பிள்ளையைக் காக்க முயல்வது எப்படி? இது எவ்விடத்து வழக்கமோ? நற்சுவையுணவைத் தள்ளி நாயின் மாம்ஸத்தைத் தின்பதுபோல், இது செய்யத்தகாத காரியமென்று எண்ணுகின்றோம்' என்றனர். அங்ஙனம் அத்தப் பிள்ளைகள் மொழிந்த மொழியைக் கேட்டி விச்வாமித்ரமாமுனிவர் மிக்க கோபங்

கொண்டு கண்கள் சிவந்து தன் புத்திரர்களைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினர்: 'அடா துஷ்டர்களே! 'தகப்பன் வார்த்தையைத் தள்ளலாகாது' என்று சிறிதும் அச்சமின்றி, 'தந்தை சொற்படி நடக்கவேண்டும்' என்னுந் தர்மத்தையுந் தள்ளிவிட்டு என் வார்த்தையை உல்லங்கனஞ் செய்து எனக்கு மயிர்க் கூச்சமுண்டாகும்படி இங்ஙனங் கடினமாகிய மொழிகளை உரைத்தீர்களன்றே? ஆகையால் நீங்கள் எல்லோரும் வஸிஷ்டபுத்திரர்களைப்போல முஷ்டிகஜாதியர்களாகிகாயின்மாம்ஸத்தைத் தின்றுகொண்டு ஆயிரமாண்டுகள் நிரம்பும் வரையில் பூமியில் திரியவேண்டும்' என்று சபித்தனர். இங்ஙனம் புத்திரர்களைச் சாபங்கொண்டவர்களாகச் செய்து, முனிவர்களிற்சிறந்த விச்வாமித்ரர் பயந்துவருந்திநிற்கும்சுநச்சேபனுக்குப் பயமொன்றுமில்லாமற்படி விபூதிமுதலியவற்றை மந்திரித்து ரக்ஷை செய்து, அவனைநோக்கி 'முனிபுத்திரனே! நீ பரமபவித்ரமாகிய தர்ப்பக்கயிற்றினாற்கட்டுண்டு சிவந்த பூமாலையுஞ் சந்தனமுந் தரித்து விஷ்ணுவைத் தேவதையாகவுடைய யூபஸ்தம்பத்தினருகிற் சென்று அக்கினிக்கு எதிராக நின்றுகொண்டு நான் சொல்லுகிற இவ்விரண்டுமந்திரங்களைச் சொல்லவேண்டும். இதோ இவ்விரண்டு மந்திரங்களை உனக்குச்சொல்லுகின்றேன். இவைகளில் ஒன்று இந்திரனையும் மற்றொன்று உபேந்திரனையும் குறித்தது. அப்படிதங்களாகிய இவ்விரண்டு மந்திரங்களை மாத்திரம் நீ அம்பரீஷனது யாகத்திற்சென்று காகஞ்செய்ய வேண்டும். அதனால் நீ உனது [1] எண்ணம் நிறைவேறப் பெறுவாய்' என்றனர். சுநச்சேபனும் மிக்க மனஉவக்கத்துடன் அவ்விரண்டு மந்திரங்களையும் பெற்றுக்கொண்டு மனக்கவலை தீர்ந்து வேகமாகச்சென்று சிங்கம்போன்ற அவ்வம்பரீஷ

1. எண்ணம்-சாவாமற் பிழைக்கவேணுமென்னுங் கருத்து.

மஹாராஜனைப் பார்த்து 'மிக்க பலம்பொருந்திய மன்னவர் தலைவனே! யாகத்திற்குக் கெடுதி நேராதபடி எங்கெங்கும் திரிந்து என்னைப் பசுவாகப் பெற்றனை. இனி ஏன் காலக்கழிவு செய்யவேண்டும்? சீக்கிரமாக யாகசாலைக்குப் போவோம். நீ தீக்ஷை பெற்றுக்கொண்டு யாகத்தை நிறைவேற்றுவாயாக' என்று மொழிந்தனன். இவ்வாறு சுநச்சேபன் மொழிந்த அம்மொழியைக் கேட்டு அம்பரீஷ மன்னவனும் மிக்க ஸந்தோஷமடைந்து யாகம் நடத்துவதில் அதிக மனவிருப்பமுங் கொண்டு சிறிதுஞ் சோம்பலின்றி வேகமாக யாகசாலைக்குப் போய்ச் சேர்ந்தனன். பின்பு அந்த மன்னவன் யாகத்துக்குரிய ஸபிகர்களின் அநுமதிபெற்று யாகத்துக்குப் பசுவென்று தெரியும்படி இவனை தர்ப்பக் கயிற்றால் கட்டி சிவப்பு வஸ்திரந் தரிக்கச்செய்து பசுவாகக்கொண்டு யூபஸ்தம்பத்திற் கட்டுகையில், அம்முனிகுமாரனும் கட்டுண்டு மிக்கமேன்மை பொருந்திய அவ்விரண்டு மந்திரங்களைக் கொண்டு பலியைப் புசிப்பவனுகிய இந்திரனையும் யூபஸ்தம்பத்திற்குத் தேவதையாகிய உபேந்திரனையும் விதிப்படிக்குத் துதி செய்தனன். ராகவா! பின்பு ஆயிரங்கண்ணனுகிய தேவேந்திரனும் தனக்கு ப்ரபுவாகிய விஷ்ணுவை ரஹஸ்யமாகத் துதிசெய்ததற்கு மிகவுந் திருப்தியடைந்து தன்னைத் துதித்ததற்கும் மிகுந்த ஸந்தோஷம்பெற்று அவனுக்கு தீர்க்காயுஸ்ஸைக் கொடுத்தனன். புருஷர்களிற் சிறந்த ராமனே! அம்பரீஷ மன்னவனும் தேவேந்திரனது அனுக்கிரகத்தினால் யாகத்தின் பலனைப் பலமடங்கதிகமாகப் பெற்றனன். தர்மத்தில் நிலைநின்று மிக்க தவமுடைய விச்வாமித்திரரும் புஷ்கரக்ஷேத்திரத்திலேயே மீளவும் ஆயிரமாண்டுகள் தவஞ்செய்தனர். அறுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் மஹர்ஷித்வம் பெறுதல்.

இங்ஙனம் ஆயிரமாண்டுகள் நிரம்பின பின்பு, தேவர்கள் அனைவரும் அம்மாமுனிவர் செய்த பெருந்தவத்திற்குப் பலன்கொடுக்க விரும்பி விரதத்தை முடித்து ஸ்நானஞ்செய்து எழுந்தருளியிருக்கிற அம்முனிவரிடம் வந்தனர். அப்பொழுது மிக்க ப்ரபாவமுடைய ப்ரஹ்மதேவன் அந்த முனிவரைப் பார்த்து 'உனக்குச் சுபமுண்டாக வேண்டும். இதுவரையில் நீ ராஜர்ஷியாயிருந்தனை. நீ கடத்திய நற்றவங்களால் இப்பொழுது [1]ரிஷியாகவே ஆய்விட்டனை' என்று இம்மொழியைச் சொல்லினன். வானவர் வேந்தனாகிய ப்ரஹ்மதேவன் விச்வாமித்ரருக்கு இவ்வாறு சொல்லிவிட்டுத் தேவலோகம்போயச் சேர்ந்தனன். மிக்க தேசுபொருந்திய விச்வாமித்ரரும் அவ்வளவில் திருப்தி அடையாமல் மீளவும் பெருந்தவம் புரியத் தொடங்கினர். புருஷர்களிற்சிறந்த ராமனே! பிறகு வெகுகாலஞ் சென்றபின் ஒருகாலத்தில் அப்ஸரமடந்தையர்களில் தலைவளாகிய மேநகை அந்தப் புஷ்கர தீர்த்தத்துக்கு வந்து ஸ்நானஞ்செய்யத் தொடங்கினள். குசிகவம்சத்திற் பிறந்த விச்வாமித்ரர் மிக்க ப்ரபாவமுள்ளவராயினும் மேகத்து நடுவில் விளங்கும் மின்னற்கொடிபோல் அந்தப் புஷ்கர தீர்த்தத்தில் இழிந்து ஸ்நானஞ்செய்துகொண்டிருக்கும் அழகில் தனக்கு ஒப்பில்லாத அம்மேநகையென்னும் அப்ஸரமடந்தையைக் கண்டனர். விச்வாமித்ரமுனிவர் அம்மேநகையைக் கண்டவுடன் காமனுக்கு ஆளாகி அவளை நோக்கி 'ஓ அப்ஸரப்பெண்ணே! உனக்கு நல்வரவு உண்டாகவேண்டும். நீ இங்கு எனது ஆச்ரமத்திலேயே வஸித்

---

1 இதுவரையில் ராஜரிஷியாயிருந்தா யென்றும், இப்பொழுது கேவல 'ரிஷியாய் விட்டாயென்றும் கருத்து.

திருக்கவேண்டும். உன்னைப் பார்த்தவுடன் மன்மதன்கை யில் அகப்பட்டு மோகித்துக்கிடக்கிற என்மீது நீ மனமிரங் கவேண்டும். உனக்கு நன்மை உண்டாகுக' என்றிவ்வாறு வேண்டிக்கொண்டனர். விச்வாமித்ரர் இங்ஙனம் வேண் டிக்கொள்ள, அழகில் ஒப்பில்லாத அம்மேநகையும் ஒத் துக்கொண்டு அவ்வாச்ரமத்திலேயே வஸித்திருந்தனள். ரகுகுலத்திற் பிறந்த மஹாநுபாவனே! ராமா! அங்ஙனம் அவ்வாச்ரமத்தில் விச்வாமித்ரரும் மேநகையுமாகக் கூடி வஸித்திருக்கையில் ஸுகமாகப் பத்துவருஷங்கள் சென் றுவிட்டன. விச்வாமித்ரர் அங்ஙனம் பத்துவருஷங்கள் செல்ல அம்மடந்தையுடன் கலந்தமையால் உண்டான தவ க்கெடுதியை நினைத்து வெட்கமடைந்து சிந்தையும் சோக மூமாகிற பெருங்கடலில் மூழ்கினர். ரகுநந்தா! அம்முனி வர் 'தேவர்கள் அனைவருங் கலந்து எனது தவத்தைக் கெ டுக்கச்செய்த கொடுஞ்செயலே இது; வேறன்று. ஐயோ! பத்து வருஷங்களும் ஓர் இராப்பகல்போலவே சென்று விட்டன. நான் காமாவேசங்கொண்டு அறிவுகெட்டுப் போயினன். ஆனதுபற்றியே எனது தவத்துக்கு இங்ங னம் இடையூறு நேரிட்டது' என்று கோபத்துடன் தன்ம னத்திற்றானே நினைத்துக்கொண்டனர். இங்ஙனம்விச்வா மித்ரர் தான் செய்தவற்றைத் தானே நினைத்துப்பெருமூச் சுவிட்டு மிகவும் துயரமடைந்தனர். குசிக வம்ச குமாரரா கிய அம்முனிவர் பிறகு 'இவர் நம்மை என்ன சபிப்பரோ' என்று பயந்து கிடுகிடுவென்று நடுக்கமுற்றுக் கையைக் கூப்பிக்கொண்டு எதிரில் நிற்கிற மேநகையைப் பார்த்து 'இது எனது அபராதமேயன்றி நீ இதற்கு என்செய்வாய்' என்று இதுமுதலிய இனிய மொழிகளைச் சொல்லி அச் சந்தர்த்துவிடைகொடுத்தனுப்பிவிட்டு, உடனே வடக்குத் திசையில் விளங்குகின்ற ஹிமாலயத்திற்குச் சென்றனர்.

அங்ஙனஞ்சென்று ஐம்புலன்களையும் வென்று 'விரதத்தைத் தொடங்கி மிக்க மனவூக்கங்கொண்டிருந்து அதை முடிக்கவேண்டும்' என்று முயன்று தன்கீர்த்தி எங்கும் விளங்கும்படி கௌசிகிநதிக் கரையிற் சென்று அங்குக் கோரமாகத் தவஞ்செய்தனர். அம்முனிவர் அங்ஙனம் ஹிமாலயஞ் சென்று ஆயிரமாண்டுகள் அதிபயங்கரமாகத் தவம்புரிந்திருக்கையில், தேவர்களுக்குப் பயம் உண்டாயிற்று. அங்ஙனம் பயந்த தேவர்களும் ரிஷிகளும் ஆகிய அனைவரும் ஒன்றுகூடி ப்ரஹ்மாவினிடஞ் சென்று 'தேவா! இவ்விச்வாமித்ரர் மஹர்ஷியென்கிற பட்டம் கன்றுகப் பெறலாம். [1] அதற்காக எழுந்தருளவேண்டும்' என்றழைத்தனர். ஸகலலோகபிதாமஹனுகிய ப்ரஹ்மதேவனும் அவர்களது வசநத்தைக் கேட்டு அப்படியேயென்று விச்வாமித்ரரிடம் வந்து அந்த மெய்த்தவமாமுனியைப் பார்த்து 'ஓ மஹர்ஷீ! உனக்கு நல்வரவு. குழந்தாய்! நீ செய்த கடுந்தவத்திற்கு யான் மிகுந்த ஸந்தோஷம் அடைந்தனன். உனக்கு மேன்மை கொடுக்கின்றேன். நீ ரிஷிகள் அனைவரிலும் தலைவனுயிருப்பாயாக' என்று இங்ஙனம் இனிய உரைகளை உரைத்தனன். ஸகலலோகங்களுக்கும் பிரபுவாகிய ப்ரஹ்மதேவன்மொழிந்த மொழியைக் கேட்டு விச்வாமித்ரமாமுனிவர் வருந்தவுமில்லை; களிக்கவுமில்லை. பிறகு அம்முனிவர் ஸகலலோக பிதாமஹனுகிய அந்த ப்ரஹ்மாவை நமஸ்கரித்துக் கையைக் கூப்பி நின்று கொண்டு 'மஹாநுபாவனே! நான் செய்த கற்றவங்களால் ஒப்பில்லாத மஹர்ஷியென்னும் பட்டத்தை எனக்குக் கொடுத்தாயாயின், நான் அப்பொழுது ஜிதேந்த்ரியனும் ஆய்விட்டேனன்றே?' என்றனர். அதைக் கேட்ட நான்முகனும் அம்முனிவரைப் பார்த்து 'நீ

1 (அதற்காக) அவருக்குப் பட்டங்கொடுப்பதற்காக.

முனிவர்கள் அனைவரிலுக் தலைவனுயினை. ஆயினும் நீ ஜிதேந்திரியனல்லை. மனத்துக்கு விகாரத்தை விளைவிக்குங் காரணங்கள் இருப்பினும் விகாரமின்றியிருப்பவனன்றே? ஜிதேந்திரியனுவான். அதுவோ உனக்கில்லை. அதற்காக நீ இன்னும் ப்ரயத்நஞ் செய்யவேண்டும்' என்று மொழிந்து, தேவலோகத்துக்குச் சென்றனன். பிரமனுடன் வந்த மற்றுமுள்ள தேவர்கள் யாவரும் புறப்பட்டுப் போகையில், அவ்விச்வாமித்ரர் முனிவர்கள் அனைவரிலுக் தலைமை பெற்றுத் தன் முயற்சி வீணுனதற்குப் பின் வாங்காமல் கைகளை உயரவெடுத்து யாதொரு பிடிப்புமின்றி நின்று வாயு பக்ஷணஞ் செய்துகொண்டு தவஞ் செலுத்தினர். பின்னும் அம்மாமுனிவர் (இரவும் பகலுந் தவத்தையே பொருளாக நினைத்து) வெயிற்காலத்தில் நாற்புறமும் அக்நியை வளர்த்தி கடுவிலிருந்து ஸூர்யனிடத்திற் கண்களைச் செலுத்தி, ஆகப்பஞ்சாக்நிமத்தியத்தில் நின்றுகொண்டும், மழைக்காலத்தில் மழைக்கு யாதொரு தடங்கலுமில்லாத வெளிப்புறத்தில் நின்றுகொண்டும், குளிர்காலத்தில் ஜலத்தில் மூழ்கி நின்றுகொண்டும், இவ்வாருக ஆயிரமாண்டுகள் மிக்க பயங்கரமாகத் தவம் கடத்தினர். அம்முனிவர் இவ்வண்ணம் கடுந்தவஞ் செய்துகொண்டிருக்கையில் தேவர்களும் இந்திரனும் மிகவும் பயந்து பெருங்கலக்க முற்றனர். இந்திரன் தேவர்கள் அனைவருடன் கலந்து ஆலோசித்து ரம்பை யென்னும் அப்ஸர மடந்தையைப் பார்த்துத் தமக்கு நன்மையையும் விச்வாமித்ரருக்குத் தீங்கையும் விளைவிக்க உத்தேசித்துப் பின்வருமாறு மொழிந்தனன். அறுபத்து மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

இந்திரன் ரம்பையை அனுப்புதலும், விச்வாமித்ரர் அவளைச் சபித்தலும்.

'ரம்பையே! நீ விச்வாமித்ரரைக் காமமோஹங்கொள்ளச்செய்து அவர் மனத்தைக் கலைத்து உன்னிடத்தில் மிகவும் ஆசைப்படச் செய்யவேண்டும். இது ஸாதாரணமான காரியமன்று. இது பெரிய தேவகாரியம். ஆனது பற்றி நீ இதைத் தப்பாமற் செய்யவேண்டும்' என்று அவ்வண்ணம் மிகுந்த மதியுடைய தேவேந்திரன் மொழிய, அவ்வார்த்தையைக் கேட்டு, ராமா! அவ்வப்ஸரமடந்தையும் 'இதென்ன! அறிவுள்ள இந்திரனும் இவ்வண்ணம் என்னுற் செய்யமுடியாத வார்த்தையைச் சொல்லுகின்றான்' என்று வெட்கமுற்றுக் கையைக் கூப்பிக்கொண்டு தேவேந்திரனை நோக்கி 'வானவர் தலைவனே! இவ்விச்வாமித்ரர் ஸாமாந்யரன்று. அவர் முனிவர்களில் மேலானவர். இவ்வளவேயன்றி அவர் யாவரையும் பயமுறச் செய்பவர். நான் அங்குச் சென்று சிருங்கார விளையாடல்களைக் காட்டினேனையின், அவர் தாருணமாகக் கோபங்கொண்டு என்னைச் சபித்துவிடுவார். இதற்குச் சந்தேகமில்லை. தேவா! ஆனதுபற்றியே நான் போகப் பயப்படுகின்றேன். என்னைப் போகவிடாமல் அருள் புரியவேண்டும்' என்று விச்வாமித்ரரை நினைத்துப் பயந்து நடுநடுவென்று நடுங்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு நிற்கிற அம்மடந்தையை நோக்கி ஆயிரங் கண்ணனாகிய தேவேந்திரன் 'ரம்பையே! பயப்படவேண்டாம். எனது கட்டளையைத் தவறுமற் செய்வாயாக. உனக்கு நன்மை உண்டாகும். நான் வஸந்தருது வருகையில் தளிர்த்துப் பூத்து அழகியதொரு மரத்தின்மீது மனோஹரமான ஓர் குயிலுருவந்தரித்து மன்மதனுடன்கூடி உனது பக்கத்தில்

உனக்கு ஸஹாயமாகவந்திருப்பேன். ரம்பையே! நீயும் உனது அழகைப் பன்மடங்குஅதிகமாக விளங்கும்படி செய்துகொண்டு விச்வாமித்ரரிடஞ் சென்று அவர் செய்கிற கடுந்தவத்தைக் கெடுத்துக் காதலுறச் செய்யவேண்டும்' என்றனன். அழகிய அம்மங்கையர் மணியும் இங்ஙனம் இந்திரன் மொழிந்த மொழிகளைக் கேட்டுத் தானும் ஒத்துக்கொண்டு சிருங்காரம் பொழியும்படி ஒப்பில்லாத அழகுபொருந்திய உருவந்தரித்து, முகத்திற் புன்னகைதோன்ற விச்வாமித்ரரிடம் வந்து, அம்முனிவரைத் தன்மீது காதலுறச் செய்யத்தொடங்கினள். அப்பொழுது விச்வாமித்ரர் அழகாகக் கூவுகின்ற குயிலின் ஒலியைக் கேட்டு மனங்களித்து உடனே எதிரில் நிற்கிற இந்த அரம்பையைக் கண்ணுற்றனர். அங்ஙனம் அவர் கோகிலத்தின் ஒலியைக் கேட்டும் ரம்பையைப்பார்த்தும் ஒப்பில்லாத அவ்வரம்பையின் காதத்தைச் செவியுற்றும் 'இதென், தானுக வந்தவளோ? அல்லது இந்திரன் அனுப்பினனோ?' என்று ஸந்தேஹம் அடைந்தனர். பின்பு அம்முனிவர் அவ்வரம்பையின் ஸங்கேதம் முதலியவற்றைக் கண்டு 'இவள் இந்திரன் அனுப்பவந்தவளே' என்று நிச்சயித்து, மிகவுங் கோபாவேசங்கொண்டு, ரம்பையைப் பார்த்து, 'ரம்பையே! காமக்ரோதங்களை வெல்லக்கருதித் தவஞ்செய்கிற என் மனத்தை நீ தீயமுயற்சிகொண்டு கலக்கமுறச்செய்தனை. நீ இங்ஙனஞ்செய்ததற்குப் பலமாகப்பதினாயிரமாண்டுகள் கல்லாகிக் கிடக்கவேண்டும். ரம்பையே! எனது கோபத்திற்பட்டுக்கல்லாய்க்கிடக்கிற உன்னை, மிகுந்த ப்ரபாவம்பொருந்தியவனும் தவப்பெருக்கமைந்தவனுமாகிய ஓர்ப்ராஹ்மணன் தனது தவமகிமையால் சாபத்தினின்றும் விடுவிப்பான்' என்றிவ்வாறு சாபங்கொடுத்தனர். இங்ஙனம் மஹாதேஜஸ்வியாகிய அம்முனிமன்னவர் கோபத்தை அடக்கமுடி-

யாமல் அம்மடந்தையைச் சபித்துவிட்டுப் பின்பு 'ஐயோ! கோபத்திற்காளாய்விட்டேனே. இவள் செய்த குற்றம் யாது? இவளே ஏன் தயையின்றி யான் சபித்தனன்?" என்று பச்சாத்தாபம் அடைந்தனர். அப்பொழுது அம்முனிவரிடம் சாபம்பெற்ற ரம்பையும் கல்லாய்விட்டனள். இங்ஙனம் அம்மஹர்ஷி ரம்பையைப் பார்த்துச் சபித்துச் சொன்னவார்த்தையைக் கேட்டு மகேந்திரனும் அவ்விடம் நில்லாமல் பயந்து புறப்பட்டுப் போய்விட்டனர். மஹாதேஜஸ்வியான அவ்விச்வாமித்ரரும் தனது தவப்பெருக்கைத் தானே அங்ஙனம் கோபத்தினால் பாழாக்கிக்கொண்டது கண்டனர். அவ்விச்வாமித்ரருக்குத் தான் புலன்களை வெல்லாததனால் தனது தவம் பாழாய்விட்டது பற்றி மனத்திலுண்டான வருத்தமானது சிறிதுநேரமேயில்லை. இங்ஙனம் இந்திரியங்களை வெல்லாததனால் தனது தவமெல்லாங் கெட்டுப் போனதைக் கண்டு அம்முனிவர் தன்மனத்தில் 'நான் இனிக் கோபங்கொள்ளாதிருக்கவேண்டும். யார் எதைச்செய்தபோதிலும் வாயைத் திறவாமல் மௌனமாகவே இருக்கவேண்டும். அல்லது மூச்சுவிடுவதில் கோபம்முதலியவை உண்டாகின்றன. ஆகையால் ஆயிரமாண்டுகள் நிரம்பினவளவிலும் மூச்சுவிடாமலே இருக்கவேண்டும். யான் தவமகிமையால் ப்ரஹ்மர்ஷியென்கிற பட்டம் பெறுகிறவரையிலும் ஐம்புலன்களையும் வெளியிற் செல்லவொட்டாமல் அடக்கித் தவத்தினால் எனது சரீரத்தை ஒடுக்கி உலர்த்திவிடவேண்டும். அதுவரையில் எத்தனை வருஷங்கள் கடந்தபோதிலும் மூச்சுவிடாமலும் ஆகாரங்கொள்ளாமலும் இருக்கவேண்டும். நான் தவம்புரிந்தேனுயின் அத்தத் தவத்தின்மகிமையால் எனது அவயவங்கள் ஆகாரம் முதலியவை இல்லாவிடினும் நசிக்கமாட்டா'என்று ஸங்கல்பஞ் செய்துகொண்ட

னர். இப்படி அம்முனிமன்னவர் ஆயிரமாண்டுகள் மூச்சு விடாமலும் ஆகாரமொன்றும் புசியாமலும் இருந்து விரதத்தில் முயற்சிகொண்டு இதை எவ்விதத்திலாயினும் முடித்தே தீரவேண்டுமென்று ஒப்பில்லாத பிரதிஜ்ஞை செய்தனர். அறுபத்துநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

விச்வாமித்ரர் ப்ரஹ்மர்ஷியாதல்.

ராமா! பின்பு முனிவர்களில் தலைவராகிய விச்வாமித்ரர் ஹிமாலயத்திலுள் கியாதிபெற்ற வடக்குத்திசையை விட்டுக் கீழ்த்திசைக்குச் சென்று, அங்கு ஆயிரமாண்டுகள் ஒப்பில்லாத மௌனவிரதந் தரித்திருப்பதாக ஸங்கல்பித்துக்கொண்டு மிக்க பயங்கரமாகி யாவராலுஞ் செய்யமுடியாத கடுந்தவத்தை கடத்திக்கொண்டிருந்தனர். இப்படி அவ்விச்வாமித்ரமாமுனிவர் பூர்ணமாய் ஆயிரவருஷங்கள் வரையிலும் கட்டைபோல் நின்று தவஞ் செய்துகொண்டிருக்கையில், எவ்வளவு விக்நங்கள் நேரினும் அவர்மனத்தில் கோபமென்பது சிறிதும் உண்டாகவில்லை. ராமா! அந்த விச்வாமித்ரமாமுனிவர் 'தான் இனி, கோபமே கொள்ளக்கூடாது' என்று பெருத்த நிச்சயங்கொண்டு விரதத்தில் நன்கு முயன்று எவ்வகை விக்நங்களும் நேரிடாதபடி தவஞ்செய்தனர். ஆனதுபற்றியே கோபத்திற்கு அவகாசம் நேரிடவில்லை. ரகுவம்சத்திற்பிறந்த மஹாநுபாவனே! ராமா! விரதத்தில் மிகுந்த ஊற்றங்கொண்ட அந்த விச்வாமித்ரமாமுனிவர் தான் ஸங்கல்பித்துக் கொண்டபடி சிறிதுங்குறையின்றி ஆயிரமாண்டுகள் நிரம்ப விரதத்தைச் செய்து முடித்துவிட்டு, அந்தத் தைப் புசிக்கத் தீர்மானங்குகையில், தேவேந்திரன் ஓர்தாணன்வேடம்பூண்டு அவ்விச்வாமித்ரரிடம் வந்து, அவர்

புசிக்க ஸித்தஞ்செய்து வைத்திருக்கிற அந்த அந்நத்தையெல்லாம் தனக்குக் கொடுக்கும்படி யாசித்தனன். மேன்மை பெற்றவரும் பெருந்தவம் புரிந்தவருமாகிய அவ்விச்வாமித்ரமாமுனிவர் அப்பொழுது ஆயிரம் வருஷங்கள் கடந்த பின்பு, தான் பாரணை செய்வதற்காக ஸித்தப்படுத்தி வைத்த அந்நத்தையெல்லாம் அவ்வந்தணன் கேட்டதற்குச் சிறிதும் ஸந்தேஹப்படாமல் தவத்தின் ஸித்தியை விரும்பி வேண்டினவர்களுக்கு அந்நத்தைக் கொடுக்கவேண்டுவதே யென்று நிச்சயித்துக்கொண்டு பக்வமாயிருக்கிற அவ்வன்நத்தையெல்லாம அவனுக்குக் கொடுத்துவிட்டுத் தனக்கு ஓரவிழுங்கூட மிச்சமாகாமற் போனது பற்றிப் புசிக்காமலே யிருந்து மௌனவிரதத்தைக் கைப்பற்றிக்கொண்டு அவ்வந்தணனை ஒன்றுஞ் சொல்லாம விருந்துவிட்டனர். பின்பு அம்முனிவர் ஆயிரம் வருஷகாலம் மூச்சுவிடாமல் தவஞ்செய்து கொண்டிருந்தனர். இப்படி அம்முனிமன்னவர் மூச்சுவிடாமல் தவஞ்செய்து கொண்டிருக்கையில், அவரது சிரஸ்ஸினின்றும் ஓர் புகை கிளம்பிற்று. அதனால் மூவுலகங்களும் நடுநடுங்கிப் பரிதபிக்கப் பெற்றவைபோல் ஆயின. பின்பு தேவர்களும், கந்தர்வர்களும், உரகர்களும், அஸுரர்களும், ராக்ஷஸர்களும் ஆகிய எல்லோரும் அவ்விச்வாமித்ரரது தவமாகிற அக்நியால் தந்தமது ஒளியெல்லாங் குன்றி மதிமயங்கி மிக்க வருத்தமுற்று ப்ரஹ்மாவினிடஞ் சென்று இங்ஙனம் முறையிட்டுக்கொண்டனர். 'தேவா! ரம்பை முதலிய தேவலோகஸ்த்ரீகளை அனுப்பி விச்வாமித்ரரை மனக்கலக்க முறச் செய்யும் பார்த்தனம். ஆயிரமாண்டுகள் நிரம்பினபின்பு, தான் விரதத்தைமுடித்துப் பாரணை செய்வதற்காகச் சித்தஞ்செய்து வைத்திருந்த அந்நத்தை வாங்

கிக்கொள்வது முதலியவற்றால் அம்முனிவருக்குக் கோபத்தையும் உண்டுபண்ணப் பார்த்தனம். எதைச் செய்தபோதிலும் அவருடைய தவங் குறையாமற் பெருகிவருகின்றது. அவரிடத்தில் ஏதாவதொரு குற்றமாயினுஞ் சிறிதும் புலப்படவில்லை. ஆகையால் அவர் மனத்தில் விரும்பியது யாதோ, அதை நீர் கொடாவிடின், ஜங்கமஸ்தாவரங்களடங்கிய மூவுலகங்களையும் அவர் தனது தவத்தீயினால் நாசஞ்செய்து விடுவார். ஸ்வாமீ! திசைகள் யாவும் இருள்மூடிச் சிறிதுமொளியற்றவைகளாய்விட்டன. கடல்கள் அனைத்தும் கலக்கமுற்றன. பர்வதங்களெல்லாம் படபடவென்று வெடித்துப் போகின்றன. பூமியும் கிடுகிடுவென்று நடுங்குகின்றது. வாயுவும் மிக்க கலக்கத்துடன் வீசுகின்றது. இதற்குச் செய்யவேண்டியதுயாதோ, தெரியவில்லை. இங்ஙனம் உபத்ரவப்பட்டு ஜந்துக்கள் அனைவரும் நித்யானுஷ்டானங்களை ஒழித்து நாஸ்திகரைப்போலாய்விடுவார்களென்று தோற்றுகின்றது. இதைக்காட்டிலும் வேறு விபரீதம் யாது உண்டாகவேண்டும்? மூவுலகங்களும்மிக்க மனக்கலக்கமுற்று மதிமயங்கிக்கிடக்கின்றன, அம்மஹர்ஷியினது தேஜஸ்ஸினால் ஸூர்யனது ஒளியுங் குன்றிவிட்டது. இனி மற்றவைகளைப்பற்றி என் சொல்லவேண்டும்? அந்த மாமுனிவரே அக்நியைப் போன்றவர்; மிகுந்த மகிமையோடு கூடி மிக்க ஒளியுடன் விளங்குகின்றனர். அப்படிப்பட்ட அம்முனிவர் மூவுலகங்களையும் அழிக்க நினைப்பதற்கு முன்பே தேவரீர் அவரை அநுக்ரஹிக்க வேண்டும். முன்பு ப்ரளய காலாக்நி எப்படியோ, அப்படியே அம்முனிவர் மூவுலகங்களையுந் தகித்துவிடுவாரென்று தோற்றுகின்றது. ஒருக்கால் அவர் தேவராஜ்யத்தையும் வேண்டக்கூடும். ஆகையால் அப்படிப்பட்ட விபரீதம் உண்டாவதற்கு முன்னமே அவர்

வேண்டிக்கொள்வதைக் கொடுப்பது கலம்' என்றுரைத் தனர். பிறகு தேவர்கள் அனைவரும் பிரமனை முன் னிட்டுக்கொண்டு மஹாதபாவராகிய விச்வாமித்ரரிடம் வந்து 'ப்ரஹ்மரிஷியே! உனக்கு க்ஷேமம் உண்டாகுக. நீ செய்த கடுந்தவத்தினால் நாங்களெல்லோரும் மிக்க மகி ழ்ச்சியடைந்தனம்' என்று இங்ஙனம் இனிதாக உரைத் தனர். அப்பொழுது மீண்டும் ப்ரஹ்மதேவன் இம்முனி வரை நோக்கிக் 'கௌசிகனே! ஸகல தேவர்களும் யா னு மாக உனக்கு நெடுங்காலம் ஆயுளையும் வளரச் செய்கின் றோம். நீ நன்மையைப் பெறுவாய். உனக்கு க்ஷேமம்உண் டாகும். நீ இனி இந்தத் தவத்தை நிறுத்திவிட்டுச் சுகமாகப் போகலாம்' என்று மொழிந்தனன். இங்ஙனம் பிரமனும் மற்றுமுள்ள தேவர்களும் மொழிந்த மொழி யைக் கேட்டு விச்வாமித்ரர் ஆநந்தமடைந்து அனைவர்க் கும் நமஸ்காரஞ் செய்து 'நீண்ட வாழ்நாளையும் அந்தணர் தன்மையையுங் கொடுத்தது உண்மையாயின், ஓங்கார மும் வஷட்காரமும் வேதங்களும் தாமே வந்து எனக் குத் தோன்றவேண்டும். நான் அவைகளை ஒருவர்க்கு உபதேசிக்கவும் ஒருவர்க்கு யாகஞ் செய்விக்கும்பொழுது அவைகளை உபயோகிக்கவும் உரியவனாக வேண்டும். மற் றொன்றுஞ்சொல்லுகின்றேன்; கேளீர். வஸிஷ்டர் ஸூர் யவம்சத்தரசர்களுக்கு அரசதியாகப் புரோஹிதராயிருப் பதுபற்றி க்ஷத்ரியர்களுக்குவேண்டிய அதர்வணவேதமெ ல்லாம் நன்கறிந்தவர். மேலும் ப்ராஹ்மணர்களுக்கு வே ண்டிய வேதங்களை யெல்லா மோதியுணர்ந்து கடைத்தே றினவர். பிரமனுக்கு மானஸ புத்திரர். இப்படிப்பட்ட மஹிமையுடைய வஸிஷ்டர் என்னை ப்ரஹ்மரிஷியென்று சொல்லவேண்டும். எனக்கு இதுவே முக்கியமான மநோ ரதம். இதை முடித்தீர்களாயின், நீங்கள் என்மீது செ

யல் தீர்ந்தவர்களாகிப் போய்ச் சேரலாம்' என்றனர். பின்பு ப்ரஹ்மரிஷியாகிய வஸிஷ்டரைத் தேவர்கள் ப்ரார்த்திக்க அம்முனிவரும் மனந் தெளிந்து விச்வாமித்ரரோடு நேசஞ் செய்துகொண்டு 'தேவர்கள் சொன்னபடியே நீர் ப்ரஹ்மரிஷியாய் விட்டீர்' என்று மொழிந்தனர். பின்பு தேவர்களும் விச்வாமித்ரரை நோக்கி 'நீர் ப்ரஹ்மரிஷியாகைக்குச் சந்தேகமொன்றுமில்லை. ப்ரஹ்மரிஷியாகையொன்றேயன்று. யாகஞ் செய்விப்பது வேதங்களை யோதுவிப்பது முதலிய அதிகாரங்கள் யாவும் உமக்குக் கைகூடும்' என்றுரைத்துத் தாங்கள் வந்தவழியே போய்ச் சேர்ந்தனர். (விச்வாமித்ரரும் அங்ஙனம் ஒப்பில்லாத ப்ராஹ்மணத்தன்மையைப் பெற்றுப் பின்பு தர்மங்களை யெல்லா மறிந்தவராகையால் ப்ரஹ்மரிஷியாகிய வஸிஷ்டரைப் பூசித்துச் செயல் தீர்ந்து தவஞ் செய்துகொண்டே பூமியெல்லாந் திரிந்தனர். ராமா! இம்மஹாநுபாவர் இவ்வண்ணம் ப்ராஹ்மண்யம் பெற்றனர். இவர் முனிவர்கள் அனைவரிலுஞ் சிறந்தவர்; தவமே ஓர் வடிவு கொண்டது போலிருப்பவர்; எப்பொழுதும் தர்மத்திலேயே ஊக்கமுற்றவர். பராக்ரமத்திற்கு இவரே பிறப்பிடம்' என்றிவ்வாறு மஹாதேஜஸ்வியாகிய சதாநந்தமாமுனிவர் விச்வாமித்ரரது மகிமையைச் சொல்லி முடித்தனர். அப்பொழுது ஜநக மஹாராஜனும் ராமலக்ஷ்மணர்களுக்குச் சதாநந்தர் சொல்லிய வாக்கியங்களைக் கேட்டு விச்வாமித்ரரைப் பார்த்துக் கையைக் கூப்பிக்கொண்டு 'மாமுனியே! குசுத்ஸ்த வம்சத்திற் பிறந்த மஹாநுபாவர்களாகிய ராமலக்ஷ்மணர்களோடுகூடி நீர் எனது யாகத்திற்கு வந்தமையால் யான் தந்யனாயினன். உம்முடைய அனுக்ரஹம் பெற்றனன். மாமுனியாகிய உம்மைக் கண்டதனால், யான்

பவித்ரனுயினன். 'நீர் மஹாநுபாவர். ப்ரஹ்மர்ஷிகள் அனைவரிலுஞ் சிறப்புற்றவர். உமது தர்சநத்தினுல் எனக்குப் பலநற்குணங்கள் உண்டாயின. மிக்கப்ரபாவம்பொருந்திய நீர் கடத்தின பெருந்தவத்தைச் சதாநந்தர் பரக்கச் சொல்லிக் கொண்டுவர, யானும் மஹாநுபாவனுகிய ராமனும் கேட்டனம். ஸபிகர்களும் இச்சபைக்கு வந்தமையால் உமது குணங்கள் பலவற்றையுங் கேட்டனர். விச்வாமித்ரமாமுனியே! உமது தவம் என்றும் அளவிடமுடியாதது. அப்படியே உமது பலத்திற்கும் அளவில்லை. உமது தவபலங்களிரண்டும் ப்ரஹ்மதேவனுக்குஞ் சிவனுக்கும் எப்படியோ, அப்படியே விளங்குகின்றன. மிகவும் ஆச்சரியமான உமது கதைகளை எவ்வளவு கேட்கிலும் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. பொழுது போகின்றது. மாலைக்கடனைச் செய்யவேண்டிய தருணம் நெருங்கிவிட்டது. ஸூர்யாஸ்தமயமாகின்றது. ஆகையால் அடியேனுக்கு இப்பொழுது விடைகொடுக்கவேண்டும். நாளைத்தினங் காலையில் அடியேனை மீளவுங் கடாக்ஷித்தருளவேண்டும். மாமுனியே! உமது வரவு நல்வரவாயிற்று. நான் போய்வருகின்றேன்' என்றனன். அப்பொழுது விச்வாமித்ரரும் இவ்வாறு புருஷர்களிற் சிறந்த ஜநகமஹாராஜன் சொல்லக் கேட்டு மனமகிழ்ந்து அம்மன்னனைப் புகழ்ந்து போய்வருவாயென்று விடைகொடுத்தனுப்பினர். மிதிலைக்கதிபதியாகிய வைதேஹமன்னவனும் விச்வாமித்ர மஹர்ஷியை இங்ஙனங் கொண்டாடித் தனது புரோஹிதர்களோடும் பந்துக்களோடுங்கூட ப்ரதக்ஷிணஞ்செய்து விடைகொண்டனன். பின்பு தார்மிகராகிய அம்முனிவரும் மஹர்ஷிகளாற் பூசிக்கப்பெற்று ராமலக்ஷ்மணர்களுடன் கூடத் தனது இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஜநக மஹாராஜன் சிவதநுஸ்ஸின் விருத்தாந்தஞ் சொல்லுதல்.

1 பிறகு ஜநக மஹாராஜன் பலபலவென்று உதயமானவுடன் எழுந்திருந்து காலைக் கடமைகளைச் செய்து முடித்து மஹாநுபாவராகிய விச்வாமித்ரரை ராம லக்ஷ்மணர்களோடுகூட அழைப்பித்தனன். (அவர்களும் வந்து சேர்ந்தனர்). அப்பொழுது ஜநகமஹாராஜனும் தர்மஸ்வபாவஞ்கையாலே சாஸ்த்ரங்களிற்

---

1 இங்ஙனம் தனது தாயாகிய அஹல்யையின் சாபத்தை விடுவிக்கிறதற்குத் தான் சேர்ப்பாளுயிருந்த உபகாரத்தை நினைத்து ப்ரஸங்காயத்தமாகச் சதாநந்தர் சொல்லிய விச்வாமித்ரமுனிவரது சரித்திரத்திலுல உபகாரகளுகிய குருவின் வைபவம் அறியவேண்டியதென்றும், காமக்ரோதங்கள் எவ்வித த்திலும் தடுக்கமுடியாவென்றும், காமக்ரோதங்களே வென்றவனே ப்ராஹ்மணத்வமடைந்தவனென்றும், ப்ராஹ்மண்யமும் ஸாதாரணமாய்க் கிடைக்கத்தக்கதல்ல வென்றும், ப்ரஹ்மவித்தாயிருப்பவனிடத்தில் அபசாரப்பட்டால் அது ஸர்வாரம்பங்களுக்குங் கெடுதியை விளைவிக்குமென்றும் இவைமுதலிய அர்த்தங்கள் தோன்றுகின்றன. இனி, தானே ஸமஸ்தஜநங்களையும் ரக்ஷிப்பதற்கு அவஸரத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருந்த பகவானுகிய ஸர்வேச்வரன் தேவர்கள் செய்த சரணாகதியை வ்யாஜமாகக் கொண்டு ராவணவதத்தின் பொருட்டு அவதாரஞ்செய்து, அதற்கு அவாந்தரோபாயமா யிருப்பவளும் வேதவதி என்கிற பூர்வாவதாரத்தில் தானே ராவணனே வதிப்பதாக ஸங்கல்பஞ் செய்திருப்பவளுமாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியைச் சீலம் வயஸ்ஸு வ்ருத்தம் அபிஜநம் ஆகிய இவைகளாலொத்திருக்கிற கன்னிகையையே மணம்புரிய வேண்டுமென்கிற இவ்வர்த்தவிசேஷத்தை வெளியிட உத்தேசித்து ஜநகவம்சத்தில் அவதரிப்பித்து அவளே மணம்புரிய முயன்று அவளது மனக்களிப்பின்பொருட்டுத் தாடகை ஸுபாஹு மாரீசன் ஆகிய துஷ்டர்களை நிக்ரஹஞ்செய்தும் விச்வாமித்ரரது யாகத்தைக் காப்பது அஹல்யையைச் சாபத்தினின்றும் விடுவிப்பது முதலிய சிஷ்டபரிபாலநஞ் செய்தும் நேரே வீதையைப் பெறச் செய்த முயற்சியைச் சொல்லுகிறார் இரண்டு ஸர்க்கங்களாலே.

சொல்லிய கட்டளைப்படி விச்வாமித்ரமுனிவரையும் மஹாநுபாவர்களாகிய ராமலக்ஷ்மணர்களையும் பூஜித்துப் பின்பு அம்முனிவரை நோக்கி 'ஸ்வாமீ! மஹாநுபாவரே! உமக்கு நல்வரவாக வேண்டும். பாபமற்றவரே! நான் உமக்கு என்செய்யவேண்டுமோ, அதைக் கட்டளை யிட்டருள வேண்டும். நான் உமது கட்டளையைப் பெற வேண்டியவனல்லவா?' என்றிவ்வாறு மொழிந்தனன். பேசுவதிற் சமர்த்தரும் தர்மஸ்வபாவருமாகிய அந்த விச்வாமித்ரமாமுனிவர், மிகுந்த மகிமை பொருந்திய ஜநகமஹாராஜன் இவ்வாறு சொல்லக் கேட்டு, வல்லமை யுள்ள அம்மன்னவனைப் பார்த்து மேல்வருமாறு மொழிந்தனர். 'மஹாராஜனே! இவ்விருவரும் தசரதமன்னவ னது புதல்வர்கள்; மேலும் உயர்ந்த க்ஷத்ரியவம்சத்திற் பிறந்தவர்கள்; பின்னும் உலகத்தில் எங்கும் ப்ரஸித்தி பெற்றவர்கள். அப்படிப்பட்ட இவ்விருவரும் உன்னிடத் திலிருக்கிற சிறந்த வில்லைப் பார்க்க விரும்புகின்றனர். இ ந்த வில்லை இவர்களுக்குக் காட்டுவாயாக. உனக்கு நன் மை உண்டாகும். இந்த ராஜபுத்ரர்களிருவரும் அவ்வில் லைப்பார்த்து அவ்வளவிலேயே தமதுஉத்தேசம் ஈடேறப் பெற்று மீளவும் இஷ்டப்படி திரும்பிப்போய்விடுவார்கள்' என்றனர். ஜநகமஹாராஜனும் அதைக் கேட்டு அம்மு னிவரை நோக்கி 'மஹாநுபாவரே! இவ்வில்லானது இவ் விடத்தில் எதற்காக இருக்கின்றதோ, அதைச் சொல்லு கின்றேன், கேட்பீராக. எங்கள் குலத்துக்கு நிமி யென்ப வர் கூடஸ்த்தர். அவருக்கு ஆறுவது புருஷர் தேவ ராதனென்பவர். மஹாத்மாவாகிய சிவன் இவ்வில்லை வைத்திருக்கும்படி அந்தத் தேவராதர் கையிற் கொடு த்தனன். (இது சிவனது வில்லாயிருக்குமாறுரைக்கின் றேன், கேட்பீராக.) முற்காலத்திற் சிவபெருமானை

வன் தக்ஷாது யாகத்தை அழிக்கும்பொழுது இவ்வலிய வில்லைத் தனது மிகுந்த வலிவுகொண்டு விளையாட்டாக வே நாணேறச்செய்து சினந்து தேவர்களை நோக்கி 'தேவர்களே! இத்தயாகத்தில் நான் ஹவிர்ப்பாகத்தை விரும்ப, எனக்குப் பாகத்தை ஏற்பாடு செய்யாமற் போனீர்களன்றே? ஆகையால் இவ்வில்லைக் கொண்டு கிரீடஞ் சூடி அழகிய உங்கள் தலைகளை அறுத்துத் தள்ளிவிடுகின்றேன், பாருங்கள்' என்று அலக்ஷ்யமாகச் சொல்லுற்றனன். முனிவர்களிற் சிறந்த விச்வாமித்ரரே! பின்பு அதைக் கேட்டுத் தேவர்கள் அனைவரும் மனக்கலக்கமுற்றுத் தேவர்களுக்குத் தலைவனாகிய அச்சிவபெருமானைச் சரணம் புகுந்து அருள்புரியச் செய்தனர். அத்தத் தேவனும் அவர்களிடம் மனந்தெளிந்து ப்ரீதியைப் பண்ணினன். சிவன் இவ்வாறு மிகுந்த ஸந்தோஷங்கொண்டு மஹானுபாவர்களாகிய அந்தத் தேவர்களனைவர்க்கும் அவ்வில்லைக் கொடுத்தனன். இங்ஙனந் தேவர்கள் இவ்வில்லைச் சிவபெருமானிடம் பெற்று எங்கள் குலத்தில் பெரியோராகிய தேவராதரிடம் இதை வைத்துவைக்கும்படி கொடுத்தருளினர். பின்பு நான் யாகஞ்செய்வதற்காகப் பூமியைச் சோதிக்கவேண்டிக் கலப்பையினால் உழும்போது, அந்தக் கலப்பையினின்று ஒரு பெண்குழந்தை வெளிக்கிளம்பி எனக்கப்பட்டது. அப்பெண்மணி அங்ஙனங் கலப்பையைக்கொண்டு உழுத பூமியினின்றும் உண்டானதுபற்றி ஸீதையென்றே பேர் பெற்று எங்கும் ப்ரஸித்தியடைந்தனள். பூமியிற்பிறந்த அப்பெண்பிள்ளையை நான் வளர்த்துவர, நாடோறும் வளர்ந்து வந்தனள். நான் வளர்த்ததுபற்றி அவள் எனக்குப் புதல்வியாயினள். இத்தப்பெண்பிள்ளை அயோநிஜையாகையால் ஸாமான்யராகிய ஒருவர்க்குங் கொடுக்கத்தகாளென்று ஆ

லோசித்து நம்மிடமிருக்கிற சிவதநுஸ்ஸை நாணேற்றும் வல்லவனுக்கே கொடுக்கவேண்டுமென்று நிச்சயித்து இதுவரையில் ஒருவர்க்கும் விவாஹஞ் செய்து கொடுக்காமல் நிறுத்திவைத்திருக்கின்றனன். மாமுனியே! இவ்வாறு பூமியிற்பிறந்து நாளொருமேனியும் பொழுதொரு வர்ணமுமாக வளர்ந்து வருகிற எனது புதல்வியைப் பற்ற பல மன்னவர்களும் வந்து தமக்கு விவாஹஞ்செய்து கொடுக்கும்படி என்னைக் கேட்டனர். மஹாநுபாவரே! ஆனால் அப்படி வந்து கேட்ட அரசர்கள் அனைவர்க்கும் 'என்னிடமிருக்கிற சிவதநுஸ்ஸை வளைக்கிறவனுக்கே என் புதல்வியைக் கொடுப்பேன்' என்று சொல்லி என் குழந்தையை விவாஹஞ் செய்து கொடாமலிருக்கின்றனன். முனிவர்களிற்றலைவரே! பின்பு நான்குபக்கத்திலிருந்தும் மன்னவர் பலரும் ஒன்றுகூடி நான் வளைக்கவேணுமென்ற அவ்வில்லின் வலிமையை அறியவிரும்பி இம்மிதிலாநகரத்திற்கு வந்தனர். அவர்கள் அங்ஙனம் வந்து அவ்வில்லினது ஸாரத்தை அறிய விரும்புவதைக் கண்டு நான் அதை வரவழைத்து அவர்கட்குக் காண்பித்தனன். அவர்கள் அந்த வில்லைக் கையில் வாங்கிப் பிடிக்கவாவது தூக்கிப்பார்க்கவாவது வல்லராகவில்லை. விச்வாமித்ரமாமுனியே! தவத்தைப் பொருளாகப் பெற்றவரே! அவ்வரசர்கள் பராக்ரமசாலிகளாயிருந்தபோதிலும், அந்த வில்லை வளைக்கமுடியாததுபற்றி அவர்களது வல்லமை அற்பமென்றறிந்துகொண்டனன். ஆகையால் நான் எனது புதல்வியைக் கொடுக்கமாட்டேனென்று அவர்களை நிராகரித்துப் போகவிட்டனன். மாமுனியே! மேல் நடந்த சங்கதியைச் சொல்லுகின்றேன்; கேட்பீராக. பின்பு அவ்வேந்தர்கள் யாவரும் தமது பராக்ரமத்தில் தமக்கே ஸந்தேகமுண்டாகி, அதனால் நாமிவனது புதல்வியைப் பெற

மூடியாதென்று தெரிந்துகொண்டு மிகுந்த கோபாவேசம் மேலெழுந்து எரியப், பலாத்காரஞ் செய்யத் தொடங்கி அனைவரும் மிதிலாநகரத்தைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டனர். அம்மன்னவர்தலைவர்கள் அங்ஙனம் எனதுநகரத்தைச் சூழ்வதற்கு மற்றொரு காரணமுமுண்டு. கான் வீர்யப்பந்தயம் ஏற்படுத்தினதுபற்றித் தம்மை கான் திரஸ்காரஞ்செய்ததாக அவர்கள் எண்ணிக்கொண்டனர். இப்படி நினைத்து மிகுந்த கோபாவேசங்கொண்டு மிதிலாநகரத்தைச் சூழ்ந்து கொண்டு பீடித்தனர். முனிச்ரேஷ்டரே! இவ்விதமாகவே அவர்கள் ஓராண்டு நிரம்பும்வரையில் ஓயாமல் யுத்தஞ்செய்துகொண்டிருக்கையில், எனது கோட்டையைப் பத்திரமாக ரக்ஷிக்கைக்கு வேண்டிய சேனைமுதலிய ஸாதநங்களெல்லாம் நாசமடைந்துவிட்டன. அதனால் யான் மிகத்துயரமடைந்தனன். பிறகு கான் தவஞ்செய்து தேவதைகள் அனைவரையும் அருள்புரியச் செய்கையில், அவர்களும் மிகுந்த ஸந்தோஷம் அடைந்து எனக்குச் சதுரங்கபலங்களைக் கொடித்தனர். அந்தப் பலங்களால் கொடிய செய்கையுடைய அந்த வேந்தர்கள் யாவரும் பங்கப்பட்டு வல்லமையிழந்து இனியும் பராக்ரமத்துக்கு அழிவு நேரிடுமென்று ஸந்தேஹித்துக் கொண்டு மந்திரிகளோடுகூட நான்குத் திசைகளிலும் பறந்தோடிப் போய்விட்டனர். முனிவர்களிற்றலைவரே! இவ்வில்லினது மகிமையைக் கேட்டீரன்றே. மிக்க ஒளியுடையதாகி விளங்குகின்றஅப்படிப்பட்ட இந்த வில்லை ராமலக்ஷ்மணர்களுக்குங் காட்டுகின்றேன். விச்வாமித்ரமுனிவரே! ராமன் இவ்வில்லை எடுத்து நாணேற்றிவிடுவானுயின், அயோநிஜையும் என்து புதல்வியுமாகிய ஸீதையைத் தசரத மஹாராஜனது குமாரனுகிய இந்த ராமனுக்குக் கொடுத்து விடுகின்றேன்' என்றனன். அறுபத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் சிவதநுர்ப்பங்கஞ் செய்தல்.

விச்வாமித்ரமாமுனிவரும் ஜநகமஹாராஜன் மொழிந்த மொழிகளைக் கேட்டு அம்மன்னவனை நோக்கி 'மன்னவனே! ஸ்ரீராமனுக்கு அவ்வில்லைக் கொண்டுவந்து காட்டுவாயாக' என்றனர். பிறகு அந்த ஜநகமஹாராஜனும் மந்திரிகளை அழைத்து 'மந்திரிகளே! நமது திவ்ய தநுஸ்ஸை நல்ல வாஸனைகளாலும் மாலைகளாலும் அலங்கரித்து இவ்விடம் கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட்டனன். அந்த மந்திரிகளும் ஜநகனது கட்டளைப்படி யாகசாலையை விட்டுப் பட்டணஞ் சென்று அந்த வில்லை முன்னே எடுப்பித்துக்கொண்டு நகரத்தினின்றும் வெளிப்புறப்பட்டனர். நீண்ட சரீரமும் மிகுந்த பலமும் பொருந்திய ஐயாயிரம் புருஷர்கள், அந்த வில்லையுள்ளே வைத்தடக்கலஞ் செய்ததும் எட்டுச்சக்கரங்கள் அமைத்ததுமாகிய ஓர் பெட்டியை இழுத்துக்கொண்டு வந்தனர். அவர்கள் ஐயாயிரம் பேர்களாயிருந்தும் அந்த ஒரு பெட்டியை மிகவும் ப்ரயத்நப்பட்டு இழுத்தனர். அந்த ஜநகமஹாராஜனது மந்திரிகள் சிவதநுஸ்ஸையுள்ளே வைத்திருக்கிற அந்த இரும்புப் பெட்டியை யெடுப்பித்துக்கொண்டுவந்து, தேவதையைப்போல் விளங்கிநிற்கின்ற ஜநக மன்னவனைப் பார்த்து 'மஹாராஜனே! மிதிலாபுரத்துக் கதிபதியே! ஸீதையைப் பெற விரும்பி வந்த ஸகல அரசர்களும் 'அப்பா! இவ்வில்லின் வலிமை யிருந்தபடி யென்!' என்று கொண்டாடின சிறந்த வில்லிதோ வந்தது, பார். இதை நீ பார்க்க விரும்பினதுபற்றிக் கொண்டுவந்தனம்' என்றனர். இங்ஙனம் அவர்கள் மொழிந்ததைக் கேட்டு அந்த மஹீபதியும் ஸகையைக் கூப்பிக்கொண்டு மஹாதபாவராகிய விச்வாமித்ரரையும் ராமலக்ஷ்மணர்களிருவரையும் பார்த்து 'அந்தணர்களிற் சிறந்தவ

ரே! இந்த வில்லானது மிகவுஞ் சிறப்புற்றது; ஜநகவம்சத்திற் பிறந்த மஹாராஜர்களால் வெகுநாளாகப் பூஜிக்கப்பெற்று வந்தது. முன்பு ஸீதையைப்பெற விரும்பிவந்த பற்பல அரசர்களும் தாங்கள் மிகுந்த பராக்ரமசாலிகளேயாயினும் இந்த வில்லை நாணேற்ற முடியாமற்போனது பற்றி 'அப்பா!' என்று இதன் வலிவைக் கொண்டாடினர். அவ்வரசர்களென்பதென்? தேவர்கள் அஸுரவருங்கும்பற்கூடி வந்தார்களேயாயினும், மற்றுமுள்ள அஸுரர்களும் ராக்ஷஸர்களும் சிறப்புற்ற கந்தர்வர்களும் யக்ஷர்களும் கிந்நரர்களும் பெரிய உரகர்களும் கும்பற்கூடிவருவராயினும், இதை நாணேறிடுவது முதலியவற்றைச் செய்யமுடியார். இப்படியிருக்க, இனி மனிதர்கள் இவ்வில்லை வளைக்கவும் நாணேற்றவும் பாணத்தைத் தொடுக்கவும் காதுவரையில் நாணை இழுத்துப் பார்க்கவும் அதன் பலவை அறியும்பொருட்டு அதை அசைத்துப்பார்க்கவும் சக்தியற்றவரென்பது சொல்லவேண்டுமோ? மாமுனியே! அப்படிப்பட்ட இந்தச் சிறந்த வில்லை இதோ கொண்டுவந்திருக்கின்றேன். மஹாநுபாவரே! இதை இந்த ராஜகுமாரர்களிருவர்க்கும் காட்டுவீராக' என்றனன். தர்மஸ்வபாவராகிய விச்வாமித்ரரும் ஜநகனது வார்த்தையைக் கேட்டு, ராமனைப் பார்த்து 'அப்பா! ராமனே! வில்லைப் பார்' என்றுரைத்தனர். அப்படியே அந்தப்ரஹ்மரிஷியினது கட்டளைப்படி ஸ்ரீராமபிரானும் அவ்வில் வைத்திருக்கும் பெட்டியைத் திறந்து அதிலிருக்குந் தநுஸ்ஸைப் பார்த்து 'ப்ரஹ்மரிஷே! இந்தச் சிறந்த வில்லை என் கையினால் தொட்டுப் பார்க்கின்றேன். இவ்வளவேயன்றி இதைத் தூக்கி அசைக்கவும் இதை வளைக்கி நாணேற்றவும் ப்ரயத்நஞ் செய்கின்றேன்' என்று கூறினன். அதைக் கேட்டு ஜநகமஹாராஜனும் விச்வாமித்ரமாமுனி

யும் ராமனை நோக்கி 'அப்படியே யாகட்டும்' என்றனர். ரகுகுலகுமாரனாகிய அந்த ராமனும் விச்வாமித்ரமுனிவரது மொழியைக் கேட்டு அநேகமாயிரம் புருஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் விளையாடுவதுபோல அவ்வில்லை நடுவில் பிடித்து எடுத்து நிறுத்திவிட்டனன். (தர்மஸ்வபாவனாகிய அந்த ராஜகுமாரனைவன் அந்த வில்லை அலக்ஷ்யமாகவே எடுத்து நாணேற்றிட்டனன்.) அங்ஙனம் தர்மத்தையே சரீரமாகக் கொண்டவனும் புருஷர்களிற் சிறந்தவனுமாகிய ராமன் [1] அந்த வில்லை எடுத்து நாணேற்றிக் கணை தொடுத்துக் காதுவரையில் நாணை இழுத்தனன். அப்படி இழுக்க அவ்வில்லானது மளமளவென்று நடுவில் முறிந்துவிட்டது. அதனால் ராமனது கீர்த்தி நான்குத் திசைகளிலும் பரம்பி நின்றது. அங்ஙனம் முறிந்த அவ்வில்லினின்றும் இடியிடிப்பதுபோல் மிகவும் பயங்கரமான ஒரு பெருத்த சப்தம் உண்டாயிற்று. அதனால் பூமியானது, பர்வதம் பிளந்து வெடிக்கும்பொழுது நடுங்குவதுபோல் கிடுகிடுவென்று நடுங்கிவிட்டது. அப்பொழுது முனிச்ரேஷ்டராகியவிச்வாமித்ரரும் ஜனகமஹாராஜனும் ராமலக்ஷ்மணர்களுந்தவிர அங்குள்ள மற்றை ஜனங்கள் யாவரும் அவ்வொலியைக் கேட்டு மூர்ச்சை அடைந்து பூமியில் விழுந்துவிட்டனர். பின்பு அந்த ஜனங்கள் எல்லோரும் தேறி எழுந்திருக்கையில், ஜனகமஹீபாலனும் பயந்தீர்ந்து கையைக் கூப்பிக்கொண்டு பேசுவதில்

---

1 கீழ்ச் சொல்லிக்கொண்டு வந்த ப்ரகாரமாக மிகவு முயர்ந்திருக்கிற அவ்வில்லின்தனி பாலனாகிய ராமனுக்கு எட்டமுடியாதாகையால் அவன் அதை யெப்படி வளைத்து நாணேற்றக்கூடுமென்னில்—அவன் ஆச்சர்யகரமான சக்தியுடையவனாகையால் அவன் கைப் பட்டமாத்திரத்திலேயே அந்த வில் வளைந்துவிட்டதென்று தெரிகிறது. ஆகையால் இதில் யாதொரு கேள்விக்கு மிடமில்லை யென்று கண்டு கொள்வது.

342 ஜாகனது யாகஸபையில் ராமன் சிவதநுர்ப்பங்கஞ் செய்தல்.

தனக்குள்ள வல்லமை விளங்குமாறு அம்மாமுனியைப் பார்த்து 'மஹாநுபாவரே ! தசரத குமாரனுகிய இந்த ராமனது பராக்ரமத்தை நான் கண்டு கொண்டனன். இப்பாலகன் எங்கே? மிகுந்த வலிமை யுடைய இவ்வில்லை நாணேற்றுவது எங்கே? இது மிகவும் அற்புதமாயிருக்கின்றது. மேலும் இது எங்குங்காணமுடியாதது. ஆகையால் 'இப்படி, அப்படி' என்று எண்ணவுங்கூட எட்டாதிருக்கின்றது. இவ்வளவேயன்றி, இது மனிதர்க்கே ஸாத்யமன்று. ஆனதுபற்றி இப்படி ஸம்பவிக்குமென்று நான் ஊஹிக்கவேயில்லை. [1] எனது புதல்வியாகிய இந்த ஸீதையானவள் தசரத குமாரனை ராமனைப் பர்த்தா

---

1 இங்ஙு.

'ஜகாராங்ங குலே கீர்த்திமஹாரிஷ்யதி மே ஸுதா,
வீ தா ஹர்த்தாரமாஸாத்ய ராமங் ஷரயாத்மஜம்'

என்று மூலம். இதற்கு விசேஷார்த்தம்— (மேஸுதா) எனது புதல்வியாகிய, இத்தால் தன்னேடுள்ள ஸம்பந்தத்தால் வந்த அதிசயமும், (வீதா) வீதையானவள், இத்தால் அயோநிஜையாக யஜ்ஞ பூமியிற்பிறந்த அதிசயமும் தோற்றுகின்றன. (ஷரயாத்மஜம்) தசரதகுமாரனை, இத்தால் 'ஸாக்ஷாத் குலமிச்ஹந்தி' என்று சொல்லுகிறபடி பந்துக்கள் விரும்புகிற நற்குலத்திற் பிறந்தமையும் (ராமம்) ராமனை, இத்தால் (ரமயதீதிராமஃ) என்று தனது ஸௌந்தர்யம் முதலிய குணங்களால் யாவரையும் ஸந்தோஷிக்கச் செய்பவனுகையால் (ரூபமிச்ஹந்தி கன்யகா) என்கிறபடியே கன்னிகை ஆசைப்படுகிற ரூபாதிசயமும் (ஹர்த்தாரம்) பர்த்தாவாக, இத்தால் த்ரவ்யம் முதலியவற்றால் பரிப்பவன் என்று தோற்றுகையால் (வித்தமிச்ஹந்தி மாதரஃ) என்று சொல்லுகிறபடியே தாய்மார் ஆசைப்படுகிற தனிகத்வமும் இம்மணவாளனுக்கு உண்டென்று தெரிவிக்கப்பட்டது. பெண், தாய், தந்தை, பந்துக்கள் ஆகிய எல்லோர்க்கும் இந்த மணவாளன் இஷ்டனென்று கருத்து. (ஆஸாத்ய) அப்படிப்பட்ட அதிசயத்தையுடைய

வாகப்பெற்று ஜநகவம்சத்தரசர்களின் குலத்திற்குப் பெரும்புகழை விளைவிப்பவளாவாள். குசிகவம்சத்திற் பிறந்த விச்வாமித்ரரே ! சிவதநுஸ்ஸை நாணேற்றும்படியான வலிமையுடையவனுக்கே எனது அருமைப் புதல்வியைக் கொடுப்பேனென்று நான் செய்த ப்ரதிஜ்ஞையும் நிறைவேறிற்று. எனக்கு ப்ராணனிலும் மேலாகி இஷ்டையாயிருக்கின்ற எனது அருமைப்புதல்வியாகிய ஸீதையை ராமனுக்கு அவச்யமாக விவாஹஞ்செய்து கொடுக்கவேண்டும். ஆதலால் அந்தணரே ! உமக்கு நன்மையுண்டாகுக. எனது மந்திரிகள் உம்மிடம் அநுமதி பெற்று ரதத்தின்மீதேறிக் கொண்டு விரைவில் அயோத்தியைக்குப் போகவேண்டும். அவ்விடஞ் சென்று மிக்க வணக்கத்துடன் இனிய சொற்களைச்சொல்லி அத்தரணியாளனை எனதுபட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும். அயோத்திக்குச் சென்று அம்மன்னவனைக் காணும்பொழுது காகுத்ஸ்த்த குலதிலகர்களாகிய இந்த ராமலக்ஷ்மணர்கள் இருவரும் விச்வாமித்ர முனிவரால் காக்கப்பட்டு க்ஷே

வீதை இப்படி ஸகலகுணங்களும் நிறைந்த மணவாளனைப் பெற்று. (ஜநகாநாம்)'அநந்தம் வை தே வித்தம் யஸ்ய மே நாஸ்தி கிஞ்சந,மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் நமே கிஞ்சித் ப்ரதஹ்யதே'என்று பரமாத்மஜ்ஞாநவைபவத்திலுல் ப்ரஸித்தி பெற்ற என்பூர்வர்களாகிய ஜநகவம்சத்தரசர்களுடைய, (குலே) குலத்தில் (கீர்த்திம்) புகழை(ஆஹரிஷ்யதி) விளைவிக்கப்போகின்றாள். (கீர்த்திம்)என்று ஒருமையாயிருப்பதனுல் என்றும் ஒருவிதமாகப் பெருகிவருகின்ற கீர்த்தியையென்று கருத்து. இதையுட்கொண்டே (பெரும்புகழை) என்று சொல்லப்பட்டது. இங்குப் புகழுக்குப் பெருமையாவது—என்றும் ஒரு படிப்பட்டு வளர்ந்து வருகை.

மமாயிருக்கின்றார்களென்றும் [1] வீர்யத்தைப் பந்தயமாக வுடைய ஸீதையை [2]விவாஹஞ்செய்துகொடுக்கப்போகின் றார்களென்றும் இவ் விருத்தாந்தங்களை விரிவாகச்சொ ல்லி அவனுக்குச் சந்தோஷத்தை விளைவித்து அம்மன்ன வனைச் சீக்கிரமாக அழைத்துக்கொண்டு வரவேண்டும்' என்றனன். தர்மஸ்வபாவராகிய விச்வாமித்ரமுனிவரும் 'அப்படியே'என்றுரைத்தி அவ்வரசனது மந்திரிகளை அ ழைத்துத் திருமணப்பத்திரிகையுங் கொடுத்து 'அம்மன் னவனுக்கு இங்கு நடந்த விருத்தாந்தங்களையெல்லா மெ டுத்துரைத்துக் கூடவே அவனை அழைத்துக்கொண்டு வரவேண்டும்' என்றுக் கட்டளையிட்டு அயோத்தியைக்கு அனுப்பினர். அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஜநகமஹாராஜன் தசரதனை அழைத்துக் கொண்டுவரத் தூதர்களை அனுப்புதல்.

இவ்வாறு ஜநக மஹாராஜன் கட்டளையிட்டனுப்பிய அந்தத் தூதர்கள்வாஹநங்களின்மீதேறிக்கொண்டு மிகு ந்தவேகத்துடன் போகையில், வாஹநங்கள் களைத்துப் போனதுபற்றி நடுவழியில் மூன்றிரவுகள் தங்கியிருந்து பிறகு அயோத்த்யாபுரிக்குப் போய்ச்சேர்ந்தனர். அவர் கள் அங்ஙனம் அந்தப்பட்டணஞ் சேர்ந்து அங்கு அரச ன் மாளிகைக்குச் சென்று அவ்விடமிருக்கும் வாசற்காப்

---

1 (வீர்யத்தைப் பந்தயமாகவுடைய) சிவதநுர்ப்பங்கஞ் செய் கைக்குரிய வல்லமையுள்ளவனுக்கே கொடுக்கவேண்டுமிவளையென்று ஜநகன் ப்ரதிஜ்ஞை செய்திருந்ததுபற்றி இங்ஙனங் சொல்லப்படு கின்றது.

2 (விவாஹஞ் செய்துகொடுக்கப் போகின்றார்களென்றும்) இப் பொழுது ராமன் சிவதநுர்ப்பங்கஞ் செய்ததுபற்றி ராமனுக்கு ஸீ தையை விவாஹஞ் செய்து கொடுக்கப் போகின்றார்களென்றும் என்று பொருள்.

பவர்களை நோக்கி ' நாங்கள் ஜநக மஹாராஜனது தூதர்கள். இதை உங்களரசனுக்கு விரைவாகத் தெரிவியுங் கோள்' என்றுரைத்து நிற்க, இந்த த்வாரபாலகர்களும் தசரதமன்னவனுக்கு அவர்கள் வந்திருப்பதைத் தெருவித்தனர். தூதர்கள் தம்மை ஜநகமஹாராஜன் அனுப்பினதாகச் சொல்லக் கேட்டுத் தசரதசக்ரவர்த்தி அவர்களை அழைத்துக்கொண்டு வரக்கட்டளையிட்டனன். அந்தத் தூதர்களும் வாசற்காப்பவர்களைப் பின் சென்று அரசன் மாளிகைக்குப் போய்ச்சேர்ந்து, அங்குத் தேவதைபோல் விளங்கிநிற்பவனும் வயது சென்றவனுமாகிய தசரதவேந்தனைக்கண்டனர். அவர்கள் அவ்வரசனது [1]ஸௌஜந்யத்தைக் கண்டு சிறிதும்பயமின்றி அனைவரும் அஞ்சலிஹஸ்தர்களாகி அம்மன்னவனைப் பார்த்து மிக்க வணக்கத்துடன் மேல்வரும் இனிய உரைகளைக் கூறினர். 'மஹாராஜனே! மிதிலாதிபதியாகிய ஜநகமஹீபாலகன் அடிக்கடி ஸந்தோஷத்தைப் பொழிகிற இனிய வுரைகளால் 'உனக்கு க்ஷேமமா' என்றும் 'நீ புரஸ்கரித்து வருகிற உனது அக்நிஹோத்ரங்கள் யாதோரிடையூறுமின்றி நடந்தேறி வருகின்றனவா? அப்படியே நீ மேன்மையுடன் ஆதரித்து வருகிற உனது உபாத்யாயர்களும் புரோஹிதர்களும் க்ஷேமமா யிருக்கின்றார்களா?' என்றும் விஜ்ஞாபிக்கின்றனன். இங்ஙனம் எமது விதேஹராஜன் உனது க்ஷேமம் விசாரித்து விச்வாமித்ரமுனிவருடைய அநுமதிப்படி உனக்கு இவ்வாறு தெரிவிக்க எமக்குக் கட்டளையிட்டனன். 'சிவதநுஸ்ஸை வளைக்கும் வல்லவனுக்கே எனது பெண்ணைக் கொடுப்பேன்' என்று பூர்வத்தில் நான் ப்ரதிஜ்ஞை செய்திருக்கிற ஸங்கதியும், அரசர்கள் பலரும் வந்து பார்த்தீ அந்த வில்லை வளை

1 (ஸௌஜந்யம்) நல்ல ஸ்வபாவமுடையவனு யிருக்கை.

க்க முடியாமல் என்மீது கோபாவேசங்கொண்டதும், அவர்களை நான் அடித்துத்துரத்த, அவர்கள் வல்லமையற்று விழுகர்களாகி ஓடிப்போனதும் உனக்குத் தெரிந்தவிஷயமே. இப்படி ஸமஸ்த அரசர்களாலும் விரும்பப்பட்ட, எனது புதல்வியாகிய ஸீதையை, மஹாநுபாவனாகிய உனது குமாரன், விச்வாமித்ரமுனிவரை முன்னிட்டுக்கொண்டு எனது பரிக்யவசத்திலுல் மிதிலைக்குவந்து வீர்யமஹிமையால் தனக்கு வசமாக்கிக்கொண்டனன். அந்த விதஞ் சொல்லுகின்றேன். மஹாராஜனே! ராமன் தனதுமஹாபலத்திலுல் எனது[1]யாகாவஸாநத்திற் கூடிய பல ஜநங்கள் நிறைந்த பெரிய ஸபையில் மிகுந்த மஹிமை பொருந்திய சிவதநுஸ்ஸை நடுவிற் பிடித்து முறித்துவிட்டனன். என்புதல்வியைச் சிவதநுர்ப்பங்கஞ் செய்தவனுக்குக் கொடுக்கவேண்டுமாகையால் இவ்வில்லை முறித்த ராமனுக்கே இந்தப் பெண்ணைக் கொடுக்கவேண்டியதாயிருக்கின்றது. ஆகையால் நான் செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்ற விரும்புகின்றேன். அதற்கு நீ அநுமதி செய்யவேண்டும். மஹாராஜனே! நீ உபாத்யாயர்களையும் புரோஹிதர்களையும் முன்னிட்டுக்கொண்டு சீக்கிரமாக வந்து சேரவேண்டும். உனக்கு நன்மையுண்டாகும். உனது ப்ரியகுமாரர்களாகிய ராமலக்ஷ்மணர்களை இப்பொழுது நீயும் பார்க்கவேண்டும். ராஜாதிராஜனே! நான் உனது தர்சநம் பெற்றும் உனது புத்திரனுக்கு என் புதல்வியாகிய ஸீதையை விவாஹஞ் செய்வித்தும் ஸந்தோஷம்பெற விரும்புகின்றேன். அந்தச்சந்தோஷத்தை எனக்கு நீ நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும். இந்தக் குமுந்தைகளையும் இவர்களது விவாஹோத்ஸவத்தையுங்கண்டு நீயுங்களிப்பாயாக' என்று விதேஹதேசாதிபதியாகிய

1. (யாகாவஸாநம்) யாகத்தின் முடிவு.

ஜநகமஹாராஜன் விச்வாமித்ரரிடம் அநுமதி பெற்றும் ச தாநந்தருடைய ஸம்மதியைக் கொண்டும் இவ்விணிய மொ ழிகளை உன்னிடஞ் சொல்லும்படி எங்களுக்குச் சொல்லி யனுப்பினன்.' (என்றிவ்வாறுரைத்து அந்தத் தூதர்கள் அவ்வரசனிடத்தில் கௌரவத்தினால் அதற்குமேல் அதி கமாகச் சொல்ல சங்கைப்பட்டு அவ்வளவோடு முடித்து கின்றனர்.) தசரதவேந்தனும் அந்தத் தூதர்களது வாக் யங்களைக் கேட்டு மிகவும் ஆநந்தம் அடைந்து வஸிஷ்ட ரையும் வாமதேவரையும் மற்றுமுள்ள மந்திரிகளையும் பா ர்த்துக் 'கௌஸல்யைக்குக் களிப்பை விளைவிப்பவனாகிய ராமன் விச்வாமித்ரரால் காக்கப்பட்டுத் தம்பியாகிய லக்ஷ் மணனுடன்கூடி விதேஹதேசத்தில் க்ஷேமமாயிருக்கின் றனன். மஹாபராக்ரமசாலியாகிய ஜநகமஹாராஜனும் ராமனது வல்லமையைத் தெரிந்து கொண்டனன். ஆகை யால் அவன் தனது புதல்வியை ராமனுக்குக் கொடுத்து விவாஹஞ்செய்ய விரும்புகின்றனன். மஹாநுபாவனாகிய ஜநகமன்னவன் சொல்லியனுப்பின இந்த விருத்தாந்தம் உங்களுக்கு அபிமதமா யிருக்குமாயின், மிதிலாநகரத் திற்குச் சீக்கிரமாகப் போவோம்' என்றனன். அதைக் கேட்டு மந்திரிகளும் மஹர்ஷிகளும் 'நல்லது, அப்படியே செய்வாய்' என்று ஒப்புக்கொண்டனர். அரசனும் அத ற்கு மிகவும் ஸந்தோஷித்து 'காலைக்குப் புறப்படலாம்' என்று மந்திரிகளுக்குச் சொல்லிவிட்டனன். ஜநகராஜ னது மந்திரிகளும் மந்திரிகளுக்குரிய குணங்களெல்லாம் அமைந்து விளங்குபவர்களாகையால் தசரதமன்ன னிடம் மிகுந்த ஸத்காரம் பெற்று ஸந்தோஷித்து அன் றிரவெல்லாம் அங்கே வஸித்திருந்தனர். அறுபத்தெட் டாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதசக்ரவர்த்தி மிதிலைக்குப் போதல்.

பிறகு அன்றிரவு கடந்தவுடனே தசரதசக்ரவர்த்தி ரித்விக்குகளோடும் பந்துக்களோடுங்கூடி ஸந்தோஷத்துடன் ஸுமந்திரனைப் பார்த்து 'இன்று' நமது கருஷ்லங்காப்பவரெல்லோரும் ஸராளமான தங்கனையும் அநேகவிதமான ரத்நங்களையும் எடுத்துக்கொண்டு திருமணத்திற்கு வேண்டிய கார்யங்களையும் ஏற்பாடு செய்துகொண்டு தகுந்த ஜாக்ரதையுடன் முன்னதாகவே புறப்பட்டுப்போகவேண்டும். நான் கட்டளையிட்டவுடனே நான்கு பக்கங்களிலுமுள்ள சதுரங்க ஸைன்யங்களும் உயர்ந்த ரதங்கள் பல்லக்குகள் முதலிய வாஹநங்களும் சீக்ரமாய்ப்புறப்படவேண்டும். வஸிஷ்டரும் வாமதேவரும் ஜாபாலியும் காச்யபரும் நன்கு வளர்ந்த ஆயுளையுடைய மார்க்கண்டேயரும் காத்யான ரிஷியும் ஆகிய இந்த அந்தணர்கள் யாவரும் முன்னே போகவேண்டும். காலதாமதஞ் செய்யாமல் எனது ரதத்தையும் ஸித்தப்படுத்தி இங்கு அனுப்புவாயாக. ஜநகராஜனது தூதர்கள் என்னை அவஸரப்படுத்துகின்றார்கள்' என்றனன். அந்தத்தசரதமன்னவன் இவ்வாறு மொழிந்து ரிஷிகளோடுகூடப் புறப்பட்டுப் போகையில், அவனது கட்டளைப்படி சதுரங்கஸேனை அவனைப் பின்தொடர்ந்து போயிற்று. அம்மன்னவன் இவ்வாறு நாலுநாள் வழிநடந்து சென்று (ஐந்தாவதுநாள்) விதேஹதேசம் போய்ச் சேர்ந்தனன். ஐச்வர்யங்களெல்லாம் அமைந்த ஜநகமஹாராஜனும் தசரதசக்ரவர்த்தி வந்த சங்கதியைக் கேட்டு உபஹாரங்களைச் ஸித்தப்படுத்திக்கொண்டனன். பிறகு ஜநகமன்னவன் ச்ருதகீர்த்தியை (வயதுசென்றிருக்கிற) தசரதசக்ரவர்த்தியினிடம் வந்து அவனைக்கண்டு ஸந்தோஷம் அடைந்து 'இனி ஸீதைக்குச் சீக்ரத்தில் விவாகம் நடக்கலாம்' என்று பேராநந்தம்

பெற்றனன். புருஷர்களிற் சிறந்த ஜநகமஹீபதி புருஷர்களிற் சிறப்புற்ற அந்தத் தசரதமன்னவனைப் பார்த்துச் சந்தோஷம் பெருகப்பெற்று 'மஹாராஜனே! உனக்கு நல்வரவா? ரகுலத்திற் பிறந்த மஹாநுபாவனே! நீ எனது பாக்யவசத்தினால் இவ்விடம் வந்து சேர்ந்தனை. உன் புத்ரர்கள் வில்லை முறித்தது முதலிய பராக்ரம வியாபாரங்கள் உனக்குப் பரமாநந்தத்தை விளைவிக்கப்போகின்றன. அவர்களைக் கண்டு அந்த ஆநந்தத்தை அநுபவிப்பாயாக. மஹாதேஜஸ்வியும் மஹிமைகளெல்லாம் அமைந்தவருமாகிய வஸிஷ்டமஹரிஷியும் ப்ராஹ்மணச்ரேஷ்டமர்களோடு கூடி எனது பாக்யவசத்தினால் தேவதைகளோடு கூடிய தேவேந்திரன்போல் வந்து சேர்ந்தனர். இப்படிப்பட்ட மஹாநுபாவர்களை வரவழைத்துக்கொடுக்கிற எனது அதிருஷ்டத்தினால் எனது விக்நங்களெல்லாம் அற்றுப்போய்விட்டன. ப்ராக்ரமத்தினால் மிகவும் மேன்மை பெற்றவர்களும் மஹாநுபாவர்களுமாகிய ரகுவம்சத்திற் பிறந்தவர்களோடு ஸம்பந்தம் பெறும்படியாக நேரிட்ட இந்த பாக்யத்தினால் எனது குலம் மேன்மை பெற்றது. மன்னவனே! நீ இப்புவியிலுள்ள அரசர்களுக்குள் இந்திரன்போல் விளங்குகின்றனை. இப்படிப்பட்ட நீ நாளைத்தினம் விடியற்காலத்தில் விவாஹத்தைப் பற்றிய ப்ரஸங்கத்தை நடத்த வேண்டும். மானவரோரே! எனது யாகம் இன்னும் மூன்று நான்கு தினங்களில் முடிந்துவிடும். அது முடிந்தவுடனே ரிஷிகளுக்கு ஸம்மதமாகிய ப்ராஹ்மவிவாஹத்தை நீ நிறைவேற்றவேண்டும்' என்றிவ்வாறு மொழிந்தனன். தசரதசக்ரவர்த்தியும் வாக்யங்களின் உட்கருத்தறிவதில் மிகுந்த வல்லமையுள்ளவன்; ஆகையால் அம்மன்னன் ஜநகமஹாராஜன் மொழிந்த மொழியைக் கேட்டு ரிஷிகளிடையில் அம்மஹாராஜனை நோக்கிக்

'கொடுக்கிறவன் எப்பொழுது கொடுப்பனே, அப்பொழுதே வாங்கிக்கொள்ளுகிறவன் வாங்கிக் கொள்ளவேண்டுமேயன்றி வேறில்லை. ஆகையால் ப்ரதிக்ரஹமென்பது. (வாங்கிக்கொள்வது) தாதாவின் அதீனத்திலிருக்கின்றது. நீ வீர்ய சுல்கமாக ஏற்படுத்தின இந்த கன்யாப்ரதானத்தை முன்னமே கேட்டிருக்கின்றோம். மஹாராஜனே! [1]தாதாவாகிய நீ எப்படி சொல்லுகின்றாயோ, அப்படியே வாங்கிக்கொள்ளுகிற நாங்கள் கடக்கஸித்தமாயிருக்கின்றோம். நீ தர்மங்களையெல்லாம் அறிந்தவன். ஆகையால் உனக்குத் தெரியாத தர்மம் ஒன்றுமில்லை' என்றனன். ஸத்யஸந்தனாகிய தசரதன் இப்படி மிகவும் தர்மம் பொருந்தியும் கீர்த்தியை விளைக்கத்தக்கதாகவும் உரைத்த வார்த்தையைக் கேட்டு விதேஹதேசாதிபதியாகிய ஜனகராஜன் மிகவும் ஆச்சரியம் அடைந்தனன். பின்பு முனிவர்கள் அனைவரும் ஒருவர்க்கொருவர் கலந்திருக்கப்பெற்று மிகவும் ஆநந்தம் அடைந்தவராகி அன்றிரவு அங்கே ஸுகமாக வஸித்திருந்தனர். தசரதனும் ரகுகுலத்திற்கு அலங்காரமாயிருக்கின்ற தனது குமாரர்களைக் கண்டு மிகுந்தஸந்தோஷம் பெற்று ஜனகன் செய்த ஸத்காரங்களைக்கொண்டு மேலான மகிழ்வடைந்து மனம்பூரித்திருந்தனன். தத்த்வங்களை உணர்ந்தவனும் மிகுந்தப்ரபாவம் பெற்றவனுமாகிய ஜனகமஹாராஜனும் யாககாரியங்களையெல்லாஞ் சாஸ்த்ரப்படி செய்து முடித்துப் பெண்களுக்கு முன்பு செய்யவேண்டிய அங்குரார்ப்பணம் முதலியவற்றையும் நிறைவேற்றி அவ்விரவைக் கடத்தினன். அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

---

1 தாதா = கொடுப்பவன்.

வஸிஷ்டர் ஜநகனுக்கு இக்ஷ்வாகுவம்ச க்ரமத்தைச் சொல்லுதல்.

பிறகு பொழுது விடிந்தவுடனே ஜநகமஹாராஜன் எழுந்திருந்து மஹர்ஷிகளைக் கொண்டு யஜ்ஞாதிகார்யங்களை முடித்துவிட்டு, வாக்யங்களின் கருத்தறிய வல்லவனுகிய அம்மன்னவன் தனது புரோஹிதனுகிய சதாநந்தரைப் பார்த்து, 'சதாநந்தரே! [1]ஸாங்காச்யையென்றொரு பட்டணம் உண்டல்லவா? அது மிகவும் அழகியது. அதைச் சுற்றிலும் அகழிபோல் சூழ்ந்திருக்கிற இக்ஷுமதியென்னும் ஆற்றின் ப்ரவாஹத்தில் பகைவர் அண்டவொண்ணுதபடி காக்கும்பொருட்டுச் சூலங்கள் நாட்டப்பட்டிருக்கின்றன. மேலும் அந்நதியைச்சுற்றி நீர்நெல்லி மரங்கள் நெருங்கிவிளங்குகின்றன. [2]ஸுக்ருதம்போல அப்பட்டணம் தன்னிடம் வஸிப்பவர்களுக்கு ஸகலஅபீஷ்டங்களையுங் கொடுத்துக் கொண்டு புஷ்பக விமாநம்போல்

---

1 இதிலுள்ள விசேஷங்கள் சதாநந்தருக்குத் தெரிந்தவையேயாயினும் தெரியச் சொல்லுகைக்குக் காரணம்-அவை பரம்பரையாகத் தசரதன் செவியிற் படவேண்டுமென்னுங் கருத்தேயன்றி வேறில்லை.

2 (ஸுக்ருதம்போல) புண்யம்போல. அதாவது—எப்படி ஜந்மாந்தரத்திற் செய்த புண்யம் பரிபாகதசைக்கு வந்து, ஸகலஅபீஷ்டங்களையுங் கொடுக்குமோ, அப்படியே இப்பட்டணமும் ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கின்றதென்று கருத்து. ஜந்மாந்தரத்திற் புண்யஞ் செய்தவன் மறு ஜந்மத்தில் சுகங்களைப்பெறுவானென்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அப்படியே இப்பட்டணத்தில் வஸிப்பவர் அனைவரும் ஸகல ஸுகங்களையும் பெற்று வாழ்ந்திருக்கின்றனர். ஸுகமோ புண்யத்தின் பலமென்று சொன்னோம். ஆகையால் இந்நகரத்தில் வஸிப்பவர் ஜந்மாந்தரத்தில் மிகுந்த ஸுக்ருதஞ் செய்தவரென்று தோற்றுகின்றது. இவர்கள் செய்த புண்யமே இவர்களுக்குப் பலங் கொடுக்கைக்காக இந்நகர வடிவங்கொண்டு வந்ததோ என்னும்படியிருக்கின்றது அந்நகரமென்று கருத்து. இங்ஙனங்கருதியே (ஸுக்ருதம்போல) என்று கூறப்பட்டது.

ப்ரகாசிக்கின்றது. மஹாபராக்ரமசாலியும் மிகவும் தர்மஸ்வபாவனும் எனக்குப் பின் பிறந்தவனும் எங்கும் ப்ரஸித்திபெற்றவனுமாகிய குசத்வஜனென்பவன் அப்பட்டணத்தில் இக்ஷுமதி யென்னும் அந்நதியின் ஜலத்தைப் பாதஞ்செய்துகொண்டு வஸித்திருக்கின்றனன். அவன் அப்பட்டணத்திலிருந்துகொண்டு எனது யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்களை அப்போதைக்கப்போது ஸித்தஞ்செய்துகொடுத்துக் கொண்டிருப்பதுபற்றி எனது யாகத்தைக்காப்பவன் அவனேயென்று நான் நினைத்திருக்கின்றனன். ஆகையால் அவனை இப்பொழுது நான் பார்க்க விரும்புகின்றேன். அம்மஹா தேஜஸ்வியும் இத்தவிவாகத்தைப்பற்றிய ஸந்தோஷப்பெருக்கை என்னுடி கலந்து அநுபவிக்கவேண்டியவன்' என்றனன் (சதாநந்தருக்கு எதிரில் ஜநக மன்னவன் இங்ஙனஞ் சொல்லிக் கொண்டிருக்கையில் மிகவுஞ் சுருசுருப்புள்ள சில தூதர்கள் அவ்விடம் வந்தனர். அவர்களைக் கண்டு அவ்வரசன் குசத்வஜனை அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டனன்.) இங்ஙனம் ஜநக மஹாராஜன் ஆலோசித்துத் தூதர்களுக்குக் கட்டளையிடத், தூதர்களும் விரைவிற் செல்லவல்ல குதிரைகளின்மீது ஏறிக்கொண்டு, இந்திரனிடங் கட்டளை பெற்று விஷ்ணுவை அழைத்துக்கொண்டு வருபவர்போல, அம்மன்னவனிடங் கட்டளை பெற்றுப் புருஷர்களிற் றலைவனுகிய குசத்வஜனை அழைத்துக் கொண்டு வரப் புறப்பட்டனர். அங்ஙனம் புறப்பட்டுச் சென்று ஸாங்காச்யாநகரியைச் சேர்ந்து குசத்வஜனைக் கண்டு, ராமன் சிவதநுர்ப்பங்கஞ் செய்தது முதலிய கடந்த விருத்தாந்தங்களையும் அதைக் கண்டு ஜநகமஹாராஜனுக்குள்ள அபிப்ராயத்தையும் தெரியப் படுத்தினர். அந்தக் குசத்வஜனும் பலிஷ்டர்களாகிய அந்தத் தூதச்ரேஷ்டர்களை

டம் அந்த விருத்தாந்தங்களையெல்லாங் கேட்டு அவ்வரச னது கட்டளையைச் சிரஸா வஹித்து அங்கிருந்து புறப்ப ட்டுவந்து, மஹாநுபாவனும் தர்மஸ்வ பாவனுமாகிய ஜந கமஹாராஜனைக் கண்டனன். முதலிற் சதாநந்தருக் கும் பிறகு ஜநக மன்னவனுக்கும் நமஸ்காரஞ்செய்து அவர்களிடம் அநுமதி பெற்று அரசர்களுக்குத் தக்கதும் மிக்க அழகுள்ளதும் பெருவிலையனுமாகிய ஓர் ஸிம்ஹா ஸநத்தின்மேல் ஏறி உட்கார்ந்தனன். மிகவுந் தேஜஸ்வி களாகிய அண்ணன் தம்பிகளிருவரும் ஆஸநத்திலுட் கார்ந்துகொண்டு ஸுதாமனென்னும் மந்திரிசிகாமணி யைப் பார்த்து 'மந்திரிகளிற் றலைவனே! நீ விரைவாகச் சென்று, அளவில்லாத காந்தியுடையவனும் யாவராலும் எதிரிடவொண்ணுத பராக்ரமமுடையவனும் இக்ஷ்வாகு வம்சத்திற்கு அலங்காரமுமாகிய தசரதமஹீபாலனையும் அவனது குமாரர்களையும் மந்திரிகளையும் அழைத்துக் கொண்டு வருவாய்' என்றனுப்பினர். அம்மந்திரியும் அந்த ரகுகுல சிகாமணியாகிய தசரதன் இழிந்திருக்கிற விடுதிக்குச் சென்று அம்மன்னவனைக் கண்டு தலை வணக்கி நமஸ்காரஞ்செய்து 'அயோத்யாபதியே! வீரர்களிற் றலைவனே! மிதிலாதிபதியாகிய வைதேஹமன்னவன் உன்னை உனது உபாத்யாயர்களோடும் புரோஹிதர்க ளோடுங் கூடப் பார்க்க விரும்புகின்றனன்' என்றிவ்வாறு கூறினன். அந்த மந்திரி சிரோமணியின் வார்த்தையைக் கேட்டுத் தசரதசக்ரவர்த்தி நிகமக்கூட்டங்களோடும் பந் துக்களோடுங்கூடி ஜநகனிருக்கும் இடத்திற்குப் போயி னன். பேசுவதில் ஸமர்த்தனாகிய அந்தத் தசரதமன்ன வன் இங்ஙனஞ் சென்று நண்பர்களும் பந்துக்களும் உபா த்தியாயர்களுஞ் சூழ இருந்த ஜநகமஹீபாலனைக் கண்டு 'மஹாராஜனே! பகவானாகிய வஸிஷ்டமஹர்ஷி எமது

இக்ஷ்வாகுவம்சத்திற்குப் பரமகுருவென்றும், உமக்கு வேண்டிய கார்யங்கள்எல்லாவற்றையும் தானே முன்னின்று பேசி நிறைவேற்ற வல்லவரென்றும் உமக்குத் தெரிந்தேயிருக்கின்றது. தர்மஸ்வபாவராகிய இம்மிரமுனிவர் விச்வாமித்ரரிடம் அநுஜ்ஞை பெற்று மஹர்ஷிகள் அனைவருடன்கூடி எனது வம்சத்தை க்ரமமாகச் சொல்லுவர்' (என்று மஹாநுபாவர்களாகிய அரசர்களி னிடையில் மொழிந்து நாச்சேஷ்டராகிய) தசரதமன்னவன் பேசாமலிருந்தனன். ஸமஸ்த மஹிமைகளும் பொருந்திப் பேசுவதில் மிகுந்த வல்லமையும் அமைந்த வஸிஷ்டமாமுனிவர் விதேஹாதிபதியாகிய ஜநகமன்னவனையும் அவனது புரோஹிதராகிய சதாநந்தமுனிவரையும் பார்த்து இங்ஙனம் உரைத்தனர். 'எவ்விதத்திலும் அறிவதற்கரிய வஸ்துவாகையில் விஷ்ணுவை அவ்யக்தமென்று சொல்லுவர்கள். அவ்விஷ்ணுவுக்குப் பிரமன் பிறந்தன். அந்தப் பிரமன் [1]சாச்வதனும் நித்யனும் அவ்யயனுமாயிருப்பவன். அந்தப்ரஹ்மாவுக்கு மரீசி உண்டாயினர். மரீசிக்குக் காச்யபர் பிறந்தனர். காச்யபருக்கு ஸூர்யன் உண்டாயினன். ஸூர்யனுக்கு மநு என்னும் புதல்வன் பிறந்தன். அம்மநுவே முன்பு ராஜாவாயிருந்தனன். மநுவினுடைய புதல்வன் இக்ஷ்வாகு. அந்த இக்ஷ்வாகு மன்னவனே அயோத்யையை ஆண்டுவந்த அரசர்களிற் றலைவன். இக்ஷ்வாகு

1 வெகுகாலமிருப்பவனுகையால் (சாச்வத)னென்றும், இரண்டு பரார்த்தகாலம் நாசமின்றி இருப்பவனுகையால் (நித்ய)னென்றும், ப்ரவாஹ ரூபமாக இடையின்றிக் கல்பந்தோறும் இருப்பவனுகையால் (அவ்யய)னென்றும் கண்டுகொள்வது. (சாச்வதன், நித்யன், அவ்யன்) என்கிற இம்மூன்று சப்தங்களும் நாசமின்றி யிருக்கும் வஸ்துவைச் சொல்லுகின்றன. ஆகையால் ஒருபதஞ்சொன்னால் போரா தோ என்னும் ஸந்தேஹத்தைக் கீழ்ச்சொன்ன அர்த்தபேதத்தைக் கொண்டு தீர்த்துக்கொள்வது.

வுக்கு மிகுந்த செல்வமுடைய குக்ஷியென்பவன் உண்டா யினன். குக்ஷிக்கு மிக்க அழகுடைய விகுக்ஷியென்பவன் தோற்றினன். விகுக்ஷிக்கு மஹாதேஜஸ்வியும் மிக்க பராக் ரமசாலியுமாகிய பாண்னென்னும் புதல்வன் பிறந்தனன். பாணனுக்குத் தேஜஸ்வியும் ப்ரதாப சாலியுமாகிய அந ரண்யனென்னும் புத்திரன் உண்டாயினன். அநரண்ய னுக்கு ப்ருதுவென்னும் புத்திரன் பிறந்தனன். ப்ரு துவுக்கு த்ரிசங்கு உண்டாயினன். த்ரிசங்குவின் பிள்ளை துந்துமாரன். அவன் மிகவுங் கீர்த்தி பெற்ற வன். அவனுக்கு யவநாச்வனென்று வேறொரு பேரும் உண்டு. அந்த யவநாச்வனது புதல்வன் மாந்தாதா. மாந் தாதாவின் பிள்ளை ஸுஸந்தியென்பவன். அவன் மிகுந்த செல்வம் பெற்றவன். ஸுஸந்திக்கு த்ருவஸந்தி யென்றும் ப்ரஸேநஜித்தென்றும் இரண்டு பிள்ளைகள் உ ண்டாயினர். த்ருவஸந்திக்குப் பெருங்கீர்த்திபெற்ற பாத னென்பவன் பிறந்தனன். பரதனுக்கு மஹாதேஜஸ்வியாகி ய அஸிதனென்பவன் உண்டாயினன். அந்த அஸிதனுக்கு ஹைஹயரென்றும் தாலஜங்கர்களென்றும் சூரர்களாகிய சசிபிந்துக்களென்றும் இவ்வாசர்கள் சத்ருக்களாயிருந் தனர். அவ்வஸிதன் அந்தப் பகைவேந்தருடன் யுத்தத் தில் எதிர்த்துச் சண்டை செய்து அந்த யுத்தத்திலே யே பராஜயம் பெற்று ராஜ்யத்தினின்றுந் துறத்தப்பட் டனன். அப்பொழுது அஸிதன் சிறிது மிச்சமாயிருந்த தன் ஸைன்யபடனும் மந்திரிகளுடனும் ஹிமாலயத்திற் குச் சென்று அங்கு ப்ருகுப்ரஸ்ரவண மென்னும் ஓர் சிக ரத்தில் வஸித்துக்கொண்டிருந்தனன். அவனது பத்னிக ளிருவரும் அப்பொழுது கர்ப்பவதிகளாயிருந்தார்க ளென்று கேள்வி உண்டு. அவ்விருவர்களில் ஒருத்தித் தன்சக் களத்தியாகிய மற்றொருத்திக்கு, அவள்கருவைக் கெடுக்

கவேணுமென்று கருதி விஷத்துடன் கலந்த பக்ஷியத்தைக் கொடுத்தனள். பிறகு ப்ருகு வம்சத்திற் பிறந்த ச்யவநரென்னும் முனிவர் அவ்வசரசன் தனது தேசத்தில் வஸிப்பவனென்னும் அபிமானங்கொண்டு அவனிடம் அருள் புரிந்தவராகி வரங்கொடுக்கைக்காக மலைகளிற் சிறந்து மிகவும் அழகாகி விளங்கும் அந்த ஹிமவத் பர்வதத்திற்கு வந்தனர். அவ்விருவரில் விஷத்தைச் சாப்பிட்டமூத்தவள் மிகுந்த பாக்யமுடையவளும் தாமரையிதழ்போன்ற கண்களையுடையவளுமாகி விளங்கி நிற்பவள். அவள் க்ஷேமமாகப் புதல்வன் பிறக்கவேணுமென்று விருப்பமுற்றவளாகித் தேவர்களுக்கொப்பான காந்தியையுடைய அந்தப் பார்க்கவராகிய ச்யவந மாமுனிவர்க்கு நமஸ்காரஞ்செய்தனள். அவள் காளிந்தியென்னும் பேர்பூண்டவள். அவள் அம்மாமுனிவர்க்கு நமஸ்காரஞ்செய்து சுச்ரூஷையுஞ் செய்துகொண்டிருந்தனள். இவ்வாறு தனக்கு யாதொரு தடையுமின்றிப் புதல்வன் உண்டாக வேணுமென்று விருப்பத்துடன் தனக்கு சுச்ரூஷை செய்துக்கொண்டிருக்கிற அந்தக் காளிந்தியைப் பார்த்து அந்தணர்தலைவராகிய அந்த ச்யவநமாமுனிவர் பின்னைபிறக்கும் விஷயத்தைப் பற்றித் 'தாமரையிதழ்போன்ற கண்களையுடைய பாக்யவதியே! உனது வயிற்றில் மிகுந்த பலமுடையவனும் சிறந்த பராக்ரமம் பொருந்தியவனும் மஹாதேஜஸ்வியும் ஐச்வர்யங்களெல்லா மமைந்தவனுமாகிய புதல்வன் விஷத்தோடுகூடவே விளைவில் பிறக்கப் போகின்றனன். விஷத்துடன் கூடப் பிறப்பானென்று பயப்படவேண்டியதில்லை. யாதொரு கெடுதியும் நேராது'என்றனர். பதிவ்ரதையும் பட்டமஹிஷியுமாகிய அந்தராஜபுத்ரியும் இங்ஙனம்அருள்பெற்று அந்த ச்யவநமாமுனிவர்க்கு நமஸ்காரஞ் செய்தனள். பிறகு கூடிய சீக்ரத்திலேயே [1]பதிவியோகம் நேரிட,

1. பதிவியோகம் — பர்த்தாவை விட்டுப் பிரிகை. அதாவது-அவன் மரணமடைந்ததுபற்றி விதவை யாகையிலென்க.

அந்தச் சோகத்தால் மிகவும் வருத்தமுற்ற அம்மடந்தை பின்பு சயவநமஹர்ஷியின் அனுக்கிரகத்தினால் ஒரு புதல்வனைப் பெற்றனள். கர்ப்பத்தைக் குலைக்கவேணுமென்று அந்தக்காளிந்திக்கு அவளது சக்களத்தி விஷத்தைக் கொடுத்தனளன்றோ? அவ்விஷத்துடன் கூடவே பிறந்தமையால் அந்தப் புதல்வன் [1]ஸகரனென்று பேர் பெற்றனன். அந்த ஸகரனுக்கு அஸமஞ்ஜனென்பவன் பிறந்தனன். அஸமஞ்ஜனுக்கு அம்சுமந்தன் உண்டாயினன். அம்சுமந்தனுக்குத் திலீபன் தோன்றினன். திலீபனுக்குப் பகீரதன் ஜனித்தனன். பகீரதனுக்குக் ககுத்ஸ்தன் பிறந்தனன். ககுத்ஸ்தனுக்கு ரகு பிறந்தனன். ரகுவுக்கு அளவற்ற ஒளியுடைய ப்ரவுத்தனென்பவன் பிறந்தனன். இவன் முதலில் ப்ரவுத்தனென்று பேர்பெற்றிருந்து பிறகு என்னுடைய சாபத்தினால் ராக்ஷஸனாய்விட்டனன். அவனைக் கல்மாஷ பாதனென்று சொல்லுவார்கள். இவன் வஸிஷ்டமாமுனியால் சபிக்கப்பட்டு ராக்ஷஸனாகித்தானும் அம்மாமுனியைச் சபிக்கத் தொடங்கி ஜலத்தைக் கையிலெடுக்க, அப்பொழுது அவனது பாரியை வேண்டாமென்று நல்வார்த்தை சொல்லித் தடுக்கையில் அந்த ஜலத்தைத் தன் பாதத்தில் கொட்டிக்கொண்டு கல்மாஷபாதனென்று பேர் பெற்றனன். (கல்மாஷமென்றால் நாநாவர்ணத்தையுடையது. சாபஜலம் பட்டபடியால் நாநாவர்ணங்களையுடைய பாதத்தையுடையவனாயினன்) அவனுக்கு சங்கணனென்பவன் பிறந்தனன். சங்கணனுக்கு ஸுதர்சனன் பிறந்தனன். ஸுதர்சனனுக்கு அக்நிவர்ணன் பிறந்தனன். அக்நிவர்ணனுக்குச் சீக்ரகன் பிறந்தனன். சீக்ரனுக்கு மரு பிறந்தனன். மருவுக்கு ப்ரசுச்ருகனென்பவன் பிறந்த

1 காமென்றால் விஷம். அத்தோடு கூடப் பிறந்தவனுகையால் ஸகரன்

னன். ப்ரசுச்ருகனுக்கு அம்பரீஷன் பிறந்தனன். அம்பரீஷனுக்கு நஹுஷனென்னும் மஹாராஜன் பிறந்தனன். [1] நஹுஷனுக்கு யயாதி பிறந்தனன். யயாதிக்கு நாபாகன் பிறந்தனன். நாபாகனுக்கு அஜமஹாராஜன் பிறந்தனன். அவனுக்குத் தசரதசக்ரவர்த்தி பிறந்தனன். இந்தத் தசரதமஹாராஜனுக்கு, அண்ணன் தம்பிகளாகிய இந்த ராமலக்ஷ்மணர்கள் பிறந்தனர். ஓ ஜநகமஹாராஜனே! இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த மன்னர்கள் முதலே பிடித்துப் பரிசுத்தமான வம்சமுடையவர்களும் பராக்ரமுடையவர்களும் மிகுந்த பராக்ரமமுடையவர்களும் உண்மையையே உரைப்பவர்களுமாயிருப்பவர். அப்படிப்பட்டவர்களது வம்சத்திற் பிறந்த இந்த ராமலக்ஷ்மணர்களுக்காக உன்புதல்விகளை வரிக்கின்றனன். உனது புதல்விகளுக்கு இந்தக் குமாரர்களே தகுந்தவர்கள். இந்தக் குமாரர்களுக்கும் உனது புதல்விகளே தகுந்தவர்கள். இப்படி தகுந்திருப்பவர்களுக்கு அங்ஙனந்தகுந்திருக்கிற பெண்களை விவாஹஞ் செய்து கொடுப்பது உனக்குத் தகும்'. எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஜநகமஹாராஜன் தனது வம்சக்ரமத்தைச் சொல்லுதல்.

வஸிஷ்டமாமுனிவர் இங்ஙனஞ் சொல்லிமுடிக்கையில், ஜநகமஹாராஜனும் கையைக் கூப்பிக்கொண்டு அம்முனிவரைப் பார்த்து 'மஹாநுபாவரே! உமக்குச் சுபம் உண்டாகவேண்டும். புகழத்தக்க எமது வம்சத்தைச் சொல்லுகின்றேன்; கேட்கவேண்டும். நற்குலத்திற் பிறந்

1. இந்த நஹுஷயயாதிகள் சந்த்ரவம்சத்து நஹுஷயயாதிகளைக்காட்டிலும் வேறுபட்டவர். இதில் முறை வேறுபாடு கல்பபேதத்திலுண்டானதென்று தெரிகின்றது.

தவனுயிருப்பவன் ஒருவன் தான் கன்யாதானஞ் செய்யும் பொழுது தனது வம்சத்தை யெல்லாங் குறையற எடுத் துக் கூறவேண்டி மல்லவா? மாமுனியே! ஆகையால் எம துவம்சத்தைச் சொல்லுகின்றேன்; கேட்பீராக. யாவ ருங்கண்டு புகழும்படியான மிகுந்த செயல்களால் மூவுல கங்களிலும் ப்ரஸித்தி பெற்ற நிமியென்னும் ஓர் அரசர் உண்டு. அவர் மிகவும் தர்மஸ்வபாவர்; பலசாலிகள் அனை வரிலுந் தலைவர். அவருக்கு மிதியென்னும் ஓர் புதல்வர் உண்டாயினர். அந்த மிதியென்னும் மன்னவராற்றான் இம்மிதிலாபுரம் நிருமிக்கப்பட்டது. அவரே ஜநகவம்சத் திற்கு முதல்வர். அவருக்கு உதாவஸுவென்னும் புதல்வர் பிறந்தனர். உதாவஸுவுக்கு தர்மஸ்பாவராகிய நந்திவர்த் தநர் பிறந்தனர். நந்திவர்த்தநருக்கு ஸுகேது வென்று ப்ரஸித்திபெற்ற ஓர் புத்ரர் பிறந்தனர். ஸுகேதுவுக்கு தர்மஸ்வபாவரும் மிக்க பலிஷ்டருமாகிய தேவராதர் பிற ந்தனர். ராஜர்ஷியாகிய அந்தத் தேவராதருக்கு ப்ருஹத் ரத ரென்பவர் பிறந்தனர். ப்ருஹத்ரதருக்கு மஹாப்ரதாப மூடையவரும் சூரருமாகிய மஹாவீரரென்பவர் பிறந்த னர். அம்மஹாவீரருக்கு மிகுந்ததைர்யசாலியும் உண்மை யான பராக்ரமமுடைவருமாகிய ஸுத்ருதி யென்பவர் பிற ந்தனர். அந்தஸுத்ருதிக்குத் தர்மத்தில் மனஞ்சென்றவ ரும் தர்மத்தை யநுஷ்டிப்பவருமாகிய த்ருஷ்டகேது வெ ன்பவர் பிறந்தனர். ராஜர்ஷியாகிய அந்த த்ருஷ்டகேதுவு க்கு ஹர்யச்வரென்பவர் பிறந்தனர். ஹர்யச்வருக்கு மரு வென்பவர் பிறந்தனர். அந்த மருவுக்கு ப்ரதிந்தகரென்ப வர் பிறந்தனர். அந்தப்ரதிந்தகருக்கு தர்மஸ்வபாவராகிய கீர்த்திரதரென்னும் மன்னவர் புதல்வராகப் பிறந்தனர். கீர்த்திரதருக்கு தேவமீடரென்பவர் பிறந்தனர். தேவமீ டருக்கு விபுதரென்பவர் பிறந்தனர். விபுதருக்கு மஹீத்

ரகரென்பவர் பிறந்தனர். மஹீத்ரகருக்கு மஹாபலிஷ்டரா கிய கீர்த்திராதரென்பவர் பிறந்தனர். ராஜர்ஷியாகிய கீர்த் திராதருக்கு மஹாரோமரென்பவர் பிறந்தனர். மஹாரோ மருக்கு தர்மஸ்வபாவராகிய ஸ்வர்ணரோமரென்பவர் பிற ந்தனர். ராஜர்ஷியாகிய அந்த ஸ்வர்ணரோமருக்கு ஹ்ரஸ் வரோமரென்பவர் பிறந்தனர். தர்மத்தையுணர்ந்தவரும் மஹாநுபாவருமாகிய அந்த ஹ்ரஸ்வரோமருக்கு இரண்டு புத்திரர்கள் பிறந்தனர். அவர்களில் நான் மூத்தவன். வீர ரான குசத்வஜன் என்னுடைய தமபி. எனது தகப்பனார் மூத்தவரான என்னை ராஜ்யத்தில் அபிஷேகஞ்செய்து குசத்வஜனைப் போஷிக்கவேண்டிய பாரத்தையும் என் மேல் புகட்டித் தபோவநத்திற்குச் சென்றனர். வ்ருத்தரா கிய எனது தகப்பனார் தேகத்தை விட்டு ஸ்வர்க்கத்திற் குச் செல்லுகையில், நான் தேவர்களுக்கொப்பான என் தம்பி குசத்வஜனை எப்பொழுதும் மிக்க ப்ரீதியுடன் பார் த்துக்கொண்டு தர்மம் தவறாது ராஜ்யபரிபாலஞ் செய் துவந்தனன். பின்பு சில காலம் போகையில், மிகுந்த வீர் யம்பொருந்திய ஸுதந்வாவென்னும் மன்னவன் ஸாங் காச்ய நகரத்தினின்றும் முற்றுகையிட்டதற்காக மிதி லாபுரத்தின் மேல் எதிரிட்டுவந்து ஓப்பில்லாத சிவதநுஸ் ஸையும் தாமரையிதழ்போன்ற கண்களையுடைய ஸீதை யையும் தனக்குக் கட்டாயமாய்க் கொடுக்கவேண்டு மென் று எனக்குச் சொல்லியனுப்பினன். ப்ரஹ்மர்ஷியாகிய வஸிஷ்டமுனிவரே! வில்லையாவது ஸீதையையாவது நான் கொடுக்கவில்லை. அதனால் அவன் என்னோடியுத்தஞ் செய்வதாகத் தலைப்பட்டு வருகையில், என்னை யெதிரி ட்டுவந்த அந்த ஸுதந்வராஜனை அந்த யுத்தத்தில் நான் முடித்துவிட்டனன். அங்ஙனம் அந்தமன்னவனைத் துலை த்து ஸாங்காச்ய நகரத்திற்கு மிக்க வீர்யம் பொருந்தி

என்னுடன் கூடப்பிறந்தவனுகிய குசத்வஜனை அரசனுகப்பட்டங்கட்டி வைத்தனன். என்னுடன் பிறந்தவனுகிய இந்தக்குசத்வஜன் எனக்கு இளையவன். நான் மூத்தவன். முனிவர்களில் தலைவரே! நீர் விரித்தபடியே மிகுந்த ப்ரீயுடன் எனது புதல்விகளிருவரையும் விவாஹஞ்செய்து கொடுக்கின்றனன். உமக்குச் சுபமுண்டாக வேண்டும். ராமனுக்கு ஸீதையையும் லக்ஷ்மணனுக்கு ஊர்மிளையையும் கொடுக்கின்றேன். வல்லமையையே விலையாகப் பெற்றவனும் தேவகந்யகை போன்றவளுமாகி எனது மூத்த புதல்வியாகிய ஸீதையையும் இரண்டாவது புதல்வியாகிய ஊர்மிளையையும் [1]த்ரிகரணங்களிலும் வேறுபாடின்றிமிகுந்த ப்ரீதியுடன் கொடுக்கின்றேன். ஓ தசரதமஹீபாலனே! ரகுகுலதிலகனுகிய உனக்கு மிகுந்த ஸந்தோஷத்தோடு என்பெண்களை மணஞ்டுப்பெண்களாகக் கொடுக்கின்றேன். ராமலக்ஷ்மணர்களுக்கு விவாஹத்திற் செய்ய வேண்டிய கோதாநமென்கிற ஸமாவர்த்தநம் முதலிய விவாஹாங்கமான கர்மங்களைச்செய்விப்பாயாக. உனக்கு நன்மை உண்டாகுக. விவாஹகாலத்திற் செய்யவேண்டிய பித்ருகார்யமாகிய காந்தீச்ராத்தத்தையும் டத்துவாயாக. நீண்ட புஜங்களையுடைய மஹாநுபாவனே! இன்றைத்தினம் மகாநக்ஷத்திரம் அன்றே? இன்றைக்கு மூன்றுவது நாள் மங்களகரமாகிய உத்தரபல்குநீ நக்ஷத்ரம் வருகின்றது. அதில் விவாஹகார்யத்தை நடத்துவாயாக. ராம லக்ஷ்மணர்களுக்கு மேன்மேலும் மிகுந்த க்ஷேமங்களை விளைவிக்கும்படியான கோதாநம் பூதாநம் திலதாநம் ஹிரண்யதாநம் முதலிய தாநங்களை நடத்துவாயாக'. எழுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

---

1 த்ரிகரணங்கள்—மூன்று காரணங்கள். மநோவாக்காயங்கள். வாக்-பேச்சு-காயம்-சரீரம்.

தசரதன் தனது பிள்ளைகளின் விவாஹத் திற்காகக் கோதாநம் முதலிய வற்றைச்செய்தல்.

இங்ஙனஞ் ஜநகமஹாராஜன் சொல்லிமுடித்து நின்றனன். பின்பு விச்வாமித்ர மாமுனிவர் வஸிஷ்டருடன் கூட வீரஞ்கிய அந்த ஜநக மஹாராஜனைப் பார்த்து 'மன்னவர் தலைவனே! இக்ஷ்வாகுவம்சமும் விதேஹவம்சமும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றவை. அவ்விரண்டு வம்சங்களின் மஹிமையும் இவ்வளவு அவ்வளவென்று அளவிடக் கூடாதிருக்கும். ஆனதுபற்றியே இந்த இக்ஷ்வாகு வம்சத்தரசர்களுக்கும் விதேஹவம்சத் தரசர்களுக்கும் ஒப்பானவன் ஒருவனுமில்லை. ஸீதையையும் ஊர்மிளையையும் ராமலக்ஷ்மணர்களுக்குத் தர்மந்தவறாது கொடுக்கிற இந்த விவாஹ ஸம்பந்தமானது ஒன்றோடொன்று ஒத்திருக்கிற குலங்களுக்கு நேரிடுகையால் மிகவும் அமைந்திருக்கின்றது. மேலும் பெண்பிள்ளைகளிருவரும் ஸௌந்தர்யத்தின் மிகுதியில் ஒருவருக்கொருவர் ஒத்திருப்பதனாலும் இந்த ஸம்பந்தம் அமைந்திருக்கின்றது. உனக்கு மற்றொரு விஷயம் சொல்லவேண்டியதா யிருக்கின்றது. அதை ஊக்கத்துடன் கேட்பாயாக. இந்தக் குசத்வஜ மஹாராஜன் உனக்கு இளையவன்; மேலும் தர்மங்களையறிந்தவன். ஆகையால் உன்னைப்போலவே இவனும் ஸம்பந்தத்திற்கு உரியவனாயிருக்கின்றனன். தர்மாத்மாவாகிய இந்தக் குசத்வஜனுக்கு ஒப்பில்லாத அழகுபொருந்திய இரண்டு பெண்கள் இருக்கின்றார்களன்றோ? அப்பெண்களையும் மற்றவர்க்கு விவாஹஞ்செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். மற்றவர் தானும் ஆரோஹணன்று நினைக்கவேண்டாம். சின்னவனாகிய பாதனும் புத்திமானாகிய சத்ருக்நனும் இருக்கின்றார்களன்றோ? அம்மஹாநுபா

வர்களுக்கே குசத்வஜனுடைய பெண்க ளிருவரையும் விவாஹஞ்செய்து கொடுக்கும்படி வரிக்கின்றனம். தசரத னுடைய இப்புதல்வர் அனைவரும் நல்ல ஸௌந்தர்யமும் யௌவநமும் உடையவர்கள். அனைவரும் திக்பாலகர்களை நிகர்த்தவர்கள். எல்லோரும் தேவதைகளைப்போன்ற பரா க்ரமமுடையவர்கள். நீங்கள் இருவரும் இவ்வாறு ஒருவ ருக்கொருவர் ஸம்பந்தஞ் செய்யப் பெற்று, தோஷமொன் று மின்றி விளங்கும் இக்ஷ்வாகு வம்சமும் நற்செய்கை யுடைய உனது வம்சமும் ஒன்றுக் கொன்று மேன்மேலெ ன மேன்மையைப் பெருவதாக' என்றனர். இங்ஙனம் விச் வாமித்ரர் மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு வஸிஷ்டரி டம் அநுமதியும் பெற்றுக்கொண்டு, அப்பொழுது ஜநகம ஹாராஜன்கைகளை கூப்பிக்கொண்டு அவ்விருவரையும் நோக்கி 'முனிமன்னவர்களே! இக்ஷ்வாகுவம்சத்தோடு ஸம்பந்தஞ் செய்வது மிகவும் தகுதியே. அப்படி தகுந்தி ருக்கிற இந்த ஸம்பந்தத்தைச் செய்யும்படி நீங்களே ஆஜ் ஞாபிப்பதனல் எனது குலம் மிகவும் மேன்மைபெற்றதென் று நினைக்கின்றனன். நீங்கள் ஆஜ்ஞாபித்தபடியே ஆகட் டும். உங்களுக்குச் சுபமுண்டாக வேண்டும். எப்பொழு தும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாதிருக்கும் இந்தப் பரத சத்ருக்நர்கள் இருவரும் குசத்வஜனுடைய பெண்க ளாகிய இவ்விருவரையும் விவாகஞ்செய்து கொள்ளட்டும். மாமுனியே! மஹாபலசாலிகளாகிய ராஜகுமாரர்கள் நால்வரும் ஒரு திகத்திலேயே இந்த ராஜபுத்ரிகள் நால் வரையும் மணம் புரிவார்களாக. அந்தணர் தலைவரே! பகன் என்னவனைத் தேவதையாக உடைய உத்தரபல்குநீ நக்ஷத்திரத்தில் பகலில் விவாஹஞ்செய்வது உத்தமமென் று பண்டிதர்கள் புகழ்ந்து சொல்லுகின்றனர். (ஆகை யால் நாளையினன்றைக்கு வரும் உத்தரபல்குநீ நக்ஷத்திர

த்தில் விவாஹத்தை முடித்து விடவேண்டும்' என்றிங்ஙனம் மிகவும் அழகாகக் கூறி, மீளவும் அம்முனிவர்கள் இருவருக்கும் எதிரில் நின்றுகொண்டு கையைக் கூப்பிக் கொண்டு ஜநகமன்னவன் 'நீங்கள், நான் கிங்யாப்ரதாநஞ் செய்யும்படி என்மீது அருள்புரிந்து எனக்குச் சிறந்த தர்மத்தை உண்டாக்கினீர்கள். உங்கள் இருவர்க்கும் நான் எப்பொழுதும் சிஷ்யனும் விட்டனன். நீங்கள் என் தம்பி குசத்வஜனுடையவும் என்னுடையவும் தசரதமஹாராஜனுடையவும் ஆகிய இம்மூவருடையவும் ஸிம்ஹாஸநங்களில் ஏறி வீற்றிருந்து எங்கள் மூவருடைய ராஜ்யத்தையுங் கைப்பற்றிப் பரிபாலித்து வருவீர்களாக. தசரதனுடைய ராஜ்யத்தைக் கொடுக்க நீ ஆர்? என்று கேட்க வேண்டாம். இந்த மிதிலாநகரம் எப்படி தசரத மஹாராஜனுக்கு ஸ்வாதீநமோ, அப்படியே அயோத்யாபுரி எனக்கு ஸ்வாதீநம். ஆகையால் நான் தசரதனது ராஜ்யத்தையும் உங்களுக்குக் கொடுக்கத் தகும். ஆனது பற்றி இம்மூன்று ராஜ்யத்திலும் உங்களுக்கு ப்ரபுத்வம் உண்டென்பதற்கு ஸந்தேஹமில்லை. நாங்கள் அனைவரும் உங்களுக்கு ஸ்வாதீநர்களர் யிருப்பவர்கள். நீங்கள் எல்லோரும் எங்களுக்கு ஹிதத்தை உபதேசித்து எங்களுக்குத் தகுந்தபடி எக்கார்யமாயினும் செய்து கொள்ளத் தகும்' என்றனன். ஜநகமஹாராஜன் இங்ஙனஞ் சொல்லிக்கொண்டிருக்கையில் ரகுகுலதிலகனாகிய தசரதசக்ரவர்த்தி மிகுந்த ஸந்தோஷமடைந்து அந்த ஜநகமன்னவனைப் பார்த்து 'மிதிலாநகரத்திற்கு அதிபதிகளாகி அண்ணன் தம்பிகளுமாகிய உங்களிருவருடையவும் நற்குணங்கள் கணக்கிடக் கூடாதிருக்கின்றன. ஆனதுபற்றி அரசர்களும் ரிஷிஜனங்களும் உங்களால் நன்கு பூஜிக்கப்பட்டிருக்கின்றனர். நீ நன்மையைப் பெறுவாயாக. உனக்கு மங்

களமுண்டாகவேண்டும். நான் எனது இருப்பிடத்திற்குச் சென்று சராத்தகர்மங்கள் யாவையும் நடத்திக் கொள்கின்றேன்' என்று மொழிந்து அப்பொழுது அம்மன்னவனிடத்தில் அநுமதிபெற்று முனிவர்கள் இருவரையும் முன்னிட்டுக்கொண்டு மஹாயசஸ்வியாகிய அந்தத் தசரதமன்னவன் விரைவில் தன்விடுதிக்குச் சென்று நாந்தீச்ராத்தத்தை விதிப்படி நடத்திப் பின்பு பொழுது விடிகையில் விடியற்காலத்திலெழுந்திருந்து அப்பொழுது செய்யவேண்டிய உத்தம கார்யமாகிய கோதாகமென்கிற ஸமாவர்த்தந கர்மத்தைச் செய்வித்தனன். பின்பு பெரும்புகழ் பெற்ற அந்தத் தசரதசக்ரவர்த்தி தன் புத்திரர்கள் ஒவ்வொருவரையும் உத்தேசித்து லக்ஷம் பசுக்கள்விதமாக ப்ராஹ்மணர்களுக்குத் தர்மத்வரூது தாகஞ் செய்தனன். நகுலத்திற் பிறந்து புருஷர்களிற் சிறந்த அந்தத் தசரதமஹாராஜன் புத்திரர்களிடத்தில் மிகவும் வாத்ஸல்யமுடையவன். ஆகையால் அவன் இவ்வளவோடு நிற்காமல் அவர்களது ஸமாவர்த்தகோத்ஸவத்தைப் பற்றிப் பொன்கொப்பிகள் பூட்டப் பெற்றவைகளும் பால்நிரம்பிய மடிகளையுடையவைகளும் கன்றுகளோடு கூடியவைகளுமான காவுலக்ஷம் பசுக்களையும் பால் கறப்பதற்காக அத்தனை வெண்கலப் பாத்திரங்களையும் ப்ராஹ்மணர்களுக்குத் தாகஞ்செய்து மேலும் சிறந்த பலவகை தகங்களையும் அப்படியே அந்தணர்களுக்குத் தந்தனன். அப்பொழுது ஸமாவர்த்தகஞ் செய்துகொண்ட புத்திரர்கள் தன்னைச் சூழ்ந்திருக்க அந்தத் தசரதவஹீபாலன் திக்பாலகர்களால் சூழப்பெற்று முகம் மலர்ந்து விளங்கும் ப்ரஹ்மதேவன்போல் விளங்கினன். எழுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.



367 ஸீதாக் கல்யாணம்.

ஸீதாகல்யாணம்

தசரதமஹாராஜன் தனது குமாரர்களுக்கு ஸமாவர்த்தந கர்மத்தை மிக்க சிறப்புடன் நடத்தின அன்றைத் தினமே சூரனுகிய யுதாஜித்தென்பவன் அவ்விடம் வந்து சேர்ந்தனன். அந்த யுதாஜித்தென்பவன் கேகய ராஜாவின் குமாரன்; பரதனுக்கு நேரே தாயுடன் பிறந்த மாமன். அவன் அவ்விடம் வந்து தசரதனைப் பார்த்து க்ஷேமம் விசாரித்து 'ராஜேந்திரனே! கேகயராஜர் ஸ்நேஹத்துடன் உமது க்ஷேமத்தை விசாரிக்கச்சொல்லினர். நீர் யாருடைய க்ஷேமத்தை எப்பொழுதும்விரும்புகின்றீரோ, அப்படிப்பட்ட நாங்கள் அனைவரும் இப்பொழுது க்ஷேமமாயிருக்கின்றனம். எனது தகப்பனாராகிய அந்தக் கேகய ராஜர் என் தங்கையின் பிள்ளையாகிய பரதனைப் பார்க்க விரும்புகின்றனர். ஆகையால் அவனை அழைத்துக்கொண்டு போவதற்காக நான் அயோத்யைக்குப் போய்யிருந்தனன். அயோத்யையில் நீரும் உமது குமாரர்களும் விவாஹத்திற்காக மிதிலாபுரத்திற்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டு என் தங்கையின் குழந்தையாகிய பரதனைப் பார்ப்பதற்காக அவ்விடமிருந்து சீக்கிரமாக இங்கு வந்து சேர்ந்தேன்' என்றுரைத்தனன். பின்பு, தசரதசக்ரவர்த்தியும் தனக்கு ப்ரியாதிதியாக யுதாஜித்து வந்ததைக்கண்டு, பூஜிக்கத்தக்க அந்த யுதாஜித்தை நன்றாகப் பூஜித்தனன். இங்ஙனம் வந்த யுதாஜித்தைப் பூஜித்த பின்பு அந்தத் தசரதமஹாராஜன் மஹானுபாவர்களாகிய தன்குமாரர்களோடு அன்றிரவைக் கடத்தி மறுநாள் காலையில் எழுந்திருந்து அந்தந்தக் காலங்களில் செய்யவேண்டிய கருமங்களை யெல்லாமுணர்ந்தவனுகையால் அப்பொழுது செய்யவேண்டிய கருமங்களைச் செய்து முடித்து ரிஷிகளை முன்னே அழைத்துக்கொண்டு யாகசாலையின்

ஸமீபத்திற்கு வந்து சேர்ந்தனன். ராமனும் ஸமஸ்த ஆப
ரணங்களையும் பூண்டு விளங்குகின்ற தம்பிகளுடன் கூடி,
கல்யாணகங்கணங்கட்டிக்கொள்கிற மங்களகரமான
யும் நிறைவேற்றிவிட்டு, விவாஹத்திற்குரியதும் ஜபத்
தைக் கொடுக்கத் தக்கதுமாகிய சுபமுஹூர்த்தத்தில்
வஸிஷ்டரையும் மற்றுமுள்ள மஹர்ஷிகளையும் முன்னிட்
டுக்கொண்டு யாகசாலைக்குப்போய்ச் சேர்ந்தனன். (அங்க
னஞ் சென்று தம்பிகள் தன்னைச் சூழ்ந்திருக்கத் தகப்ப
னருடைய அருகில் உட்கார்ந்திருந்தனன்.) பகவானாகிய
வஸிஷ்டமாமுனிவர் ஜனகனிடஞ் சென்று அவனைப் பார்
த்து 'அரசர்களிற்றலைவனே! தசரதமஹாபாலன் கங்கண
ங்கட்டிக்கொண்டிருக்கிற பிள்ளைகளோடுகூட கன்யாப்ர
தானஞ் செய்கிற உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கி
ன்றனன். (கன்யையைக் கொடுப்பவனுக்குக் பெற்றுக்
கொள்ளுகிறவனுக்கும் ஸமஸ்தபுருஷார்த்தங்களும் உண்
டாகின்றன.) கொடுப்பவனும் கொள்கின்றவனும் அமைந்
திருக்கில் ஸகல புருஷார்த்தங்களும் நிறைவேறும். (அவ்
விருவர்களாலுமே கன்னிகையைக் கொடுப்பது வாங்கிக்
கொள்வது முதலிய விவாஹகாரியங்கள் யாவும் நடக்க
வேண்டும். ஆகையால் கன்யாப்ரதானஞ் செய்யவேண்டிய
தீ வெறுமனே இருக்கலாகாது). கன்யாதானஞ்செய்து நீ
செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக் கொள்வாயாக'
என்றிவ்வாறு மொழிந்தனர். மிகவும் பராக்மசாலியாகிய
ஜனகமஹாராஜன் தாம சீலர்களில் தன்னைப்போல் மற்
றொருவருங்கிடையாதென்னும்படி பெரும புகழ் பெற்ற
வன்; பின்னும் மேலான தர்மங்களெல்லாம அறிந்தவன்.
ஆகையால் அவன் விவாஹத்திற்குத் தான் செய்யவேண்
டிய விதிகளையெல்லாம் தீர்த்துக்கொண்டிருந்தனன்.
ஆனதுபற்றி மஹாதபாவராகிய வஸிஷ்டமாமுனிவர்

அங்ஙனஞ்சொல்லக் கேட்டுத் தான் அம்மாமுனியை நோக்கி 'மஹாநுபாவரே! நீங்களாகவே ஏன் சீக்கிரமாக வராமலிருக்கின்றீர்கள்? நீங்கள் வந்தீர்களாயின், உங்களைத் தடுக்கும்படியான வாசற்காப்பவன் அங்கு எவனுவது இருக்கின்றானோ? நீங்கள் இங்கே வருகைக்கு யாருடைய ஆஜ்ஞையை எதிர்பார்க்கின்றீர்கள்? உமக்கு உம்முடைய ராஜ்யம் எப்படியோ, அப்படியே இந்த ராஜ்யமும் ஸ்வாதீநமாயிருக்கின்றது. எனது ராஜ்யமே உம்முடைய ஸொந்தாயிருக்க, இனி என்னுடைய சிருகம் உமக்கு அதீநமென்பது சொல்லவேண்டுமோ? ஸொந்த சிருகத்தில் விசாரம் யாதிருக்கின்றது? எனக்காக நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதாகச் சொன்னீர். எனது கன்னிகைகள் விவாஹத்திற்கு வேண்டிய மங்களாசாரங்கள் யாவுஞ் செய்துசொண்டு ஜ்வலித்துக்கொண்டிருக்கிற அக்நிஜ்வாலைகள் போல் ப்ரகாசித்துக்கொண்டு விவாஹவேதிகையின் அருகில் வந்திருக்கின்றனர். காணும் ஸித்தனுகவே இவ்வேதிகையிலிருந்துகொண்டு உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். ஆகையால் தசரத மஹீபதி சுபகாரியத்தை நிர்விக்நமாக நடத்தட்டும். விளம்பஞ் செய்வது ஏதுக்காக?' என்றனன். இங்ஙனம் ஜநகமஹாராஜன் மொழிந்தவற்றை யெல்லாம் வஸிஷ்டமாமுனிவர் சொல்லியனுப்பிய புருஷன் மூலமாகக் கேட்டுத் தசரதசக்ரவர்த்தி தன்குமாரர்களையும் ரிஷிகளையும் மற்றுமுள்ள யாவரையும் கூடவே யழைத்துக்கொண்டு யாகசாலைக்குட் ப்ரவேசித்தனன். பின்பு விதேஹராஜனுகிய ஜநகமன்னவன் வஸிஷ்ட மாமுனியைப் பார்த்து 'முனிவர்களில் தலைவரே! நீர் தர்மங்களையெல்லாம் அறிந்து அறிந்தபடியே நடத்துந் தன்மையர்; மேலும் எனக்கு ப்ரபுவாயிருக்கின்றீர்.

ஆகையால், உலகங்களையெல்லாங் களிக்கச்செய்யுந் தன் மையனுகிய நமது ராமனுக்குச் செய்யவேண்டிய விவாஹ காரியங்கள் அனைத்தையும் நீர் ரிஷிகளுடன்கூடி கடத்து வீராக'என்றனன். பகவானுகிய வஸிஷ்டமாமுனியும் அப் படியேயாகட்டுமென்றுரைத்துவிட்டு விச்வாமித்ர முனிவ ரையும் தார்மிகராகிய சதாநந்தரையும் முன்னிட்டுக் கொ ண்டு விவாஹத்தின் பொருட்டுப் பச்சையிலைகளாற் புதி தாகக் கட்டப்பட்ட கல்யாணப் பந்தலின் நடுவில் சாஸ்த்ர விதிப்படி விவாஹவேதியைக் கட்டுவித்து அதற்குநான்கு பக்கத்திலும் [1]கந்த புஷ்பங்களையும் மூலைகளுடன் கூடிய பொற்பாலிகை களையும், மூலைகளோடு கூடிய அடியில் லாத பாத்ரங்களையும், மூலைகளோடுகூடிய மடக்குகளை யும், தூபங்களோடுகூடிய தூபபாத்ரங்களையும், சங்குமய மான பாத்ரங்களையும், நெய் ஹோமஞ்செய்வதற்கு வேண் டிய ஸ்ருக் ஸ்ருவம் என்கிற பாத்ரங்களையும், அர்க்யத் தின் பொருட்டு ஜலம் நிறம்பிய பாத்ரங்களையும், பொரிக ளால் நிறைக்கப்பெற்ற பாத்ரங்களையும், மஞ்சளைப் பூசி ஸம்ஸ்காரஞ்செய்யப் பெற்ற அக்ஷதைகளையும் வைத்து, அந்த வேதிகையை அலங்கரித்தனன். எல்லா மறியவல்ல வரும் மிகுந்த ப்ரபாவம்பொருந்தியவருமாகிய வஸிஷ்ட ப கவானுனவர் சாஸ்த்ரங்களிற்சொல்லியபடி மந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டு அந்த வேதிகையில் ஒன்றோடொன்று சரியாயிருக்கின்ற தர்ப்பங்களைப் பரப்பி, சாஸ்த்ரந் தவறு மல் மந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டே அக்நிகுண்டத் தில் அக்நியைச் சேர்த்து அவ்வக்நியில் கல்யாணப் பெண் பிள்ளைகளுக்கு நன்மை உண்டாகும் பொருட்டு ஹோமஞ் செய்தனர். பின்பு ஜநகமஹாராஜன் ஸமஸ்த ஆபரணங்க ளாலும் அலங்காரஞ்செய்யப் பெற்ற ஸீதையை அக்நி

1 கந்தம—சந்தநம்.

க்கு முன்பாக அழைத்துக்கொண்டு வந்து ராமனுக்கு எதிரில் நிறுத்திக்கொண்டு கைலஸ்யைக்கு மஹாராஜத்தைக் கொடுப்பவனைய அந்த ஸ்ரீராமனைப்பார்த்து '[1]இந்த ஸீதையானவள் என்னுடைய புதல்வி; உனக்குத் தர்ம

---

1 இதற்கு—

இயம் ஸீதா மம ஸுதா ஸஹ்யர்மசரீ தவ,
ப்ரதீச்ஹசைநாம்ஸுசீ ராந்தேபாணிம்க்ருஹ்ணீஷ்வபாணினா'

என்றுமூலம். இதற்கு விசேஷார்த்தம்—ஸௌந்தர்யம் ஆபிஜாத்யம் (நற்குலத்திற் புறப்பு)முதலிய குணவிசேஷங்களைப்பற்றி ஸீதையை அங்கீகரிக்கத் தகும் என்று சொல்லிக்கொண்டு ஜநகமஹாராஜன் தாரைவார்த்துக் கொடுக்கின்றன்—(இயம்)இவள். 'இதோ தென்படுகிற அளவற்றஸௌந்தர்யம் ஸௌகுமார்யம் (மென்மை) லாவண்யம் (பளபளப்பு) முதலிய குணங்களையுடைய இப்பெண்பிள்ளை' என்று ஸீதையின் ஸௌந்தர்யாதிகுணங்களை நேராகச் சுட்டுக் காட்டுகின்றன். ஸீதையென்கிற பேரிலுற்றேற்றும் அயோநிஜத்வத்தைக் காட்டுகிறன்(ஸீதா)ஸீதையென்று கலப்பையுழும்வழிக்குப் பேர். அதிற் பிறந்தவளாகையால் ஸீதையென்னப்படும் இவள். இதலால் அயோநிஜத்வந் தோற்றுகின்றது. இவள் அளவற்ற ஸௌந்தர்யாதி குணங்களையுடையவளென்பது மாத்திரமேயன்று, யாகபூமியிற் கலப்பையினடியிற் பிறந்தவளுமாயிருப்பவள் என்க. மிகுந்த மேன்மை பெற்றவளென்று கருத்து. (இயம் ஸீதா) இந்த ஸீதை. விச்வாமித்திரன் கேட்டது முதலாகச் சிவதநுஸ்ஸை முறிப்பதுமுதலிய வியாபாரங்களைச்செய்து எப்பொழுது பார்ப்போமென்று உனக்கு மிகவும் குதூஹலத்தை விளைவிக்கின்ற இந்த ஸீதை. அல்லது—மின்னல் மின்னும் பொழுது எப்போதும் மின்னலின் அவயவமாகிய காந்தி தோற்றுமேயன்றி அயவியாகிய அம்மின்னல் புலப்படாது. அப்படியே ஸீதையின்ரூபம் மின்னல் மின்னினாற்போல் காந்தி ஜ்வலித்துக்கொண்டிருப்பது பற்றி அந்த ரூபத்தின் காந்தி மாத்திரத்திலுல் கண்கள் மழுங்கி அவயவியான அந்த ரூபம் கண்ணுக்குப் புலப்படாதிருக்கும். அப்படியே கண்டமாத்திரத்தில் கண்கள் மழுங்கித் தட்டித்தடுமாடுகிற ராமனுக்கு (இயம் ஸீதா) இதோ இந்த ஸீதை யென்று தென்படக்காட்டுகின்றன். அல்லது—ராமன் ஸீயைக் கேட்டது முதற்கொ

பத்னியாயிருப்பவள். நீ இவளே அங்கீகரிப்பாயாக. உனக்குச் சுபமுண்டாக வேண்டும். உனது கையால் இவளது

ண்டு எப்பொழுதும் இடைவீடின்றி அவளையே பாவித்துக்கொண்டிருக்கையால் அந்தப் பாவநாப்ரகர்ஷத்திலுல் 'ப்ராஸாதே ஸா பயிப யிச ஸா பரஷ்ட்தஸ்ஸா புரஸ்ஸா' (உப்பரிக்கையின் மேலும் வழிகள் தோறும் பின்னிலும் முன்னிலும் அவளே புலப்படுகின்றாள்) என்கிறபடியே எல்லாம் வீதாமயமாகி, எல்லா விடங்களிலும் வீதையே கண்ணுக்குப் புலப்படுகையால் ஜநகன் தான் கொடுக்கப்போகிற வீதை இதோ இருக்கின்றாளென்று ராமனுக்கு விசேஷித்து காட்டுகைக்காக (இயம் வீதா) இதோ வீதையென்கிறான். 'நாம் விரும்பினது ஸௌந்தர்ய மாத்ரமேயன்று; ஆபிஜாத்யமும் முண்டாயிருக்கவேணும்' என்று ராமனுக்கு அபிப்ராயமாகக் கொண்டு சொல்லுகிறான் (மமஸுதா) என்னுடைய பெண்பிள்ளை. ஆசாரத்தையே பிரதானமாகவுடைய ஜநகவம்சத்திற்பிறந்தவளுக்கு ஆபிஜாத்யம் சொல்லவேணுமோவென்றுகருத்து. அல்லது (மமஸுதா) 'மஹதா தபஸா ராமஃ' என்கிறபடியே நீ எப்படி தசரதனுக்குப் பெருந்தவத்திலுற் பிறந்தாயோ, அப்படியே உனக்குக் கொடுக்கைக்காக அனேக விரதங்களையும் உபவாஸம் முதலியவற்றையும் செய்த எனக்குப் பிறந்தபெண் இவள் என்க. இவ்வழகியபெண்மணி எனக்குப் போகத்தின்பொருட்டு ஆகட்டும், தர்மங்களை யநுஷ்டிக்கும்பொழுது மற்றொருத்தியைக் கூட வைத்துக்கொள்ளுகிறேன்' என்று ராமனுக்கு அபிப்ராயமாகக்கொண்டு சொல்லுகிறான் (ஸஹதர்மசரீதவ) இவள் உனக்குப் போகத்திற்கு மாத்ரமேயன்றி உன்னுடன்கூடத் தர்மங்களை யநுஷ்டிப்பவளாகவும் (அதாவது தர்ம பத்னியாகவும்) ஆவாளென்க. அல்லது—(ஸமாநோ யர்மஃ ஸஹ யர்மஃ தம சாதீதி ஸஹயர்மசரீ) என்கிற வ்யுத்பத்தியைக்கொண்டு நீ எந்த தர்மத்தை எப்படி அநுஷ்டிப்பாயோ, அதை அப்படியே இவள் அநுஷ்டிப்பவளென்க. உலகத்தில் ஒருவரைப்போல் மற்றொருவரிருப்பது அரிது. இவள் அப்படியன்றி உன்னைப்போலவே யிருப்பதுபற்றி உனக்கு இவளே தக்கவள். இவள் தவிர மற்றை எப்பெண்பிள்ளையும் பத்தினியாகத்தகாளென்க. இப்படிஸௌந்தர்யம் ஆபிஜாத்யம் தர்மாசாரணம் முதலியவற்றையுடையவளாயிருப்பினும் உனது அநுமதியின்றி இவளை நானங்கீகரிக்க மாட்டேனென்றுராமனுக்கு அபிப்ராயமாகினைத்து (ப்ரதீச்சமாமைசதாம்) இவளை யங்கீகரிப்பாயாகவென்கிறான்.

கையைப் பிடித்துக் கொள்வாயாக. இவள் பதிவ்ரதை யாயிருப்பவள்; பின்னும் மிகுந்த பாக்யமுடையவள்;

வீதை ராமனை விட்டு கூணமும் பிரியாதிருப்பவளாகையால் அவளை ராமனுக்குத் தாரம் செய்வதென்பது யுக்தமன்று. ஆகையால் ஜநகன் (ப்ரதீச்ஹ) அங்கீகரிப்பரயாக என்றுரைத்தாணன்றி (ஒஹாமி)கொடுக்கின்றேன் என்று சொல்லவில்லை. 'வீதை எனக்குத் தாளுகவே கைபுகுந்தவளாயிருக்க, அவளை எனக்குப் புதிதாகக் கொடுக்கைக்கு நீ ஆர்' என்று ராமன் கோபித்துக் கொள்வளே என்று நினைத்து (ஹஜீரந்தே) உனக்குச் சுபமுண்டாகுகவென்று நல்வார்த்தை சொல்லுகிறான். அல்லது—ஒப்பில்லாத கந்யாவுகூணங்களுடன் விளங்குகின்ற இப்பெண்பிள்ளையை அங்கீகரிப்பதளால்(ஹஜீரந்தே) உனக்கு ஸர்வமங்களங்களும் உண்டாமென்க. அல்லது—அநுரூபர்களான வஸுவரர்களாகிய அவர்களிருவருடையவும் சேர்த்திக்கு த்ருஷ்டிதோஷம் உண்டாகுமேயென்று (ஹஜீரந்தே) என்று பயந்து மங்களாசாஸநம் பண்ணுகிறான். என்னிடம் அநுஜ்ஞை பெறுமலே ராக்ஷஸ விவாஹத்தாலாவது காந்தர்வ விவாஹத்தாலாவது மணம்புரிவளே வென்று பயந்து (பாணிம்ஹ்ரஹ்ணீஷ்வபாணிஹ) பாணிக்ரஹணம் செய்வாயாக வென்கிறான். ப்ரணயகலஹ காலத்தில் காலைப் பிடிப்பது சேய்வாய், இப்பொழுது கையைப் பிடிப்பாயென்று அவ்விருவர்களுக்கும் லஜ்ஜையிலுண்டான சோபாதிசயத்தைக்காண விரும்பி இங்ஙனஞ் சொல்லுகிறானென்றுணர்க. அல்லது விவாஹாச்ரமத்தில் கேட்டது முதலாக ராமனுக்குச் சீதையினிடத்தில் மிகுந்த அநுராகம் பெருகி வருகின்றதுபற்றிப் பாவநாவசத்திலுல் வீதைக்கு ப்ரணய கோபமுண்டான தாக நினைத்து ராமன் அவள் காலைத்தானே பிடிப்பளே வென்று சங்கித்து (பாணிம்ஹ்ரஹ்ணீஷ்வ பாணிஹ) உன் கையிலுல் இவள் கையைப் பிடிப்பாயாக வென்றுரைத்தானென்றுணர்க.

அர்த்தாந்தரம்—ராமனுடைய அளவிடவொண்ணுத ரூபத்தையும் யாவராலும் அசைக்கமுடியாத சிவபிரானது வில்லை முறித்த பலப்பெருக்கையும், மற்றுமுள்ள லகூணங்களையுங் கண்டு, ஜநகன் ப்ரஹ்மகிஷ்டலுகையால் ராமனை ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகவும் வீதையை ஸ்ரீ மஹாலக்ஷ்மியாகவும் தெரிந்துகொண்டு இந்தத் தேவாஹஸ்

யத்தை வெளியிட எண்ணமில்லாதவளுகையால் ஸ்பஷ்டமாகச் சொல்லாமற்போனபோதிலும் த்வனிவ்ருத்தியால் வீதாராமர்களின் அநாதிஸம்பந்தத்தைத் தோற்றுவிக்கிறான் (இயம்) இவள். ஜகத்தைப்படைப்பது முதலியவற்றுக்குக் காரணபூதனும் ஸாக்ஷாத் விஷ்ணுவுமாகிய நீ ராமனுக அவதரித்தாற் போலவே லக்ஷ்மியும் வீதையாக இதோ அவதரித்திருக்கின்றாள், காணென்க. உங்களுக்குத் தாம்பத்யம் நித்யமித்தமேயாயினும் நீங்கள் மநுஷ்யர்களாகப் பிறந்தீர்களாகையால் மநுஷ்யதர்மத்தையநுஸரித்து வீதையை மணம்புரிவாயாக.(வீதா) கலப்பையின் வழியில் பிறந்த அயோநிஜை, நீ தேவகாரியத்தின் பொருட்டுக் கௌஸல்யையைப் பிறந்தவன். இப்படி உன்னைப்போல் பிறக்கையும் மற்றொரு ப்ரயோஜநத்தைக் குறித்துப் பிறக்கையும் இல்லாமற் போனபோதிலும் உன்னை யநுஸரிக்கிறதற்காகவே கலப்பையின் வழியில் தோற்றி மநுஷ்யத்வத்தை மாத்ரம் கைக்கொண்டு உன்னையே வரித்து உன்னிலுள்ள நித்யதாம்பத்யத்தைத் தோற்றுவிக்கின்றனள். (மம ஸுதா) எனது புதல்வி. மநுஷ்யத்வத்திற்குத் தக்கபடி 'கன்னிகை ஒருவன் வீட்டிற் பிறந்து ஒரு புருஷன்கையைப் பிடித்துக் கொள்ளவேண்டும்' என்கிறபடியே தானும் என்வீட்டிற் பிறந்து வளர்ந்தவளாகையால் நான் என்பெண்ணைப் பாவித்து உன்க்குத் தாகஞ்செய்கின்றேன். (ஸஹயர்மசரீதவ) நீ நடத்தும் ஜகத் ஸ்ருஷ்டிமுதலிய தர்மங்களில் ஸஹாயமாயிருந்து தானும் நடத்தவல்லவள். (ப்ரதிச்ஹைநாம்) உனக்கிவள் நித்யவிவாஹமாயினும் மநுஷ்யத்தனத்தை அபிநயிக்கைக்காக இவளை யங்கீகரிக்கவேணும். (ஹஸ்தே)உனக்கு நித்ய விவாஹமானவளை நான்புதிதாகக் கொடுக்கின்றேனென்று கோபிக்கவேண்டாம். (பாணிம் க்ருஹ்ணீஷ்வபாணிநா) இவளை நீ எப்பொழுதும் மார்பிலேயே தரித்திருப்பவன். இப்பொழுது மநுஷ்யாவதாரத்திற்குத் தக்கபடி விவாஹ ஸமயத்தைப்பற்றிக் கையினுல் கையைப் பிடிப்பாயாக.

அர்த்தாந்தரம்—ஜநகன் தனது உத்கர்ஷத்தைத் தோற்றுவித்துக்கொண்டு தாரைவார்த்துக் கொடுக்கிறான் (இயம்) இவள். வீர்யத்தைப் பந்தயமாக வுடையவள். வீர்யமென்னும் விலையைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளத் தக்கவள். சிவதநுர்பங்கம் முறித்து இவளை ஜயித்துவிட்டோமென்று அலக்ஷ்யமாக நினைக்கவேண்டாமென்க. (இயம்) உனக்குக் கௌரவிக்கத் தக்கவள். (வீதா) கலப்பைவழியில்

பிறந்தவளாகையால் உன்னையும் மற்றுமுள்ள ஜந்துஜாலங்களையும் பரித்துக்கொண்டிருக்கிற பூமிதேவிக்குப் பெண்ணுகப் பிறந்தவள். இவ்வளவுமத்திரத்திற்கே நீ இவளை பஹுமானிக்கவேண்டும். பார்யையாகப் பரிக்ரஹித்தாயாயின் விசேஷித்து வெகுமானிக்கத் தக்கவளென்பது சொல்லவேண்டுமோ? (வீதா) இவள் அயோனிஜை. நீ கௌஸல்யைக்குப் பிறந்தவளுகையால் பிறப்பில் உனக்கும் இவளுக்கும் கெடுவாகியுண்டி. இதைப்பற்றியும் நீ இவளிடத்தில் மிகுந்த கௌரவத்துடன் இருக்கவேண்டும். (மம்ஸுதா) எனது புதல்வி. ராஜரா ஜாவாகிய என்னுல் வளர்க்கப்பெற்றவள். ஆகையால் என்னிடத்தில் உனக்கு உண்டான கௌரவத்தை நீ இவளிடத்திலும் நடத்தவேண்டும். (மமஸுதா) இவள் ப்ரஹ்மநிஷ்டனும் தபஸ்வியுமாகிய என் பெண். இவளிடத்தில் கௌரவத்துடன் நடவாமற் போனுயாயின் எனக்குக் கோபம் உண்டாகும். அதனுல் உனக்குக் கெடுதி நேரிடும். (ஸஹயர்மசரீதவ) இவள் உனக்குக் கேவல பார்யையன்று, தர்மபத்நி. இவளை ப்ரதாநபத்நியாகக் கொள்ளவேண்டும். (ஹ்ரீரந்தே) நான் சொன்னபடி நடத்துவாயாயின் உனக்குச் சுபமுண்டாகும்.

அர்த்தாந்தரம்—ஜநகன் விநயாநுஸந்தாநத்துடன் தனது புதல்வியைத் தாநம் செய்கிறுன்—(இயம்) இவள். நீ சிவதநுஸ்ஸை அவலீலையாக முறித்த மஹாபராக்ரமநிதி. இவள் உனது பராக்ரமத்திற்கு ஈடாகாதவனும் தயைசெய்து கைப்பற்ற வேண்டியவனுமாயிருப்பவன். (வீதா) கலப்பையின் வழியிற்பிறந்தவள். தாயில்லாத பிள்ளையை உலகத்தில் மேன்மையாக ப்ரீதியுடன் பாராட்டுவார்களன்ரு? ஆகையால் நீயும் இவளிடத்தில் மிகுந்த ப்ரேமத்துடன் நடக்கவேண்டும். (மமஸுதா) என்பெண். நான் ப்ரஹ்ம நிஷ்டனுகையால் என்னுல் வளர்த்தலும் ஸௌக்யமும் இவளுக்கு அவ்வளவாக நேரிட்டதில்லை. நான் ப்ரஹ்மநிஷ்டையிலேயே யிருப்பதனுல் நீ உபேக்ஷித்தாயாயினும் எனக்கு விசாரிக்க நேராது. ஆனதுபற்றி இவளிடத்தில் மிகவும் ப்ரீதியோடிருப்பாயென்று இப்பொழுதே சொல்லுகின்றேன். (ஸஹயர்மசரீதவ) உனக்கு தர்மபத்நி. இவளை தர்மபத்நியாகப் பரிக்ரஹித்தாயாயினும் போதும். கர்மாநுஷ்டாநத்திலேயே மன்னு சென்ற எங்களுக்கு அவ்வளவே வேண்டியது (ப்ரதீச்ஹைநாம்) மணப்பிள்ளைகள் மிகுந்த கௌரவமுள்ள கன்னிகைகளை அவர்கள் தாய்தந்தைகளை ப்ரார்த்தித்துத் தாமே அங்கீகரிக்கத்வ

ரைப்படுவார்கள். இப்படிப்பட்ட கன்னிகையையோ தாய்தந்தைகள் தாமே கொஞ்சம் ப்ரார்த்தித்து மணப்பின்னேக்குக் கொடுக்கவேண்டியிருக்கின்றது. ஆகையால் நான் கொடுக்கின்றேன்; பரிக்ரஹிப்பாயாக. (ஹே ரகுநந்தன) என்னிடத்தில் ப்ரீதி வைப்பதலால் உனக்கு இவ்வகைச் சுபங்களெல்லா முண்டாகும்.

தனிஸ்லோகி—(இயம்) ஸௌந்தர்யாதிகுணங்களில் நானே மேற்பட்டவனென்று இறுமாந்திராமல் உன்னேப்போன்ற ஸௌந்தர்யாதி குணங்களையுடைய இந்த ஸீதையைப் பாராய். (ஸீதா) யாகபூமியில் கலப்பையினடியில் பிறந்தவள். பொன் வீலாவது பூமியிலன்றே? ஸீதையும் பொற்கொடி போன்றவளாகையால் பூமியில் பிறந்தனள். அயோநிஜை என்று தோற்றுகின்றது. (மமஸுதா) ஜநகவம்சத்தில் பிறந்தமையால் ஆபிஜாத்யத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லே. (ஸஹதர்மசரீதவ) நீ அநுஷ்டிக்குந் தர்மங்களே நடத்தச்செய்பவள். (ப்ரதிச்ச²) அத்யாதரத்துடன் அங்கீகரிப்பாயாக. (பாணிம் க்³ருஹ்ணீஷ்வ பாணிநா) ப்ரணயாபராதத்தில் கையினற்காலேப் பிடிக்கலாகும்; இப்பொழுது பாணிக்ரஹணம் செய்வாயாக. அல்லது—நீ விவதநுர்ப்பங்கம் செய்வதற்குரிய முறைட்டுக்கையன். ஸீதையினது ஹஸ்தங்களோ மிகவும் மிருதுவானவை. ஆகையால் மெதுவாகப் பிடிக்கவேண்டுமென்க. (ஹே ரகுநந்தன) ஒருவர்க்கொருவர் கையைப் பிடித்துக்கொண்டிருக்கிற வதூவார்களேப் பார்த்து அச்சேர்த்தியினழகுக்கு மங்கலாசாஸநம் பண்ணுகிறான். வது வென்றால் மணப்பெண். வரனென்றால்-மணப்பிள்ளே.

இதற்கே அர்த்தாந்தரம்—(இயம்) இவள். உன்னே விடாமலிருக்கும்பொழுது மாத்ரமே தான் நிலேபெற்றிருக்கும்படியான தன்மையுடையவள்; உன்னே விட்டபொழுதோ தான் இருந்தும் இல்லாதவள் போலேயே இருப்பவள். ‘ஆர்தார்தே முதி³தே ஹ்ருஷ்டா ப்ரோஷிதே மலிநா க்ருஶா,ம்ரியேத யா நாரீ ஸா ஸ்த்ரீ ஜ்ஞேயா பதிவ்ரதா’ (பர்த்தா தூங்கித்திருக்கும்பொழுது தூங்கித்திருப்பவளும், ஸந்தோஷித்திருக்கும்பொழுது ஸந்தோஷித்திருப்பவளும், தேசாந்தரம் போயிருக்கும்பொழுது சரீரஸம்ஸ்காரமொன்று மின்றி இளேத்திருப்பவளும், மரணத்தை யடையும்பொழுது அநுமரணம் செய்பவளுமா

உன்னை யெப்பொழுதும் கிழல்போல் அநுஸரித் திருப்பாள்' என்று உரைத்து ராமனது ஹஸ்தத்தில் அப்பொழுது மந்திரத்தினால் பரிசுத்தமாகிய ஜலத்தைச் சேர்த்தனன். அப்பொழுது 'மேல்மேல்' என்று தேவதை களும் ரிஷிகளும் கொண்டாடினர். அச்சமயத்தில் தேவ துந்துபி வாத்யங்களும் முழங்கின. ஆகாயத்தினின்று புஷ்பவர்ஷமும் உண்டாயிற்று. இவ்வாறு ஜகமஹாரா ஜன் மந்த்ர பூர்வகமாக ஸீதையைத் தாரைவார்த்துக்

கிய ஸ்த்ரீயே பதிவ்ரதையாவாள்) என்கிறபடியே ஸாதாரணமாகப் பதிவ்ரதையான ஸ்த்ரீ தான் பர்த்தாவை விட்டுப் பிரியும்பொழுது ஸத்தையற்றிருக்கையில், பதிவ்ரதைகளிற் சிறந்தவளும் அத்யந்த விலக்ஷணையுமாகிய இப்பெண்பிள்ளை உன்னைவிட்டுப் பிரியும்பொ ழுது ஸத்தையற்றிருப்பாள் என்று சொல்லவேண்டுமோ? (இயம்) இவள். உனக்கு ஆத்மாவும் சரீரமும் சாயையுமாயிருப்பவள். ஆகை யால் இவள் தோஷமற்றவளே. ஒருக்கால் தோஷம் உண்டா யிருப்பினும் அது உனதேயன்றே? ஒருவனுக்குத் தனது ஆத்மா வின் தோஷமும் தன் சரீரதோஷமும் தன்சாயையின் தோஷமும் தனதேயன்று? ஆகையால் நீ எப்படியோ, அப்படியே இவளும் தோஷமற்றிருப்பவள். (வீதா) கலப்பையினடியிற் பிறந்தவள். (அதாவது-பூமியிற் பிறந்தவள்.) 'மாதரமங்ஹாக' (ஸ்த்ரீகள் குண ங்களில் தாயைப்போன்றிருப்பார்) என்கிறபடியே பூமிதேவியின் பெண்ணுகையால் பூமியைப்போலவே பொறுமைமுதலிய குணங்கள் நிறைந்திருப்பாள். (ஏநாம்) அநேகவ்ரதநியமங்களால் எனக்குப்பிறந் தவள். (ஹுரந்தே) நான் பல விரதநியமங்களைச் செய்து இப்பெண் பிள்ளையைப் பெற்றனன், இதில் பலமநுபவிப்பவன் நீயே; போக்ய வஸ்துவின் குணஸம்ருத்தியானது போக்தாவின் போலான அநுப வத்தின் பொருட்டன்றது. (பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணினா) ஸீதை அறியாதவள்; தன்கையை நீட்டி உன்கையைப் பிடிக்க அறி யாள்; ஆகையால் நீயே பிடித்துக் கொள்வாய்.

கொடித்து, மிகுந்த ஸந்தோஷம் அடைந்து லக்ஷ்மணனைப் பார்த்து[1] 'லக்ஷ்மண! இப்படி வருவாயாக. உனக்கு மங்களம் உண்டாகவேண்டும். நான் ஊர்மிளையை உனக்கு விவாஹஞ்செய்து கொடுப்பதாக நிச்சயித்து விட்டேன். நீ இவளைக் கொள்ளவேண்டும். காலவிளம்பமின்றி இவளை நீ பாணிக்ரஹணஞ் செய்வாயாக' என்றனன். இங்ஙனம் அம்மன்னவன் லக்ஷ்மணனுக்குச் சொல்லி, பரதனைப் பார்த்து 'ரகுகுலத்தைக் களிக்கச் செய்பவனே! பரதா! உனது கையினால் மாண்டவியினது கையைப் பிடிப்பயாக' என்றுரைத்தனன். தர்மாத்மாவாகிய அந்த ஜநகமஹாராஜன் சத்ருக்நனையும் பார்த்து 'பருத்தபுஜங்களையுடைய சத்ருக்நனே! உனது கையினால் ச்ருதகீர்த்தியின் கையைப் பிடித்துக் கொள்வாயாக. நீங்கள் எல்லோரும் அழகுபொருந்தியவர்கள். நீங்கள் யாவரும் நல்ல நடவடிக்கையுடையவர்கள். இப்படிப்பட்ட உங்களுக்கே எங்களது புதல்விகள் பத்நிகளாகத் தக்கவர். ஆகையால் குருக்ஷத்ரவம்சத்திற் பிறந்த மஹாநுபாவர்களே! நீங்கள் எல்லோரும்[2] பத்நிகளுடன்கூடி எங்கள் கண்ணுக்கு ஸந்தோஷத்தை விளைக்கவேண்டும். காலவிளம்பஞ் செய்யவேண்டாம்' என்று மொழிந்தனன். அ

---

1. பரதன் பெரியவனாயிருக்கச் சிறியவனாகிய லக்ஷ்மணனுக்கு முன்பு விவாஹஞ் செய்வது தோஷமென்று நினைக்கலாகாது. 'பிதரவ்யபுத்ரே ஸாபத்நே பரதாரீஸு தேஷ்வா, விவாஹாநயஜ்ஞா நென பரிவேத்தோ ந வித்யதே' என்று பெரியவனுக்கு முன்பு விவாஹஞ் செய்யவேண்டுமென்கிறவிதி ஸஹோதரர்களுக்கே யன்றிச் சகலத்தி பிள்ளைகளுக்கில்லை.

2 (பத்நிகளுடன்கூடி) என்கையால் தாரை வார்த்தாயிற்றென்று தோற்றுகின்றது. ஜநகன் மூத்தவனாகையால் மாண்டவீச்ருத கீர்த்தி களைப்பற்றி அநுஜ்ஞைமாத்திரஞ் செய்தனன் அவர்களைத் தாரைவார்த்துக்கொடுத்தவன் குசத்வஜனே.

ந்த ராஜகுமாரர்கள் நால்வரும் இவ்வாறு ஜநகமஹாராஜன் மொழிந்த வார்த்தையைக் கேட்டு, வஸிஷ்டரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு ராஜபுத்ரிகள் நால்வருடையவும் ஹஸ்தங்களைப் பிடித்துக் கொண்டனர். அப்பொழுது மஹாநுபாவர்களாகி ரகுக்களில் சிறப்புற்ற ராமலக்ஷ்மணபரதசத்ருக்நர்கள் தமது பாரியைகளுடன்கூட [1]அக்நிக்கும் விவாஹவேதிகைக்கும் ஜநகமஹாராஜனுக்கும் மற்றும் அங்குள்ள ரிஷிகளுக்கும் ப்ரதக்ஷிணஞ் செய்து சாஸ்த்ரங்களிற் சொல்லியபடி கல்பஸூத்ரங்களையும் அநுஸரித்து வேறு வேறுக விவாஹத்தை நடத்திக் கொண்டனர். காகுத்ஸ்தகுலதிலர்களாகிய ராமலக்ஷ்மணபரதசத்ருக்நர்கள் தமது பத்நிகளாகிய அப்பெண்மணிகளின் அழகான ஹஸ்தங்களைப் பிடித்துக்கொள்ளும் பொழுது மிகவும் அழகிய பெரும் புஷ்பவர்ஷமானது ஆகாயத்தினின்றும் உண்டாயிற்று. தேவதைகளும் துந்துபிவாத்யங்களைக் கணகணவென முழங்கினர். அப்ஸரமடந்தையர்களும் கூட்டங்கூட்டமாக வாத்யங்களை வாசித்து வாயினற்பாடி ஆடினர். கந்தர்வர்களும் மதுரமாகக் காநஞ்செய்தனர். ரகுகுலதிலகர்களாகிய அந்த ராமலக்ஷ்மணபரதசத்ருக்நர்களின் விவாஹமஹோத்ஸவத்தில் அது மிகவும் அற்புதமாயிருந்தது. இங்ஙனம் மங்

3 முதலாக வஸிஷ்டமாமுனிவர் ஹோமஞ்செய்தது ராமாதிகளின் நன்மைக்காகவென்று தெரிகின்றது. பின்பு அக்நியை ப்ரதிஷ்டை செய்து விவாஹஹோமம் ராமாதிகள் செய்தனர். பாணிக்ரஹணமாயினபின்பு அவ்வக்நிக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் கந்யாதாநஞ் செய்கிற ஜநகனுக்கும் ராமாதிகள் ப்ரதக்ஷிணஞ்செய்து, பின்பு ஸ்வகல்பாநுஸாரமாக ஒவ்வொருவரும் வேறுவேறுக அக்நியை ப்ரதிஷ்டைசெய்து விவாஹஹோமஞ்செய்தனர். பின்பு லாஜஹோமமும் நடத்தித்தந்தமது அக்நிகளுக்கு மும்முறைப்ரதக்ஷிணஞ்செய்தனரென்று க்ரமங் கண்டுகொள்வது.

களவாத்யம் முதலியவைகளின் கோஷங்களால் காற்பு ரமும் முழங்கிக்கொண்டிருக்க, மிகுந்த தேஜஸ்ஸுடன் விளங்குகின்ற அந்த ராமலக்ஷ்மணபரதசத்ருக்நர்கள் நால்வரும் அக்நியை மூன்று ப்ரதக்ஷிணஞ் செய்து பாரி யைகளை விவாஹஞ் செய்து கொண்டனர். பின்பு அந்த ரகுகுலகுமாரர்கள் நால்வரும் தந்தமது பத்நிகளோடு கூட விடுதிகிருகத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். தசரத சக்கவர்த்தியும் பாரியைகளுடன்கூடி விளங்குகின்ற புத ல்வர்களைக் கண்ணாரக் கண்டுகொண்டே ரிஷிக்கூட்டங்க ளோடும் பந்துக்களோடுங்கூடிப் பின்சென்றனன். எழுப த்துமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

பரசுராமதர்சநம்.

பின்பு அன்றிரவு கழிந்து மறுநாளுதயகாலையில் விச்வாமித்ரமாமுனிவர், தசரத மஹாராஜனையும் ஜநக மஹீபாலனையுங்கண்டு விடைபெற்றுக்கொண்டு, (ராமல க்ஷ்மணபரதசத்ருக்நர்களையும், ஸீதோர்மிளாமாண்டவீ ச்ருத கீர்த்திகளையும் ஆசீர்வதித்து) வடதிசையிற்சென் வஸித்திருந்த ஹிமவத் பர்வதத்திற்குப் போய்ச் சேர்ந் தனர். இங்ஙனம் விச்வாமித்ரர் போன பின்பு தசரத வேந்தரும் மிதிலாதிபதியாகிய ஜநகமன்னவனிடம் விடை பெற்றுக்கொண்டு விசுவிற்றமது பட்டணத்திற்குப்போ கப்புறப்பட்டனர். அங்ஙனந் தசரதமன்னவன் புறப்பட்டுப் போகையில் ஜநகமஹீபாலனும் வழிவிடுவதற்காகக் கொஞ்சதூரம்வரையில் பின்தொடர்ந்து சென்றனன். பின்பு அவ்விதேஹராஜன் தன் பெண்களுக்குச் சீதன மாகப் பல பொருள்களைக் கொடுக்கத் தொடங்கி, அநே கலக்ஷம்பசுக்களையும், விலையுயர்ந்து லக்ஷக்கணக்குள்ள மேலானகம்பளங்களையும், மிகவும் உயர்ந்த பட்டுவஸ்த்ரங்

களையும், நன்கு அலங்காரஞ் செய்யப்பெற்று திவ்யமான உருவங்களையுடைய யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் கால்ாட்களையும் விலையேறப்பெற்ற அணிகலாலணிந்து மேம்பாடிள்ள அழகியர்களாகிய கிஸ்தாதிகளையும் அத்தன்மையாகிய வேலைக்காரர்களையும் அவர்களுக்குத் தந்தனன். பின்னும் அம்மஹீபதி மிகவும் உள்ளங்குளிர்ந்து எல்லையிரந்த வெள்ளிபொன் முத்துப் பவளங்களையும் பெண்களுக்குச் சீதனமாகக் கொடுத்தனன். இப்படி பெண்களுக்கு அபாரமாகத் தானங்களைக்கொடுத்துத் தசரதமஹாராஜாவினிடம் விடைபெற்றுக்கொண்டு அம்மிதிலாதிபதியாகிய ஜனகமஹாராஜன் தனது இருப்பிடம் வந்துசேர்ந்தனன். அயோத்த்யாதிபதியாகிய தசரத மஹாராஜனும் சதுரங்கபலங்களும் மற்றுமுள்ள பரிஜனங்களும் சூழ மஹாநுபாவர்களாகிய பிள்ளைகளுடன்கூடி ரிஷிகளனைவரையும் முன்னிட்டுக்கொண்டு தனது பட்டணத்திற்குப் போயினன். இப்படி அந்தத் தசரதமன்னவன் ரிஷிகளோடும் மற்றுமுள்ள ஜனக்கூட்டங்களோடும் பிள்ளைகளோடும் போய்க்கொண்டிருக்கையில், அவனுக்கெதிரில் ஆகாயத்திற் பறவைகள் அசுபத்தைத் தோற்றுவித்துக்கொண்டு ஆங்காரங்குப் பயங்காமசகக் கூங்சவிட்டன. பூமியிலுள்ள மிருகங்கள் மட்டும் அவனுக்குப் ப்ரதக்ஷிணமாகச் சென்று சுபத்தைத் தோற்றுவித்தன. அவ்வசகுனங்களைக் கண்டு தசரதமன்னவன் வஸிஷ்டமாமுனியைப் பார்த்து 'ஸ்வாமீ! க்ரூரமான பக்ஷிகள் பலவும் பயங்காமாகக் கூவுகின்றன. மிருகங்கள் மட்டும் ப்ரதக்ஷிணமாகச் செல்லுகின்றன. அசுபசகுனங்களும் சுபசகுனங்களும் காணப்படுகின்றன. இது இன்னதென்று தெரியாமல் எனது குலமார் நடுங்குகின்றது. இது சுபமோ, அசுபமோ என்று நிச்சயிக்கப்போகாமல் எனது மனத்திற்கு

மிகவும் துக்கமாயிருக்கின்றது. இதை எனக்குத் தெரியச் சொல்லவேணும்' என்று கேட்கலாயினன். வஸிஷ்டமஹர்ஷியும் இங்ஙனம் தசரதமன்னவன் சொன்னதைக் கேட்டு 'மன்னவனே! இதற்கு யாது பலம் உண்டாகுமோ, அதைச் சொல்லுகின்றேன், கேள். ஆகாயத்திற் பறவைகள் கூவுகிறபடியால், ஸமீபத்தில் நமக்கு ஒரு பயம் உண்டாகுமென்று தீர்ப்படுகின்றது. பூமியில் மிருகங்கள் நம்மை வலம் வந்து செல்லுகிறபடியால், அத்தப் பயமும் தானே நீங்கிவிடுமென்று தோற்றுகின்றது. ஆகையால் இந்த மஹஸ்தாபத்தை விடுவாயாக' என்று இவ்விணிய மொழியைக் கூறலாயினன். அவர்கள் இங்ஙனஞ் சொல்லிக்கொண்டிருக்கையில், அங்குப் பூமி முழுவதும் கிடுகிடென்று நடுங்கும்படியும் அழகிய மரங்கள்யாவும் அப்படியே பேர்ந்து வீழும்படியும் ஓர் பெறுங்காற்று வீசிற்று. ஐயோ! ஸ-ர்யனை இருட்டு மூடிக்கொண்டது. திக்குகள்யாவும் வெளிச்சமற்றவைகளாய்விட்டன. அந்தத் தசரதனுடைய படைகள்யாவும் புழுதியால் மூடப்பட்டு ஒன்றுந் தோன்றாமல் நின்று விட்டன. அப்பொழுது அவ்விடத்தில் வஸிஷ்டரும் மற்று முள்ள மஹர்ஷிகளும் தசரதமஹாராஜனும் அவனது புத்ரர்களாகிய ராமலக்ஷ்மண பரதசத்ருக்நர்களுமே ப்ரஜ்ஞையுடன் இருந்தனர். மற்றையனைத்தும் ப்ரஜ்ஞையற்றிருந்தது. பயங்கரமாகிய அவ்விருட்டில் அந்தத் தசரதனது ஸைந்யமானது புழுதியால் மூடப்பட்டது போலாய்விட்டது. அப்பொழுது அந்தச்ஸைன்யமானது அதிபயங்கரனாகி ஜடைகளைத் தரித்து வருகின்ற பரசுராமனைக் கண்டது. அவன் பிருகுவம்சத்திற் பிறந்தவன்; ஜமதக்நியின் குமாரன். மஹாராஜர்களாயினும் அவர்களை யெல்லாம் அவன் வென்று முடித்தவன். கைலாஸபர்வதம்போல்

அசைக்கக் கூடாதவன்; பிரளயகாலாக்னிபோல் யாவ ராலும் பொறுக்கமுடியாதவன்; மிகுந்த காந்தியுடன் அக்நி ஜ்வாலைபோல் விளங்குகிறபடியால் ஸாதாரண ஜந்துக்களுக்குக் கண்கொண்டு பார்க்க முடியாதிருப்பவன். அம்மஹாதீரன் தோளின்மீது கோடாலியை வைத்து, மின்னற் கூட்டங்கள்போல் தனது தேஜஸ்ஸினால் விளங்கும் வில்லையும் சிறந்ததாகிய பாணத்தையும் கைகளில் பிடித்து த்ரிபுரதஹநஞ்செய்த சிவபிரானே இவன் என்னும்படி புலப்பட்டனன். ஜபத்தையும் ஹோமங்களையும் இடைவிடாமற் செய்துகொண்டிருக்கும் மஹாநுபாவராகிய வஸிஷ்டர்முதலிய அந்தணர்களனைவரும் அதிபயங்கரனாகி அக்நிபோல் ஜ்வலிக்கும் அப்பரசுராமனைக் கண்டு அனைவருமொன்றுகூடி 'இப்பரசுராமன், தனது தகப்பனை ஒரு க்ஷத்ரியன் கொன்றானென்று முன்பு க்ஷத்ரிய ஜாதி ஸாமாந்யத்திலும் கோபித்துக்கொண்டிருப்பான். மறுபடியும் இப்பொழுதாவது க்ஷத்ரியர்களை வதஞ் செய்யாதிருப்பானோ?. முன்னமே க்ஷத்ரியர்களை வதஞ்செய்து தன்கோபமும் மனக்கவலையுந்தீரப் பெற்றவனையால், மறுபடியும் க்ஷத்ரியவதஞ் செய்யவேண்டுமென்கிற கருத்து இவனுக்கு இராது' என்று இவ்வாறு தமக்குள் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டனர். ரிஷிகள் இவ்வாறு சொல்லி அர்க்கியத்தை யெடுத்துக்கொண்டு பயங்கரமான ரூபத்தையுடைய அந்தப் பரசுராமனை நோக்கி 'ராம ! ராம !' என்று இனிய மொழிகளால் அழைத்துப் பூஜைசெய்ய, மஹாபராக்ரமமுடையனுள்ள ஜமதக்நிகுமாரனாகிய அந்தப்பரசுராமனும் ரிஷிகள் செய்த அந்தப் பூஜையைப் பெற்றுக்கொண்டு தசரதசக்ரவர்த்தியின் புதல்வனாகிய ராமனைப் பார்த்து இங்ஙனம் உரைத்தனன். எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

பரசுராமன் ராமனைத் திக்காரஞ் செய்தல்.

'ராமா! தசரதகுமாரனே! ராமா! உனது பராக்ரமம் அற்புதமாயிருக்கின்றதென்று உலகத்திலெங்குங் கேள்விப் படுகின்றனன். சிவபிரானது வில்லை முறித்தது தாடகாஸம்ஹாரஞ்செய்தது முதலிய உனது வியாபாரங்களெல்லாவற்றையுங் கேட்டேன். சிவபிரானது வில்லெங்கே? நீ யெங்கே? அப்படிப்பட்ட வில்லை நீ முறித்ததுமிகவும் அற்புதமாயிருக்கின்றது. மேலும் அது இப்படியப்படி யென்று நினைக்கவுங்கூட முடியாதிருக்கின்றது. அதைக் கேட்டு, நான் மேலான மற்றொரு வில்லைக்கொண்டு வந்திருக்கின்றனன். அதிபயங்காமாகிய அப்பெரிய வில்லிதுதான். இதை என்தகப்பனாகிய ஜமதக்நி எனக்குத் தந்தனர். இதில் பாணத்தைத் தொடுத்து எதோ! உனது பலத்தைக் காட்டுவாயாக. இவ்வில்லையெடித்து வளைத்து காணேறிடுவாயாயின், உனது வீரியத்தை நான் அறிந்து கொள்வேன். ராகவா! அப்பொழுது உனதுபராக்ரமம் புகழத் தக்கதாகும். அப்படிப்பட்ட பராக்ரமத்தையுடைய உனக்கு த்வந்த்வயுத்தங் கொடுக்கின்றேன்' என்றனன். இங்ஙனம் அந்தப் பரசுராமன் மொழிந்த மொழிகளைக் கேட்டுத் தசரதமன்னவன் துயரமுற்று முகம் வாடி மனக்கவலிப்பின்றிக் கைகளைக் கூப்பிக்கொண்டு அப்பரசுராமனைப் பார்த்து 'நீ க்ஷத்ரியர்களின் மீது முன் உண்டாயிருந்த கோபத்தை விட்டு மிகவும் மனத்தெளிவு பெற்றனை. மேலும் ப்ராஹ்மணனாயிருக்கின்றனை. ப்ராமணர்களுக்குச் சாந்தியே யன்றோ ஸ்வரூபம். அதிலும் பெருங் கீர்த்தி பெற்றவன். ஆகையால் ஸஹஜமாகிய சாந்தியை விட்டு அந்தக் கீர்த்தியைக் கெடுத்துக்கொள்வது நலமன்று. நீ எல்லாவற்றிலும் நன்றாகத் தேர்ந்திருப்பவன். என் பிள்ளைகளோ பாலர்கள். (அறியாதவர்கள்.) ஆகை

யால் வீரர்களிடத்தில் ரோஷத்தைப் பாராட்டி, பாலர்களாகிய எனது புதல்வர்களுக்கு அபயங் கொடுக்கவேண்டும். எப்பொழுதும் வேதாத்யயநம் முதலிய விரதங்களையநுஷ்டித்துக்கொண்டிருக்குந் தன்மையரான பார்க்கவர்களின் வம்சத்திற் பிறந்தனை. இந்திரனிடம் பிரதிஜ்ஞை செய்து ஆயுதத்தை விட்டுவிட்டனை. இப்படிப்பட்டவனுனது பற்றியே நீ தர்மத்தில் மனஞ்செலுத்திக் காச்யபருக்குப் பூமியையெல்லாந் தானஞ்செய்து, வனத்திற்குச் சென்று மஹேந்த்ரபர்வதத்தில் வாஸஞ் செய்கின்றனை. நீ மறுபடியும் ஏதுக்குத் திரும்பிவந்தனை? எங்களனைவரையும் காசஞ்செய்கைக்கே நீ மீளவும் திரும்பிவந்தாயென்றுதெரிகின்றது. 'யான் உங்களனை காசஞ் செய்யப்போகிறதில்லை; ஆனால் ராமன் ஒருவனையே காசஞ் செய்கிறேன்' என்று உரைக்கவேண்டாம். ராமனொருவனை நீ கொன்றுயாயின், நாங்களனைவரும் பிழைத்திருக்கமாட்டோம் அப்பா!' என்றனன். இவ்வாறு தசரதமன்னவன் சொல்லிக்கொண்டிருக்கையில், ஜமதக்நி குமாரனுகிய அந்தப் பரசுராமன் மஹா பராக்ரமசாலியாகையால் அவ்வார்த்தையைச் சிறிதுஞ் செவியிற்கொள்ளாமல் விட்டுவிட்டு ராமனிருக்குந் திசைக்கே முகத்தை மாற்றிக்கொண்டு 'ராமா! உலகத்தில் சிறப்புற்ற வில்லுகள் இரண்டே உள்ளனவை; இவ்வில்லுகளிரண்டும் தேவலோகத்திலுண்டானவை; உலகத்திலெங்கும் பிரஸித்தி பெற்றவை; மிகவும் உறுதியானவை; சிறந்த ஸாரமுள்ளவை; வில்லுக ளனைத்திலும் முக்கியமாயிருப்பவை. அவைகள் விச்வகர்மாவினால் மிகுந்த பிரயத்தினத்துடன் நிருமிக்கப்பட்டவை. அவ்விரண்டு விற்களில் ஒன்றை த்ரிபுராஸுரர்களுடன் யுத்தஞ்செய்ய விரும்பின சிவனுக்குத் தேவர்கள் கொடுத்தனர். அது அப்பொழுது த்ரிபுராஸுரர்களைக் கொன்றது. புருஷோத்தமா!

காகுத்தனே! அதையே நீ முறித்தனை. (என் கையிலிருக்கின்ற இவ்வில் இரண்டாவது. இதைத் தேவர்கள் விஷ்ணுவுக்குக் கொடுத்தனர்.) ராமா! மிகவும் ப்ரகாசிக்கின்ற இவ்வில்லு விஷ்ணுதேவனுடையது. இதுவும் சிவனது வில்லோடொத்தவலிவுடையது. 'இது சிவனது வில்லைப்போன்றதே யாகுமாயின், அதைப்போலவே இதுவும் எனக்கு ஒரு சரக்கோ' என்று நினைக்கவேண்டாம். அச்சிவனது வில்லு சிதிலமாயிருந்ததுபற்றி அதை நீ முறித்துவிட்டனை. இல்லையாயின் நீ அதை முறிக்கவல்லனல்லை. அது சிதிலமானதற்குக் காரணஞ் சொல்லுகின்றேன்; கேள். சிவன் த்ரிபுரங்களைத் தஹித்தபின்பு, தேவர்கள் [1]சிவனுடையவும் விஷ்ணுவினுடையவும் பலாபலங்களை அறிய விரும்பி, அனைவரும் ப்ரஹ்மதேவனைப் பார்த்து 'சிவகேசவர்களில் மிகுந்த பலமுடையவன் யாவன்?' என்று வினவினர். அந்த ப்ரஹ்மதேவனும் லத்யவான்களனைவரிலும் தலைவனுகையால், சிவகேசவர்களின் ஏற்றக்குறைகளைக்குறித்து அத்தேவன் சொன்னஉபதேசங்களை ஸத்யமாகவே தேவர்கள் கம்புவார்களே யாயினும் கண்குளிரக்கண்டல்லது அவர்களது மனத்திற்கு ஸமாதானமுண்டாகவில்லை. ஆகையால் அத்தேவன் அவர்களின் அபிப்ராயத்தை அறிந்துகொண்டு சிவகேசவர்களுக்கு

---

1 தேவதைகள் ப்ரஹ்மாவைப் பார்த்து 'முன்பு வராஹாதி ரூபங்களால் பூமியை யெடுக்கை முதலிய காரியங்களை விஷ்ணு செய்ததுபற்றி அவ்விஷ்ணுவே அதிகனென்று நீ புகழ்ந்துரைக்கதாங்கள் கேட்டிருக்கின்றனம். இப்பொழுது சிவன் விஷ்ணுவைக் கேவலம் ஒரு ஸாதனமாகச் செய்துகொண்டு தானே முக்கியனுகி த்ரிபுரங்களையும் கொளுத்தினதைக் கண்டால் சிவனே அதிகனென்று எங்களுக்குத் தோற்றுகின்றது. ஆகையால் (இவ்விருவரிலும் மேலானவன் யாவன்) என்று விளவினரென்று தெரிகின்றது.

[1]விரோதத்தை உண்டாக்கினன். விரோதமுண்டானவிடத்தில் சிவனும் விஷ்ணுவும் ஒருவர்க்கொருவர் ஜயிக்க முயன்று லோகங்களெல்லாம் பயமுற்று மயிர்க்கூச்சலடையும்படி அதிபயங்கரமாக யுத்தஞ்செய்தனர். அப்பொழுது விஷ்ணுதேவன் ஹுங்காரஞ்செய்ய, பயங்கரமானசத்தியுடையதாயினும் சிவனுடைய வில்லானது முடிபட்டுச் சிதிலமாயிற்று. அந்த ஹுங்காரத்தில் மஹாதேவியான பார்வதியைக் கொண்டு முக்கண்ணனாகிய சிவபெருமானுக்கு மகிழ்ச்சியாடமல் நின்றுவிட்டனன். அப்பொழுது தேவர்களும் ரிஷிகளும் சாரணர்களும் கும்பற்கூடிவந்து 'இனி யுத்தம் வேண்டாம்' என்று ப்ரார்த்திக்க, தேவர்களின்பிரார்த்தனையால் விருவரும் ஓய்ந்துபோயினர். அப்பொழுது தேவர்களும் விஷ்ணுவினது பராக்ரமத்தினால் சிவனதுவில்லு சிதிலமானது கண்டு 'விஷ்ணுவே பலாதிகன்'என்று நிச்சயித்தனர். மஹாயசஸ்வியாகிய அச்சிவபெருமானும் இவ்வகையில் தோல்வியுற்றுத் தனக்குக் குறை கேரிட்டதுபற்றிக் கோபமே சங்கொண்டு அவ்வில்லைப் பாணத்துடன்கூட விதேஹதேசத்தையாளும் [2]தேவராதனென்னும் ராஜர்ஷிக்குக் கொடுத்தனன். ராமா! சத்ருக்களின் பட்டணங்களை வெல்லு

---

1 ப்ரஹ்மதேவன் விஷ்ணுவைப் பார்த்து 'த்ரிபுரயுத்தத்தில் சிவன் தானே வில்லாளியாயிருந்தபடியால் அந்த ஜயத்தில் தானே முக்கியனென்றும், நீ ஸாதகமாக மாத்திரமிருந்தாயாகையால் அழுக்கியனென்றும் எனக்குச்சொன்னாய்'என்றுரைத்து அத்தேவனுக்குச் சிவனிடத்தில் விரோதத்தையும், சிவனைப் பார்த்து 'விஷ்ணு, உனது பாணத்தின் நுனியில் தானிருந்தது பற்றி, நானே திரிபுரங்களை ஜயித்தேனென்றும் சிவனல்ல வென்றும் என்னுடன் சொன்னாய்' என்றுமொழிந்து அச்சிவனுக்கு விஷ்ணுவினிடத்தில் விரோதத்தையும் விளைவித்தானென்றுணர்க.

2 தக்ஷயஜ்ஞத்தின் முடிவில் சிவன் தநுஸ்ஸைத் தேவர்களுக்குக் கொடுத்தானென்று முன்பு சொல்லப்பட்டது. சிவன் வில்லைத் தேவராதனிடம் கொடுத்தானென்று இவ்விடத்திற் கொலையப்பட்டது. விச்வாமித்ராச்ரமத்தில் ரிஷிகள் 'தேவதைகள் ஜகத்துக்கு

வல்லதும் விஷ்ணுவினுடையதுமாகி என் கையிலிருக்கின்ற இந்த உத்தம தநுஸ்ஸை அவ்விஷ்ணுதேவன்பார்க்கவராகிய நிதிகருக்கு 'நீ இதை வைத்துக்கொண்டிரு' என்று கொடுத்தனன். மஹா தேஜஸ்வியாகிய அந்த நிதிகரும் நினைத்த காரியங்களெல்லாவற்றையுந் தடையின்றி நிறைவேற்ற வல்லவரும் (மஹாதபாவரும்) தனது குமாரரும் எனக்குத் தந்தையுமாகிய ஜமதக்நிக்கு அந்த நிவ்யதநுஸ்ஸைத் தந்தனர். அவ்வில்லு தம்மிடத்திலிருப்பினும் எனது தகப்பனாராகிய ஜமதக்நி ஆயுதமெடுப்பதை விட்டுத் தொலைத்துத் தீவம் நடத்திக்கொண்டிருந்தனர். அப்படி ஆயுதத்தை விட்டுத் தவம்புரிந்துதபோபலத்துடனிருப்பினும், கார்த்தவீர்யார்ஜுநன் தாமஸபுத்தி கொ

யாகத்திற் கொடுத்தனர்' என்று மொழிந்தனர். வீதை அநஸூயையுடன் வருணன் 'அந்த வில்லை ஜநகனுக்குக் கொடித்தானென்று சொல்லினள். இவையெல்லாம் ஒன்றோடொன்று விருத்தமாயிருக்கின்றன. இவைக்கு ஸங்கதி யெப்படி பெனில், தக்ஷயாகத்தின் முடிவில் சிவன் கோபத்தோடு அவ்வில்லைத் தேவர்களுக்குக் கொடுக்க முயலுகையில், அக்கோபத்தைக் கண்டு தேவதைகள் அவனருகிற் சென்று அவ்வில்லை வாங்கிகொள்ளப் பயந்து அதைத் தமக்குப் பதிலாகத் தேவராதனிடங் கொடுக்கும்படி ப்ரார்த்திக்க, சிவன் அதைத் தேவராதனிடம் வைத்தனன். ஆனது பற்றியே சிவன் அதைத் தேவர்களுக்குக் கொடுத்தானென்றும், தேவராதனுக்குக் கொடுத்தானென்றும் இரண்டும் பொருந்துகின்றன. சிவன் தேவராதனிடம் வைத்தானென்கையால் அவனுக்குத் தேவதைகள் சொந்தமாகக் கொடாமல் வைத்திருக்கச் சொல்லிக் கொடுத்தானென்று தெரிகின்றது. பின்பு ஜநகன் யாகத்திலுல் தேவதைகளைக் களிக்கச் செய்து, தன்னிடம் வைத்திருக்கச் சொல்லிக் கொடுத்த வில்லைச் சொந்தமாகத் தனக்குக் கொடுக்கும்படி ப்ரார்த்திக்க, தேவர்களும் அதை அவனுக்குச் சொந்தமாகக் கொடுத்துவிட்டனர். ஆகையால் தேவதைகள் அதை ஜநகனுக்குக் கொடுததார்களென்பது உபபந்நமாகின்றது. மேலும் தேவர்கள் தேவராதனுக்குக் கொடுக்கும்பொழுது வருணனைக் கொண்டு கொடுப்பித்தனராகையால் வீதை அநஸூயையுடன் 'வருணன் அதை ஜநகனுக்குக் கொடுததான்' என்று சொன்னதுஞ் சேருகின்றது. ஆகையால் ஒன்றுக்கும் விரோதமில்லை யென்று கண்டுகொள்வது.

ண்டு அவரைக் கொன்றுவிட்டனன், இப்படிப்பட்டது மற்றொன்றேதாயினும் உளதா? இது எவ்வளவு க்ரூரமாயிருக்கின்றது! இதைக்கேட்டு நான் கதிங்கோபாவேசங்கொண்டு க்ஷத்ரிய ஜாதியைக் கொல்லத் தொடங்கி அநேகக் தரம் உலகத்திற் பிறக்கும் க்ஷத்ரியர்களையெல்லாம் அப்பொழுதைக்கப்பொழுதே வதஞ்செய்து, அவராளும் பூமியையெல்லாங் கைப்பற்றிக்கொண்டு, யாகஞ் செய்து யாகத்தின் முடிவில் நற்செய்கையுள்ளவரும் மஹாநுபாவருமாகிய காச்யபருக்கு அப்பூமியைத் தக்ஷிணையாகக் கொடுத்து, மஹேந்த்ரபர்வதத்தில் வாஸஞ் செய்துகொண்டு தவம் புரிந்து தபோபலமுடையவனுயினன். (தேவர்களால் சூழப்பட்ட அம்மலையில் ஸுகமாகத் தவஞ்செய்துகொண்டிருக்கின்றனன். ஆனால் இப்பொழுது இவ்விடம் வந்ததற்குக் காரணமென்னவென்னில், மிகுந்த பலமுடைய நீ உனதுமேலான பராக்ரமத்தினால் சிவதநுஸ்ஸை முறித்த ஸங்கதியைக் கேள்விப்பட்டேன். ஆனதுபற்றியே வேகமாக வந்து சேர்ந்தனன். ராமா! தகப்பன் பாட்டன் வரிசையிலிருந்து க்ரமமாக எனக்கு வந்ததும், அவ்விஷ்ணுதேவன் வைத்துக்கொண்டிருந்ததும், பெருமை பொருந்தியதுமாகிய அவ்வில் இதோ இருக்கின்றது. நீ க்ஷத்ரியனுயிருப்பவன். ப்ராஹ்மணனைப்போல் என்கையிலாகதென்று உரையாமல் க்ஷத்ரிய தர்மத்தை முன்னிட்டுக்கொண்டு சிவனது வில்லைப்போல் சிதிலமாகாமல் மிகுந்த வலியுடைய இம்மேலான வில்லை வாங்கிக்கொள்வாயாக. விற்களனைத்திலு முயர்ந்த இவ்வில்லில், நீ வல்லவனுயின், சத்ருபட்டணங்களைத் தொலைக்கவல்ல தொரு பாணத்தைத் தொடுப்பாயாக. கூருத்தனே! பிறகு உன் சக்தியை அறிந்துகொண்டு உன்னுடன் த்வந்த்வயுத்தஞ் செய்கின்றேன்' என்றனன். எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரசுராம கர்வபங்கம்.

அப்பொழுது தசரதகுமாரனுகிய ராமன் ஜமதக்கினி என்ற புத்திரனான அந்தப் பரசுராமன் மொழிந்தவற்றைக் கேட்டுத், தான்தர்மதினருகிலிருப்பதுபற்றி அவரிடத்தில் கொஞ்சம் வைத்துப் பரசுராமனை அதிகமாக ஒன்றும் பேசாமல் அலக்ஷ்யம் செய்து 'பார்க்கவ ராமனே! தங்களுடைய கர்வத்தைத் தீர்க்க முன்னும் நீ செய்த செயல்களை யெல்லாம் கேட்டிருக்கின்றனன். (அதாவது, உனது தகப்பனை ஒரு க்ஷத்திரியன் கொன்றுனென்று க்ஷத்திரிய வம்சங்களையெல்லாம் நீ கரசஞ் செய்த வரலாற்றை முற்றும் கேட்டிருக்கின்றனன்.) சூரனுயிருப்பவன் வைரத்தைத் தரித்துக்கொள்ள வேண்டியதன்றே? ஆகையால் அதனை நான் உன்னைப் போர உகக்கின்றேன். நீ கர்வமும் வீரியமற்றவனுகவும், க்ஷத்ரதர்மப்படி ஆயுதத்தைக் கையிலெடுத்து யுத்தஞ்செய்யச் சக்தியில்லாதவனுகவும் நினைத்து அவமதிசெய்கின்றனை. இது யுக்தமாகுமா? மனுஷ்யரைத் தரசப்படச்செய்யும் ஒப்பற்ற எனது தேஜஸ் வையும், சத்ருக்களை யடக்கவல்ல எனது பராக்ரமத்தையும் நீ தரிசனம் செய்கின்றனை. பாராய்' என்று மொழிந்து முடித்த பிறகு கொண்டு அந்தப் பரசுராமனது கையிலிருந்து தனுஸ்ஸையும் பாணத்தையும் (1விஷ்ணுவின் அவதாரமான அபத்தி அவனிடமிருக்கிற 2வைஷ்ணவகலையை யும்விடுத்த பராக்ரமசாலியாகையால் அலக்ஷ்யமாகவே வாங்கிக்கொண்டனன். பிறகு ராமன் அவ்வில்லை வளைத்து

---

1 'தத்தத்தத்த தேவி லவஷ்ணவ்யா ஸக்த்யா தவீ மதியா ஸஹி தூர்த்தவ வைஷ்ணவ சாபம் விதயேச லீலயா' என்று பாத பூரணத்திற் சொல்லப்பட்டது. இதற்குப் பொருள்—தேவி! அந்த மாயை இவ்வாறு உரைத்து அந்தப் பரசுராமனிடத்திலிருந்த விஷ்ணு சக்தியுடன் அவ்வைஷ்ணவ தனுஸ்ஸை வணக்கத் தோடு அலக்ஷ்யமாக வாங்கிக் கொண்டனன்—என்பது.

2 வைஷ்ணவகலை—விஷ்ணுவினது அம்சம்.

காணைறிட்டு அதில் பாணத்தைத் தொடுத்து ஜமதக்நி குமாரனுகிய ராமனைப் பார்த்து மிகுந்த கோபத்துடன் 'பரசுராமனே! நீ ப்ராஹ்மணனுனதுபற்றியும் [1]விச்வாமித்ரமாமுனிவருக்காகவும் நான் உன்னிடத்தில் மேன்மை வைக்கவேண்டியிருக்கின்றது. ஜமதக்நிகுமாரனே! ஆகையால் உனது ப்ராணங்களைப் போக்கவல்ல இந்தப் பாணத்தை உன்மீது பிரயோகிக்க முடியாதிருக்கின்றனன். ஓ ராமனே! நீ நடப்பதற்குரிய இப்பாதங்களின் (இக்கால்களின்) சக்தியையாவது, நீ தபோபலத்தினுல் ஸம்பாதித்திருக்கிற ஒப்பில்லாத [2]உலகங்களையாவது இவ்விரண்டில் உனக்கு எது இஷ்டமோ, அதைக் குறிப்பிட்டடிக்கின்றனன். இந்தப் பாணம் திவ்யமானது; மேலும் விஷ்ணுவைத் தேவதையாக உடையது; ஆகையால் சத்ருபட்டணங்களையெல்லாம் ஒழிக்கவல்லது. இது இப்படிப்பட்ட தாகையால் பிறருடைய பலத்தையும் செருக்கையும் தனது வீரியத்தினுல் அழிக்கவற்று. இது ஒருக்காலுங் குறிதப்பி வீண் போகாது' என்றனன். அவ்விடத்தில் ரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரமடந்தையர்களும் ஸித்தசாரண கிம்நரர்களும் யக்ஷராக்ஷஸர்களும் உரகர்களும் கும்பற்கூடி ப்ரஹ்மதேவனை முன்னிட்டுக் கொண்டு விஷ்ணுவின் மேலான ஆயுதமாகிய அவ்வில்லைக் கையிலேந்தி விளங்குகின்ற ராமனையும், மிகவும் அற்புதமாகிய அவனது செயலையும் பார்க்கும்பொருட்டு வந்த

1 விச்வாமித்ரருனிவரது உடன் பிறந்தவராகிய வத்யஶ்வனி யென்பவள் ரிசிகருடைய பாரியை. ரிசிகர் ஆவிடத்தில் ஜமதக்நியைப் படைத்தனர். ஜமதக்நி பரசுராமனைப் பெற்றனன் இப்படி பரசுராமன் விச்வாமித்ரமாமுனியோடுண்டான தொடர்பையால் விச்வாமித்ரரைப் பற்றிப் பரசுராமனை ராமன் கொல்லமுடியாதிருந்தனனென்று கருத்து.

2 உலகங்களை யென்றால் உலகங்களின் ப்ராப்தியை யென்க. அஃதாவது — அதற்கு மூலமாகிய புண்யகர்மங்களை யென்றுணர்க.

னர். ராமன் அவ்வில்லைக் கையிலேக்கினபொழுது உல கிலுள்ள ஜநங்கள் யாவும் திகைத்திருந்தன. ஜமதக்கி குமாரனாகிய பரசுராமனும் (தன்னிடமிருந்த விஷ்ணு தேஜஸ்ஸை போனபடியால்) வீரியமற்று ராமனைக் கண் ணுற்றனன். இப்படி ராமனது பராக்ரமத்தினால் தனது வீரியக்தொலேந்து போகையில், ஜமதக்கி குமாரன் திகை த்து நின்றவனைத் தாமரையிதழ்போன்ற கண்களை யுடைய ராமனைக் கண்டு மெதுவாக இவ்வண்ணம் மொ ழிந்தனன். 'காகுஸ்த்தகுலதிலகனே! ராமா! முன்பு இப்பூமியனைத்தையும் நான் காச்யபருக்குக் கொடுக் கும்பொழுது, அவர் என்னைப் பார்த்துப் 'பரசுராம னே! எனது தேசமாகிய இப்பூமியில் நீ வஸிக்கலாகாது' என்றனர். காச்யபருக்குப் பூமியையெல்லாம் ஸ்வா தீநஞ் செய்து விட்டனன். 'உமது தேசத்தில் வஸிக் கிறதில்லே' என்று பிரதிஜ்ஞையுஞ் செய்தனன். ஆகை யால் நான் குருவாகிய காச்யபர் சொல்லியபடி செய்ய முயன்று ராத்திரியில் இப்பூமியில் வஸிக்கிறதில்லே. வீரர் களிற்றலேவனே! ஆகையால் எனது இப்பாதங்களிலுள் ள கமநசக்தியைப் போக்க வேண்டாம். ஏனெனில், நான் இதில் நில்லாமல் மநோ வேகத்தினால் மஹேந்த்ரபர்வதத் திற்குப் போகவேண்டியவன். நான் தவஞ்செய்து ஒப் பில்லாத உலகங்களை ஸம்பாதித்திருக்கின்றனன். உனது மேலான பாணங்களால் அவைகளை [1] அடிப்பர்யாக. கால விலம்பஞ் செய்யவேண்டாம். நான் வேகமாகப் போகவே ண்டும். இவ்வில்லை அலக்ஷ்யமாக வாங்கிக்கொண்டமை

---

1 உலகங்களை யடிக்கையாவது—உலகங்களைப் பெறுதற்கு ஹேதுவாகிய கர்மங்களை விபலமாகச் செய்தை. ஒரு காரியம் மூர்த் தமாயினும் அமூர்த்தமாயினும் அதைத் தடுக்கையே ராமபாணங் களுக்கு அபேக்ஷிதம். மூர்த்தமென்றால்-சரீரமுடையது. அமூர்த் தமென்றால்-அதில்லாதது.

யால் தேவர்களுக்குத் தேவனும் ஆதியந்தமில்லாத பரஞ்சுடருமாகிய மதுசூதனன் நீயே யென்று அறிந்து கொண்டேன். பகைவரைத் தபிக்கச் செய்ய வல்ல பார்க்கவ ராமசாலியே! உனக்கு மங்களமுண்டாகுக. இதோ தேவர்களனைவருங் கும்பற்கூடிவந்து யுத்தத்தில் யாவராலும் எதிரிட வொண்ணுத உன்னையும் ஒப்பில்லாத உனது வீரச்செயல்களையும் காண்கின்றனர். மூவுலகங்களுக்கும் காதலுகிய உன்னிடத்தில் நான் தோல்வியடைந்தது எனக்கு அவமானமாகமாட்டாது. ஸ்வாமியினிடத்தில் தாஸனுக்கு நேரிட்டதோல்வி அவமதியை விளைக்காதன்றே? ராமா! சத்ருக்களை யடக்குகையே உனக்கு மேலான விரதம். ஆகையால் ஒப்பின்றி மேன்மைபெற்றிருகிற உனது பாணத்தை விடுவாயாக. நீ பாணம் விடுவதைக் கண்டு பர்வதங்களிற் சிறந்த மஹேந்த்ர பர்வதத்திற்குப் போய்ச் சேருகின்றேன்' என்றனன். ஜமதக்நி குமாரனுகிய பரசுராமன் இங்ஙனஞ் சொல்லக்கேட்டுத் தசரதசக்ரவர்த்தியின் புத்திரனுகிய ஸ்ரீராமன் உத்தமமாகிய அந்தப் பாணத்தைப் பிரயோகித்தனன். பரசுராமனும் தான் தவஞ்செய்து ஸம்பாதித்த லோகங்களெல்லாம் ராமனல் அடிக்கப்பட்டது கண்டு வேகமாக மஹேந்த்ர பர்வதத்திற்குப் போயினன். இங்ஙனம் அந்தப் பரசுராமன் புறப்பட்டுப் போன பின்பு திக்கு விதிக்குகள் யாவும் இருள் நீங்கினவைகளாயின. தேவர்களும் ரிஷி ஸமூஹங்களும் அப்பெரும் வில்லை ஊன்றிக்கொண்டிருக்கிற அந்த ராமனை மிகவும் புகழ்ந்தனர். ஜமதக்நி புத்ரனுகிய பரசுராமனும் தாசரதி ராமனைக் கொண்டாடி, பின்பு பிரதக்ஷிணமுஞ் செய்து தனது இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தனன். எழுபத்தாருவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதசக்ரவர்த்தி புத்ரர்களுடன் அயோத்யைக்குப் போதலும், வீதாரா பர்களின் பரஸ்பரப்ரீதியும்.

இங்ஙனம் பரசுராமன் புறப்பட்டுப் போனபின்பு தசரதகுமாரனாகிய ராமன் கோபத்தை விட்டு மனந்தெளியப் பெற்றுத் தம்மிடமிருந்த அந்த தநுஸ்ஸை மஹா ப்ரபாவமுடைய வருணன் கையில் பாணத்தோடுகூடக் கொடுத்தனன். பின்பு ரகுகுலத்தைக் களிக்கச்செய்யுந் தன்மையனாகிய ராமன் வஸிஷ்டர் முதலிய ரிஷிகளுக்கு நமஸ்காரஞ்செய்து, பரசுராமனிடமிருந்து பயந்து[1] நிகைத்து நிற்கின்ற தனது தந்தையைப் பார்த்து 'ஜமதக்நிகுமாரனாகிய பரசுராமன் போய்விட்டனன்; ஆகையால் ரதகஜதுரகபதாதிகளாகிற நான்கங்களோடு கூடிய நமது ஸைந்யமானது நாதனாகிய உம்மாற் பாதுகாக்கப்பட்டு அயோத்யையை நோக்கிப் புறப்பட்டுப்போகலாம். (இச்சேனையானது உமது ஆஜ்ஞையிலிருக்கின்றது. ஆகையால் அதற்குப் பிரயாணமாகும்படி கட்டளை யிடுவீராக. சாதகப்பறவைகள் மேகத்தினின்றும் ஜலத்தை விரும்புவதுபோல் இச்சேனை உமது ஆஜ்ஞையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றது') என்றனன். தசரதசக்ரவர்த்தி இங்ஙனம் ராமன் மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு, அப்புதல்வனை இரண்டு கைகளாலும் கட்டியணைத்து உச்சி மோந்தனன். முதலில் பரசுராமன் போனனென்று ராமன் சொல்லியும் அப்பொழுது பயத்தினால் அவ்வார்த்தையை ஸ்பஷ்டமாகத் தசரத மன்னவன் அறியாதிருந்து கொஞ்சந் தெளிந்தபின்பு மீளவும் ராமன் உரைக்க,

---

1 தசரதன் திகைத்து நின்றுகொண்டிருந்ததனால் பரசுராமன் ராமனைப் பாதவமாக ஸ்தோத்ரஞ் செய்ததும், விஷ்ணுதனுஸ்ஸை ராமன் வருணனது கையிற் கொடுத்ததும் அறியானென்று தோற்றுகின்றது. ஏற்றவர்களுக்கு மாயாதிரோதானத்தினால் அவை தெரியவில்லை யென்றுணர்க.

பரசுராமன் போனனென்று கேள்விப்பட்டு உடம்பெல் லாம் மயிர்க் கூச்சலிட்டுப் பேராநந்தம் அடைந்து, அப் பொழுது தானும் தன் புத்ரர்களும் தப்பிப் பிழைத்தது புநர்ஜந்ம மென்றெண்ணினன். பிறகு அம்மன்னவன் தனது ஸைந்யம் வேகமாக அயோத்யாபுரிக்குப் பிரயா ணமாய்ப் போகும்படி கட்டளையிட்டனன். அப்பொழுது அவ்வயோத்யாநகரமும், தீவிஜபடங்களோடுகூடிப் பெ ரியதுஞ் சிறியதுமாக நாட்டப்பட்டிருக்கிற கொடி மரங் களால் அலங்காரஞ் செய்யப்பட்டு அழகியதாகி, மங்கள வாத்யகோஷங்களால் எங்கும் முழங்கப்பெற்று விளங் கிற்று. ராஜமார்க்கங்களும் ஜலந்தெளித்து நாற்புறத்தி லும் மலர்தூவப்பெற்று மிகவும் அழகாயிருந்தது. அர சன் வருகிறனென்கிற ஸந்தோஷத்தினால் முகம் மலரப் பெற்று ஆடையாபரணங்களால் கன்கு அலங்காரஞ் செ ய்துகொண்டு மங்களமொழிகூறும் பட்டணத்து ஜநங் கள் கூட்டங்கூட்டமாக ஆங்காங்கு நிறைந்திருந்தனர். இப்படி மிகவும் அழகாயிருக்கின்ற அப்பட்டணத்தில் அம்மன்னவன் ப்ரவேசித்தனன். அப்பொழுது அப்பட்ட ணத்தில் வஸிக்கும் ப்ராஹ்மணர்களும் மற்றுமுள்ளநகரத் து ஜநங்களும் வெகுதூரம் அவ்வரசனை எதிர்கொண்டு சென்றனர். பெரும்புகழ்பெற்ற அத்தசரத மஹாராஜன் தான் வெகுதூரத்தில் வந்துகொண்டிருக்கும்பொழுதே அங்ஙனம் தனக்கு மேன்மை செய்யக் கருதி எதிர்கொண் டுவந்த அத்தனைர்களாலும் மற்றுமுள்ள ஸாதாரண ஜந ங்களாலும் மிகுந்த ஸௌந்தர்யமுடைய தன் புத்திரர்க ளாலும் பின்தொடரப்பட்டவனாகி ஹிமவத்பர்வதம்போல் மிகவும் உயர்ந்து அகன்று வெளுத்துப் பளபளவென்று நிர்மலமாக விளங்கும் தனது அரண்மனைக்குள் ப்ரவேசித் தனன். அப்பொழுது அந்த ராஜநிருகத்திலுள்ள ஜநங்கள்

யாவரும் மிகுந்த ஸந்தோஷம் அடைந்தனர். அரசனும் விஷயபோக ஸாதநங்களாகிய ஸகலபதார்த்தங்களாலும் பூஜிக்கப்பட்டு பந்துஜநங்களோடு கூடிப் பேராநந்தம் பெற்றனன். அப்பொழுது கௌஸல்யையும் ஸுமித்திரையும் அழகிய இடையுள்ள கைகேயியும் மற்றுமுள்ள ராஜஸ்த்ரீகளும் [1] மருகியர்கள் கால்வர்க்கும் உபசாரங்களைச் செய்து அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டுபோக முயன்று மஹா பாக்யவதியாகிய ஸீதையையும் மிக்க புகழ் பெற்ற ஊர்மிளையையும் குசத்வஜனது புதல்விகளாகிய மாண்டவீ ச்ருதகீர்த்திகளையும் உள்ளே அழைத்துக் கொண்டு சென்றனர். அம்மருகியர்களும் மங்களாசீர்வசநங்களைப்பெற்று மங்களாலங்காரங்களையும் அணிந்து வெண்பட்டு வஸ்த்ரங்களைத் தரித்து கிருகதேவதாலயங்களுக்குச் சென்று சந்தநம் புஷ்பம் தீபம் தூபம் முதலிய பூஜாஸாதநங்களைக் கொண்டு பூஜை செய்தனர். அப்பொழுது அந்த ராஜபுத்ரிகள் யாவரும் வணங்க வேண்டியவர்கள் அனைவரையும் வணங்கி (குபேரனது கிருகம் போல் மிகவும் அழகாயிருக்கின்ற தந்தமது கிருகங்களுக்குச்சென்று,) பசுக்களையும் தநதான்யங்களையும் கொடுத்து ப்ராஹ்மணர்களுக்குத் திருப்தி செய்வித்து, அம்மருகியர்கள் எல்லோரும் மிகுந்தமனக்களிப்புற்று, ஏகாந்தத்தில் தந்தமது கணவர்களோடு கூடி க்ரீடித்துக் கொண்டிருந்தனர். மஹாநுபாவர்களாகிய அந்த ராஜகுமாரர்களும் பூமியிலெங்கும் பாகாரமத்தில் ஒப்பற்றவர்களாகித் தமக்கு அநுரூபைகளாகிய பத்தினிகளை இங்ஙனம் மணம் புரிந்து அஸ்த்ரங்களினத்திலும் தேர்ச்சி அடைந்து அளவிறந்த செல்வம் பெற்றுப் பல நண்பர்களோடுகூடி மனிதர்கள் அனைவரிலும் சிறப்புற்றுத் தமது தந்தையாகிய தசரதசக்ரவர்த்திக்கு இடைவிடாமல் சுச்

1 மருகியர்-மறுமக்கள்.

ரூஷை செய்துகொண்டு ஸுகமாக வாழ்ந்திருந்தனர். (மேலும் அவர்கள் அந்தந்தக் காலங்களுக்குரிய நீதிகளை அறிந்து தமது குணங்களால் தந்தைக்கு மனக்களிப்பை விளைவித்துக்கொண்டிருந்தனர்.) பிறகு இங்ஙனம் சில நாள் செல்ல, ரகுகுலத்திற் பிறந்த மஹாநுபாவனுகிய தசரத சக்ரவர்த்தி கைகேயியின் அருமைப்புதல்வனும் தன் புத்திரனுமாகிய பரதனைப் பார்த்துக் 'குழந்தாய்! வீரனே! பரத! கேகயராஜன் குமாரனும் உனக்கு மாமனுமாகிய யுதாஜித்தானவன் உன்னை அழைத்துக் கொண்டு போவதற்காக இங்கு வந்திருக்கின்றனன்; (அவன் மிதிலாபட்டணத்தில் நிஷிக்களின் நடுவில் என்னைப் பார்த்து உன்னை அனுப்பும்படி வேண்டிக்கொண்டனன். நீ தர்மங்களெல்லாம் அறிந்தவன்; ஆகையால் அவனுக்கு ப்ரீதியைச் செய்வாயாக') என்றனன். இங்ஙனம் தசரதன் உரைத்த வார்த்தையைக் கேட்டுக் கைகேயியின் அருமைப் புதல்வனுகிய பரதனும் அப்பொழுது (தக்ஷதயாகிய தசரத சக்ரவர்த்தியையும் ராமனையும் ஸமஸ்கரித்து லக்ஷ்மணனைக் கட்டியணைத்துச்) சத்ருக்நனேகூட ப்ரயாணமாய்ப் புறப்பட்டுப்போகத் தொடங்கினன். புருஷர்களிற்சிறந்த அந்தப் பரதன் தான் போகும்பொழுது தந்தையாகிய தசரத சக்ரவர்த்தியினிடத்திலும் பரவர்க்கும் வருத்தமின்றி எக்காரியத்தையும் செய்யுந் தன்மையனுகிய ராமபிரானிடத்திலும் அன்னையர்களிடத்திலும் மற்றுமுள்ள பெரியோர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு சத்ருக்நனேகூடிக் கேகயகாட்டுக்குப் புறப்பட்டுப் போயினன். அப்பொழுது பரதன் புறப்பட்டுப் போகையில் மஹாபலமுடைய ராமனும் லக்ஷ்மணனும் தேவதையைப்போன்ற தமது தந்தைக்குச் சுச்ரூஷையைச் செய்துகொண்டிருந்தனர். ராமனும் தர்மஸ்வபாவனுகையால் தந்தையின் ஆஜ்ஞையை முன்னிட்டுக்கொண்டு பட்டணத்தில் வஸிக்கும் ஜநங்களுக்கு நன்மையை விளைத்தல் தீமையைப் போக்குதல் ஆகிய ஸகல

காரியங்களையும் நடத்திக்கொண்டு வந்தனன். இங்ங னம் பட்டணத்து ஜனங்களுக்கேயன்றி, ராமன் சுருதிஸ்மி ருதிகளிற் சொல்லிய நியமங்களுக்கு உட்பட்டு நடப்பவ னைகயால் தாய்மார்களுக்குச் செய்யவேண்டிய காரியங் களைத் தாய்மார்களுக்கும் பெரியோர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைப் பெரியோர்களுக்கும் அந்தந்தக் காலங்களில் ஊக்கத்துடன் நடத்திக்கொண்டிருந்தனன். ராமனுக்குள்ள இவ்விதஸ்வபாவத்தையும் நல்ல நடவடி க்கைகளையும் அப்பொழுது தசரதன் கண்டு மிகவும் மனக் களிப்புற்றவனாயினன். அவன் ஒருவன் களிப்பது ஆச் சரியம் அன்று. ப்ராஹ்மணர்களும் வர்த்தகர்களும் அவ னது தேசத்திலுள்ள மற்றை ஸகல ஜனங்களும் களிப் புற்றனர். உலகத்திலுள்ள அந்த ப்ராஹ்மணர் முதலிய ஸமஸ்த ஜனங்களுக்குள் மஹாயசஸ்வியும் உண்மையான பராக்ரமசாலியுமாகிய ராமன் தனது நல்ல ஸ்வபாவத்தி னாலும் நல்லொழுக்கத்தினாலுமேயன்றி மற்றைக்குணங்க ளாலும் ப்ரஹ்மதேவன்போல் ஸகலபூதங்களுக்கும் மிக வும் ப்ரியனாகி, அவர்கள் அனைவரிலும் குணங்களால் மே ன்மை பெற்று விளங்கிவந்தனன். [1]ராமனும் தர்மத்திற்கு விரோதமின்றிக் காமோபபோகத்தில் மனஞ்செலுத்தி அதில் மிகுந்த ஆவலுடையவனாகி ஸீதையினிடத்தில் அ ளவற்ற அன்புகொண்டு அவளது மனத்தில் தானும் நிலை

---

1 இதற்கு மூலம்—

'ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார வஹூநிருதூந்,
மநஸ்வீ தத்-அதஸ்தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பிதஃ'

இதற்குவிசேஷார்த்தம்—(ராமஸ்து) துசப்தம் பேதத்தைக் காட கின்றது. முன்பு கேவலம் பித்ருசுச்ரூஷாதிகளே ச்செய்து கொண்டிருந்த ராமன் இப்பொழுது காமபரதந்த்ரனாகவும் ஆன னென்று முன்னிருப்பைக் காட்டிலும் இவ்விருப்பு வேறுபட்டி ருந்ததென்க. (மநஸ்வீ) மிகுந்த மனமுடையவன். போகரஸாஸ் வாதத்தில் மேற்பட்ட மனமுடையவனென்க. (தத்-அதஃ) (தஸ்யாம் அதஃ) என்று விக்ரஹம். ஸீதையைப் பற்றி இருப்பவன். ஜாதிகுணங்களைப்போல் அவளை விட்டுப் பிரிக்க வொண்ணாதவன். அதாவது—அவ்வளவு ப்ரேமமுடையவனென்க. (தஸ்யா நித்யம்

பெற்றுப் பல ருதுக்களாக அவளுடன்கூடி க்ரீடித்துக் கொண்டிருந்தனன். தனதுதந்தையே பார்த்து ஏற்படுத்தின பத்தியென்று ராமனுக்குச் சீதை அன்புக்கிடமாயிருந்தனள். இவ்வளவேயன்று; பதி சுச்ரூஷைசெய்வது முதலிய குணங்களைப்பற்றியும் ஸௌந்தர்ய குணத்தைப் பற்றியும் நற்குலத்தில் பிறந்தமை முதலியவற்றைப் பற்றியும் ராமனுக்கு ஸீதையினிடத்திற் ப்ரீதி மேன்மேலும் பெருகிக்கொண்டு வந்தது. ராமனது ப்ரீதி அங்ஙனமிருக்க, சீதையின் மனத்திலும் அவள் பர்த்தாவாகிய ராமன் பெருமடங்காகச் சுற்றிக்கொண்டிருந்தனன். (அதாவது-சீதையின் மனத்திலும் [2] பர்த்தாவினிடத்தில் ப்ரேமமானது இருமடங்காகப் பெருகிக்கொண்டிருந்தது.) ஸீதையின் மனத்திலுள்ள பதிப்ரேமமானது யாவருமறியாண்ணுதபடி மறைத்திருப்பினும், அதை ராமன் அதற்குள்ள அடையாளங்களால் ஊஹித்துத் தெரிந்துகொண்டிருந்தனன். எப்பொழுதும் தான் அவள் மனத்திலேயே சுற்றிக்கொண்டிருப்பவளுகையால் அவளது ப்ரேமம் எவ்வளவு மறைத்திருப்பினும், அதை அவன் அறியாதிருப்பானோ? ஸீதையும் தனது அந்தரங்கத்தை ராமன் அறிவ

றுஹி ஸமர்ப்பிதஃ) ஸீதையும் ராமன்செய்கிற அவ்வோ வியாபாரங்களால் அவனிடம் வசப்பட்டு அவனேயே எப்பொழுதும் மனத்தில் னைத்துக்கொண்டு அவனுக்குட்பட்டிருந்தனளென்க. (தீத்யம்) வுகாலமாகக் கூடியிருந்தபோதிலும் அப்பொழுதே புதிதாகச் சர்ந்தவர்போல் அளவிறந்த ப்ரேமத்தோடிருந்தன ரென்க. வஹாமிநாதமிச்) இங்கு 'காலாயீவநோரத்யந்தஸம்யோகே' என்று அத்யந்தஸம்யோகத்தில் த்விதீயை. இதனால் இடைவிடாதபோகமென்று தோற்றுகின்றது. ஸம்வத்ஸராங்களென்றுசொல்லாமல் ருதுக்களென்கையாலே அந்தந்த ருதுக்களுக்குத் தகுந்த போகோபகரணங்களுடன் போகத்தை யநுபவித்தானென்று தெரிகின்றது. (விஜஹார) என்று பரஸ்மைபதம். இதில் க்ரியாபலம் கர்த்தாவைச் சேராது. ஆகையால் எவ்வளவுகாலம் க்ரீடித்தபோதிலும் திருப்திபெறவில்லை யென்று கருத்து. ஒருவர்க் கொருவர் ப்ரீதி அளவற்றிருந்த தென்று இதனால் தோற்றுகின்றது.

2 இங்கு (பர்த்தாவினிடத்தில்) என்கையால், ராமனுக்குத் தந்தையேற்படுத்திய பார்யையென்றும் ஸௌந்தர்யம் முதலிய குணங்களையுடையவ ளென்றும் ஸீதையினிடத்தில் ப்ரீதி உண்டாயிற்று.

தைக்காட்டிலும் மிகவும் மேலாகவே அவனது மனத்தை அறிந்துகொண்டிருந்தனள். எப்படியெனில், ஸீதையோ மிதிலாபுரத்தில் பிறந்தவள்; ஜநகராஜன் புத்திரி யாகையால் தேசஸ்வபாவத்திலும் வம்ச ஸ்வபாவத்திலும் ஸ்திரீகளுக்கு அமைந்திருக்கும் ஸகலமங்களங்களை அறியுந்திறமுடையவள். தேஜஸ்ஸு வடிவு முதலிய ஸகலப்பேரன்றவளாகையால் மிகுந்த ப்ராகல்பியமுடையவள்; அழகில், அனைவர்க்கும் புலப்படும்படி வடிவு கொண்ட தேவே ஸ்ரீமஹாலக்ஷ்மியோலிருப்பவள். இத்தகையால் இத்தன்மையளான அப்பெண்மணிக்குப் புத்திவிபரீதம் ஸஹஜமென்பது சொல்லவேண்டுமோ? இப்படிப்பட்டவளான துபற்றியே ராமனது மனத்தை அவனைவிஞ்சித் தான் அறிபவளாயினள். [1] ராஜாவியாகிய தசரத சக்ரவர்த்தியின் புத்திரனும் அநுநவகுணங்களையுடையனுமாகிய ராமன் அரசர்களிற் சிறந்த ஜநகமஹாராஜன் புதல்வியும் அழகானரூபமுடையவளும் மிகுந்த காமத்தையுடையவளுமாகிய அந்த ஸீதையுடன் கூடி மஹாலக்ஷ்மியோடு கூடிய தேவாதிதேவனாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவைப்போல் ப்ரகாசித்தனன். எழுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

பாலகாண்டமும் முற்றுப் பெற்றது.

ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நமஃ.

வஸீதைக்கோ என்றால்—கேவலம் பர்த்தாவாயிருப்பது. மாதிரிகத்தாலும் ராமனிடத்தில் ப்ரீதி உண்டாயிற்றென்று தோற்றுகின்றது.

1 (ராஜர்ஷியாகிய தசரத சக்ரவர்த்தியின் புத்திரன்) என்பதனால் அளவற்ற போகோபகரணஸம்பத்துக்களுண்டென்று சொல்லுகின்றது. (அரசர்களிற் சிறந்த ஜநகமஹாராஜன் புதல்வி) என்பதனால் அவனைக் காட்டிலும் அதிகமான போகோபகரண ஸம்பந்தமுள்ளவளாகும் உளதென்று ஸூசிப்பிக்கப்படுகின்றது. (மிகுந்த காமத்தையுடையவள்) என்கையால்—ராமனுக்குத் தன்மீது ஸ்நேஹமத்தைக்காட்டிலும் ராமனிடத்தில் தனக்கு அதிகமான காமமுண்டென்று கருத்து. ஒன்றேடொன்றேத்திருக்கும்படியான அநுராகமும் அளவற்றகாமமுமுடையவனுக்கு இப்படிப்பட்ட போகஸம்ருத்தி ஹேதுவான பதிவ்ரதை உண்டாயிருப்பதுபற்றி (ப்ரகாசித்தனன்) என்று சொல்லப்பட்டது.

40882